
திருத்தொண்டர் புராணம்

கார்த்திகேயன்





எழுதியவர் :

கார்த்திகேயன்

[எஸ். ராமநாதன்]

வாசு பிரசுரம்

38, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை.
சென்னை-14.

த.பெ.எண்: 659 • போன் எண்: 88630.

முதற் பதிப்பு : மே, 67.
வெளியீடு எண் : 108.

விலை ரூ. 3 - 00

அச்சிட்டோர் : சத்யா அச்சகம், சென்னை - 14.

பதிப்புரை

இறைவனது திருவிளையாடல்கள் நிறைந்த வரலாற்றை, நாம், புராணங்களாக வெளியிட்டனவற்றிற்கு, நமக்குக் கிடைத்த ஆதரவைக் கொண்டே, பக்தியில் சிறந்த தமிழ் நாட்டில், மக்களது ஆத்மீக எண்ணங்களை அறியும் வாய்ப்புக் கிடைத்தது.

இறைவனுக்கும், திருக்கோயில்களுக்கும் புராணம் உண்டு என்றால், அல்லும் பகலும் ஆண்டவனையும், திருக்கோயில்களை யும் பாடி, வணங்கி, மக்களுக்கு இறைவனாகவும், கோயில்களா கவும் தோன்றும், நடமாடும் கடவுள்களாகிய அடியார்களுக்கும் புராணம் உண்டல்லவா? சிவனடியார்களைப் பற்றி சேக்கிழார் இயற்றிய புராணத்திற்கு "பெரிய புராணம்" என்றால், சிவனைப்பற்றிய புராணங்கள் சிறிய புராணங்கள் ஆகும் என் பதைக் கொண்டே, இறைவனை விட, இறைவனின் அடியார் கள் மகிமையை நாம் உணர முடிகிறது.

இவ்வளவு பெருமை படைத்த பெரிய புராணத்தை சேக்கி ழார் பெருமான் தமிழிலேயே பாடினாலும், மக்கள் யாவரும் எளிதில் அறிந்துகொள்ள முடியாத குறை ஏற்படுகிறது. இந் நூலை எளிய, இனிய தமிழ் நடையில், தெளிவாக, இதன் ஆசிரியர் "கார்த்திகேயன்" அவர்கள் எழுதியிருப்பதை, அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் நாம் அக்குறையைச் சிறிது போக்குகிறோம்.

இதன் ஆசிரியர் உயர்திரு. கார்த்திகேயன் (எஸ். இராம னுதன்) அவர்கள் நமது வெளியீடாக, ஸ்ரீ விநாயகர் புராணம், ஸ்ரீ வேங்கடேசர் புராணம், ஸ்ரீ சிவ புராணம் எழுதியவர் என் பதை நீங்கள் அறிவீர்கள்.

அவர்கள் இறைவனது திருப்பணியாகவே இந்நூல்களைத் தனித் திறமையுடன் எழுதி வருகிறார்கள் என்பதையும், இன்னும் பல எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கூறிக்கொள்வதுடன், ஆசிரியரவர்களுக்கு எங்களது நன்றி யையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மக்கள் பக்தி வளர, பண்பு பெருக, ஆத்மீகம் ஓங்க, மக்கள் இந்நூலைப் படித்துப் பயன்பெற்று மேலும் பல நூல் கள் வெளிவர ஆதரவு தருவார்கள் எனக் கேட்டுக்கொள்ளு கிறோம்.

நன்றி. வணக்கம்.

சென்னை-14
5 - 5 - 67

வானதி பிரசுரத்தார்

ஆசிரியர் எழுதிய இதர புத்தகங்கள்

★

ஸ்ரீ விநாயக புராணம்

[பிள்ளையாரின் திரு அவதாரங்கள், அவரை ஆராதித்து அடைந்தோர் பெற்ற பலன்கள் பற்றிய கதைகள் கொண்டது]

ஸ்ரீ வேங்கடேச புராணம்

[திருப்பதி வேங்கடேசப் பெருமாளின் அவதாரம், அவரை ஆராதித்து பலன் அடைந்த பக்தர்கள் கதைகள்]

ஸ்ரீ சிவ புராணம்

[பார்வதி பரிணயம், விநாயகர், முருகன் திரு அவதாரங்கள், பன்னிரண்டு ஜோதி லிங்கங்கள் பற்றிய கதைகள், சிவராத்திரி மகிமை, பஞ்சாக்ஷர மகிமை, வீபூதி ருத்திராக்ஷ மகிமை முதலான கதைகள்]

முன்னுரை

சேக்கிழார் பெருமான் பாடிய **திருத்தொண்டர் புராணத்துக்குப் பெரிய புராணம்** என்று பெயர். பகவானை அடியார்க்கு அடியார் என்று கூறுவதுண்டு. அதாவது அவர் பக்தர்களுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு அவர்கள் இடும் வேலையைச் செய்யக் காத்திருக்கிறாராம். அப்பேற்பட்ட பகவானுடைய அடியார்களுடைய வரலாற்றைக் கூறும் இப்புராணம் பெரிய புராணம் என்று அழைப்பதில் வியப்பொன்றும் இல்லை.

மற்ற புராணங்களுக்கு இல்லாத ஒரு மகிமை இப்புராணத்துக்கு உண்டு. எல்லா புராணங்களும் வட மொழியிலிருந்து தமிழில் இயற்றப்பட்டவையே. இப்புராணம் ஒன்றுதான் தமிழிலிருந்து வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டதாகும். **உபமன்யு பக்தவிலாசம்** என்ற பெயரில் வடமொழியில் இப்புராணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

நாயன்மார்களைப் பற்றிய குறிப்புகள் தமிழ் நாட்டில் ஆலயங்களில் கல்வெட்டுக்களிலும் சுற்றுச் சுவர்களிலும் தூண்களிலும் செதுக்கப்பட்ட சிலைகளிலும் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. நாயன்மார்கள் பெயர்களை மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்ததென்பதற்கு ஆதாரமாக அப்பெயர்களைக் கொண்டவர்களைப்பற்றிய குறிப்புகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. நாயன்மார்களுக்குச் சிலைகள் செய்து வைத்து அவற்றுக்கு வழிபாடு நடத்த சில நிபந்தங்கள் விடப்பட்ட செய்திகளும் தெரிய வருகின்றன.

இரண்டாம் குலோத்துங்கன் மகனான இரண்டாம் ராஜராஜன் என்பவன் குடந்தைக்கு அருகே உள்ள ராஜராஜபுரத்தில் 1 கட்டிய ராஜராஜேச்சுரம் என்னும் ஆலயத்தில் கர்ப்பக்

1 ராஜராஜபுரம் என்ற பெயர் காலப்போக்கில் மருவி இன்று தாராசுரம் என்று வழங்குகிறது.

கிருகத்தைச் சுற்றிய சுவரில் நாயன்மார்கள் வரலாற்றை விளக்கும் சிற்பங்களை அமைத்துள்ளான். அவனுடைய ஆட்சி காலம் கி. பி. 1146 முதல் 1173 வரை என்பர். அவன் இளவரசனாக இருந்தபோதுதான் சேக்கிழார் புராணம் பாடியது. அவன் தான் பட்டத்துக்கு வந்ததும் கிடைத்தற்கரிய அப் பொக்கிஷத்தைக் கல்லிலே வடித்து விட்டான்போலும்.

வாசு பிரசுரத்தார் புராண வரிசையில் வெளியிடும் புத்தகங்களில் இது நான்காவது ஆகும். முந்தைய மூன்று வெளியீடுகளுக்கும் ஆஸ்திக அன்பர்கள் அளித்த அமோக வரவேற்பை இப்புத்தகத்துக்கும் அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எம்பெருமானிடம் இடையருத பக்தி கொண்டு அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதையே தங்கள் பாக்கியமாகக் கருதி வாழ்ந்து முடிவில் இறைவனால் ஆட்கொள்ளப் பட்ட அடியார்கள் வரலாற்றை எழுத எனக்கொரு சந்தர்ப்பம் அளித்த வாசு பிரசுரத்தாருக்கு என் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

5 - 5 - 67
கோடம்பாக்கம்,
சென்னை-24.

எஸ். ராமனுதன்
(கார்த்திகேயன்)

நாயன்மார்கள் பற்றிய சில விவரங்கள்

1. நாயன்மார்கள் காலம்

நாயன்மார்கள் அறுபத்து மூவரையும் அவர்கள் இன்னின்ன ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்தனர் என்று கணக்கிட்டுக் கூறத்தகுந்த விவரங்கள் கிடைக்காதிருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் தங்களுக்குக் கிடைத்த விவரங்களைக் கொண்டு அவர்களை நான்கு பகுதியினராகப் பிரித்திருக்கிறார்கள்.

நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் சமகாலத்தவர்கள். அவர்கள் இருவரும் தங்கள் பாசுரங்களில் சில அடியார்களின் தொண்டினைப் போற்றிப் பாடியுள்ளனர். அவர்கள் காலத்துக்கு முற்பட்டவர்கள் என்றும், அவர்கள் காலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களுக்கும் சுந்தரருக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சுந்தரர் காலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் நான்கு வகைப் படுத்தியுள்ளனர்.

நாவுக்கரசரால் சைவத்துக்கு மாற்றப்பட்ட மகேந்திர பல்லவன் காலம் கி. பி. 615 முதல் 630 வரை என்பர். சம்பந்தர் கூன் நிமிர்த்திய பாண்டியன் நெடுமாறன் காலம் கி. பி. 640 முதல் 680 வரை என்பர். நாவுக்கரசர் சமணத்திலிருந்து சைவத்துக்கு மாறியது அனேகமாக அவரது நடுத்தர வயதிலேதான் இருக்கவேண்டும். ஆகவே நாவுக்கரசர் ஞானசம்பந்தர் இருவருடைய காலம் ஏறக்குறைய கி. பி. 600 முதல் 660 வரை இருக்கலாம் என நிச்சயித்துள்ளார்கள்.

சுந்தரர் பல்லவ அரசனான இரண்டாம் நரசிங்கப் போத்தரையனான ராஜஸிம்மன் காலத்தைச் சேர்ந்தவர் என்பர். அவர் காலம் சுமார் கி. பி. 700 முதல் 730 வரை எனக் கொள்வர். ஆகவே சுந்தரர் காலத்தையும் கி. பி. 700 முதல் 730க்கு இடைப்பட்டதாகக் கொள்வர். நாவுக்கரசர் ஞானசம்பந்தர் இருவராலும் பாடப்படாது சுந்தரரால் பாடப்பட்டவர்களும்

அவருடைய காலத்தைச் சேராதவர்களும் ஆன அடியார்களே இந்த இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவர்களாகக் கொள்வர்.

(1) நாவுக்கரசர்-ஞானசம்பந்தர் இருவருக்கும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்த அடியார்கள். *(கி.பி. 600க்கு முற்பட்ட காலம்)*

1. கோச்செங்கணுன்
2. புகழ்ச்சோழர்
3. சண்டேசுவரர்
4. கண்ணப்பர்
5. காரைக்கால் அம்மையார்
6. திருமூலர்
7. மூர்த்தி நாயஞர்
8. கூற்றுவ நாயஞர்
9. ஐயடிகள் காடவர்கோன்
10. கணம் புல்லர்
11. அரிவாட்டாயஞர்
12. நமிநந்தி அடிகள்
13. தண்டி அடிகள்
14. சாக்கியர்
15. எறிபத்தர்
16. அமர்நீதியார்
17. புகழ்துணை நாயஞர்

(2) நாவுக்கரசர் - சம்பந்தர் காலத்தைச் சேர்ந்த அடியார்கள் *(கி. பி. 600 - 660)*

1. நாவுக்கரசர்
2. சம்பந்தர்
3. சிறுத்தொண்டர்
4. குங்கிலியக்கலயர்
5. முருகர்
6. நீலகண்ட யாழ்ப்பாணர்

7. நீலநக்கர்
8. அப்பூதி அடிகள்
9. நின்றசீர் நெடுமாறன்
10. மங்கையர்க்கரசியார்
11. குலச்சிறையார்

(3) நாவுக்கரசர் - சம்பந்தர் ஆகியோருக்குப் பிற்பட்டும் சுந்தரருக்கு முற்பட்டும் உள்ள காலத்தைச் சேர்ந்த அடியார்கள். (கி. பி. 660 - 700)

1. பூசலார்
2. காரியார்
3. அதிபத்தர்
4. கலிக்கம்பர்
5. கலியர்
6. சத்தி நாயனர்
7. வாயிலார்
8. முனையடுவார்
9. இடங்கழியார்
10. இயற்பகையார்
11. நேசர்
12. இளையான்குடி மாறர்
13. மெய்ப்பொருள்
14. நந்தனர்
15. ஏனதியார்
16. ஆனயர்
17. ருத்திரபசுபதியார்
18. திருக்குறிப்புத் தொண்டர்
19. சிறப்புலியார்
20. கணநாதர்
21. திருநீலகண்டர்
22. மூர்க்கர்

சுந்தரர் காலத்தைச் சேர்ந்த அடியார்கள். (கி. பி. 700 - 730)

1. சுந்தரர்
2. சடையர்
3. இசைஞானியார்
4. நரசிங்கமுனையரையர்
5. விறண்மிண்டர்
6. கோட்புலியார்
7. ஏயர்கோன் கலிக்காமர்
8. மானக்கஞ்சாறர்
9. மிழலைக் குறும்பர்
10. சோமாசிமாறர்
11. சேரமான் பெருமாள்
12. கழற்சிங்கர்
13. செருத்துணையார்

2. நாயன்மார்கள் குலம்

(1) அரசர் - 12

1. மெய்ப்பொருள்
2. மிழலைக்குறும்பர்
3. ஐயடிகள் காடவர்கோன்
4. கூற்றுவநாயனர்
5. கழற்சிங்கர்
6. இடங்கழியார்
7. நின்றசீர் நெடுமாறன்
8. மங்கையர்க்கரசியார்
9. சேரமான் பெருமாள்
10. நரசிங்க முனையரையர்
11. புகழ்ச் சோழர்
12. கோச்செங்கணன்

(2) அந்தணர் - 12

1: முருகர்
2. குங்குலியக்கலயர்
3. ருத்திரப் பசுபதியார்
4. சம்பந்தர்
5. நீலநக்கர்
6. அப்பூதி அடிகள்
7. சோமாசிமாறர்
8. பூசலார்
9. கணநாதர்
10. நமிநந்தி அடிகள்
11: சண்டேசுவரர்
12. சிறப்புலியார்

(3) வைசியர் - 6

1. அமர்நீதியார்
2, இயற்பகையார்
3! மூர்த்தியார்
4. காரைக்கால் அம்மையார்
5. கலிக்கம்பர்
6. கலியர்

(3) ஆதி சைவர் - 4

1. சடையனர்
2. இசைஞானியார்
3. சுந்தரர்
4. புகழ்த்துணேயார்

(5) வேளாளர் - 13

1. இளேயான்குடி மாறர்
2. அரிவாட்டாயர்
3. சத்தியார்
4. கோட்புலியார்
5. ஏயர்கோன் கலிக்காமர்
6. மூர்க்கர்

7. விறண்மிண்டர்
8. வாயிலார்
9. முனையடுவார்
10. நாவுக்கரசர்
11. மானக்கஞ்சாறர்
12. சாக்கியர்
13. செருத்துணையார்

(6) குயவர் - 1
திருநீலகண்டர்

(7) சலவைத் தொழிலாளர் - 1
திருக்குறிப்புத் தொண்டர்

(8) வேடர் - 1
கண்ணப்பர்

(9) இடையர் - 1
ஆனுயர்

(10) மாமாத்திரர் - 1
சிறுத்தொண்டர்

(11) மீனவர் - 1
அதிபத்தர்

(12) ஹரிஜனர் - 1
நந்தனர்

(13) பாணர் - 1
நீலகண்ட யாழப்பாணர்

(14) ஈழவர் - 1
ஏனுதியார்

(15) சாலியர் - 1
நேசர்

(16) குலம் குறிப்பிடப்படாதவர்கள் - 6
1. எறிபத்தர்
2. தண்டியடிகள்
3. குலச்சிறையார்
4. திருமூலர்
5. கணம் புல்லர்
6. காரியார்

பொருளடக்கம்

1. குமாரனுக்கு அருளிய கணநாதன்

சோழவளநாடு சோறுடைத்து என்பர் சான்றோர். காவிரியின் இருமருங்கிலும் எங்கே திரும்பினாலும் கண்ணுக்கு இனிய பசேலென்ற பசுமை நிறைந்த நெல் வயல்களும் அவற்றைச் சூழ்ந்து நெளிந்து செல்லும் நீர் நிறைந்த வாய்க்கால்களும் பார்க்கப் பார்க்க அலுக்காத காட்சியாகும்.

சிதம்பரத்திற்குத் தென்மேற்கே திருநாரையூர் என்னும் சிவஸ்தலம் ஒன்றிருக்கிறது. அவ்வூரிலே உள்ள பொல்லாப் பிள்ளையாருக்கு பூஜை செய்யும் பொறுப்பை அந்த ஆதி சைவ குடும்பம் ஏற்றிருந்தது.

குடும்பத்தலைவர் ஒருநாள் அவசர காரிய நிமித்தம் வெளியூர் செல்ல நேர்ந்தது. திரும்பி வருவதற்குள் பகற்பொழுது பூஜைகாலம் தவறிவிடும். ஆகவே அவர் புறப்பட்டுச் செல்லும் போது தம் குமாரன் நம்பியை அழைத்தார்.

''நம்பி, நான் திரும்பி வருவதற்கு நேரம் ஆகலாம். அதனால் இன்று பிள்ளையாருக்கு நீதான் பூஜை செய்யவேண்டும். பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்து திலகமிட்டு மலர்களைச் சார்த்தி நைவேத்தியம் செய்துவிடு. சாயங்காலப் பூஜைக்கு நான் வந்து விடுவேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார் அவர்.

சிறுவனோ படித்துக்கொண்டிருப்பவன். குறித்த காலத்தில் வகுப்புக்கு அவன் செல்லாவிடில் அன்றையப் பாடம் படிக்க உபாத்தியாயர் அனுமதிக்கமாட்டார். ஆகவே தாயை

அழைத்து பிள்ளையாருக்கு வேண்டிய நைவேத்தியத்தை வைத்துத் தருமாறு கேட்டான். தாயாரும் சீக்கிரமாகவே பக வானுக்கு நிவேதனம் செய்யவேண்டிய அன்னத்தை வடித்துக் கொடுத்தாள்.

நீராடி உலர்ந்த வஸ்திரங்களை அணிந்து கொண்டு ஒரு கையில் செப்புக் குடமும் மற்ரெரு கையில் வஸ்திரம் போட்டு மூடிய நிவேதன பாத்திரத்துடனும் புறப்பட்டான் சிறுவன். கோயிலை அடைந்ததும் நிவேதனமுள்ள பாத்திரத்தை ஒரு பக்கமாக வைத்துவிட்டுக் கிணற்றிலிருந்து நீர் மொண்டு வந் தான். பிள்ளையாரின் மீது முதல் நாள் அணிவித்திருந்த மலர் களை அகற்றி விட்டுத் திருமஞ்சனம் செய்வித்தான். அபி ஷேகம் முடிந்தது. சுவாமிக்குத் திலகமிட்டு உலர்ந்த வஸ்தி ரங்களை அணிவித்தான். மடைப்பள்ளிக்குப் பக்கத்தே வளர்ந் திருந்த மலர்ச் செடியிலிருந்து சில மலர்களைப் பறித்து வந்து பிள்ளையாரின் முடியிலும், பாதங்களிலும் வைத்தான். வீட்டி லிருந்து கொண்டு வந்திருந்த நிவேதனத்தை எடுத்து அவர் முன்பு வைத்தான்.

''சுவாமி, பிள்ளையாரே, இன்றைக்கு அப்பாவுக்கு வர முடியாது வேலை வந்து விட்டது. என்னைப் பூஜை செய்யு மாறு அனுப்பினர். எனக்குத் தெரிந்தவரையில் செய்துவிட் டேன். சந்தோஷமாக நைவேத்தியத்தைச் சாப்பிடுங்கள்'' என்று வேண்டினன்.

நம்பி தகப்பனரோடு கோவிலுக்குப் பல முறை வந்திருக் கிருன். ஆயினும் அவனுக்குப் பூஜை முறைகள் எதுவும் தெரியாது. தண்ணீர் கொண்டுவந்து அபிஷேகம் செய்வதும், வஸ்திரத்தைச் சாற்றி மலர்களை அணிவிப்பதையும் அவன் கண்டிருக்கிருனே அன்றி, நைவேத்தியம் முதலானவற்றைச் செய்வது பற்றி எதுவும் அறியான். வீட்டிலே தான் உணவு உண்பது போலத்தான் கோயிலிலே சுவாமியும் நிவேதனம் செய்யும் போது தமக்கு முன்பு படைக்கப்பட்டவைகளைச் சாப்பிடுவார் போலும் என்று எண்ணினன் அவன். அதன் காரணமாகவே நைவேத்தியத்தைச் சாப்பிடுமாறு அவன் பிள்ளையாரிடம் வேண்டினன்.

சிறிது நேரம் சென்றது. பாத்திரத்திலே வைக்கப்பட்டி ருந்த அன்னம் அப்படியே இருந்தது. அவனுக்குச் சந்தேகம் வந்தது. தான் அங்கிருப்பதால்தான் பிள்ளையார் சாப்பிட மறுக்கிருரோ என்று எண்ணினன்.

''சுவாமி, நான் வெளியே இருக்கிறேன். சீக்கிரம் சாப் பிட்டு விடுங்கள். எனக்கு வீட்டுக்குப் போகவேண்டும்'' என்று கூறியவாறு கதவைச் சார்த்திக்கொண்டு வெளியே சிறிது நேரம் நின்ருன். பின்னர் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ருன். அவன் வைத்துச் சென்ற அன்னம் அப்படியே இருந்தது.

நம்பிக்கு ஒன்றும் புரியவில்லே. சுவாமி அன்றைத்தினம் ஏன் சாப்பிடாதிருக்கிருர் என்று அவனுக்கு விளங்கவில்லே. அவன் செய்த பூஜையில் ஏதாவது குறை கண்டாரா?

''பிள்ளேயாரே, ஏன் சாப்பிடாதிருக்கிறீர்கள்? நான் ஏதா வது தவறு செய்து விட்டேனு? எனக்குப் பூஜை செய்யத் தெரி யாது. அப்பாவுக்கு வரமுடியவில்லே. நீங்கள் பட்டினி கிடக்கப் போகிறீர்களே என்று என்னே அனுப்பினுர். எனக் குத் தெரிந்தவரை செய்தேன். தவறு இருந்தால் என்னே மன்னித்து இவ்வமுதை ஏற்றுக் கொள்ளவேண்டும்'' என்று வேண்டினுன்.

அப்போதும் பிள்ளேயார் அசையவில்லே.

நேரம் செல்லச் செல்ல நம்பிக்குப் பயம் தோன்ற ஆரம் பித்து விட்டது. அவன் எவ்வளவோ மன்ருடினுன். பிள்ளே யாரோ அவன் கோரிக்கையை ஏற்கவில்லே.

''ஐயோ, நான் எப்படி வீட்டுக்குப் போவேன். நைவேத் தியத்தைத் திரும்ப எடுத்துச் சென்ருல் என் தந்தை பெரும் கோபம் கொள்வாரே. தினமும் சாப்பிடும் தாங்கள் இன்று சாப்பிட மறுத்தது என்னிடம் உள்ள ஏதோ தவறுதான் என்று என் தந்தை என்னே அடித்துக் கொன்றுவிடுவாரே! அப்பா தினமும் கொண்டு வரும் அமுதைச் சாப்பிடும் தாங் கள் நான் எடுத்து வந்ததைச் சாப்பிட மறுப்பதன் காரணம் என்ன? சுவாமி, பிள்ளேயாரே, எப்படியாவது இன்றைக்குச் சாப்பிட்டு விடுங்கள். இனிமேல் நான் வரவில்லே. அப்பா வையே வரச்சொல்லுகிறேன்'' என்று மன்ருடினுன்.

நேரம்தான் சென்று கொண்டிருந்தது. வகுப்புக்குச் செல்ல வேண்டிய நேரமும் கடந்து விட்டதை உணர்ந்தான் நம்பி.

''சுவாமி, சாப்பிடமாட்டீர்களா? தயவு செய்து இந்த ஒரு முறைமட்டும் நான் கொண்டு வந்ததைச் சாப்பிட்டுவிடுங்கள். வகுப்புக்குச் செல்லவேண்டும். நேரமாகி விட்டது'' என்று கெஞ்சினுன்.

அப்போதும் பிள்ளையார் வாய் மூடி மௌனியாயிருந்தார்.

நம்பியின் கண்களில் நீர் ததும்பியது.

"வீட்டுக்குப் போனுல் அப்பா அடிப்பாரே!......சாப்பிட மாட்டீர்களா?......" துக்கம் நெஞ்சை அடைக்க வேண்டினுன் நம்பி.

பிள்ளையாரின் முன்பு படைக்கப்பட்ட நிவேதனம் அப்படியே இருந்தது.

அவன் பொறுமையை இழந்து விட்டான். தந்தை அடிப்பார் என்பதை நினைக்கும்போது அவனுல் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. 'ஓ' வென்று அழுதபடி, "பிள்ளையாரே, உனக்கு இரக்கம் இல்லையா? நான் அடிபடுவதில் உனக்கு விருப்பமா? இப்போது சாப்பிடப் போகிருயா, இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே கற்சுவரிலே தலையை 'மடீர் மடீர்' என்று முட்டிக் கொண்டான்.

அதற்கு மேலும் கணநாதன் பார்த்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. "நம்பி" என்று அழைத்தார்.

சிறுவனின் முகத்தில் மகிழ்ச்சி நிறைந்தது. கண்களில் வழிந்த நீரைத்துடைத்துக் கொண்டு, "சுவாமி, இப்போதாவது தங்களுக்கு என் மீது கருணை வந்ததா?" என்று கேட்டான்.

"நம்பி, உன் விருப்பப்படி நீ படைத்தவற்றை உண்ணுகிறேன்..." என்று அருளினுர் கணநாதன். அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போது சிலையிலிருந்து விநாயகரின் துதிக்கை நீண்டு பாத்திரத்திலிருந்த அமுதை அள்ளி வாயில் போட்டுக் கொண்டது.

சிறுவனின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. விநாயகர் அவன் படைத்ததை உண்டுவிட்டார். அடுத்த கணம் அவன் முகம் மீண்டும் வாட்ட மடைந்தது.

"இப்போது சாப்பிட்டதை நான் படைத்தபோதே சாப்பிட்டிருக்கக் கூடாதா? நான் வகுப்புக்குச் செல்ல முடியாதபடி நேரமாகிவிட்டதே!" என்ருன் வருத்தத்துடன்.

"நம்பி, வருத்தப்படாதே, நானே உனக்குப் பாடம் சொல்லித் தருவேன்" என்று அருளினுர் விநாயகர் பெருமான்.

வீடு திரும்பியதும் நம்பி கோயிலிலே நடந்ததைத் தாயிடம் தெரிவித்தான். அவள் அதை நம்பவில்லை. எங்கோ ஊர்சுற்றி, பையன்களோடு விளையாடிவிட்டு, சுவாமி நைவேத்தியத்துக்குக் கொண்டு சென்ற அன்னத்தைச் சாப்பிட்டு விட்டு, சுவாமியே சாப்பிட்டதாகக் கதை அளக்கிறான் என்றே எண்ணினாள். மாலையில் ஊர் திரும்பிய நம்பியின் தந்தையும் அவ்வாறு தான் நினைத்தார். சுவாமியாவது நைவேத்தியத்தைச் சாப்பிடுவதாவது என்று ஏளனம் செய்தார். நம்பி தான் சொல்வது உண்மைதான் என்று வாதித்தான். அன்று இரவு பூஜையின்போது அவன் மீண்டும் பிள்ளையாரைவேண்டி தான் சொல்வது உண்மைதான் என்பதை நிரூபிக்குமாறு சொன்னான். விநாயகரும் அவன் வேண்டுகோளின்படி திருவமுதை உண்டு அவன் வார்த்தையை நிரூபணம் செய்தார்.

நம்பி படைத்த நிவேதனத்தைப் பிள்ளையார் சாப்பிட்ட செய்தி ஊரும் உலகமும் பரவியது. நம்பியாண்டார் நம்பி என அவனை அனைவரும் போற்றினார்கள். விநாயகரின் திரு அருட்பிரசாதத்தால் அவன் சகல கலைகளிலும் தானே தேர்ச்சி பெற்றான்.

நம்பிக்குப் பொல்லாப் பிள்ளையார் அருளிய செய்தி சோழ மன்னன் ராஜராஜனுக்கும் எட்டியது. முதலில் இந்தச் செய்தியை அவன் நம்பவில்லை. ஆனால் நாரையூரிலிருந்து வந்தவர்கள் அந்த விவரம் உண்மையில் நடந்ததே எனத் தெரிவித்தனர். அதன் மீது அரசனுக்கும் ஓர் ஆவல் எழுந்தது. திருவமுது உண்ட பிள்ளையாரைத் தரிசித்துத் தான் படைக்கும் உணவையும் அவர் உட்கொள்ளச் செய்ய வேண்டுமென்று விரும்பினான். உடனே பரிவாரங்களுடன் திருநாரையூருக்குப் புறப்பட்டான்.

ஊரை அடைந்ததும் அரசன் நேராக நம்பியின் இல்லத்துக்குச் சென்றான்.

அரசன் தம் இல்லத்தைத் தேடி வருகிறான் என்பதை அறிந்ததும் நம்பி ஓடோடி வந்து வாயிலில் வரவேற்றார்.

''மன்னவா, இந்த ஏழையின் இல்லம் தங்கள் வருகையால் மகிமை பெற்றதாகிறது. தாங்கள் வரப்போவது குறித்து ஒரு வார்த்தை முன்னதாகச் சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா? தங்களைத் தகுந்த விதத்தில் உபசரிக்க முடியாது போய்விட்டதே. இந்த ஏழையை மன்னிக்க வேண்டும்'' என்று வேண்டினார்.

பல்லக்கிலிருந்து இறங்கிய அரசன் நம்பியின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. காலணிகளைக் கழற்றிவிட்டு இரு கைகளையும் கூப்பியபடி நம்பியை நெருங்கி அவரை வணங்கினான்.

“விநாயகப் பெருமானின் அருள் பெற்ற மாணிக்கமே என் பணிவு நிறைந்த வணக்கத்தை ஏற்று என்னைக் கௌரவிக்க வேண்டும்” என்று வேண்டினான்,

எதிர்பாராது நிகழ்ந்துவிட்ட இந்தச் சம்பவத்தால் நம்பி சிறிது நேரம் திகைத்துப் போய் விநாயகப் பெருமானின் நினைவிலே ஆழ்ந்தார். பின்னர், அரசனை மீண்டும் வணங்கி, “என்னிடம் தாங்கள் கொண்டுள்ள அபரிமித அன்பினால் திக்குமுக்காடிவிட்ட நான் தங்கள் வருகை குறித்து விசாரிக்க மறந்துவிட்டேன். தயவு செய்து என்னால் ஆகவேண்டிய காரியம் இருப்பின் தவக்கமில்லாது தெரிவியுங்கள்” என்று கேட்டார்.

“உமக்கு அருளிய எம்பெருமானைத் தரிசித்துச் செல்ல வந்துள்ளேன். பெருமான் தங்களால் படைக்கப்படும் பொருள்களைப் பிரியமுடன் ஏற்றுக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன். காண்பதற்கரிய அக்காட்சியை நானும் கண்டு களிக்க அருள் செய்ய வேண்டும்” என்று பிரார்த்தித்தான் மன்னன்.

“பிரபோ, உம்முடைய திருவுள்ளம் இதுவா?” என்று மனத்திலே விநாயகரைத் தியானித்தார் நம்பி.

அன்றிரவு விநாயகப் பெருமான் நம்பியின் பிரபாவத்தை உலகுக்கு மேலும் எடுத்துக் காட்ட அரசன் ராஜராஜனால் படைக்கப்பட்ட திருவமுதினை அமுது செய்து அருளினார். மன்னன் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்ல முடியாது. கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருக்கெடுத்தோட நம்பியைப் பலமுறை வணங்கினான்.

“சுவாமி, எம்பெருமானே தங்கள் ரூபத்தில் எழுந்தருளியிருப்பதாக உணருகிறேன். என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக ஒரு குறை இருந்து வருகின்றது. தாங்கள்தான் அதனை நிவர்த்திக்க வேண்டும். சமயகுரவர் மூவர் அருளிச் செய்த தேவாரத் திருமுறைகள் வழக்கொழிந்துள்ளன. தாங்களே அவற்றை நிலைபெறுமாறு செய்ய வேண்டும்” என்று கோரிக்கை விடுத்தான்.

''பிரபோ, கணநாயகா, அரசன் மூலம் உன் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டாய். ஆனால் அவற்றைப் பற்றிய விவரம் நான் அறியேன். தேவாரத் திருமுறைகள் இருக்குமிடத்தையும், திருத் தொண்டர்களின் வரலாற்றையும் நீ தான் எனக்கு அருள வேண்டும்'' என்று விநாயகரை வணங்கினார் நம்பி.

அப்போது அசரீரி ஒன்று எழுந்தது.

''தில்லைப் பொன்னம்பலத்தில் மூவருடைய கைகளின் இலச்சினை வைக்கப்பட்டுள்ள அறையிலே தேவாரத் திருமுறைகள் வைத்துப் பூட்டப்பட்டுள்ளன.''

மறுநாள் ராஜராஜன் நம்பியையும் அழைத்துக் கொண்டு தில்லைக்குப் புறப்பட்டான் அவர்கள் வருகையை அறிந்த தில்லை வாழ் அந்தணர்கள் பூர்ண கும்பத்தோடு நகர எல்லையில் காத்திருந்து அவர்களை வரவேற்றனர். அரசன், நம்பியோடு ஆலயத்தினுள் நுழைந்து எம்பெருமானைச் சேவித்தான். பின்னர் தில்லை வாழ் அந்தணர்களிடம் தாங்கள் அங்கு விஜயம் செய்திருப்பதின் நோக்கத்தை எடுத்துரைத்தான்.

நம்பியைப் பற்றித் தில்லை வாழ் அந்தணர்கள் முன்னமேயே அறிந்திருந்தனர். ஆகவே அவர்கள் நம்பியை நேரில் சந்தித்தது பற்றிப் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். நாட்டிலே வழக்கொழிந்துள்ள தேவாரத் திருமுறைகளைத் திரும்பவும் நிலை நிறுத்த அரசன் எடுத்துக் கொண்ட முயற்சியை அவர்கள் மிகவும் பாராட்டினர் ஆயினும் அதற்கொரு தடையிருப்பதை நினைக்கும் போது அவர்களால் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. பொன்னம்பலத்து அறையிலே பூட்டி வைக்கப்பட்டுள்ளன தேவாரத் திருமுறைகள். அறையைத் திறப்பதானால் மூவரும் ஒருங்கே எழுந்தருளியிருக்க வேண்டும். இல்லையேல் பூட்டை உடைக்க யாருக்குமே உரிமை இல்லை.

தான் மேற் கொண்ட மகத்தான திருப்பணிக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதை அறிந்த போது ராஜராஜன் சொல்லொணா வருத்தம் கொண்டான், ஆயினும் அவன் வருத்தம் சிறிது நேரமே நிலைத்தது. பளிச்சென்று அவன் உள்ளத்தில் ஒரு யோசனை தோன்றியது. ஆலயத்திலே வைக்கப்பட்டுள்ள சமயக்குரவர் மூவருடைய விக்கிரகங்களுக்கும் அபிஷேக ஆராதனைகளைச் செய்விக்கும்படி சொன்னான். அவை முடிந்ததும் மேள தாளங்களுடன் மூவரையும் வீதி புறப்பாடு செய்

வித்துத் தேவாரத் திருமுறைகள் வைக்கப்பட்டுள்ள அறையின் முன்பு கொண்டு வந்து நிறுத்தினுன்.

"அந்தணப் பெரு மக்களே, உங்கள் வேண்டுகோள்படி மூவரும் ஒருங்கே எழுந்தருளியிருக்கிருர்கள். இனியும் பூட்டைத் திறக்க ஆக்ஷேபணை என்ன இருக்கப் போகின்றது? என் விருப்பம் நிறைவேற ஆண்டவனே அசரீரி மூலம் சொல்லி இங்கே எங்களை அனுப்பியிருக்கிருன் இறைவன் விருப்பத்தை நீங்களும் ஆமோதித்து அவ்வாறே நடப்பீர்கள் என்றே நம்புகிறேன்" என்று பிரார்த்தித்தான் அரசன்.

அரசனுடைய கோரிக்கையை ஏற்று அவர்கள் அறைக் கதவைத் திறந்தனர்.

"பெருமானே, தாங்களே அறையினுள் சென்று திருமறைகளை எடுத்து வாருங்கள்" என்று அரசன் நம்பியை வேண்டினுன்.

நம்பியும் அறையினுள் சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த ஏடுகளை வெளியே கொணர்ந்தார். என்னே துரதிர்ஷ்டம்! ஏடுகளில் சில பகுதிகள் கரையானுல் சாப்பிடப்பட்டு பழுதடைந்து போயிருந்தன.

மகிழ்ச்சியில் திளைத்திருந்த அரசன் அந்தப் பழுதடைந்த ஏடுகளைக் கண்டதும் துயரமே வடிவாயினன். நம்பியின் உள்ளமும் வருத்தத்தில் ஆழ்ந்தது.

> "வருந்த வேண்டாம். இக்காலத்துக்குத் தேவையானவற்றை மட்டும் விட்டு, மற்றவை யாவையும் செல்லரிக்கச் செய்தோம்"

என்ற அசரீரி வானிலே எழுந்தது.

கவலை கொண்டிருந்த அரசன் அசரீரியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான். நம்பியை வணங்கி, "பெருமானே, இனி தாங்கள் தடையின்றி தொடங்கலாம்" என்று வேண்டினுன்.

நம்பியாண்டார் நம்பி பொன்னம்பலத்தாடும் பெருமானைச் சேவித்துத் தம் திருமுறைப் பணியைத் தொடங்கினுர். அரசனின் நெடுநாளைய விருப்பம் நிறைவேறியது.

2. அருண்மொழித்தேவரின் அரிய திருப்பணி

ஏறக்குறைய நூற்று ஐம்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போது சோழ சிங்காதனத்தில் அநபாயன் அமர்ந்திருந்தான். அரசன் சைவ சமயத்தைத் தழுவியவனாக இருந்த போதிலும் ஜைனமதத்தில் அதிக ஈடுபாடு அவனுக்கு இருந்து வந்தது. சீவகசிந்தாமணி அவன் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. சதா அதன் கருத்துக்களைப் படித்து மகிழ்வதிலே பொழுதைக் கழித்து வந்தான்.

மன்னனின் அமைச்சர்களில் அருண்மொழித் தேவர் என்பவரும் ஒருவர். மிகுந்த அறிவும் தெய்வ பக்தியும் கொண்ட அவர் தம் திறமை காரணமாக, தம் தந்தையாருக்குப் பின் அவர் வகித்து வந்த அமைச்சர் பதவியை ஏற்றுத் திறம்பட நடத்தி வந்தார். குடந்தை அருகே உள்ள திருநாகேச்வரம் எனப்படும் தலத்தில் இருப்பிடம் கொண்டுள்ள ஈசனிடம் இடையறாத பக்தி பூண்டவர் அவர். அதன் காரணமாகவே தொண்டை நாட்டிலே அவர், தாம் பிறந்து வளர்ந்த குன்றத்தூரிலும் இறைவனுக்கு ஓர் ஆலயம் எழுப்பித் திருநாகேச்வரம் என்ற பெயரையும் ஸ்தாபிக்கச் செய்தார். அவருக்கு அரசனின் போக்கு, மிகுந்த கவலையை அளித்தது. இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரவல்ல சிவாகமங்கள் எத்தனையோ இருக்க, அரசன் புறச் சமயிகளுடையதும், இன்பத்துக்கே முக்கிய இடம் தந்திருப்பதுமான சீவகசிந்தாமணியின் பேரில் அதிக நாட்டம் கொண்டுள்ளானே என வருந்தினர். எப்படியும் அரசனின் போக்கைத் திருப்பி தாம் வணங்கும் தெய்வத்தின் பால் மனத்தை ஈடுபடச் செய்யவேண்டும் என்று தோன்றியது அவருக்கு. இல்லையேல், நாளடைவில் இந்தப் போக்கு அரசனின் மன நிலையை முற்றிலும் மாறுபடச் செய்து அவனை ஜைன சமயத்தைத் தழுவும்படித் தூண்டிவிடலாம் என்று பயந்தார் அருண்மொழித்தேவர். அரசன் பிறச் சமயத்தைத் தழுவுவானாகில் நாட்டு மக்களும் அவனைப் பின்பற்றி விடுவர் அன்றோ.

அரசனிடம் இதைப்பற்றி எப்படி பிரஸ்தாபிப்பது? தகுந்த நேரத்தை எதிர்நோக்கியிருந்தார் அமைச்சர். அந்த நேரமும் வந்தது.

அன்றையத்தினம் அநபாயனும் அமைச்சரும் தனித்திருந்தனர். அரசன் அமைச்சரிடம் மிகவும் சந்தோஷத்தோடு

உரையாடி வந்தான். மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் மனோ நிலையைக் கொண்டிருந்த அரசனிடம் தம் உள்ளக் கிடக்கையை எடுத்துக் கூற இதுவே தகுந்த தருணம் என்பதை உணர்ந்த அமைச்சர் மெல்ல பேச்சைத் தொடங்கினார்.

''மன்னவா, தங்களிடம் ஒரு முக்கிய விஷயம் குறித்துப் பேசவேண்டும் என்று சில நாட்களாகவே முயன்று வருகிறேன். சந்தர்ப்பம் கிட்டாது போய்விடுகிறது.....'' என்றார் அமைச்சர்.

''அமைச்சரே, என்னிடம் பேசத் தங்களுக்கு ஏன் இந்தத் தயக்கம்? தாங்கள் எந்த நேரத்திலும் எந்த விஷயத்தைப் பற்றியும் என்னிடம் பேசத் தடை ஏதும் இல்லையே!......'' என்றான் அநபாயன்.

''மன்னவா, நான் பேச விரும்பும் விஷயமோ பெரிதும் சர்ச்சைக்குரியதானது. அதற்குரிய சந்தர்ப்பம், சூழ்நிலை முதலானவற்றைக் கவனிக்க வேண்டுமல்லவா?......''

''அப்படி என்ன விஷயம் அது? சொல்லுங்கள், அமைச்சரே!...'' என்று வியப்போடு கேட்டான் மன்னன்.

''தங்களைப்பற்றிய விஷயம்தான், மன்னவா! என்னை மன்னிக்க வேண்டும். என் கடமை தங்களிடம் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கத் தூண்டுகிறது. ஆயினும் தங்கள் சமூகத்தில் இதை எவ்வாறு தெரிவிப்பது என்று தவிக்கிறேன்'' என்றார் அருண்மொழித்தேவர் மிகுந்த பணிவுடன்.

அரசன் மெல்ல சிரித்தான்.

''அமைச்சரே, தங்கள் தயக்கம் எனக்கு ஆச்சரியத்தையே கொடுக்கிறது. எந்த விஷயமாயிருந்தாலும் தெரிவியுங்கள்'' என்றான் அரசன்.

அமைச்சர் தயங்கினார். வார்த்தைகள் வெளிவரத் தடுமாறின.

''மன்னவா!... விஷயம் இதுதான்...தங்கள் மனப்போக்கு சிறிது காலமாக வேறு வழியில் திரும்பியிருக்கிறது...''

''எதைப்பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்?... எனக்கு முற்றிலும் விளங்கவில்லையே!'' என்று அமைச்சரைக் கேட்டான் அநபாயன்.

''தாங்களோ சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள். அப்படியிருக்க சிவ கதையில் தாங்கள் நாட்டம் செல்லாது அவக் கதை

யிலே அதிக ஈடுபாடு கொண்டுள்ளீர்கள். மன்னவன் எப்படியோ மக்களும் அப்படியே! இந்த நிலை நீடித்தால் நாட்டில் சைவம் க்ஷிணித்து விடுமே என்று பயப்படுகிறேன்!......''

அரசனுக்கு விஷயம் முற்றிலும் புரிந்துவிட்டது. 'கட கட' வென்று சிரித்தான்.

''அமைச்சரே! நான் விரும்பிப் படிப்பது அவக்கதை யானுல் சிவ கதை எது? அதன் வரலாறு என்ன? கூறுங்களேன்!'' என்ருன்.

''மன்னர் மன்னவா, தங்கள் கேள்விக்கு விடை இருக்கின்றது!. இம்மையிலுமன்றி மறுமைக்கும் உதவக்கூடியதாகத் திருத்தொண்டத் தொகை என்னும் அருட்பதிகம் இருக்கிறது. திருவாரூரிலே தியாகேசப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்கச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பட்டது ஆகும். அதற்குத் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் பொருளுரைக்க, அவரது அருட்கடாக்ஷத்துக்குப் பாத்திரரான நம்பியாண்டார் நம்பி அவற்றைத் தொகுத்துக் கலித்துறை யந்தாதியாகப் பாடியுள்ளார். அத்திருவந்தாதியை தங்கள் முன்னேர்களுள் ஒருவரான அபயகுலசேகரர் எனப்பட்ட ராஜராஜனும் சிவாலய முனிவர் முதலான பெரியோர்களும் பாராட்டி யிருக்கிருர்கள். தாங்கள் ஒருமுறை அதைப் படிக்க வாய்ப்பேற்பட்டால், அதன் சுவையை எப்போதும் கேட்டு ரசிக்கவே விரும்புவீர்கள்......''

அமைச்சரின் வார்த்தைகள் அரசன் உள்ளத்தில் ஒரு திருப்பத்தைத் தோற்றுவித்தன. அமைச்சர் போற்றும் அத்திருவந்தாதியைக் கேட்க விருப்பம் கொண்டான்.

''அமைச்சரே, தங்களால் போற்றப்படும் அத்திருவந்தாதியை நானும் கேட்க ஆசைப்படுகிறேன். தாங்களே அதைக் கூறுங்கள்'' என்ருன்.

அமைச்சரின் உள்ளத்தில் விவரிக்க முடியாத மகிழ்ச்சி நிறைந்தது. அரசனிடம் எந்தவிதத்தில் எடுத்துக் கூறுவது என்று இத்தனை நாட்களாக அவர் தவித்துக் கொண்டிருந்தார். இவ்வளவு விரைவில் அவன் தன் வார்த்தையைச் செவிமடுத்துக் கேட்பான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அந்தப் பொன்ஞன நேரத்தை அவர் விட்டுவிட விரும்பவில்லை. ஆகவே, அப்போதே அரசனுக்குத் திருவந்தாதியைப் பாடி அதன் பொருளையும் எடுத்துக் கூறினுர்.

இறைவனின் அன்புக்குப் பாத்திரர்களான தொண்டர்களின் வரலாற்றைக் கேட்கக் கேட்க அநபாயன் உள்ளம் பக்திப் பரவசத்தில் திளைத்தது. அமைச்சர் எதிர்பார்த்ததே போன்று அவன் மனப்போக்கும் மாறியது.

அமைச்சரின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

''இன்றுதான் என் உள்ளம் நிறைந்தது. அமைச்சரே, நான் அடைந்திருக்கும் மகிழ்ச்சியை உங்களிடம் எவ்வாறு விவரிப்பதென்பதே புரியவில்லை. நான் அடைந்த இன்பத்தை எல்லாருமே பெறவேண்டும். தாங்கள் இந்தக் கணமே என் வேண்டுகோளை ஏற்று, தொண்டர்களின் வரலாற்றை ஒரு காவியமாகச் செய்து அருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

அரசனின் கோரிக்கையைக் கேட்டதும் அருண்மொழித் தேவர் ஆனந்த பாஷ்பம் பெருக்கினார்.

''மன்னவா, நான் நினைத்தது ஒன்று. அது நிறைவேறியதோடு, நான் எதிர்பாராத ஒன்றும் நிகழ்ந்துவிட்டது. இறைவனின் திருவுள்ளம் அதுதான் என்று நினைக்கிறேன். தங்கள் விருப்பத்தை மனப்பூர்வமாக நிறைவேற்றி வைக்கச் சகலமான உதவிகளையும் அளிக்குமாறு ஆண்டவனை இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றார்.

சுப முகூர்த்தத்தில் அருண்மொழித் தேவர் தில்லைக்குப் புறப்பட்டார். அநபாயன் அவரைப் பலவிதங்களிலும் கௌரவித்து அரசாங்க மரியாதைகளுடன் அனுப்பி வைத்தான்.

தில்லையை அடைந்த அருண்மொழித்தேவர் பொன்னம்பலத்தில் நுழைந்து நடராஜரைச் சேவித்து, தம்முடைய பணி நிறைவேற அருள்பாலிக்கும்படி வேண்டினார். தம்முடன் கொண்டு வந்திருந்த திரவியங்களைக் கொண்டு அம்பலத்தாடும் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வித்தார். பின்னர் எம்பெருமானின் சந்நிதியில் நின்று இரு கரங்களையும் கூப்பித் தொழுதார். கண்கள் நீரைச் சொறிந்தன. இறைவனின் திருவுருவத்தைத் தமது நெஞ்சிலே பதித்துக் கொண்டவராய் உள்ளம் உருக வேண்டினார்.

''அடியார்களுக்கருளிய அரனே, அடியார்களின் வரலாற்றைக் காப்பியமாகப் பாடத் தேவரீர் அடியெடுத்துக் கொடுக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். ஈசனின் திருவடிவழகிலே தம்மை மறந்து நின்றார்.

சந்நிதியில் கவிழ்ந்திருந்த நிசப்தத்தைக் கலைத்தபடி கணீர் என்று ஒரு குரல் எழுந்தது. 'உலகெலாம்' என்ற அசரீரியைக் கேட்டத் தில்லை வாழ் அந்தணர்கள், அமைச்சர் பால் ஈசன் கொண்டுள்ள அன்பினை வியந்து அவரைப் போற்றிக்கொண்டாடினார்கள். மாலை முதலியன அணிவித்துக் கௌரவித்தார்கள். இறைவனின் திருவருளை எண்ணி எண்ணி வியந்தவராய் அருண் மொழித்தேவர் இறைவன் எடுத்துக்கொடுத்த அந்த வார்த்தையையே முதலில் வைத்து அவரைப் போற்றினார்.

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியனம் பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பின்னர் ஆயிரக்கால் மண்டபத்தை அடைந்து அங்கே அமர்ந்து இறைவனைத் தியானித்துத் தொண்டர்களின் வரலாற்றைக் காப்பியமாகப் பாடத் தொடங்கினார்.

நாட்கள் சென்றன. சிவனருட்செல்வர்களின் வரலாற்றுக் காப்பியம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

தலைநகரிலிருந்து அநபாயன் அவ்வப்போது புராணம் எவ்வளவு தூரம் முடிவுற்றிருக்கிறது என்று அறிந்து வர தூதுவர்களை அனுப்பி வந்தான். அவர்களும் தில்லை வந்து அமைச்சரை வணங்கி அரசனால் அனுப்பப்பட்ட காணிக்கைகளைச் சமர்ப்பித்து, புராணம் பற்றிய விவரம் அறிந்துசென்று தெரிவித்தனர்.

அநபாயன் ஆவலோடு எதிர்பார்த்த தினமும் வந்தது. தில்லையிலிருந்து அமைச்சர் அனுப்பிவைத்த தூதுவர்கள் அரசனைப் பணிந்து புராணம் முற்றுப் பெற்று விட்டதை அறிவித்தனர்.

அரசன் அடைந்த ஆனந்தத்துக்கு ஓர் அளவில்லை. நற்செய்தி கொண்டு வந்தவர்களுக்குப் பொன்னும் மணியும் வாரி வழங்கினான். உடனே புறப்பட்டு வந்து சேருவதாகத் தில்லைக்குச் செய்தி அனுப்பினான்.

சக்கரவர்த்தியின் வருகை கேட்டுச் சிதம்பரம் முழுவதுமே குதூகலத்தில் ஆழ்ந்தது. நகரமெங்கும் தோரணங்கள் அழகாகக் காட்சி தந்தன. அமைச்சர் அருண்மொழித்தேவர்

அநபாயனை வரவேற்கத் தில்லை வாழ் அந்தணர்களுடன் நகரத்து எல்லைக்கு வந்து காத்திருந்தார்.

நெற்றியிலே திருநீறும் கழுத்திலே ருத்திராக்ஷ மாலையுமாகச் சிவப்பழமாக நின்ற அமைச்சரைக் கண்டதும் அரசனின் உடல் சிலிர்த்தது. பல்லக்கை நிறுத்தச் சொல்லி, கீழே இறங்கி ஓடோடி வந்தான்.

"மன்னர் பெருமானே, தாங்கள் எனக்கிட்ட பணி இறைவன் அருளால் நிறைவுற்றது." என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிய அருண்மொழித்தேவர் இரு கைகளையும் கூப்பி அரசனை எதிர் கொண்டு வரவேற்றார்

தில்லை வாழ் அந்தணர்கள் அரசனைக் கோயில் மரியாதைகளோடு வரவேற்றனர்.

அநபாயன் அமைச்சரை இருகரங்களாலும் சேர்த்து அணைத்து மகிழ்ந்தான். அவருடையபாதங்களைத் தன் இரு கைகளாலும் தொட்டு ஒற்றிக்கொண்டு ஆனந்தப் பரவசமடைந்தான். பின்னர் அனைவரும் ஊர்வலமாக ஆலயத்தை அடைந்தனர். அரசன் பொன்னும் மணியுமாகக் கொண்டு வந்து கொட்டி எம்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்வித்தான்.

சபாநாயகரின் சந்நிதியிலே அரசனும் அமைச்சரும்தங்களை மறந்து இறைவனின் திருவுருவிலே மயங்கி நின்றிருந்தனர். ஆராதனைகள் முடிந்ததும் கர்ப்பூர ஆரத்தி காட்டப்பட்டது.

எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. அந்த நேரத்தில் மெல்லிய சிலம்பொலிச் சப்தம் எழுந்தது. அனைவரும் அதன் நாதத்தால் கவரப்பட்டு அந்தச் சப்தம் எங்கிருந்து வருகிறதென்பதை அறிய நாற்புறமும் திரும்பிப் பார்த்தனர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்போது 'கணீ'ரென்ற ஒரு குரல் மேலிருந்து கேட்டது.

> "அநபாய சோழனே, 'உலகெலாம்' என நாம் அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழான் நம்முடைய அடியார்களின் திருத்தொண்டுகளைப் பற்றிய வரலாற்றைப் புராணமாகப் பாடி முடித்திருக்கின்றான். நீயும் அதைக் கேட்டு இன்புறு!"

அநபாயனின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. நெடுஞ்சாங்கிடையாக விழுந்து

பகவானை நமஸ்கரித்தான். தன் வாழ்நாளிலே செயற்கரிய செயல் ஒன்றைச் செய்து முடிக்க இறைவன் அருளியதுபற்றிப் பலவாறு போற்றிக் கொண்டாடினுன். பின்னர் அமைச்சரை நெருங்கி அவரையும் வணங்கினுன்.

''அமைச்சர் பெருமானே, தங்களால் இயற்றப்பட்டுள்ளத் தொண்டர் தம் வரலாற்றினைத் தாங்களே எடுத்துக் கூறி விளக்கம் சொல்லவேண்டும். அதுதான் சிலாக்கியமானதும் ஆகும். என் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று இறைஞ்சினுன்.

மெய்சிலிர்க்க அமைச்சர் அரசனின் வேண்டுகோளைப் பணிவுடன் ஏற்றுக் கொண்டார்.

அரசன் தன்னுடன் வந்திருந்த அதிகாரிகளை அழைத்தான்.

''சித்திரை திருவாதிரை நாள் ஈசனுக்கு உகந்த நாள். அன்றைத்தினமே ஆரம்பித்து விடலாம். சிவ நேயர்களுக்கு அழைப்பு அனுப்புங்கள்'' என்று உத்தரவிட்டான்.

பின்னர் இறைவனின் சந்நிதானத்தில் பீடமிட்டு அதன் மீது வெண்பட்டு விரித்து மலர் தூவி அமைச்சர் பாடிய திருத் தொண்டர் புராணத்தை வைத்து முறைப்படி அர்ச்சனை செய்து வழிபட்டனர்.

திருவாதிரை நாள் வந்தது. மண்டபம் முழுவதும் மக்கள் குழுமி யிருந்தனர்.

அதிகாலையிலேயே எழுந்துவிட்ட அமைச்சர் தமது அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஆலயத்தில் நுழைந்து அம்பலவாணரைத் தரிசித்து அவரருள் கிட்டுமாறு பிரார்த்தித்துக் கொண்டார். இறைவனின் திருப்பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு மண்டபத்தை அடைந்தார். ஒருபுறமாகத் தரையிலே பட்டுப் பாய் விரித்து அதன் மீது அமர்ந்திருந்த அரசன் எழுந்து அமைச்சரை வரவேற்று, பீடத்துக்கு அழைத்துச் சென்று அமர்த்தினுன். அமைச்சரும் அரசனை வணங்கி அவன்அனுமதி பெற்றுப் புராணத்தைத் தொடங்கினுர்.

மனத்திலே எம்பெருமானின் திருக்கோலத்தைக் கண்டு மெய்மறந்தவராய், கணீரென்ற குரலில் 'உலகெலாம் முணர்ந்தோதற்கரியவன்' என்று பாடத் தொடங்கினுர்.

3. வானிலே தோன்றிய ஜோதி

கின்னரரும் கிம்புருஷரும் கீதம் இசைக்கப் பூதகணங்கள் நானுவித வாத்தியங்களை முழக்க, தேவ மாதர்கள் அற்புத நடனங்களை ஆடிக் களிப்பிக்க, முப்பத்து முக்கோடி தேவர் களும் விஷ்ணு பிரமாதியரும் அடிபணிந்து வேதங்களால் ஸ்தோத்தரிக்க இடப் பக்கத்திலே தேவியை அணைத்துத் திருக்கோலத்துடன் இறைவன் வீற்றிருக்கும் கைலயங்கிரிச் சாரலின் அடிவாரத்தில் உபமன்யு முனிவர் அனேக சிவயோகி களுடன் தங்கியிருந்தார். உபமன்யு முனிவர் மகா தபஸ்வி; சிவபெருமானிடம் மிகுந்த பக்தி பூண்டவர்; ஈசனின் அனுக் கிரகத்தால் திருப்பாற் கடலையே பாலாக அருந்தி வளர்ந்தவர்; அவரிடம் தான் கிருஷ்ண பரமாத்மா தீக்ஷை பெற்றது. இத்தனை பெருமைக்குரிய அவர் அடிவாரத்திலே தங்கி ஈசனை வழிபட்டு வந்தார்.

ஒருநாள் முனிவர் வழக்கம்போலத் தம்முடைய வழிபாடு களை முடித்துக்கொண்டு அங்கே குழுமியிருந்த தபோதனர் களுக்கு இறைவனின் பிரபாவத்தைப் பலவாறு எடுத்துக் கூறி வந்தார். அப்போது வானிலே திடீரென்று பேரொளி ஒன்று தோன்றியது. கண்ணைப் பறிக்கும் கோடி சூரியப் பிரகாசமான அந்த ஜோதி, அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கையில் வானிலே நகர்ந்து கைலாயத்தில் சென்று மறைந்தது.

அதனைக் கவனித்த உபமன்யு முனிவரின் மெய்சிலிர்த்தது. இரு கைகளையும் கூப்பிக்கொண்டு தம் இருக்கையை விட்டு எழுந்தார். அவர் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருக் கெடுத்தது. அப்படியே கைகளைச் சிரத்தின் மீது உயர்த்தி நெடுஞ்சாங்கிடையாகக் கைலாயமலையின் திக்கு நோக்கிப் பூமியில் விழுந்து வணங்கினுர்.

முனிவரின் செய்கை அங்கே கூடியிருந்த தவயோகி களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. வானிலே திடீரென்று ஜோதி தோன்றி கைலயங்கிரியில் மறைந்ததும், முனிசிரேஷ்டர் அத் திக்கு நோக்கி வணங்கி ஆனந்தப்பரவசமாகி நிற்பதும் அவர்களுக்கு விளங்கவில்லை.

அனைவரும் கைகூப்பி அவரை வணங்கியபடி "முனி புங்கவ!..." என்று கூப்பிட்டார்கள்.

"இறைவனிடம் ஈடு இணையில்லாத பக்தி கொண்ட தாங் கள் இந்த ஜோதியைக் கண்டதும் சிரம் கூப்பி வணங்கினீர்

களே, என்ன காரணம்? ஈசன் ஜோதி மயமாகத் தோற்றம் கொண்டானு? அப்படியானுல் அதன் அவசியம் யாது? எங்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்'' என்று பிரார்த்தித்தனர்.

உபமன்யு முனிவர் மகிழ்ச்சியால் முகம் மலர அவர்களைப் பார்த்துக் கூறினுர்.

"முனிவர் பெருமக்களே, சொல்லுகிறேன் கேளுங்கள். இப்போது ஜோதி ரூபமாய் இறைவனைச் சென்று அடைந்தவர் நம்பியாரூரர் என அழைக்கப்படும் சிவநேயர் ஆவர். எந்நேரமும் சிவபெருமானை நினைத்து வந்தவர் ஆதலின் அவரே சிவனுக விளங்குகிருர். பூலோகத்திலே தமது திருத்தொண்டுகளை முடித்துக்கொண்டு இறைவனை வந்து அடைந்து விட்டார்."

முனிவரின் வார்த்தைகள் அங்குக் குழுமியிருந்தோரின் ஆவலை மேலும் தூண்டி விட்டன. ஈசனின் அருட்பிரசாதத்துக்குப் பாத்திரரான அந்த அடியவரின் திருவரலாற்றைக் கேட்டு ஆனந்திக்க வேண்டும் என்ற பேராவல் அவர்கள் உள்ளங்களிலே எழுந்தது.

"முனி சிரேஷ்ட, திருத்தொண்டை முடித்துத் திரிபுராந்தகனுன சிவபெருமானுடன் ஐக்கியமான அவ்வடியாரின் வரலாற்றைத் தாங்கள் எடுத்துக் கூற வேண்டும்'' என்று மீண்டும் வேண்டினர் அவர்கள்.

ஆனந்தப் பரவசராகி இருந்த உபமன்யு முனிவர், அவர்களின் வேண்டுகோளை ஏற்று அவ்வரலாற்றினைக் கூறத் தொடங்கினுர்.

4. நந்தவனத்திலே நடந்துவிட்ட தவறு

கைலாசபதிக்குத் தொண்டு செய்ய எண்ணற்ற கணங்கள் கைலாசத்தில் இருக்கின்றனர். அவர்களுள் சுந்தரர் என்பாரும் ஒருவர். அவருக்கு ஆலால சுந்தரர் என்ற திருநாமமும் உண்டு.

ஒரு சமயம் ஈசன் தேவர்களின் திருப்திக்காகத் தம்மைப் பலவிதங்களிலும் அலங்கரித்துக்கொண்டு தரிசனம் தந்தார். அவருடைய திவ்விய மங்கள ரூபத்தைக் கண்டு பரவசமடைந்தவர்களாய் அவர்கள் ஈசனைப் பலவாறு தோத்திரம் செய்து கொண்டாடினுர்கள். தேவர்களுடைய புகழ்ச்சி நிறைந்த

தோத்திரங்களைக் கேட்ட ஈசன் புன்முறுவல் செய்தவராய் தம்முடைய திரு உருவத்தைக் கண்ணுடியில் பார்த்தார்.

கண்ணுடியிலே பிரதிபலித்த தம் சுந்தர உருவத்தைக் கண்ட சிவன், "சுந்தரா வருக" என்று அவ்வுருவத்தை அழைத்தார். அவ்வளவிலே கண்ணுடியிலே தெரிந்த அந்த உருவம் உயிர்ப்பெற்று அருகில் வந்து ஈசனை வணங்கியது. திவ்விய மங்கள ரூபத்தோடு விளங்கும் அவரைச் சிவபெருமான் அழைத்த பெயரான 'சுந்தரர்' என்ற நாமத்தாலேயே அழைத்து மலர் மாரி பெய்து கௌரவித்தனர் தேவர்கள்.

ஒரு சமயம் தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் அடைய பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விஷம் தோன்றவே, அதன் கடுமையைத் தாங்கமாட்டாது தேவாசுரர்கள் நாற் புறமும் சிதறி ஓடினர். விஷத்தின் கடுமையை விஷ்ணு பிரமாதியராலும் கட்டுப்படுத்த முடியாது போகவே அனை வரும் கைலாசநாதனைச் சரண் அடைந்தனர். ஈசன் சுந்தரரை அழைத்து, விஷத்தைக் கொண்டு வருமாறு பணித்தார். சுந்தரரும் அவ்வாறே சென்று விஷத்தைக் கொண்டு வர, ஈசன் அதை வாங்கிப் பருகி கண்டத்திலே நிறுத்திக் கொண் டார். அதன் காரணமாகவே அவருக்கு ஆலால சுந்தரர் என்ற பெயரும் விளங்கலாயிற்று.

சிவபெருமானின் திருவுள்ளத்தால் தோற்றுவிக்கப்பட்ட சுந்தரர் இறைவனுக்குத் திரு மலர் கொண்டு வந்து மாலை தொடுத்துச் சாத்தும் திருப்பணியை மேற்கொண்டார். திரு நீற்றுப் பாத்திரம் கையில் ஏந்தி ஈசனின் அருகிலேயே நிற்கும் பேறு அவருக்குக் கிட்டியது.

தினமும் சுந்தரர் அதிகாலையில் எழுந்து நந்தவனம் சென்று சிவபெருமானுக்காக அன்றலர்ந்த புஷ்பங்களைக் கொய்து வருவார். அவற்றை நன்கு ஆய்ந்து மாலையாகக் கட்டி எம்பெருமானுக்குச் சமர்ப்பிப்பார்.

இவ்வாறு நடந்து வரும் நாளையில், ஒரு தினம் சுந்தரர் நந்தவனத்துக்குச் சென்ற போது, அங்கு தாம் மட்டும் அன்றி வேறு இருவரும் இருப்பதைக் கண்டார். தேவியின் பணி களைக் கவனித்து வந்த அனிந்திதை, கமலினி என்ற இரு சேடியரும் அன்றைத் தினம் மலர் கொய்ய அந்த நந்தவனத் துக்கு வந்திருந்தனர்.

எதிர்பாராத நிலையில் அவர்களைச் சந்திக்க நேர்ந்ததும் சுந்தரர் சற்று திகைத்து விட்டார். எழில் வாய்ந்த அக்

கன்னியர் இருவரைக் கண்டதும், அவர்களது அழகிலே ஒரு கணம் அவர் உள்ளம் பேதலித்து விட்டது எனலாம். ஆயினும் அடுத்த விநாடியே அவர் தம் நிலையை நன்கு உணர்ந்து கொண்டார். இறைவனுக்குத் திருமாலை சார்த்த மலர் பறிக்க வந்த தாம் இவ்விதம் மனம் பேதலித்து நிற்பது தகாது என்பதை அறிந்து, கண நேரத்தில் நடந்து விட்ட அந்தத் தவறுக்காக வருந்தினார். பின்னர், 'மளமள'வென்று புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு திரும்பினார்.

சேடியர் இருவரும் அச்சுந்தர வடிவினைக் கண்டு அவரது பேரழகைக் குறித்து வியந்தவராய் சென்றனர்.

நந்தவனத்திலே நடந்த இந்நாடகத்தை எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளான சிவபெருமான் அறியமாட்டாரா என்ன? பறித்து வந்த புஷ்பங்களைக் கொண்டு மணம் கமழும் மாலை தொடுத்து எடுத்து வந்த சுந்தரரைப் பார்த்து, "சுந்தரா, நந்தவனத்தில் ஏற்பட்ட தடுமாற்றம் என்ன?" என்று கேட்டார்.

சுந்தரரின் உள்ளம் கூசியது; உடல் கூனிக் குறுகியது.

" மகேச்வரா, மன்னிக்க வேண்டும். என்னை அறியாது சிறு தவறு நேர்ந்து விட்டது. இனியொரு முறை அம்மாதிரி நிகழ்வதற்கு இடம் அளிக்கமாட்டேன்" என்று நெஞ்சம் உருகத் தெரிவித்தார்.

சிவபெருமானின் திருமுகத்தில் மெல்லிய புன்னகை தவழ்ந்தது.

"சுந்தரா! உன் உள்ளத்திலே ஏற்பட்ட அந்த க்ஷண நேர இன்பத்தை முற்றும் நீ அனுபவிக்க அருள்புரிகிறோம். ஆயினும் அதற்குத் தகுந்த இடம் இதுவல்ல. நீ தென் திசையிலே சென்று மானிடனாகப் பிறந்து, அந்தப் பெண்களுடன் வாழ்ந்து குடும்ப வாழ்வின் இன்பத்தை அனுபவித்து, மறுபடியும் இங்கு வந்து சேரலாம்."

சிவபெருமானின் வார்த்தைகளைக் கேட்ட சுந்தரர், அப்படியே கல்லாகச் சமைந்து விட்டார். கண் இமைக்கும் நேரத்தில் பெண்களைக் கண்டு இச்சை கொண்டதற்காக இப்பெரும் தண்டனையா? இறைவனின் அருகிலிருக்கும் பாக்கியத்தை இழந்து பூவுலகிலே தாயைப் பிரிந்த கன்று போல் அல்லலுற வேண்டுமா?

அடுத்த கணம் அவர் தம்மையே தேற்றிக் கொண்டார். இறைவனின் விருப்பம் அவ்விதமிருக்கும்போது அவர் நினைத்தாலும் தடுக்க முடியுமா? இரு கரங்களையும் கூப்பி வணங்கினுர்.

"சர்வேசா! ஒரு வரம் அளிக்க வேண்டும்..." என்ருர்.

"சுந்தரா, உன் விருப்பம் என்ன?" என்று கேட்டார் ஈசன்.

"பிரபோ, கண் இமைக்கும் நேரத்தில் நான் செய்த தவறு, தங்களருகில் இருக்கும் பாக்கியத்தை இழக்கச் செய்துவிட்டது. இதே தவறைப் பூவுலகில் நான் மீண்டும் செய்ய அனுமதிக்கக் கூடாது. நான் மையல் கொள்ளுகின்றபோது தாங்கள் என்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும். இதுவே என் கோரிக்கை" என்று பிரார்த்தித்தார்.

"அந்த நேரத்தில் நாமே உன்னைத் தேடி வருவோம்" என்று அருளினுர் சங்கரன்.

ஈசனின் திருவருள்படி சுந்தரரும், சேடிப் பெண்களான அனிந்திதையும், கமலினியும் கைலாசத்தை விட்டுப் பூலோகத்தில் வந்து பிறந்தனர்.

5. பசுவுக்கு நீதி வழங்கிய பார்வேந்தன்

"முனிசிரேஷ்ட, இப்பூமண்டலத்தில் தென் திசை மட்டும் செய்த மகிமை என்ன? சுந்தரரை அங்கு சென்று தோன்றுமாறு ஈசன் சொன்ன விசேஷம் என்ன? அதைக் கேட்க நாங்கள் ஆவலாயிருக்கிருேம்" என்றனர் முனிவர்கள்.

"தபோவனர்களே, பிற திசைகளில் தென் திசை மிகவும் சிறந்ததேயாம். நினைத்தாலே எண்ணற்ற பெரும் பாவங்களைப் போக்கவல்ல க்ஷேத்திரங்கள் அங்குதான் அனேகம் உள்ளன. புலியினுடையதைப் போன்ற பாதங்களை உடையதால் வியாக்கிரபாதர் என்று பெயர் விளங்கப்பெற்ற முனிசிரேஷ்டர் இறைவனை வழிபட்ட தலமான பெரும்பற்றப் புலியூர் 1; இறைவனை விட்டுப் பிரிந்த தேவி மறுபடியும் அவரை அடையும் பொருட்டு கம்பை ஆற்றின் கரையிலே தவமியற்றி வழிபட்ட காஞ்சிபுரம்; நந்திதேவர் ஈசனை வழிபட்டு தேவர்கள் அனைவ

1 சிதம்பரம்.

ராலும் போற்றப்பட்டு, கணங்களின் தலைமைப் பதவி பெற்ற திருவையாறு; சகல லோகங்களும் பிரளய அழிவிலே சிக்கி மறையும்போது தோணியாக மாறி மிதந்த திருத்தோணிபுரம்1; மாதொரு பாகன் புற்றிடம் கொண்டாராக எழுந்தருளியிருக்கும் ஆரூர் 2; இவை போன்ற அனேக புண்ணியத் தலங்கள் தென் திசையில்தான் இருக்கின்றன. அதனால்தான் சிவனும் தம் தொண்டரைத் தென்திசை சென்று பிறக்குமாறு அருளினர்'' என்று சொன்ன முனிவர் மேலே வரலாற்றைத் தொடர்ந்தார்.

பார்வதி பரமேச்வரரின் திருமணக்கோலத்தைக் கண்டு களிக்கச் சகலமான பேர்களும் ஹிமவானின் இருப்பிடத்துக்கு வந்து குவிந்ததால் பூபாரம் முழுமையும் ஒரே இடத்தில் சேரவே, பூலோகம் குடைசாய்வது போல் ஆடத் தொடங்கியது. அதைக் கண்டு தேவர்கள் கதிகலங்கினர். அப்போது பரமேச்வரன் அவர்களைப் பார்த்து பயப்பட வேண்டாமென்று அபயம் அளித்தார்.

''நம்மில் ஒருவர் தென்திசை சென்று பொதிகை மலைச்சாரலில் தங்கினால் இரு பக்கங்களில் பாரம் சீராகிவிடும்'' என்றார்.

யார் தென் திசைப் போய் தங்குவது? மகிழ்ச்சி கரை புரண்டு ஓடப்போகும் அந்த நேரத்தில் அங்கே இல்லாது தென் திசை நோக்கிப் போவதை யார்தான் விரும்புவர்? தங்களைப் புறப்பட்டுப் போகும்படி இறைவன் கேட்கக் கூடாதே என்று ஒவ்வொருவரும் மனத்தில் குமைந்து கொண்டிருந்தனர்.

பரமேச்வரன் குறுமுனியான அகத்தியரை அழைத்தார்.

''முனிவரே, இப்பணிக்குத் தாங்கள் ஒருவரே ஏற்றவர்!'' என்று கூறினர்.

எத்தனையோ தேவர்கள் இருக்கத் தம்மை ஈசன் தேர்ந்தெடுத்துள்ளாரே என்று அகத்தியர் மகிழ்ந்தாலும், இறைவனின் திருமண விழாவிலே கலந்துகொள்ளும் வாய்ப்பில்லாது போகிறதே என்று வருத்தமும் அடைந்தார்.

முனிவரின் உள்ளத்திலே கொந்தளிக்கும் எண்ணங்களைப் பரமேச்வரன் நன்கு உணர்ந்தார்.

''முனிவரே, என்ன யோசிக்கிறீர்கள்?......'' என்று கேட்டார்.

---

1 சீர்காழி. 2 திருவாரூர்.

"பரமேச்வரா, தங்கள் திருமணக் கோலத்தைக் காணும் பாக்கியம் எனக்கில்லாது போய்விட்டதே!" என்று வருத்தத்துடன் கூறினுர் முனிவர்.

"கவலைப்பட வேண்டாம். தங்கள் இருப்பிடத்திலிருந்தே இங்கு நிகழும் சம்பவங்கள் அனைத்தையும் காணும் பாக்கியத்தை அளித்தேன்" என்று அருளினுர்.

கங்கை நீரைக் கமண்டலத்திலே எடுத்துக்கொண்டு தென் திசை நோக்கிப் புறப்பட்டார் அகத்திய முனிவர்.

தாரகனின் கொடுமைகளுக்குப் பயந்த இந்திரன் அவனுக்குத் தெரியாமல் சீகாழிப்பதியிலே வந்து ஒளிந்திருந்தான். சிவபெருமானை அர்ச்சிக்க மலருக்காக நந்தவனம் ஒன்று அமைத்திருந்தான். அதில் பலவகையான செடிகளை வைத்துப் பயிர் செய்திருந்தான்.

இந்திரனே தாரகனுக்குப் பயந்து ஒளிந்திருக்கும்போது வருணனின் நிலை எப்படியிருக்கும்? தாரகனின் கட்டளைக்குப் பயந்து எங்குமே மழை பெய்யாது இருந்து விட்டான். அதனுல் நீர் நிலைகள் வற்றிப்போய் மக்கள் சொல்லொணுக் கஷ்டங்கள் அடைந்தனர். இந்திரனின் நந்தவனத்துச் செடிகளும் நீர் இன்றி வாடிப் போய் நின்றன.

அதைக் கண்டு பெரிதும் மனம் வருந்திய இந்திரன், பிரமதேவனை அடைந்து என்ன செய்யலாமென்று கேட்டார். அவரும் விநாயகப் பெருமானை ஆராதிக்குமாறு தெரிவித்தார். அவ்வாறே இந்திரன் விநாயகரை ஆராதிக்க, கணநாதரும் அவனுக்கு உதவி செய்யப் புறப்பட்டார்.

பொதிகைமலை நோக்கிப் புறப்பட்டு வந்த அகத்தியர் தென்னுட்டில் நுழைந்ததும் ஓரிடத்தில் தங்கி நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொள்ள விரும்பினுர். அவ்வாறே ஓரிடத்தில் அமர்ந்து நித்திய கர்மாக்களை முடித்துக்கொண்டு பகவானைக் குறித்து ஜபம் செய்யத் தொடங்கினுர். அவருக்குப் பக்கத்திலே கங்கை நீர் நிறைந்த கமண்டலம் வைக்கப்பட்டிருந்தது.

விநாயகப் பெருமான் ஒரு காக்கையாக உருவெடுத்துப் பறந்து வந்து கமண்டலத்தின் விளிம்பிலே உட்கார்ந்தார். நீரை அசுத்தப்படுத்திவிடப் போகிறதே என்று அகத்தியர் கையை ஓங்கி அதை விரட்டினுர். விநாயகரும் பறந்து போவது

போல் பாவனை செய்து, இறக்கைகளை அடித்துக்கொண்டு கால் விரல்களால் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டார். அது வரை முனிவருக்குக் கட்டுப்பட்டுக் கமண்டலத்திலே அடங்கிக் கிடந்த கங்கை காவிரியாகப் பெருகி ஓடத் தொடங்கினாள்.

'அடாடா, கங்கா ஜலத்தைக் கவிழ்த்துவிட்டதே!......' என்று பரபரப்போடு எழுந்திருந்தார் முனிவர்.

அங்கே காகத்தைக் காணவில்லை. நாற்புறமும் சுற்றிப் பார்த்தார். ஒரு சிறுவன் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். தாம் எடுத்து வந்த ஜலம் கொட்டிப் போய்விட்டதே என்ற வேகத்தில் அந்தச் சிறுவன் யார் என்பதையும் சிந்தித்துப் பார்க்காமல் அவனை அடிக்க ஓடினார்.

விநாயகரா அவரிடம் அகப்படுவார்? பாய்ச்சுக் காட்டியபடி வெகு நேரம் அலைக்கழித்து முடிவில் அவரிடம் அகப்பட்டுக் கொண்டார். தம்மை அலைக்கழித்து விட்டானே என்ற கோபத்தில் கைவிரல்களை மூடிக்கொண்டு ஓங்கி அவன் தலையில் குட்டப் போனார். அங்கே சிறுவனுக்குப் பதிலாக விநாயகப் பெருமான் காட்சி தந்தார்.

அகத்தியர் வெல வெலத்துப் போய்விட்டார். அவர் என்ன காரியம் செய்ய இருந்தார்?

அப்படியே நெடுஞ்சாண்கிடையாக விநாயகரின் பாதங்களில் விழுந்தார்.

"விக்னராஜா! இதென்ன திருவிளையாடல்? இந்த ஏழையைச் சோதிக்க நேர்ந்ததேன்? தங்களை இன்னாரென்று உணராது அபசாரம் இழைத்துவிட்டேன். என்னை மன்னித்து அனுக்கிரகிக்க வேண்டும்" என்று அவர் பாதங்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்.

"அகத்தியரே, எழுந்திரும். தங்களால் பெரும் நன்மை அல்லவா நிகழ்ந்திருக்கிறது. தாங்கள் கங்கையைக் கொண்டு வந்ததால் அல்லவா மக்களின் வரட்சியைப் போக்க முடிந்தது" என்று சொன்ன விநாயகர் சீகாழிப்பதியில் இந்திரன் நிர்மாணித்த நந்தவனத்துச் செடிகள் நீரின்றி வாடுவதைத் தெரிவித்தார்.

குறுமுனியின் கமண்டலத்திலிருந்து வெளிப்பட்ட கங்கா தேவி காவிரி அன்னையாக மாறி தென்னாட்டின் குறுக்காக ஓடினாள். பொங்கிப் பாயும் காவிரி நீரினால் நாட்டிலே வரண்டு

கிடந்த நீர்நிலைகள் நிரம்பின. வரட்சி மாறி செழுமை தோன்றியது.

இத்தனை பெருமை வாய்ந்த காவிரி நதி பல கிளைகளாகப் பிரிந்து பாயும் சோழவள நாட்டிலே திருவாரூர் என்றொரு நகரம். இத்தலத்திலே லக்ஷ்மி இறைவனை வழிபட்டு அருள் பெற்றாள். சோழ மன்னர்களின் தலைநகராக இருந்து வந்த அந்த ஊர் மற்றொரு வகையாலும் பெருமை உடையதாயிருந்தது.

அவ்வூரிலே இருந்து அரசாண்ட மன்னர்களில் மனுநீதிச் சோழனும் ஒருவன். அவனாலும் அந்த ஊர் பெருமை அடைந்திருந்தது.

மனுநீதிச் சோழன் ஆரூரிலே இடம் கொண்டுள்ள வன்மீக நாதரிடம் அளவில்லா பக்தி பூண்டவன். தான தருமங்களை விதிப்படி செய்து வந்தான்; அனைவரையும் வேறுபாடு ஏதுமின்றி சமமாகப் பாவிக்கும் குணம் உடையவன் அவன்.

இறைவன் திருவருளால் அரசனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. தான் வணங்கும் எம்பெருமானின் திருப்பெயரையே தன்னுடைய மகனுக்கும் வைத்தான்.

வீதிவிடங்கன் எனப் பெயரிடப்பட்ட அரச குமாரன் தந்தையின் நற்பெயர் விளங்க சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். மக்கள் அரசனைப் போன்று அரசகுமாரனையும் போற்றிக் கொண்டாடினர்.

அரசகுமாரன் வளர்ந்து வாலிபனானான். ஒருநாள் ஆலயத்துக்குச் சென்று இறைவனை வழிபட்டுத் திரும்ப எண்ணம் கொண்டவனாய் தேரிலேறிப் புறப்பட்டான்.

நெறி தவறாது ஆட்சி புரிந்து வரும் அரசனின் மகிமையை உலகம் அறியச் செய்ய எண்ணம் கொண்டார் பகவான்.

தருமதேவதை ஓர் இளங்கன்றாக மாறியது. தாயின் மடியில் சுரக்கும் பாலை வயிறு முட்டக் குடித்துவிட்டுத் துள்ளிக் குதித்தபடி ராஜவீதியில் ஓடத் தொடங்கியது.

அதே நேரத்தில் வீதிவிடங்கன் ஓட்டி வந்த தேரும் அந்த வீதியிலே திரும்பியது.

வெகு வேகமாக ஓடிவரும் தேரையும், துள்ளிக் குதித்தபடி அதை நோக்கி ஓடிவந்த கன்றையும் கண்ட தெரு ஜனங்கள் ஒரேயடியாய் கூப்பாடு போட்டுக் கன்றை விரட்டினார்கள்.

சாதாரணக் கன்ருக இருந்தால் அவர்கள் போட்ட சப்தத்தில் தெரு ஓரமாய் ஓடிப் போயிருக்கும். வந்திருப்பது தருமதேவதை அல்லவா! மற்றவர்களின் கூப்பாட்டைக் கொஞ்சமும் சட்டை செய்யாது ஓடிச் சென்று தேர்க்காலில் சிக்கிக் கொண்டது.

கன்றைக் கண்டதும் தேரை நிறுத்த முயன்ருன் வீதி விடங்கன். ஆனுல் நிலைமை மீறிவிட்டது. கன்றின் உடலிலே தேர்ச்சக்கரம் ஏறி இறங்கிச் சிறிது தூரம் போய்தான் நின்றது. தேரை நிறுத்திவிட்டு இறங்கி ஓடி வந்தான் அரசகுமாரன். இதற்குள் அவன் பின்னுல் வந்த நண்பர்களும் அதிகாரிகளும் தங்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு இறங்கி ஓடிவந்தனர்.

இரத்த வெள்ளத்திலே கிடந்தது கன்று. அருகில் நெருங்கிய அரசகுமாரன் அதைக் கைகளில் தூக்கினுன். கன்றின் தலை தொங்கியது. அதன் ஆவி அப்போதே பிரிந்துவிட்டிருந்தது. அதே சமயம் கன்றைத் தொடர்ந்து ஓடி வந்த பசுவும் அங்கே வந்தது.

வீதிவிடங்கன் பதறிப் போய்விட்டான். மக்கள் நிறைந்த ராஜவீதியில் அவன் நிதானமாக அல்லவா தேரை ஓட்டிச் செல்ல வேண்டும்! அவன் அஜாக்கிரதை காரணமாக ஓர் உயிர் போய்விட்டதே! எந்த உயிருக்கும் கெடுதலை எண்ணுத அவன் தந்தையின் பெயருக்கு ஒரு களங்கம் ஏற்படும்படியாக நடந்து கொண்டு விட்டானே!

துயரத்தால் நெஞ்சம் விம்ம, கன்றின் உடலைத் தரையில் கிடத்திவிட்டு நிமிர்ந்தான் அரசகுமாரன். அங்கே ஓடி வந்த பசு குனிந்து கன்றை முகர்ந்து பார்த்தது. சற்று முன்பு மடியிலே முட்டிக் குடித்த கன்று இறந்துவிட்டதை உணர அதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அதன் அடிவயிற்றிலிருந்து பீறிட்டு "அம்மா" என்ற அலறல் கிளம்பியது. நிமிர்ந்து அரசகுமாரனைப் பார்த்துவிட்டுக் கன்றை மறுமுறையும் முகர்ந்து பார்த்துக் கத்தியது.

வீதிவிடங்கனின் கண்களிலிருந்து நீர் ஆருகப் பெருகியது. தன்னுடன் வந்திருந்தவர்களைப் பார்த்தான்.

"ஐயோ, நான் என் செய்வேன்? என் தந்தையின் முகத்தில் எவ்வாறு விழிப்பேன்? கன்றை இழந்து பரிதவிக்கும் இந்தப் பசுவின் துயரத்தை எவ்வாறு தீர்ப்பேன்?" என்று கண்ணீர் உகுத்தவனுய்க் கேட்டான்.

பின்னர் அங்கிருந்த அந்தணப் பெருமக்களைப் பார்த்துக் கரம் கூப்பியவனாய், ''பெரியோர்களே! இக்கொடும்பாவத்துக்கு என்ன பரிகாரம் செய்வது? சாஸ்திரங்களில் என்ன செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது? அதைச் சொல்லுங்கள். அதைச் செய்து இரத்தக் கறையால் களங்க முற்றிருக்கும் என் உடலைக் கழுவிக் கொள்கிறேன்'' என்று கேட்டான்,

அரசகுமாரனுடன் வந்திருந்தவர்கள் அவனை நெருங்கி ஆதரவு வார்த்தைகள் கூறினார்கள்.

''அரசகுமாரா, வருந்த வேண்டாம். வேண்டுமென்றே உன்னால் இக்காரியம் செய்யப்படவில்லை. ஊழ்வினைப்பயனால் கன்று இன்றைத்தினம் உன் தேர்க்காலில் அடி பட்டு இறக்க நேர்ந்திருக்கிறது. மேலும், கன்று ஓடிவருவதைக் கண்ட தெரு மக்களும் அதை விரட்டியிருக்கின்றனர். இத்தனையும் மீறி அது அடிபட நேர்ந்ததற்கு நீ எவ்வாறு காரணமாவாய்? வருத்தத்தை விடுத்துப் புறப்படு'' என்றனர் அவர்கள்.

இரு கண்களிலிருந்தும் நீர் தாரை தாரையாகப் பெருக்கெடுத்தோட பசு அக்கூட்டத்தினரை ஏற இறங்கப் பார்த்தது. பின்னர் திரும்பி வீதியிலே ஓடத் தொடங்கியது.

பசுவின் செய்கை சிலருக்கு வியப்பாக இருந்தது. திடீரென்று வெறி பிடித்தாற்போல் அது ஓடத் தொடங்கியதன் காரணத்தை அறிய ஒரு சிலர் அதன் பின்னே ஓடினர்.

ராஜவீதி வழியே ஓடி வந்த பசு நேராக அரண்மனையை அடைந்தது. அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி ஒன்று கட்டப்பட்டிருந்தது. மக்களுக்குக் குறை ஏற்பட்டால் எந்த நேரத்திலும் யாராக இருந்தாலும் வந்து மணியை அடித்து ஒலி எழுப்பினால் போதும், அரசன் உடனே மன்றத்தைக் கூட்டி அக்குறையை நிவர்த்தி செய்வான்.

மணியை நெருங்கிய பசு, தன்னுடைய கொம்புகளால் மணியை அசைத்து ஓசையை எழுப்பியது.

அந்த நேரத்தில் மனுநீதிச் சோழன் தன் அவையிலே அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை ஒன்றில் ஈடுபட்டிருந்தான்.

'டண் டண்' என்று சப்தித்த மணியோசையைக் கேட்டதும் அரசன் ஒரு கணம் திடுக்கிட்டான். அந்த ஓசை ஆலய மணியோசையாகப் படவில்லை. அப்படியானால்......

அரசனின் ஐயத்தை அருகிலிருந்த அமைச்சர் போக்கினார்.

"ஆராய்ச்சி மணியை யாரோ அடிக்கிறார்கள், மன்னவா!" என்றார்.

அரசன் உடனடியாக ஆலோசனைக் கூட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு அரண்மனை வாயிலுக்கு விரைந்தான். அவன் பின்னால் அமைச்சரும் பிற அதிகாரிகளும் ஓடிவந்தனர்.

அரசனைக் கண்டதும் பசு, மணி அடிப்பதை நிறுத்தி விட்டு அவனைப் பார்த்து "அம்மா..." என்று அடித்தொண்டையில் கத்தியது.

கண்களிலிருந்து நீர் வழிந்தோட நிற்கும் பசுவைக் கண்டதும் அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சிறிது நேரத்துக்கு ஒரு முறை பசு துக்கம் தாங்காது உறுமியது.

"இப்பசுவின் துயரம் என்னவென்று விளங்கவில்லையே!" என்று அமைச்சரைக் கேட்டான் அரசன். அவர்களுக்கு மட்டும் என்ன தெரியும்? அரசனைப் பார்த்து விழித்தனர்.

அப்போது பசுவைத் தொடர்ந்து ஓடி வந்த கூட்டத்தினர் அங்கே வந்து சேர்ந்தனர். தனக்கேற்பட்ட துயரத்துக்கு அரசனிடம் நீதி கேட்க பசு மேற்கொண்ட வழியைக் கண்டு அவர்கள் வியந்தனர். அக்கூட்டத்திலிருந்த முதியவர் ஒருவரை அழைத்துப் பசு அங்கு வந்து மணியை அடித்த காரணத்தைக் கேட்டார் அமைச்சர்.

அந்த முதியவர் அமைச்சரை வணங்கி, ராஜவீதியில் எதிர்பாராது நடந்து விட்ட துயரச் சம்பவத்தை விவரித்தார். அதைக்கேட்ட சோழ மன்னன், இடியுண்ட நாகம் போல ஆகிவிட்டான். உடல் நடுங்க இருகைகளையும் உயர்த்தி இறைவனை வணங்கினான்.

"சர்வேச்வரா, இத்தகைய பெரும் பாவத்துக்கு என்னை ஆளாக்கிவிட்டாயே! என் மகன் செய்தால் என்ன? நான் செய்தால் என்ன? என் குலத்துக்கே களங்கம் ஏற்படக் கூடிய வகையில் இப்படியொரு விபரீதம் நிகழ்ந்து விட்டதே. இறைவா, இப்போது நான் என்ன செய்வேன்? கன்றை இழந்து பரிதவிக்கும் பசுவின் துயரத்தை நான் எவ்வாறு போக்குவேன்? பசுவின் துயர நிலையைக் காணச் சகிக்கவில்லையே! மனிதர்களாக இருப்பின் இரண்டொரு ஆறுதல் வார்த்தைகளைக் கூறியாவது துயரத்தைக் குறைக்க முயற்சிக்கலாம். இதுவோ ஐந்தே அறிவு கொண்ட மிருகமாக அல்

லவோ இருக்கிறது. இதன் துயரத்தைக் கண்டு என் உள்ளம் வருந்துவதை எவ்வாறு உணர்த்துவேன்?'' என்று கதறிக் கண்ணீர் விட்டான்.

அரசனுடைய நிலைகண்டு அமைச்சர் முதலானோர் கலங்கினர். அரசனை நெருங்கி வார்த்தை சொல்ல எவருக்கும் துணிவில்லை.

பசுவோ அரசனை நோக்கித் தலையை உயர்த்தி ''அம்மா!'' என்று அலறியது

பசுவின் கதறலைக் கேட்கக் கேட்க அரசன் அனலிலிட்ட மெழுகுபோல் உருகித் துடித்தான்.

''ஏன் சிலைபோல் நிற்கிறீர்கள்? நான் இப்போது என்ன செய்வது? ஒருவரும் வாயைத் திறக்காதிருக்கிறீர்களே! இந்தப் பசுவின் துயரத்தை நான் எவ்விதம் போக்க முடியும்?'' என்று கண்ணீர் விட்டுக் கதறினான்.

கண்களிலிருந்து வழிந்தோடும் நீரைத் துடைத்தபடி அமைச்சர் அரசனை நெருங்கினார். ''மன்னவா, வாயில்லா ஜீவன் துயரப்படும்படி தங்கள் திருக்குமாரர் நடந்துகொண்டு விட்டாரே என்று வருந்துவதை நாங்கள் உணருகிறோம். இந்த நேரத்தில் தாங்கள் மனம் தளர்ந்து இவ்வாறு வருந்துவது சரியல்ல. அரசகுமாரரையும் முற்றிலும் பொறுப்பாளியாக்கவும் சந்தர்ப்பம் இடம் தரவில்லை. தவறு எத்தரப்பில் இருப்பினும் ஓர் உயிர் போய்விட்டது. சாஸ்திரங்களில் இதற்கு என்ன பரிகாரம் சொல்லப்பட்டிருக்கிறதென்பதை அறிஞர்கள் மூலம் அறிந்து செய்வதே உசிதமாகத் தோன்றுகிறது'' என்றார்.

அரசன் கனல்கக்கும் விழிகளுடன் அமைச்சரைப் பார்த்தான்.

''அமைச்சரே, நல்ல வார்த்தைகள் தான் கூறினீர்!...'' என்ற அரசனுடைய குரலில் ஏளனமே நிறைந்திருந்தது.

''பரிகாரம் செய்து விட்டால் போதுமா? அதனால் பசுவினுடைய துயரம் தீர்ந்து விடுமா?''

''அரசே, தங்கள் கேள்வி விசித்திரமாக அல்லவா இருக்கிறது! இறந்த கன்றை உயிர்ப்பித்துப் பசுவிடம் சேர்ப்பித்து விட நம்மால் இயலாதே!'' என்றார் அமைச்சர்.

அமைச்சர் கூறிய பதில், இதுகாறும் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்த அரசனுக்கு ஒரு வழியைப் புலப்படுத்தியது.

தேர்க்காலில் கன்று அடிபட்டு இறந்ததற்காகப் பரிகாரம் செய்து விடலாம் என்று, கூறுகிறீர்களே, நம் குடிமக்களில் ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்து விடுவதாகக் கொள்வோம். கொலையாளிக்குத் தாங்கள் என்ன தண்டனை அளிப்பீர்கள்?'' என்று கேட்டான்.

''மரண தண்டனை!...'' என்றார் அமைச்சர்.

''அதே தீர்ப்பைத்தான் இவ்வழக்கிலும் அளிக்கின்றேன்!'' என்றான் அரசன்.

அமைச்சருக்குப் புரியவில்லை.

''என்ன சொல்கிறீர்கள், அரசே?'' என்று கேட்டார்.

''ஆம், கன்றைக்கொன்ற வீதி விடங்கனும் தேர்க்காலில் கிடத்தப்பட்டுக் கொல்லப்பட வேண்டியவனே!...''

கொஞ்சமும் தடுமாற்றமின்றி அரசன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அமைச்சரும் மற்றவர்களும் திடுக்கிட்டனர்.

''அரசே, துயரம் மிகுதியால் தாங்கள் ஏதேதோ கூறுகிறீர்கள்...'' என்று குறுக்கிட்டார் அமைச்சர்.

''நன்கு ஆலோசித்தே நான் இம்முடிவுக்கு வந்துள்ளேன். கன்றை இழந்து பரிதவிக்கும் இப்பசுவைப் போன்று மைந்தனை இழந்து நானும் துடிப்பதே இதற்குப் பரிகாரமானது'' என்றான் அரசன்.

''அரசே, தாங்கள் கூறுவது பொருந்தாததாக இருக்கிறது. இம்மாதிரி நேரங்களில் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருப்பதையும், நம் முன்னோர்கள் கடைப்பிடித்திருப்பதையும் கவனிக்க வேண்டும். எங்குமே இம்மாதிரி கொடுந்தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை'' என்று பணிவுடன் தெரிவித்தார் அமைச்சர்.

''பசுவின் நீர் வடியும் கண்களைப் பாருங்கள். வாயைத் திறந்து அதனால் பேச முடியவில்லை என்ற ஒரு குறையைத் தவிர, நம்மோடு பேசாமல் பேசுகிறது. குடிமக்களின் குறைகளைப் போக்க ஆராய்ச்சி மணி கட்டியிருக்கிறோம். பசு இங்கே வந்து மணியை ஏன் அடிக்க வேண்டும்? தன்னையும் குடிகளுள் ஒன்றாகக் கருதி, அரசன் நீதி வழங்குவான் என்று அறிந்து, நீதி கேட்டுப் பெறவே வந்துள்ளது. பசுவுக்கு நீதி வழங்கவில்லை என்ற அபகீர்த்தியோடு வாழ நான் விரும்பவில்லை...''

அரசனுடைய வார்த்தைக்கு எவராலும் மறுமொழி பகர முடியவில்லை. கண்களில் தேங்கும் நீரை விரல் நுனியால் வழித்து உதறியபடி தலைகுனிந்து நின்றனர்.

''அமைச்சரே,...'' என்று அழைத்தான்.

''தண்டனை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்!''

''அரசே, தங்கள் திருக்குமாரருக்குத் தம் கட்சியை எடுத்துக் கூற அவகாசம் அளிக்கப்படவில்லை!'' என்று தயங்கினார் அமைச்சர்.

''தேவை இல்லை, அமைச்சரே. குற்றம் நன்கு நிரூபணமாகியிருக்கிறது. சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் இதோ குழுமியிருக்கின்றனர். மேலும், ராஜ வீதியில் நடமாட்டம் இருக்கும் என்பதை வீதி விடங்கன் நன்கு அறிந்திருந்தும் நிதானமாகத் தேரோட்டிச் செல்லாதது பெருங் குற்றமே. இந்தக் கன்றுக்குப் பதிலாக சிறு குழந்தை தேர்க்காலில் அடிபட்டு இறந்திருந்தால் அக்குழந்தையின் தாய் என்ன கேட்பாள் தெரியுமா? 'உன் மகனை இழந்து புத்திர பாசத்தால் நீ துடிக்கும்போது தான் என் துயரத்தை உன்னால் உணர முடியும்' என்று கேட்பதற்கு என்ன பதில் அளிக்க முடியும்? இனி பேசுவதற்கு எதுவுமில்லை. அமைச்சரே, தங்களுக்குக் கட்டளை யிடுகிறேன். என் மகன் முகத்தில் நான் விழிக்கவும் அஞ்சுகிறேன். புத்திர பாசத்தால் என் உள்ளத்தில் மாறுதல் தோன்றிவிடலாம். அதற்கு இடமளிக்க நான் விரும்பவில்லை. எந்த இடத்தில் கன்று அடிபட்டு உயிர் நீத்ததோ அதே இடத்தில் வீதி விடங்கனைப் படுக்க வைத்து அவன் மீது தேரை ஏற்றித் தண்டனையை நிறைவேற்றுங்கள். தண்டனையை நிறைவேற்றிய பின்னரே தாங்கள் என் முன் வரலாம்!...''

அமைச்சரின் தேகம் நடுங்கியது. இருகைகளாலும் தம்முடைய காதுகளைப் பொத்திக் கொண்டார். உள்ளம் கலங்கியது. அரசன் தன் மகனுக்கா தண்டனை விதித்துள்ளான்? இல்லை, இல்லை! இப்பெரும் பாதகத்தைச் செய்ய அவருக்கல்லவா கொடுந் தண்டனை வழங்கிவிட்டான்! நாராசமாக ஒலித்த அரசனுடைய வார்த்தைகளைக் கேட்டும் உயிரோடு இருப்பது எதனால்?

''இறைவா, இப்பாதகத்தைச் செய்யவா என்னை இத்தனை காலம் வாழச் செய்தீர்கள்?'' என்று ஓலமிட்டார்.

அடுத்த க்ஷணம் அவர் ஓலம் அடங்கிவிட்டது. உயிரற்ற உடல் மட்டும் பூமியில் விழுந்தது.

அங்கிருந்தோர் அனைவரும் திடுக்கிட்டு "ஹா......ஹா..." என்று அலறினர். அரசனோ அந்த நிகழ்ச்சியைக் கண்டு சிறிதும் மனம் தளர்ந்துவிடவில்லை. தண்டனையை நிறை வேற்றித் தீருவது என்ற உறுதி கொண்டான். வன்மீக நாதரின் ஆலயம் இருக்கும் திக்கை நோக்கிக் கரம் கூப்பினான்.

"இறைவா, இதென்ன சோதனை? பசுவின் கன்றுக்கு என் மகன் காலனாக வந்தான். அமைச்சருக்கு நானே காலனாக ஆகிவிட்டேனே! பெரும்பழி சூழ்ந்து விட்டதே! கன்றைக் கொன்றதற்காக வீதி விடங்கனுக்கு விதிக்கப்பட்ட தண்ட னையே அமைச்சரின் மரணத்துக்குக் காரணமான என் விஷ யத்திலும் பொருந்தட்டும்!" என்றான்.

பின்னர் அருகிலிருந்த அதிகாரிகளைப் பார்த்துத் தேரோடு அரசகுமாரனை அழைத்து வருமாறு உத்தரவிட்டான்.

துயரத்தால் தலை நிமிரமுடியாது வந்து நின்ற மகனைப் பார்த்தான் மனுநீதிச் சோழன்.

"ராஜவீதியிலே மக்கள் நடமாட்டம் இருக்கும் என்பதை அறிந்தும் நிதானமாகத் தேரை ஓட்டிச் செல்லாதது பெருங் குற்றமாகும். உன் அஜாக்கிரதை காரணமாக ஓர் உயிர் இன்று வதைக்கப்பட்டு விட்டது. அதற்குரிய தண்டனையை நீ அனுபவித்துத் தான் ஆகவேண்டும். இளவரசன் என்ற அந்தஸ்து உன் குற்றத்தை எந்தவிதத்திலும் மன்னிக்க இடம் அளிக்காது!"

வீதிவிடங்கன் மன்னனை நமஸ்கரித்தான்.

"மன்னவா, தங்கள் சமூகத்தில் குற்றவாளியாக நான் நிற்கிறேன். தங்களை நியாயாதிபதியாகவே நான் உணருகி றேன். இப்போது தாங்கள் என் தந்தை என்பதைப் பற்றி நான் கொஞ்சமும் சிந்திக்கவில்லை. என் குற்றத்துக்குத் தாங்கள் அளிக்கும் எந்தத் தண்டனையையும் ஏற்கச் சித்தமா யுள்ளேன்" என்றான்.

"தேரில் ஏறு!" என்று உத்தரவிட்டான் அரசன்.

வீதிவிடங்கன் தேரில் ஏறி அமர்ந்தான்.

குதிரைகளின் சேணக்கயிற்றைக் கையில் பிடித்தபடி தேர்த்தட்டில் ஏறி அமர்ந்த அரசன் சாட்டையைச் சொடுக் கினான். வீதியிலே தேர் ஓடியது.

ராஜவீதியிலே இரத்த வெள்ளத்தில் கன்றின் உடல் இன்னமும் கிடந்தது. அந்த இடத்தை நெருங்கியதும்

அரசன் தேரை நிறுத்திக் கீழே இறங்கினான். மகனையும் இறங்குமாறு உத்தரவிட்டான். தன்னுடன் வந்திருந்த அதிகாரிகளை அழைத்துத் தேரைச் சற்று தொலைவில் கொண்டு போய் நிறுத்துமாறு உத்தரவிட்டான்.

அங்கு குழுமியிருந்த மக்கள் கண்ணீர் விட்டு அழுதனர். அரசனின் மனம் இப்படிக் கல்லாகிவிட்டதே என்று வருந்தினர். கடைசி நேரத்திலாவது அரசன் மனம் மாறக்கூடாதா என்று ஆண்டவனை வேண்டினர்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த கன்றை அப்புறப்படுத்துமாறு உத்தரவிட்ட அரசன், அந்த இடத்தில் படுத்துக் கொள்ளுமாறு மகனுக்கு ஆக்ஞாபித்தான்.

தனக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை உணர்ந்த போது வீதிவிடங்கன் மனம் கலங்கிவிடவில்லை. தன்னுடைய அஜாக்கிரதையின் காரணமாகப் பெரும்புகழுடன் ஆட்சி புரிந்து வரும் தன் தந்தையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டதற்காக அவன் விவரிக்க இயலாத மனவேதனையால் துடித்து வந்தான். தன்னால் ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்கத் தண்டனை வழங்கப்பட்டதை மனமுவந்து ஏற்றுக் கொண்டான். வீதிவிடங்கப் பெருமானை மனத்திலே தியானித்து மலர்ந்த முகத்தோடு தரையில் மல்லாந்து படுத்துக் கண்களை மூடிக்கொண்டான்.

அரசன் மகனைத் திரும்பிப் பார்க்காது சென்று தேரில் ஏறிக்கொண்டு சாட்டையைச் சொடுக்கினான். 'கட கட'வென்ற சப்தத்துடன் சக்கரங்கள் உருண்டோட தேர் ஓடிவந்தது

நிகழப்போகும் பயங்கர சம்பவத்தை நினைத்து மக்கள் ஓலமிட்டனர். ஒரு சிலர் அந்தக் காட்சியைக் காண விரும்பாது, கண்களை மூடிக்கொண்டனர்.

தேர்த்தட்டிலே அமர்ந்திருந்த அரசன் மேல் நோக்கி பார்வையைச் செலுத்தினான்.

"எம்பெருமானே, என் மகன் குற்றம் செய்துவிட்டான். அதற்கான தண்டனையை அவன் இப்பிறவியிலேயே அடைந்து விட வேண்டுமென்றே இத்தண்டனையை அளித்தேன். அடுத்த பிறவியில் இக்குற்றத்துக்கான தண்டனை அவனைத் தொடராது அருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

வெகு வேகமாக ஓடிவந்த தேர் ஒரு கணம் ஆடிக் குலுங்கியது. சக்கரங்கள் வீதியிலே படுத்திருக்கும் இளவரசனின்

உடல் மீது ஏறி இறங்கின. ஆவி பிரிந்த வீதிவிடங்கனின் உடலிலிருந்து இரத்தம் நாற்புறமும் வாரி அடித்தது.

அதே சமயம் வானிலே 'கிடு கிடு'வென்ற சப்தம் அதிர்ந்தது. அரசன் மீது மலர்மாரி பெய்தது.

திடுக்கிட்ட அரசன் மேலே பார்த்தான். அங்கே சிவபெருமான் பார்வதியோடு ரிஷபத்தின் மீது ஆரோகணித்தவராய் தரிசனம் தந்தார்.

தேரை விட்டுக் குதித்த அரசன் கரம் கூப்பி இறைவனை அஞ்சலி செய்தபடி வீதியில் விழுந்து வணங்கினான்.

"சர்வேச்வரா, உன் தரிசனம் கிட்ட நான் என்ன புண்ணியம் செய்தேனோ!..." என்று ஈசனைப் போற்றினான் அரசன்.

அதே சமயம் கன்று உயிர்பெற்று எழுந்தது; அதைக் கண்ட பசு ஆவலோடு மடியிலே பால் சுரக்க ஓடிவந்தது. "அம்மே...!" என்று குரல் கொடுத்தபடி கன்று துள்ளிக் குதித்து ஓடித் தாயிடம் பால் குடிக்கத் தொடங்கியது.

பெரும் பாதகத்தைச் செய்யுமாறு தன்னை அரசன் ஏவினானே என்று நினைத்த மாத்திரத்தில் உயிரை விட்ட அமைச்சரும் எழுந்து அரசனைத் தேடி ஓடிவந்தார்.

தேர்க்காலிலே அரைபட்டுச் சவமாகக் கிடந்த வீதிவிடங்கனும் எழுந்தான். எழுந்ததும் ஓடோடி வந்து தந்தையை வணங்கினான்.

"சோழ ராஜனே, நீதி நெறி தவறாது ஆட்சி புரிந்து வரும் உன் மகிமையை உலகத்தாருக்கு எடுத்துக் காட்டவே நாம் இச் சோதனை புரிந்தோம். நீடூழி வாழ்ந்து பின்னர் எம்மை அடைவாயாக!" என்று அருளி மறைந்தார் சிவபெருமான்.

மகிழ்ச்சிக் கடலில் திக்குமுக்காடிய அரசன் மகனைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டு உச்சி முகர்ந்தான்.

"குமாரா, உன்னால் அல்லவா இறைவனைக் காணும் பேறு பெற்றேன்" என்று அவனைக் கொண்டாடினான்.

அரசனுடைய நீதி முறை வழுவாத ஆட்சியை மக்களும் போற்றிக் கொண்டாடினார்கள்.

இத்தனை பெருமை வாய்ந்த ஆரூர்ப்பதியிலே பரவையார் என்ற பெயரோடு கமலினி வந்து பிறந்தாள். அவளுடைய தோழி அனிந்திதை தொண்டை நாட்டிலே புழல் கோட்டத்தில் உள்ள ஒற்றியூரில் சங்கிலியார் என்ற பெயரோடு பிறந்தாள்.

6. தடுத்தாட்கொண்ட பெருமான்

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையே உள்ள திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்றொரு ஊர். அவ்வூரிலே சடையனுர் என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியார் இசை ஞானியார் என்பவர் கணவரிடம் மிகுந்த பக்தி பூண்டு இல்லற நெறி வழுவாது வாழ்ந்து வந்தார்.

சடையனுர் சிவபெருமானிடம் அத்தியந்த பக்திகொண்டவர். எந்நேரமும் ஆண்டவனின் சிந்தனையிலேயே தம் பொழுதைக் கழித்து வருவார். ஆசார அனுஷ்டானங்களில் சிறிதும் வழுவாது காலத்தைப் போக்கிவந்தார்.

நாரும் மணமும்போல இழைந்திருக்கும் அத்தம்பதிகளுக்கு மகனாக வந்து அவதரித்தார் சுந்தரர். இறைவனின் அருட்பிரசாதத்தைக் கண்டு சடையனுரும் இசை ஞானியாரும் அளவில்லா சந்தோஷம் கொண்டனர். குழந்தையைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஈசன் அனுக்கிரகத்தால் பிறந்த அக்குழந்தைக்கு நம்பியாரூரர் என்று நாமகரணம் செய்தனர் பெற்றோர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தை வளர்ந்து வரலானுன். அந்தந்தப் பருவங்களில் சடையனுர் மகனுக்கு ஒரு குறையும் வைக்காமல் செய்ய வேண்டியவற்றைச் செய்து மகிழ்ந்திருந்தார். தெய்வீகக்களை வீசும் முகத்தை உடைய அக்குழந்தையை ஊரார் அனைவரும் கொஞ்சி மகிழ்ந்தனர்.

நம்பியாரூரருக்கு மூன்று வயது நிரம்பியது. நன்கு நடக்கவும் ஓடவும் தொடங்கிவிட்ட குழந்தை எப்போதும் வீட்டினுள்ளே அடைந்து கிடக்குமா? தெரு வீதியில் ஓடி விளையாடுவான். குழந்தையின் விளையாட்டுக்குச் சடையனுர் சிறு தேர் ஒன்று செய்து கொடுத்திருந்தார். தேரைக் கண்டதும் நம்பி அடைந்த சந்தோஷத்துக்கு ஓர் அளவில்லை. சிறு கயிற்றைக் கட்டி அதை இழுத்துக்கொண்டு தெருவெங்கும் ஓடி வந்தான்.

அன்றையத் தினம் காலையில் இசை ஞானியார் குழந்தையை நீராட்டி, தலைவாரி பின்னி அழகு செய்தார். அவர் உள்ளே சென்று உடை எடுத்து வருவதற்குள் குழந்தை தேரை உருட்டிக்கொண்டு தெருவுக்கு ஓடிவிட்டான். திரும்பி வந்ததும் அணிவிக்கலாம் என துணியை வைத்துவிட்டுக் காரியங்களில் ஈடுபட்டார் இசைஞானியார்.

தெருவிலே இறங்கிய குழந்தை சற்று தொலைவில் ஏழெட்டு வீடுகளுக்கப்பால் தன்னொத்த குழந்தைகள் பலர் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவ்வளவுதான்; அவனுக்கும் மகிழ்ச்சி உண்டாகிவிட்டது. தேரை இழுத்துக் கொண்டு அவர்களிடம் ஓடிவிட்டான்.

அந்த நேரத்தில் அவ்வழியே அரசன் நரசிங்க முனையார் வந்துகொண்டிருந்தான். தெருவிலே குழந்தைகளுடன் சிறு தேரை இழுத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும் நம்பி யாரூரரைக் கண்டான். குழந்தையின் கள்ளங்கபடமற்ற முகமும், அதிலே பிரகாசிக்கும் காந்தியையும் கண்ட அரசன் மேலே செல்லாது நின்று விட்டான். கால்களில் தண்டையும், இடுப்பிலே நாய்க்காசுகள் கோர்த்த அரைஞாணும், கை களில் வளையும், சுழுத்திலே மணிமாலையுமாக மழலைச் சொற் களை உதிர்த்தபடி விளையாடும் குழந்தையைக் காணக் காண இரு கைகளாலும் அவனை வாரி அணைத்து மகிழ வேண்டு மென்று அரசனின் உள்ளம் விழைந்தது.

பல்லக்கிலிருந்து இறங்கி வந்தான். குழந்தையைத் தூக்கி முகத்தோடு முகம் சேர்த்து அணைத்துக் கொஞ்சினான். குழந்தையோ அரசனை நோக்கிச் சிரித்தது. அரசன் ஆனந்த வாரியில் திளைத்துப் போய் நின்றான்.

நடு வீதியிலே அரசன் பல்லக்கிலிருந்து இறங்கி தெரு விலே விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுவதைக் கண்ட அண்டை அயல் வீட்டினர் வியப்புடன் வெளியே வந்தனர்.

''பெரியவரே, இந்தப் பாலகனைப் பெற்றெடுத்த புண்ணிய சீலர் யார் என்பதைத் தெரிவிக்க முடியுமா?'' என்று அங்கிருந்த ஒருவரை நோக்கிக் கேட்டான்.

''அரசே, தங்கள் அன்புக்குப் பாத்திரரான சடையனாரின் தவப் புதல்வனே இப்பாலகன்'' என்றார் அந்த முதியவர்.

அரசனின் சந்தோஷம் பன்மடங்காகி விட்டது.

''சடையனாரின் மைந்தனா இவன்?...ஆஹா!... தந்தையின் அறிவுத்திறன் மைந்தனின் முகத்திலும் ஒளிருகிறது!...'' என்று குழந்தையின் கன்னத்திலே செல்லமாகத் தட்டினான். பின்னர் குழந்தையைக் கைகளில் அணைத்துத் தாங்கியபடி சடையனாரின் வீட்டை நோக்கிச் சென்றான்.

இதற்குள் செய்தி சடையனாருக்கு எட்டிவிட்டது. அரசன் நரசிங்கமுனையாரிடம் அவருக்கு நல்ல மதிப்பு உண்டு. அவ-

ருடைய நலத்தில் பெரிதும் அக்கரைகொண்டவனாய் அடிக்கடி அரசன் விசாரிப்பதுண்டு. அப்போதுதான் குளத்திலிருந்து திரும்பியிருந்தார் சடையனார். அடுத்த வீட்டிலிருந்து ஓடிவந்து செய்தியைத் தெரிவித்தார்கள்.

சடையனார் வாசலுக்கு விரைந்தார். அதே சமயம் அரசன் குழந்தையைத் தோளிலே சார்த்தியபடி, படி ஏறினான்.

''வாழ்க மன்னர்!...'' என்று வாழ்த்தினார் சடையனார்.

''நண்பரே, தங்கள் திருப்புதல்வனைக் காணும் பாக்கியம் கிட்டியது. தங்கள் இல்லத்தை நோக்கி ஓடோடி வந்தேன்'' என்று முகம் மலரக் கூறினான் அரசன்.

சடையனார் அரசனிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றார். வாசலில் கேட்ட பேச்சுக்களிலிருந்து அரசன் வந்திருப்பதை அறிந்த இசை ஞானியார் பூஜை அறையிலே வைத்திருந்த வெண்பட்டு வஸ்தி ரத்தை எடுத்து வந்து ஊஞ்சலிலே விரித்தார்.

சடையனாரின் தோளிலே சாய்ந்திருந்த குழந்தையிடம் கொஞ்சியவாறு உள்ளே நுழைந்த அரசன் ஊஞ்சலிலே அமர்ந் தான். பின்னர் குழந்தையை வாங்கித் தன் மடிமீது அமர்த்திக் கொண்டான். இதற்குள் உள்ளே சென்ற இசைஞானியார் சுடச்சுட பசும் பாலைக் கொண்டு வந்து அரசன் அருகில் வைத்து வணங்கலானாள்.

''தங்கள் குமாரன் என்னை இங்கு ஈர்த்துவிட்டான், அம்மா!'' என்று சொல்லிச் சிரித்தான் அரசன்.

சடையனார் அரசனோடு பல விஷயங்களைப் பேசி வந்தா லும், அரசனுடைய நினைவு முற்றிலும் அந்தக் குழந்தை மீதே லயித்திருந்தது. அரசபோகத்தில் அக்குழந்தை வாழ முடியு மானால் எவ்வளவு நன்றாக இருப்பான் என்று எண்ணினான். உள்ளத்தில் நினைத்ததை மெல்ல வெளியிட்டான்.

அரசனின் விருப்பத்தைக் கேட்டபோது சடையனாரும் அவர்தம் மனைவியாரும் பெரிதும் மகிழ்ந்தனர். தம் குமாரனைத் தேடித் திருமகள் வரும்போது அவளைத் தடுத்து நிறுத்த அவர்கள் விரும்பவில்லை. அரசனின் விருப்பத்துக்குத் தங்க ளிடையே ஆக்ஷேபணை ஏதும் இல்லையென்று பணிவுடன் தெரிவித்தனர்.

நம்பியாரூரரை அரசபோகம் சூழ்ந்தது. அரண்மனையில் வளர்ந்து வந்தாலும் அவர் தம் பெற்றோர்களைக் காணச் செல்வ

தையோ, சடையனார் குழந்தையைத் தங்களோடு அழைத்துச் சென்று சில நாட்கள் வைத்துக் கொள்வதையோ அரசன் தடுக்கவில்லை. அவனே சிற்சில சமயங்களில் குழந்தையைத் திருநாவலூரில் உள்ள அவன் பெற்றோர்களிடம் கொண்டுபோய் விட்டு விட்டு வருவான்.

நம்பியாரூரர் வளர்ந்து வரலானார். அரண்மனையில் அரச குமாரனுக்குரிய கலைகளில் தேர்ச்சி பெற்று வந்த அதே வேளை யில் தாம் பிறந்த குல வழக்கங்களையும் அவர் மறக்கவில்லை. சடையனார் குமாரனுக்குச் சமயப்பற்றையும் வளர்த்து வந்தார். உரிய காலத்தில் உபநயனம் செய்வித்து வேதங்களின் அரு மையை உணரச் செய்தார்.

நம்பியாரூரருக்குப் பதினாறு வயது. சடையனார் தம் குமார னுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினார். பண்ணுருட் டிக்குப் பக்கத்தே உள்ள புத்தூரில் வசித்து வந்த சடங்கவியா ரின் மகள் தம் குமாரனுக்கு ஏற்றவள் என நிச்சயித்துப் பெரி யோர்களை அவ்வூருக்கு அனுப்பிப் பெண் கேட்டுவரச் செய் தார்.

திருநாவலூரிலிருந்து வந்தவர்கள் சடையனாரின் மகனுக் குத் தம் குமாரத்தியை மணம் செய்து கொடுக்குமாறு கேட்ட போது சடங்கவியார் பெரிதும் மகிழ்ச்சி கொண்டார். நம்பியா ரூரரின் அறிவுத் திறனையும் அரசாங்கத்தில் அவருக்கு இருந்த செல்வாக்கையும் அவர் முன்னமே அறிந்திருந்ததால் அந்தச் சம்பந்தத்துக்கு மனப்பூர்வமாகச் சம்மதித்தார்.

நரசிங்கமுனையரும் இத்திருமணத்துக்கு இசைந்தான். சிவாச்சாரியாரான சடங்கவியார் வேதத்தின் ஆறு அங்கங்களி லும் வல்லவர்களான சடங்கவிப் பிராமணர்கள் வழி வந்தவர். அவருடைய குலத்தில் சடையனார் தம் மகனுக்குப் பெண் எடுப் பதுபற்றி அரசனுக்கு மிகவும் சந்தோஷமே. அனேகப் பரிசுப் பொருள்களுடன் நம்பியாரூரரைத் திருநாவலூருக்கு அனுப்பி வைத்தான்.

திருமணத்துக்கான நாள் நிச்சயிக்கப்பட்டது. உறவின ருக்கும் நண்பர்களுக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டது. திரு மணத்தை முடித்து வருவதற்காக நம்பியாரூரர் நாவலூரை விட்டுப் புறப்பட நிச்சயித்திருந்த நாளுக்கு முதல் நாளே உறவினர்கள் வந்து கூடினர்.

புத்தூரிலும் திருமண ஏற்பாடுகள் நடந்து வந்தன. சடங்கவியார் சந்தோஷத்தோடு ஒவ்வொரு காரியத்தையும் கவனித்து வந்தார்.

விடியற்காலையிலேயே எழுந்துவிட்ட நம்பியாரூரர் நீராடி புத்தாடை அணிந்தார். புரோகிதர் மந்திரங்களை ஓத, பெற்ேறார்களை வணங்கி யாத்திராதானம் செய்துகொண்டு சர்வாலங்கார பூஷிதராய் புறப்பட்டார். அரண்மனையில் வளர்ந்தவரல்லவா அவர். அழகிய குதிரை ஒன்று அவரைச் சுமந்து செல்ல வாயிலில் தயாராக நின்றது. உற்ருரும் உறவினரும் சூழ்ந்து வர மணமகன் கோஷ்டியினர் புத்தூர் நோக்கிப் புறப்பட்டனர்.

அரசகோலமும் அந்தணர் கோலமும் ஒருங்கே இணைந்தவராய் குதிரைமீது வரும் நம்பியாரூரரை எதிர்கொண்டு சென்று வரவேற்று அழைத்து வந்தார் சடங்கவியார். மணப்பெண்ணின் வீடு கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாழைகளும் கமுகுகளும் பந்தல் கால்களில் கட்டப்பட்டிருந்தன. வீதியின் இருமருங்கிலுமுள்ள வீடுகளில் பெண்டிர் ஆலத்தி சுற்றி மணமகனை வரவேற்றனர்.

மணமகனின் சுந்தரவடிவினைக் கண்டோர் அனைவரும் வியந்து பாராட்டினர். சடங்கவியார் தம் குமாரத்திக்குத் தகுந்த கணவனைத் தான் தேர்ந்தெடுத்துள்ளார் எனப் பேசிக்கொண்டனர். கன்னியரோ தங்கள் தோழிக்கு வாய்த்த அதிர்ஷ்டத்தைக் கண்டு உள்ளூறப் பொருமைப் பட்டாலும் அதை வெளிக்குக் காட்டாது இன்முகத்தோடு அவளைக் கொண்டாடினர்,

வேத கோஷங்கள் எழுந்தன. வெளியே மங்கல கீதம் இசைத்தனர். சங்கம் முழங்கியது. பெண்கள் இன்னிசை எழுப்பினர். ஆண்களும் பெண்களுமாய் பந்தலில் நிறைந்திருந்தனர். நம்பியாரூரர் நடுவே அமர்ந்து திருமணச் சடங்குகளை நடத்தி வந்தார்.

அந்த நேரத்தில் மிகவும் வயதான தொண்டு கிழவர் ஒருவர் வியர்க்க விறுவிறுக்கப் பந்தலை நோக்கி வந்தார். ஒரு கையில் தாழங் குடையைப் பிடித்தவராய், மற்ெறாரு கையில் தர்ப்பை முதலானவற்றைச் சேர்த்துக் கட்டிய துணி மூட்டையைத் தாங்கிக் கொண்டு அவர் வந்த அவசரத்தில் மேலே போர்த்தியிருந்த அங்கவஸ்திரம் நழுவி முழங்கையில் தொங்கிக் கொண்டிருந்தது.

பந்தலை அடைந்ததும் அங்கு அமர்ந்திருந்தவர்களிடையே புகுந்து நம்பியாரூரரிடம் வந்தார். பின்னர் திரும்பி பந்தலிலிருந்தோரைப் பார்த்தார்.

''காரியங்களை அப்படியே நிறுத்துங்கள்!...'' என்றார்.

பந்தலில் குழுமியிருந்தோர் அனைவரும் திடுக்கிட்டனர். நம்பியாரூரர் திடுக்கிட்டு எழுந்திருந்தார். பக்கத்திலிருந்த சடையனாரும் விவரம் விளங்காதவராய் எழுந்தார். பந்தலின் ஒரு கோடியில் விருந்தினர்களிடம் உரையாடிக் கொண்டிருந்த சடங்கவியார் அந்தக் குரலைக் கேட்டு ஓடிவந்தார்.

''பெரியவரே, என்ன விஷயம்? எதற்காகத் திருமணச் சடங்கினை நிறுத்துமாறு சொன்னீர்கள்?'' என்று அவரைப் பார்த்துக் கேட்டார் நம்பியாரூரர்.

முதியவர் மறுபடியும் அங்கு இருப்பவர்களைச் சுற்றிப் பார்த்து, ''பெரியோர்களே, இந்தப் பிள்ளையிடம் எனக்கொரு வழக்கு இருக்கின்றது. அதை முடிக்காது இத்திருமணத்தை நடத்த நான் சம்மதியேன்'' என்றார்.

அனைவரும் நம்பியாரூரரைப் பார்த்தனர். முதியவரின் வார்த்தைகளுக்கு என்ன விளக்கமென்று அவர்கள் கேட்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

''பெரியவரே!...'' என்று அழைத்தார் நம்பியாரூரர். ''தாங்கள் குறிப்பிடுவது போல் எனக்கும் உமக்கும் வழக்கொன்று இருப்பதானால் அதை முதலில் முடித்துப் பின்னரே இத்திருமணத்தை முடிப்பேன். இருப்பினும் என் அறிவுக்கு எட்டிய வரையில் அம்மாதிரி வழக்கு ஏதும் நம்மிடையே இருப்பதாகத் தெரியவில்லை'' என்றார்.

''அப்பனே, நீ மறந்தாலும் நான் மறப்பேனோ?'' என்று கேட்டார் முதியவர்.

''பெரியவரே, நானே மறந்து விட்டதாக இருக்கட்டும். தயவு செய்து அதைக் கூறலாமே?'' என்று கேட்டார் நம்பி.

''சொல்லத்தானே வந்திருக்கிறேன்...'' என்ற பெரியவர் திரும்பி மற்றவர்களைப் பார்த்து, ''எல்லோரும் கேளுங்கள். இந்தப் பிள்ளை என்னுடைய அடிமையாவான்!'' என்றார்.

பெரியவரின் அந்த வார்த்தைகள் அனைவரையும் திடுக்கிடச் செய்தன. அவர்களில் ஒரு சிலர் முதியவரிடம் ஆத்திரம் கொண்டனர். சுபவேளை நெருங்கி வரும் அந்நேரத்தில் தடை

யாக வந்து நிற்கிருரே என்று முணு முணுத்தனர். 'கிழவ ஞருக்குப் பைத்தியம் போலிருக்கிறது. எங்கோ செல்லவேண் டியவர் இங்கு வந்துவிட்டார்' என்று வேறு சிலர் ஏளனம் செய்தனர்.

நம்பியாரூரருக்கும் சிரிப்பு வந்து விட்டது. கிழவஞரைப் பார்த்து கேலியாகச் சிரித்தார்.

"பெரியவரே, நான் உம்முடைய அடிமையா? நன்ருகத் தான் சொன்னீர்கள்! உம்மை நான் பார்ப்பதே இப்போதுதான். அப்படியிருக்க நான் எவ்விதம் உம்முடைய அடிமையாக முடியும்?" என்று கேட்டார்.

'மணமகன் நன்ருகத்தான் கேட்டான். இங்கு ஏமாந்தவர் யாராகிலும் இருப்பாரென்று வந்தார் போலும்' என்று ஒரு சிலர் நம்பியை ஆதரித்துப் பேசினர்.

கிழவரோ மற்றவர் பேசும் பேச்சுக்களேக் கொஞ்சமும் லட்சியம் செய்யாதவராக இருந்தார்.

"என்னே உனக்கு முன் பின் தெரியாவிட்டால்தான் என்ன? அந்தக் காலத்தில் உன் பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு என் வசம் உள்ளது, அதைத் தெரிந்து கொள்ளாது என்னேப் பார்த்து ஏளனம் செய்கி ருயே!" என்று கேட்டார்.

நம்பியாரூரரின் முகத்தில் கொஞ்சம் கடுமை ஏறியது. "பெரியவரே, நீர் என்ன பித்தஞ? அந்தணர் ஒருவர் மற்ருெரு அந்தணருக்கு அடிமை என்ற வழக்கை எங்காவது கேட்டிருக் கின்றீரா?" என்று கேட்டார்.

"அப்பனே, நீ எப்படி வேண்டுமாஞலும் இகழு. அதற் காக நான் வருத்தப்படப் போவதில்லே. என் உரிமையை நிலே நாட்டிச் செல்லவே நான் இங்கு வந்துள்ளேன். நீயோ என் அடிமை, என்னுடைய பணிகளில் உதவி செய். இப்போதே புறப்படு" என்ருர் முதியவர்.

அவருடைய வார்த்தைகள் நம்பியாரூரரை மேலும் சினம் கொள்ளச் செய்தன.

"நான் ஒரு போதும் உங்கள் அடிமை இல்லே. இல்லாத ஒன்றைச் சொல்லி இங்கு குழப்பம் விளேவிக்க வந்திருக்கிறீர் கள்" என்ருர்.

"இருப்பதைத் தான் சொல்லுகிறேன்..."

"ஆதாரம்?..."

"உன் பாட்டனார் எழுதிக் கொடுத்த ஓலைச் சீட்டு என் வசம் இருக்கின்றது எனத் தெரிவித்தேனே!......"

"கைவசம் இருக்கிறதா?..."

"இருக்கிறது. இந்த மூட்டையில் வைத்திருக்கிறேன்..."

"எங்கே, அதை எடுத்துக் காட்டும். உங்கள் கூற்று பொய்யென நிரூபிக்கிறேன்..."

கிழவர் தாம் வைத்திருந்த மூட்டையிலிருந்து ஒரு ஓலை நறுக்கை எடுத்தார்.

"இப்படிக் கொடுங்கள், நான் அதைப் பார்க்கிறேன்..." என்று கையை நீட்டினார் நம்பியாரூரர்.

கிழவனாரோ 'கட கட' வென்று சிரித்தார்.

"நல்ல காரியம் தான், போ! உன்னிடம் ஓலையைக் கொடுத்து விட்டால் விளைவு பேராபத்துதான். ஓலையைக் கிழித்து எறிந்து விட்டு நான் கூறுவது பொய் என்று சாதிப்பாய். மேலும் நீயோ என்னுடைய அடிமை. உன் வார்த்தைப் படி நான் நடப்பது நியாயமில்லை" என்றார்.

நம்பியாரூரரின் பொறுமை எல்லை மீறி விட்டது. கை நீட்டிக் கிழவரிடமிருந்த ஓலையைப் பறிக்க முயன்றார். கிழவர் இதை எதிர் பார்த்திருந்தார் போலும். சட்டென்று இரண்டடி பின் நகர்ந்தார்.

அப்போதும் நம்பியாரூரர் விடவில்லை. அந்த ஓலையைக் கிழவரிடமிருந்து எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டுமென்று எண்ணியவராய் அவரை நெருங்கினார். கிழவரோ நம்பியினிடம் அகப்படக் கூடாதென்று பந்தலுக்குள் ஓடத்தொடங்கினார். சிறிது நேரம் இருவரும் இங்குமங்கும் ஓடினர். நம்பியின் பிடியில் அகப்பட்டு விடக்கூடாதே என்று இங்குமங்கும் பாய்ச்சுக்காட்டினார். அவரோ விருத்தாப்பிய தசையின் முடிவில் இருப்பவர்; நம்பியாரூரரோ பதினாறு வயது பாலகன். எவ்வளவு நேரம்தான் தாக்குப் பிடிப்பது?

கிழவரை நெருங்கிய நம்பியாரூரர் அவரிடமிருந்து ஓலையை வெடுக்கென்று பிடுங்கிக் கிழித்து எறிந்தார்.

"அந்தணன் மற்றொரு அந்தணனுக்கு அடிமையாகி அவனிட்ட பணிகளைச் செய்வதாம்! இதென்ன நியாயம்?" என்று

வெறுப்போடு கூறியபடி தமதிருப்பிடத்துக்குத் திரும்பினுர் நம்பியாரூரர்.

''அப்பனே, நீ செய்த காரியம் தகுமோ? என் கூற்றுக்கு ஆதாரமாக உள்ள ஓலையைக் காட்டு என்று கூறி, அதைப் பிடுங்கிக் கிழித்தெறிவது முறையாகுமா?...'' என்றுகேட்ட கிழவர் அங்கிருப்பவர்களைப் பார்த்து, ''நீங்களும் பார்த்துக் கொண்டுதான் நிற்கிறீர்கள். இந்தப் பிள்ளை செய்தது நியாயமா? என்னிடமிருந்து ஓலையைப் பிடுங்கிக் கிழித்தெறிந்தானே, அது எதைக்காட்டுகிறது? இவன் எனக்கு அடிமைதான் என்பதை உணர்த்த வில்லையா? ஆதரமாக உள்ள ஓலையைக் கிழித்து விட்டால் என் வார்த்தையை யாரும் நம்ப முடியாது என்று தானே இக்காரியம் செய்யத் துணிந்தான்? நீங்களே சொல்லுங்கள்'' என்று ஓலமிட்டார்

அவர்களுச்கு அடிநுனி தெரியாத இந்த வழக்கு ஆச்சரியத்தை அளித்தது.

''ஐயா, பெரியவரே! பதட்டப்படாதீர்கள். எங்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நீங்கள் இவனை உம்முடைய அடிமை என்று கூறுகிறீர்கள். அவனே மறுக்கிருன். விளக்கமாகக் கூறிஞல் என்ன செய்வது என்பதை யோசிப்போம். முதலில் 'நீங்கள் யார் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்பதைக் கூறுங்கள்'' என்றனர்.

''எனக்குத் திருவெண்ணெய்நல்லூர்!...'' என்ருர் அவர். நம்பியாரூரர் குறுக்கிட்டார்.

''பெரியவரே, உமது ஊர் திருவெண்ணெய்நல்லூர் என்ருல் அங்கல்லவா நமது வழக்கைப் பேசி முடிவு செய்ய வேண்டும். இந்த இடம் தகுந்ததல்லவே'' என்ருர்.

''ஆம், அதுதான் சரியானது. இப்போதே புறப்படு. அவ்வூர்ச் சபையோரிடம் என் வழக்கை உரைத்து நியாயம் கேட்போம்'' என்ருர் கிழவர்.

''வாரும், போகலாம்!'' என்று உத்தரீயத்தை எடுத்து மேலே போர்த்திக் கொண்டு புறப்பட்டார் நம்பியாரூரர்.

முன்னே கிழவஞர் செல்ல அவர் பின்னே நம்பியாரூரரும் சென்ருர். சடையனுரும் மற்றும் அங்கு கூடியிருந்தோரும் 'இதென்ன விந்தை?' என்று வியந்தவர்களாய் அவர்களிருவரையும் தொடர்ந்தனர்.

7. அருள்துறையாரின் அருள்பாலிப்பு

திருவெண்ணெய்நல்லூரை அடைந்ததும் முதியவர் நம்பியை நேராக அவ்வூர் அந்தணர்கள் கூடும் சபைக்கு அழைத்துச் சென்றார்.

சபையில் கூடியிருந்தோரை நோக்கி, ''அறிவுடையோரே, உங்கள் முன் வழக்கொன்று கொண்டு வந்துள்ளேன். இந்தப் பிள்ளை எனக்கு அடிமையாவான். இவனோ அதை மறுத்தான். என் கூற்று உண்மையானது என்பதை நிரூபிக்க நான் காட்டிய ஓலையை வெடுக்கென்று பிடுங்கிக் கிழித்து விட்டான். அந்த ஓலை இவனுடைய பாட்டனால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதாகும்'' என்று புகார் செய்தார்.

சபையோர் நம்பியாரூரரைப் பார்த்தனர்.

''ஐயனே, இம்முதியவர் கூறியதைக் கேட்டாயா? தம்முடைய வாதத்துக்கு ஆதாரம் காட்ட அவர் வைத்திருந்த ஓலையைப் பிடுங்கிக் கிழித்தெறிவது முறையல்லவே! அதனால் உனக்கு என்ன சாதகம் ஏற்பட்டுவிடப் போகின்றது? அந்தச் செயலே முதியவரின் வார்த்தையை நீ ஆமோதிப்பதாக எடுத்துக் காட்டுமே நீ என்ன சமாதானம் சொல்லப் போகிறாய்?'' என்று கேட்டனர்.

''பெரியோர்களே, என்னை நன்றாகப் பாருங்கள். நான் அந்தணக் குலத்தில் பிறந்தவன் என்பதை அறிவீர்கள். எங்காவது அந்தணன் ஒருவன் மற்றொரு அந்தணனுக்கு அடிமைத் தொழில் செய்ததாகக் கேள்விப்பட்டதுண்டா? இந்த மனிதர் என்னைத் தம்முடைய அடிமை எனக் கூறுகிறாரே எனக் கேட்கிறீர்கள். நான் என்ன பதில் சொல்வேன்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை!'' என்றார் நம்பியாரூரர்.

சபையிலிருந்தோர் கிழவரைப் பார்த்துக் கேட்டனர்.

''பெரியவரே, உம்முடைய புகாருக்கு இவன் அளித்த பதிலைக் கேட்டீரா? உங்கள் புகாருக்கு ஏதாவதொரு ஆதாரம் காட்டியாக வேண்டும். ஒன்று அனுபவ பாத்தியதை இருக்க வேண்டும்; அல்லது தகுந்த ஆதாரங்களோடு கூடிய கைச்சீட்டு ஏதாவது இருக்க வேண்டும்; அதுவும் இல்லையேல் சாக்ஷிகளாவது இருக்க வேண்டும். இவற்றில் எதை உமக்கு ஆதாரமாகக் காட்ட முடியும்?''

"இருக்கிறது. இவன் பாட்டன் தன் கைப்பட எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு இருக்கிறது. இவன் கிழித்தெறிந்தது போல் நிகழக்கூடும் என்று நான் முன்னமேயே எதிர் பார்த்தேன். ஆகவே மூல ஓலையைப் பத்திரமாக வைத்துக் கொண்டு அதன் நகலையே எடுத்துக் காட்டினேன். மூல ஓலை என்னிடம் பத்திரமாக இருக்கிறது" என்ருர் முதியவர்.

"அந்த ஓலையை எடுத்துக் காட்டுங்கள்!" என்றனர் சபையினர். கிழவர் தயங்கினுர்.

"பெரியவரே, ஏன் தயங்குகிறீர்?"

"புத்தூரிலே இவன் செய்தது போல் நடந்து விட்டால் என்ன செய்வது? மூல ஓலையை இழந்து விட்டால் என் வழக்கு தோல்வியாகி விடுமே! அம்மாதிரி இங்கேயும் நிகழாது நீங்கள் பாதுகாப்புத் தரமுடியுமா?"

"கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நாங்கள் அம்மாதிரி நிகழ அனுமதிக்கமாட்டோம்" என்றனர் சபையிலிருந்தவர்கள்.

கிழவர் மூட்டையினுள் கையைவிட்டு ஓலைச்சுருள் ஒன்றை எடுத்தார். சபையிலிருந்தவர்களுக்குத் தலைவராக இருப்பவர் கணக்கனை அழைத்து ஓலையை வாங்கி அனைவரும் அறியப் படிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவனும் முதியவரிடமிருந்து ஓலைச்சுருளை வாங்கிப் பிரித்துப் படித்தான்.

> "திருநாவலூரைச் சேர்ந்த ஆதிசைவனும் ஆரூரன் எனப்படுபவனுமான நான் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு நானும் என் சந்ததியாரும் வழி வழியாக அடிமை செய்ய ஒப்புக்கொண்டு அகமும் புறமும் ஒத்து எழுதிக் கொடுத்தேன். இது என் கையெழுத்து."

ஓலைச் சீட்டில் சாக்ஷிகளும் கையொப்பமிட்டிருந்தனர். கையெழுத்திட்ட சாக்ஷிகளை அழைத்துக் கேட்டபோது அவர்கள் அது மூல ஓலை என்றே அறிவித்தனர்.

"ஆரூரா, இப்போது நீ ஓலையைப் பார்த்து கையெழுத்து உன் பாட்டனுடையதுதானு என்பதைக் கூறு" என்றனர் சபையினர்.

கிழவர் குறுக்கிட்டார்.

"பெரியோர்களே, நீங்கள் சொல்வது விசித்திரமாக அல்லவா இருக்கிறது! இவன் தன் பாட்டனையே அறிய மாட்

டானே. அப்படியிருக்கப் பாட்டனின் கையெழுத்தை எவ்வாறு அறிவான்? இவன் பாட்டன் எழுதிய வேறு குறிப்புகள் இருக்குமானுல் அதைக் கொண்டு வந்து ஒப்பிட்டுப் பார்ப்பதே சிறந்ததாகும்'' என்றுர்.

''ஆம், அதுதான் சரி'' என்ற சபையாரும் அவ்வாறே ஆரூராரின் பாட்டன் எழுதிய வேறு குறிப்புகளைக் கொண்டு வந்து ஒப்பிட்டுப் பார்த்தனர். கையெழுத்து இரண்டும் ஒன்ருகவே காணப்பட்டன. கிழவர் தம் புகார் சரிதான் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்து விட்டார்.

''ஆரூரா, இப்போது என்ன சொல்லப் போகின்ருய்?'' என்று கேட்டனர் சபையோர்.

''இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? உங்கள் முடிவுக்குத் தலைவணங்குவதைத் தவிர எனக்கொரு மார்க்கமும் இல்லை'' என்றுர் நம்பி.

''நீ இப்பெரியவருக்கு அடிமை. ஆகவே அவரிட்ட பணியைச் செய்ய அவரோடு செல்ல வேண்டும்'' என்று தீர்ப்பு அளித்தனர் அவர்கள்.

பெரியவருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவர் வயோதிக உடல் ஆனந்தத்தால் துள்ளியது. துணி மூட்டையைக் கையிலே மாட்டித் தோள்வரை இழுத்து முதுகுப்புறத்திலே தொங்க விட்டார். தாழங்குடையைக் கையிலெடுத்தார்.

''அப்பனே, புறப்படு, உனக்கான பணிகள் எத்தனையோ காத்துக் கிடக்கின்றன'' என்றுர்.

''பெரியவரே!...'' என்று அழைத்த சபையார், ''இன்னெரு சந்தேகம். தாங்கள் எடுத்துக் காட்டிய ஓலையில் தாங்கள் இவ்வூரைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் தங்களை எங்களில் எவரும் கண்டதில்லை. தங்கள் இல்லம் எங்கிருக்கிறது?'' என்று கேட்டனர்.

அவர்களைத் திரும்பிப் பார்த்த கிழவர் சிரித்தார்.

''என்ன, என்னை நீங்கள் யாரும் அறியவில்லையா? அப்படியானுல் என்னுடன் வாருங்கள். என் இருப்பிடத்தைக் காட்டுகிறேன்'' என்று ஆரூரரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அவர் பின்னே சபையோரும் வந்தனர்.

அவ்வூரிலே உள்ள திரு அருள்துறை எனப்படும் ஆலயத்தின் அருகே அவர்கள் நெருங்கியதும் கிழவனுரைக் காணுது

திகைத்தனர். 'எங்கே அவர்?... தம்முடைய இருப்பிடத்தைக் காட்டுவதாகக் கூறி நம்மை அழைத்து வந்தாரே!... அவர் எந்தப் பக்கம் சென்ருர்?...' என்று அவர்கள் ஒருவரையொருவர் வியப்புடன் கேட்டுக் கொண்டனர்.

நம்பியாரூரரும் ஆச்சரியம் அடைந்தார். தம்முடன் வந்த அந்த முதியவர் எப்படி பிறர் பார்வைக்குத் தெரியாமல் போய் விட்டார் என்று வியந்தவராய், ஒருவேளை ஆலயத்தினுள் நுழைந்திருப்பாரோ என்று எண்ணி உள்ளே நுழைந்தார். பிராகாரத்தை அடைந்ததும், ''பெரியவரே, எங்கே இருக்கிறீர்? உம்முடைய அடிமை என்று என்னை அழைத்து வந்தீரே. என்னை விட்டு விலகி எங்கே போய்விட்டீர்?'' என்று கூப்பிட்டார்.

அப்போது வானிலே ஈசன் உமையோடு தரிசனம் தந்தார்.

''சுந்தரா, அன்றொரு நாள் உனக்கு நான் வாக்கு அளித்தபடி பிரபஞ்சமாயையில் சிக்குண்டு உழல இருந்த உன்னை மீட்டு வந்தேன்!''

இறைவனின் குரலைக் கேட்ட நம்பியாரூரரான சுந்தரரைச் சூழ்ந்திருந்த மாயாபந்தம் விலகியது. தாம் இப்பூவுலகிலே வந்து பிறந்ததற்கான காரணத்தை உணர்ந்தார்.

சுந்தரரின் மேனி சிலிர்த்தது; கைகள் இரண்டும் உயர்ந்தன; கண்கள் ஆனந்தவாரிதியைக் கொட்டின.

''பிரபோ, உன் கருணைதான் என்ன? இந்த ஏழையை மறக்காது தக்க தருணத்தில் வந்து தடுத்தாட் கொண்டீரே! என்ன பாக்கியம் செய்தேன் நான்!'' என்று தம்மை மறந்து இறைவனைப் போற்றினுர். விண்ணவர்கள் மலர்மாரி பெய்தனர்.

''சுந்தரா, என்னிடம் வன்மையாகப் பேசி வாதாடியபடியால் நீ வன்றொண்டன் எனப்படுவாய். எனக்குப் பிடித்தமான அர்ச்சனை பாட்டேயாகும். ஆகவே என் மீது தமிழ்ப்பாக்களை பாடு'' என்ருர் சிவபெருமான்.

சுந்தரர் பகவானைக் கைகூப்பித் தொழுதார்.

''என் ஐயனே, என்னிடம்தான் உனக்கு எவ்வளவு அன்பு! உமாபதே, விஷ்ணு பிரமாதியராலேயே உன்னை அறியமுடியவில்லை. அடியேனல் உன் கருணைபிரபாவங்களை

எப்படி அறிந்து பாட முடியும்? என்ன சொல்லிப் பாடுவேன்? எதைக் குறித்துப் பாடுவேன்? சர்வேச்வரா, நீதான் எனக்கு வழி காட்டவேண்டும்!'' என்று நெஞ்சம் உருகப் பிரார்த்தித்தார்.

பகவான் முகம் மலரச் சுந்தரரைப் பார்த்து புன்னகை செய்தார்.

''சுந்தரா, என்னைப் பித்தன் என்று அழைத்தாயே. அதை நான் விரும்பி ஏற்கிறேன். ஆகவே, பித்தன் என்றே பாடு!'' என்று அனுக்கிரகித்தார்.

சுந்தரரின் உள்ளத்தில் தமிழ்த் தெய்வம் குடிபுகுந்தது. கடல்மடை திறந்த வெள்ளம் போல் அவர் உள்ளத்திலிருந்து தமிழ் மணம் நிறைந்த பாக்கள் பொங்கி எழுந்தன. ஆனந்த வெள்ளம் கண்களிலிருந்து பெருக்கெடுத்தோடியது. ஈசனின் திருக்கோலத்தை நெஞ்சில் பதித்தவராய், சுந்தரர் பாடத் தொடங்கினர்.

பித்தாபிறை சூடிபெரு மானேயருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
[நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

சுந்தரரின் தித்திக்கும் தீந்தமிழ்ப் பாடலைக் கேட்ட ஆட்கொண்ட பெருமான் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தார்.

''வன்றொண்டா, உன் பாடல் என்னை மகிழ்ச்சியுறச் செய்தது. இன்னும் என்னுடைய புகழினை உணர்ந்து மக்கள் நலம் பெறப் பாடு!'' என்று அருளி மறைந்தார் ஆண்டவன்.

சொன்ன சொல் தவருமல் வந்து இறைவனுல் ஆட்கொள்ளப்பட்ட சுந்தரர் புதிய பிறவியாகிவிட்டார். அவர் நெஞ்சம் இறைவனுடைய புகழ் பாடத் துடித்தது; கண்கள் ஈசனின் அற்புதத் திருக்கோலங்களைக் கண்டு களிக்க விரும்பியது; சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் சென்று அவன் ஆலயத்துள் நுழைந்து தரிசனம் செய்யக் கால்கள் விரைந்தன. அந்த க்ஷணம் முதல் அவர் தம் உள்ளக் கிடக்கையை நிறைவேற்ற முனைந்தார்.

திருவெண்ணெய் நல்லூரை விட்டுப் புறப்பட்ட சுந்தரர் நேராகத் தாம் பிறந்த திருநாவலூருக்குத் திரும்பினர். எம்

பெருமானின் ஆலயத்துள் சென்று நாவலேசுவரரையும் சுந்த ராம்பிகையையும் தரிசித்து மகிழ்ந்தார். விஷ்ணு, பிரம்மன், வானவர்கோளுகிய இந்திரன் முதலானவர்கள் தாங்களே தேரா கவும் அஸ்திரங்களாகவும் மாறி உதவ, திரிபுரங்களையும் அழித்த ஈசன் நாவலூரிலே பிறந்த தம்மைத் திருவெண்ணெய் நல்லூரிலே தடுத்தாட்கொண்ட பெருமையைப் பாடி மகிழ்ந்தார். **'கோவலனுன்முகன் வானவர்கோனுங் குற்றேவல் செய்ய'** என்ற திருப்பதிகம் எழுந்தது.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பெண்ணையாற்றைக் கடந்து வடகரையில் உள்ள திருத்துறையூர் என்னும் தலத் துக்கு வந்து சேர்ந்தார் சுந்தரர். அவர் உள்ளத்தில் தில்லைக்குச் சென்று பொன்னம்பலவாணனைத் தரிசித்து மகிழவேண்டும் என்ற விருப்பம் மேலோங்கி யிருந்தது. துறையூரிலே கோயில் கொண்டிருக்கும் துறையூரப்பரையும் சிவலோக நாயகியையும் வழிபட்டு **'மலையாரருவித் திரண்மாமணியுந்தி'** என்று பாசுரம் பாடினுர். தவநெறி அளிக்குமாறு ஆண்டவனை வேண் டிக் கொண்டார் சுந்தரர்.

பிறகு அவ்வூரை விட்டுச் சிதம்பரம் செல்லப் புறப்பட்டார். ஆற்றைக் கடந்து தென் கரையில் ஏறி வழி நடந்தார்.

8. திருவடி சூட்டிய திரிபுராந்தகன்

கெடில நதிக்கரையிலுள்ள திருவதிகை என்னும் தலத் தைச் சுந்தரர் அடைந்தபோது மாலைப்பொழுது நெருங்கிவிட் டது. இரவு அவ்வூரில் தங்கி பொழுது விடிந்ததும் பிரயாணத் தைத் தொடர விரும்பினுர் அவர்.

திரிபுரங்களையும் ஈசன் சம்காரம் செய்தது அத்தலத்திலே தான். சிவபெருமான் வீரட்டானேசுவரராகக் கோயில் கொண் டிருக்கிறுர். திருநாவுக்கரசுப் பெருமான் அக்கோயிலில் எம்பெரு மானுக்காக உழவாரத் திருப்பணி மேற்கொண்டதால் புனித மாக விளங்கும் அந்த இடத்தை மிதிக்கவும் சுந்தரர் அஞ்சினுர். ஆகவே ஆலயத்துள் நுழையாமல் பக்கத்திலே இருக்கும் சித்தவட மடத்திலே இரவுப் பொழுதைக் கழிக்க எண்ணினுர். வீரட்டானேசுவரரை நேரில் வந்து தரிசிக்க முடியாதிருப்பதால் மனத்தாலேயே அவரை வணங்கித் தரிசித்து, மண்டபத்திலே படுத்து உறக்கம் கொண்டார்.

பரமனே பக்தனை விட்டுவிட விரும்பவில்லை போலும்.

ஆழ்ந்த நித்திரையிலிருந்த சுந்தரர் தம் தலைமீது ஏதோ பட்டதுபோல் இருக்கவே உறக்கம் கலைந்து எழுந்தார். பக்கத்திலே கிழவர் ஒருவர் அயர்ந்த நித்திரையிலிருந்தார். அவர் எப்போது வந்து படுத்தாரோ? தம்மைப் போன்று யாரோ வழிப் போக்கராக இருக்கக்கூடும் என்று நினைத்தார் சுந்தரர். தூக்கத்தின் நடுவே கிழவர் புரண்டு தம் கால்களைச் சுந்தரரின் தலையிலே உதைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

''பெரியவரே....'' என்று அவரைத் தொட்டு எழுப்பினார் சுந்தரர். திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்த கிழவர் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு, ''யார்?... யார் கூப்பிட்டது?...'' என்று பரபரப்போடு கேட்டார்.

''நான்தான் உம்மை எழுப்பியது. உமது கால்களால் என் தலைமீது உதைத்துத் தூக்கத்தைக் கலைத்துவிட்டீரே! சற்று நகர்ந்து போய் படுக்கக் கூடாதா?'' என்று கேட்டார் சுந்தரர்.

''அடடா, தம்பி, உன் தலைமீது என் கால்கள் பட்டுவிட்டனவா?... கோபித்துக்கொள்ளாதே அப்பா!... வயதாகிவிட்டது பார்; எனக்குத் தெரியவில்லை...வேண்டுமென்றே செய்வேனா?... உடல் அசதியில் புரண்டு படுக்கும்போது பட்டுவிட்டது போலும்!...'' என்று தெரிவித்த கிழவர் நகர்ந்து உட்கார்ந்தார்.

''நான் கோபிக்கவில்லை, பெரியவரே! நானும் வெகு தூரத்திலிருந்து வழி நடந்து வந்தவன்தான். காலையில் எழுந்ததும் பிரயாணத்தைத் தொடங்க வேண்டும். உடல் அசதி தீர அயர்ந்து நித்திரை செய்தால்தான் காலையில் எழும்போது சிரமமின்றி இருக்கும். தூக்கத்தின் நடுவே விழிப்பு ஏற்பட்டுவிட்டால் அப்புறம் விடிய விடிய 'கொட்டு கொட்'டென்று விழித்திருக்க வேண்டியதுதான். அதனால்தான் கொஞ்சம் தள்ளிப் போய் படுக்கும்படி சொல்கிறேன்'' என்றார் சுந்தரர்.

''ரொம்ப நல்லது, அப்பனே! நகர்ந்து போய் படுத்துக் கொள்ளுகிறேன்'' என்று சொல்லியபடி தமது வழுக்கை விழுந்த தலையைத் தடவிக் கொண்டு நகர்ந்தார்.

சுந்தரர் மீண்டும் படுத்துத் தூங்கத் தொடங்கினார்.

சுந்தரர் தூங்கிவிட அனுமதித்து விட்டால், அப்புறம் அவர் செய்யக் காத்திருக்கும் திருப்பணியை யார் செய்வது?

கிழவரின் பாதங்கள் மறுபடியும் சுந்தரரின் தலைமீது உதைந்து நின்றன. விழித்து எழுந்த சுந்தரர் சினம் கொண்டு திரும்பவும் கிழவரை உலுப்பி எழுப்பினார்.

''என்ன, தம்பி?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்தார் கிழவர்.

''முதலில் என் தலையில் உதைத்ததை தூக்க அசதியால் புரண்டு படுக்கும் போது கால்பட்டு விட்டது என்று சொன்னீர். நகர்ந்து படுக்குமாறு சொன்னேன். நீரும் நகர்ந்து போய் படுத்தீர். திரும்பவும் என் தலைமீது உதைத்த காரணம் என்ன? நீர் யார்?'' என்று கோபமாகக் கேட்டார்.

கிழவர் தலையைத் தடவியபடி சிரித்துக்கொண்டே எழுந்தார்.

''அப்பனே, என்னை நீ அறியவில்லையா? என்னைத் தேடி நீ வராவிட்டாலும் உன் பாட்டைக் கேட்க உன்னைத் தேடி நான் வந்துள்ளேன்...!''

கிழவரின் வார்த்தைகளைக் கேட்ட சுந்தரர் திடுக்கிட்டார். அந்த க்ஷணமே கிழவர் மறைந்து விட்டார். அப்போதுதான் சுந்தரருக்கு அவ்விடத்திற்கு வந்து தமது தலையிலே திருவடி சாத்திய பெருமான் வீரட்டேசுவரர் என்பது தெரிந்தது. அப்படியே பரிதவித்துப் போய்விட்டார்.

''என் ஐயனே, உன்னை இன்னாரென்று அறியாது கடிந்து பேசிவிட்டேனே! அதிகை வீரட்டப் பெருமானே! உன்னுடைய எந்தத் திருவடிகள் தேகத்தின் மீது பதிய வேண்டுமென்று எத்தனையோ பக்தர்கள் அல்லும் பகலும் அனவரதமும் உன்னை எண்ணியெண்ணிக் கதறுகிறார்களோ, அந்தத் திருவடிகள் என் தலைமீது பட்டதற்காக உன்னைக் கடுமையாக ஏசிவிட்டேனே! உன் திருவடிகளை இரு கைகளாலும் தாங்கி என் நெஞ்சத்தே பதிய வைத்து என் பிறவியென்னும் கொடுமையை அழித்தொழிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் எண்ணம் ஈடேறமுடியாமல் போய்விட்டதே! எந்தக் கைகளால் உன்னைத் தழுவிக் கிட்டாத பேரின்பத்தை அடைய வேண்டுமென்று தவித்துக் கொண்டிருக்கிறேனோ, அந்தக் கைகளால் உன் திருமேனியை உலுப்பி எழுப்பினேனே!...'' என்று கண்ணீரை ஆறாய்ப் பெருக்கிக் கதறினார் சுந்தரர்.

''சுந்தரா, உன் கை ஸ்பரிசத்தால் பெருமகிழ்ச்சி கொண்டிருக்கும் என்னை மேலும் நா ஸ்பரிசத்தால் மகிழச்செய்'' என்று ஆண்டவன் கேட்பது போலத் தோன்றியது சுந்தரருக்கு. வீரட்டானேசுவரரைக் குறித்து 'தம்மானை யறியாத சாதியாருளரே' எனத் தெய்வ மணம் கமழும் தமிழ்ப்பாசுரம் ஒன்று அவரிடமிருந்து பிறந்தது.

அதன் பிறகு சுந்தரர் கண் துயிலவில்லை. எம்பெருமானின் திருவடி ஸ்பரிசத்தையும், அவரைத் தொட்டு உலுப்பி எழுப்பிய போது உண்டான தம் கை ஸ்பரிசத்தையும் எண்ணி எண்ணி தம்மையே மறந்து அமர்ந்திருந்தார். அந்தப் பரமானந்த சொரூபியின் நினைவிலே திளைத்துப் போய் நேரம் கழிவது தெரியாமல் உட்கார்ந்திருந்தார்.

பொழுது புலர்ந்தது. சித்தவட மடத்திலிருந்து புறப் பட்டுக் கெடில நதியை அடைந்தார். வைகறைப் பொழுதிலே ஸ்படிகம் போன்று தெளிந்து ஓடிய நீரிலே உள்ளம் குளிர நீராடிக் கரையேறினார். அங்கிருந்தபடியே திருவடி சூட்டிய பெருமானைத் தொழுது பிரியா விடை பெற்றுப் புறப்பட்டார்.

கெடில நதியின் தென்கரையோரமாகப் பிரயாணத்தைத் தொடங்கிய சுந்தரர் அடுத்துத் திருமாணிக்குழி எனப்படும் தலத்தைச் சென்று அடைந்தார்.

மகாபலி செய்த யாகத்தில் விஷ்ணு வாமனராய்த் தோன்றித் தம் காலடியால் மூன்று அடி நிலம் யாசித்துப் பெற்று இரு அடிகளால் விண்ணையும் மண்ணையும் அளந்து மூன்றாவது அடிக்கு இடமின்றி, "அரசனே, இன்னொரு அடிக்கு இடமெங்கே?" என்று கேட்க, மகாபலி தன் சிரசையே இடமாக அளித்தான். அந்த வாமன மூர்த்தி இறைவனை வழிபட்ட தலம் திருமாணிக்குழியாகும். அவ்வூர் ஆலயத்தில் உறையும் மாணிக்க வரதேசுவரரையும் மாணிக்கவல்லி அம்மையாரையும் தரிசித்துப் பின்னர் தீர்த்தனகிரி எனப்படும் திருத்தினை நகர் வந்தார். அத்தலத்திலே எழுந்தருளியிருக்கும் சிவக்கொழுந்தீசரைப் பணிந்து, வழிபட்டு 'நீறு தாங்கிய திரு நுதலானை' என்று தொடங்கும் பாசுரத்தால் தொழுதார்.

பின்னர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு வழி நடந்து தில்லைப் பெருநகரை அடைந்தார்.

9. ஆரூருக்கு அழைத்த அம்பலவாணன்

தில்லைப்பதியின் எல்லையை மிதித்ததும் சுந்தரரின்தேகம் விவரிக்க இயலாத ஆனந்தத்தால் சிலிர்த்தது. மண்ணிலே விழுந்து பித்தனைப் போல் புரண்டார். இருகைகளிலும் மண்ணை வாரி எடுத்தார். 'அம்பலத்தாடும் பெருமானின் திருப்பாதங்கள் பட இந்தப் பூமி என்ன தவம் செய்திருக்

கிறதோ' என்று கொண்டாடி தமது தேகத்திலே மண்ணைப் பூசி மகிழ்ந்தார்.

இறைவனால் தடுத்தாட்கொண்ட பெருமானாகிய சுந்தரர் வருகிறார் என்ற செய்தி எட்டியதும் சிவனடியார்கள் ஓடோடி வந்து அவரைப் பணிந்து வரவேற்றனர். அவரை மேள தாளங்களுடன் வீதிகள் வழியே ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஆனந்தத் தாண்டவமாடிய பேரம்பலத்தின் கோபுரத்தைக் கண்டதும் சுந்தரர் இருகரமும் கூப்பி வணங்கினார். மேனியில் திருநீறு விளங்க, வேதமந்திரங்களைச் சொல்லி பரமனின் புகழ் பாடும் அடியார்களைக் கண்டபோது சுந்தரரின் உள்ளம் பக்தியால் நிறைந்து வழிந்தது. அடியார்களைக் காணும் போதெல்லாம் இறைவனே எதிர்க்கொள்வதாக எண்ணி அவர்களை நோக்கிக் கை கூப்பித் தொழுதார். அவர்களோ அப்பெருமை வன்றொண்டனாகிய அவருக்கே உரியது எனச் செப்பி அவர் தாள் பணிந்து வணங்கினர்.

கோபுரவாயிலில் தில்லை வாழ் அந்தணர்கள் சுந்தரரை முக மலர்ச்சியுடன் வரவேற்றனர். திருக்குளத்திலே நீராடி எழுந்த சுந்தரர் அன்பர்களுடன் ஆலயத்தினுள் நுழைந்து பொன்னம்பலத்தானை சேவித்தார். மானாட மழுவாட மங்கை சிவகாமியாடக் கூத்தாடும் பெருமானை அகத்திலே கண்டு மகிழ்ந்தார். சந்நிதானத்திலே நின்றிருந்த சுந்தரரின் கண்கள் ஆடும் பெருமானின் திருமேனியைத் தவிர வேறொன்றையும் காணவில்லை. அம்பலத்தாடுவானின் பாதச சிலம்புகளின் ஒலியைத் தவிர வேறு எந்த ஓசையையும் அவரது செவிகள் கேட்கவில்லை. வாயோ அப்பரமனின் புகழினைப் பாடியது. நெஞ்சமோ அவன் திருக்கோலத்தைக் கண்டது. இந்தவிதமாகச் சுந்தரர் தம்மை மறந்து இறைவனோடு லயித்து நின்றார்.

அப்போது பேரொலி ஒன்று கேட்டது.

"அன்பனே, ஆரூரிலே நம்மிடத்துக்கு வா!"

அசரீரி வாக்கைக் கேட்ட சுந்தரர் பேரானந்தம் கொண்டார்.

"ஐயனே, நீ எங்கு அழைத்தாலும் நான் வருகின்றேன்!" என்று கைகூப்பித் தொழுதார் சுந்தரர்.

கனகசபையிலே தரிசனத்தை முடித்துக் கொண்டு பொன்னம்பலத்தை வலம் வந்து வணங்கினார். அன்பு மழை பொழிந்த

அடியார்களிடம் பிரியா விடைபெற்றுக் கொண்டு ஆரூரை நோக்கிப் புறப்பட்டார். சிவநேசர்கள் ஊரின் எல்லைப்புறம் வரை சுந்தரருடன் வந்து அவரை வழியனுப்பினர்.

10. ஆரூர் அப்பனும் ஆரூரார் தொண்டனும்

கொள்ளிடத்தைக் கடந்து தென் கரையில் ஏறிய சுந்தரர் பிரயாணப்பட்டு சீர்காழிப்பதியை நெருங்கினர்.

தேவியின் திருமுலைப்பாலை அருளும் பாக்கியம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் அவதரித்த ஸ்தலம் அல்லவா சீர்காழிப் பதி. பெரும் புண்ணியம் செய்த அத்தலத்தை மிதிப்பது மகா பாபம் அன்றோ!

இவ்விதம் எண்ணிய சுந்தரர் அத்தலத்தில் நுழைய வில்லை. எல்லையில் நின்றபடியே ஈசனைப் பணிந்து வணங்கிய வராய் ஊரைச் சுற்றியபடி பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

சுந்தரரின் தெய்வத் தமிழ்ப் பாடல்களுக்குக் கட்டுண்ட மகேச்வரன் அவரைத் தேடி ஓடிவந்தார். புனித பூமியை மிதிக் கவும் அஞ்சி ஒதுங்கிச் செல்லும் பக்தனுக்குத் தம்மைத் தரிசிக் காத குறை இருக்கக்கூடாதென்ற ஆதங்கத்தோடு உமை யவளை இடப்பாகத்தில் கொண்டு விடையின்மீது ஏறி வந்து காட்சி தந்தருளினர்.

ஈசனின் கருணையை எண்ணி எண்ணி வியந்தார் சுந்தரர். அவர் உள்ளத்திலிருந்து **'சாதலும் பிறத்தலும் தவிர்த்து'** என்னும் பதிகம் பீறிட்டுக் கிளம்பியது. பிறப்பும் இறப்பும் மாறி மாறி வரும் நியதியைக் கொண்ட பிரபஞ்ச மாயையில் சிக்கி உழல இருந்த தன்னைத் தடுத்து ஆட்கொண்ட பெரு மானைப் பிரளய காலத்தில் அண்டசராசரங்களும் அமிழ்ந்து போக, தோணியாக மாறி பிரளய வெள்ளத்தில் அமிழ்ந்து மிதந்த கழுமலம் எனப்படும் அந்நகரில் கண்டு கொண்டதாகக் கூறி மகிழ்ந்தார்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு திருக்கோலக்கா எனப்படும் பதியை அடைந்து திருத்தாளமுடையார் கோயிலில் சத்தபுரீசு வரரையும், ஓசை கொடுத்த நாயகியையும் தரிசித்துப் பாமாலை சூட்டினர். சம்பந்தப் பெருமானுக்குப் பொற்றாளம் கொடுத் தருளிய திருத்தலம் ஆயிற்றே.

அடுத்து அவர் திருப்புன்கூர் எனப்படும் தலத்தை அடைந்தார். அவ்வூரில் எழுந்தருளியுள்ள சிவலோகநாதரையும் சொக்கநாயகியையும் தரிசித்தார். எம்பெருமானின் தரிசனம் கிடைக்க நந்தனுக்காக நந்திதேவர் விலகி இருந்த பெருமை பெற்ற அவ்வூர் இறைவனைப் பதிகத்தால் போற்றிக் கொண்டாடியவராய் காவிரி தீரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

தக்ஷயாகத்தில் உயிரைத் துறந்த பார்வதி தேவி மீண்டும் சிவனை அடைவதற்காக மயில் உருக்கொண்டு வழிபட்ட திருமயிலாடுதுறையை1 அடைந்த சுந்தரர் காவிரியிலே நீராடி மனம் குளிர்ந்தார். பின்னர் திருக்கோயிலுள் சென்று மயூரநாதரையும் அஞ்சல்நாயகியையும் தரிசித்தார்.

பிறகு அங்கிருந்து தெற்காகச் சென்று அம்பர் மாகாளத்தில் கோயில் கொண்டுள்ள மாகாளநாதரைத் தரிசித்துக் கொண்டு திருப்புகலூரை அடைந்தார். அவ்வூர்ப் பெருமான் கோணேசுவரரைத் தரிசனம் செய்து கொண்டு புறப்பட்ட சுந்தரர் ஆரூரை நெருங்கினார்.

சுந்தரர் தம் பதிக்கு வருவதைச் சாதாரண நிகழ்ச்சியாகக் கொள்ள விரும்பவில்லை ஈசன். தீந்தமிழ்ப் பாக்களால் தம்மை மகிழ்ச்சியுறச் செய்யும் தொண்டனுக்குக் கோலாகலமான வரவேற்பை அளிக்க எண்ணம் கொண்டார். அன்றிரவே திருத்தொண்டர்களின் கனவில் தோன்றி சுந்தரர் ஆரூரை நோக்கி வந்து கொண்டிருப்பதை அறிவித்தார். 'என் அன்புக்குப் பாத்திரனான தொண்டன் நம்பியாரூரன் நான் அழைக்க ஆரூருக்கு வருகின்றான். அவனை எதிர்கொண்டு அழைத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டார்.

எம்பெருமானின் கட்டளையைச் சிரமேற்கொண்டார்கள் ஆரூர்த் தொண்டர்கள். விடிந்ததும் செய்தி நகரம் முழுவதும் காற்றினும் கடுகிப் பரவியது. இறைவனுக்குப் பிடித்தமான தொண்டரை வரவேற்க நகரமக்கள் அப்பொழுதே தயாரானார்கள். பிரதான வீதிகளெங்கும் பந்தல்கள் போடப்பட்டன. வாழையும் கமுகும் நுழைவாயில்களில் அலங்காரமாகக் கட்டப்பட்டன. வீதியின் இருமருங்கிலும் பெண்டிர் நீர் தெளித்துப் பெருக்கி பெரிய பெரிய கோலங்களைச் சித்தரித்தனர்.

திருத்தொண்டர்கள் சிவிகையுடன் மங்கலவாத்தியங்கள் முழங்க எதிர்ச்சென்று நகரை நெருங்கும் சுந்தரரைச் சந்தித்

---

1 மாயூரம்.

தனர். அவரை வணங்கி இரவிலே ஈசன் இட்ட ஆக்ஞையைத் தெரிவித்துச் சிவிகையில் ஏறுமாறு வேண்டினர்.

அவர்கள் செய்த உபசாரங்களில் சிக்கித் திக்கு முக்காடி ஞர் சுந்தரர். ஈசன் தம்மிடம் கொண்டுள்ள அன்பினை நினைத்து நினைத்து மெய்சிலிர்த்தார்.

வீதிவழியே செல்லும்போது அங்கங்கே தம்மை வரவேற் கச் செய்திருந்த ஏற்பாடுகளைக் கண்டு சுந்தரர் பிரமித்துப் போனுர். பெண்கள் மலர்தூவி ஆலத்தி சுற்றினர். ஆனந்த வெள்ளம் கரைபுரண்டோட அவர் உள்ளத்திலிருந்து 'கரையும் கடலும்' என்னும் திருப்பதிகம் வெளிப்பட்டது. 'நம் எல்லோ ருக்கும் த்ந்தையாகிய எம்பெருமான் தாம் எழுந்தருளியுள்ள இப்புனித தலத்தில் என்னையும் ஆட்கொண்டு அருளுவாரா? இறைவனைக் கேட்டுச் சொல்வீரே!' என்று தொண்டர்களைப் பார்த்து வினவினுர்.

ஆலயத்தை நெருங்கியதும் சுந்தரர் சிவிகையினின்றும் கீழே இறங்கினுர். கோபுரவாயிலை அடைந்ததும் நெடுஞ்சாங் கிடையாக விழுந்து வணங்கினுர். பிறகு தேவாசிரிய மண்ட பத்தைக் கண்டு தொழுது மூலஸ்தானத்தைத் தரிசிக்கத் திரு மாளிகை வாயிலை அடைந்தார். பக்தியால் நெஞ்சம் உருக வான்மீக நாதரைக் கண்டு வணங்கினுர். அப்போது ஓர் அசரீரி எழுந்தது.

> "சுந்தரா, நம்மையே உனக்குத் தோழராகத் தந்தோம். அன்று உன்னைத் தடுத்தாட்கொண்ட போது, நீ கொண்டிருந்த மணக்கோலத்தை என்றும் தாங்கி உன் வேட்கை தீர இப்பூமியில் விளையாடு வாய்!"

இறைவனுடைய திருவருளை எண்ணி வியந்தவராய் வான் மீக நாதரைப் பாடி வணங்கி வெளிப்பட்டார் சுந்தரர். ஈசன் தம்மையே அவருக்குத் தோழராகத் தந்ததால் அது முதல் தொண்டர் கூட்டம் அவரைத் தம்பிரான் தோழர் என அழைக் கத் தொடங்கியது.

ஆண்டவனுடைய அன்புக் கட்டளைக்கு ஏற்ப சுந்தரர் அன்று முதல் புத்தூரிலே தாம் கொண்டிருந்த திருமணக் கோலத்தோடேயே இருந்து வரத் தொடங்கினுர்.

11. ஆரூர்த் திருமணம்

ஆரூரிலே ருத்திரகணிகையர் குலத்திலே பிறந்த பரவையார் வளர்ந்து பருவ வயதை அடைந்தார். அழகு அவள் தளிர் மேனியை எழிலோவியமாகச் செய்திருந்தது. தினந்தோறும் அவள் தன் தோழியருடன் ஆலயத்துக்கு வந்து புற்றிடங் கொண்டாரைத் தரிசித்துச் செல்வது வழக்கம்.

அன்றைத்தினமும் வழக்கம்போல பரவையார் ஆலயத் துக்குப் புறப்பட்டாள். தோழியர் கூடவர ஒரு தட்டிலே இறை வனுக்குச் சமர்ப்பிக்க மலர் மாலைகளை ஏந்தியவளாய் ஆலயத் தினுள் நுழைந்தாள். அதே சமயம் சுந்தரரும் தொண்டர்கள் சூழ சுவாமி தரிசனத்துக்காக அங்கு வந்தார். முன் வினை சுந்தரரின் கவனத்தைப் பரவையார்பால் திருப்பியது. அழகே வடிவெடுத்தவளாய் தோன்றும் அவளை ஒரு கணம் பார்த்தார்.

வினைப்பயன் பரவையாரையும் விடவில்லை. சுந்தரர் தன் னைப் பார்க்கும் அதே நேரத்தில் அவரை நிமிர்ந்து பார்த்தாள். இருவர் பார்வையும் சிறிது நேரம் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன. அதற்குள் பின்னால் வந்த தோழி அவள் மீது மோதிக்கொள்ளவே நகர்ந்து ஆலயத்துள் சென்றுவிட்டாள்.

கொஞ்ச நேரம் வரை சுந்தரருக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. ஆலயத்துள் நுழைந்துவிட்ட அப்பெண் அவருடைய பார்வையும் கவர்ந்து சென்று விட்டாளோ என எண்ணினார். அருகிலிருந்த அடியார் ஒருவரிடம் "இந்தப் பெண் யார்?" என்று கேட்டார்.

"இந்தப் பெண் ருத்திரகணிகையர் குலத்தில் வந்தவள். பரவையார் என்று பெயர். தினமும் வந்து, எம்பெருமானைச் சேவித்துச் செல்வதுண்டு" என்றார் அவர்.

சுந்தரரின் உள்ளம் பரவையார்பால் விழைந்தது. அவளைக் காணலாம் என்று எண்ணியவராய் ஆலயத்துள் நுழைந்தார். வழக்கம் போல சந்நிதிகளைத் தரிசித்துக்கொண்டு அவர் மூலஸ் தான சந்நிதிக்கு வரும்போது பரவையார் அங்கு காணப்பட வில்லை. அவள் தன்னுடைய வழிபாட்டை முடித்துக்கொண்டு வேறு வழியாகப் போய்விட்டாள்.

தரிசனம் முடித்துக்கொண்டு தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார் சுந்தரர். அவர் நினைவு திரும்பத் திரும்ப பரவை யாரையே சுற்றி ஓடியது.

“எம்பெருமானே, இது என்ன சோதனை? என்றுமில்லாமல் என் நினைவு பரவையாரின்பால் செல்வதன் காரணமென்ன? எந்தக் காரணத்துக்காக என்னைத் தவிக்கச் செய்ய வேண்டும்? அன்று கைலயங்கிரியிலே எனக்குக் கொடுத்த வாக்குப்படி புத்தூரிலே வந்து தடுத்தாட்கொண்டீரே! அதேபோல இதுவும் உம்முடைய திருவுள்ளம் தானே? அவ்விதமானால் பரவையாரை எனக்குத் தந்தருளும்” என்று வேண்டினர்.

பரவையாரின் நிலையும் இது போலத்தான் இருந்தது. சுந்தரரின் மன்மதத் தோற்றத்தைக் கண்டது முதல் அவள் மனம் தன் வசமிழந்து தவித்தது. அவளால் நிம்மதியாக இறைவழிப்பாட்டை நடத்த முடியவில்லை. வழக்கத்துக்கு மாருக விரைவிலேயே வீட்டுக்குச் சென்று விட்டாள்.

வீதியை அடையும் வரை தான் அவளால் பொறுக்க முடிந்தது. தன்னருகில் வந்த தோழியிடம் கேட்டாள்.

“ஏனடி, நாம் ஆலயத்துள் நுழையும்போது வாயிலில் பெருமான் ஒருவர் வந்தாரே! அவர் யார் என்று தெரியுமா?”

“அவர் தானம்மா எம்பெருமானுல் தடுத்தாட்கொண்டருளப் பெற்ற பெருமான் எனப்படும் நம்பியாரூரர்” என்ருள் தோழி.

“நாம் வழிபடும் சிவபெருமானுக்குத் தொண்டரெனப் போற்றப்படும் அடியார் அவர்தானு!” என்று வியந்து கேட்டாள் பரவையார்.

“ஆம், அம்மா! இறைவனோடு வன்மை பேசியதால் வன்றெண்டர் என்றும், ஈசனையே தோழராகப் பெற்றதால், தம்பிரான் தோழர் என்றும் போற்றப்படுபவர் அவர்தான்!” என்ருள் தோழி.

மாளிகையை அடைந்த பரவையாரின் மனம் எந்தக் காரியத்திலும் லயிக்கவில்லை. திரும்பத் திரும்ப சுந்தரரின் அழகிய திருவுருவமே அவள் மனக்கண் முன் தோன்றியது.

“ஆஹா, அத்திரு முகத்தில்தான் என்ன அழகு! ஆண்டவனின் அருள்பிரசாதம் பெற்றதால் அத்திரு முகத்தில்தான் என்ன தெய்வீகம் மிளிர்கிறது! இறைவனே அக்கோலத்தில் எழுந்தருளியிருப்பதாக அல்லவா நினைக்கத் தோன்றுகிறது!...” என்று பலவாருக அவரை எண்ணி எண்ணி மருகினுள்.

மாலை போய் இருள் வந்தது. இருவருடைய உள்ளமும் ஒருவரையொருவர் எண்ணித் தவித்தன.

பரவையாருக்கு மஞ்சம் முள்ளாகக் குத்தியது. எழுந்து முற்றத்துக்கு வந்தாள். அங்கே தண்ணொளி வீசிய நிலவு அவள் தவிப்பை மேலும் அதிகப்படுத்தியது.

சிவபெருமான் முன்னர் தாம் அருளியபடி காரியங்களை நிறைவேற்ற விருப்பம் கொண்டார். தம் அடியார் மனம் துன்புறுவதை அவர் ஒரு கணமும் சகிக்கமாட்டார் அன்றோ.

அன்றிரவே ஆரூர்த் திருத்தொண்டர் தம் கனவிலே தோன்றி, விடிந்ததும் நம்பியாரூரருக்கும் பரவையாருக்கும் திருமணம் செய்து வைக்குமாறு கட்டளையிட்டார். அவர்கள் இருவரும் இணைவதைத் தாம் மகிழ்ச்சியோடு விரும்புவதாகவும் அறிவித்தார்.

அத்தோடு அவர் நின்றுவிடவில்லை. சுந்தரருடைய கனவிலும் தோன்றி, விடிந்ததும் பரவையாரை அவர் உள்ளப்பாங்கின்படி திருமணம் செய்து வைப்பதாகத் தெரிவித்தார். அதே போலப் பரவையாருடைய கனவிலே தோன்றி நாளை அவள் சுந்தரரைக் கைப்பிடிப்பாள் என்று உணர்த்தினர்.

ஆரூரிலே பொழுது புலர்ந்தது. தொண்டர்கள் ஓடி வந்து இறைவனின் ஆக்ஞையைத் தம்பிரான் தோழரிடம் தெரிவித்தனர். பரவையாருக்கு விவரத்தைச் சொல்லி அவளை அழைத்து வர அடியார் சிலர் சென்றனர்.

அவர்கள் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் பரவையார். வைகறைப் பொழுதிலேயே எழுந்து நீராடி புத்தாடை அணிந்து சர்வாலங்காரபூஷிதையாக அவள் காத்திருந்தாள். அவளைத் தேடி அடியார்கள் வந்ததும் இரவு கனவிலே புற்றிடங்கொண்ட பெருமான் தோன்றி தன் விருப்பம் நிறைவேறப் போகிறதென்று அறிவித்ததை அவர்களிடம் தெரிவித்தாள்.

பரவையார் அழைத்து வரப்பட்டதும் தொண்டர்கள் சுந்தரரை அலங்காரமாக அழைத்து வந்தார்கள். ஆண்டவன் சந்நிதானத்தில் இருவரும் முறைப்படி திருமணம் செய்து வைக்கப்பட்டனர். இறைவன் திரு அருள்படி சுந்தரர் பரவையாரின் மாளிகையில் சிறிது காலம் தங்கி குடும்ப வாழ்விலே ஈடுபட்டார். அப்போதும் அவர் இறைவழி பாட்டைக் கொஞ்சமும் மறக்கவில்லை. திருத்தொண்டர்கள் சூழ மூன்று

காலங்களிலும் ஆலயம் சென்று எம்பெருமானைத் தொழுது வந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் போது ஒரு நாள் சுந்தரர் வான்மிக நாதனைத் தரிசிக்க ஆலயம் வந்தார். தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருக்கும் சிவனடியார்களைக் கண்டபோது அவர் உள்ளம் பக்தி வெள்ளத்தில் மிதந்தது. தேகத்திலே திருநீறு விளங்க சிவ சொரூபமாகவே அவர்கள் காட்சியளித்ததைக் கண்டதும் 'ஆகா, இவ்வடியார்களுக்கு அடியனாகும் நாள் எந்த நாளோ?' என மனத்திலே எண்ணினார்.

எங்கும் நிறைந்த பரம்பொருளான சிவபெருமான் சுந்தரரின் மனத்திலே எழுந்த விருப்பத்தை உணர்ந்தார். அதை நிறைவேற்றவும் விருப்பம் கொண்டார்.

சந்நிதானத்திலே பக்தியால் நெஞ்சம் உருக நிற்கும் சுந்தரரின் கண்களுக்கு இறைவன் காட்சிதந்தார்.

"சுந்தரா, நம்மைப்பற்றிப் புகழ்ந்து பாடும் நீ நம் அடியார்களையும் பாடவேண்டாமா? அவர்கள் தொண்டு பற்றிப் பதிகம் பாடுவதையும் நாம் விரும்புகிறோம்" என்றார்.

உள்ளத்தில் எழுந்த எண்ணத்தை உணர்ந்து ஈசன் அதற்கேற்ப தம்மைப் பணித்தற்குப் பெரிதும் ஆனந்தம் கொண்டாலும் சுந்தரருக்கு வருத்தமும் கூடவே எழுந்தது. அடியார்களின் திருத்தொண்டு பற்றி அவர் ஏதும் அறியாரே!

"ஐயனே, தங்கள் கட்டளையைச் சிரமேற் கொண்டேன். ஆயினும் அடியேனுக்குத் தங்கள் அடியார்களின் திருத்தொண்டு பற்றி ஏதும் தெரியாதே. எவ்வாறு தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன்?" என்று பணிந்து வேண்டினார்.

"சுந்தரா, நாமே உனக்கு உணர்த்துகிறோம். 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று பாடு" என்று அடி யெடுத்துக் கொடுத்து மறைந்தார் ஈசன்.

வழிபாட்டை முடித்துக் கொண்டு சுந்தரர் தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார். அங்கே குழுமியிருந்த அடியார் கூட்டத்தை நோக்கிக் கை கூப்பித் தொழுதார்.

உடனே மடை திறந்த வெள்ளம் போல் அவர் உள்ளத்திலிருந்து பிறந்தது பாடல்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனுர்க்கும் அடியேன்
இல்லையே என்னுத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமாமிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டார்க்கு
அடியேன்
அல்லி மென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே

12. ஓடு கொடுத்தவர் வீடும் கொடுத்தார்

வான்மீக நாதர் அடியெடுத்துக் கொடுக்கச் சுந்தரர் அடியார்களின் வரலாற்றைத் திருத்தொண்டத் தொகையாகப் பாடினுர்.

தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர். அவர்கள் எக்காலமும் நடராஜப்பெருமானிடம் பக்தி பூண்டவர்கள். மேனியிலே திருநீறும் ருத்திராக்ஷமும் விளங்காது இருக்க மாட்டார்கள். அக்கினி வளர்த்து ஹோமம் முதலான கர்மாக்களைச் சிரத்தையுடன் செய்து வருபவர்கள். அவர்கள் நினைப்பும் செய்கையும் பகவானைக் குறித்தே இருக்கும். மனத்திலே தூய்மையும் பேச்சிலே இன்மையும் உடையவர்கள். சிவனடியார்களிடம் அன்பு கொண்டவர்கள். எந்நேரமும் இறைவனுக்குத் தொண்டு செய்வதையே தமது மூச்சாகக் கொண்டவர்கள்.

இத்தனை பேறுபெற்ற அடியார்களைத் தகுந்த முறையில் கௌரவிக்க எம்பெருமான் இச்சை கொண்டார் போலும். ஆரூர் சந்நிதானத்திலே சுந்தரருக்கு அடியார் பெருமை பற்றிப் பதிகம் பாட அருளியபோது தம் கருணைக்குப் பாத்திரர்களான தில்லைவாழ் அந்தணர்களை முதலில் போற்றிப் புகழ்ந்து பாட இறைவன் அடியெடுத்துக் கொடுத்தார். சுந்தரரும் அவ்வாறே தில்லைப் பொன்னம்பலத்தின் பொன்னடியார்களுக்கு முதலில் அஞ்சலி செய்து தனியடியார்களின் பெருமை பற்றிப் பாடத் தொடங்கினுர்.

தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேரில் பொன்னம்பலத்தாடும் நடராஜப்பெருமானும் ஒருவர் என்றும் கொள்வர். ஆகவே இறைவன் தனி அடியார்களைப் பற்றிச் சுந்தரரைப்

பாடச் சொல்லிய போது தம்மோடு சேர்ந்த தில்லை அந்தணர்களை முதலில் அஞ்சலி செய்துபாட அவ்வாறு அடி யெடுத்துக் கொடுத்தார் போலும்.

தில்லைப்பதியிலே மண்பாண்டங்கள் செய்து விற்று ஜீவனம் நடத்தி வந்த குயவனுர் ஒருவர் இருந்தார். அவருக்குத் திருநீலகண்டர் என்று பெயர். பாற்கடலிலே அமுதம் கடையும் போது வெளிப்பட்ட ஆலகால விஷத்தைக் கண்டு தேவர்களும் அசுரர்களும் ஓட, அனைவரின் நலம் பற்றிச் சிவபெருமான் அவ்விஷத்தைக் கையில் ஏந்தி விழுங்கித் தமது கண்டத்திலே இருத்திக் கொண்டார். அது காரணமாக இறைவனுக்கு நீலகண்டர் என்ற பெயர் விளங்கலாயிற்று. சிவபெருமானிடம் மிக்க பக்தி கொண்ட குயவனுர், ஈசனின் இத் திருவிளையாடலை வியந்து எந்நேரமும் அதை நினைவு படுத்தி மகிழ்வார். தம்மிடம் வருபவர்களிடமும் அப்பிரபாவத்தை எடுத்துக் கூறி பகவானின் கருணையைப் புகழ்வார். அதனுல் எல்லோரும் அவரைத் திருநீலகண்டர் என்றே அழைக்கத் தொடங்கினர். நாளடைவில் அந்தப் பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

எம்பெருமானிடம் பக்தி கொண்ட திருநீலகண்டர் சிவனடியார்களைத் தாம் வணங்கும் இறைவனுகவே கொண்டார். ஆகவே அவர் தம்முடைய வேலைகளின் நடுவே அடியார்களுக்குத் தேவையான ஓடுகளையும் செய்து வந்தார். தம்மிடம் வரும் அடியார்களைப் பயபக்தியோடு வரவேற்று உபசரித்து, அவர்களுக்குத் தாம் செய்து வைத்துள்ள ஓடுகளை அளித்து மகிழ்வார். அவற்றுக்கு எவ்வித ஊதியமும் பெற மறுத்து விடுவார்.

திருநீலகண்டரின் மனைவியார் தம் கணவரிடம் அத்தியந்த பக்தி கொண்டவர். அவருடைய இறைத் தொண்டுக்குப் பெரிதும் உதவியாக இருந்து வந்தார்.

இவ்வாறு தம்பதிகள் இருவரும் அன்னியோன்னியமாக இல்லறம் நடத்தி வரும் நாளையில், ஒரு சமயம் திருநீலகண்டர் தம் வியாபார விஷயமாக வெளியே சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியிலே பரத்தை ஒருத்தியைச் சந்திக்க நேர்ந்தது. அவள் அழகிலே மயங்கியவராய் திருநீலகண்டர் தாம் திருமணம் புரிந்து கொண்டவர் என்பதையும் மறந்து அவளிடம் இன்பம் நுகர்ந்து விட்டார்.

பரத்தையின் வீட்டை விட்டு வெளிப்பட்ட பின்னரே அவர் தம் செய்கையைப் பற்றித் தீர ஆராய முடிந்தது. தம்

மனைவிக்குத் துரோகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டு விட்டோமே என மனம் நொந்து வருந்தினர்.

கணவரின் துரோகம் அம்மையாரின் காதுகளுக்கு எட்டியது. அதற்காக அவரிடம் கோபித்துச் சண்டை பிடிக்க வில்லை. வழக்கம்போல அவர் வீடு திரும்பியதும் அவருக்குச் செய்யவேண்டிய பணிகளைக் குறைவறச் செய்து வந்தாள்.

திருநீலகண்டருக்கோ தாம் செய்த தவறு உள்ளத்தில் குமைந்து எடுத்தது. மனைவிக்கும் செய்தி எட்டிவிட்டது என் பதையும் அறிவார். வீடு திரும்பியதும் பெரும் பூசல் ஏற்படக் கூடும் என்று பயந்தார். ஆனால் அவர் நினைத்ததற்கு மாருக அவள் முகமலர்ச்சியோடு நடந்துகொண்டது அவர் உள்ளத்தை மேலும் வருத்தியது. அவளிடம் உண்மையைக் கூறி தவறு நேரிட்டதற்கு வருந்துவதாகத் தெரிவித்தால்தான் உள்ளம் அமைதியுறும் எனத் தோன்றியது.

உணவு அருந்திய பின் மெதுவாகப் பேச்சை எடுத்தார்.

''நான் மனதறிந்து அந்தக் காரியத்தில் ஈடுபடவில்லை. என் காரியம் சரிதானு என்று சிந்தித்துப் பார்க்கும் மனோ நிலையை இழந்துவிட்டிருந்த நேரத்தில் அத்தவறு நேரிட்டு விட்டது. அதற்காக நான் வேதனையால் துடித்துக்கொண் டிருக்கிறேன். என்னை மன்னித்துவிடு'' என்ருர்.

அந்த அம்மையார் அப்போதும் வாய்திறந்து பதில் பேச வில்லை. தன் காரியங்களில் முனைந்திருந்தாள்.

அவள் சமாதானம் அடைந்துவிட்டாள் என்றே எண்ணி ஞர் திருநீலகண்டர். ''இனி இம்மாதிரி நிகழ்வதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்'' என்று சொல்லியபடி அவளை அணைக்க நெருங்கினர்.

பரபரப்போடு அந்த அம்மையார் இரண்டடி பின்னல் நகர்ந்தார்.

''எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்!''

மனைவியின் உள்ளத்திலிருந்த பீறிட்ட அந்த வார்த்தை களைக் கேட்டதும் திருநீலகண்டர் விதிர்விதித்து அப்பால் நகர்ந்தார். எந்தப் பெருமானிடம் அளவில்லா பக்தி பூண்டிருந் தாரோ, அவர் மீதே ஆணையிட்டுத் தன்னைத் தீண்டக்கூடா தென்று சொல்லிவிட்டாள்.

திருநீலகண்டர் உள்ளம் கூச உடல் குறுகத் தலையைத் தொங்க விட்டவராய் தம் படுக்கைக்கு வந்து அமர்ந்தார். பிற புருஷனைச் சேர்ந்த மனைவியை ஆடவன் ஒதுக்கி வைப்பது போல இன்னொரு பெண்ணைத் தீண்டிய அவரை ஒதுக்கி விட்டாளே!

வெகுநேரம் கற்சிலை போல் அமர்ந்திருந்தார் திருநீல கண்டர். அவர் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த படபடப்பு கொஞ் சம் கொஞ்சமாக அடங்கி வரும்போது, தமக்கு அத்தகைய தொரு தண்டனை அவசியம்தான் என்பதை அவர் உணர்ந்தார். இறைவனிடம் பெரும் பக்தி கொண்டுள்ள அவர் இத்தகைய தவறுக்கு இடம் அளிக்கலாமா? ஆகவே தம் வாழ்நாள் பூராவும் அந்தத் தண்டனையை அனுபவிப்பதுதான் சிறந்த பரிகாரம் ஆகும் என்ற முடிவுக்கு வந்தார். 'எம்மை' என அவள் குறிப் பிட்டதன் மூலம் 'பெண்களாகிய எங்களை' எனக் கூறிவிட் டாள். எனவே, தம் மனைவியை மட்டுமின்றி பிற பெண்களையும் தீண்டுவதில்லை என்ற விரதம் கொண்டார்.

இளமையின் துடிப்பிலே இருக்கும் நீலகண்டர் அந்த விர தத்தை மிகவும் கடுமையாக நிறைவேற்றி வந்தார். வெளி யுலகுக்கு அவர்கள் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வந்தா லும் வீட்டினுள்ளே அவள் வேறு தான் வேறு என்ற உணர் வோடு வாழ்ந்து வந்தார். உடலினால் மட்டுமின்றி உள்ளத் தாலும் அவளைத் தீண்டாது காலத்தைப் போக்கி வந்தார்.

நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி, மாதங் கள் வருடங்களாகி உருண்டன. வாலிபராக இருந்த திருநீல கண்டர் இப்போது முதுமைப் பருவத்தை அடைந்திருந்தார். இத்தனை காலமும் அவர் தமது விரதத்தைக் கடைப்பிடித்து வந்ததோடு, சிவனடியார்களை வரவேற்று உபசரித்து ஓடு கொடுக்கும் தொண்டினையும் விடாது நடத்தி வந்தார். அவரு டைய பெருமையை ஊரும் உலகமும் அறியச் செய்ய வேண்டு மென்று விருப்பம் கொண்டார், அம்பலத்தாடும் அண்ணல். வயோதிகரைப் போன்று வேடம் கொண்டு திருநீலகண்டரிடம் வந்தார்.

வயோதிகரான சிவனடியார் ஒருவர் தம்மைத் தேடி வருவ தைக் கண்டதும் திருநீலகண்டருக்குச் சந்தோஷம் தாங்க வில்லை. அவரைப் பணிந்து வணங்கி வீட்டினுள் அழைத்துச் சென்று உபசரித்தார்.

"பெரியவரே, தாங்கள் என்னைத் தேடி வந்தது குறித்து நான் மிக்க சந்தோஷமே அடைகிறேன். என்னால் தங்களுக்கு

ஆகவேண்டிய காரியம் ஏதாகிலும் இருந்தால் அதைத் தெரி வியுங்கள்'' என்று பணிவோடு வேண்டினுர்.

''ஐயனே, உன்ஞல் ஆகவேண்டிய காரியம் ஒன்றுளது. சிவனடியார்களுக்கு நீ தொண்டு செய்து வருகிருய் என்று கேள்விப்பட்டு உன்னைத் தேடி வந்தேன்'' என்ற அவர் தம்மிட மிருந்த திருவோட்டைத் திருநீலகண்டரிடம் நீட்டினுர்.

பவ்யமாக அதைப் பெற்றுக்கொண்ட நீலகண்டர், ''அன் புக்கு உரியவரே, நான் என்ன செய்ய வேண்டும்? இதற்குப் பதிலாக வேறு ஓடு தரவேண்டுமா?'' என்று கேட்டார்.

வந்தவர் சிரித்தார். ''அப்பனே, இந்த ஓட்டைப்பற்றி உனக்குத் தெரியாது. இதனுள் எதை வைத்தாலும் புனிதமாகி விடும். அவ்வளவு பெருமை வாய்ந்ததாகும். எனக்கு வேறு ஓடு தேவையில்லை. இதைச் சிறிது காலம் நீ பத்திரப்படுத்தி வைத்திருந்து கொடுத்தால் போதும். நான் கவனிக்கவேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டு திரும்பவும் வந்து பெற்றுக் கொள்ளுகிறேன். எனக்கு வேண்டியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிருர்கள். ஆயினும், நீ அடியார்களிடம் அன்பு பூண்டு, ஓடு செய்து பணம் வாங்காமல் அவர்களுக்குக் கொடுத்து வருவதால் உன்னிடம் இந்த ஓட்டைப் பத்திர மாகக் கொடுத்து வைக்கலாம் என நினைத்தேன்'' என்ருர்.

''பெரியவரே, தாங்கள் நிம்மதியாகச் சென்று வாருங்கள். உங்கள் ஓடு என்னிடம் பத்திரமாக இருக்கும்'' என்ற திருநீல கண்டர் உள்ளே சென்று பத்திரமான இடம் ஒன்றில் பெரியவர் கொடுத்த ஓட்டை வைத்துவிட்டுத் திரும்பினுர். பெரியவரும் அவரிடம் விடைபெற்றுச் சென்ருர்.

அதன் பிறகு பல நாட்கள் ஓடி விட்டன. சிவனடியார் வந்ததும் ஓட்டைக் கொடுத்துச் சென்றதும் திருநீலகண்டருக்கு மறந்துவிட்டது எனலாம்.

இவ்வாறு இருந்து வருகையில் அந்த வயோதிகச் சிவ னடியார் ஒருநாள் திருநீலகண்டரைத் தேடி வந்தார்.

'அப்பனே, போன இடத்தில் ஏதேதோ காரியங்கள். நான் சொல்லிச் சென்றதுபோல் திரும்ப முடியவில்லை. இப்போது தான் வர முடிந்தது. ஓடு பத்திரமாக இருக்கிறதல்லவா?'' என்று கேட்டார்.

அப்போதுதான் திருநீலகண்டருக்கு ஓடு பற்றிய நினைவு வந்தது.

"பெரியவரே, பத்திரமாகத்தான் இருக்கிறது. எடுத்து வரவா?" என்று கேட்டார்.

"கொண்டு வா, அப்பனே. அதைப் பெற்றுச் செல்லத் தான் நான் வந்திருக்கிறேன்" என்ருர் பெரியவர்.

திருநீலகண்டர் உள்ளே சென்ருர். அத்தனை சுலபத்தில் காரியம் முடியச் செய்துவிடுவாரா பகவான்? திருநீலகண்டர் பத்திரமாக வைத்திருந்த இடத்திலிருந்து திருவோட்டை மறையச் செய்துவிட்டார்.

உள்ளே சென்று திருநீலகண்டர் பெரியவர் கொடுத்துச் சென்ற ஓட்டை வைத்த இடத்திற்குப் போய் பார்த்தார். அதைக் காணவில்லை. வேறு எங்காவது கைத்தவறுதலாக வைத்து விட்டோமோ எனத் தேடினுர். எங்கும் அது காணப் படவில்லை. வீடு முழுவதும் தேடிப் பார்த்து விட்டார்.

பெரியவர் வெளியிலிருந்து கூப்பிட்டார்.

"இதோ எடுத்து வருகிறேன் எனச் சொல்லிவிட்டுப் போய் வெகு நேரமாகிவிட்டதே. சீக்கிரம் என் திருவோட்டை எடுத்து வா. நான் புறப்பட வேண்டும்."

திருநீலகண்டர் தவியாகத் தவித்தார். ஓட்டையோ காண வில்லை. சிவனடியாருக்கு என்ன பதில் சொல்வார்?

மீண்டும் கிழவனுர் கூப்பிட்டார். உள்ளமும் உடலும் நடுங்க வெளியே வந்தார் திருநீலகண்டர்.

"என்னப்பா, இத்தனை தாமதம் ஏன்? என் ஓட்டைக் கொண்டு வா" என்று கேட்டார்.

கண்கள் நீரைச் சொரிய திருநீலகண்டர் பெரியவரை நமஸ்கரித்தார்.

"பெரியவரே, என்னை மன்னித்து விடுங்கள். தாங்கள் கொடுத்துச் சென்ற ஓட்டைப் பத்திரமாகத்தான் வைத்திருந் தேன். இப்போது போய்ப் பார்த்தால் அது வைத்த இடத் தில் காணப்படவில்லை. வீடு முழுவதும் தேடிப் பார்த்து விட் டேன். அதற்குப் பதிலாகத் தங்களுக்கு வேறு புதிய ஓடு செய்து தருகிறேன்" என்று கெஞ்சினுர்.

பெரியவரின் முகத்திலே கடுமை பரவியது. திருநீல கண்டரைக் கோபத்தோடு பார்த்தார்.

"நன்ருயிருக்கிறது, அப்பனே, உன் வார்த்தை. பத்திர மாக வைத்திருந்து தருவதாக ஓட்டை வாங்கிக்கொண்டு

விட்டு இப்போது காணவில்லை என்றால் நான் விட்டு விடுவேனா?'' என்று கேட்டார்.

''நான் அதை வைத்திருந்த இடம் மிகவும் பத்திரமான இடமே. எப்படியோ தவறியிருக்கிறது. அதற்குப் பதிலாகப் புதிய ஓடு செய்து தருகிறேன். என் மீது கருணை கொண்டு பெற்றுக் கொள்ளவேண்டும்'' என்று மன்றாடினார்.

பெரியவர் சம்மதிக்கவில்லை. ''எனக்கெதற்குப் புதிய ஓடு. என்னுடைய பழைய ஓட்டையே கொண்டு வந்து கொடு போதும். பொன்னால் செய்து கொடுப்பதாக இருந்தாலும் எனக்குத் தேவையில்லை'' என்றார்.

திருநீலகண்டர் அந்தக் கிழவரிடம் மன்றாடினார். வேறு ஓட்டைப் பெற்றுக்கொண்டு தம்மைப் பழி சூழ்வதினின்றும் காப்பாற்றுமாறு வேண்டினார்.

கிழவர் ஏளனமாகச் சிரித்தார்.

''அடா, என்ன ஆச்சரியம்? பழி சூழ்ந்து விடுமோ என அஞ்சுகிறாயோ? உன் வார்த்தையை நான் நம்பி விடுவேன் என்று நினைக்காதே. எந்தப் பொருளை வைத்தாலும் அதைப் புனிதமாக்கி விடும் என்று சொல்லி ஓட்டைக் கொடுத்தேனல்லவா. ஆகவே அதை உன்னிடமே வைத்துக் கொள்ளவேண்டுமென்று எண்ணம் கொண்டிருக்கிறாய் போலும். அதனால் தான் ஓடு காணவில்லை என்று கூறுகிறாய். என்னுடைய பழைய ஓட்டைக் கொடுத்துவிடு. இல்லையேல் உன்னைச் சும்மா விடமாட்டேன்; ஊரைக் கூட்டி உன் திருட்டுத் தனத்தை முறையிட்டு ஓட்டை வாங்கிக்கொண்டுதான் இங்கிருந்து நகருவேன்...''

கிழவரின் வார்த்தைகளைக் கேட்டு உள்ளம் கூச உடல் குறுகத் தவித்தார் நீலகண்டர்.

''சுவாமி, என்னைத் திருடன் என்று கூறுகிறீர்கள்? கனவிலும் தங்கள் உடைமையை நான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்ததில்லை. வைத்த இடத்தில் அதைக் காணவில்லை. என் வார்த்தையை நீங்கள் நம்பவேண்டும்'' என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சினார்.

''நீ ஓட்டைத் திருடிக் கொள்ளவில்லை என்கிறாயா? அப்படியானால் உண்மையிலேயே காணாமல் போய்விட்டதா?...''

''ஆம், சுவாமி. வீடு முழுவதும் தேடிப் பார்த்தாகி விட்டது. ஓட்டைக் காணவில்லை. அதற்காகத்தான் புதிய ஓடு செய்து தருவதாகக் கூறினேன்.''

"உன் வார்த்தையை நான் எவ்வாறு நம்புவது? எனக்கு நம்பிக்கை ஏற்பட உன் மகனை அழைத்து வந்து அவன் கை பிடித்துக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்!" என்றார் கிழவர்.

"சுவாமி, இறைவன் என்னை அளவுக்கு மீறி சோதனை செய்கிறார். தங்கள் கூற்றுப்படி செய்து என் நிரபராதத் தன்மையைத் தங்களுக்கு விளக்கக்கூடிய நிலையில் ஆண்டவன் என்னை வைக்கவில்லையே!..." என்று கண்ணீர் உகுத்தார் நீலகண்டர்.

"என்ன?..." என்று கோபமாகக் கேட்டார் கிழவர்.

"சுவாமி, அடியேனுக்கு அந்தப் பாக்கியத்தை இறைவன் அளிக்கவில்லை. தாங்கள் வேறு எப்படிச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன்" என்று வேண்டினார் திருநீலகண்டர்.

"ஓஹோ, உனக்கும் பிள்ளை இல்லையா?..." என்று சிறிது நேரம் யோசித்த கிழவர், "அப்படியானால் ஒன்று செய். உன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்!" என்றார்.

கிழவரின் வார்த்தைகள் திருநீலகண்கடரைத் திடுக்கிட வைத்தன. அவர் எவ்வாறு அதற்கு இணங்க முடியும்? அவளைத் தீண்டுவதில்லை என்ற விரதம் கொண்டிருப்பதை எவ்வாறு மீறுவது? திக்கித் தடுமாறினார்; அவரால் வாய்திறந்து பதில் ஏதும் சொல்ல முடியவில்லை.

"ஏன் தயங்குகிறாய்? நீதான் ஓட்டைத் திருடிக் கொள்ளவில்லை என்று சொல்கிறாயே. அப்படியிருக்கப் பயம் எதற்கு?"

"சுவாமி, நான் என்ன செய்வது என்பது தெரியாமல் தவிக்கிறேன். எங்களுக்குள் ஒரு சபதம் இருக்கிறது. அதன்படி அவளை நான் தீண்டுவதற்கில்லை. நான் மட்டும் குளத்தில் மூழ்கி சத்தியம் செய்கிறேன்" என்றார்.

கிழவர் 'இடி இடி' யென்று சிரித்தார்.

"எந்த வழிக்கும் வர முடியாது போலிருக்கிறது உன் பேச்சு. உன்னிடம் பேசுவதில் எனக்கொரு பலனும் ஏற்படப் போவதில்லை. எங்கு பேசவேண்டுமோ அங்கே பேசினால் தானாக ஓடி வருகிறது" என்று கோபமாகப் பேசியவராகப் புறப்பட்டார்.

''சுவாமி, என் வார்த்தையை நம்புங்கள். நான் சொல்வது எள்ளளவும் உண்மைக்கு மாறுனது அல்ல'' என்று சொல்லிக் கொண்டே அவர் பின்னுல் சென்ருர் திருநீலகண்டர்.

பெரியவரோ அவருடைய வார்த்தைகளேக் காதிலே வாங்கிக் கொள்ளாமல் நேராகத் தில்லேவாழ் அந்தணர்களிடம் சென்ருர்.

''பெரியோர்களே, இவனேப் பாருங்கள். சிவனடியார்களிடம் அன்பு பூண்டவனுக இவன் போடும் வேஷத்தை இப்போது நன்ருக அறிந்து கொள்ளுங்கள். எதை வைத்தாலும் புனிதமாக்கவல்ல என் திருவோட்டை இவனிடம் கொடுத்துப் பத்திரமாக வைத்திருக்கும்படி சொன்னேன். சிவனடியார்களிடம் அன்பு பூண்டு அவர்களுக்கு ஓடு அளித்து வருகிருனே என்று நம்பி இவனிடம் கொடுத்தேன். இவனே ஓட்டைத் தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பேராசையில் ஓடு காணவில்லே என்று கூறுகிருன். உண்மையில் கெட்டுவிட்டது என்ருல் அவன் தன் வார்த்தையை நிரூபிக்கத் தன் மனேவியின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி எழுந்து சத்தியம் செய்யட்டும் என்று சொன்னேன். அதற்கு உடன்படாது ஏதோ சபதமாம் மனேவியைத் தீண்டுவதற்கில்லேயாம் என்று தட்டிக் கழிக்க முயலுகிருன். நீங்கள் தான் நியாயம் வழங்க வேண்டும்'' என்ருர்.

அந்தணர்களும் திருநீலகண்டரைப் பார்த்து கிழவரின் குற்றச்சாட்டுக்கு அவர் என்ன பதிலுரைக்கப் போகிருர் எனக் கேட்டனர்.

''பெரியோர்களே, இந்த முதியவர் என்னிடம் ஓடு கொடுத்துப் பத்திரமாக வைத்திருக்கச் சொல்லிச் சென்றது உண்மையே. அதை நான் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். ஆனுல் இப்போது இவர் வந்து கேட்டபோது ஓடு வைத்த இடத்தில் அதைக் காணவில்லே. என்னேப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். மனத்தாலும் பிறர் பொருளேக் கவரும் எண்ணம் எனக்கு இல்லேயென்பது ஊரார் அறிந்ததே. அப்படியிருக்கச் சிவனடியாரான இவரது ஓட்டை நான் கவர்ந்து கொள்வேனு?'' என்ருர் திருநீலகண்டர்.

''நீ ஓட்டை எடுக்கவில்லே என்று சொல்லும்போது, பெரியவர் கூறியபடி செய்வதுதான் நியாயம். உன் மனேவி கையைப் பிடித்தபடி குளத்திலே மூழ்கி எழுந்து ஓட்டைக் கவரவில்லே எனச் சத்தியம் செய்'' என்றனர் அந்தணர்கள்.

அவர்கள் தீர்ப்புக்கு இணங்கிய திருநீலகண்டர், ''அப்படியே பொருந்திய முறையில் நடந்து என் கூற்றை மெய்ப்பிக்கிறேன்'' என்ருர்.

கிழவரை அழைத்துக் கொண்டு வீடு திரும்பிய திருநீலகண்டர் மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டு குளக்கரைக்குச் சென்ருர். இதற்குள் கிழவரின் வழக்கு பற்றிய செய்தி அறிந்து மக்கள் திருப்புலீச்வரத்துக் குளக்கரையில் வந்து கூடி விட்டனர். தாங்கள் வழங்கிய தீர்ப்புக்கு ஏற்ப திருநீலகண்டர் நடக்கிருரா என்பதைப் பார்க்க அந்தணர்களும் வந்திருந்தனர்.

தாம் கையில் பிடித்து வந்த மூங்கில் தடியின் ஒரு முனையைத் தம் மனைவியிடம் கொடுத்துப் பிடித்துக் கொள்ளச் செய்து மற்ருெரு முனையைத் தாம் பிடித்துக் கொண்டார். பின்னர் தாம் நீரில் மூழ்கி எழும்போது அவளும் சேர்ந்தாற் போல் நீரில் மூழ்கி எழவேண்டும் எனத் தெரிவித்து விட்டுக் குனிந்தார்.

'சற்று நில்லப்பா!...'' என்று குறுக்கிட்டார் பெரியவர்.

''ஏன், சுவாமி?...'' என்று கேட்டவராய் நிமிர்ந்து பார்த்தார் திருநீலகண்டர்.

''நான் சொன்னது என்ன? நீ செய்வது என்ன? உன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு நீரில் மூழ்கி எழுந்திரு'' என்று கண்டிப்பாகக் கூறினுர் பெரியவர்.

திருநீலகண்டருக்கு இனியும் தம்மால் பேசாதிருக்க முடியாது என்பது தெரிந்து விட்டது. கணவன் மனைவி பூசல் அம்பலத்துக்கு வந்தாக வேண்டிய நிலை வந்து விட்டது என்பதை உணர்ந்தார். 'பெருமானே, இதென்ன சோதனையோ?' என்று வருந்தியபடி தமக்கும் தம் மனைவிக்குமிடையே ஏற்பட்ட பிணக்கைத் தெரிவித்து 'எம்மைத் தீண்டுவீரேயாகில் திருநீலகண்டம்' என அவள் சூளுரைத்ததையும் அதிலிருந்து அவள் உள்பட எந்தப் பெண்ணேயுமே தாம் தீண்டாரது இருந்து வருவதையும் அனைவரும் அறிய எடுத்துக் கூறினுர். குளக்கரையில் கூடியிருந்த மக்கள் திருநீலகண்டரின் தூய்மையான உள்ளத்தை அறிந்தபோது அதிசயித்தனர்.

''அடடா, இதை நீ முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா? இத்தனை தூரத்துக்கு உன்னை இழுத்திருக்க மாட்டேனே!'' என்ருர் கிழவர்.

திருநீலகண்டர் தாம் பற்றியிருந்த தண்டின் மறு முனையைப் பிடித்துக் கொண்டு நீரில் மூழ்குமாறு மனைவியிடம் சொல்லிவிட்டுக் குளத்து நீரிலே மூழ்கி எழுந்தார்.

என்ன ஆச்சரியம்! நீரினுள் மூழ்கும்போது முதுமைப் பருவத்தை அடைந்திருந்த தம்பதிகள் நீரிலிருந்து எழுந்தபோது இளமைபெற்று விளங்கினர்.

எங்கும் பலத்த ஆரவாரம்! மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கிலே அத்தம்பதிகளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

திருநீலகண்டருக்கு வியப்பு தாளவில்லை. கிழவனாரைப் பார்த்தார். கிழவனார் அங்கே தென்படவில்லை.

"எங்கே பெரியவர்?...அவர் எங்கு போய்விட்டார்?..." என்று தேடினார் திருநீலகண்டர்.

வானிலிருந்து மலர்மாரி பெய்தது. திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார் அவர்.

கோடி சூரியப் பிரகாசத்தின் நடுவே பொன்னம்பலவாணர் பார்வதியோடு கூடியவராய் ரிஷப வாகனத்தில் காட்சி தந்தார்.

"புலன்களை வென்ற புருஷோத்தமா, என்றும் குன்றாத இளமையோடு நீங்கள் இருவரும் என் அருகில் எப்போதும் இருப்பீர்களாக" என்று அனுக்கிரகித்தார்.

பகவானின் திவ்விய சொரூபத்தைக் கண்டு எல்லையில்லா ஆனந்தத்தில் மூழ்கியவர்களாய் இருவரும் அந்த ஜோதியிலே கலந்து மறைந்தனர்.

திருநீலகண்டருக்குக் கிடைத்த பேற்றைக் கண்டு மக்கள் அவரைப் பலவிதங்களிலும் போற்றித் தொழுதனர்.

13. இன்புறும் தாரம் தன்னை ஈசனுக்கு ஈந்த அன்பர்

சோழ நாட்டிலே காவிரி நதி கடலோடு சங்கமமாகும் இடத்திலே அமைந்திருக்கிறது காவிரிப்பூம்பட்டினம். அவ்வூரிலே வணிகர் குலத்திலே அவதரித்தவர் இயற்பகையார் என்பவர்.

இயற்பகையார் தாம் பிறந்த குலத்தின் தலைவர் ஆவர். ஆகவே அவரிடம் ஏராளமாகச் செல்வம் குவிந்து கிடந்தது. வாணிபத்திலும் அவருக்குப் பணம் குவிந்தது.

செல்வத்திலே சிறந்து விளங்கும் இயற்பகையார் இறைவனிடத்தும் நிறைந்த பக்தியுடையவராய் விளங்கினுர். சிவபெருமானிடம் இடையருத பக்தி பூண்ட அவர் சிவனடியார்களேயும் தாம் வணங்கும் ஈசனுகவே பாவித்து நடத்தினுர். என்றைக்கும் அழியப் போகிற இவ்வுலக பந்தங்களில் அவர் மனம் ஈடுபட்டிருக்கவில்லை. தம் பெயருக்கேற்ப உலக இயல்புக்குப் பகையாக மிளிர்ந்தார். தாம் இன்றைக்கு இருக்கும் உயர்ந்தநிலை ஈசன் தமக்கு மனமுவந்து அளித்ததே என்று கொண்டார். ஆகவே தம்மிடம் இருப்பது அனைத்தும் அப் பெருமானுக்கு உரியதே என எண்ணினுர். அதன் காரணமாகச் சிவனடியார் வந்து கேட்பதை இல்லையெனக் கூருது அளித்து வந்தார். நாள்தோறும் சிவனடியார்கள் அவர் மாளிகைக்கு வந்து தங்கள் தேவைகளைப் பெற்று மகிழ்வுடன் சென்றனர்.

அடியார்களிடம் அன்பு பூண்டுள்ள இயற்பகையாரின் பெருமையை உலகத்தோருக்கு எடுத்துக்காட்ட எம்பெருமான் திருவுள்ளம் கொண்டார். அதை நிறைவேற்ற அவர் உடனே புறப்பட்டு விட்டார்.

கட்டிளங் காளை; தலையிலோ நீண்டு, சடை விழுந்த கேசத்தைத் தூக்கிக் கட்டியிருந்தது; உடலெங்கும் திருநீறு பூசியிருந்தது. நெற்றியிலே சந்தனத்தால் பிறைக்கீற்று, கழுத்திலே ருத்திராக்ஷ மாலை; இடையிலே அணிந்திருந்த ஆடையின்மேல் புலித்தோல் ஒன்று சுற்றிக் கட்டப்பட்டிருந்தது; மார்பிலே வெள்ளை வெளேரென்ற பூணூல்.

இந்தக் கோலத்தோடு வந்து நின்ற அடியாரைக் கண்டதும் இயற்பகையார் மகிழ்ச்சியோடு எழுந்துவந்து வரவேற்ருர்.

''சுவாமி, வரவேண்டும்! அடியேனின் கிருஹம் தங்கள் பாததூளி பட்டுப் புனிதமடையட்டும்'' என்று கூறி அவரை உள்ளே அழைத்துச் சென்று கால் அலம்ப ஜலம் கொடுத்து, உட்கார ஆசனமிட்டு உபசரித்தார்.

வந்த அடியார் மெல்ல பேச்சைத் துவக்கினுர்.

''தாங்கள்தாஞ இயற்பகையார் என்று சொல்லப்படுபவர்?''

''ஆம், சுவாமி, அடியேன்தான். தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று பணிவுடன் கேட்டார் இயற்பகையார்.

''நான் கேள்விப்பட்டேன்...'' என்று இழுத்தார் அடியார்.

"எதைப் பற்றிக் கேள்விப்பட்டீர்கள், சுவாமி,...தயவு செய்து சொல்லுங்கள்" என்று விநயமாகக் கேட்டார் இயற்பகையார்.

"இயற்பகையார் என்பவர் காவிரிப்பூம்பட்டணத்தில் இருக்கிருர் என்றும், அவரிடம் சென்று சிவனடியார்கள் தங்களுக்கு வேண்டியதைக் கேட்டால் தட்டாமல் கொடுக்கிருர் என்றும் சொல்லக் கேள்விப்பட்டேன்."

"சுவாமி, என்னிடம் இருப்பது அனைத்தும் ஈசன் திருவருளால் கிடைத்தது அன்ரே. அப்படியிருக்க அவனுடைய அடியார்களுக்குக் கொடுத்தது போக மீதம் உள்ளதைத்தானே நான் கொள்ளலாம்" என்ருர் இயற்பகையார்.

"எனக்கொரு காரியம் ஆகவேண்டும். அதைப் பற்றி ஆலோசித்த போது உன்னை அடைந்தால் நிறைவேறும் என்ருர்கள். அதனுல்தான் இங்கு வந்திருக்கிறேன்" என்ருர் அடியவர்.

இயற்பகையாருக்குச் சந்தோஷம் தாளவில்லை. அவரிடம் சென்ருல் தாம் விரும்பும் காரியம் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு தேடி வந்திருக்கிருர் அல்லவா?

கண்கள் மகிழ்ச்சியால் பிரகாசிக்க, "சுவாமி, என் உள்ளம் ஆனந்தத்தால் நிறைந்து வழிகிறது. தாங்கள் என்னைத் தேடி வந்தது பூர்வஜன்ம புண்ணியமே. சுவாமி, தங்களுக்கு என்னுல் ஆக வேண்டிய காரியம் என்னவென்பதைக் கூறுங்கள்" என்று கேட்டார்.

"உன்னிடம் ஒன்று கேட்பேன். அதைத் தருவாயா?" என்ருர் வந்த அடியார்.

"தங்களுக்குச் சந்தேகமே வேண்டாம், சுவாமி. என்னிடம் இருப்பது எதுவானுலும் தங்களைப் போன்ற அடியார்களுக்கே முதலில் உரிமையாகும்" என்ருர் இயற்பகையார்.

"நன்ருக யோசித்துச் சொல்; நான் கேட்கப்போவது எனக்கு மிகவும் அத்யாவசியமானது ஆகும். இத்தனை காலமாக வரண்டு கிடக்கும் என் வாழ்வை வளமாக்க எண்ணம் கொண்டுள்ளேன். மறுக்காமல் தருவாயா?" என்று கேட்டார் அடியார்.

"சுவாமி, தங்களை வெகு நேரமாகக் காக்க வைத்துக் கொண்டிருக்கின்றேனே என்று தான் நான் வருத்தம் கொள்ளுகிறேன். தங்கள் தேவையை வந்த உடனேயே நிறைவேற்றி

வைத்திருக்க வேண்டுமே. இனியும் தாமதிக்காமல் தெரிவியுங்கள், சுவாமி!'' என்ருர் இயற்பகையார்.

''அப்பனே, இத்தனை காலமாக பிரம்மசரியத்தில் ஈடுபட்டிருந்த நான் இனி கிருஹஸ்தாச்ரமத்தில் இறங்கத் தீர்மானித்துள்ளேன். ஆகவே, நீ மிகவும் பிரியமுடன் நடத்தும் உன் மனைவியை எனக்குக் கொடு. இதுதான் நான் பெற்றுச் செல்ல வந்திருப்பதன் காரணம்'' என்ருர் அடியார்.

சிவனடியாரின் சொற்களைக் கேட்ட இயற்பகையார் திடுக்கிடுவதற்குப் பதிலாகக் குதூகலமே அடைந்தார்.

''சுவாமி, என்னைக் காப்பாற்றி விட்டீர்கள். என்னிடம் இல்லாத ஒரு பொருளைக் கேட்டுவிட்டால், தங்களுக்கு அதைக் கொடுக்க முடியாது போய்விடுமோ என்று தவித்துக் கொண்டிருந்தேன். என்னிடம் உள்ள பொருளையே கேட்டுள்ளீர்கள். என் பாக்கியமே பாக்கியம்'' என்று அவர் கால்களிலே விழுந்து வணங்கிஞர் இயற்பகையார்.

பின்னர் எழுந்து அவரைப் பார்த்து, ''இதோ வந்து விட்டேன்!'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்ருர்.

அங்கே இயற்பகையாரின் மனைவி அடியாருக்குத் தேவையான பொருளைக் கொண்டு வரும்படி கணவரிடமிருந்து உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார். முகம் மலர உள்ளே வந்த கணவரைக் கண்டதும் அருகில் வந்து ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''பெண்ணே, வீடு தேடி வந்திருக்கும் அடியாருக்கு உன்னை அளித்து விட்டேன்'' என்ருர் இயற்பகையார்.

திடுக்கிட்டாள் அந்த அம்மையார். ஆனுல் அடுத்த கணமே அவரது திகைப்பு நீங்கியது. கணவரின் கட்டளையைச் சிரமேற்கொள்வது அன்ருே கற்புடை மகளிற் கடமை!

கணவரை நமஸ்கரித்து எழுந்து நின்ருள்.

''சுவாமி, தங்கள் விருப்பம் என் சித்தம்'' என்ருள்.

இயற்பகையார் எதிரே இருந்த தம் மனைவியை நமஸ்கரித்தார்.

''அம்மணி, இந்த க்ஷணம் முதல் அடியாருக்குப் பணி புரிந்து வரவேண்டும்'' என்ருர்.

இயற்பகையாரின் மனைவி மறுமொழி பேசவில்லை. அறையை விட்டு வெளியே வந்து சிவனடியாரின் அருகில் வந்து நின்றார்.

பின்னால் வந்த இயற்பகையார் சிவனடியாரை நமஸ் கரித்து அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

"சுவாமி, தங்கள் மனத்துக்கு விருப்பமான பொருளை இதோ அர்ப்பணித்து விட்டேன். மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினார்.

சிவனடியார் இயற்பகையாரின் மனைவியை நிமிர்ந்து நோக்கினார். கணவர் செய்த காரியத்தில் அந்த அம்மையா ருக்கு விருப்பம் இல்லாதிருக்குமோ என்ற சந்தேகம்! ஆனால் அந்த அம்மையாரோ தலைகுனிந்தபடி தம் கணவர் பக்கம் திரும்பிப் பாராது அடியாரின் பக்கலிலே நின்றிருந்தார்.

"சுவாமி, தங்களுக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டி யிருக்கிறதா? தயக்கமின்றி சொல்லுங்கள்" என்று கேட்டார்.

"இயற்பகை, இனிமேல்தான் முக்கியமான காரியங்கள் இருக்கின்றன" என்றார் அடியார்.

"என்ன, சுவாமி?"

"நான் கேட்டேன்; நீயும் தடை சொல்லாமல் உன் மனைவி யைக் கொடுத்து விட்டாய். இனிமேல்தான் எனக்கு ஆபத்து இருக்கிறது. ஊராரும் உற்றார் உறவினரும் இதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே. என்னிடம் சண்டைக்கு வந்துவிட மாட் டார்களா? இந்த ஊர் எல்லையைத் தாண்டும் வரை எனக்கு ஒரு இடையூறும் வராமல் நீதான் பாதுகாக்க வேண்டும்" என்றார் சிவனடியார்.

இயற்பகையாருக்குத் தாம் இதைப்பற்றி நினைக்காதிருந்து விட்டோமே என்று தோன்றியபோது உள்ளம் குறுகுறுத்தது.

"சுவாமி, அடியேன் இதைப்பற்றி எண்ணி தங்களுக்குத் தகுந்த தைரியம் சொல்லியிருக்க வேண்டும். அவ்விதம் செய் யாதது பிழையே. தயவு செய்து என் பிழையைப் பொறுத் தருள வேண்டும். எவருக்கும் தாங்கள் பயப்படத் தேவை யில்லை. எவ்வித இடையூறுமில்லாமல் உங்கள் இருவரையும் இந்த ஊர் எல்லைக்கப்பாலும் பத்திரமாகக் கொண்டு போய்

சேர்ப்பது என் பொறுப்பு. புறப்படுங்கள், சுவாமி!'' என்று வணங்கினுர்.

உள்ளே சென்று உடை மாற்றிக்கொண்டு வந்தார் இயற்பகையார். கையிலே உருவிய கத்தியைப் பிடித்தபடி முன்னே சிவனடியாரைப் போகவிட்டு அவர் பின்னே அம்மை யாரைப் போகச் செய்து அவர்கள் இருவருக்கும் காவலாகத் தான் கடைசியாகச் சென்ருர்.

நாலைந்து தெருக்களைத்தான் அவர்கள் தாண்டியிருப்பார் கள். அதற்குள் விஷயம் காட்டுத் தீ போலப் பரவிவிட்டது. சிவனடியார் ஒருவர் வந்து இயற்பகையாரிடம் அவர் மனைவியை யாசித்ததையும் அவரும் தடை ஏதும் சொல்லாமல் அந்த அம்மையாரைச் சிவனடியாருக்கு அளித்து விட்டதையும் கேள் விப்பட்ட ஊரார் திடுக்கிட்டனர். அந்த அம்மையாரின் உறவி னர்களோ சீற்றம் கொண்டு ஓடி வந்தனர்.

'பிறன் மனைவியை ஒருவன் யாசிப்பதும் அதை அவன் ஏற்றுத் தன் மனைவியை யாசிப்பவனுக்கு அளிப்பதும் என்ன வழக்கம்? அவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டதா என்ன? வெளியிலே தலை நீட்ட முடியாத பழியை அல்லவா கொண்டு வந்துவிட்டான். இதை நாம் அனுமதிப்பதா?' என்று கோபங் கொண்டு ஓடி வந்தனர்.

கையில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு பெரும் கோபத்துடன் ஓடி வந்த அவர்களைக் கண்டதும் சிவ னடியார் நடுநடுங்கினுர்.

''அவர்களோ எல்லை மீறிய கோபத்தோடு ஓடி வருகிருர் களே, நான் என்ன செய்வேன்?'' என்று உடல் பதற இயற் பகையாரின் மனைவியைப் பார்த்துக் கூறினுர்.

''சுவாமி, பயப்பட வேண்டாம். இயற்பகையார் அவர்கள் அனைவரையும் தாம் ஒருவராகவே இருந்து தடுத்து நிறுத்தக் கூடியவர்'' என்ருர் அந்த அம்மையார்.

கம்பு கட்டைகளைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தவர்கள் கையில் உருவிய கத்தியுடன் நின்ற இயற்பகையைக் கண்ட தும் ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டனர்.

''இயற்பகை, இதென்ன காரியம்? எங்காவது இம்மாதிரி நடந்ததாகக் கேள்விப்பட்டதுண்டா? நம் குலப்பெருமை என்ன? யாரோ வந்து கேட்டானும், அதற்காக இம்மாதிரி செய்வதா?

பிறன் மனைவியை யாசிப்பதே கூடாத செய்கை! அவ்வாறு ஒருவன் யாசிக்கிறான் என்றால் அவன் சிவனடியார் அல்ல. அவன் காமுகனே!'' என்றனர் அவர்கள்.

''பெரியோர்களே, இது என் தனிப்பட்ட விஷயம் ஆகும். எனக்குச் சொந்தமான பொருளை எந்தவிதத்திலும் விநியோகிக்கும் உரிமை எனக்குண்டு. அதில் பிறர் தலையிட நான் அனுமதிக்க மாட்டேன்'' என்றார் இயற்பகையார்.

''இயற்பகை, இது பொருள் பற்றிய விவகாரம் அல்ல; எங்கள் பெண் அல்லவா இவள்!...'' என்றனர் அவர்கள்.

''இருக்கலாம் என்றைத்தினம் அவள் கைப்பிடித்து என் மாளிகைக்கு அழைத்து வந்தேனோ அன்று முதல் அவளுக்கும் உங்களுக்கும் தொடர்பு பெயரளவில்தான். ஆகவே என் வழியில் யாரும் குறுக்கிட வேண்டாம்'' என்றார் இயற்பகையார் உறுதியோடு.

அவரிடம் பேசுவதில் பயனில்லை என்பதை உணர்ந்தனர் அவர்கள். ஆகவே அம்மையாரைப் பார்த்து நல்ல வார்த்தைகளைச் சொன்னார்கள்.

''அவனுக்குத்தான் சித்தம் பேதலித்து விட்டது என்றால் உனக்குக் கூடவா அறிவு மழுங்கிவிட்டது? நம் குலம் என்ன, பெருமை என்ன? அத்தனையும் ஒரு நொடியில் தரைமட்டமாகும்படி நடந்து கொள்வதா? கட்டிய கணவன் இருக்கப் பிற புருஷனுடன் எவ்வாறு புறப்படத் துணிந்தாய்? பெரியவர்களாகிய நாங்கள் இல்லையா? எங்களை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? இந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு வீட்டுக்குப் போ!'' என்றனர்.

''நீங்கள் சொல்வது சரிதான். பெரியவர்களாகிய உங்களை ஒரு வார்த்தை கேட்க வேண்டியதுதான் முறை. ஆனால் இந்த விதி ஒரு பெண்ணுக்குத் திருமணம் ஆகும் வரைதான் அவள் விஷயத்தில் பொருந்துவதாகும். திருமணத்துக்குப் பிறகு அவள் கணவனே அவளுக்குச் சர்வமும் ஆவான். என் விஷயத்தில் நான் முறை தவறி நடந்ததாகத் தெரியவில்லை. என்னை இந்த அடியாருக்கு அளித்து விட்டதாகவும், இவரோடு புறப்பட்டுச் செல்லுமாறும் அவர் கூறியபடிதான் நான் புறப்பட்டு வந்துள்ளேன். இதில் நீங்கள் தலையிடுவதற்கு என்ன நியாயமிருக்கிறது?'' என்று கேட்டாள் அந்த அம்மையார்.

அந்தப் பெண்ணாவது தங்களுக்குச் சாதகமாக இரண்டொரு வார்த்தைகள் பேசுவாள் என்று அவர்கள் எதிர்பார்த்

தது வீணுகிவிட்டது. ஆகவே அவர்கள் கோபம் முழுவதும் சிவனடியார் மீதே திரும்பியது.

"அடே, காமுகா, உன் செய்கை நன்ருக இருக்கிறதா? பிறன் மனைவியை இச்சித்த உனக்கு அடியார் என்ற போர்வை வேரு? ஆண்டவனுக்குத்தான் இது அடுக்குமா? உனக்கு பெண் வேண்டுமென்ருல் ஊரிலே கல்யாணம் ஆகாத பெண்கள் எத்தனையோ இருக்கிருர்களே. அவர்களில் ஒருத்தியைக் கேட்கக்கூடாதா? திருமணம் ஆனவள்தாஞ உனக்கு அகப்பட்டாள்? நாட்டிலே இன்னமும் நீதி நசித்துவிடவில்லை. துராக்ருதமாக இவளைக் கொண்டு செல்வதை நாங்கள் பார்த்துக் கொண்டிருப்போமா?" என்று சீறினர்.

சிவனடியார் நடுநடுங்க இயற்பகையாரைப் பார்த்தார்.

"சுவாமி, நீங்கள் பயப்படாமல் போகலாம். இவர்கள் யாரும் உங்களை நெருங்கவிடாது, பார்த்துக்கொள்ளுகிறேன்" என்ருர் இயற்பகையார்.

அவருடைய வார்த்தைகள் எரிகிற நெருப்பிலே எண்ணெய் வார்ப்பது போல் அவர்களின் கோபத்தை மேலும் தூண்டி விட்டது.

"ஒஹோ, அப்படியா? இந்தத் தூர்த்தன் எவ்வாறு அவளை அழைத்துப் போவான், பார்க்கலாம்! காலை முறித்துப் போடுங்களடா!" என்று குதித்தான் ஒருவன்.

அவ்வளவுதான். வந்திருந்தவர்கள் அடியார் மீது பாய்ந்தனர். இயற்பகையாரோ கொஞ்சமும் கலங்கவில்லை. சிவனடியாரை யாரும் நெருங்கவிடாது சுழன்று சுழன்று அவர்களை எதிர்த்தார். அவர் கையிலிருந்த கத்தி இமைக்கும் நேரத்தில் இங்கு மங்கும் சுழன்று அருகில் நெருங்கியவர்களின் உயிரைக் குடித்தது. எஞ்சியவர்கள் பயந்து வந்த வழியே ஓடிவிட்டனர்.

இனி ஆபத்து இல்லை யென்பதைக் கண்டதும் இயற்பகையார் சிவனடியாரைப் பணிந்து வணங்கினுர்.

"சுவாமி, புறப்படுங்கள் போகலாம்" என்ருர்.

அவர்கள் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கினர்.

காவிரிப்பூம் பட்டினத்தின் எல்லையில் சாயாவனம் எனப்படும் திருச்சாய்காடு என்ற இடம் வந்ததும் சிவனடியார் மேலே செல்லாது நின்ருர்.

"இயற்பகை, இதுவரை நீ பாதுகாப்பாக வந்தது போதும். இனி நீ வீடு திரும்பலாம்" என்ருர்.

இயற்பகையார் அவரை வலம் வந்து நமஸ்கரித்து எழுந்தார்.

"சுவாமி, இனி தங்களிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காது ஊர் நோக்கி நடக்கத் தொடங்கினுர்.

ஆண்டவன் இனியும் அவரைச் சோதிக்க விரும்பவில்லே.

கொண்ட மனைவியை விட்டுவிட்டுத் திம்பிப் பார்க்காது தூய உள்ளத்தோடு செல்லும் அவருக்குக் கடாக்ஷிக்க விரும்பினுர்.

இயற்பகையார் சிறிது தூரமே வந்திருப்பார். சிவனடியாரின் ஓலம் கேட்டது.

"இயற்பகை, அபயம், அபயம்!" என்றுஅலறினுர். சிவனடியாரின் குரலேக் கேட்டதும் இயற்பகையார் துள்ளிக் குதித்தார்.

"சுவாமி, கவலே வேண்டாம் இன்னும் யாராவது வந்து விட்டார்களா? அவர்களேயும் யமபட்டணத்துக்கு அனுப்பி வைக்கிறேன்!" என்று ஓடி வந்தார்.

அங்கே சிவனடியாரைக் காணவில்லே. அவர் மனேவி மட்டுமே நின்று கொண்டிருந்தாள்.

"பெண்ணே, உன்னேடு வந்த அடியார் எங்கே?" என்று கேட்டார்.

அதேசமயம் "இயற்பகை!..." என்ற குரல் வானிலே கேட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார் இயற்பகையார்.

ரிஷபத்தின் மீது ஆரோகணித்தவராய் தேவியை இடப் பாகத்தில் கொண்டு எம்பெருமான் காட்சிதந்தார்.

இயற்பகையாரின் மேனி சிலிர்த்தது. நெஞ்சம் பக்தியால் விம்மியது. மகிழ்ச்சியால் கண்கள் நீரைச் சொரிய பூமியிலே விழுந்து தொழுது நின்ருர்.

"இயற்பகை, உன் உள்ளத்தைச் சோதிக்கவே நாம் வந்தோம். நீயும் உன் மனைவியும் என்றும் நம்மோடு இருக்கலாம்" என்று அருளி மறைந்தார் ஈசன்.

இயற்பகையாரும் அவர் மனைவியாரும் இறைவனின் ஜோதியிலே மறைந்தனர். அவரால் வெட்டுண்டு இறந்தவர் களும் இறைவனின் திருவடி நிழலை அடைந்தனர்.

அவர் பெருமையை ஊரும் உலகமும் கொண்டாடின.

14. நிசியிலே வந்த விருந்து

பாண்டிய நாட்டிலே பரமக்குடிக்குப் பக்கத்தே இளை யான் குடி என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே வேளா ளர் குலத்திலே பிறந்தவர் மாறனர் என்பவர்.

கொஞ்சம் வசதியான குடும்பம்தான். நிலபுலன்கள் இருந் தன. மாறனர் நல்ல உழைப்பாளி. ஆகவே விளைச்சலும் நல்ல ஆதாயத்தைக் கொடுத்து வந்தது.

தில்லைச் சிதம்பரத்திலாடும் நடராஜ பெருமானிடம் அள வில்லாப் பக்தி கொண்டவர். அனுதினமும் இறைவனைப் பக்தி யோடு பூசித்து வருவதுடன் அதிதிகளுக்கு உணவு அளிப்ப தையும் விடாது நடத்தி வந்தார். சிவனடியார்களைக் கண் டால் அவர்களை மகிழ்ச்சியோடு வீட்டுக்கு அழைத்து வந்து உபசரித்து அறுசுவை உணவைப் பரிமாறுவார். அவர்கள் உள்ளத் திருப்தியைக் கண்டு மனம் மகிழ்வார்.

இவ்விதம் மாறனர் அடியார்களிடம் அன்பு பூண்டு அவர் களுக்கு அன்னம் இட்டு வருவது பற்றி இறைவன் மிகுந்த சந்தோஷம் கொண்டார். அவருக்குத் தமது திருக்கடாக்ஷம் கிட்டச் செய்ய வேண்டுமென்று விரும்பினர் ஈசன்.

இறைவனின் திருஅருட்பிரசாதத்துக்குப் பாத்திரராக்க மாறனரை முதலில் அந்நிலைக்குக் கொண்டுவர வேண்டாமா?

சிவபெருமானின் திருவுள்ளப்படி காரியங்கள் நடைபெற ஆரம்பித்தன.

வழக்கத்துக்கு மாறாக விளைச்சல் குறைந்தது. விளைச்சல் குறைந்ததற்காக மாறனர் அதிதிகளுக்கு அன்னமிடுவதை நிறுத்த வில்லை. சிவனடியார்களை எங்கு கண்டாலும் தம் இல்லத்துக்கு அழைத்து வந்து அன்னமிடுவார்.

மாறனரின் செல்வம் குறையத் தொடங்கியது. அடுத்து வந்த மகசூலும் மாறனருக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது. இத்தனைக்கும் அவர் பாடுபடுவதில் கொஞ்சமும் குறைய வில்லை. ஏனே பயிரில் பெரும்பகுதி சாவியாகி விட்டது.

மாறனாருக்குச் சிரமம் தோன்றத் தொடங்கியது. அன்றுடச் சாப்பாட்டுக்கே பணம் கொடுத்து பொருள்களை வாங்கி வரவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நிலையிலும் அவர் தம் பணியை நிறுத்தவில்லை. தொடர்ந்து நடத்தி வந்தார். கையில் பணமிருந்தால் சாமான்கள் வாங்கிவந்து விடுவார். பண மில்லையோ வீட்டிலுள்ள பாத்திரம் பண்டங்களை எடுத்துச் சென்று விற்றுப் பணம் வாங்கிச் சாமான்களைக் கொண்டு வாருவார்.

இந்தப்படியாகச் சில நாட்கள் சென்றன. மேலும் அவர் நிலைமை மோசமாகியது. நில புலன்களை அடகு வைத்து நாட்களைக் கடத்தினார். அதுவும் தீர்ந்துவிட்டது. அண்டை அயலார் வீடுகளில் கைமாற்று வாங்கினார்.

இவ்வளவுக்கும் அவர் மனைவியார் தம் கணவரின் திருப் பணியிலே மலர்ந்த முகத்தோடு ஈடுபட்டு உதவி செய்து வந் தார். தங்களுக்கே சாப்பாட்டுக்கு இல்லாத இந்த நிலையிலும் அதிதிகளுக்கு அறுசுவை உண்டி எதற்கு என ஒரு நாளும் முகம் சுளித்தது கிடையாது. அவருக்கும் ஒருபடி மேலாக அடியார்களுக்குச் சந்தோஷத்தோடு அன்னமிடுவாள்.

இரண்டு நாட்களாகப் பெருமழை கொட்டியது. மாற னார் வெளியே செல்லமுடியாது வீட்டிலேயே தங்கும்படி ஆகி விட்டது. வீட்டிலிருந்த உணவுப் பொருள்கள் முதல் நாளே தீர்ந்து விட்டன. அன்றைத் தினம் பகலிலிருந்து இருவரும் பட்டினி. 'இன்றையப் பொழுதைப் பகவான் இப்படிக் கழிக்க விதித்திருகிறான்' என்ற மனச் சாந்தியோடு தில்லை அம்பல வாணனைத் தியானித்தபடி படுத்திருந்தார் மாறனார்.

பகல் பொழுதும் கழிந்து இரவும் வந்தது. வெளியே மழை விட்டபாடில்லை. சிறிது நேரத்துக்கொருதரம் மின்னல் கண்ணைப் பறித்தது. அதைத் தொடர்ந்து 'கடபுடா'வென்ற இடியோசை. வெளியே காலெடுத்து வைக்க யாரும் அஞ்சக் கூடிய சூழ்நிலை.

மாறனாருக்குத் தூக்கம் வரவில்லை. எம்பெருமானின் திருநாமங்களை உச்சரித்தபடி கூடத்திலே படுத்திருந்தார். பக்கத்திலே அவர் மனைவியாரும் படுத்திருந்தார்.

பொழுது விடிந்ததும் எங்காவது சென்று பார்க்க வேண்டும் என்ற நினைவிலே படுத்திருந்த மாறனார் வெளியே ஏதோ சப்தம் கேட்டது போலத் தோன்றவே திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கவனித்தார். மறுபடியும் அந்தச்

சப்தம் கேட்டது. யாரோ வெளியே கதவைத் தட்டுவது போலிருந்தது. அந்த நேரத்தில் அவரைத் தேடி யார் வந்திருக்கப்போகிருர்கள்?

பக்கத்திலே படுத்திருந்த மனைவியை எழுப்பினுர்.

''யாரோ கதவைத் தட்டுகிற சப்தம் கேட்கிறது. நான் போய் பார்த்து வருகிறேன். எழுந்திரு'' என்று சொல்லி விட்டு மாடத்திலே இருந்த அகல் விளக்கின் திரியைத் தூண்டி விட்டுப் பெரிதாக எரியச் செய்து கையில் எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தார்.

கதவைத் திறந்தபோது திண்ணையிலே யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

கதவைத் திறந்து கொண்டு மாறனுர் வெளிப்பட்டதும் அந்த மனிதர் எழுந்து நின்று ''சிவாயநம!'' என்ருர்.

அந்தச் சொல் மாறனுரின் காதில் விழுந்ததும் அவர் உடல் முழுவதும் விவரிக்க இயலாத ஒரு வித உணர்ச்சி பரவியது. திண்ணையிலே விளக்கை வைத்துவிட்டு இரு கைகளையும் கூப்பி அவரது பாதங்களில் விழுந்து வணங்கினுர்.

''சுவாமி, இந்த ஏழை வீடு தேடி வந்ததற்கு நான் என்ன பாக்கியம் செய்திருக்கிறேனே?'' என்று சொல்லி மகிழ்ந்தவராய் அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

மழையில் தொப்பலாக நனைந்திருந்ததால் வந்திருப்பவரின் உடல் நடுங்குவது அவரது பாதங்களை மாறனுர் தொட்டபோது தெரிந்தது.

''சுவாமி, குளிரில் உடல் நடுங்குகிறதே. உள்ளே வாருங்கள் வேறு துணி தருகிறேன்'' என்று அவரை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தார். கொடியிலே காய்ந்திருந்த துணிகள் இரண்டை எடுத்து அவரிடம் கொடுத்து, தலையை ஈரம் போகத் துவட்டிக் கொண்டு வேறு துணியை அணிந்து கொள்ளுமாறு சொன்னுர்.

ஈரத் துணிகளை முற்றத்துக் குரட்டிலே வைத்துவிட்டு கூடத்துக்கு வந்த அடியாரை ஆசனம் ஒன்று போட்டு அதில் அமருமாறு கேட்டுக் கொண்டார்.

''சுவாமி, தங்களுக்கு எந்த ஊர்? இந்த அகாலத்திலே என்னைத் தேடி வந்திருக்கிறீர்களே; நான் செய்ய வேண்டிய உதவி ஏதாகிலும் இருந்தால் சொல்லுங்கள்'' என்று பணிவோடு கேட்டார் மாறனார்.

''ஐயா, நானோர் தேசாந்திரி. ஊர் ஊராகச் சென்று அங்கங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பகவானைத் தரிசித்துப் போவதுண்டு. அப்பப்பா, என்ன மழை! வழி சரியில்லை; சேறும் சகதியும் என் பிரயாணத்தைத் திட்டப்படி நடத்த முடியாது செய்துவிட்டன. இந்த ஊரை நெருங்கும்போது அஸ்தமித்து வெகு நேரமாகி விட்டது. காலையில் சாப்பிட்டதுதான். அப்புறம் தண்ணீர்கூட அருந்தவில்லை. பசியோ தாங்க முடியவில்லை. இரவு இங்கே தங்கி பொழுது விடிந்ததும் புறப்படலாமென்று நினைத்தேன். இவ்வூரிலே ஆகாரத்துக்கு ஏதாவது வழியிருக்குமா என்று விசாரித்தபோது உங்கள் வீட்டைக் காட்டினார்கள்'' என்றார் வந்த அடியார்.

மாறனார் முகம் மலர்ந்தது. உள்ளே ஓடினார். கதவருகிலே நின்றிருந்த மனைவியிடம், ''வந்திருப்பவர் சிவனடியார். பசியோடு வந்திருக்கிறார். அவருக்கு அன்னம் அளிக்க வேண்டும்'' என்று குதூகலத்தோடு கூறினார்.

வீடு தேடி வந்த அடியாருக்கு, அதுவும் அகாலவேளையில், அன்னமிடுவது பற்றி அந்த அம்மையாருக்கும் மிக்க மகிழ்ச்சிதான். இருந்தாலும், காலையிலிருந்தே அவர்கள் பட்டினி கிடக்கிறார்களே!

மனைவி மறுமொழி பேசாது நிற்பது கண்டு மாறனாருக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் தோள்களைப் பிடித்து உலுக்கினார்.

''என்ன, தூங்கி விட்டாயா? நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன், நீ பேசாதிருக்கிறாயே!'' என்று கேட்டார்.

''நான் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் சொன்ன வார்த்தைகள் என் காதுகளில் விழுந்தன. காலையிலிருந்து நாமே பட்டினி கிடக்கிறோமே; அடியாருக்கு என்ன செய்வது?'' என்று தாழ்ந்த குரலில் கூறினாள்.

அப்போதுதான் மாறனாருக்குத் தம் நிலைமை நினைவுக்கு வந்தது. சிவனடியாரைப் பார்த்த சந்தோஷத்தில் தாம் காலையிலிருந்து பட்டினி கிடப்பதை அவர் மறந்து விட்டார்.

''இப்போது என்ன செய்வது? வந்திருப்பவரோ மிகவும் பசியோடு இருக்கிறார். பக்கத்து வீடுகளில் ஏதாவது கேட்டுப்

பெறலாமென்றாலும் அகாலவேளையில் யாரும் கதவைத் திறக்க மாட்டார்களே!''

மாறனார் தவியாய் தவித்தார். அந்த அம்மையார் அவரை அப்பால் அழைத்துச் சென்றார்.

''நேற்று முன்தான் வயலிலே விதைத்ததாகச் சொன்னீர்களே. இந்த மழையிலே நெல் முழுவதும் முளைவிட்டுப் போய் இருக்கும். வயலுக்குப் போய் அதைக் கூடையில் வாரிக் கொண்டு வரமுடியுமா? அதை வறுத்து உரலில் இடித்துச் சமைத்துப் போடலாம்!''

அந்த நேரத்தில் அதையாவது செய்ய முடிகிறதே என்று சந்தோஷம் கொண்டார் மாறனார். மூலையிலே வைத்திருந்த கூடையை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறமாகப் புறப்பட்டார்.

வெளியே பயங்கரமான இருள் சூழ்ந்திருந்தது. மழையோ வானமே பொத்துக் கொண்டாற்போல் பெய்து கொண்டிருந்தது. கண்ணைப் பறிக்கும் மின்னலையோ, காது செவிடுபடும் படியாக இடிக்கும் இடிகளையோ அவர் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. அவர் எண்ணம் முழுவதும் அடியாரின் பசியைப் போக்க வேண்டும் என்ற லட்சியத்திலேயே குறியாக இருந்தது.

வயலை அடைந்தார். மழைத் தண்ணீர் வரப்பின் நுனி வரையில் நிரம்பியிருந்தது. ஆஹா! அந்த நேரத்துக்கு அவர் வந்தது எவ்வளவு நல்லதாகி விட்டது. இன்னும் சிறிது தாமதித்திருந்தால் மழைத் தண்ணீர் வழிந்து ஓடியிருக்குமே! அதனோடு நீரிலே மிதந்து கொண்டிருந்த முளைவிட்ட நெல் முழுவதும் போயிருக்குமே!

வானத்திலே பளிச்சிடும் மின்னலின் பிரகாசத்திலே நெல் முளைகளை வாரிக் கூடையில் நிரப்பிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வீடு திரும்பினார். மனைவியிடம் கூடையிலிருந்த முளை நெல்லைக் கொடுத்துத் தாமதமின்றி அமுது செய்யும்படி சொன்னார்.

''சுவாமி, அடுப்பிற்கு விறகு இல்லையே, இப்போது என்ன செய்வது?'' என்று அந்த அம்மையார் பணிவோடு கேட்டார்.

''அடடா, இப்போது சொல்கிறாயே. முதலிலே சொல்லியிருக்க வேண்டாமா?'' என்று சிறிது கோபத்தோடு கேட்டார் மாறனார்.

''முதலிலேயே சொல்லியிருக்கலாம். ஆனால் எதுவுமே இல்லாதிருக்க என்ன செய்வதென்று நீங்கள் பேசாதிருந்து விடுவீர்களோ என்று பயந்தேன்'' என்றாள் அவள்.

மாறனாரின் உள்ளம் நெகிழ்ந்தது. தம்மையும் விட அவளுக்குத் தான் அடியாருக்கு உணவு அளிப்பதில் எத்தனை அக்கறை!

''இதோ கொண்டு வருகிறேன். மற்ற ஏற்பாடுகளைக் கவனி'' என்று சொல்லிவிட்டுக் கூடத்துக்கு வந்தார்.

சிவனடியார் அவரைப் பார்த்தார். அந்தப் பார்வையில் பசியின் வேகம் நன்கு தெரிந்தது.

''சுவாமி, கொஞ்சம் பொறுங்கள். ஆகாரம் தயாராகிறது'' என்று சொல்லிவிட்டுக் கொல்லைப்புறம் சென்றார்.

கூரையைப் பிய்த்துத் தள்ளினார். அங்கிருந்த கட்டைகளைப் பிடுங்கிக் கோடாலியால் பிளந்து எடுத்துக் கொண்டு வந்தார். இதற்குள்ளாக அவர் மனைவி நெல்லைச் சுத்தம் செய்து தயாராக வைத்திருந்தாள். கட்டை வந்ததும் அடுப்பை மூட்டி நெல்லை வறுத்தாள். பின்னர் உரலிலே போட்டுக் குத்தினாள்; அதை முறத்தினால் புடைத்து அரிசியைத் தனியாக்கிக் கழுவி அடுப்பிலே கொதித்துக் கொண்டிருக்கும் உலை நீரில் போட்டாள். விரைவிலேயே சாதம் கொதித்து வந்தது. மாறனார் அந்த அறையை விட்டுக் கொஞ்சமும் நகரவில்லை. மனைவியின் வேலைகளில் தாமும் பங்கு கொண்டு காரியங்களை எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவுக்கு உதவினார்.

சாதம் தயாரானதும் அந்த அம்மாள் கறிக்கு என்ன செய்வது என்று கையைப் பிசைந்தார் மாறனார் கொல்லைப்புறம் சென்று முளைத்து இரண்டொரு இலைகளை விட்டிருந்த கீரையை இருளிலே கையால் தடவி வேரோடு பறித்து எடுத்து வந்தார். அதை ஆய்ந்து தண்டு வேருகக் கிள்ளி அந்த அம்மாள் குழம்பும் கீரையும் தயாரித்தார்

மாறனாருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. எப்படியோ நிலைமையைச் சமாளித்தாகி விட்டதல்லவா! மனைவி பின் தொடர கூடத்துக்கு வந்தார்.

சிவனடியார் நேரமாகும் என்பதை எதிர்பார்த்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவரை நெருங்கிய மாறனார், ''சுவாமி, அமுது தயாராகிவிட்டது. எழுந்திருங்கள், சாப்பிடலாம்'' என்று கூப்பிட்டார்.

தூக்கம் கலைந்த அடியார் எழுந்தார். அடுத்த க்ஷணம் அவரை அங்கே காணவில்லை. அங்கே கண்ணைப் பறிக்கும் ஜோதி ஒன்று தெரிந்தது.

மாறனாருக்கும் அவர் மனைவிக்கும் ஒன்றுமே புரியவில்லை. திகைத்துப் போய் நிற்கும்போது வானிலே ஒரு குரல் எழுந்தது.

"அன்பனே, அடியார்களுக்கு அன்னமிடும் திருப்பணியை என்றும் எந்த நிலையிலும் செய்துகொண்டு வரும் உன்னை ஆட்கொள்ளவே நாம் இவ்வாறு வந்தோம். நீயும் உன் மனைவியும் குபேரன் ஏவல் செய்ய என்றும் எமது அருகில் இருப்பீராக!"

அந்த ஜோதியிலே மாறனாரும் அவர் மனைவியாரும் தாங்கள் தொழுது வணங்கும் எம்பெருமானைக் கண்டனர்.

"இறைவா, இந்த ஏழையிடம் நீ கொண்டிருக்கும் கருணையை என்னவென்று உரைப்பது? எத்தனையோ தேவர்களும் முனிவர்களும் உன்னைத் தரிசிக்க அனேக வருடங்கள் காத்துக் கிடக்க, என் மீது அன்பு கொண்டு தரிசனம் கொடுத்தருளிய உன் பெருமையை நான் எவ்வாறு போற்றுவேன்?" என்று கண்களில் நீர் சொரிய விழுந்து வணங்கினார் மாறனார்.

மனைவியாருடன் அதே கோலத்தில் அவர் ஜோதியில் கலந்து இறைவனின் திருவடி நிழலை அடைந்து குபேரன் ஏவல் செய்யும் பாக்கியத்தைப் பெற்றனர்.

15. ஆகமநூலைக் காட்டி ஆவி பறித்தவன்

நடு நாடு எனப்படும் சேதி நாட்டின் தலைநகரம் திருக்கோவலூர் ஆகும். அங்கிருந்து நீதி நெறி தவறாது ஆட்சி செய்து வந்தார் மெய்பொருள் எனப்படும் அரசர். அவருக்குச் சிவபெருமானிடம் அதிக பக்தி இருந்தது. பொன்னம்பலக் கூத்தனிடம் அவருக்கு மிகுந்த ஈடுபாடு. அது மட்டுமல்ல; சிவனடியார் யாராக இருந்தாலும் அவரிடம் அன்பு காட்டத் தவறமாட்டார். இறைவனை அவர்கள் ரூபத்தில் பிரத்தியக்ஷமாகக் காண்பதாகப் பாவித்துக் கௌரவிப்பார்.

மெய்ப்பொருளாருடைய பேரும் புகழும் நாற்புறமும் பரவின. சிவனடியார்களிடம் அவர் கொண்டிருந்த பக்தி நிறைந்த அன்பை எல்லோரும் கொண்டாடினார்கள்.

முத்தநாதன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்குச் சேதி நாட்டின் மீது ஒரு கண். அந்த நாட்டை எப்படியாவது கைப்பற்றித் தன் நாட்டோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை. ஆகவே, நான்குவிதப் படைகளையும் திரட்டிக்கொண்டு மெய்ப்பொருளாரோடு சண்டைக்கு வந்தான்.

மெய்ப்பொருள் அதற்காகப் பயப்படவில்லை. எதிரி தம்மை விட அதிக பலத்தோடு சண்டைக்கு வந்திருந்தாலும் தாம் பணிந்து தொழும் தில்லை நடராஜப் பெருமான் தம்மைக் கை விட்டுவிட மாட்டார் என்று நம்பினார். தம் படைகளையும் திரட்டிக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டார்.

இறைவன் திரு அருள் கிட்டப்பெற்ற மெய்ப்பொருளை முத்தநாதனால் சண்டையில் வெல்ல முடியவில்லை. புறங்காட்டி ஓட வேண்டியதாகியது. இருப்பினும் அவன் தன் நம்பிக்கையில் தளர்ந்துவிடவில்லை. அடுத்தடுத்து பெரும்படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து எதிர்த்தான். பலமுறை சண்டையிட்டும் அவன் எண்ணம் மட்டும் ஈடேறவில்லை. படைகள் அழிந்ததுதான் அவன் கண்ட பலன்.

நேரிடையாக யுத்தம் செய்து மெய்ப்பொருளாரை வெல்ல முடியாதென்பதை உணர்ந்தான் முத்தநாதன். அவரை வஞ்சகத்தினால்தான் வெல்லலாம் என்ற முடிவுக்கு வந்தான் அவன். சேதி நாட்டைத் தான் கைப்பற்ற முடியவில்லை. அந்நாட்டு அரசனால் பலமுறை போரில் தோல்வியுண்டு ஓடும்படி நேர்ந்தற்குப் பழிவாங்க மெய்ப்பொருளைக் கொன்று விடுவது என்று தீர்மானித்தான்.

ஆனால் அந்தத் தீர்மானத்தை எவ்வாறு நிறைவேற்றுவது?

மெய்ப்பொருளைப் பற்றி முத்தநாதன் ஒரு விஷயம் கேள்விப்பட்டிருந்தான். சிவனடியார்களிடம் மெய்ப்பொருளுக்கு அத்யந்த அன்பு உண்டு என்பதை அவன் அறிந்திருந்தான். ஆகவே, அந்த ஒரு வழியைக் கொண்டே தன் வஞ்சக எண்ணத்தை நிறைவேற்ற முற்பட்டான்.

உடலெங்கும் திருநீற்றை வாரிப் பூசிக்கொண்டான். தலையிலே ஜடைமுடியைக் கட்டிக்கொண்டான். கைகளிலும் கழுத்திலும் ருத்திராக்ஷ மாலைகள் அணி செய்தன. கொடுவாளை எடுத்துப் பட்டுத் துணியிலே வைத்துச் சுற்றிப் புத்தகம் போலக் கட்டி எடுத்துக் கொண்டான். யாருக்கும்

தெரியாமல் சேதி நாட்டு எல்லையைத் தாண்டி திருக்கோவ லூரை அடைந்தான்.

தலைநகரின் வீதிகள் வழியே சென்று மெய்ப்பொருளின் அரண்மனையை அடைந்தான் முத்தநாதன். எரிவதால் திரியின் நுனி கருமையாக இருந்தாலும் பிரகாசம் அதை மறைத்துக் காட்டுவது போல உள்ளத்திலே முத்தநாதன் கொண்டிருந்த வஞ்சக எண்ணத்தை அவன் கொண்டிருந்த சிவனடியார் வேடம் மறைத்துவிட்டது.

அரண்மனைக் காவலர்கள் வந்திருப்பது யாரோ சிவனடி யார் என்று எண்ணிவிட்டனர். முத்தநாதனைத் தடுக்கவில்லை. மகிழ்ச்சியோடு வரவேற்று அழைத்துச் சென்று அரசரிருப் பிடம் கொண்டுபோய் விட்டனர்.

அப்போதுதான் அரசன் ஆகாரத்தை முடித்துக்கொண்டு தேவியுடன் தம் அறையில் தனித்திருந்தார். அறை வாயிலுக்கு வெளியே அரசரின் அந்தரங்கப் பணியாள் தத்தன் காவலுக்கு இருந்தான்.

அரசரைத் தேடி வந்திருக்கும் சிவனடியாரைக் கண்டதும் தத்தன் திடுக்கிட்டான். அவரிடம் அவனுக்குச் சந்தேகம் ஏற் பட்டது. ஒரு குறிப்பிட்ட வகையாகத் திருநீறு பூசாமல் உடலெங்கும் பூசிக்கொண்டிருப்பது இதற்கு முன்பு திருநீறு பூசி அவருக்குப் பழக்கமில்லை என்பதை எடுத்துக் காட்டியது. மேலும் அந்தக் கண்களில் அடியார்களிடம் காணப்படும் அன்பும் அமைதியும் தோன்றவில்லையே. கடுகடுப்பும் குழப்ப மும் அல்லவா அவர் பார்வையில் மிகுந்திருந்தது.

தத்தன் சிவனடியார் விஷயத்தில் சந்தேகம் கொண்டாலும் அது சரிதானா என்பதை ஊர்ஜிதம் கொள்ளாத வரையில் தன் சந்தேகத்தை வெளியிட விரும்பவில்லை. அரசருக்கு மெல்ல எச்சரிக்க விரும்பினான். ஆகவே, அதுவரை சிவனடியார் அரசரைச் சந்திக்காதிருப்பதே நல்லது என்று நினைத்தான்.

அரசர் தேவியுடன் தனித்திருக்கும் அறை வாயிற்படியில் வந்து நின்ற சிவனடியாரை நெருங்கி வணங்கினான் தத்தன்.

"சுவாமி, தங்களை அரசர் வரவேற்பதற்கும், தாங்கள் அவருக்கு அருள் புரிவதற்கும் நேரம் சரியில்லாதிருக்கிறது. அரசர் தேவியாருடன் தனித்திருக்கிறார். கொஞ்சம் காத்திருக்க வேண்டும். அரசர் எழுந்ததும் நான் தங்கள் வருகைபற்றி அவருக்குத் தெரியப்படுத்துகிறேன்" என்றான் பணிவோடு.

அரசன் தனித்திருக்கும் வேளையைத் தானே முத்துநாதன் எதிர்பார்த்தது! ஆகவே, தத்தனை அலட்சியமாக நோக்கினான்

"அடே, அரசருக்குத் தருமத்தைக் கூற நான் வந்திருக்கிறேன். நீ இங்கேயே நில்!" என்று கடிந்து கூறிவிட்டு அறையினுள் நுழைந்தான்.

அரசர் மெய்ப்பொருள் மஞ்சத்திலே சயனித்திருந்தார். பக்கத்திலே அவர் தேவி அமர்ந்து கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

சிவனடியாரைக் கண்டதும் தேவி திடுக்கிட்டு எழுந்தாள். பக்கத்திலே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த கணவரை எழுப்பி, "சுவாமி, சிவனடியார் வந்திருக்கிறார்!" என்றாள்.

எழுந்து உட்கார்ந்த அரசர் எதிரே நிற்கும் முத்தநாதனைப் பார்த்தார். இறைவனே தம் முன்பு வந்து நிற்பதாகத் தோன்றியது அவருக்கு. இருகரங்களையும் கூப்பியவாறு எழுந்தார்.

"சுவாமி, தங்கள் வருகையால் என் உள்ளம் விவரிக்க இயலாத மகிழ்ச்சியை அடைகிறது. இப்படி அமருங்கள்" என்று ஆசனத்தைக் காட்டினார்.

முத்தநாதன் அங்கே போடப்பட்டிருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்தான்.

அரசர் அவனருகில் வந்து, "எம்பெருமானின் அன்புக்குப் பாத்திரமானவரே, என்னைத் தேடி தாங்கள் வந்திருப்பது பற்றித் தெரிவியுங்கள். நான் முடித்துத் தரவேணடிய காரியம் இருந்தால் சொல்லுங்கள்" என்றார்.

"அரசே, உம் இறைவன் முன்னர் திருவாய்மலர்ந்தருளிய ஆகம நூல் ஒன்று என்னிடம் இருக்கிறது. இப்பூமண்டலத்திலே வேறு எந்த இடத்திலும் அந்நூல் வழக்கில் இல்லை. அதைப் படித்து உமக்கு உபதேசிக்க எண்ணம் கொண்டு வந்தேன்" என்றான் முத்தநாதன்.

அரசரின் உள்ளம் குதூகலத்தால் நிறைந்தது. சிரம் கூப்பி அடியார் வேடத்தில் இருக்கும் முத்தநாதனை வணங்கினார்.

"சுவாமி, அடியேன் செய்த பாக்கியம் தான் என்ன! இப்போதே தங்கள் திருவாக்கால் அவ்வாகமத்தை எனக்கு உபதேசித்தருளுங்கள்" என்று வேண்டினார்.

முத்தநாதன் அருகிலிருந்த தேவியைப் பார்த்தான். அவள் அங்கிருந்தால் அவன் வந்த காரியம் எவ்வாறு பூர்த்தியாகும்?

"வேந்தே, நாம் படிக்கப் போவது சிவாகம நூல். இங்கு அரசியார் இருப்பது சரியல்ல; நாம் இருவருமே தனித்து இருப்பது தான் உசிதம்" என்றார்.

"ஆம், சுவாமி, தாங்கள் கூறுவது சரியே!" என்று கூறிய மெய்ப்பொருள் அவ்வஞ்சகனை உணராது மனைவியைப் பார்த்து "தேவி, நீ இங்கிருக்க வேண்டாம். அந்தப்புரம் போய் இரு" என்றார்.

தேவியும் அங்கிருந்து வெளிப்பட்டு அந்தப்புரம் நோக்கிச் சென்றாள்.

மெய்ப்பொருள் எழுந்து சிவனடியாரை வணங்கி அவர் பக்கத்தில் மண்டியிட்டு அமர்ந்தார்.

"சுவாமி, உபதேசத்தை ஆரம்பியுங்கள்" என்றார் அரசர்.

தான் கொண்டு வந்திருந்த துணிக்கட்டை மடிமீது வைத்துப் பிரித்த முத்தநாதன் அதனுள் வைத்திருந்த கொடுவாளைக் கையிலெடுத்து ஓங்கினான்.

அறைவாயிலில் உட்கார்ந்திருந்த தத்தனின் மனம் ஏனோ குழம்பியது. சிவனடியாராக வந்திருப்பது உண்மையில் அடியாராக இருக்க முடியாது என்று மட்டும் அவனுக்குத் தெரிந்தது. வந்திருப்பது யார் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அரசருக்கு எச்சரிக்கை செய்த பின்னரே அவரைச் சந்திக்கச் செய்யவேண்டும் என்ற அவன் முயற்சி வெற்றிபெறவில்லை. சிவனடியார் அவனை அதட்டி விட்டு உள்ளே போய்விட்டார். அறையினுள் தேவியார் இருப்பதால் ஓரளவு அவன் நிம்மதி கொண்டான்.

ஆனால் சற்றைக் கெல்லாம் தேவியாரும் வெளிப்பட்டுச் சென்று விடவே அவன் சந்தேகம் வலுக்கத் தொடங்கியது. அரசருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடக்கூடாதே என்று அவன் நெஞ்சம் துடித்தது. அவனால் குமைந்துகொண்டு அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லை. மெதுவாக அறை வாயிற்படியை நெருங்கி உள்ளே எட்டிப் பார்த்தான். அடுத்த க்ஷணம் "அடே வஞ்சகா!" என்று அலறியபடி உள்ளே பாய்ந்தான்.

தத்தன் பயந்தது நிறைவேறிவிட்டது!

கழுத்தின் பின்புறத்திலே பாய்ந்த கொடுவாளுடன் நாற்புறமும் இரத்தம் பீறிட்டு ஓடத்தரையில் சாயவிருந்த அரசரை ஒரு கையால் தாங்கிப் பிடித்தவனுய் உடைவாளை உருவி ஓங்கியபடி சிவனடியார் வேடத்தில் அமர்ந்திருக்கும் முத்தநாதனை வெட்டப் போனுன்.

நடுங்கும் கரங்களால் தடுக்க முயன்றவராய் மெய்ப்பொருள் "தத்தா!..." என்று அழைத்தார்.

தத்தனின் ஓங்கிய கை நின்றுவிட்டது.

"தாத்தா, இவர் நம்மைச் சேர்ந்தவர். பதட்டத்தில் எதுவும் பாதகமாகச் செய்து விடாதே!..." என்ருர்.

தத்தன் கத்தியை உறையிலிட்டான். பின்னர் மன்னரை மெதுவாகத் தூக்கி மஞ்சத்தில் படுக்க வைத்தான்.

"அரசே, இப்படி நேர்ந்துவிட்டதே. நான் என்ன செய்வது?" என்று கண்ணீர் உகுத்தான்.

"தத்தா, இவர் யாராக இருப்பினும் சரி. இவர் கொண்டுள்ள வேடத்துக்கு நாம் கௌரவம் அளிக்க வேண்டுவது கடமை. இங்கு நடந்த விஷயத்தைக் கேள்விப்பட்டால் இவரை உயிரோடு செல்ல விடமாட்டார்கள். ஆகவே நமது ஆணையை அறிவித்து இவருக்கு எவ்வித ஆபத்துமின்றி அழைத்துச் சென்று நகரின் எல்லையைக் கடந்து விட்டு விட்டு வந்து தெரிவிக்கவேண்டும்" என்ருர்.

தத்தன் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருக்கும் அரசரின் உத்தரவைப் பணிந்து ஏற்ருன்.

"புறப்படுங்கள். ஐயா!" என்று சிவனடியார் வேடத்திலிருக்கும் முத்தநாதனை முன்னே போகவிட்டு அவனுக்குப் பாதுகாவலக உருவிய கத்தியோடு பின் தொடர்ந்தான்.

அரசருக்கு ஏற்பட்ட ஆபத்து பற்றிய செய்தி நகரெங்கும் விரைவில் பரவியது. வஞ்சக வேடத்தில் வந்து அரசரைக் கொடுவாளால் குத்திய பழிகாரனை உயிரோடு விடக்கூடாதென்று நகர மக்கள் ஓடிவந்தனர். அவனைத் துண்டம் துண்டமாகச் சேதித்துச் சித்திரவதை செய்யவேண்டுமென்று அவர்கள் கூறினர்.

தத்தன் மக்களை நோக்கி அரசருடைய ஆணையை எடுத்துக் கூறி, அவனுக்கு எவ்வித ஆபத்துமின்றி எல்லையைக்

கடக்கச் செய்வதே அரசரின் விருப்பம் என்பதைத் தெரிவித்தான்.

அரசரின் தூய்மை உள்ளத்தின் விருப்பத்தைத் தடை செய்ய எவருமே துணியவில்லை. ஒதுங்கி முத்தநாதனுக்கு வழி விட்டனர்.

நகரின் எல்லைவரை முத்தநாதனை அழைத்துச் சென்று பத்திரமாக விட்டு விட்டு அரண்மனைக்குத் திரும்பினான் தத்தன். அவன் வரவை எதிர்பார்த்து நெஞ்சிலே உயிரைப் பிடித்துக் கொண்டிருந்தார் அரசர் மெய்ப்பொருள்.

அரசரை நெருங்கி அவரைப் பணிந்து எழுந்தான் தத்தன்.

"தாத்தா, அடியார் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தாரா?" என்று ஆவலோடு கேட்டார் அரசர்.

"அரசே, சிறு காயம்கூட ஏற்படாதபடி பத்திரமாக எல்லை கடந்து விட்டு விட்டு வந்தேன்" என்றான் தத்தன்.

அரசருடைய முகம் மலர்ந்தது. இரு கைகளையும் கூப்பித் தாம் வணங்கும் இறைவனுக்கு நன்றி தெரிவித்தார். அவர் நெஞ்சம் ஐந்தெழுத்தை பக்தியோடு ஓதியது. தம் அருகில் கவலை தோய்ந்த முகத்தோடு நிற்கும் மந்திரியாரையும் குமாரர்களையும் பார்த்து தாம் மேற்கொண்ட அடியார் பணியைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருமாறு வேண்டினார்.

திடீரென்று அந்த அறையிலே பிரகாசம் ஒன்று தோன்றியது. அதனடுவே சிவபெருமான் தேவியோடு மெய்ப்பொருளாருக்குத் தரிசனம் கொடுத்தார்.

"மெய்ப்பொருள், எம்மிடம் பக்தி கொண்டு எம் அடியார்களை அன்புடன் நடத்தியதோடு, வஞ்சகனாக இருந்தாலும் எம் சொரூபத்தைக் கொண்டிருந்ததால் கௌரவித்த உன் உயர்ந்த பண்பைக் கண்டு பெரிதும் மகிழ்வுறுகிறோம். எம்மிடம் நீங்காத பக்தி கொண்ட நீ எப்போதும் எம்மிடம் இருக்கலாம். வா!" என்று அழைத்தார்.

மெய்ப்பொருளார் ஆனந்தப் பரவசத்தில் திளைத்தார். இறைவனைப் போற்றிக் கொண்டாடினார். அந்த அளவிலே அவர் ஆவி பிரிந்து அந்த ஜோதியிலே கலந்து மறைந்தது.

16. ஈசனை ஒதுக்கிய அன்பர்

பரசுராமர் இருபத்தோரு தலைமுறை அரசகுலத்தை வேரறுத்த பின்னர் இவ்வையகத்தைக் காசிப முனிவருக்குத் தானம் செய்துவிட்டு மேற்குப் புறமிருக்கும் சமுத்திர தீரத்தை அடைந்தார். தாம் வைத்திருந்த பரசு ஆயுதத்தால் கடலை விலகச் செய்து மலைநாட்டைப் பெற்றார்.

பரசுராமரால் தோற்றுவிக்கப்பட்ட மலைநாட்டிலே திருச் செங்குன்றூர்1 என்றொரு ஊர். அவ்வூரிலே வேளாளர் குலத் திலே பிறந்தவர் விறன்மிண்டர்.

சிறுவயது முதலே விறன்மிண்டருக்குச் சிவபெருமானிடம் பக்தி உண்டு. தினமும் ஆலயம் சென்று இறைவனைத் தரிசிக் கத் தவறுவதில்லை. எம்பெருமானின் திருநாமங்களைப் பய பக்தியோடு எப்போதும் உச்சரித்துக் கொண்டிருப்பார்.

விறன்மிண்டர் வளர்ந்து பெரியவரானபோது அவருடைய சிவபக்தியும் பெருகியது. சிவனடியார்களிடம் அளவில்லா அன்பு பூண்டு அவர்களை உபசரித்துத் தொழுவார். இறைவன் தம் அடியார்களிடம் அன்பு பூண்டவர்களை தம்மை வழிபடு பவர்களிலும் மேம்பட்டவர்களாகக் கொள்வார் என்பதை விறன்மிண்டர் நன்கு அறிந்திருந்தார். அடியார்களைக் கண்டு விட்டால் அவர்களைத் தொழுத பின்னரே ஆண்டவனை வழிபடு வார்.

விறன்மிண்டரின் பக்தி அவரைத் திருப்பதிகள் தோறும் சென்று அங்கங்கே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் தரிசிக்கத் தூண்டியது. நெற்றியிலே திருநீறு பூசி கழுத்திலே ருத்திராக்ஷம் தரித்துப் புறப்பட்டு விட்டார் அவர்.

ஒவ்வொரு க்ஷேத்திரமாகச் சென்று பகவானை வழிபட்டு எல்லையில்லா ஆனந்தம் அடைந்தார். அங்கங்கே திருத் தொண்டர் கூட்டத்தினரையும் கண்டு அவர்களை வணங்கி மனம் மகிழ்ந்தார்.

இந்தவிதமாக விறன்மிண்டர் ஊர்தோறும் சென்று முடி வில் புற்றிடம் கொண்ட பெருமான் இருக்கும் ஆரூர்ப்பதியை அடைந்தார். அங்கே குழுமியிருந்த தொண்டர்களுடன் தாமும் கலந்து தினந்தோறும் ஆலயம் சென்று எம்பெருமானைத் தரி சித்து வந்தார்.

---

1 செங்கனூர் - அம்பலப்புழா அருகே உள்ளது.

ஒரு நாள் விறன்மிண்டர் ஆலயத்திலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் மற்ற அடியார்களுடன் அமர்ந்திருந்தார். அப்போது சுந்தரர் பரவையார் வீட்டிலிருந்து சுவாமி தரிசனம் செய்ய ஆலயத்துக்கு வந்தார்.

ஆலயத்துள் நுழைந்ததும் வழக்கம் போலத் தொண்டர் கூட்டத்துக்கு மனத்தால் வணக்கம் செய்துவிட்டு எம்பெருமானின் சந்நிதியை நோக்கிச் செல்லலுற்ருர் சுந்தரர். அவரைக் கண்டதும் தொண்டர் கூட்டம் எழுந்து வணங்கியது. தம்பிரான் தோழரல்லவா வருகிருர்!

விறன்மிண்டருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. பக்கத்திலிருந்தவரைப் பார்த்தார்.

''சுவாமி, இங்கு கூடியிருக்கும் அத்தனை பேருடைய அன்புக்கும் பாத்திரரான அப்பெருமான் யார்?'' என்று அவர் கேட்டார்.

''நல்லூர்த் திருமணத்திலே எம்பெருமானுல் தடுத்தாட்கொண்ட பெருமானும் வன்ருெண்டர் என்று ஈசனுல் அழைக்கப்பட்டவருமான சுந்தரர்'' என்ருர் அருகிலிருந்தவர்.

அத்தனை பெருமைக்குரிய சுந்தரர் சிவனடியார்களைத் தொழாது ஆலயத்தினுள் சென்றது விறன்மிண்டருக்கு ஆச்சரியத்தை அளித்தது. அது மட்டுமல்ல; அவருக்குக் கோபத்தையும் கொடுத்தது. சுந்தரர் தம் உள்ளத்தில் இந்த அடியார்களுக்கு அடியாராகும் பாக்கியம் எப்போது கிட்டும் என்று இறைவனை வேண்டியதை அவர் அறிவாரா? புறவணக்கம் செய்யாததை அவர் பெரும் குற்றமாகக் கொண்டார்.

''திருத்தொண்டர் கூட்டத்தினரைக் கண்டும் அவர்களை மதியாது செல்லும் வன்ருெண்டராகிய சுந்தரர் நமக்குத் தேவையில்லை'' என்று உள்ளே செல்லும் சுந்தரரின் காதில் விழுமாறு சொன்னுர்.

அதைக் கேட்ட சுந்தரர் பதை பதைத்து நின்றுவிட்டார்.

விறன்மிண்டர் அத்துடன் விட்டு விடவில்லை. ''சுந்தரரை ஆட்கொண்ட சிவபெருமானும் நமக்குத் தேவையில்லை''. என்ருர்.

அடியார்கள் ''ஆஹா...ஆஹா!...'' என்று பரிதவித்து நின்றனர்.

சுந்தரர் உள்ளம் கூச எம்பெருமானின் சந்நிதியை அடைந்தார்.

"தடுத்தாட்கொண்ட பெருமானே, அடியார்களை அலட்சியம் செய்யும் மனோபாவம் எனக்கில்லை என்பதை நீ நன்கு அறிவாய். புறவணக்கம் செய்யாத காரணத்தால் இப்பழி சூழ இடமளித்து விட்டாயே! அடியார்களுக்கு அடியாராய் இருப்பதைத்தானே நான் வேண்டுகிறேன்" என்று உள்ளம் உருக வேண்டினார்.

"வருந்த வேண்டாம், சுந்தரா! எம்மைப் பாடுவதைப் போல எம் அடியாரையும் தமிழ்ப் பாக்களால் பாடு. அவர்கள் தொண்டும் உலகம் அறியட்டும்" என்று அருளினார் இறைவன்

சுந்தரர் அடியார்களின் திருத்தொண்டு பற்றித் தமக்கு ஏதும் தெரியாதென்று வேண்டியபோது ஈசன் அடியெடுத்துக் கொடுத்துத் திருத்தொண்டத் தொகை பாடச் செய்தார்.

தேவாசிரிய மண்டபத்துக்குத் திரும்பிய சுந்தரர் அடியார் பெருமை பற்றிக் கூறி 'அவர்களுக்கு அடியேன்' எனப் பாடினார்.

தொண்டர் கூட்டம் அளவற்ற ஆனந்தத்தை அடைந்தது. விறன்மிண்டர் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார். "இப்போதல்லவா சுந்தரருடைய உள்ளம் அடியார்களிடம் எத்தகைய பக்தி கொண்டிருக்கிறது என்பது தெரியவருகிறது" என்று கொண்டாடினார்.

அடியார்களிடம் பக்திபூண்ட விறன்மிண்டரை சிவபெருமான், சிவகணங்களுக்குத் தலைவராக அனுக்கிரகித்து என்றும் தம்மை விட்டுப் பிரியாதிருக்கும் பாக்கியத்தை அளித்தார்.

17. துலா ஏறிய தொண்டர்

பொங்கிப் பாய்ந்து வரும் காவிரி தீரத்திலே குடந்தைக்குத் தென் மேற்கே பழையாறை 1 எனப்படும் ஊர் இருக்கிறது. அவ்வூரிலே சிவ பக்தர்களான வணிகர் குடும்பத்திலே பிறந்த

1 இப்போது ஆறைமேற்றளி, ஆறை தென்தளி, ஆறை வடதளி, கீழைப்பாழையாறு என பல பிரிவாய் உள்ளது. ஆறை மேற்றளியே அமர்நீதியாரின் அவதாரத் தலம் என்றும் ஆறை வடதளி நாயனாரின் முக்தித் தலம் என்றும் கூறுவர்.

வர் அமர்நீதியார். குலப்பெருமையும் குணப்பண்புகளும் அமர்நீதியாரின் இரத்தத்திலே ஊறியிருந்தன. சிவபெருமானிடம் பக்தி கொண்டிருந்த அவர் வாணிபத்தில் தருமநெறி தவருது நடந்துவந்தார் மக்களுக்குத் தேவையான பொருள்களை மொத்தமாகத் தருவித்து மிகவும் குறைந்த அளவு லாபத்தி லேயே விநியோகித்து வந்தார். இதனுல் ஊராரும் அண்டை அயல் கிராமங்களிலும் அவரைப் போற்றிக் கொண்டாடினுர்கள். வியாபாரம் அவரைத் தேடி வந்தது.

அமர்நீதியாருக்குச் சிவனடியார்களிடம் அளவில்லாத அன்பு. இறைவனின் தொண்டர்களைக் கண்டால் அவர் அகமும் புறமும் ஆனந்தத்தில் திளைக்கும். தொண்டர்களுக்கு அமுது செய்வதை அவர் தமது கைங்கரியமாகக் கொண்டார்.

பக்கத்திலே நல்லூர் 1 என்னும் சிவக்ஷேத்திரம் இருக்கிறது. அரசனின் கொடுமை தாங்கமாட்டாது தேவர்கள் ஓடி ஒளிய முற்பட்டபோது இறைவன் அவர்களை வண்டுகளாகத் தம் திருமேனியில் நுழைந்து கொள்ளுமாறு அருளிய தலம் அது. அவ்வூரிலே அடிக்கடி திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு. அப்போதெல்லாம் அமர்நீதியார் தம் குடும்பத்தாருடன் சென்று பகவானைத் தரிசித்து வருவார்.

திருவிழா சமயத்திலே அங்கு வந்து கூடும் அடியார்களுக்குத் திருவமுது செய்விக்க அவ்வூரிலே மடம் ஒன்று கட்டுவித்து அடியார்களுக்குத் தினமும் அன்னமிட ஏற்பாடு செய்தார். அத்துடன் அடியார்களுக்குத் தேவையான ஆடையும், கௌபீனமும் அளிக்க வகை செய்தார்.

மடத்திற்குத் தம்முடைய நேரிடையான மேற்பார்வை இருப்பதையே அமர்நீதியார் விரும்பினுர். பிறரிடம் ஒப்புவித்தால், அவர்கள் அடியார்களிடம் அவர்கள் பெருமையுணராது தாறுமாருக நடந்துகொண்டு விடுவார்களோ என்ற பயம் அவருக்கு. ஆகவே அவர் தம் குடும்பத்தாருடன் நல்லூருக்கே வந்துவிட்டார்.

அடியார்களிடம் அமர்நீதியார் கொண்டுள்ள அன்பையும் அவர்களுக்கு அவர் செய்து வரும் திருத்தொண்டின் பெருமையையும் உலகத்தோருக்கு எடுத்துக் காட்டி பக்தனை ஆட்கொள்ள விரும்பினுர் ஈசன். ஆகவே பக்தரின் இருப்பிடத்தைத் தேடி வந்தார்.

1 தாராசுரத்துக்கு தென்மேற்கே மூன்று மைலில் உள்ளது.

அன்றைக்கு ஊரிலே எம்பெருமானுக்கு ஏதோ விழா. ஆகவே, பகவானைத் தரிசிக்க வரும் அடியார்களை நல்ல முறையில் கௌரவித்து அவர்களுக்குத் திருவமுது செய்விக்க வேண்டுமென்று அமர்நீதியார் மடத்துக்கு வந்து காத்திருந்தார்.

அந்த வேளையில் பகவான் அமர்நீதியாரைத் தேடி வந்து சேர்ந்தார் அடியார் உருவிலே. பிரம்மசாரி என்பதை அவர் மார்பிலே தவழ்ந்த பூணூலில் கட்டப்பட்டிருந்த சிறு மான் தோல் எடுத்துக் காட்டியது. இடுப்பிலே தர்ப்பையால் முறுக்கிய அரைஞாணைச் சுற்றிக் கட்டியிருந்தார். கையில் பிடித்திருந்த தண்டத்தின் நுனியில் இரண்டு காவிநிற கௌபீனங்கள் கட்டித் தொங்கின. இத்யாதி கோலத்துடன் தெருவிலே இறைவன் நடந்து வந்தார்.

வீதியிலே வந்த சிவனடியாரைக் கண்டதும் அமர்நீதியார் மகிழ்ச்சி பொங்க எதிர் கொண்டு சென்று வரவேற்றார்.

''சுவாமி, வரவேண்டும்! வரவேண்டும்! தங்கள் தரிசனத்தால் நான் பாக்கியவானானேன்!'' என்று வணங்கி அழைத்தார்.

''ஐயனே, உன்னைப்பற்றி நான் எத்தனையோ கேள்விப் பட்டேன். அடியார்களுக்கு மனமுவந்து திருவமுது செய்வித்து அவர்களுக்கு வேண்டிய ஆடை, கௌபீனம் முதலானவற்றை அளித்து வருவதாக எங்கு பார்த்தாலும் பேசப்படுகிறது. உன்னைக் கண்டு செல்லலாமென்று வந்தேன்'' என்றார் அடியார் உருவிலிருந்த உமாபதியார்.

அமர்நீதியாரின் மெய் சிலிர்த்தது. மீண்டும் அடியாரை வணங்கினார்.

''சுவாமி, அடியார்களுக்கென்று இம்மடம் நிறுவி அவர்களுக்குத் தேவையானவற்றை அளித்து வருகிறேன். எல்லாம் எம்பெருமானின் திருவருள் தானே, சுவாமி, அவர் தந்தவற்றை அவருடைய அடியார்களுக்குச் செலவிடக் கூடிய மனோபாவத்தை அடியேனுக்கு அளித்தற்கு, எத்தனை பிறவி எடுத்துத் தொண்டு செய்தாலும் ஈடாகுமா? சுவாமி, தாங்களும் இன்று தங்கி இங்கே திருவமுது செய்தருள வேண்டும்'' என்று வேண்டினார்.

அடியாருக்குப் பரம சந்தோஷம். ''ஐயனே, உன் வேண்டுகோளை எவ்வாறு தட்ட முடியும்? ஆனால் ஆற்றுக்குச் சென்று

ஸ்நானம் செய்து திரும்ப எண்ணம் கொண்டுள்ளேன். அது வரை பொறுக்கலாமா?'' என்று கேட்டார்.

சுவாமி, அவசியம் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வாருங்கள்'' என்ருர் அமர்நீதியார்.

இறைவன் வானத்தை நோக்கினுர். அங்கங்கே கரு மேகக் கூட்டங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

''ஐயனே, மழை வருமோ எனச் சந்தேகமாக இருக்கிறது. நனைந்து விட்டால் உலர்ந்த வஸ்திரம் தரிக்க வேண்டும். இந்தா, இந்தக் கௌபீனத்தில் ஒன்றைப் பத்திரப் படுத்திவை. மழையில் நனைந்து விட்டால் மாற்றிக் கொள்ள உதவியாக இருக்கும்'' என்று தண்டத்தில் கட்டியிருந்த இரு கௌபீனங் களில் ஒன்றை அவிழ்த்து அமர்நீதியாரிடம் கொடுத்தார்.

அமர்நீதியார் இருகைகளையும் நீட்டி அடியார்களிடமிருந்து கோவணத்தைப் பெற்றுக்கொண்டார்.

''இதுசாதாரணமானது அல்ல; மிகவும் புனிதமானதாகும். ஜாக்கிரதையாக வைத்திருக்கவேண்டும்'' என்று எச்சரித்தார் இறைவன்.

''சுவாமி, மிகுந்த ஜாக்கிரதையுடன் இதை வைத்திருப் பேன். நீங்கள் சென்று ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வாருங்கள்'' என்ருர் அமர்நீதியார்.

அடியாராக வந்திருந்த ஈசன் சிரித்தபடி ஆற்றங்கரைக்குச் சென்ருர்.

அமர்நீதியார் மடத்தினுள் சென்று ஒரு பத்திரமான இடத்தில் அடியார் கொடுத்துச் சென்ற கோவணத்தை வைத்து விட்டுத் திரும்பினுர். மற்ற துணிகளோடு கலந்து விடக்கூடாதே என்று தனியாக வைத்திருந்தார்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மழை வந்து விட்டது. வானத்துக்கும் பூமிக்குமாகக் கொட்டும் பெருமழையில் நனைந்த படி நீராடச் சென்ற அடியராகிய இறைவன் வந்து சேர்ந்தார்.

படி ஏறியதும் தலையையும் உடலையும் நன்கு ஈரம் போகத் துடைத்துக் கொண்டவராய், ''ஐயனே, நான் பயந்ததுபோல மழையில் நனைந்து விட்டேன். தண்டிலிருக்கும் கௌபீனமும் நனைந்துவிட்டது. உன்னிடம் கொடுத்துச் சென்றது மிகவும் நல்லதாகி விட்டது. விரைவில் அதை எடுத்துவா'' என்ருர்.

''இதோ கொண்டு வருகிறேன், சுவாமி!'' என்று உள்ளே சென்றார் அமர்நீதியார். தனியாக ஓரிடத்தில் வைத்திருந்தாரல்லவா? அந்த இடத்துக்குச் சென்று பார்த்தார். அவருக்குத் ''திக்'' கென்றது. அடியார் கொடுத்துச் சென்ற கோவணம் அங்கு இல்லை. நீராடச் செல்வதாகக் கூறி மடத்தை விட்டுப் புறப்பட்டபோதே இறைவன் தாம் கொடுத்த கௌபீனத்தை மறைத்து விட்டாரே!

அமர்நீதியாரின் உள்ளம் பதறியது. இங்கு மங்கும் ஓடித் தேடினார். கோவணம் கிடைக்கவில்லை. கொடுத்துச் சென்று வெகு நாட்களாகி விட்டால் யாராவது மறதியாக எடுத்து மற்றத் துணிகளுடன் கலந்திருப்பார்களோ எனச் சந்தேகிக்கலாம். நீராடச் செல்லும் முன்பு கொடுத்துச் சென்றார். அவர் திரும்பி வருவதற்குள் அது எங்குதான் போயிருக்கும்?

''எத்தனை நேரம் ஈரத்துடன் நிற்பது? சீக்கிரம் கொண்டு வா'' என்று வெளியே இருந்து கூப்பிட்டார் ஈசன்.

அமர்நீதியாரின் உடல் பதறியது. அடியார்க்கு என்ன பதில் சொல்வார்? அவரை அதிகநேரம் காத்திருக்கச் செய்யவும் அவர் மனம் விரும்பவில்லை. ''இது என்ன சோதனையோ? பகவானே, நீதான் காப்பாற்ற வேண்டும்'' எனறு திருநல்லூரப்பரை வேண்டினார். பட்டிலே நெய்த புதிய கோவணம் ஒன்றை எடுத்துக்கொண்டு வெளியே வந்தார்.

அடியாரை நெருங்கி உடல் நடுங்க அவரை நமஸ்கரித்தார்.

''என்னப்பா இது? நான் கொடுத்தது இது அல்லவே!'' என்று அமர்நீதியார் கைகளில் ஏந்தியிருந்த பட்டுக் கோவணத்தைக் காட்டிக் கேட்டார் சிவபெருமான்.

''சுவாமி, நான் எப்படிச் சொல்வேன்?...என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் கொடுத்துச் சென்ற கோவணத்தைப் பத்திரமாக வைத்திருந்தேன். இப்போது சென்று பார்த்தால் அதைக் காணவில்லை. எப்படி மறைந்தது எனத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக இதை ஏற்றுக்கொண்டு என்னை அனுக்கிரகிக்க வேண்டும்'' என்று வேண்டினார்.

எம்பெருமான் அமர்நீதியாரைக் கோபமாகப் பார்த்தார்.

''சற்று முன்புதானே உன்னிடம் கொடுத்துச் சென்றேன். அதற்குள் காணவில்லை என்று சொல்வது வேடிக்கையாக

இருக்கிறதே. சாதாரண துணியை யார் எடுத்திருப்பார்கள்?...'' என்ருர்.

''சுவாமி, நான் தேடாத இடம் இல்லை. இந்தப் பட்டுத் துணியை ஏற்றுக் கொள்ளுங்கள். இது தனியாக நெய்யப் பட்டதாகும். எதிலிருந்தும் கிழிக்கப்படவில்லை'' என்று கெஞ்சினுர் அமர்நீதியார்.

''நன்ருயிருக்கிறதப்பா உன் பேச்சு? நான் குளித்து விட்டு வருவதற்குள் உன் மனது இவ்வாறு மாறிவிடும் என்று நான் நினைக்கவில்லை. இந்த ஆண்டியின் துணியிடத்தில் உனக்கு ஏன் ஆசை? கொண்டு வந்து கொடுத்துவிடு. என் பொருள் எனக்குக் கிடைத்தால் போதும்'' என்ருர் பகவான் சிறிது கோபத்துடன்.

அடியாரின் வார்த்தைகள் அமர்நீதியாரைத் தலை குனியச் செய்தன. அடியாரின் கோவணத்தைத்தான் எடுத்துக் கொண்டு கெட்டுப் போய்விட்டது எனப் பொய் சொல்லுவதாக அல்லவா அவ்வார்த்தைகள் குற்றம் சாட்டுகின்றன.

அப்படியே நெடுஞ்சாங் கிடையாக அடியாரின் பாதங் களில் விழுந்தார் அமர்நீதியார். அவர் பாதங்களைத் தம் கண் ணீரால் கழுவினுர்.

''சுவாமி, தங்கள் வார்த்தைகள் என் உள்ளத்தைக் கூரிய வேல்களாக மாறிப் புண்படுத்துகின்றன. என் வாழ்நாளில் ஒரு தரம் கூட அடியாரின் பொருளைக் கவர எண்ணம் கொண்ட தில்லை. அதை நான் வணங்கும் ஆண்டவனே அறிவார். சுவாமி, தங்கள் பொருளை நான் எடுத்து வைத்திருப்பதாக எண்ணுதீர்கள். என்னிடம் உள்ள பொன்னும் மணியும் பட்டாடைகளையும் உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன். அந்தக் கோவணத்துக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கண்ணீர் உகுத்தவாறு அவரைக் கெஞ்சினுர்.

பக்தன் படும் வேதனையை இறைவன் அறியமாட்டாரா என்ன? சற்று கோபம் தணிந்தவர்போல முகத்திலே சிரிப் பைத் தோற்றுவித்தார்.

''ஐயனே, இந்தப் பொன்னும் மணியும் பட்டாடைகளும் எனக்கெதற்கு? ஆண்டியான இவற்றை எடுத்துச் சென்று நான் என்ன செய்யப் போகிறேன்? எனக்கு வேண்டியதெல் லாம் கௌபீனம் ஒன்று தான். காணுமற்போன கௌபீனத்

துக்குப் பதிலாக அதே எடை உள்ள மற்ருெரு துணியைக் கொடுத்தாலே போதும்'' என்ருர்.

அமர்நீதியாருக்குச் சற்று நிம்மதி ஏற்பட்டது. அடியாரின் கோபத்துக்கு ஆளாவதினின்று பிழைத்தோமெனச் சந்தோஷப் பட்டார். உடனே துலாக் கோலேக் கொண்டு வரச்செய்தார்.

''சுவாமி, இப்போது என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டார்.

சிவபெருமான் தாம் வைத்திருந்த தண்டிலே கட்டியிருந்த மற்ருெரு கோவணத்தை அவிழ்த்துக் கொடுத்தார். அதை ஒரு தட்டிலே வைத்துவிட்டு மற்ருெரு தட்டிலே புத்தம் புதிய கோவணம் ஒன்றை வைத்தார் அமர்நீதியார்.

அடியாரின் கோவணம் வைத்திருந்த தட்டு தாழ்ந்தே இருந்தது.

அமர்நீதியார் மற்ருென்றை எடுத்து வைத்தார்; அடுத்து இன்னுென்று; மேலும் ஒன்று; இப்படியாகப் பத்து பதினைந்து துணிகளைத் தட்டிலே கொண்டு வந்து வைத்தார். அப்போதும் அடியார் கோவணம் வைத்திருந்த தட்டு தாழ்ந்தே இருந்தது.

அமர்நீதியாருக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது யோசிப்பதற்கு நேரமுமில்லை. பெரிய துலா கொண்டுவரும் படி செய்து அதில் ஒரு தட்டிலே அடியாரின் கோவணமும் மற்ருெரு தட்டிலே அடியார்களுக்கு அளிக்கச் சேமித்து வைத்திருந்த ஆடைகளையும் வைத்தார். அப்போதும் அடியாருடைய கோவணம் வைத்தத் தட்டுதான் தாழ்ந்திருந்தது.

அமர்நீதியாருக்குத் திகைப்பாகி விட்டது. அடியாரைப் பார்த்து வணங்கினுர்.

''சுவாமி, அடியேனிடமிருந்த துணிமணிகள் அனைத்தும் கொண்டு வந்து வைத்தாகி விட்டது. இனி பொன்னும் மணியும் தட்டிலே நிரப்ப அனுமதிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

''ஹூம்!...'' என்ருர் இறைவன்.

பொன்னும் மணியும் வந்து தட்டிலே நிரம்பின. அப்போதும் தட்டுக் கீழிறங்கவில்லை.

எம்பெருமான் எதற்காக வந்திருக்கிறுர்? அமர்நீதியாரின் அன்பைக் கை தாழ்த்திப் பெற்றுச் செல்லத்தானே அவர் வந்துள்ளார்! அதுவரை அவருடைய கௌபீனம் இருந்த தட்டு தாழ்ந்து தானே இருக்கும்!

அமர்நீதியாருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தட்டிலே கொண்டு வந்து நிரப்ப அவரிடம் இனி செல்வம் இல்லை. அடியாரை நமஸ்கரித்தார்.

''சுவாமி, கடைசியாக நானும் என் மனைவியும் குமாரனோடு தட்டிலே ஏற அனுமதிக்க வேண்டும்'' என்று வேண்டினுர்.

இறைவனும் அதற்குச் சம்மதித்தார்.

அமர்நீதியார் மனைவியோடும் மைந்தனோடும் அடியாரை முதலில் வலம் வந்து வணங்கினுர். பின்னர் அங்கு நிறுத்தப்பட்டிருந்த துலையையும் பிரதக்ஷிணம் செய்து தொழுதார். இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கிக் கூப்பியவராய் மனத்திலே தாம் வணங்கும் நல்லூரப்பரைத் தியானித்தார்.

''எம்பிரானே, இத்தனை காலமாக உன்னிடம் கொண்டிருந்த பக்தியிலிருந்து நான் கொஞ்சமும் வழுவாது நடந்து வருவது உண்மையானுல் இத்தட்டுகள் இரண்டும் சமமாகட்டும்'' என்று பிரார்த்தித்தவராய் மனைவியோடும் மகனோடும் தராசுத் தட்டிலே ஏறி நின்றுர். உடனே இரு தட்டுகளும் சமமாக நின்றன.

வானிலிருந்து மலர்மாரி பெய்தது. திடுக்கிட்டு நிமிர்ந்த அமர்நீதியார் அங்கே நின்றிருந்த அடியாரைக் காணுது திகைத்துப் போனுர். மலர்மாரியிலே அமர்நீதியார் திக்குமுக்காடிய நேரத்திலே இறைவன் மறைந்து விட்டார்.

அப்போது அசரீரி அமர்நீதியாரை அழைத்தது.

வானிலே சிவபெருமான் பக்தனுக்குக் காட்சி தந்தருளினுர்.

''அன்பனே, உன் பக்திக்கு மெச்சினேம். குடும்பத்தோடு எம்மிடம் வந்து சேர்வாயாக!'' என்று அனுக்கிரகித்தார்.

அமர்நீதியார் ஏறி நின்றிருந்த துலையே விமானமாக மாறி அவர்களைத் தாங்கியபடி வானிலே எழுந்து மறைந்தது. அமர்நீதியார் குடும்பத்தோடு இறைவனின் சந்நிதானத்தை அடைந்தார்.

அமர்நீதியாரின் திருத்தொண்டினை எடுத்துக் கூறி அவருக்குத் தாம் அடியார் என்று பாடிய சுந்தரர் அடுத்து இன்னும் பல அடியார்களைப் பற்றிப் பாடத் தொடங்கினர்.

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கு அடியேன்
ஏனாதிநாதன் தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனயர்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

18. மழு ஏந்திய பக்தர்

சோழ மன்னர் புகழ்ச் சோழர் கருவூரைத்1 தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தார். இந்திரலோகத்துக்கு ஒப்பாக மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் அகன்ற வீதிகளும் கொண்ட அவ்வூரிலே எழுந்தருளியிருக்கும் பசுபதீசுவரரிடம் பக்தி பூண்ட அடியார் ஒருவர் இருந்தார். காமதேனு இறைவனை வழிபட்டதால் ஆனிலை எனப் பெயரோடு விளங்கிய ஆலயத்தில் எழுந்தருளிய இறைவனிடம் எவ்வளவு பக்தி கொண்டிருந்தாரோ அதனின்றும் ஒருபடி மேலாகவே சிவனடியார்களிடம் அன்பு கொண்டிருந்தார் அவர். கையில் எப்பொழுதும் மழு வைத்திருப்பார். சிவனடியார்களுக்கு இடுக்கண் செய்பவர்களை அவர்கள் யாராக இருந்தாலும் சிறிதும் தயங்காமல் மழுவை எறிந்து தண்டித்து விடுவார். அதன் காரணமாக அவருக்கு எறிபத்தர் என்ற காரணப் பெயர் விளங்கலாயிற்று.

அவ்வூரிலே சிவகாமியாண்டார் என்றொரு அடியார் வாழ்ந்து வந்தார் அவர் தினமும் நந்தவனங்கள் தோறும் சென்று மலர் கொய்து வந்து மாலைகள் தொடுத்து எம்பெருமானுக்குக் கொண்டு சென்று சாற்றி மகிழ்வார். அதிகாலையிலேயே எழுந்து ஆற்றுக்குச் சென்று நீராடி தமது வாயைத் துணியால் மூடிக்கொண்டு மலரைக் கொய்வார். ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்க வேண்டி கொய்யும் மலர்களில் வாயிலிருந்து எச்சில் பட்டு விடாமலிருக்கவே அவர் அவ்வாறு கட்டிக் கொள்

---

1 கரூர்.

வதுண்டு. முதுமையை அடைந்துவிட்ட போதிலும் அவர் இத்திருப்பணியை நிறுத்தாது தொடர்ந்து நடத்தி வந்தார்.

அன்று அஷ்டமி திதி. மறுநாள் நவமி, ஊரிலே திருவிழா. நகரெங்கும் மக்கள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஆயத்தம் செய்து வந்தனர்.

அதிகாலையிலேயே எழுந்த சிவகாமியாண்டார் வழக்கம் போல அமராவதி ஆற்றுக்குச் சென்று நீராடினார். உடலிலே வெண்ணீறு பூசி ஈசன் நாமத்தை உச்சரித்தபடி மலர் கொய்ய நந்தவனம் சென்றார். பறித்து வந்த மலர்களைப் புனிதமான ஓரிடத்தில் கொட்டி காம்பு முதலான ஆய்ந்து மாலைகளாகத் தொடுத்தார்; அம்மாலைகளைக் கூடை ஒன்றிலே வைத்துத் தோளிலே மாட்டிக் கொண்டு இறைவனின் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டார். அடுத்த நாளைய விழாவில் ஊர்வலத்துக்கு ஏற்பாடாக அலங்கரிக்க அரசருடைய பட்டத்து யானையான பட்டவர்த்தனத்தை அதன் பாகர்களும் வீரர்களும் ஆற்றுக்கு ஓட்டிச் சென்று குளிப்பாட்டி அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். ஆற்று நீரிலே குளித்த யானை களிப்பிலே மிதந்ததால் மதங் கொண்டிருந்தது. அதை உணராத பாகர்களும் வீரர்களும் யானையை வீதி வழியே ஓட்டிச் சென்றனர்.

அந்தத் தெருவிலே யானை திரும்பியபோது சிவகாமியாண்டார் தோளிலே பூக்கூடையுடன் முன்னே சென்று கொண்டிருந்தார். நெஞ்சம் இறைவனின் திருக்கோலத்திலே லயித்திருக்க, வாய் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டிருந்தது. சிவகாமியாண்டார் தம் பின்னால் மதம் கொண்டு பட்டத்து யானை வருவதைக் கவனிக்கவில்லை.

சிவகாமியாண்டாரை நெருங்கியதும் யானை தன் துதிக்கையால் அவர் தோளிலே இருந்த தண்டில் தொங்கும் பூக்கூடையைப் பற்றி எடுத்தது. கூடையைத் தம் கால்களின் கீழ் போட்டு மிதித்து அதிலிருந்த மலர் மாலைகளை எடுத்து நாற்புறமும் வீசியது.

எம்பெருமான் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லும் மலர் கூடையை யானை பறித்து நாசமாக்கி விட்டதைக் கண்ட பாகர்கள் அதை வேகமாக ஓட்டிச் சென்றனர்.

அநியாயமாகக் கூடையைப் பறித்து மலர்களை யானை நாசமாக்கிவிட்டதே என்று கடுங்கோபத்தோடு கையிலிருந்த

தண்டால் அதை அடிக்கப் பின்னுல் ஓட முயன்ருர். வயோதிக ரான அவருக்கு ஓட முடியுமா? கால் இடறி வீதியிலே விழுந்தார்.

"இறைவா, இது உனக்கு நியாயமாகப் படுகிறதா? யானை யின் அடாத செய்கையைத் தடுக்காது விட்டதோடு அதை வேகமாக ஓட்டிக்கொண்டு போய்விட்டனரே! இன்றையத் தினம் என் வாழ்நாளில் உனக்குத் தொண்டு செய்ய முடியாது வீணுகிவிட்டதே!..." என்று தெருவிலே புரண்டபடி ஓல மிட்டார்.

அந்த நேரத்தில் அவ்வழியே கையில் மழுவுடன் எறி பத்தர் வந்து கொண்டிருந்தார். அவருடைய காதுகளில் அடி யாரின் ஓலம் விழுந்தது. உடனே அங்கு ஓடி வந்தார்.

பூக்கூடை பிய்ந்து கிடப்பதும் மலர் மாலைகள் நாற்புறமும் சிதறுண்டு கிடப்பதும் கண்ட எறிபத்தர் தரையிலே கிடந்த சிவகாமியாண்டாரை மெல்ல தூக்கிவிட்டு, "இது என்ன அலங்கோலம்? என்ன நடந்தது?" என்று கேட்டார்.

கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்தோட சிவகாமியாண் டார் அவரிடம் நடந்ததைத் தெரிவித்தார்.

சிவனடியார்களுக்குத் தீங்கு நேரிட்டது எனக் கேட்டால் கொதித்தெழும் எறிபத்தர் அங்கு நிகழ்ந்த சம்பவங்களை அறிந்தபோது சொல்லொணுச் சீற்றம் கொண்டார.

"அந்த யானை எந்தப் பக்கமாக போய்க்கொண்டிருந்தது?" என்று கேட்டார்.

சிவகாமியாண்டாரும் யானையை ஓட்டிச் சென்ற திசை யைக் காட்டவே, புயற்காற்றைப் போலப் பாய்ந்து ஓடினுர் எறிபத்தர்.

அவ்வீதியைக் கடந்து ராஜவீதியில் நுழைந்து சென்று கொண்டிருந்தது பட்டவர்த்தனம். பின்னுல் ஓடி வந்த எறி பத்தர் கோபத்தோடு தம் கையிலிருந்த மழுவால் யானையைத் தாக்கினுர். காலிலே வெட்டுண்ட யானை சினத்தோடு திரும்பி எறிபத்தரை நோக்கித் தும்பிக்கையை வீசியது. எறிபத்தரோ தமக்கு ஏற்படவிருக்கும் அபாயத்தைக் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. பாய்ந்து யானையை நெருங்கி அதன் துதிக்கையி லேயே வெட்டு போட்டார். யானையின் து:திக்கை வெட்டுண்டு அப்பால் போய் விழுந்தது. யானையால் வேதனை தாள முடிய

வில்லை. அண்டம் கிடுகிடுக்க அலறியபடித் தரையில் விழுந்து உயிரை விட்டது. யானையின் பக்கத்துக்கு ஒன்றாக வந்த இரு காவலர்களும் முன்புறம் சென்ற வீரனும் எறிபத்தரைத் தாக்கினர். அவர்களோடு யானையின் மீது அமர்ந்திருந்த இரு பாகர்களும் சேர்ந்துகொண்டனர். எறிபத்தரோ தமது மழுவால் அவர்களையும் தாக்கிக் கொன்றார். பின்னால் வந்துகொண்டிருந்த வேலைக்காரர்கள் அலறியடித்துக் கொண்டு அரண்மனைக்கு ஓடினர். வாயிற் காப்போரிடம், ''பட்டவர்த்தனமும் அதன் பாகர்களும் கொலையுண்டனர் என்பதை அரசரிடம் தெரிவியுங்கள்'' என்று உரைத்தனர்.

அவர்களும் உள்ளே ஓடிச் சென்று அரசரிடம் விஷயத்தைத் தெரிவித்தனர்.

பட்டவர்த்தனம் கொலையுண்டது என்று கேள்விப்பட்டதும் அரசர் பெருங் கோபத்தோடு எழுந்தார். பக்கத்திலிருந்த அமைச்சரைப் பார்த்து படைகளைத் தயாராக்குமாறு உத்தரவிட்டார்.

அரண்மனை வாயிலிலே சங்கம் முழங்கியது; பேரிகை அதிர்ந்தது. ரதகஜ துரக பதாதி என நால்வகைப் படைகளும் அணிவகுத்தன. அரசர் அமைச்சர் முதலானோர் பின்னால் வர குதிரையில் புறப்பட்டு வந்தார். அரசரைத் தொடர்ந்து படைகள் புறப்பட்டன.

ராஜவீதியை அரசர் அடைந்ததும் மலைபோன்று பட்டவர்த்தனம் உயிரிழந்து கிடப்பதையும் அருகே பாகர்கள் காவலர்களுடைய உடல்கள் சிதறுண்டு கிடக்க கையில் மழுவோடு எறிபத்தர் நிற்பதையும் கண்டு திடுக்கிட்டு நின்றார். குதிரையை விட்டு இறங்கி அடியாரிடம் வந்தார்.

''கருணைக் கடலே, இப்பெரும் பாதகத்தைச் செய்தது யார் என்று அறிவீர்களா?'' என்று கேட்டார்.

அதற்குள் பின்னால் ஓடி வந்த வேலைக்காரர்கள் அரசரைப் பணிந்து, ''அரசே, இதோ மழுவேந்தி நிற்கும் அடியார்தான் இதற்குக் காரணம்'' என்றார்கள்.

அரசருக்குத் தூக்கிவாரிப் போட்டது. பட்டவர்த்தனம் கொலையுண்டது எனக் கேள்விப்பட்டதும், யாரோ எதிரிகள் நகரினுள் புகுந்துவிட்டனர் என்றல்லவா அவர் எண்ணிவிட்டார்? எதிரிகளைத் தாக்குவதற்காகத் தானே நால்வகைப் படைகளையும் திரட்டச் சொன்னார்?

அடியார்களுக்கு ஒரு தீங்கும் நேரிடக் கூடாது என்று நினைப்பவரா அம்மாதிரி ஒரு காரியத்தைக் காரணமின்றி செய்யத் துணிவார்? எறிபத்தர் பட்டவர்த்தனத்தைத் தண்டித்ததற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும் என எண்ணினுர் புகழ்ச்சோழர்.

எறிபத்தரை வணங்கியவராய், ''சுவாமி, நான் கேள்விப் பட்டது ஒன்று. இங்கு நடந்திருப்பது வேருக இருக்கிறது. பட்டவர்த்தனத்தை எதிர்த்துத் தாக்கியபோது அதனுல் தங்களுக்கு ஏதும் அபாயம் நேரிடாது ஆண்டவன் காப்பாற்றியதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். பெருமானே, பட்டவர்த்தனத்தையும் பாகர்கள் இருவரையும் காவலுக்கு வந்த வீரர்களையும் தண்டித்தது போதுமா? தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் வேறு சிலரும் இருக்கிறுர்களா?'' என்று பணிந்து கேட்டார்.

எறிபத்தர் நடந்ததை அரசரிடம் விவரித்தார்.

அரசரின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. தரையில் மண்டியிட்டு உட்கார்ந்தார்.

''சுவாமி, தொண்டருக்குத் தீங்கு விளைவித்த யானைக்கு உரியவனுன நானும் தண்டிக்கப்பட வேண்டியவனே. அதனுல் என்னையும் கொல்லவேண்டும்'' என்று வேண்டினுர்.

எறிபத்தருக்கு நிலைமை சங்கடமாகிவிட்டது. தவித்தபடி நின்றுர்.

''சுவாமி, வேண்டாம்; தங்கள் மழு என் உடலில் படக்கூட யோக்கியதை அற்றவன் நான். என் வாளாலேயே என்னைக் கொன்றுவிடுங்கள்'' என்று சொல்லியவராய் உடைவாளை உருவி அவரிடம் நீட்டினுர் புகழ்ச்சோழர்.

எறிபத்தர் என்ன செய்வார்? தாம் சற்றுத் தயங்கினுலும் அரசர் தம் வாளாலேயே தம்மை மாய்த்துக்கொண்டு விடுவாரோ என்று பயந்தார். நடுங்கும் கரங்களால் அரசரிடமிருந்து உடைவாளை வாங்கினுர். அரசரோ மகிழ்ச்சி நிறைந்தவராய் அடியார் முன்பு மண்டியிட்டுத் தலைகுனிந்து நின்றுர்.

''இத்தனை தூய உள்ளம் படைத்தவருக்கு நானல்லவோ தீங்கு செய்துவிட்டேன். நானல்லவோ முதலில் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லி அரசருடைய வாளைத் தம் கழுத்தருகே கொண்டு சென்றுர்.

சட்டென்று அரசர் பாய்ந்து அடியாரின் கையைப் பிடித்துத் தடுத்தார்.

"சுவாமி, இதென்ன காரியம்? இதற்கு நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்" என்று அவரிட மிருந்து உடைவாளைப் பிடுங்க முயன்றார்.

அப்போது "அன்பர்களே!..." என்ற குரல் கணீரென்று வானிலே எழுந்தது.

> "அடியார்களிடம் அன்பு கொண்ட உங்கள் உள்ளத்தை உலகோருக்கு எடுத்துக் காட்டவே ஈசன் யானையைத் தூண்டி மலர்க் கூடையைப் பறிக்கச் செய்தார்!"

அசரீரியைக் கேட்டதும் எறிபத்தரும் புகழ்ச்சோழரும் உணர்ச்சி வசப்பட்டவர்களாய் கை கூப்பி வணங்கி எம்பெருமானைத் தொழுதனர். விண்ணவர் மலர் மாரி பெய்தனர்.

வீதியிலே இறந்து கிடந்த பட்டவர்த்தனமும் பாகர்களும் காவலர்களும் உயிர்பெற்று எழுந்தனர்.

பட்டவர்த்தனத்தால் பிடுங்கிப் பிய்த்து எறியப்பட்ட பூக்கூடை மலர் மாலைகளால் நிறைந்து வழிந்தது. இறைவனின் கருணையை எண்ணி எண்ணி வியந்தவராய் சிவகாமியாண்டார் மலர் மாலைகளை எடுத்துக் கொண்டு ஆலயம் சென்றார்.

பாகர்கள் யானையை அரசரிடம் அழைத்து வந்து நிறுத்தினர்.

எறிபத்தர் அரசரை வணங்கி, "அரசே! தாங்கள் யானை மீதேறி ஊர்வலமாக அரண்மனை செல்வதை அடியேன் கண்டு களிக்க அருள் புரியவேண்டும்" என்று வேண்டினார். அரசரும் அதற்கு இசைந்து யானை மீது ஆரோகணித்து அரண்மனை சென்றடைந்தார்.

எறிபத்தர் மேலும் பல காலம் அடியார்களுக்குதவும் தமது திருத்தொண்டினை நடத்தி வந்து முடிவில் பரமசிவனின் பாதரவிந்தங்களை அடைந்து சிவகணங்களின் தலைவரானார்.

19. எதிரிக்கு அருளிய ஏனாதியார்

சோழ நாட்டிலே எயினனூர்1 என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே ஏனாதி என்று அழைக்கப்பட்ட சிவ பக்தர் ஒருவர் இருந்து வந்தார். அவர் வாள் வித்தையில் மிகவும் சிறந்தவர். எத்தனையோ இளைஞர்கள் அவரிடம் வாள் வித்தை பயின்று வந்தனர். அரசாங்கத்திலே அவர் படைப் பிரிவு ஒன்றின் தலைவராகப் பணி ஏற்றுக் கொண்டிருந்தார். அதன் காரணமாக அவர் படைவீரர்களின் தலைவர் எனப் பொருள்பட ஏனாதி என்று குறிப்பிடப்படுவார். அதுவே அவர் பெயராக விளங்கி விட்டது.

இளைஞர்களுக்கு வாள் வித்தையில் பயிற்சி அளிப்பதன் மூலம் பெற்ற வருமானத்தில் பெரும் பகுதியை அவர் சிவனடியார்களுக்காகச் செலவிட்டு வந்தார். அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை அவர் மனமகிழ்வோடு செய்து கொடுப்பார். அவருடைய திருப்பணியை ஊரும் உலகமும் போற்றின.

ஏனாதியாரைப் போலவே அதிசூரன் என்பவன் இளைஞர்களுக்கு வாள் வித்தை பயிற்சி அளித்து வந்தான். ஏனாதியாரின் புகழும் பெருமையும் பரவப் பரவ அவரிடம் தான் இளைஞர்கள் பயிற்சிபெற வந்து கூடினர். அதிசூரனிடம் வருபவர்கள் குறைந்தனர். அதனால் அவன் வருமானம் குறுகிவிட்டது. இது ஏனாதியாரிடம் அவனுக்குப் பகைமையை வளர்த்தது. அவர் இருக்கும் வரையில் தான் நிம்மதியாக வாழ முடியாது என்று தோன்றியது அவனுக்கு, ஆகவே அவரோடு சண்டை செய்து அவரைக் கொன்று விட்டால் தான் ஏக தேசமாக பயிற்சி அளித்து செல்வத்தைக் குவிக்கலாம் என்ற பேராசை அவன் உள்ளத்தில் தோன்றியது.

ஒரு நாள் தனக்கு வேண்டியவர்களைக் கூட்டிக்கொண்டு ஏனாதியாரின் வீட்டு வாயிலை அடைந்தான். கையில் கத்தி கேடயம் எனப் பலவகை ஆயுதங்களை ஏந்திக்கொண்டு திரளானவர் பின் தொடர்ந்து வர அதிசூரன் வந்திருப்பதைக் கண்டதும் ஆச்சரியத்தால் வெளியே வந்தார் ஏனாதியார்.

அவரைக் கண்டதும் அதிசூரன் சீறினான்.

1கும்பகோணத்துக்குத் தென் கிழக்கே சுமார் நான்கு மைலில் உள்ள ஏன நல்லூர் எனப்படும் ஊரே இதுவென்று சொல்வார்கள்.

''நாம் இருவரும் ஒரே தொழிலில் ஈடுபட்டிருக்கிறோம். நம்மில் வலியவர் யாரோ அவரே இத்தொழிலை ஏக தேசமாகச் செய்து வரவேண்டும். அதற்கு ஏற்றவர் நீயா நானா என்பதை நாம் சண்டை யிட்டுத் தீர்மானித்துக் கொள்ளலாம்'' என்று அறை கூவினான்.

வேங்கைப் புலியிடம் குள்ளநரி சண்டைக்குப் போவது போல், அதிசூரன் வந்து யுத்தம் செய்ய அழைத்த போது, ஏனாதி சம்மதித்தார். உள்ளே சென்று போருக்கான அணி கலன்களை அணிந்து கொண்டு வந்தார்.

இதற்குள் செய்தி ஊர் முழுவதும் பரவி விட்டது. ஏனாதி யாரைச் சண்டையில் அதிசூரன் அழைக்கிறான் என்ற செய்தி அறிந்ததும் ஏனாதியாருக்கு வேண்டியவர்களும் அவரால் பயிற்சிக்கப்பட்டவர்களும் சீறிக் கொதித்தெழுந்து ஆயுதங் களுடன் ஓடி வந்தனர். குறுகிய நேரத்துக்குள் ஏனாதியார் பக்கமும் ஏராளமானவர்கள் சேர்ந்து விட்டனர்.

பார்த்தான் அதிசூரன்.

''நம் இருவருக்கும் ஏராளமானவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, ஊருக்கு வெளியே திறந்த வெளியில் நம் சண்டையை வைத்துக் கொள்ளலாம்'' என்றான்.

ஏனாதியார் அதற்குச் சம்மதித்து தம் ஆட்களுடன் ஊருக்கு வெளியே இருந்த திறந்த வெளிக்குச் சென்றார்.

இரு பக்கத்தினரும் மோதிக் கொண்டனர். மிகவும் பயங்கரமாக ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டனர். எங்கும் குருதி வெள்ளம் ஓடியது. கை கால்கள் வெட்டப்பட்டு விழுந் தவர்களின் மரண ஓலம் பயங்கரமாக இருந்தது.

சண்டையிலே அதிசூரனுககுப் பெரும் சேதம். எஞ்சிய ஆட்களுடன் அவன் சண்டை செய்வதை நிறுத்தி விட்டுத் தோல்வியுற்று ஓடினான்.

ஏனாதியாரிடம் தான் பெற்ற தோல்வி அதிசூரனின் உள் ளத்தை அரித்தது. இரவெல்லாம் தவியாய் தவித்தான். பொழுது புலரும் வேளையில் அவன் உள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது. ஏனாதியாரை வஞ்சகமாக வெல்ல உறுதி கொண் டான். இரகசியமாக அவரிடம் ஒருவனை அனுப்பினான்.

அந்த ஆள் இருள் பிரியும் நேரத்தில் ஏனாதியாரைச் சந் தித்து அதிசூரனின் செய்தியைத் தெரிவித்தான்.

"வீணுக இதரர்களை ஏன் பலியிடவேண்டும்? நாம் இருவரும் மட்டுமே தனியிடத்தில் போரிட்டு யார் வெற்றி பெற்றவர் என்பதைத் தெரிந்து கொள்வோம்!"

அதிசூரனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஏனுதியார் அவன் குறிப்பிடும் இடத்தில் வந்து சந்திப்பதாகச் சொல்லி அனுப்பினுர். பின்னர் ஒருவரும் அறியாது கத்தியும் கேடயமும் எடுத்துக் கொண்டு அதிசூரன் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று அவன் வருகைக்காகக் காத்திருந்தார். அதிசூரனும் வந்து சேர்ந்தான். இருவருக்கும் பயங்கரமான சண்டை ஆரம்பமாயிற்று.

அதிசூரன் கேடயத்தால் தன் முகத்தை மறைத்துக் கொண்டு கத்தியைச் சுழற்றி ஏனுதியாரை எதிர்த்தான். ஏனுதியார் அவனைச் சுற்றிச் சுற்றி அலைக்கழித்து களைத்துப் போகுமாறு செய்து, முடிவில் அவனைக் கொல்ல ஓங்கிய கத்தியோடு பாய்ந்து நெருங்கினுர்.

ஏனுதியார் அருகில் நெருங்கும் வரை காத்திருந்த அதிசூரன் அவர் கிட்டத்தில் வந்ததும் தன் முகத்தை மறைத்திருந்த கேடயத்தை சட்டென்று விலக்கினுன். அதிசூரனின் முகத்தைப் பார்த்த ஏனுதியார் திடுக்கிட்டு நின்று விட்டார்.

ஏனுதியாரைப் பற்றி அதிசூரன் நன்கு அறிந்திருந்தான். சிவனடியார்களுக்குச் சிறு தீங்கு கூட அவர் நினைக்க மாட்டார் என்பதைக் கேள்விப்பட்டிருந்த அவன் முடிவில் அவரை வஞ்சகத்தால் வெற்றி கொண்டு விட்டான்.

நெற்றியிலே திருநீறு பூசியவனுய் அதிசூரன் காட்சி தந்ததைக் கண்டதும் ஏனுதியார், "அடாடா, சிவனடியார்க்குள்ள தோற்றம் கொண்டுள்ளானே. இவன் நம்மவனுக அல்லவா ஆகிவிட்டான். இவன் விருப்பம் போல் அல்லவா, நாம் நடக்க வேண்டும்" என்று எண்ணி ஓங்கிய கையைத் தாழச் செய்து நின்று விட்டார்.

அந்தப் பொன்னுன சந்தர்ப்பத்தை விட்டுவிட அதிசூரன் விரும்பவில்லை. ஏனுதியாரைக் கொன்றுவிடப் பாய்ந்து வந்தான். தம்மை நோக்கி வரும் ஆபத்தை நன்குணர்ந்த ஏனுதியார் கொஞ்சமும் கலங்கவில்லை. கைகளில் உள்ள ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அவன் தாக்குதலை ஏற்கலாமோ என எண்ணினுர். ஆனுல் அடுத்த கணம் அந்த எண்ணம் மாறியது.

அதிசூரன் அவருடைய பரமவைரியாக இருக்கலாம். இன்னும் கொஞ்ச நேரத்துக்குள் அவன் அவரைக் கொல்லப் போகிருன். இருப்பினும் அவன் தன் நெற்றியில் திருநீறு பூசியுள்ளதன் காரணமாகச் சிவனடியாராகி விட்டதாகவே அவர் எண்ணிஞர். நிரபராதியைக் கொன்ருன் என்ற பழி அவனைச் சூழ்வதை அவர் விரும்பவில்லை. ஆகவே அவனை எதிர்ப்பது போல் போக்குக் காட்டி அவனுடைய கத்திவீச்சைத் தம் உடலிலே தாங்கிக் கொண்டார்.

திருநீற்றின் மீது ஏனுதியார் வைத்த அன்பு அவர் உயிரைத் தியாகம் செய்ய வைத்தது.

உயிர் பிரியும்போது சிவபெருமான் ஏனுதியாருக்குத் தரிசனம் தந்து அவர் தியாகத்தைப் போற்றித் தம்முடன் என்றும் பிரியாதிருக்கும் பாக்கியத்தை கொடுத்தருளினுர்.

20. இறைவனுக்குக் கண்ணை ஈந்த இணையிலா அன்பர்

பொத்தப்பி நாட்டின் தலைநகரம் உடுப்பூர் என்பதாகும். அவ்வூரிலே வேடர்களுக்குத் தலைவனுன நாகன் என்பவன் இருந்து வந்தான். மலைகளும் அடர்ந்த வனுந்தரங்களும் நிரம்பிய அந்தப் பிரதேசத்திலே வசித்து வந்த வேடர்கள் நாகனிடம் அளவில்லாத பக்தி கொண்டு அவன் சொல்படி நடந்து வந்தார்கள்.

நாகன் வேட்டையாடுவதில் மிகவும் சமர்த்தன். பயங்கரமான காட்டு விலங்குகளை அனுயாசமாக வேட்டையாடுவான். வேடுவர் குடியிருப்புகளுக்குக் காட்டு விலங்குகளால் ஆபத்து என்ருல் நாகனிடம் ஓடி வருவார்கள். அவ்வளவு தூரம் பிரக்யாதி பெற்றிருந்தான் அவன். அவன் மனைவி தத்தை என்பாள்.

அத்தம்பதிகளுக்கு வெகுகாலம் பிள்ளை பிறக்காமலிருந்தது. மற்ற வேட்டுவச் சிறுவர்கள் ஓடியாடி விளையாடுவதைக் காணும் போதெல்லாம் நாகனின் உள்ளத்தை அக்குறை வேதனை கொள்ளச் செய்யும். அவர்கள் குலதெய்வமான முருகனிடம் தன் குறையை நிவர்த்திக்குமாறு வேண்டினுன்; திருவிழாக்களை நடத்தி வைத்தான். பகவானுக்கு எனச் சேவலும் மயிலுமாகக் கொண்டு வந்து வளர்த்து விட்டான்.

தம்மிடம் நீங்காத பக்தி கொண்டிருக்கும் நாகனுக்கு அருளினுர் பகவான். தத்தை கருவுற்று உரிய காலத்தில் அழகிய ஆண் பிள்ளையைப் பெற்றெடுத்தாள். நாகனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. குழந்தையைக் கண்டு ஆசிகூறிச் செல்ல வந்தவர்களுக்கெல்லாம் தேனும் தினைமாவும் வாரி வழங்கிக் கௌரவித்தான்.

நாகன் குழந்தையைக் கையிலெடுத்துக் கொஞ்சினுன். குழந்தை திண்ணென இருந்ததால் அவனுக்குத் திண்ணன் என்றே பெயரிட்டான்.

வெகுநாட்களுக்குப் பிறகு பிறந்த குழந்தையாதலால் அனைவரும் அக்குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தனர். நாளுக்கொருவிதமாக அவனை அலங்கரித்து மகிழ்ந்தனர்.

குழந்தை வளர்ந்து பெரியவனுனுன். குலவழக்கத்துக்கேற்ப நாகன் தன் மகனுக்கு வேட்டை முதலானவற்றில் பயிற்சி அளித்தான். திண்ணன் ஒவ்வொன்றிலும் சிறந்து விளங்கினுன். முயல்களையும், பன்றிகளையும், மான்களையும் அவன் விரட்டிச் சென்ற வேகத்தைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். தந்தையின் பெயரை விளங்க வைப்பான் என எல்லோரும் அவனைப் புகழ்ந்து பேசினர்.

ஒருநாள் பக்கத்துக் காடு ஒன்றிலிருந்து வேடுவர் சிலர் நாகனைக் காணவந்தனர். தாங்கள் எடுத்து வந்த காணிக்கைப் பொருள்களை அவன் பாதத்தடியில் சமர்ப்பித்து வணங்கினர். நாகனும் அவர்கள் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருள்களைச் சந்தோஷத்தோடு ஏற்று, அவர்கள் வந்த காரியத்தை வினவினுன்.

"இப்போது கொஞ்ச காலமாக நீங்கள் வேட்டைக்கு வருவதில்லை. அதனுல் வனவிலங்குகளின் அட்டகாசம் அதிகமாகி விட்டது. அடக்குவாரின்றி அவை குடியிருப்புகளிலும் தோட்டங்களிலும் வயல்களிலும் புகுந்து பயிர்களை அழித்து வீணுக்கி வருகின்றன. முன்போல் நீங்கள் வேட்டைக்கு வந்து அவ்விலங்குகளை அழித்து எங்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டும்" என்று வேண்டினர் அவர்கள்.

அவர்கள் சொன்னது உண்மையே. நாகன் இப்போதெல்லாம் வேட்டைக்குப் போவதில்லை. முக்கிய காரணம் அவன் முதுமைப் பருவத்தால் மெலிந்து போய் விட்டான். முன்போல் ஓடியாடி வேட்டையில் இறங்குவது அவனுக்குச் சாத்திய

மில்லே. அதனால் வனாந்திரங்களில் காட்டு மிருகங்கள் தங்கள் மனம் போனபடி சுற்றி அலேந்து தனிமையில் சிக்கிக் கொள் ளும் மனிதர்களே அழித்தும் வந்தன.

வேடுவர்களின் வார்த்தைகளேக் கேட்டதும் அவர்களுக்கு ஏற்பட்டு வரும் இன்னல்களே நினைத்து வருந்தினான் நாகன்.

''அன்புமிக்க நண்பர்களே, உங்களுக்கு ஏற்பட்டு வரும் இன்னல்களேக் கேட்கும்போது என் உள்ளம் வேதனையடை கிறது. எனக்கோ வயதாகி விட்டது. ஓடியாடி வேட்டையில் ஈடுபட முடியாது. என் மகன் திண்ணன் இருக்கிறான். அவனே அனுப்புகிறேன். உங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களே அவனால் நிவர்த்திக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்'' என்றான்.

நாகன் அருகில் நின்ற அவன் நண்பர்கள் அதை ஆத ரித்துப் பேசினர்.

''சரியான வார்த்தை. திண்ணன் காட்டு விலங்குகளே வேட்டையாடி நம் குல மக்களுக்கு ஏற்பட்டு வரும் இன்னல் களேப் போக்குவான்'' என்றனர்.

நாகனுக்குப் பெருமகிழ்ச்சியாகி விட்டது. வேடர் குலத் தலேவனாகத் திண்ணனே நியமிக்கவும், கன்னி வேட்டைக்குப் புறப்படக் குல தெய்வத்துக்குப் பூஜை போடவும் தேவராட் டியை வரவழைத்தான்.

தேவராட்டி வரும்போதே நல்ல சகுனங்கள் தோன்றின. குல தெய்வத்துக்குக் கோலாகலமாகப் பூஜை நடந்தது. திண் ணன் வேடர் குலத்தலேவனாக நியமிக்கப்பட்டான். அடுத்த நாளே கன்னி வேட்டைக்குப் புறப்பட்டான்.

விடியற் காலேயிலேயே எழுந்து திண்ணன் வேட்டைக்குத் தயாரானான். தலேயிலே கேசத்தை நன்கு வாரி முடிந்து கட்டி யிருந்தான். அதன் நடுவே பறவை இறகுகள் பல வண்ணங் களில் கண்ணேக் கவர்ந்தன. கழுத்திலே புலிநகமும் மணி மாலேகளும் அணிந்திருந்தான். இடுப்பிலே குத்துவாள் தொங் கியது. தோளிலே அம்புறாத்தூணி நிறைய கூரிய முனே யுடைய அம்புகள். கையிலே வில்லே எடுத்துக் கொண்டான். குலதெய்வத்தை வணங்கி தேவராட்டியின் ஆசி பெற்றான்; பின்னர் பெற்றோர்களே வணங்கி அவர்களுடைய ஆசியையும் பெற்றுப் புறப்பட்டான். அவனுடன் நாணன், காடன் ஆகிய சிறந்த வேட்டைக்காரர்களும் புறப்பட்டனர். வில், வேல்,

ஈட்டி முதலியவற்றுடன் தாரை தம்பட்டங்களையும் எடுத்துக் கொண்டு அவர்கள் வேட்டைக்குப் புறப்பட்டனர். திண்ணன் அன்போடு வளர்த்து வந்த நாயும் அவனுடன் வந்தது.

காட்டை அடைந்ததும் அவர்கள் தாரை தப்புகளை ஒலிக்கச் செய்து மிருகங்களைப் பீதிகொள்ளச் செய்தனர். அமைதியாக இருந்த அந்தக் காட்டுப் பிரதேசத்திலே அவ்வாத்தியங்களின் முழக்கத்தைக் கேட்டதும் மிருகங்கள் தங்கள் தங்கள் இடங்களை விட்டு வெளிப்பட்டு நாற்புறமும் ஓடின. திண்ணனும் மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று வேட்டையாடினர்.

வேட்டையாடுவதிலும் சில நியதிகள் உண்டு. கர்ப்பமுற்றிருக்கும் பிராணிகளையும் குட்டிகளுடன் இருப்பவற்றையும் கொல்லக் கூடாதென வேடுவர்கள் தங்களுக்குள் ஒரு நியதி கொண்டிருந்தனர். அந்த நியதி தவருது திண்ணன் வேட்டையாடி வந்தான். தோட்டங்களிலும் வயல்களிலும் புகுந்து நாசம் செய்து வந்த யானைகளைக் கொன்முன். நீர் நிலைகளுக்கருகே மக்கள் நெருங்க முடியாதபடி அட்டகாசம் செய்து வந்த சிறுத்தை, ஓநாய் முதலியவற்றை வேலெறிந்தும் அம்புகளால் அடித்தும் கொன்ருன்.

இந்த விதமாக அவர்கள் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் திண்ணனின் வழியிலே காட்டுப் பன்றி ஒன்று குறுக்கிட்டது. அதைக் கண்ட திண்ணன் வில்லை வளைத்து அம்பெய்தான். பன்றி அவன் குறிக்கு இலக்காகாமல் தப்பி ஓடியது திண்ணனுக்கு அந்தப் பன்றியை விட்டுவிடக் கூடாதென்று தோன்றியது. ஆகவே அதைத் துரத்திக் கொண்டு ஓடினன். அவன் பின்னல் நாணனும் காடனும் ஓடி வந்தனர்.

பன்றி சுலபத்தில் அவர்களிடம் சிக்கவில்லை. இங்குமங்குமாக அலைக்கழித்து வெகுதூரம் இழுத்துச் சென்றது. வேட்டைக்கு வந்திருந்த கூட்டத்தாரிடமிருந்து பிரித்து அவர்களை வெகு தூரத்துக்கு இழுத்து வந்துவிட்டது.

திண்ணனே பன்றியை விடுவதில்லை என்று அதைத் தொடர்ந்தான். மலைச்சாரலை அடைந்த பன்றி மேலே ஓட முடியாமல் களைத்துப் போய் நின்று விட்டது. அதைத் துரத்திக் கொண்டு வந்த திண்ணன் அம்பு எய்து அதைக் கொல்ல விரும்பாமல் குத்துவாளைக் கையிலெடுத்து அதன் மீது பாய்ந்தான். மூர்க்கமாகப் பாய்ந்து அவனைத் தாக்க முயன்றது

பன்றி. திண்ணன் அதன் தாக்குதல்களுக்கு அகப்படாமல் நகர்ந்தும் குனிந்தும் தப்பி அதன் மீது பாய்ந்து குத்து வாளால் அதன் உயிரைப் பறித்தான்.

திண்ணனின் தீரம் மிகுந்த அச் செய்கையை கூடவந்த இருவரும் பாராட்டினார்கள். பன்றியை ஓட முடியாதபடி மடக்கி அதன்மீது வேல் கம்பை எறிந்தோ அம்பு எய்தோதான் அவர்கள் இதுவரைக் கொன்று வந்தார்கள். திண்ணனோ அப்பன்றி எதிர்த்துத் தாக்கச் சந்தர்ப்பம் அளித்து அதனோடு மூர்க்கமாகச் சண்டையிட்டுக் கொன்றது அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

உச்சி வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. வெகு நேரமாக அவர்கள் வேட்டையாடி யிருந்ததால் பசி மேலிட்டுக் களைத்துப் போயிருந்தனர். ஏதாவது ஆகாரம் சாப்பிட்டால்தான் மேற் கொண்டு அவர்கள் வழிநடந்து தங்களோடு வந்திருப்பவர்களை அடைய முடியும் எனத் தோன்றியது.

நாணன் திண்ணனை நெருங்கிக் கூறினான்.

"நாமோ களைத்துப் போயிருக்கிறோம். நீங்கள் கொன்ற இப்பன்றியைச் சுட்டு நீங்களும் புசித்து எங்களுக்கும் அளிப்பீர்களானால் பசி நீங்கி நீர் அருந்திப் புறப்படலாம்" என்றான் நாணன்.

"இங்கு தண்ணீர் கிடைக்க வழி இருக்கிறதா?" என்று கேட்டான் திண்ணன்.

"பக்கத்திலேதான் பொன்முகலி ஆறு ஓடுகிறது" என்றான் நாணன்.

"அப்படியானால் நாம் அங்கேயே போய் இளைப்பாறுவோம். பன்றியைத் தூக்கி வாருங்கள்" என்றான் திண்ணன்.

காடன் பன்றியைத் தோளிலே சுமந்துவர, நாணன் ஆற்றங்கரை நோக்கித் திண்ணனை அழைத்துச் சென்றான்.

ஆற்றங்கரையைச் சமீபித்தபோது எதிரே மறு கரையில் இருந்த குன்று திண்ணனின் பார்வையில் பட்டது. அவன் உள்ளத்தில் விவரிக்க இயலாத ஓர் இன்பம் சுரந்தது. இது நாள் வரை அத்தகைய மகிழ்ச்சியை அவன் அடைந்ததில்லை.

"நாணா!..." என்று அழைத்தான்.

"ஏன்?... கூப்பிட்டீர்களே எதற்காக?" என்று கேட்டான் நாணன்.

"நாணு, என்னுள் ஏதோ ஓர் உணர்ச்சி பரவுவது போலத் தோன்றுகிறது. அதோ தெரிகிற குன்றைப் பார். அதைப் பார்க்கப் பார்க்க சொல்ல முடியாத ஒரு மகிழ்ச்சி என்னுள் கொந்தளிக்கிறது" என்றான் திண்ணன்.

"அக்குன்றுதான் திருக்காளத்தி மலை எனப்படுவது. அதன் மேல்தான் குடுமித்தேவர் எழுந்தருளியிருக்கிறார்..." என்று தெரிவித்தான் நாணன்.

"நாணு, என் உள்ளத்தில் இதுகாறும் பெரும் சுமை இருந்ததுபோலும், அம்மலையை பார்க்கப் பார்க்க அச்சுமை குறைந்து வருவது போலும் தோன்றுகிறது. மலைமேல் குடுமித்தேவர் இருக்கிறார் என்று சொன்னாயல்லவா. நாம் அங்கு சென்று அவரைத் தரிசித்துத் திரும்புவோமா?" என்று கேட்டான் திண்ணன்.

"தாராளமாகப் போய்த் தரிசனம் செய்து திரும்பலாம். மலை மீது ஏறும்போது மனதுக்கினிமையாக இயற்கைக் காட்சிகளையும் காணலாம்" என்றான் நாணன்.

தீமூட்டி, பன்றியை அறுத்து மாமிசத்தை வேறுபடுத்தித் தயாராக வைத்து இருக்குமாறு காடனுக்குச் சொல்லிவிட்டுத் திண்ணனும் நாணனும் ஆற்றைக் கடந்து மலை மீது ஏறினர்.

தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு வரும் திண்ணனை குடுமித்தேவர் மகிழ்ச்சியோடு வரவேற்க எண்ணினார் போலும். மலை உச்சியிலே ஐந்து தேவ துந்துபிகளும் முழங்கி பக்தனுக்கு வரவேற்புக் கொடுத்தன.

அச்சப்தத்தைக் கேட்ட திண்ணனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அருகில் வந்த நாணனைப் பார்த்து, "நாணு, இதென்ன சப்தம்?" என்று கேட்டான்.

நாணன் அச்சப்தத்தைக் கேட்கவில்லை. ஆகவே அவன் தேனீக்களின் ரீங்கார சப்தத்தைத்தான் திண்ணன் குறிப்பிடுகிறான் என எண்ணி, "மலையிலே தேன் கூடுகள் ஏராளம் இருக்கின்றன. அவைகளில் வந்து அடையும் தேனீக்களின் சப்தமே அவ்வாறு கேட்கிறது" என்றான்.

மலை உச்சியை அடைந்த திண்ணன், அங்கே நிழல் தரும் மரத்தடியிலே லிங்க ரூபத்திலே எழுந்தருளியிருக்கும் குடுமித்

தேவரைக் கண்டான். அவன் கண்களிலிருந்து நீர் சொரிந்தது. நெஞ்சம் பக்தியால் உருகியது. ஓடி வந்து இறைவனைக் கட்டித் தழுவி ஆனந்தம் கொண்டான். அந்த நேரத்திலேயே திண்ணனின் பாசவினைகள் அனைத்தும் அழிந்துவிட்டன.

எழுந்து நின்று எம்பெருமானை வெகுநேரம் பார்த்தான். அவன் தேகம் புளகாங்கித மடைந்தது. திரும்பி நாற்புறமும் மண்டிக் கிடக்கும் காடுகளைப் பார்த்தான். அவன் முகம் சுருங்கியது.

''ஐயனே, இக்கொடிய பிரதேசத்தில் நீங்கள் எவ்வாறு இருக்கிறீர்கள்? காட்டு விலங்குகளால் உங்களுக்கு ஆபத்து ஏதேனும் நேர்ந்து விடாதா?'' என்று நெஞ்சம் உருகக் கேட்டான்.

திண்ணனின் போக்கு, அவன் கூட வந்திருந்த நாணனுக்குப் பெரும் வியப்பை அளித்தது. பித்துப் பிடித்தவன் போலல்லவா பேசுகிறான் என்று எண்ணினான்.

திண்ணன் நாற்புறமும் சுற்றி வந்தான். எம்பெருமானின் சிரசிலே வில்வமும் மலரும் வைக்கப்பட்டிருந்தன. காலையில் அபிஷேகம் செய்ததால் ஓடிய நீர் அங்கே குட்டையாகத் தேங்கியிருந்தது.

''இதென்ன, நாணு, இங்கு தண்ணீர் தேங்கியிருக்கிறதே! என் அப்பனின் தலையிலே இலைகளை வைத்திருக்கிறார்களே!'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் திண்ணன்.

''உங்கள் தந்தையாருடன் முன்பொரு முறை வேட்டையாட வந்தபோது இங்கு வந்திருந்தோம். அப்போது அந்தணர் ஒருவர் குடுமித்தேவருக்கு நீராட்டி இலையும் பூவும் சூட்டியதைக் கண்டோம். பிறகு உணவைப் படைத்து ஏதோ சில வார்த்தைகள் சொன்னார். அவர்தான் செய்திருக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்று தெரிவித்தான் நாணன்.

திண்ணனுக்கு எம்பெருமானிடம் அன்பு பெருக்கெடுத்தோடியது. அந்தணர் செய்ததாகச் சொன்னது எம்பெருமானுக்கு மிகவும் பிடித்தமானது போலும் என எண்ணினான். தானும் அதே வழக்கத்தைக் கைக்கொள்ள முடிவு செய்தான். எம்பெருமானுக்கு உணவு படைக்க வேண்டுமே! நதிக் கரையிலே தீ மூட்டி மாமிசத்தை அறுத்து வைத்திருக்கும்படி காடனிடம் சொல்லி வந்தது நினைவுக்கு வந்தது.

"ஐயனே, பசித்திருக்கிறீரா? கொஞ்சம் பொறுங்கள். இதோ போய் இறைச்சியை எடுத்து வருகிறேன்!" என்று கூறியவனாய் மலையிலிருந்து இறங்கத் தொடங்கினான் திண்ணன். அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது நாணன் ஓடி வந்தான்.

ஆற்றங்கரையில் காடன் அவர்களை எதிர்கொண்டான்.

"மாமிசம் தயாராக இருக்கிறது. உங்களைக் காணவில்லையே எனத் தேடி வந்தேன்" என்றான் அவன்.

ஆற்றங்கரைக்குப் பக்கத்தே உள்ள சோலை ஒன்றில் காடன் பன்றியின் மாமிசத்தை அறுத்து எடுத்துக் கம்பிலே கோர்த்து வைத்திருந்தான்.

"நீங்கள் முதலில் எடுத்துக்கொண்டு மீதமுள்ளவற்றை எங்களுக்கு அளியுங்கள்" என்று கூறினான் நாணன்.

திண்ணன் மாமிசத்தை அம்பினால் அறுத்துத் தீயிலே பதமாக்கி வாயிலே போட்டுக் கடித்து எலும்பின்றித் தனியே எடுத்து வைத்தான். நன்றாகத் தீயிலே வெந்து ருசியாக இருந்த துண்டுகளைத் தனியே இலைகளைப் பறித்து வந்து அவற்றிலே வைத்தான்.

திண்ணனின் செய்கை காடனுக்கு விசித்திரமாக இருந்தது. நாணனைப் பார்த்தான்.

"என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? அடியோடு மாறிவிட்டார். குடுமித்தேவரைப் பார்த்தாலும் பார்த்தார்! நாமெல்லாம் இவருக்கு இனிமேல் லட்சியமில்லை. இப்போது வந்திருப்பது எதற்காகத் தெரியுமா? தேவருக்கு இறைச்சி கொண்டு போகத்தான்!" என்றான் நாணன்.

"நம்மைக் காணாது, கூட வந்தவர்கள் தேடுவார்களே. விரைவில் உணவை முடித்துக்கொண்டு போக வேண்டாமா? இரவு ஊர் திரும்பிவிட வேண்டுமல்லவா?" என்று கேட்டான் காடன்.

"நீங்கள் போய் வாருங்கள். என் ஐயன் தனியே இருக்கிறார். அவரை விட்டு நான் எப்படி வருவது? நான் வரவில்லை" மீண்டும் திண்ணன் மாமிசங்களைச் சுவைத்துப் பார்த்து இலையிலே எடுத்து வைத்தபடி சொன்னான்.

திண்ணன் மாறிவிட்டான் என்று நாணன் சொன்னது சரியாக இருப்பதாகவே காடனுக்குத் தோன்றியது. அவனே தலைவன்; அவன் உணவு அருந்தாத வரையில் அவர்கள் மாமிசத்தைப் புசிக்க முடியாது. திண்ணனே இன்னமும் மாமிசத்தை வாயில் போட்டுச் சுவைத்துப் பார்த்து இலையிலே எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். அவன் சாப்பிடுவதற்கான அறிகுறியே தெரியவில்லை. பசியோ அவர்களை வருத்தி எடுத்தது.

"இதெல்லாம் எதற்காக?..." என்று பொறுமை இழந்து போய்க் கேட்டான் காடன்.

"குடுமித்தேவருக்குத்தான். நாமெல்லாம் எலும்பைக் கடித்துத் துப்பலாம். அவர் என்ன செய்வார்?" என்று பதில் அளித்தான் திண்ணன்.

"திரும்பவும் மலைக்குப் போவதாக எண்ணமா?" என்று நாணன் கேட்டான்.

"ஆமாம், நாணு! ஐயன் பட்டினி கிடக்கும்போது நாம் எப்படி உணவு அருந்துவது?" என்று சொல்லியபடி மாமிசத் துண்டுகள் வைத்திருந்த இலைகளைக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்திருந்தான் திண்ணன்.

இனியும் அவர்களால் பொறுக்க முடியவில்லை. திண்ணன் ஆற்றை நோக்கி மாமிசத்துடன் புறப்பட்டுச் சென்றபோது நாணனும் காடனும் அங்கிருந்து புறப்பட்டுத் தங்கள் வீரர்களைத் தேடிச் சென்றனர். உடனடியாக நாகனிடம் சென்று விஷயத்தைச் சொல்லி தேவராட்டியைக் கூட்டி வந்து திண்ணனைச் சூழ்ந்திருக்கும் மாயையை அகற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பேசிக்கொண்டு சென்றனர் இருவரும்.

ஆற்றங்கரையை அடைந்த திண்ணனுக்கு அந்தணர் நீர் கொண்டு இறைவனின் திருமேனியை நீராட்டி இலை, மலர் முதலானவற்றைச் சமர்ப்பித்தார் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. ஆற்றங் கரையோரமாக வளர்ந்த காட்டுச் செடிகளில் பூத்திருந்த பல வண்ண மலர்களைப் பறித்தான். எப்படி எடுத்துச் செல்வது? ஒரு கையில் வில்லும் மற்றொரு கையில் இறைச்சியும் எடுத்துப் போகவேண்டுமே! மலர்களை எடுத்துத் தலைமயிரிலே சொருகிக் கொண்டான். இறைவனை நீராட்ட வேண்டி வாய் நிறைய ஆற்று நீரை உறிஞ்சிக் கொண்டான். பின்னர் ஓட்டமும் நடையுமாகச் சென்றான். அவன் அன்போடு வளர்த்து வந்த நாய் மட்டும் அவனோடு சென்றது.

''நேரமாகி விட்டதே! ஐயன் பசியால் துடித்துக் கொண்டிருப்பாரே!'' என்று தவித்துக் கொண்டே மலையேறிய திண்ணன் மேய்ந்து விட்டு வீடு திரும்பும் பசு, கன்று பசித்திருக்குமே என்று ஓடிவருவது போல் பாறைக்குப் பாறைத் தாவி ஓடினான்.

சிவலிங்கத்தின் தலையிலே வைக்கப்பட்டிருந்த வில்வத்தையும் மலர்களையும் தனது செருப்புக்காலால் தள்ளினான். வாயிலே அடக்கியிருந்த நீரை லிங்கத்தின் மீது உமிழ்ந்தான். தலையிலே சொருகியிருந்த மலர்களை எடுத்து அதன்மீது தூவினான். இறைச்சியிருந்த இலையைத் தரையிலே வைத்தான்.

''ஐயனே, கொஞ்சம் தாமதமாகி விட்டது. உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுவது நல்லதாகவும் ருசியாகவும் இருக்கவேண்டுமென்று பார்த்துக் கொண்டு வரவே இந்தத் தாமதம். பல்லினால் நன்கு மென்று சுலபமாகச் சாப்பிடும் விதத்தில் எடுத்து வந்திருக்கிறேன். ருசிமிக்கதாக இருக்கிறது. சாப்பிட்டுப் பசி ஆறவேண்டும்'' என்று பணிந்து வேண்டினான்.

பின்னர் அங்கே கிடந்த காய்ந்த சருகுகளையும் தூசிகளையும் அகற்றிச் சுத்தப்படுத்தினான். ஐயன் இருக்குமிடத்தில் சுத்தமாக இருக்க வேண்டாமா?

இதற்குள் மாலை மறைந்து இருள் சூழத் தொடங்கியது. திண்ணன் இரவு அங்கேயே தங்கிவிட எண்ணினான். குடுமித் தேவரை நெருங்கிப் பணிந்து எழுந்தான்.

''ஐயனே, கொஞ்சமும் கவலைப் படாதீர்கள். பயங்கரமான இந்த வனாந்தரத்தில் உங்களைத் தனியே விட்டுவிட்டு நான் போக மாட்டேன். இரவு நேரத்திலே காட்டு விலங்குகள் வந்து தங்களுக்குத் தீங்கு செய்ய முற்பட்டால் என்ன செய்வது? நான் கண் விழித்துத் தங்களுக்குக் காவல் இருக்கிறேன்'' என்றான்.

ஒரு கையிலே அம்பும் மற்றொரு கையிலே வில்லும் ஏந்தியவாறு இறைவனின் அருகிலேயே இரவு முழுவதும் நின்றான் திண்ணன். அவன் உறுதியைக் கண்டுத் தூக்கம் கூட அவனை நெருங்கப் பயந்தது.

பொழுது புலர்ந்தது. திண்ணனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இரவு முழுவதும் ஐயனுக்கு ஒரு தீங்கும் நேரிடாத வண்ணம் அவன் காத்து விட்டானே! மனம் மகிழ ஐயனை இரு

கைகளாலும் கட்டியணைத்து முகம் சேர்த்துக் கொஞ்சினுன். சிறு பிள்ளைகளைப் போல் பாடினுன்; ஆடினுன்; குதித்தான்; இங்குமங்கும் ஓடினுன். அவனிடம் மகிழ்ச்சிப் பிரவாக மெடுத் தோடியது.

அன்றைக்கு ஐயன் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? ஏதா வது மிருகங்களை வேட்டையாடி இறைச்சி கொண்டுவர வேண் டும்! அப்போதே புறப்பட்டால்தான் நேரத்தில் திரும்ப முடியும்! வில்லை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் திண்ணன்.

திருக்காளத்தி மலைக்குப் பக்கத்தே உள்ள காட்டிலே நுழைந்து மிருகங்களைத் துரத்தினுன். முதல் நாளைப் போலவே காட்டுப் பன்றி ஒன்றையும் மானையும் அடித்து அவற்றின் மாமிசங்களைத் தீயிலே வாட்டி எடுத்து, வாயில் போட்டுச் சுவைத்துப் பார்த்து எடுத்துக் கொண்டான். மலைப்பாறை ஒன்றிலே கட்டியிருந்த தேன்கூடு ஒன்றைப் பிரித்துத் தேன் எடுத்து மாமிசத் துண்டுகளிலே தடவினுன். காட்டுப் பூக் களைப் பறித்துத் தலைமயிரிலே சொருகிக் கொண்டு, வாயிலே பொன்முகலி ஆற்றின் தெளிந்த நீரை முகர்ந்து கொண்டு உச்சி வேளைக்குச் சற்று முன்பாக மலையேறினுன்.

இதற்குள் வழக்கம்போல சிவகோசரியார் என்பவர் குடுமித்தேவருக்கு வழிபாட்டை முடித்துச் செல்ல மலைக்கு வந்தார். இறைவனின் சந்நிதானத்தில் எலும்புத் துண்டு களும் மாமிசத் துண்டுகளும் இறைந்து கிடப்பதைக் கண்ட தும் அவர் பதறிப் போய்விட்டார். தாம் முதல் நாள் இறைவ னின் திருமுடியிலே சார்த்திவிட்டுச் சென்ற வில்வதளமும் மலர்களும் ஒருபுறம் எறியப்பட்டும், இறைவனின் முடியிலே வாசனையற்ற காட்டுப் பூக்கள் வைக்கப்பட்டு இருப்பதைக் கண்டபோது அவர் கண்களில் நீர் மல்கியது.

''சர்வேச்வரா, இதென்ன கோலம்? இவ்விடத்தை அசுத் தம் செய்திருக்கிறுர்களே?...'' என்று வேதனைப் பட்டார். பின் னர் அவற்றை வாரியெடுத்து எறிந்துவிட்டுப் பக்கத்திலிருந்த சுனைக்குச் சென்று நீராடி தண்ணீர் கொண்டு வந்து நன்கு அலம்பினுர். அங்கங்கே தெரிந்த மனிதனின் காலடிகளையும் அதனருகே காணப்பட்ட நாயின் கால் பதிந்த அடையாளங் களையும் கொண்டு யாரோ வேடுவன் இரவு அங்கே தங்கியிருந் திருக்க வேண்டுமென நிச்சயித்தார். எம்பெருமானுக்கு வேத மந்திரங்களை உச்சரித்து புனித நீராட்டினுர். பிறகு வழக்கம்

போல வில்வம் முதலானவற்ருல் அர்ச்சித்து நைவேத்தியமும் செய்துவிட்டு ஊர் திரும்பினுர்.

அன்றைத் தினமும் திண்ணன் தன் செருப்புக் காலால் இறைவனின் திருமுடியிலிருந்த வில்வதளத்தையும் பூக்களே யும் அகற்றி, வாயிலிருந்த நீரை உமிழ்ந்து அபிஷேகத்தை முடித்தான். ஈசனுக்காக எனத் தலைமயிரிலே சொருகிக் கொண்டிருந்த காட்டு மலர்களை எடுத்து அன்போடு அர்ப்பணித்தான். பின்னர் இறைச்சியை அவர் முன்பு சமர்ப்பித்து வணங்கினுன்.

"ஐயனே, இன்று தேனிலே தடவிய இறைச்சியைக் கொண்டு வந்துள்ளேன். மான் இறைச்சி மிகவும் ருசியாக இருக்கும். சாப்பிட்டுப் பசி தீர வேண்டும்" என வேண்டினுன்.

உடும்பூர் சென்ற நாணனும் காடனும் நாகனிடம் காளத்தி மலையிலே நிகழ்ந்தவற்றை விவரித்து, திண்ணன் ஏதோ மாயையில் சிக்குண்டு இருப்பதாகவும் தேவராட்டியை அழைத்துச் சென்று மீட்டுவர வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அவர்கள் வார்த்தையைக் கேட்டு நாகன் பதறிப் போய் விட்டான். எத்தனையோ தவமிருந்து பெற்ற பிள்ளை இப்படிப் பித்துப் பிடித்து அலைவதை அவனுல் சகிக்க முடியவில்லை. உடனே தேவராட்டியை அழைத்துக் கொண்டு காளத்தி மலைக்கு ஓடிவந்தான்.

திண்ணனே அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவன் ஐயனிடம் என்னென்னவோ பேசினுன். எதிரே இருப்பதுபோல் பேசிக் கூத்தாடினுன். கண்ணீர் மல்க மன்ருடிய நாகனின் வார்த்தைகள் அவன் காதில் ஏறவில்லை. தேவராட்டியின் மந்திர தந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. உள்ளமும் உடலும் சோர வந்தவர்கள் வீடு திரும்பினர்.

அன்றைய இரவும் திண்ணன் தன் ஐயனை விட்டு நகராது துணை இருந்தான். எக்காலத்திலும் தங்களோடு துணை இருக்கும்படி இவ்வையகத்தினர் எம்பெருமானை வேண்டிக் கதறும் போது இறைவன் தமக்குத் துணை வேண்டும் என அவனை நிறுத்திக் கொண்டார் போலும்.

அடுத்த நாள் காலையிலும் திண்ணன் ஐயனுக்கு உணவு கொண்டுவர வேட்டைக்குச் சென்ருன். அன்றும் சந்நிதானத்தில் எலும்பும் மாமிசமும் இறைந்து கிடப்பதைக் கண்ட

சிவகோசரியார் அளவில்லா வேதனை கொண்டு அவற்றை வாரி எறிந்துவிட்டு இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டிச் சென்றார்.

இந்த விதமாக நான்கு நாட்கள் சென்றன. தினமும் காலையில் திண்ணன் வேட்டைக்குச் சென்ற பின்னர் சிவகோசரியார் வந்து அங்கு இறைந்து கிடக்கும் இறைச்சி, எலும்புத்துண்டுகள், காட்டுப் பூக்கள் ஆகியவற்றை எடுத்து எறிந்துவிட்டுப் புனித நீராட்டி இறைவனை வழிபட்டுத் திரும்புவதும் பின்னாலேயே திண்ணன் வந்து அவர் சமர்ப்பித்துச் சென்ற மலர்களையும் வில்வதளங்களையும் அகற்றி விட்டுக் காட்டு மலர்களைச் சாத்தி இறைச்சியை சமர்ப்பித்து உண்டு பசி ஆறும்படி வேண்டுவதுமாக நடந்து வந்தது. இரவு முழுவதும் கண்மூடாது இறைவனின் அருகிலேயே அமர்ந்திருப்பான்.

அன்று ஐந்தாவது நாளாக வழிபாட்டுக்கு வந்த சிவகோசரியார் வழக்கம் போல அங்கு கிடந்த இறைச்சியையும் எலும்புத் துண்டுகளையும் கண்டதும், "இறைவா, இந்த அலங்கோலத்தை நீ எவ்வாறு சகித்திருக்கிறாய்? யாரோ வேடுவன் இரவு நேரத்தை உன் இருப்பிடத்தில் கழிக்கத் தீர்மானித்து இவ்வாறு அசுத்தம் செய்து வருகிறானே. நீ பார்த்துக் கொண்டு அனுமதித்திருக்கிறாயே!" என்று கதறி விட்டார்.

அன்று இரவு சிவகோசரியாரின் தூக்கத்திலே குடுமித் தேவர் தோன்றினார்.

"அன்பனே, யாரோ வேடன்என அவனை அலட்சியமாக நினைக்காதே. என்னிடம் அவன்கொண்டுள்ள அன்பை நீ நேரில் கண்டால் தான் உணரமுடியும். அவன் வாயிலே உறிஞ்சி வந்து என் தலையிலே உமிழ்கிறானே பொன் முகலியாற்று நீர், அது எனக்கு எவ்வாறு இருக்கிறது தெரியுமா? வேத மந்திரங்களை உச்சரித்து எனக்கு அபிஷேகம் செய்வதற்கும் மேலாக மனத்துக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. கையிலே எடுத்துவர முடியாது தலையிலே சொருகிக் கொண்டு வரும் காட்டு மலர்கள் ரத்தின ஹாரங்களுக்கும் மேலானதாகும். எனக்கு அவன் படைப்பதோ இறைச்சி. அவன் தான் உண்ணுவதையே மனப் பூர்வமாக எனக்குப் படைக்கிறான். மாமிசத்தைத் தீயிலே வாட்டிப் பக்குவமாக இருக்கிறதா என வாயிலே போட்டுச் சுவைத்துப் பார்த்து எடுத்து வருகிறான். எத்தனை எத்தனையோ யாகங்களில் எனக்காக இடப்படும் ஹவிஸைக் காட்டிலும் உன்னதமாக இருக்கிறது. நான் வேறு அவன்

வேறு என்ற பேதமின்றி அவன் என்னையும் தானாகவே பாவிக்கிறான். காட்டு விலங்குகளால் எனக்கு இரவு வேளைகளில் தீங்கு நேரிடுமோவென்று கண் உறங்காது விழித்திருக்கிறான். அவன் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் வேதியர்கள் ஓதும் வேதங்களைப் போல எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நாளை உன் வழிபாட்டுக்குப் பிறகு ஒளிந்திருந்து கவனித்தாயானால் அவன் என்னிடம் கொண்டிருக்கும் அன்பின் ஆழத்தை உணர்வாய்'' என்று சொல்லி மறைந்தார்.

பொழுது விடிந்தது. சிவகோசரியாருக்கு இருப்பு கொள்ளவில்லை. ஈசனின் அன்புக்குப் பெரிதும் பாத்திரமான அந்த வேடனைக் காண வேண்டும் என்று உள்ளம் துடித்தது. சீக்கிரமாகவே மலைக்குப் புறப்பட்டு விட்டார்.

உச்சியை அடைந்தபோது திண்ணன் வழக்கம் போல் வேட்டைக்குச் சென்றிருந்தான். சிவகோசரியார் தம் வழிபாட்டை முடித்துக்கொண்டு சற்றுத் தொலைவிலுள்ள பாறை இடுக்கு ஒன்றில் பதுங்கியவராய் திண்ணனின் வரவை எதிர்பார்த்திருந்தார்.

வேட்டையை முடித்துக்கொண்டதும் மாமிசத்தைத் தீயிலே வாட்டி எடுத்துக்கொண்டு புறப்பட்டான் திண்ணன். என்றைக்கும் இல்லாமல் அன்று துர்ச்சகுனங்கள் தோன்றின. அவற்றைக் கண்டதும் அவன் துடித்துப் போனான். அவை உதிரம் காட்டக் கூடிய துர்ச்சகுனங்கள். ''என் ஐயனுக்கு ஏதாவது தீங்கு நேரிட்டு விட்டதோ?'' என்று பதறியபடி வேகமாக வந்தான்.

குடுமித்தேவரைப் பார்த்ததும் திண்ணன் பதறிப்போய் விட்டான். இறைவனின் வலது கண்ணிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

ஒரு கையில் பிடித்திருந்த வில் நழுவியது; மற்றொரு கையில் வைத்திருந்த இறைச்சியை அங்கேயே போட்டான்; வாயில் உறிஞ்சி யிருந்த நீர் கீழே கொட்டியது. உள்ளம் பதை பதைக்க இறைவனிடம் ஓடி வந்தான். இரு கைகளாலும் ஈசனைக் கட்டித் தழுவினான்.

''ஐயனே, இது என்ன கோரம்? யார் இவ்விதம் செய்தது? கண்களிலிருந்து உதிரம் கொட்டுகிறதே!'' என்று அலறினான்.

பின்னர் எழுந்து நாற்புறமும் ஓடிப் போய் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை.

"ஐயனே, இந்தக் கொடுமையைச் செய்தது யார்?...என்னால் தாங்கமுடியவில்லையே!...எவ்வாறு உதிரத்தை நிறுத்துவேன்?..." என்று பதறினான். அவன் உடல் துடித்தது. கை விரல்களால் இரத்தத்தைத் துடைத்தான். இன்னும் இரத்தம் வழிந்தது.

மடமட வென்று மலைச்சரிவிலே இறங்கி ஓடினான். அங்கே புதர்களுக்கிடையே வளர்ந்திருந்த பச்சிலைகள் சில வற்றைப் பறித்துக் கொண்டு ஓடி வந்தான். இலைகளைக் கசக்கி அதன் சாற்றை இரத்தம் வழியும் கண்ணிலே விட்டான். அப்போதும் உதிரம் வருவது நிற்கவில்லை.

தவியாய் தவித்தான்; கண்ணீர் விட்டுக் கதறினான் திண்ணன். அப்போது 'ஊனுக்கு ஊனிடல் வேண்டும்' என்ற பழமொழி அவன் நினைவுக்கு வந்தது.

நொடியிலே அவன் துக்கம் மகிழ்ச்சியாக மாறிவிட்டது. "ஐயனே, இத்தனை நேரம் நான் அதை மறந்து விட்டேன். இப்போதே உன் நோய்க்குத் தக்க மருந்தை அளிக்கிறேன்" என்று சந்தோஷத்தோடு சொன்னான். கீழே கிடந்த அம்பைக் கையிலெடுத்து அதனால் தனது வலக்கண்ணைப் பெயர்த்து இறைவனுடைய வலக்கண்ணிலே அப்பினான். அந்தக்ஷணமே உதிரம் வழிவது நின்றது.

திண்ணனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. களிப்பு மிகுதியால் கூத்தாடினான்; கோஷமிட்டான்; தரையிலே விழுந்து புரண்டான். ஐயனுக்கு ஏற்பட்ட நோயைத் தீர்த்துவிட்டானல்லவா.

அவன் ஆட்டம் எல்லாம் ஓய்ந்து எழுந்தபோது மற்றொரு பேரிடி காத்திருந்தது. இறைவனின் இடது கண்ணிலிருந்து இப்போது உதிரம் வழிந்து கொண்டிருந்தது.

அதைக்கண்ட திண்ணன் முன் போல் பதறி என்ன செய்வதென்று தெரியாது தவிக்கவில்லை. நோய்க்கான மருந்தை அவன் கண்டு பிடித்து விட்டான். மருந்தும் உடனடியாக உபயோகிக்க அவனிடமே இருந்தது.

"ஐயனே, இன்னொரு கண்ணிலும் உதிரம் வழிகிறதா? வருந்த வேண்டாம். நான் மருந்து தருகிறேன்" என்று மகிழ்ச்சியோடு எழுந்து அம்பைக் கையிலெடுத்தான். இறைவனை நெருங்கினான். விழியைப் பெயர்த்து விட்டால், இறைவனின்

இடக் கண்களிலே அப்புவதற்கு அடையாளம் வேண்டாமா? இடதுகாலை எடுத்து உதிரம் வழியும் இறைவனின் இடது கண் அருகிலே ஊன்றிக் கொண்டான். அம்பைக் கண்ணிலே சொருகினுன்.

பகவான் அதற்கு மேலும் பக்தனைச் சோதிக்கவில்லை. தம் கைகளை நீட்டி அவன் கரத்தைப் பிடித்தபடி, "நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா!" என்று கூறித் தடுத்தார்.

திடுக்கிட்டுப் பார்த்தான் திண்ணன்.

ரிஷபாரூடராய் இறைவன் அவனுக்குத் தரிசனம் தந்தார்

"திண்ணு, உன் கண்களை எனக்கு ஈந்து கண்ணப்பனுகி விட்டாய். உன் பக்தியை எடுத்துக் காட்டவே என் கண்களில் உதிரம் வழியச் செய்தேன். நீ என்றும் என் வலப் பக்கம் இருந்து வருவாய். வா!" என்று அழைத்தார்.

திண்ணனுக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு வானவர்கள் மகிழ்ந்து மலர் மாரி பெய்தனர்.

எம்பெருமானைத் தரிசித்த திண்ணன் புளகாங்கிதமடைந்தவனுய் அவரைப் போற்றித் துதித்தவாறு அவரோடு ஐக்கிய மடைந்தான்.

பாறையின் இடுக்கிலே மறைந்திருந்த சிவகோசரியார் அங்கு நடந்தவற்றைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனுர். திண்ணனின் அளவிடமுடியாத பக்தியைக் கண்டு அவர் பெரிதும் கொண்டாடினுர்.

21. அன்பால் நிமிர்ந்த பெருமான்

சோழவள நாட்டிலே உள்ள திருக்கடவூர் என்னும் தலத்திலே அந்தணர் ஒருவர் இருந்தார். கலயர் என அவ்வூர் பெருமானின் திருநாமத்தையே பெற்ளேர் அவருக்கும் வைத்திருந்தனர். மகாவிஷ்ணு மற்றும் தேவர்கள் அமிர்தத்தைக் குடத்திலிட்டு இத்தலத்திலே உண்ணும் பொருட்டு வைத்த போது அது அமிர்தலிங்கமாகி அத்தலத்திலே ஊன்றிக் கொண்டுவிட்டது. ஆகவே அத்தலத்துக்குக் கடவூர் என்றும் எம்பெருமானுக்கு அமிர்தகடேசுவரர் என்றும் பெயர் விளங்கலாயிற்று. மார்க்கண்டனின் உயிரைக் கவர வந்த தர்ம

ராஜனைச் சிவலிங்கத்தினின்று இறைவன் வெளிப்பட்டு வதைத்த தலமும் அதுதான்.

கலயர் சிவபெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டவர். தினமும் இறைவனுக்குக் குங்கிலியத் தீபமிடும் திருப்பணியைக் கொண்டிருந்தார்.

அன்பரின் உறுதியைச் சோதிக்க எண்ணிய சிவபெருமான் வறுமை அவரைச் சூழும்படி செய்தார். கொஞ்சம் கொஞ்சமாக அவர் செல்வம் குறைந்து வந்தபோதிலும் கலயர் தம் திருப்பணியை ஒருநாளும் நிறுத்தவில்லை. பணம் கிடைத்தால் முதலில் இறைவனுக்கு வேண்டிய குங்கிலியத்தை வாங்கி ஆலயத்திலுள்ள பண்டாரத்தில் சேமித்து வைத்து விடுவார். தமக்குச் சாப்பாட்டுக்கு இல்லையென்றால் இரண்டொரு நாள் பட்டினி கிடக்கலாம். இறைவனுக்கு ஒரு நாளாவது குங்குலியத் தூபம் இல்லாமலிருக்கக்கூடாது என்று கண்ணும் கருத்துமாய் இருந்து வருவார். அதனால் அவரைக் குங்குலியக் கலயர் என்றே எல்லாரும் அழைத்தனர்.

கலயரை வறுமை கோரமாகப் பீடித்தது. சொத்துக்கள் பூராவும் விற்றாகி விட்டன; வீட்டிலிருந்த பண்டங்களும் விற்றுத் தீர்த்தாகி விட்டன. அவரும் குழந்தைகளும் இரண்டு நாட்களாகப் பட்டினி. அதைப்பற்றிக்கூட அவர் கவலைப்படவில்லை. அடுத்த நாள் இறைவனுக்குத் தீபமிடக் குங்கிலியம் இல்லையே என வருந்தினார்.

அவர் மனைவியாருக்குத் தம் மைந்தர்கள் படும் வேதனையைப் பொறுக்க முடியவில்லை. திருமணத்தின்போது தம் கழுத்தில் கட்டிய தாலிக் கயிற்றிலிருந்த பொன்னை அவிழ்த்து எடுத்து நாதனிடம் கொடுத்தார்.

அதைக் கண்டதும் கலயர் பதறி விட்டார்.

"இதென்ன காரியம்?" என்று வேதனை தாங்கமாட்டாது மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

"சுவாமி, தாங்கள் எனக்கு அணிவித்த திருக்கயிறு என் கழுத்திலேதான் இருக்கிறது. அதில் கோர்த்துப் போட்டிருந்த பொன்னை மட்டுமே எடுத்தேன். நாம் பட்டினி கிடக்கலாம். பசி பொறுக்க முடியாவிட்டால் பல்லைக் கடித்துக் கொண்டு முடங்கிக் கிடக்கலாம். ஆனால் நம் குழந்தைகளுக்கு என்ன தெரியும்? நாம் வறுமையில் கஷ்டப்படுகிறோம் என்று உணரும் வயதினர் அல்லவே. அவர்களும் சாப்பிட்டு இரண்டு நாட்

களாகி விட்டன. இதைக் கொண்டு போய் சந்தையில் விற்று நெல் வாங்கி வாருங்கள்!'' என்று வேண்டினாள்.

கலயர் கண்களில் நீர்மல்க அதைப் பெற்றுக் கொண்டு சந்தைக்குப் புறப்பட்டார்.

வேதனையால் தவிக்கும் அந்த நேரத்தில்தான் அவர் மன நிலை உறுதியாக இருக்கிறதா என்று பரிசோதிக்க விரும்பினார் சிவபெருமான்.

சந்தையை நோக்கிச் சென்று கொண்டிருந்த கலயனாரின் எதிரே பொதி ஏற்றிய வண்டியை ஓடிக்கொண்டு வியாபாரி ஒருவன் வந்தான்.

''வண்டியிலே என்னப்பா பொதி?'' என்று கேட்டார் கலயர்.

''குங்குலியப் பொதிங்க! ரொம்ப அருமையான துங்க!'' என்றான் வியாபாரி.

குங்குலியம் என்று கேட்டதுமே கலயர் தாம் வந்த காரியத்தை மறந்தார். எம்பெருமானுக்குப் பிடித்தமான குங்குலியம் வந்திருக்கிறது. அதை வாங்கிப் போய் பண்டாரத்தில் சேர்ப்பித்து விட்டால் இன்னும் கொஞ்ச நாளைக்குக் கவலையில்லாமல் ஏற்றி வரலாமே என எண்ணினார்.

''ஐயா, என்னிடம் பொன் இருக்கிறது. அதைப் பெற்றுக் கொண்டு குங்குலியப் பொதியைத் தருகிறீரா?'' என்று கேட்டார்.

''பொன் எவ்வளவு இருக்கிறது?'' என்று கேட்டான் வியாபாரி.

கலயர் தம்மிடமிருந்த தாலிப் பொன்னை எடுத்து நீட்டினார்.

வியாபாரி அதை வாங்கிக் கொண்டான். ''பொதியை எங்கு இறக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

கலயர் வண்டியை ஆலயத்துக்கு ஓட்டிச் சென்று பொதியைப் பண்டாரத்திலே சேர்ப்பித்தார். அவருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. எம்பெருமானின் திருப்பணி தடையில்லாது நடைபெறுமே என்ற மகிழ்ச்சியில் திளைத்தவராய் அவர் தம் வீட்டையே மறந்து ஆலயத்திலே தங்கிவிட்டார்.

அர்த்த ஜாம பூஜை முடிந்து கர்ப்பக்கிருகத்தை அர்ச்சகர்கள் பூட்டியபோதுதான் அவருக்கு வீட்டின் நினைவு வந்தது. மனைவி தாலிக் கயிற்றிலிருந்து பொன்னை அவிழ்த்துக் கொடுத்து குழந்தைகள் பட்டினியால் துடிப்பதால் அதை விற்று நெல் வாங்கி வருமாறு சந்தைக்கு அனுப்பியது நினைவுக்கு வந்தது. நெல் வாங்க எடுத்து வந்த பொன்னுக்கு அவர் குங்குலியம் வாங்கி விட்டாரே!

வீட்டுக்குப் போகக் கலயருக்குக் கால்கள் எழும்பவில்லை. வெறுங்கையுடன் வீட்டுக்குப் போய் மனைவியின் முகத்தில் எவ்வாறு விழிப்பது? நெல் வாங்கி வந்தீர்களா என்று அவள் கேட்டால் என்ன பதில் சொல்வது? பசியோடு தவித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் அவர் நெல் வாங்கி வரப்போகிறார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களே!

கலயர் கோவில் மண்டபத்திலேயே உட்கார்ந்து விட்டார். இறைவன் விட்ட வழியாகட்டும் என்று பகவானைத் தியானித்தபடி அங்கேயே தங்கிவிட்டார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தூக்கம் கண்ணைச் சுழற்றவே அப்படியே படுத்துத் தூங்கி விட்டார்.

கலயனாரின் வீட்டிலே அவர் மனைவியார் சந்தைக்குச் சென்ற கணவர் நெல் கொண்டு வருவார் என வழிநோக்கிக் காத்திருந்தார். பகல் முழுவதும் போய் இரவும் வந்தது. கலயரைக் காணவில்லை. காத்துக் காத்துக் குழந்தைகள் தூங்கிப் போய்விட்டனர். அந்த அம்மாளும் கணவரின் வரவை எதிர்நோக்கி நடுநிசி வரை காத்திருந்தார். அப்போதும் கலயர் திரும்பவில்லை. அவரையும் மீறித் தூக்கத்திலாழ்ந்து விட்டார்.

கலயர் பக்தியோடு வழிபடும் அமிர்தகடேசுவரர் இனியும் பார்த்துக் கொண்டிருப்பாரா? கோவில் மண்டபத்திலே பட்டினியோடு கலயர் தூங்க, அவர் வீட்டிலே அவர் மனைவியாரும் குழந்தைகளும் நெல் வந்ததும் சமைத்துப் பசியாறச் சாப்பிடலாம் என எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து தூக்கத்திலாழ்ந்திருக்க எம்பெருமான் எவ்வாறு நிம்மதியாக இருப்பார்?

கலயனாரின் வீட்டிலே பொன்னும் மணியும் நெல்லுமாகக் குவியச் செய்தார். தூக்கத்திலிருந்த அம்மையாரின் கனவில் தோன்றி, "சீக்கிரம் எழுந்து உணவு சமைக்க ஏற்பாடு செய்யம்மா! உன் கணவர் பசியோடு வந்துகொண்டிருக்கிறார்!" என்று அருளி மறைந்தார்.

திடுக்கிட்டு எழுந்த அந்த அம்மையாருக்குத் தன் கண் களேயே நம்ப முடியவில்லே. வீடு முழுவதும் செல்வம் குவிந் திருந்தது. கனவிலே இறைவன் தோன்றி தெரிவித்ததை பிரத்தியக்ஷமாக உணர்ந்தாள். அவள் மேனியில் பட்டாடை யும், ஆபரணங்களும் மிளிர்ந்தன. சமையலறையில் சாப்பாட் டுக்குத் தேவையான பொருள்கள் குவிந்திருந்தன. ஆனந்தத் தால் உள்ளம் துள்ளச் சமையல் செய்ய முனேந்தாள்.

இறைவன் தம் ஆலயத்தில் உறங்கும் கலயரின் கனவில் தோன்றினுர்.

“பசியால் மிகவும் களேப்படைந்திருக்கிருய். வீட்டுக்குச் சென்று உணவருந்தி பசியாறு!” என்று உத்தரவிட்டார்.

எழுந்து உட்கார்ந்த கலயருக்கு வீட்டுக்குச் செல்ல மன மில்லே. பசியாற வீட்டிலே குளிர்ந்த நீர்தான் இருக்கும்! இறைவனின் கட்டளேயை மீறவும் அவர் அஞ்சினுர். ஆகவே வேண்டா வெறுப்போடு அவர் தள்ளாடித் தள்ளாடி வீட்டுக்குச் சென்ருர்.

வீட்டை நெருங்கியபோது வாயிற் கதவு திறந்திருப்பதைக் கண்டார். இன்னமும் அவர் வரவை எதிர்பார்த்து மனேவி காத்திருக்கிருளா? உள்ளம் கூச படியேறி உள்ளே நுழைந்தார்.

அங்கே கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. அவர் தவறிப்போய் வேறு யார் வீட்டிலாவது நுழைந்து விட் டாரா என்ன?

இதற்குள் உள்ளிருந்து வந்த அவர் மனேவி அவரைக் கண்டுவிட்டாள். ஓடி வந்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கினுள்.

“சுவாமி, பசியோடு எத்தனே நேரமாகக் காத்திருக்கிறீர் கள்? சீக்கிரம் கொல்லேப்புறம் சென்று நீராடி வந்து பூஜையை ஆரம்பியுங்கள். உணவு தயாராகிவிட்டது” என்ருள் பணி வோடு.

“இதெல்லாம் என்ன?...” என்று வியப்போடு கேட்டார் கலயர். மனேவி பூண்டிருந்த அணிகலன்கள் அவரை மேலும் வியப்பிலாழ்த்தின.

“எல்லாம் நீங்கள் வழிபடும் அமிர்தகடேசுவரரின் அருள் தான்!” என்று அவள் எம்பெருமானின் திருவருளே விவரித் தாள்.

கலயர் அளவில்லா சந்தோஷம் அடைந்தார். கொல்லைப் புறம் சென்று நீராடி வந்து எம்பெருமானைப் பூசித்தார்.

பொழுது புலர்ந்தது. தாம் பெற்ற இன்பத்தைப் பிறரோடு பகிர்ந்து அனுபவிக்க விரும்பினார் கலயர். சிவனடியார்களை அழைத்து வந்து அவர்களுக்கு அமுது செய்வித்துத் தாமும் அறுசுவை உண்டி அருந்தினார்.

கலயரின் குங்குலியத் திருப்பணி தொடர்ந்து நடந்து வந்தது.

இவ்வாறு இருந்து வரும் நாளில் குடந்தைக்கு அருகிலுள்ள திருப்பனந்தாள் என்னும் ஊரிலே நடந்த செய்தி ஒன்றைக் கேள்விப்பட்டார் கலயர். அதைக் கேட்டது முதல் அவ்வூருக்குச் சென்று எம்பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. உடனே புறப்பட்டுவிட்டார்.

தாடகை என்ற அம்மையார் திருப்பனந்தாளிலுள்ள இறைவனைத் தினமும் வழிபட்டு வந்தார். ஆற்றிலிருந்து நீர் கொண்டு வந்து எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்வார். அவ்வாறு ஒரு நாள் நீர் கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகிக்கக் குடத்தைத் தூக்கியபோது அவர் அணிந்திருந்த சீலை அவிழ்ந்து விட்டது. சட்டென்று குடத்தைத் தூக்கிய கைகளால் துணியை அழுத்திக் கொண்டார். கையைத் தூக்கி பகவானுக்கு அபிஷேகம் செய்ய முடியவில்லையே எனத் துக்கித்தார்.

அவருடைய இக்கட்டான நிலைமையைக் கண்ட சிவபெருமான் தமது முடியைச் சாய்த்து அம்மையாரின் அபிஷேகத்தை ஏற்றுக்கொண்டார். தமது பக்தைக்கு அருளிய திருக்கோலத்தை உலகோருக்கு எடுத்துக்காட்ட அவர் நிமிராது அதே நிலையில் இருந்துவிட்டார்.

சோழ அரசன் பெருமானின் சாய்ந்த திருமேனியை நிமிர்த்தி நேரான நிலையில் வைக்க வேண்டுமென்று விருப்பம் கொண்டான். ஆட்களைக் கொண்டு சாய்ந்த சிவலிங்கத்தை நிமிர்த்தச் செய்தான். ஆட்கள் எவ்வளவு முயன்றும் சிவலிங்கத்தை நிமிர்த்த முடியவில்லை. யானைகளை அழைத்து வந்து நிறுத்தினான். திருமேனியில் சங்கிலிகளைச் சுற்றி யானைகளை விட்டுச் சங்கிலியைப் பற்றி இழுக்கச் செய்தான்.

லிங்கத்தை அதன் நிலையிலிருந்து ஒரு இம்மி அளவு கூட நிமிர்த்த முடியவில்லை. யானைகள் இழுத்து இழுத்து இளைத்துப் போய்விட்டன. அரசனோ அல்லும் பகலும் அதே நினைவாய் மெலிந்து வந்தான்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் கலயர் பக்தைக்குத் தலை தாழ்த்திய எம்பெருமானைத் தரிசிக்க விருப்பம் கொண்டார். உடனே திருப்பனந்தாளுக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தார்.

கவலை தோய்ந்த முகத்தோடு அரசன் நிற்பதையும் யானைகள் சங்கிலிகளை இழுக்க முடியாது இழுத்துக் கஷ்டப்படுவதையும் கண்டார் கலயர்.

"ஆஹா, இவ்வுடலில் இளைப்பைக் கொடுக்கும் இப்பணியை நானும் செய்து இளைப்புற வேண்டும்" என்று எண்ணினார்.

சிவலிங்கத்தின் திருமேனியிலே கட்டப்பட்டிருந்த கயிற்றை எடுத்துத் தம் கழுத்திலே சுற்றிக்கொண்டார். இறைவனை மனத்தில் தியானித்தவராய் கண்களை மூடிக் கொண்டு இழுத்தார்.

ஆணைக்குக் கட்டுப்படாத பகவான் அன்புக்குக் கட்டுப்பட்டார். கலயர் இழுத்தபோது இறைவனின் திருமேனி நிமிர்ந்தது. எங்கும் ஒரே ஆரவாரம். வானிலிருந்து தேவர்கள் மலர்மாரி பெய்தனர். அரசனும் மற்றவர்களும் களிப்புற்று ஓடி வந்து கலயரை வணங்கினர்.

கலயரின் நெஞ்சம் தழுதழுத்தது. எம்பெருமானின் பாதார விந்தங்களில் விழுந்து சேவித்தார்.

"என்னப்பனே! இந்த ஏழையின் அன்புக்குக் கட்டுப்பட்டு நிமிர்ந்த உன் கருணையை எப்படிப் போற்றுவது?" என்று கண்ணீர் சொரிய நின்றார்.

அவ்வூரிலேயே சில நாட்கள் தங்கி பகவானை வழிபட்டுப் பிறகு தமது ஊருக்குத் திரும்பினார் கலயர். இறைவனுக்குத் தாம் செய்து வரும் திருத்தொண்டு தடையின்றி நடைபெற்று வரச் செய்தார்.

ஒரு சமயம் ஞானசம்பந்தப் பெருமானும் அப்பர் சுவாமிகளும் அடியார் குழாத்துடன் அவ்வூருக்கு எழுந்தருளினர்.

கலயர் மகிழ்வுடன் அவர்களை வரவேற்றுத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்று திருவமுது செய்து வைத்தார்.

இவ்வாறு மேலும் பல நாட்கள் அடியார்களுக்கு அன்புடன் தொண்டு செய்து வந்து முடிவில் கலயர் சிவபெருமானின் பாதாராவிந்தங்களில் ஐக்கியமானுர்.

22. ·கேசம் கேட்டு பாசம் அறுத்தவர்.

சோழ நாட்டிலே கஞ்சானூர்1 என்றொரு ஸ்தலம் இருக்கிறது. அவ்வூரிலே வாழ்ந்து வரும் வேளாளர் குடியிலே பிறந்தவர் மானக்கஞ்சாறர் என்பவர்.

அவர் குடும்பம் பரம்பரை பரம்பரையாக அரசர்களிடம் சேனுதிபதியாகச் சேவை புரிந்து வரும் குடும்பம் ஆகும். வயது வந்ததும் அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர் பெற்ருேர்.

மானக்கஞ்சாறருக்குச் சிவபெருமானிடம் அளவிட முடியாத பக்தி இருந்தது. இறைவனின் அடியார்களைப் பெரிதும் கொண்டாடி அவர்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்வார்.

தம்பதிகள் இருவரும் மனமொத்துக் குடும்பம் நடத்தி வந்தனர். ஆண்டவன் அவர்களுக்குச் சகலமான வசதிகளைக் கொடுத்திருந்தாலும் குழந்தைப் பேறு மட்டும் இல்லாமலிருந்தது. மானக்கஞ்சாறர் அது குறித்துப் பெரிதும் வருந்தினுர். தம் குலம் விளங்க ஒரு குழந்தையைக் கொடுக்குமாறு எம்பெருமானை இடைவிடாது வேண்டி வந்தார்.

சிவபெருமானும் பக்தனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். மானக்கஞ்சாறருடைய மனைவியார் கருத்தரித்து ஒரு சுபதினத்தில் அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தம்பதிகள் அடைந்த மகிழ்ச்சி விவரிக்க இயலாததாகும். விழியை இமை காப்பது போல் பெண்ணை வளர்த்தனர். குழந்தையும் குலப் பண்புகள் அனைத்தும் நிரம்பப் பெற்றவளாய் வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்தாள். அவளைத் தகுந்த இடத்தில் மணம் செய்து கொடுக்க வேண்டும் என எண்ணினுர் அவர்.

---

1 மாயவரத்துக்குப் பக்கத்தே ஆனைதாண்டவபுரத்துக்கு அருகில் சுமார் இரண்டரை மைலில் உள்ளது.

அவருடைய எண்ணத்துக்கேற்ப நல்ல இடத்திலிருந்து பெண் கேட்க வந்தனர்.

பக்கத்திலே உள்ள இடத்திலிருந்து தான் அவர்கள் வந்தனர். அவர்கள் அந்தஸ்தும் மானக்கஞ்சாறருக்குச் சம மானதே. அவரைப் போலவே சேனுதிபதியாக இருந்த ஏயர் கோன் கலிக்காமர் என்பவருக்கு மானக்கஞ்சாறரின் மகளைத் திருமணம் செய்து கொடுக்க விருப்பம் கேட்டுப் போக அவர்கள் வந்திருந்தனர்.

மானக்கஞ்சாறர் அவர்களை வரவேற்று உபசரித்தார். ஏயர்கோனைப் பற்றி நன்கு அறிந்திருந்தார் அவர். ஆகவே அவர் மறுத்துப் பேசவில்லை. திருமணத்துக்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்தார். வந்திருந்தவர்கள் நல்ல சுபதினம் ஒன்றை முடிவு செய்துகொண்டு ஊர் திரும்பினர்.

சேனுதிபதியின் மகளுக்குத் திருமணம் என்ருல் சாமானியமா? கோலாகலமாக ஏற்பாடுகள் நடைபெற்றன. திருமணம் முடித்துச் செல்ல மணமகனும் அவன் கோஷ்டியினரும் புறப்பட்டு வந்து கொண்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் சிவபெருமான் தம் அடியாரின் பக்தியைப் பரிசோதிக்க விரும்பினுர். மாவிரத முனிவராக வேடம் போட்டு மானக்கஞ்சாறரின் மாளிகையை அடைந்தார்.

சைவத்தின் அகச்சமயம் ஆறினுள் ஒன்று ஆகும் மாவிரதம் என்பது. அதை அனுஷ்டிப்பவர்கள் சிவபெருமானை எலும்பு மாலை தரித்த மூர்த்தியாகத் தியானிப்பர். அவர்களும் தம் மேனியில் எலும்புகளை அணிந்திருப்பர்.

நெற்றியிலே திருநீறும், தலைக் கேசத்தை வாரி முடிந்து அதனடுவே எலும்புத் துண்டும், மார்பிலே தலைமயிராலான பூணூலும் அணிந்த கோலத்தோடு சிவபெருமான் அங்கு வந்தார்.

சிவனடியார் யாரோ வந்திருக்கிருர் என்று கேள்விப் பட்டதும் மானக்கஞ்சாறர் ஓட்டமாய் ஓடி வந்து அவரைப் பணிந்து உள்ளே அழைத்துச் சென்று உபசரித்தார்.

“இன்றைக்கு என்ன விசேஷம்? மாளிகையே திருவிழாக் கோலம் கொண்டிருக்கிறதே!” என்று கேட்டார் சிவபெருமான்.

"சுவாமி, அடியேன் புத்திரிக்கு இன்று மணநாள். மண மகன் வந்து கொண்டிருக்கிருன்" என்று பதில் அளித்தார் மானக்கஞ்சாறர்.

"அப்படியா?...ரொம்ப மகிழ்ச்சி! நீ செளக்கியமாக இருப் பாய்! " என்று ஆசீர்வதித்தார் அடியராக வந்திருந்த எம் பெருமான்.

மானக்கஞ்சாறருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. உள்ளே ஓடினுர். பூரண அலங்காரத்துடன் இருந்த தம் புதல்வியை அழைத்து வந்தார்.

"குழந்தை, அடியாரைச் சேவித்து ஆசீர்வாதம் பெறு!" என்ருர்.

அந்தப் பெண்ணும் அடியாரின் முன் குனிந்து வணங் கினுள்.

மானக்கஞ்சாறருடைய புதல்வியின் நீண்டு வளர்ந்த கேசத்தைக் கண்ட அடியாரான பெருமான், "ஆஹா!... எவ் வளவு நீண்ட கேசம்! இப்பெண்ணின் கூந்தல் நமக்குப் பஞ்ச வடியாகும்!..." என்ருர்.

அக் கூந்தலைக் கொண்டு தாம் பூணூல் அணியலாம் என அடியார் விருப்பம் தெரிவித்ததைக் கேட்டார் மானக்கஞ்சாறர். தம் புதல்விக்குத் திருமணநாள் என்பதை முற்றிலும் மறந்து விட்டார் எனலாம். அடியாரின் விருப்பம் ஒன்றே அவர் உள் ளத்தில் மேலோங்கி நின்றது. கொஞ்சமும் யோசிக்காமல் உடைவாளை உருவினுர். பெண்ணின் கூந்தலை ஒரு கையில் பிடித்துக்கொண்டு வாளினுல் அறுத்து எடுத்தார்.

"சுவாமி, இந்தாருங்கள். பெற்றுக் கொண்டு என்னை அனுக்கிரகிக்க வேண்டும்!" என்று அடியாரிடம் அறுத்த கூந்தலை நீட்டினுர். அவர் மகள் கொஞ்சமும் முகம் சுளிக்க வில்லை. அடியாரின் விருப்பம் நிறைவேறியது என்பது பற்றி அவள் சந்தோஷமாக நின்ருள்.

அடியாராக வந்திருந்த எம்பெருமான் எழுந்திருந்தார். தம் கையில் பிடித்திருக்கும் கேசத்தை அவர் வாங்கிக் கொள்வார் என எண்ணினுர் மானக்கஞ்சாறர். ஆனுல் தமதிருப்பிடத்தி லிருந்து எழுந்த அடியாரைக் காணவில்லை. எம்பெருமான் அப்படியே மறைந்து விட்டார்.

மானக்கஞ்சாறர் திடுக்கிட்டார். அங்கே கூடியிருந்தவர்களும் அடியார் மறைந்து விட்டதைக் கண்டு திகைத்துப்போய் நின்றனர்.

அப்போது வானிலே எம்பெருமான் திவ்விய தரிசனம் கொடுத்தார். புளகாங்கிதமடைந்தவராய் மானக்கஞ்சாறர் இறைவனைப் பலவாறு போற்றித் தொழுதார்.

"அன்பனே, உன் உள்ளத்தை எடுத்துக் காட்டவே நாம் இவ்வாறு வந்தோம்!" என்று அருளி மறைந்தார்.

அதே நேரத்தில் மானக்கஞ்சாறருடைய பெண்ணின் அறுபட்ட கூந்தல் வளர்ந்து முன்னிலும் பன்மடங்கு காந்தியுடன் விளங்கியது. அடியாரின் பெருமையை எடுத்துக் காட்ட ஆண்டவன் மேற்கொண்ட திருவிளையாடலை அங்கு குழுமியிருந்த அனைவரும் வியந்து போற்றினர்.

இதற்குள் மணமகனும் அவனைச் சேர்ந்தவர்களும் மண வீட்டை நெருங்கினர். யாரோ அடியார் வந்தார் என்றும் அவர் தமக்குப் பூணுலாக மணப் பெண்ணின் கேசம் உபயோகப்படும் என்று விருப்பம் தெரிவித்ததாகவும், அடியாரின் விருப்பத்தை நிறைவேற்ற, மானக்கஞ்சாறர் தம் பெண்ணின் கேசத்தை அறுத்துக் கொடுத்து விட்டதாகவும் மணமகன் கோஷ்டியினருக்குச் செய்தி எட்டியது.

கேசமில்லாத பெண்ணை மணம் செய்தல் சாஸ்திரத்துக்கு விரோதமானதாகையால் ஏயர்கோன் உள்ளம் வேதனை அடைந்தது. ஆனால் அடுத்தாற்போல், அடியாராக வந்தவர் சிவபெருமானே என்றும், அவர் அருளால் மணப் பெண்ணின் கேசம் வளர்ந்து முன்னிலும் சிறந்து விளங்குகிறது! என்று வந்து சொன்னார்கள். அதைக் கேட்டதும் அவர் வேதனை அடைந்த உள்ளம் மகிழ்ச்சி கொண்டது. இறைவனின் திருவருளை எண்ணி வியந்தவராய் மணவீட்டை அடைந்தார். பெரும் கோலாகலத்துக்கிடையே திருமணம் இனிது நிறைவேறியது.

மானக்கஞ்சாறர் அதன் பிறகு வெகு காலம் இறைவனை வழிபட்டு அவர் அடியார்களுக்குத் தொண்டு செய்து வந்து முடிவில் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தார்.

23. மாவடு கடித்த மகாதேவர்

சோழநாட்டிலே கணமங்கலம்1 என்ற ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்தவர் தாயனூர் என்பவர்.

வேளாளருக்குத் தலைவரான அவர் சிறந்த சிவ பக்தர். அவ்வூரிலே எழுந்தருளியிருக்கும் நீநெறிநாதருக்குத் தினமும் அமுது செய்வித்து வந்தார். செந்நெல் அரிசியில் அன்னமும், செங்கீரையும், மாவடுவும் கொண்டு போய் எம்பெருமானுக்கு நைவேத்யம் செய்து சிவனடியார்களுக்கு அளித்து வந்தார்.

தாயனூர் மேற்கொண்டிருக்கும் தொண்டினையும் அவர் தம்மிடம் கொண்டுள்ள பக்தியையும் உலகோருக்கு எடுத்துக் காட்டத் திருவுள்ளம் கொண்டார் அம்பிகை பாகன்.

தாயனூரின் செல்வம் குறையத் தொடங்கியது. வறுமை அவரைப் பற்றியது. அந்த நேரத்திலும் அவர் எம்பெருமானுக்குச் செய்து வந்த திருத்தொண்டை நிறுத்தவில்லை. ஆட்களை வைத்து வேலை வாங்கிய அவர் இப்போது மற்றவர்களிடம் கூலிக்கு வேலை செய்யச் சென்றூர். வேலை செய்து கூலியாகப் பெறும் நெல்லில் செந்நெல்லை எம்பெருமானுக்குத் திருவமுது படைக்க என்று ஒதுக்கி விடுவார். கார் நெல்லை மட்டுமே தமது உணவுக்கு எடுத்துக் கொள்வார்.

பார்த்தார் ஈசன். அந்த வறுமையிலும் அவர் தமது தொண்டை விடாது நடத்தி வருவது கண்டு, அவ்வூரிலே விளையும் நெல் முழுவதும் செந்நெல்லாகவே இருக்குமாறு செய்து விட்டார். ஆகவே தாயனூர் வேலை செய்த இடத்தில் கூலியாக நெல்லைப் பெறும்போது அனைத்தும் செந்நெல்லாகவே இருந்தன.

தாயனூருக்குக் குதூகலம். தமக்குச் சாப்பாட்டுக்கு நெல் இல்லையே என்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. ஈசனுக்குத் திருவமுது படைக்க அனைத்தும் செந்நெல்லாகவே கிடைக்கிறதே என மகிழ்ந்தார்.

உணவுக்கு நெல் இல்லாமல் போனது கண்டு அவர் மனைவியார் கொல்லையில் விளைந்திருந்த கீரைகளைப் பறித்து

---

1 திருத்துறைபூண்டிக்கு வடக்கே இரண்டரை மைலில் உள்ள தண்டலைச்சேரி எனப்படும் தண்டலை நீணெறி என்ற ஊர்.

வந்து ஆய்ந்து எடுத்து அவற்றைச் சமைத்து வைத்தார். தாயனுர் அதை மிகவும் சுவைத்துச் சாப்பிட்டார்.

கீரையும் எத்தனை நாட்களுக்கு வரும்? பறிக்கப் பறிக்கக் கொல்லையிலே கீரையே அற்றுப் போய்விட்டது. என்ன செய்வார்? குளிர்ந்த நீரைத்தான் இருவரும் ஆகாரமாகப் பருகினர். ஆனுல் எம்பெருமானுக்குத் தினமும் திருவமுது கொண்டு சென்று சமர்ப்பித்து அடியார்களுக்குத் தருவது மட்டும் நிற்கவில்லை.

அன்றைத்தினம் வழக்கம் போல தாயனுர் சிவபெருமானுக்கு அமுது செய்விக்க அன்னமும், கீரையும், மாவடுவும் கூடையில் வைத்துத் தலையிலே சுமந்தபடி சென்ருர். பின்னுல் அவர் மனைவியார் பஞ்சகவ்வியத்தை எடுத்துக் கொண்டு சென்ருர்.

ஆகாரமின்மையால் தாயனுர் மிகவும் சோர்ந்து போயிருந்தார். அவரால் நடக்க முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்ருர்.

அவர்கள் தெருவைத் தாண்டி புல்வெளியில் இறங்கினர். நிலம் அங்கங்கே வெடிப்பு விட்டிருந்தது.

ஓரிடத்தில் தாயனுரின் கால் இடறியது. கீழே விழப்போன கணவரை, பின்னுல் வந்த அம்மையார் பஞ்சகவ்வியம் ஏந்தி மூடிச் சென்ற கரத்தால் அணைத்துப் பிடித்து விழாமல் தடுத்தார். ஆனுல் கூடையிலிருந்த பொருள்கள் தரையில் விழுந்து விட்டன. அமுதும் கீரையும் மாவடுவும் நிலப்பிளப்புகளிலே சிந்தின.

தாயனுர் அடைந்த துயரம் விவரிக்க இயலாததாக இருந்தது. பூமியிலே விழுந்து புரண்டு கதறினுர்.

“ஐயனே, நான் என்ன தவறு செய்தேன்? இன்று உனக்குத் திருவமுது அளிக்க முடியாதபடி ஆகிவிட்டதே! நான் என்ன செய்வேன்? இத்தனை நாட்கள் நடந்து வந்த காரியம் இன்று நிறைவேருது போக என்ன காரணம்? ஒருநாளும் தவறக்கூடாதென்றல்லவா நான் பட்டினி கிடக்க நேரினும் உனக்குச் செய்யும் கைங்கரியத்தை விடாது நடத்தி வந்தேன். இன்று அதற்கு இடர் நேருவதென்ன? இனியும் நான் உயிர் வாழ்வதில் பயனில்லை'' என்று கண்ணீர் விட்டுக் கதறியபடி எழுந்திருந்தார். அறிவாளை எடுத்து தமது கழுத்தை அறுக்கத் தொடங்கினுர்.

இறைவன் அதற்கு மேல் பொறுப்பாரா? அடியார்க்கும் அடியாராகிய அவர் தம் அடியார் துன்புறுவதை அனுமதிப்பாரா?

நிலப்பிளப்பிலிருந்து ஒரு கரம் நீண்டு தாயனாரின் கையைப் பிடித்துத் தடுத்தது.

“அன்பனே, வேண்டாம், நிறுத்து!” என்ற குரல் கேட்டது.

இறைவனின் திருக்கரம் பட்டதும் தாயனாரின் மேனி புளகாங்கிதம் அடைந்தது. எப்பேர்ப்பட்ட பாக்கியசாலி அவர்!

“நீ கொண்டு வந்த அமுதினை நாம் இங்கே வந்து ஏற்றுக் கொண்டோம். நீயும் உன் மனைவியும் எமது சிவலோகம் வந்து சேருங்கள்” என்ற குரல் கேட்டது.

அதே சமயம் நிலப்பிளப்புகளிலிருந்து ஈசன் மாவடுவைக் கடித்துச் சாப்பிடுவதால் எழும் ‘விடேல் விடேல்’ என்னும் ஓசை கேட்டது. தரையிலே சிந்திய அமுதும் செங்கீரையும் மறைந்து போயின.

தாயனார் அளவில்லா மகிழ்ச்சி கொண்டு எம்பெருமானைப் பலவாறாகப் போற்றித் தொழுதார்.

அரிவாளால் கழுத்தை அறுக்க முயன்றதால் அவருக்கு அரிவாட்டாயர் என்ற பெயர் நிலைத்தது. வெகு நாட்கள் எம்பெருமானுக்குத் திருத்தொண்டு செய்து வந்து, முடிவில் மனைவியோடு தாயனார் சிவலோகம் சென்றார்.

24. நாத வெள்ளத்தை நாடிய பெருமான்

மழ நாட்டிலே திருமங்கலம்1 என்னும் ஊர் இருக்கிறது. அவ்வூரிலே ஆயர்குலத்தில் பிறந்தவர் ஆனாயர் என்பவர். சிவபெருமானிடம் இடையறாத பக்தி கொண்டவர். பஞ்சாக்ஷரத்தை அவர் பக்தியோடு அனுதினமும் உச்சரித்து வருவார்.

ஆனாயர் அவ்வூரிலுள்ள இடையர்களுக்கெல்லாம் தலைவர். அவர்தான் தினந்தோறும் மாடுகளையும் கன்றுகளையும் பக்கத்

1 திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடியிலிருந்து பூவாளூர் போகும் மார்க்கத்தில் உள்ளது.

துக் காடுகளுக்கு ஓட்டிச் சென்று மேய்த்து வருவார். இசையி லும் அவருக்கு ஈடுபாடு உண்டு. புல்லாங்குழல் வாசிப்பார். அக்குழலின் நாதத்திலே இறைவனின் திருமந்திரமான பஞ்சா க்ஷரத்தை வாசித்து மகிழ்வார்.

வழக்கம்போல ஒரு நாள் ஆனுயர் மாடு கன்றுகளை ஓட்டிக் கொண்டு மேய்ச்சலுக்குச் சென்றார்.

அங்கே ஓரிடத்தில் கொன்றை மரம் ஒன்று பூத்துக் குலுங்கி நின்றது. அதைப் பார்த்ததும் ஆனுயரின் மனத்திலே சடையுடைய சிவபெருமானுடைய தோற்றமே எழுந்தது. எம் பெருமானுடைய நினைவு எழுந்ததும் அவர் தம்மை மறந்தார். வேய்ங்குழலை எடுத்துப் பஞ்சாக்ஷரத்தை வாசிக்கத் தொடங் கினார்.

குழலிலிருந்து இனிய நாதம் எழுந்தது. இறைவனின் திருமந்திரம் இசையுடன் கலந்து பரவியது. வண்டுகளின் ரீங்காரம் போன்று நாதம் ஒவ்வொரு ஆன்மாவின் செவிகளிலும் புகுந்தது.

மேய்ந்து கொண்டிருந்த மாடுகள் இசையிலே மயங்கின. கடைவாயிலே தொங்கும் புல்லோடு அவை நின்றன. துள்ளிக் குதித்து ஓடும் கன்றுகள் தங்கள் ஓட்டத்தை நிறுத்திவிட்டு அவரைப் பார்த்தன. காற்றிலே அசைந்தாடும் மரங்கள் நிலை யாக நின்றன.

பக்கத்தே அடர்ந்த சோலையிலிருந்து மயிலும், கிளியும், புறாவும் பறந்து வந்தன. புதர்களிலே பதுங்கிக் கிடந்த ஓநாய், குள்ளநரி, சிறுத்தை முதலான காட்டு மிருகங்கள் நாதத்தால் இழுக்கப்பட்டு அங்கே வந்து சேர்ந்தன. புற்றுகளிலிருந்து வெளிப்பட்ட நாகங்கள் அந்த இசையிலே மயங்கி படம் எடுத்த படி நின்றன.

நேரம் செல்லச் செல்ல ஆனுயரின் இசை கல்லையும் உருகச் செய்து விடுவதாக மாறி வந்தது. மிருகங்களும் பறவைகளும் அவரை நெருங்கி வந்து சூழ்ந்து கொண்டு இசையை அனு பவித்தன.

மயிலின் பக்கத்தே பாம்பு, அதன் எதிரே எலி, பசுவின் அருகில் சிறுத்தை, தங்கள் விரோதத்தையும் மறந்து அவை கான மழையிலே மயங்கி நின்றன.

ஆனாயரின் இசை விண்ணவர்களையும் கவர்ந்து இழுத்தது. தேவர்களும் கந்தர்வர்களும் கின்னரர்களும் வந்து கூடினர். எங்கும் ஆனந்த வெள்ளம்.

மண்ணும் விண்ணும் நிறைந்த அவ்விசை எம்பெருமானின் திருச்செவியிலும் சென்று அலைமோதியது. தவவல்லியாகிய பார்வதியை அழைத்துக் கொண்டு பக்தனிடம் ஓடோடி வந்தார்.

ரிஷபாருடராய் தேவியுடன் சிவபெருமானைத் தரிசித்த ஆனாயரின் உள்ளம் ஆனந்தத்தால் நிறைந்தது.

"அன்பனே, உன் குழலோசையை நம் அடியார்களும் கேட்க வேண்டாமா? இப்படியே எம்மிடம் வா!" என்று அழைத்தார் பெருமான்.

வேய்ங்குழல் ஊதியவாறு ஆனாயர் இறைவனோடு ஐக்கியமானார்.

ஆனாயரின் பெருமையை எடுத்துக் கூறி அவருக்குத் தாம் அடியார் என்று பாடிய சுந்தரர் மேலும் அடியார்களின் பெருமையை எடுத்துப் பாடலானார்.

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான்அடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

25. அடியார் துன்பம் நீங்க அரசு பெற்றவர்

மதுரை மாநகரிலே மூர்த்தி எனப் பெயர் கொண்ட சிவ பக்தர் ஒருவர் இருந்து வந்தார். வணிகர் குலத்திலே பிறந்த அவர் சுந்தரேசப்பெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார்.

பகவானுக்குச் சந்தனக் காப்பு சாத்துவதால் சிவலோகத்தில் ஒரு கோடி தேவ வருடம் வாழும் பாக்கியம் கிடைக்கும்

என சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மூர்த்தியார் அத்தொண்டைப் பெரிதும் விரும்பி மேற்கொண்டார். தினந் தோறும் பெருமானுக்குச் சாத்த சந்தனம் அரைத்துக் கொடுக் கும் பணியை அவர் கைக்கொண்டார்.

இவ்வாறு நடந்து வரும்போது, ஒரு சமயம் கர்நாடக அரசன் பாண்டிய நாட்டைக் கைப்பற்ற எண்ணம் கொண்டு பெரும் படையுடன் வந்தான்; பாண்டிய மன்னன் தன் படை களுடன் எதிர்த்துச் சென்று அவனுடன் போரிட்டான். எதிரி களின் தாக்குதல்களுக்குப் பாண்டிய சேனையால் ஈடு கொடுக்க முடியவில்லை. போரிலே பாண்டியன் தோல்வியுற்றான்.

பாண்டிய நாடு கர்நாடக அரசனுடைய ஆளுகைக்கு உட் பட்டது. மதுரையிலேயே தங்கி அவன் அரசு புரியத் தொடங் கினான்.

கர்நாடக மன்னன் சமண சமயத்தைத் தழுவியவன். ஆகவே அவன் தன் அதிகாரத்துக்குட்பட்ட பாண்டிய நாட்டி லும் அம்மதம் தழைத்தோங்க ஏற்பாடுகளைச் செய்யலானான். மக்களைச் சமண மதத்தைத் தழுவுமாறு கட்டாயப்படுத்தினான். அவன் நோக்கத்துக்குத் தடையாக இருந்த சிவனடியார்களைக் கொடுமைப் படுத்தினான். அவர்கள் தங்கள் தொண்டினைச் செய்ய முடியாதவாறு பலவித இடர்களைத் தோற்றுவித்தான்.

அந்தக் கஷ்டங்களுக்கு ஆலயத்திலே சந்தனம் அரைத்துக் கொடுத்து வந்த மூர்த்தியாரும் உள்ளானார். அவருக்குத் தேவை யான சந்தனக் கட்டைகள் கிடைக்காது அவற்றைத் தானே வாங்கி வெளியிடங்களுக்கு அனுப்பி வைத்தான். நகரிலே சந்தனக் கட்டைகள் கிடைக்காது செய்தான்.

மூர்த்தியாரோ அரசனால் தோற்றுவிக்கப்பட்ட கஷ்டங் களைக் கண்டு அஞ்சவில்லை. பக்கத்து ஊர்களுக்குச் சென்று கட்டைகளை வாங்கி வந்து தம் பணியைத் தொடர்ந்தார்.

அரசன் காவலர்கள் மூலம் மூர்த்தியாருக்கு எங்கிருந்து சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன என்பதை அறிந்து அவர் களை அச்சுறுத்தி மூர்த்தியாருக்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்க முடியாது செய்தான்.

அன்றைத்தினம் மூர்த்தியார் அலையாத இடம் இல்லை. எங்கே சென்றாலும் ஏமாற்றம்தான். சோர்ந்த உள்ளத்தோடு ஆலயம் திரும்பினார்.

"இறைவா, இந்த கொடுமைக்கு முடிவு கிடையாதா? உனக்குச் சேவை செய்வதைத் தடுக்கும் மூர்க்கனான இந்த அரசனின் ஆட்சி ஒழிந்து உன்னிடம் பக்தி மிகுந்தவரின் ஆட்சி என்றுதான் ஏற்படப் போகிறதோ?" என்று சலித்துக் கொண்டே எம்பெருமானின் ஆலயத்துக்குத் திரும்பினார்.

அன்றைக்கு எம்பெருமானுக்குத் தாம் செய்து வந்த புனித கைங்கரியம் நின்று விட்டதே என அவர் உள்ளம் வேதனைப் பட்டது. சந்நிதானத்தில் பித்துப் பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்தார்.

மாலையும் வந்துவிட்டது; மூர்த்தியாரின் கைகள் துடித்தன. எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்யும் நேரமல்லவா! அவரால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்திருந்தார்.

அரசன் சந்தனக்கட்டைக்குத் தடை விதித்தானே ஒழிய அதை அரைக்கும் கைகளுக்குத் தடை விதிக்கவில்லையே?

நேராகச் சந்தனம் அரைக்கும் கல்லை நெருங்கினார். சுந்தரேசரை மனத்தில் தியானித்தவராய் முழங்கையைக் கல்லிலே தேய்க்கத் தொடங்கினார்.

தோல் வழண்டு உதிரம் பெருகியது. மூர்த்தியாரின் நினைவு முழுவதும் பகவானிடமே லயித்திருந்தது. கையை எடுக்காது தேய்த்துக் கொண்டிருந்தார். முழங்கை எலும்பு தேய்ந்து அதனுள்ளிருந்து மூளை ஒழுகியது. அப்போதும் அவர் தம் செய்கையை நிறுத்தவில்லை.

இறைவனால் பொறுக்க முடியவில்லை.

"அன்பனே, எம்மிடம் நீ கொண்டுள்ள பக்தியால் செய்யத் துணிந்த இக்கொடிய செயலை நிறுத்து. உனக்கு இடர் விளைவித்த அரசன் இறந்து போவான். அவன் அரசை நீயே கைக் கொண்டு எமக்குச் செய்துவரும் திருப்பணியை நன்றாக நடத்தி வந்து நமது லோகம் சேர்வாயாக!" என்று அசரீரி எழுந்தது.

திடுக்கிட்ட மூர்த்தியார் தமது கையைப் பார்த்தார். எலும்பு தேய்ந்து உதிரம் ஒழுகும் முழங்கை வளர்ந்து முன் போல் ஆயிற்று. அவர் உள்ளம் எம்பெருமானுடைய திருவருளை எண்ணி எண்ணி பக்தியால் உருகியது.

ஈசன் அறிவித்தவாறே அன்று இரவு கர்நாடக மன்னன் உயிர் துறந்து விட்டான். அவனுக்குச் செய்ய வேண்டிய

ஈமக்கடன்களை அமைச்சர்களே நடத்தினர். அரசனுக்குப் பிள்ளை இல்லை. ஆகவே அடுத்து அரசபீடத்தில் ஏறுவது யார் என்ற பிரச்னை உண்டாகியது.

இம்மாதிரி இக்கட்டான நேரங்களில் பட்டத்து யானை யின் துதிக்கையிலே மாலையைக் கொடுத்து வீதியிலே செல்ல விடுவது என்றும் அந்த யானை மாலையை யார் கழுத்திலே அணிவிக்கிறதோ அவரையே அரசராக முடி சூட்டுவது என் றும் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளது. அதே வழியை அப்போதும் கடைப்பிடிப்பதென்று அமைச்சர்கள் முடிவு செய் தனர்.

பட்டத்து யானையை நீராட்டி அழைத்து வந்து விதிப்படி பூஜை செய்தனர். பின்னர் அழகிய பூமாலையை அதன் துதிக் கையிலே கொடுத்து, 'நாட்டுக்குரிய அரசனைத் தேர்ந்தெடுத்து அழைத்து வா!' என வேண்டி அனுப்பினர்.

வீதியிலே இறங்கிய யானை எங்கும் நிற்காது எம்பெரு மானின் ஆலயத்தை வந்தடைந்தது.

மூர்த்தியார் பொழுது விடிந்ததும் வழக்கம் போல நீராடி விட்டு எம்பெருமானின் ஆலயத்துக்கு வந்து விட்டார். தெரு விலே மக்கள் அரசன் முதல் நாள் இரவு இறந்து விட்டான் என்று பேசுவதைக் கேட்டபோது அவர் உள்ளம் சிலிர்த்தது. முதல் நாள் ஆலயத்திலே அசரீரி சொன்னவாறே சைவத்துக்கு இடர் விளைவித்த கொடுங்கோல் மன்னன் இறந்துவிட்டான். அவரையல்லவா அரசைக் கைக்கொள்ளுமாறு ஆண்டவன் கூறியிருந்தார்! அது எவ்விதம் நிகழப் போகிறது?

'இறைவன் திருவுள்ளம் அவ்விதம் இருக்குமானால் அதை மீற மானிடர்க்குச் சக்தி ஏது?' என்று எண்ணியவராய் ஆலய வாயிலில் நின்றிருந்தார் மூர்த்தியார்.

மாலையைத் துதிக்கையில் ஏந்தியவாறு ஆலயத்தை நெருங்கிய பட்டத்து யானை தன் துதிக்கையிலிருந்த மாலையை கோபுரவாயிலில் நின்று கொண்டிருந்த மூர்த்தியாரின் கழுத் திலே அணிவித்தது. பின்னர் அவர் முன்பு மண்டியிட்டுப் பிளிறி தன் வணக்கத்தைத் தெரிவித்து, அவரைத் துதிக்கை யால் தூக்கித் தன் முதுகிலே அமர்த்திக் கொண்டது.

ஜய கோஷம் வானைப் பிளந்தது. மக்கள் ஆரவாரத் தோடு மூர்த்தியாரின் மேல் மலர்களைத் தூவித் தங்கள் மகிழ்ச் சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அமைச்சர்கள் ஓடி வந்து மூர்த்தியாரைப் பணிந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பிறகு அவரை மேளதாளங்களுடன் முடிசூட்டு விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

மங்கள நீராடலுக்குப் பின்னர் அலங்காரமாகச் சிங்காதனத்துக்கு அவரை அழைத்துச் செல்ல அமைச்சர்கள் வ்ந்தனர்.

மூர்த்தியார் அவர்களை அன்போடு வரவேற்று ஆசனமளித்தார்.

''என்னிடம் நீங்கள் கொண்டுள்ள அன்பு மகத்தானது. அதற்காக நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவன் ஆகிறேன். எனக்கு முடிசூடும் முன்பு உங்கள் வேண்டுகோளை ஏற்க ஒரு நிபந்தனை'' என்றார்.

''தெரிவியுங்கள், பிரபோ!'' என்றனர் அமைச்சர்கள்.

''நானோ சைவத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவன். நான் அரசனானால் நாட்டிலே சைவமே மேலோங்கியிருக்க வேண்டும். திருநீறே அபிஷேகமாகவும், ருத்திராக்ஷமே அணிகளாகவும், ஜடைமுடியே கிரீடமாகவும் எனக்கு விளங்குவதையே நான் விரும்புகிறேன்'' என்றார் மூர்த்தியார்.

அமைச்சர்கள் அவருடைய வேண்டுகோளுக்குச் சம்மதித்தனர். நெற்றியிலே திருநீறு பூசி ஜடைமுடி தரித்து, கழுத்திலே ருத்திராக்ஷ மாலைகளுடன் பட்டத்து யானை மீது ஆரோகணித்து எம்பெருமானுடைய ஆலயத்துக்குச் சென்று அவரைத் தரிசித்து மகிழ்ந்தார். பிறகு வீதிகள் வழியே ஊர்வலமாகச் சென்று அரண்மனையை அடைந்து பாண்டிய நாட்டு மன்னராக முடி சூடிக்கொண்டார்.

மூர்த்தியாரின் விருப்பம் மிகக் குறுகிய காலத்துக்குள்ளாகவே நிறைவேறியது. நாட்டிலே சமணம் ஒழிந்து சைவம் மேலோங்கியது. கொடுமைக்காளான சிவனடியார்கள் துன்பம் நீங்கி இறைவனுடைய தொண்டிலே ஈடுபட்டனர்.

மூர்த்தியார் தாம் நடத்தி வந்த திருப்பணியைத் தினமும் தொடரச் செய்தார்.

செங்கோல் தாங்கி ஆட்சி நடத்திய மூர்த்தியார் பல காலம் மக்களுக்கும் இறைவனுக்கும் தொண்டுகள் அனேகம் செய்து முடிவில் சுந்தரேசப் பெருமானின் திருப்பாதங்களைச் சேர்ந்தார்.

26. மாலை சூட்டிய முருகனார்

சோழ நாட்டிலே திருப்புகலூர்[1] என்றொரு தலம் இருக்கிறது. பசுமையான சோலைகள் சூழ்ந்த ஊராகும் அது.

அவ்வூரிலே அந்தணர் குலத்திலே பிறந்தவர் முருகன் என்பவர். முருகனார் சிறந்த சிவபக்தர். அவர் நினைவு எப்போதும் எம்பிரானைப் பற்றியதாகவே இருக்கும். பஞ்சாக்ஷர ஜபம் செய்வார். அவர் வாய் சதா பகவானின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டே இருக்கும்.

வர்த்தமானேச்வரர் என்ற பெயரில் அவ்வூரில் எம்பெருமானுக்கு ஓர் ஆலயம் உண்டு. அப்பெருமானுக்கு மலர் மாலைகள் சாற்றும் தொண்டை மேற்கொண்டிருந்தார் முருகனார்.

தினமும் விடிவதற்கு முன்பே எழுந்து விடுவார். திருக்குளத்திற்குச் சென்று நீராடி புத்தாடை அணிந்து சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மாக்களை முடித்துக் கொண்டு குடலை ஏந்தி புறப்பட்டு விடுவார். சோலைகளிலும் நந்தவனங்களிலும் புகுந்து எம்பெருமானுக்குப் பிடித்தமான நால்வகை மலர்களைப் பறிப்பார். கொன்றை சண்பகம் போன்ற கோட்டுப் பூக்கள் எனப்படும் மரங்களில் பூக்கும் மலர்கள்; முல்லை, மல்லி, சம்பங்கி போன்ற கொடிப் பூக்கள்; நந்தியாவட்டை, அலரி முதலான செடிப் பூக்கள்; தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம் எனப்படும் நீர்ப்பூக்கள் ஆகிய நால்வகை மலர்களையும் கொய்து வந்து சுத்தமான தனியிடம் ஒன்றில் அமர்ந்து மாலைகளாகத் தொடுப்பார்.

இறைவனுக்கு ஆறு காலங்களில் பூஜை செய்வர். ஆகவே ஒவ்வொரு காலத்துக்கும் ஏற்ப ஆறு விதமாக மலர்களை மாலையாகத் தொடுப்பார். கோவை எனப்படும் கோத்துக் கட்டுவது, சுருக்கிக் கட்டுவதாகும் இண்டை, இணைத்துக் கட்டுவது, தண்டில் கட்டுகிற கண்ணி, பிணைத்துக் கட்டும் பிணையல், தொடுத்துக் கட்டும் தொடையல் எனப்படும் ஆறுவகைக்கேற்ப மலர்களை அவ்வவ்வகையைச் சேர்ந்தவற்றைப் பிரித்து மாலைகளாகத் தொடுத்து ஆறு காலங்களிலும் ஆலயம் சென்று இறைவனுக்குச் சாத்தி அர்ச்சனை செய்வார். மலர்களைப் பறிக்கும் போதும் அவற்றை ஆய்ந்து தொடுக்கும் போதும் அவர் பஞ்சாக்ஷரத்தை விடாது ஜபிப்பார்.

---

1 தஞ்சை மாவட்டத்திலே நன்னிலம் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே நான்கு மைலில் உள்ளது.

இவ்வாறு இருந்துவரும் நாளையில் ஒரு சமயம் அவ்வூருக்கு ஞானசம்பந்த பெருமான் எழுந்தருளினர். முருகனர் அவரைத் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று அவருக்கும் அடியார் களுக்கும் திருவமுது செய்வித்தார். பூர்வஜன்மத்தில் செய் திருந்த புண்ணியத்திஞல் இப்பேறு கிடைக்கப்பட்ட முருகனர் சம்பந்த பெருமானின் நண்பரானர். சம்பந்தர் பெருமானின் திருமணத்தில் கலந்து கொள்ள அழைப்பு வர, முருகனர் புறப் பட்டுச் சென்றார். அங்கே சம்பந்தரோடு இறைவனின் ஜோதி யில் கலந்து சிவபெருமானின் திருவடிகளை அடையும் பாக்கியம் பெற்றார்.

27. ருத்திரம் ஜபித்து ருத்திரனை அடைந்தவர்

சோழ நாட்டிலே உள்ள திருத்தலையூர் என்னும் ஊரில் பசுபதி எனப்படும் அந்தணர் ஒருவர் இருந்தார். அயனும் மாலும் அடிமுடியறியாது தோற்ற எம்பெருமானிடம் பசுபதி யார் அளவில்லாத பக்தி கொண்டிருந்தார். பகவானுக்குப் பரம பிரீதியான ருத்திரத்தை தினமும் ஜபித்து வந்தார் அவர். அத ஞல் அவரை ருத்திரபசுபதியார் என்றே அழைத்தனர்.

ருத்திரத்தை வேதத்தின் கண் என்று கூறுவார்கள். குடத்திலே நீர் வைத்து ருத்திர ஜபம் செய்து அபிஷேகம் செய்து கொண்டால் ரோக நிவர்த்தி ஏற்படும் என்பார்கள்.

மிகவும் போற்றப்படும் ருத்திரத்தைப் பசுபதியார் தினமும் காலையிலிருந்து மாலைவரை குளத்திலே கழுத்தளவு நீரில் நின்று கைகளைச் சிரசில் குவித்து ஜபம் செய்வார்.

பசுபதியார் செய்த ஜபம் இறைவனின் உள்ளத்தைக் குளிர வைத்தது. பக்தனுக்கு அருள்பாலிக்க எண்ணம் கொண்டு அவருக்குத் தரிசனம் கொடுத்துத் தமதிடத்துக்கு அழைத்துச் சென்றார்.

28. திருநாளைப் போவார்

சோழ நாட்டிலே மேற்கா நாடு என்றொரு பிரிவு. அந்நாட் டிலே கொள்ளிடநதிக் கரையோரமாக அமர்ந்திருக்கிறத ஆதனூர் என்ற கிராமம். ஊருக்குப் புறம்பே புலையர்கள் வசிக் கும் சேரி. அவர்கள் குலத்திலே உதித்தவர் நந்தனர் என்பவர்.

நந்தனுர் சிவபெருமானிடம் பக்தி கொண்டவர். சிவாலயங்களில் உபயோகப்படும் பேரிகை, நகரா முதலான வாத்தியங்களுக்குத் தேவையான தோலும், வீணை, யாழ் முதலான வாத்தியங்களுக்கான நரம்பும் எம்பெருமானுக்குக் கோரோசனையும் கொண்டு போய் கொடுப்பார். எம்பெருமானுக்குச் செய்யும் இத் திருப்பணியில் அவர் கொஞ்சமும் ஊதியம் பெறுவதில்லை. பகவானுக்குத் தம்மால் சமர்ப்பிக்கப்பட்டதாக இருக்கட்டும் என்று சொல்லி மனம் மகிழ்வார்.

புலையர் குலத்தில் பிறந்தவரானதால் அவர் ஆலயத்துள் நுழைவதில்லை. கோபுர வாயிலில் நின்றவாறே சிரம் குவித்து மனத்தால் இறைவனைத் தரிசித்துத் தொழுவார். அப்போது அவர் கண்களினின்று நீர் ஊற்றெடுத்து வழியும். தேகம் முழுவதும் உருகிக் கரைவது போல அவர் பக்தியோடு ஈசனைத் தொழுவார்.

ஆலயத்துக்கு வேண்டிய தோல் முதலான பொருள்களை அவர் கொடுத்து வந்ததால் ஊரார் அவர் ஜீவனத்துக்கென சில நிலங்களை மானியமாகக் கொடுத்திருந்தனர். அதில் கிடைத்த வருமானத்தில் தமது ஜீவனத்துக்குப் போக எஞ்சியதை எம்பெருமான் திருப்பணிக்கே செலவிட்டு வந்தார்.

நந்தனுர் இவ்வாறு பக்கத்திலுள்ள சிவ ஸ்தலங்களுக்குச் சென்று அங்குள்ள ஆலயங்களுக்குத் தோலும் நரம்பும் கொடுத்து வரும்போது வைத்தீஸ்வரன் கோவிலுக்கு மேற்கே இரண்டு மைலிலுள்ள திருப்புன்கூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலோகநாதரைக் கண்டு தரிசிக்க விருப்பம் கொண்டார்.

அவர் விருப்பமும் விரைவிலேயே நிறைவேறியது. திருப்புன்கூர் ஆலயத்துக்கு வந்து சேர்ந்தார். கோபுர வாசலில் நின்று எம்பிரானைத் தரிசிக்க முயன்றுர்.

அவ்வூர் ஆலயத்திலுள்ள நந்தி சற்று பெரியதானது. ஆகவே இறைவனின் திருமேனியைத் தரிசிக்க முடியாது அது மறைத்திருந்தது.

நந்தனுரின் உள்ளம் ஏமாற்றத்தால் வேதனை அடைந்தது. எத்தனை ஆசையோடு அவர் புறப்பட்டு வந்தார்?

"ஐயனே, உன்னைக் கண்ணுரக் கண்டு மகிழலாமென ஓடி வந்தேனே! என் எண்ணம் ஈடேருமல் போய்விட்டதே!" என்று கண்ணீர் உகுத்தவராய் வேண்டினுர்.

பக்தனின் உள்ளத்தை அறிந்த ஈசன் அவனை ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்ல அனுமதிக்கவில்லை. தம்மைக் கண்ணாரக் கண்டு மகிழட்டும் என அருளினார். எதிரே படுத்திருந்த நந்தியைப் பார்த்துத் தமது பக்தன் தரிசனம் செய்வதற்கு உதவும் வகையில் சற்று நகர்ந்திருக்குமாறு சொன்னார். நந்தியும் இறைவன் விருப்பப்படி வாயிலை விட்டு நகர்ந்து கொண்டது.

நந்தனார் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார். எம்பெருமானுடைய திருமேனியைத் தரிசித்து ஆனந்தம் அடைந்தார். பித்தனைப் போல் கூத்தாடினார். கண்கள் பக்தி வெள்ளத்தைச் சொரிந்தன. பலவாறாகப் போற்றித் துதித்தார்.

தமக்கு அருள் செய்த இறைவனுக்குத் திருப்பணி செய்ய விருப்பம் கொண்டார்.

சிவலோகநாதரின் ஆலயத்துக்கு அருகே ஒரு பள்ளம் இருப்பதைக் கண்டார் நந்தனார். அதைக் குளமாக்கினால் மிகவும் உபயோகமாக இருக்கும் எனத் தோன்றியது. உடனே ஊரிலிருந்து ஆட்களை வரவழைத்துக் குளம் வெட்டும் பணியை ஆரம்பித்தார்.

விரைவிலேயே வேலை முடிந்தது. திருக்குளம் தயாராகி விட்டது. நிறைந்த உள்ளத்தோடு இறைவனைத் தொழுது ஊர் திரும்பினார்.

இவ்வாறு சுற்றுவட்டத்தில் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று தம்மால் முடிந்த திருப்பணிகளைச் செய்து வந்த நந்தனாருக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. தில்லைக்குச் சென்று பொன்னம்பலவாணனைத் தரிசிக்க வேண்டும் என்பதே. அடியார்கள் எம்பெருமானின் திருக்கூத்து வைபவத்தைக் கூறும் போதெல்லாம் நந்தனார் ஆவலோடு அதைக் கேட்பார். தாமும் சிதம்பரம் சென்று நடராஜரைத் தரிசிக்கப் போவதாகக் கூறுவார்.

தில்லைக்குப் போகவேண்டும் என்ற ஆவல் எழுந்ததும், தாமும் தில்லைக்குப் போய் பகவானைத் தரிசிக்கப் போவதாக எல்லோரிடமும் கூறிவிட்டார். ஆனால் அமைதியான சூழ்நிலையில் அதைப்பற்றி யோசிக்கும் போதுதான் அவருக்கு அப்பிரயாணத்தில் உள்ள தடங்கல்கள் தெரியவந்தன.

தில்லைக்கு அவர் போகலாம்; ஒரு நாள் பிரயாணம்தான். ஆலயம் மிகப் பெரியதாயிற்றே! உள்ளே சென்றால்தான்

இறைவனின் திருத்தாண்டவக் கோலத்தைத் தரிசிக்க முடியும்! ஆலயத்துக்குள் அவர் எவ்வாறு செல்வார்?

அதை நினைக்கும்போது அவருக்கு வேதனையாகத்தான் இருந்தது. அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. மனத்துக்குள்ளாகவே குமைந்தார்.

நந்தனாரைப் பார்ப்பவர்கள் எல்லோரும் அவர் எப்போது சிதம்பரம் போகப் போகிறார் என்று கேட்கத் தொடங்கினர். அவருடைய சிவபக்தியை அனைவரும் அறிவார்கள் தில்லைக்குப் போகப் போவதாக நந்தனார் கூறியதிலிருந்து அவருடைய ஆவல் எவ்வளவுக்கு இருக்கும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். அதனால்தான் அவரைப் பார்க்கும் போதெல்லாம் அவர் தில்லைப் பிரயாணத்தைப் பற்றிக் கேட்டனர்.

அவர்கள் கேள்விக்கு நந்தனார் என்ன பதில் அளிப்பார்? உண்மையைச் சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தத்தளித்தார். அவசரமாகக் கவனிக்க வேண்டிய காரியம் இருப்பதாகவும் அதனால் மறுநாளைக்குத் தான் போவதாகவும் கூறினார்.

அவர் குறிப்பிட்ட மறுநாள் அடுத்தடுத்து வந்து போயிற்று. ஆனால் தில்லைக்கு அவர் போகவில்லை.

சிதம்பரம் சென்று ஆனந்த நடராஜரைத் தரிசிக்கத் தமக்கு வாய்ப்பில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தாலும் அவரைத் தரிசிக்க வேண்டும் என்ற விருப்பத்தை மட்டும் நந்தனார் விடவில்லை. 'நாளைக்குப் போவேன்; நாளைக்குப் போவேன்' என்று அவர் கூறி வந்தமையால் அனைவரும் திருநாளைப் போவார் என்றே அவரை அழைக்கத் தொடங்கினர்.

நந்தனாரின் உள்ளம் ஏமாற்றத்தை ஏற்க விரும்பவில்லை. ஏதேதோ சமாதானம் சொல்லியும் அது கேட்கவில்லை. நாளுக்கு நாள் தில்லைக்குப் போகவேண்டும் என்ற ஆசை சுடர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது.

ஒரு நாள் அவர் உறுதியோடு கிளம்பிவிட்டார். ஆலயத்துள் நுழையும் தகுதி அவருக்கில்லாவிட்டாலும், வானளாவி எழுந்து எம்பெருமானின் பெருமையை அறைகூவும் கோபுரங்களைத் தரிசித்து ஆலயத்தை வலம்வந்து வீழ்ந்து, வணங்கியாவது திரும்ப வேண்டும் என்ற முடிவோடு சிதம்பரத்துக்குப் புறப்பட்டு விட்டார்.

நகரின் எல்லையை அடைந்தபோது அவர் கொண்ட மகிழ்ச்சி அளவிட முடியாது. எத்தனையோ நாட்களாக அவர் கண்டு வந்த கனவு அன்று நனவாகி விட்டதே. தூரத்தே தெரிந்த உயரமான கோபுரங்களைக் கண்டு சிரமேற் கை குவித்து ஆனந்தக் கூத்தாடினார்.

எல்லையைத் தாண்டி நகரினுள் நுழைந்த நந்தனார் வீதிகள் தோறும் அந்தணர்களுடைய யாக சாலைகளையும் வேதம் அத்தி யயனம் செய்யும் மடங்களையும் கண்டார். அவற்றை நெருங் கவும் அஞ்சி அவர் நகர எல்லை வழியாகவே ஊரை வலம் வந்தார். அங்கிருந்தபடியே பகவானை ஆறு காலங்களிலும் தொழுது களிப்படைந்தார். இவ்வாறே தினமும் செய்து வந்தார்.

பக்தனை அந்நிலையில் விட்டு வைக்க விரும்பவில்லை கூத்தப் பெருமான். தம்மைத் தரிசிக்க விரும்பி ஊனும் எலும் பும் கரைய பக்தியால் உருகும் பக்தனைத் தழுவி ஆனந்திக்க விரும்பினார். அன்றிரவு தில்லைவாழ் அந்தணர்களின் கனவில் தோன்றி தம் பக்தனின் வருகைபற்றி அறிவித்தார்.

''ஊருக்குத் தென்புறத்து எல்லையில் நம்முடைய பிரிய மான பக்தன் ஆதனூர் புலையன் நந்தன் வந்திருக்கிறான். நம்மைத் தரிசிக்க எல்லையில்லாத பக்தியோடு காத்திருக்கிறான். நாமும் அவனைத் தரிசிக்கப் பிரியப்படுகிறோம். வேள்வித் தீ மூட்டி அவனைப் புனிதனாக்கி எம்மிடம் அழைத்து வாருங்கள்'' என்று தெரிவித்தார்.

நகர எல்லையில் தம் நினைவாகவே படுத்திருந்த நந்தனாரின் தூக்கத்தில் தோன்றினார்.

''அன்பனே, நாளை நீ நம்மிடம் வருவாயாக. இந்தப் பிறவி நீங்க, வேள்வித் தீயிலே மூழ்கி எழுந்து வந்து எம்மைச் சேர்'' என்று அருளி மறைந்தார்.

தூக்கம் கலைந்து எழுந்த நந்தனார், இறைவனுடைய திரு வருளை எண்ணி எண்ணி ஆனந்தக் கண்ணீர் விட்டார். பொன்னம்பலநாதனைப் பலவாறு பாடிக் கொண்டாடினார்.

பொழுது புலர்ந்தது. இறைவன் புலைச்சேரியில் பிறந்த பக்தனை ஆட்கொள்ள விழைந்தது பற்றி தில்லை அந்தணர்கள் பெரிதும் மகிழ்ந்தனர். ஈசனின் திருவருள் பெற்ற அப்பெரு மானைத் தாங்களும் தரிசித்து ஆனந்தமடைய விரும்பினர்.

ஆலயம் சென்று நடராஜப் பெருமானை வணங்கி அவர் விருப் பத்தை நிறைவேற்றுவதாகக் கூறிப் புறப்பட்டார்கள்.

வேத கோஷங்கள் விண்ணை எட்ட, மேள தாளங்களுடன் தில்லை அந்தணர்கள் வருவதைக் கண்டதும் நந்தனுரின் உடல் புல்லரித்தது. இறைவனுக்கு எந்நேரமும் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற அவர்களைத் தூரத்திலிருந்தபடியே கண்குளிரத் தரிசித்தார். தரையிலே சர்வாங்கமும் பட விழுந்து வணங்கினுர். பின்னர் எழுந்து அவர்களைப் பார்த்துத் தம் கன்னங்களில் போட்டுக் கொண்டார்.

அவர்கள் ஏதோ முக்கிய காரியமாக யாரையோ எதிர் கொண்டு வரவேற்கச் செல்லுகிறுர்கள் என எண்ணினுர். அவர் கள் செல்லும் பாதையில் தாம் நிற்பதுகூடாது என, பாதையை விட்டு விலகி ஒரு ஒதுப்புறமாக மரத்தின் கீழ் போய் நின்றுர் நந்தனுர்.

அவர் நிற்குமிடத்தைத் தான் நோக்கி அவர்கள் வந்தனர். நந்தனுருக்கு ஒன்றும் புரியவில்லை. மெய் சிலிர்த்தது. அந்தணர் கள் அருகில் நிற்கிறேமே எனக் கூசிக் குறுக நின்றுர்.

தில்லைவாழ் அந்தணர்கள் அவரை நெருங்கியதும் தரை யில் விழுந்து வணங்கி எழுந்தனர்.

''சுவாமி, அருகில் வரவேண்டும்!'' என்று பிரார்த்தித் தனர்.

நந்தனுருக்கு வியப்பு தாங்கவில்லை. தாம் நின்றிருந்த மரத்தடியை விட்டுப் பாதைக்கு வந்தார்.

அவர்கள் மீண்டும் அவர் பாதங்களில் விழுந்து வணங் கினர்.

''சுவாமி, வரவேண்டும்! தங்களை அழைத்து வருமாறு பெருமான் திருவுள்ளம் செய்தார்'' என்றனர்.

''ஆண்டவன் அழைக்கின்கிருனு?'' என்று கேட்ட நந்த னுர் தம்மையே மறந்து சிறிது நேரம் நின்றுவிட்டார்.

திருப்புன்கூரிலே சந்நிதியிலிருந்த நந்தியை விலகச்செய்து தரிசனம் கொடுத்த பெருமான் தில்லையிலே தமக்குக் காட்சி தந்தருள அழைப்பதைக் கேட்டபோது அவர் மயிர்க்கால்கள் ஒவ்வொன்றிலும் பேரின்பச் சிலிர்ப்பு ஏற்பட்டது. எம்பெரு மானைத் தியானித்தபடி நடந்தார்.

கூடவே வந்த அவர்கள் முதல் நாள் இரவு இறைவன் தங்களுக்கிட்ட கட்டளையையும் அவரைப் புனிதப்படுத்தி அழைத்துச் செல்ல தென் மதிற் புறத்திலே திருவாயிலுக்கு எதிரே வேள்வித் தீ தயாராக இருப்பதையும் அறிவித்தனர். ஈசனின் கருணையால் நந்தனாரின் நெஞ்சம் தழுதழுத்தது.

"இறைவா, எனக்கு அருள் புரிந்து விட்டாய். இதோ உன்னைக் காண ஓடி வருகிறேன்!..." என்று சொல்லியபடி ஓட்டமாய் ஓடினார். ஆனந்த மேலீட்டால் கால் தடுமாறத் தரையிலே விழுந்தார். பாதையிலே உருண்டு புரண்டார். மறுபடியும் எழுந்து ஓடினார்.

தென்புறத் திருவாயிலில் பள்ளம் ஒன்று வெட்டி அதிலே 'திகுதிகு' வென்று தீ எரிந்து கொண்டிருந்தது. வேதியரில் சிலர் அதனருகே அமர்ந்து வேதமந்திரங்களை ஓதி ஓமம் செய்து கொண்டிருந்தனர். இறைவனின் கட்டளைக்கிணங்க அவருடைய பக்தனைப் புனிதமாக்க வளர்க்கப்பட்ட தீ அல்லவா? சாதாரணமாக இருக்கலாமா?

நந்தனார் இருகைகளையும் கூப்பி அம்பலவாணனின் ஆகாயமளாவும் கோபுரங்களை நோக்கி வணங்கினார்.

"எத்தனையோ நாட்களாக உன்னைத் தரிசிக்க வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்த என்னை ஆட்கொள்ள இன்றுதான் உனக்குக் கருணை வந்ததோ! இதோ வந்து கொண்டேயிருக்கிறேன்! அம்பலவாணா! ஆனந்தக் கூத்தா! அம்பலத்தாடும் பெருமானே!..." என்று பலவாறாகக் கூறியவராய் ஆளுயரம் சுடர்விட்டு எரியும் தீக்குழியை மும்முறை வலம் வந்தார்.

'இறைவா போற்றி! எம்பெருமானே போற்றி!' என்று இறைவனைப் போற்றிப் புகழ்ந்தபடி கொழுந்து விட்டெரியும் செந்நாக்குகளினிடைய குழியில் இறங்கினார்.

எங்கும் "ஆஹா...ஹா...!" என்ற பரபரப்பு. வேத மந்திரங்கள் வான்முகடை எட்டி, எதிரொலித்தன. மங்கல கோஷங்கள் எட்டுதிக்குகளையும் அதிர வைத்தன.

குழியிலே இறங்கிய நந்தனார் கூப்பிய கரங்களுடன் எதிர்ப்புறம் கரையேறினார்.

விண்ணவர்கள் மலர் மாரி பெய்தனர். தேவதுந்துபி முழங்கியது.

தீக்குழியை விட்டு வெளிப்பட்ட நந்தனர் புதிய மனித ராகத் தோற்றம் கொண்டிருந்தார்.

தலையிலே ஜடைமுடி; நெற்றியிலே திருநீறு; கழுத்திலே ருத்திராக்ஷ மாலை. மார்பிலே வெள்ளை வெளேரென்று பூணூல்.

புலையராகத் தீயிலே இறங்கியவர் புனித முனிவராக வெளிப்பட்டார்.

தில்லை மூவாயிரத்தார் அவரைப் பணிந்து வணங்கினர். அவர் பாதங்களைக் கழுவி மலர்கொண்டு அர்ச்சித்துத் தொழுதனர். பின்னர் அவர்கள் அவரை ஆலயத்துள் அழைத்துச் சென்றனர்.

பொன்னம்பலத்திலே ஆனந்தக் கூத்தாடும் எம்பெருமானின் திருச்சந்நிதிக்கு அவரை அழைத்து வந்தனர்.

சந்நிதானத்தில் நுழைந்த நந்தனர் தம் இரு கரங்களையும் கூப்பி வணங்கியவராய், "ஐயனே! இதோ வந்திருக்கிறேன்!" என்றார். அந்த அளவிலேயே ஐயனின் ஆனந்தக் கூத்திலே நந்தனர் ஐக்கியமாகி விட்டார்.

கூடவே வந்த மூவாயிரத்தார் நந்தனரைக் காணாது திகைத்தனர். எம்பெருமானோடு ஐக்கியமாகிவிட்ட அவரைப் பலவாறு போற்றிக் கொண்டாடினர்.

29. திருக்குறிப்புத் தொண்டர்

தொண்டை மண்டலத்திலே காமாக்ஷி அம்மன் எழுந்தருளியிருக்கும் பதி காஞ்சிபுரம். தேவி எம்பெருமானைக் குறித்துத் தவமிருந்து முப்பத்து இரண்டு அறங்கள் வளர்த்த தலம் அது.

ஒரு சமயம் தேவி இறைவனின் கண்களை விளையாட்டாகத் தம் இரு கைகளால் பொத்திவிட, அண்டசராசரங்களும் ஒளியிழந்து எங்கும் இருள் சூழ்ந்தது. மறையோர்களும் தேவர்களும் தங்கள் தங்கள் கர்மாக்களைச் செய்ய முடியாது போய் விட்டது. தம்மால் நேர்ந்து விட்ட இக்குற்றத்திலிருந்து விடுபட தேவி இறைவனை விட்டுப் பிரிந்து பூவுலகம் வந்து கம்பை[1] ஆற்றின் கரையிலே அவரைக் குறித்துக் கடுமையான தவம் இயற்றினள்.

1 பாலாறு.

இந்தச் சம்பவத்தை இன்னொரு விதமாகவும் சொல்வர்:

ஒரு சமயம் தேவி கைலாயத்தில் பரமேச்வரனுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் வேதங்களில் எவ்வளவோ விவரித்திருந்தாலும் அவரை எந்த விதத்தில் வழி பட்டால் அவருக்கு மிகவும் பிரீதியாக இருக்கும் எனக் கேட்டாள். ஈச னும் தமக்கு அர்ச்சனையே பிடித்தமானது எனத் தெரிவித் தார்.

ஈசனை அர்ச்சனை செய்து வழிபட்டு அவர் மனதைக் களிப் பிக்கச் செய்யவேண்டுமென்று தேவியின் உள்ளத்தில் ஆவல் எழுந்தது. அதை ஈசுவரனிடம் வெளியிட்டாள். சிவனும் மகிழ்ந்து தென் திசையிலே கம்பையாற்றின் கரையிலுள்ள காஞ்சி நகரிலே தம்மைப் பூசிக்குமாறும் தாம் வந்து அவளை ஆட்கொண்டு அருளுவதாகவும் தெரிவித்தார். தேவியும் பரமனைப் பணிந்து வணங்கிவிட்டுப் பூவுலகம் சென்றாள்.

காஞ்சி நகரிலே கம்பை ஆற்றின் கரையிலே மாமரம் ஒன்றின் கீழ் மணலால் சிவலிங்கம் ஒன்றை அமைத்து வழி பட்டு வர ஆரம்பித்தாள் தேவி. இறைவனுக்குச் சிறிது விளையாடவேண்டும் என விருப்பம் போலும். எதிர்பாராது கம்பையாற்றில் பெரு வெள்ளம் வரச் செய்தார். இரு கரைகளை யும் உடைத்தவாறு பெருஞ்சுழிகளுடன் ஆற்று வெள்ளம் பெருகி வந்தது.

வெள்ளத்தைக் கண்டதும் தேவி அஞ்சினாள். தாம் வழி பட்டு வரும் இறைவனுக்குத் தீங்கு நேரிட்டு விடப் போகிறதே என்று லிங்கத்தைத் தன் இரு கைகளாலும் கட்டி அணைத் துக் கொண்டாள். தேவியின் அன்பு மிகுந்த தழுவலினால் இறைவன் குழைந்துபோய் நின்று விட்டார். வெள்ளம் வடிந் தது. தமது மேனியில் தேவியின் முலைகள் அழுந்தியதால் ஏற் பட்ட தடங்களோடு இறைவன் காட்சி தந்தருளுகிறார்.

அத்தனை மகிமை வாய்ந்த அத்திருப்பதியில் ஏகாலியர்[2] குலத்திலே சிவபக்தர் ஒருவர் இருந்தார். அவருக்குச் சிவனடி யார்களிடம் அளவுக்கு மிகுந்த பக்தி. அவர்கள் குறிப்பு அறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்வதையே தமது பணி யாகக் கொண்டார். அடியார்களின் ஆடைகளைப் பெற்றுச் சென்று நன்றாகத் துவைத்து உலர்த்தி கொண்டு வந்து கொடுப்பார். அதனால் அவரைத் திருக்குறிப்புத் தொண்டர் என்றே எல்லோரும் அழைக்கத் தொடங்கினர்.

---

2 சலவை செய்பவர்.

தொண்டர் தம் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டி அவரை ஆட்கொள்ள விரும்பினார் சிவபெருமான். குளிர்காலத் தில் ஒருநாள் வயோதிகராய் வேடமிட்டு அழுக்கடைந்த கந்தை ஒன்றைப் போர்த்திக் கொண்டு தொண்டரிடம் வந்தார்.

மிகவும் அழுக்கடைந்து போயிருக்கும் கந்தையை உடுத் திருக்கும் சிவனடியாரைக் கண்டதும் தொண்டருடைய உள் ளம் வேதனை அடைந்தது. அடியாரை நெருங்கி அவரைப் பணிந்து நின்றார்.

''என்னப்பா வேண்டும்?'' என்று கேட்டார் அடியாராக வந்திருந்த சிவபெருமான்.

''சுவாமி, தாங்கள் அழுக்கடைந்த கந்தையை அணிந் திருப்பது எனக்கு வேதனையாக இருக்கிறது. நான் ஒரு ஏகாலி. கந்தையைத் தாருங்கள். அழுக்குப் போகத் தோய்த்து உலர்த் திக் கொண்டு வந்து தருகிறேன்'' என்றார்.

''அழுக்காக இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். என் னிடம் இருப்பதோ இது ஒன்றுதான். இப்போது குளிர்காலம் மழை வரலாம். மழை வந்து விட்டால் என் உடலைப் போர்த்திக் கொள்ள வேறு துணி என்னிடம் கிடையாது. என்னால் குளிர் பொறுக்க முடியாது, அப்பனே'' என்றார் ஈசுவரன்.

''சுவாமி, நான் இப்போதே போய் வெள்ளாவியில் வைத்து அழுக்குப் போக வெளுத்துக் கொண்டு வந்து தருகிறேன். எனக்கு அருள வேண்டும். தங்களைப் போன்ற அடியார்களுக் குப் பணி புரியவே நான் காத்திருக்கிறேன், சுவாமி!'' என்று மீண்டும் வேண்டினார் அவர்.

இறைவன் தம்மீது போர்த்தியிருக்கும் கந்தையை எடுத்து அவரிடம் கொடுத்தார். தாம் கொணர்ந்திருந்த துணியிலுள்ள அழுக்கைப் போக்கவா தொண்டரிடம் அதைக் கொடுத்தார்? அவர்தான் வையத்திலுள்ளோர் மன அழுக்கைப் போக்குபவ ராயிற்றே! ஏகாலியின் மனத்தில் படிந்துள்ள பிறவிப் பாசம் என்ற அழுக்கைப் போக்க அல்லவா அவர் வந்திருக்கிறார்!

''இதோ பாரப்பா! அந்திக்குள் கொண்டு வந்து கொடுப்ப தானால் எடுத்துச் செல். குறித்த நேரத்தில் கொண்டு வர வில்லையானால் இந்தக் கட்டைக்குத் துன்பம் கொடுத்தவனா கிறாய்!'' என்று கூறினார் இறைவன்.

''விரைவிலேயே இதை வெளுத்து எடுத்து வருகிறேன், சுவாமி!'' என்று சொல்லிச் சென்றார் ஏகாலி.

நேராகக் குளத்துக்குச் சென்று கந்தையை நனைத்து ஊற வைத்து வெள்ளாவிப் பானையில் போட்டார். அதன் பிறகு அவர் ஏதேதோ வேலைகளில் ஆழ்ந்து விட்டார். உச்சி வேளை முடிந்து சூரியன் மேற்கே இறங்கத் தொடங்கியபோதுதான் அடியாரின் கந்தையை எடுத்துத் துவைக்கத் தொடங்கினர். அப்போது இருந்தாற் போலிருந்து வானம் இருண்டது. கரு மேகங்கள் விரைவிலே சூழ்ந்து பெருமழை பெய்யத் தொடங்கியது. மழை நின்றதும் துவைத்த துணியைப் பிழிந்து காய வைக்கலாம் என மரத்தின் கீழ் சென்று ஒதுங்கினர் தொண்டர்.

நேரம் செல்லச் செல்ல மழையின் வேகம் அதிகரித்ததே தவிர குறையவில்லை. தொண்டரின் மனத்திலே இலேசாகக் கவலை எழுந்தது. 'மழை நிற்காது பெய்து கொண்டிருக்கிறதே. அடியாரின் கந்தை எவ்வாறு உலரும்?' என்று தவித்தார். நடுப்பகலுக்கு முன்னதாகவே அடியாரின் துணியை மட்டும் தோய்த்து உலர்த்தி யிருந்தால் அது காய்ந்திருக்குமே என எண்ணினர்.

அந்தி நெருங்கி விட்டது. மழையோ விடாது பெய்து கொண்டிருந்தது. தொண்டரின் தவிப்பு அதிகமாகி விட்டது. மழை வரும் எனத் தோன்றிய போதே அவர் ஒரு காரியம் செய்திருக்கலாம். அடியாரின் கந்தையை மட்டும் நன்ருகத் தோய்த்துப் பிழிந்து எடுத்துச்சென்று வீட்டிலே உலர்த்தியிருந்தாலும் இந்நேரத்துக்குள் அது காற்றிலே நன்ருக உலர்ந்திருக்கும். இனி அதற்கும் வழியில்லை.

சிறிது நேரத்தில் இருளும் சூழ்ந்து விட்டது. தொண்டர் உள்ளம் பதைபதைக்க கைகளைப் பிசைந்தார்.

அன்றைத்தினம் அவர் பெரும் அபசாரத்துக்குள்ளாகி விட்டார். அடியார்க்குக் கொடுத்த வாக்கை மீறி விட்டார். உடலை வருத்தி எடுக்கும் குளிரிலே போர்த்திக் கொள்ள துணி இன்றி அடியார் என்ன கஷ்டப்படுகிருரோ? நாசமாகப் போகுமாறு அவர் சபிப்பாரே! இத்தனை காலமாகத் தாம் செய்து வந்த திருப்பணி அனைத்தும் வீண் என்றே அவருக்குத் தோன்றியது. இனி அவர் உயிர் வாழ்ந்துதான் என்ன பிரயோஜனம்?

திடமான முடிவோடு வெளிப்பட்டு மழையிலே நனைந்தவராய் குளக்கரையை அடைந்தார்

"ஆண்டவனே, அடியாருக்குத் தீங்கு இழைத்து விட்ட நான் இனியும் உயிரோடு இருந்து என்ன பலன்? ஆடையைக் கொடுக்கும்போதே மழை வந்து விட்டால் கஷ்டமாகி விடும் என்று எச்சரிக்கை செய்து கொடுத்தார். அலட்சியமாக இருந்தது என் குற்றமே!" என்று கண்ணீர் விட்டு நெஞ்சம் கரைய கதறியவராய் அங்கிருந்த துணி தோய்க்கும் பாறையில் தலையை மோதிக்கொண்டு உயிரைவிட முயன்றார்.

சட்டென்று இரு கரங்கள் தோன்றி அவரது தலை பாறையில் மோதாதபடி பிடித்துக் கொண்டன. திடுக்கிட்டு நிமிர்ந்த தொண்டர் வானிலே எம்பெருமானின் திவ்விய தரிசனம் கண்டார்.

"அன்பனே, உன் உள்ளத்தில் நிறைந்திருக்கும் பக்தியை எடுத்துக் காட்டவே யாம் இவ்வாறு வந்தோம். எமது லோகத்தை அடைந்து என்றும் இன்புற்றிருப்பாய், வா!" என்று அழைத்தார்.

இறைவனின் திருவருளைப் போற்றிக் கொண்டாடியபடி தொண்டர் கைலாய வாழ்வு பெற்றார்.

30. பால் அபிஷேகம் அளித்த பேறு

சோழ நாட்டிலே மண்ணியாற்றங்கரையிலே திருசேய்ஞ்ஞலூர்1 என்றொரு ஸ்தலம் இருக்கிறது. அவ்வூரிலே காசிப கோத்திரத்தைச் சேர்ந்த எச்சதத்தன் என்றொரு வேதியர் இருந்தார். அவர் பவித்திரை என்பவளை மணந்து இனிது வாழ்க்கை நடத்தி வந்தார். அத்தம்பதிகளுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது.

எச்சதத்தன் குழந்தைக்கு விசார சர்மன் எனப் பெயரிட்டு மிகவும் கருத்தோடு வளர்த்து வந்தார். பூர்வஜன்ம புண்ணியத்தால் விசார சர்மன் ஐந்தாவது வயதிலேயே வேதங்களையும் சிவாகமங்களையும் தானே உணர்ந்து விளங்கினான். விதிப்படி ஏழாவது வயதில் எச்சதத்தன் குமாரனுக்கு உபநயனம் செய்து வைத்தார்.

விசாரசர்மன் புதிதாகக் கற்பதற்கு ஏதும் இல்லை. அவன் திறமையைக் கண்டு ஆசிரியர்கள் கொண்டாடினர். அவர்

1 தஞ்சை மாவட்டத்தில் குற்றாலத்துக்கு வடகிழக்கே ஏழு மைலில் உள்ள சேந்தனூர் எனப்படும் தலம்.

களுக்கு சந்தேகம் எழுந்த இடங்களில் விசாரசர்மன் எடுத்து விளக்குவான்.

சகல ஆகமங்களையும் உணர்ந்த விசாரசர்மன் சிவபெருமானிடம் அத்தியந்த பக்தி கொண்டான். எந்நேரமும் அவர் திருவடியையே சிந்தையில் கொண்டு சேவித்து வந்தான்.

இவ்வாறு இருந்து வரும்போது ஒருநாள் பாடசாலையில் உள்ள மற்ற சிறுவர்களுடன் போய்க் கொண்டிருக்கும்போது விசாரசர்மன் கண்ட காட்சி அவன் மனதை மிகவும் வேதனைக்குள்ளாக்கி விட்டது.

அக்கிரகாரத்து மாடுகளையும் கன்றுகளையும் மேய ஓட்டிச் சென்ற இடைச் சிறுவனை ஒரு கன்று முட்ட வந்தது. அவன் தன் கையில் வைத்திருந்த தடியால் அந்தக் கன்றைக் கொஞ்சமும் இரக்கமில்லாமல் அடித்து நொறுக்கி விட்டான்.

விசாரசர்மன் துடித்துப்போய் விட்டான். ஓடிப்போய் இடைப் பையனின் கையிலிருந்த தடியைப் பிடுங்கி எறிந்தான்.

"நன்ருயிருக்கிறதடா, உன் செய்கை. கன்று உன்னை முட்ட வந்தால் அதை அதட்டி ஓட்ட வேண்டாமா? இப்படியா அடிப்பது? பசுக்கள் காமதேனுவின் வழி வந்தவை இல்லையா? அதன் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும் இருக்கிருர்களே! எத்தனையோ புண்ணிய தீர்த்தங்கள் அதன் உடம்பிலே இருக்கின்றனவே! காளை பரமசிவனுக்கு வாகனமாக அமைந்திருக்கிறது. மாடுகளிடமிருந்து கிடைக்கும் சாணமே பகவானுக்குப் பிரியமான திருநீருகிறது! பசு மூத்திரமும் சாணமும் புனிதத் தன்மை வாய்ந்தனவன்ருே. மாடுகளைப் பூசிக்க வேண்டியிருக்க இப்படி அடிக்கலாமா?" என்று கோபித்துக் கொண்டான்.

அவனைக் கோபித்துக் கொண்டதோடு விசாரசர்மனின் வேதனை தீர்ந்துவிடவில்லை. அனைவரிடமும் நடந்ததைத் தெரிவித்து இனி தானே மாடு கன்றுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வருவதாகத் தெரிவித்தான். அவர்களும் மனமுவந்து மாடு கன்றுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வருமாறு அவனுக்கு அனுமதி வழங்கினர்.

தினமும் காலையில் எழுந்து நீராடி நித்ய கர்மாக்களை முடித்துக்கொண்டு பாடசாலை சென்று அத்யயனம் செய்வான். பிறகு ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மாடுகளையும் கன்றுகளையும் அவிழ்த்து ஓட்டிக்கொண்டு மேய்ச்சலுக்குப் புறப்படு

வான். மண்ணியாற்றங்கரை யோரமாகப் புல் நிறைந்து வளர்ந்திருக்கும் பகுதிக்கு ஓட்டிச் செல்வான். வயிறு நிறைய மேய்ந்ததும் அவற்றை ஆற்றுக்கு ஓட்டி நீர் அருந்தச் செய்வான். மாடு கன்றுகளிடம் அவன் கொண்டிருந்த பிரியம் காரணமாக அவைகளும் அவனிடம் அன்பு கொண்டிருந்தன. அவனைக் கண்டுவிட்டால் வாலைக் குழைத்துக்கொண்டு அருகில் வந்து முகத்தை நீட்டும். கழுத்தைச் சொரிந்து விடுவான். உடலிலே மயிர்களோடு சிக்குண்டிருக்கும் சருகுகளையும் தூசிகளையும் தட்டி நன்கு தேய்த்து விடுவான்.

அவனுடைய கண்காணிப்பால் மாடு கன்றுகள் நல்ல செழிப்போடு விளங்கின. அதிகமாகப் பால் கொடுத்தன. அதைக் கண்டு அக்கிரகாரத்திலுள்ளவர்கள் அவனைக் கொண்டாடினர். பசுக்களிடம் அவன் கொண்டிருக்கும் அன்புதான் அவ்வாறு பாலாகச் சொரிவதாகப் புகழ்ந்தனர்.

நாளுக்கு நாள் பசுக்கள் விசாரசர்மனிடம் கொண்டிருந்த பிரியம் அதிகமாகியது. தங்கள் கன்றுகள் பிரிந்து போனால் கூட அவை கவலைப்படுவதில்லை. அவனைக் காணாவிடில் கத்திக் கதறிவிடும். அவனருகில் வந்து குழைந்தபடி நிற்கும் போது அவற்றின் மடியிலிருந்து பால் தானே சொரியும்.

அதைக் கவனித்தபோது விசாரசர்மனுக்கு ஓர் எண்ணம் உதயமாயிற்று. தாமே மனம் கனிந்து பசுக்கள் சொரியும் பாலை எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்தால் என்ன?

உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தை உடனே செயல்படுத்த முயன்றான் விசாரசர்மன். மண்ணி ஆற்றங்கரையிலே ஓரிடத்தில் ஆத்தி மரம் ஒன்று வளர்ந்திருந்தது. அந்த இடமே[1] தகுந்தது எனத் தேர்ந்தெடுத்தான். மண்ணைக் கொண்டு அழகிய சிவலிங்கம் சமைத்தான். அதை மரத்தடியிலே பிரதிஷ்டித்து அதைச் சுற்றி மண்ணாலேயே கோயிலின் பிராகாரங்கள் போல் அமைத்தான். புத்தம் புதிய பானைகளை வாங்கி வந்து பசுக்கள் தாமே சொரியும் பாலை ஏந்திவைத்தான். ஆற்றிலே நீராடி, மலர்களைப் பறித்து வந்தான். குடங்களில் இருந்த பாலை எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்து மலர்களால

---

1 சேந்தனூருக்கு வடகிழக்கே ஒரு மைல் தொலைவில் மண்ணியாற்றின் கரையில் உள்ள திருவாய்ப்பாடி என்ற ஊர். அவ்வூர் இறைவனுக்கு பாலுகந்தநாதர் என்று பெயர் விளங்குகிறது.

அர்ச்சனை செய்தான். தூபதீப நைவேத்தியங்களை மானசீக மாகவே செய்து பூஜையை முடித்தான். அவன் உள்ளம் நிறைந்திருந்தது. அளவில்லாத அன்போடு அவன் செய்த வழி பாட்டை இறைவன் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்.

நாள் தோறும் விசாரசர்மனின் பூஜை நடந்து வந்தது. பசுக்கள் அவன் பூஜைக்காகப் பாலைச் சொரிந்தாலும், வழக்கம் போல அவற்றின் சொந்தக்காரர்களுக்கு முன்போல பாலைக் குறையாது கறந்து வந்தன.

இவ்வாறு நிகழ்ந்து வரும்போது, யாரோ ஒருவன் விசார சர்மனின் சிவபூஜையைக் கண்டுவிட்டான். பசுக்களின் மடியி லிருந்து பாலைக் கறந்து மண்ணால் பிடித்து வைத்துள்ள சிவ லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வதை அவன் விளையாடுகிறான் என்று எண்ணிவிட்டான். உடனே அக்கிரகாரத்துக்கு வந்து அங்குள்ளவர்களிடம் விஷயத்தை விளக்கிவிட்டான்.

அதை அறிந்தபோது அவர்கள் பெரிதும் சினம் கொண்ட னர். எச்சதத்தனிடம் வந்து அவன் குமாரனுடைய விளையாட் டைப் பற்றி முறையிட்டனர்.

''நீங்கள் கோபிக்க வேண்டாம். விசாரசர்மன் சிறு பிள்ளை. விளையாட்டாக ஏதாவது செய்திருப்பான். எனக்குத் தெரி யாது. தெரிந்திருந்தால் நானே கண்டித்திருப்பேன். இனி அவ்வாறு நிகழாது நான் தடுக்கிறேன்'' என்று சமாதானம் சொல்லி அவர்களை அனுப்பி வைத்தார் எச்சதத்தன்.

மறுநாள் விசாரசர்மன் மாடு கன்றுகளை ஓட்டிக்கொண்டு புறப்பட்டதும் எச்சதத்தன் அவன் அறியாமல் பின்னாலேயே சென்றார். மற்றவர்கள் அவனைப்பற்றிக் கூறுவது உண் மையா என்பதை அறிய எண்ணம் கொண்டிருந்தார் அவர்.

வழக்கம் போல விசாரசர்மன் அன்றைத் தினமும் தன் பூஜையைத் தொடங்கினான். பசுக்களின் மடியிலிருந்து சொரி யும் பாலைக் குடங்களில் ஏந்தி அபிஷேகத்துக்குத் தயாரானான்.

பக்கத்திலே மரம் ஒன்றில் ஏறி அமர்ந்தவாறு குமாரனின் செய்கையைக் கவனித்து வந்த எச்சதத்தனுக்குக் கோபம் தாங்கவில்லை. மரத்திலிருந்து இறங்கி வேகமாக மைந்தனிடம் வந்தார். அங்கு கிடந்த கம்புகளில் ஒன்றைக் கையிலெடுத்து, ''அடே, இதென்ன காரியம்? அவர்கள் உன்னைப்பற்றிக் கூறி யது சரியாகத்தான் இருக்கிறது. ஊரார் வீட்டுப் பாலை இப்படி மண்ணிலே ஊற்றி வீணடிக்கிறாயா?'' என்று கடிந்துகொண்டு அவன் முதுகில் அடித்தார்.

விசாரசர்மன் இந்த லோகத்திலேயே இல்லை. அவன் மனம் எம்பெருமானுடைய திருமேனியில் பால் அபிஷேகம் செய்வதில் லயித்திருந்தது. தந்தை வந்ததோ, தன்னைக் கடிந்து பேசியதோ, கழியால் அடித்ததோ அவனுக்குத் தெரியாது.

எச்சதத்தனுக்குச் சீற்றம் அதிகமாகி விட்டது. தாம் கோபிப்பதையும் பொருட்படுத்தாது அவன் தன் காரியத்தில் ஈடுபட்டிருப்பதைக் காணக் காண எரிச்சல் பொங்கியது. மண் குடங்களில் நிரப்பி வைத்திருந்த பாலைத் தம் காலால் எட்டி உதைத்துத் தரையிலே கொட்டினார்.

அப்போது.தான் விசாரசர்மன் அங்கு நிகழ்ந்த காட்சியைக் கண்டான். எதிரிலிருப்பது தன் தந்தை என்பதைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை. எம்பெருமானுக்குத் தீங்கு இழைத்த சிவாபராதி எதிரிலிருப்பதாக எண்ணினான். அங்கே கிடந்த தடி ஒன்றைக் கையிலெடுத்தான். அந்த க்ஷணமே அது மழுவாக மாறியது. கொஞ்சமும் யோசிக்காமல், குடத்துப் பாலை எட்டி உதைத்த அவருடைய இரு கால்களையும் துண்டித்து விட்டான். அலறிக்கொண்டு தரையிலே விழுந்தார் எச்சதத்தன்.

வானம் 'கிடுகிடு' வென்று அதிர்ந்தது. எம்பெருமான் உமையோடு தோன்றினார்.

''விசாரசர்மா, எமக்கு அபசாரம் செய்த காரணத்துக்காகத் தந்தை என்றும் பாராமல் எச்சதத்தனை தண்டித்தாய். இனி நாமே உனக்குத் தந்தையாவோம்!'' என்று அருளினார்.

தேவதுந்துபி முழங்க விண்ணவர்கள் மலர்களைத் தூவினர்.

எம்பெருமான் ரிஷபத்தை விட்டு இறங்கி வந்து அவனைத் தம்மோடு சேர்த்து அணைத்துத் தழுவினார். தாம் அணிந்திருந்த கொன்றை மாலையை எடுத்து அவன் கழுத்திலே சூட்டினார்.

''விசாரசர்மா, ஈமது திருத்தொண்டர்களுக்கு உன்னைத் தலைவனாக்கினோம். நாம் உண்ட அமுதும், பரிவட்டமும், சூடுவனவும் உனக்கே கிடைக்கும்படி சண்டீசுரபதத்தை அருளினோம்!'' என்று அனுக்கிரகித்தார்.

விசாரசர்மன் எல்லையில்லா ஆனந்தத்துடன் எம்பெருமானை அஞ்சலி செய்து தொழுது சிவகணங்கள் போற்றிக் கொண்

டாட சண்டேசுவர பதவியை அடைந்தான். எச்சதத்தனும் வெட்டுண்ட கால்கள் வளரப்பட்டு, சுற்றத்தாருடன் தம் மகன் செய்த பாக்கிய வசத்தால் சிவலோகத்தை அடைந்தார்.

அனைவராலும் போற்றி வணங்கும் அரிய பதவியை அடைந்த சண்டேசுவராின் அடியாராகப் பணிவோடு தம்மைத் தெரிவித்துக் கொண்ட சுந்தரர் இன்னும் பல அடியார்களின் தொண்டை எடுத்துக் கூறலானார்.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக்குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்கு அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

31. சூலபாணி தந்த சூலைநோய்

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூர்1 என்றொரு தலம். அவ்வூரிலே வேளாளர் மக்களிலே குறுக்கையர் என்றொரு வமிசம் இருந்தது. அவ்வமிசத்திலே பிறந்தவர் புகழனார் என்பவர். அவருக்குத் தம் சுற்றத்தார்களிடம் மிகுந்த அபிமானம் உண்டு. அவர்களைப் பேணிக் காத்துவந்தார். அவர் மனைவியார் மாதினியார் ஆவர்.

மனமொத்து இல்லறம் நடத்தி வந்த அத்தம்பதிகளுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குந்தைக்குத் திலகவதி எனப் பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தனர்.

பெண் குழந்தை பிறந்து சில ஆண்டுகளுக்குப் பின் அத்தம்பதிகளுக்குப் பிள்ளை ஒன்று பிறந்தது. புகழனார் மகிழ்ச்சியில் திளைத்தவராய் குழந்தைக்கு மருள்நீக்கியார் எனப் பெயரிட்டு கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். சிறு வயது முதற்கொண்டே பிள்ளைக்கு சகல கலைகளையும் கற்றுணர வாய்ப்பளித்தார் புகழனார். குழந்தையும் அறிஞர்களிடம் சென்று அரும் பெருங் கலைகளைக் கற்று வரலானார்.

திலகவதிக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. குலப்பண்புகள் அனைத்தும் நிரம்பப் பெற்ற அவளைப்பற்றிக் கேள்விப்

---

1 பண்ணுருட்டிக்குப் பக்கத்தே எட்டு மைலில் உள்ளது.

பட்ட கலிப்பகையார் என்பவர் அவளைத் தமக்குத் திருமணம் செய்து தருமாறு பெண் கேட்டுப் பெரியோர்களை அனுப்பினர். கலிப்பகையார் அந்நாட்டு அரசனிடம் சேனாதிபதியாக இருப்பவர்.

கலிப்பகையாரைப் பற்றி அறிந்ததும் புகழனார் அத்திரு மணத்துக்கு இசைந்தார். சிவபக்தியில் சிறந்த அவரை மணக்கத் தம் மகள் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டு மென்று திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்து விரைவிலேயே சுபநாளைக் குறிக்கலாமென்று சொல்லி அனுப்பினர்.

திருமணத்துக்கான நாளும் குறிக்கப்பட்டு விட்டது. இரு தரப்பாரும் தங்கள் தங்கள் ஏற்பாடுகளில் முனைந்திருந்தனர்.

மகிழ்ச்சிகரமான மணநாளை எதிர்பார்த்து அனைவரும் காத்திருக்க விதி வேறு விதத்தில் அவர்களிடையே புகுந்தது.

வடபுறத்தில் எதிரிகள் சதி செய்வதைத் தடுக்க அரசர் படை கொண்டு சென்று அவர்களுடன் போரிட வேண்டி ஏற் பட்டது. போர் வீரர்களுடன் கலிப்பகையார் புறப்பட்டுச் செல்ல நேர்ந்தது. விரைவில் வெற்றியுடன் திரும்பி வந்து மணம் முடிப்பதாகச் செய்தி அனுப்பிவிட்டு கலிப்பகையார் யுத்தத்துக்குச் சென்றார்.

திருமணம் தடைப்பட்டு நின்றது. கலிப்பகையார் திரும்பி வரும் வரை காத்திருப்பதாகத் திலகவதியார் கூறிவிட்டாள். அதன் பிறகு அதிக காலம் புகழனார் ஜீவித்திருக்கவில்லை. இறைவனடி சேர்ந்துவிட்டார். கணவன் இறந்த பிறகு தாமும் உயிர் வாழ விரும்பாத மாதினியார் கணவனோடு உடன்கட்டை ஏறிவிட்டாள்.

துரதிர்ஷ்டம் தொடர்ந்துவந்தது. யுத்தத்துக்குச் சென்ற கலிப்பகையார் திரும்பவில்லை. யுத்தகளத்திலே வீரசொர்க்கம் அடைந்து விட்டார். அந்தச் செய்தியைக் கேட்ட திலகவதி யார் அடைந்த வருத்தம் அளவிட முடியாதது. பெற்றோர் களை இழந்த அவள் கலிப்பகையார் வெற்றிவாகையுடன் திரும்பி வந்து தன்னை மணந்து குடும்பத்தை நிலை நிறுத்து வார் என அவரையே நம்பி யிருந்தாள். அதுவும் கனவாகி விட்டது.

கலிப்பகையார் அவளை மணக்கவில்லையாயினும் திரு மணம் நிச்சயித்த நாளிலிருந்து அவரையே தன் கணவராகப் பாவித்து வந்தாள். அதனால் யுத்தத்திலே அவர் வீர சொர்க்

கம் அடைந்தார் எனக் கேள்விப்பட்டதும் தன் உயிரையும் மாய்த்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

சகோதரியின் முடிவைக் கேட்டபோது மருள்நீக்கியார் திடுக்கிட்டான். அவளும் போய்விட்டால் அவன் மட்டும் எவ்வாறு வாழ முடியும்? சகோதரியிடம் வந்து அவள் முடிவைப் பற்றிக் கேட்டான்.

''ஆம், தம்பி! தாயும் தந்தையும் போன பிறகு அவர் ஒருவரே எனக்கு ஆதாரமாக இருந்தார். அவரும் போய் விட்ட பிறகு நான் உயிர் வாழ்வதால் என்ன பிரயோஜனம்?'' என்று பதில் அளித்தாள்.

''அக்கா, உன் முடிவு சரியோ தவறோ? அதைப்பற்றி அபிப்பிராயம் கூற எனக்கு யோக்கியதை இல்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன். அம்மாவும் அப்பாவும் போய் விட்ட பிறகு உன்னைத்தான் அவர்களாகப் பாவித்து நான் நாட்களைக் கடத்தி வருகிறேன். நீயும் போய் விட்டால் என்ன செய்வது? நீ உயிரை மாய்த்துக் கொள்ளும் முன்பே என் உயிரை நான் மாய்த்துக் கொள்ளுகிறேன்'' என்றான்.

சகோதரனின் வார்த்தைகள் திலகவதியாரின் கண்களில் நீர் பொங்கி வழியச் செய்து விட்டன. அவனை இருகைகளாலும் இழுத்து அணைத்துக்கொண்டு உச்சி முகந்தாள். அவள் உள்ளத்தில் சாகவேண்டும் என்ற நினைவு மாறிவிட்டது. சகோதரனுக்காகவாவது தான் உயிர் வாழ வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

''தம்பி! நீ எதற்காகச் சாகவேண்டும்? நான் இருக்கிறேன். கவலைப் படாதே!'' என்று அவனை அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறினாள்.

திலகவதியார் விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பை அறவே ஒழித்து உலக இன்பம் முற்றிலும் ஆசை துறந்தவளாய் வாழ்க்கை நடத்தி வந்தாள். மருள் நீக்கியார் தண்ணீர் பந்தல் அமைப்பது அடியார்களுக்கு அன்னமிடுவது போன்ற தரும கைங்கரியங்களில் திரவியங்களைச் செலவு செய்து வந்தான்.

இந்தவாறாக இருந்து வரும் போது நாட்டிலே நிலவும் பல சமயங்களில் சிறந்தது எது என்பதை அறிய ஆவல் உண்டாயிற்று மருள் நீக்கியாருக்கு. மற்ற சமயங்களைவிடச் சைவச் சமயமே சிறந்தது என்பது ஏனோ அவன் அறிவுக்கு எட்டவில்லை. தான் பிறந்த சமயத்தை விட்டுப் பிறச் சமய நூல்

களில் தேடினுன். அவன் ஆவல் ஊரை விட்டுப் புறப்படச் செய்தது. திருவாய்மூரை விட்டுப் புறப்பட்டுப் பக்கத்திலே உள்ள பாடலிபுத்திரம்1 என்னும் ஊரை அடைந்தான்.

பாடலிபுத்திரத்தில் அந்நாளில் சமணர் மிகுந்திருந்தனர். அவ்வூரிலே சமணர்களுடைய பள்ளிஒன்றும் இருந்தது.பல்லவ மன்னனிடம் சமணர்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அதன் காரணமாகவே அவர்கள் அரசனின் அனுமதி பெற்று அவ்வூரிலே சமணப் பள்ளி ஒன்று நிறுவி தங்கள் மதத்தைப் பரப்பி வந்தனர்.

பாடலிபுத்திரத்தை அடைந்த மருள் நீக்கியார் சமணப் பள்ளிக்குப் போய்ச் சேர்ந்தான். அவனுடைய அறிவாற்ற லைக் கண்ட சமணர்கள் அவனைத் தங்கள் சமயத்தைத் தழுவச் செய்தனர். மருள் நீக்கியாரும் சமணமதத்தில் சேர்ந்து தரும சேனர் என்ற பெயருடன் அவர்களுடைய சமய நூல்களைக் கற்று அவற்றில் தேர்ந்தவனுனுன். அவனைக் கொண்டு சம ணர்கள் பௌத்தர் களுடன் வாதிட்டு வெற்றி பெற்றனர்.

தருமசேனர் அவ்வூரிலுள்ள சமணப் பள்ளிக்குத் தலைமைக் குருவானுர். அவர் தலைமையில் சமணர்கள் தங்கள் மதத்தைப் பரப்பினர்.

சகோதரன் ஊரை விட்டுப் போன பிறகு திலகவதியார் அதிக நாட்கள் திருவாய்மூரில் தங்கவில்லை. தனிமையில் ஊரிலே இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. எம்பெருமா னின் திருத்தொண்டிலே ஈடுபட அவள் உள்ளம் விழைந்தது. ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பக்கத்திலே உள்ள திருவதிகைக்கு வந்து சேர்ந்தாள். அவ்வூர் ஆலயத்தில் தங்கி எம்பெருமா னுக்கு அர்ச்சனைக்கு வேண்டிய வில்வர் முதலான தளங்களை யும் மலர்களையும் பறித்து மாலை தொடுத்துக் கொடுப்பது, அபிஷேகத்துக்கான நீர் மொண்டு வந்து கொட்டுவது. ஆலயப் பிராகாரங்களில் சேரும் குப்பைகளை அகற்றுவது ஆகிய திருப் பணிகளில் ஈடுபட்டு காலத்தைக் கடத்தி வந்தாள்.

பாடலிபுத்திரம் போய் வந்தவர்கள் அவளைக் கண்டு மருள் நீக்கியாரின் செய்திகளைத் தெரிவித்தனர். சகோதரன் புறச் சமயத்தைத் தழுவி விட்டானே என்பதை நினைத்து அவள் நெஞ்சம் துடித்தது. எந்தச் சமயத்தில் பிறந்தானே அதே சமயத்தை எதிர்த்து அவன் பேசி வருவது குறித்து அவள்

---

1 திருப்பாதிரிப்புலியூர்.

சொல்லொண்ணு துக்கம் அடைந்தாள். அவள் தொண்டு புரிந்து வரும் வீரட்டானேசுவரரிடம் முறையிட்டுக் கொண்டாள்.

''எம்பெருமானே, படுகுழிலே விழுந்து விட்ட என் சகோதரன் கரையேற நீதான் அருள் புரியவேண்டும். அவன் புத்தியை மாற்றி அவனையும் தங்கள் அடிமையாக்கிக்கொள்ள வேண்டும்'' என்று இடைவிடாது பிரார்த்தித்து வந்தாள். சகோதரனைப் பற்றிச் செய்தி வந்தபோதெல்லாம் அவள் வீரட்டானேசுவரரைத்தான் பிரார்த்தித்துக் கொள்வாள்.

அவள் பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்த்தார். அவள் கனவிலே தோன்றி, ''கவலையை விட்டொழி, உன் சகோதரன் முன் ஜன்மத்தில் முனிவராக இருந்து நம்மை அடையத் தவம் செய்தான். தவத்திலே சிறிது விழுவினதால் சிறிது காலம் பிற மதத்தைத் தழுவும் படியாகியது. யாவராலும் தீர்க்க முடியாத சூலை நோயை உண்டாக்கி வருந்தச் செய்து ஆட்கொள்வோம்'' என்று அருளி மறைந்தார்.

திலகவதியாருக்கு இறைவன் அருளியபடி பாடலிபுத்திரத்தில் இருந்த தருமசேனராகிய மருள் நீக்கியாருக்கு வயிற்றிலே சூலை நோய் உண்டாயிற்று. அதன் வேதனை பொறுக்க மாட்டாது அவர் துடியாய்த் துடித்தார். அவர்களுக்குத் தெரிந்த மருந்துகளை யெல்லாம் சாப்பிட்டார். ஒன்றிலும் வலி நிற்கவில்லை. மாறாக அதிகரித்தது. ஏதேதோ மந்திரம் போட்டனர். குண்டிகை நீரை மந்திரித்து உட்கொண்டார். மயிற்பீலி கொண்டு உடல் முழுவதும் தடவினர்.

எந்த வைத்தியத்துக்கும் அந்த வலி நிற்கவில்லை. புழுவைப் போலத் துடித்தார்.

சமணப்பள்ளியில் இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இது போன்ற கொடிய நோயை அவர்கள் இதுவரை பார்த்ததில்லை. அவர்களுக்குத் தெரிந்த வைத்திய முறைகளாலும் வலியை நிறுத்த முடியவில்லை. கடைசியில் 'இந்த நோயைத் தீர்க்க நம்மால் முடியாது' என்று கைவிட்டு விட்டனர்.

அந்த நேரத்தில் மருள் நீக்கியாருக்குத் தம் சகோதரியின் நினைவு வந்தது. தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும் அவரை வளர்த்தது அவள் தானே. தம்முடைய துர்பாக்கிய நிலைமையை அவளுக்கு எடுத்துச் சொல்லி அவளுடைய அபிப்பிராயத்தை அறிந்து வருமாறு பாகுகன் என்பவனை திருவதிகைக்கு அனுப்பினர்.

பாகுகன் திருவதிகை சென்று வீரட்டானேசுவரரின் நந்த வனத்தருகே திலகவதியாரைச் சந்தித்தான்.

"அம்மையாரே, உமது சகோதரர் அனுப்பி வந்திருக்கி றேன்" என்று தெரிவித்தான்.

"யார்? மருள் நீக்கியாரா, அனுப்பியிருக்கிருர்?" என்று கேட்டாள் திலகவதியார்.

"ஆம், அம்மையே!"

"என்ன விஷயம்? அவருக்கு ஏதாவது தீங்கு நேரிட்டுள் ளதோ?" என்று பாகுகனைக் கேட்டாள் அவள்.

"ஆம், அம்மையே, அவர் தாங்க முடியாத சூலை நோயால் வருந்துகிருர். சமணர்கள் தங்களால் இயன்றவரை பார்த்து விட்டனர். நோயை ஒழிக்க முடியவில்லை. தம்முடைய கஷ்ட மான நிலையைத் தங்களிடம் எடுத்துக் கூறி இந்நோயிலிருந்து மீள வழிகேட்டு இன்றே உங்களுடன் திரும்பும்படி அனுப்பி யிருக்கிருர்" என்ருன் பாகுகன்.

"புறச்சமயிகளாகிய அவர்கள் பள்ளியை நான் ஏறெடுத் தும் பாரேன் என்று தெரிவி."

சம்பாஷணையை மேலே தொடர விருப்பமின்றி 'வெடு'க் கென்று பதில் அளித்துவிட்டு அப்பால் போய்விட்டாள் திலக வதியார்.

பாகுகன் பாடலிபுத்திரம் திரும்பி மருள் நீக்கியாரிடம் நடந்ததை விவரித்தான்.

மருள்நீக்கியார் இனியும் வலியைப் பொறுக்க முடியாது என்பதை உணர்ந்தார். அவர் மிகவும் விரும்பித் தழுவிய சமயத்தால் அந்நோயைக் குணமாக்க முடியவில்லை. ஆகவே திலகவதியின் திருவடிகளையே சரண் அடைவதை அவர் தமக் கிருக்கும் ஒரே வழியாகக் கண்டார் சமண மதத்தைத் தழுவிய தம்மை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள் என்பதை அவர் நன்கு அறிவார். ஆகவே, எவருக்கும் தெரியாமல் விடியற்காலை நேரத் தில் தமது அன்புக்குரிய சிலரோடு சமணப் பள்ளியை விட்டுப் புறப்பட்டார். தமது ஆடைகளையும் இதர பொருள்களையும் பள்ளியிலேயே விட்டுச் சாதாரண வஸ்திரம் அணிந்து புறப் பட்டு திருவதிகை வந்து சேர்ந்தார். திலகவதியார் தங்கியிருக் கும் மடத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டு அங்கே சென்ருர்.

மடத்தினுள்ளே திலகவதியார் ஓய்வு எடுத்துக் கொண் டிருந்தாள். அவள் முன்பு சென்றதும் மருள்நீக்கியார் நெடுஞ்

சாங்கிடையாகத் தரையிலே விழுந்து அவளது பாதங்களைப் பிடித்துக் கொண்டார்.

"அன்புக்கு இருப்பிடமானவளே, அடியேனால் இந்த நோயைப் பொறுக்க முடியவில்லை. என்னைக் கைவிடாது ஏற்றுக் காப்பாற்றியருள வேண்டும். சேற்றிலே அழுந்தியுள்ள என்னைக் கைதூக்கிவிட வேண்டும்!" என்று கண்ணீர் விட்டுக் கதறினார்.

இறைவன் தனக்கு அருளியபடி சகோதரனுக்குச் சூலை நோயைத் தருவித்துள்ளது கண்டு அவள் மேனி புல்லரித்தது. இனி ஆண்டவன் எப்படியும் தன் சகோதரனை ஆட்கொண்டருளுவார் என்ற நம்பிக்கை அவள் முகத்தில் சுடரிட்டுப் பிரகாசித்தது.

"தம்பி, எழுந்திரு!" என்று கூறினாள்.

கண்கள் இரண்டும் நீரைச் சொரிய மேனி முழுவதும் நடுங்க எழுந்திருந்த மருள்நீக்கியார் கூப்பிய கரங்களுடன் அவளை நோக்கித் தொழுதார்.

திலகவதியார் பக்கத்திலிருந்த மாடத்திலிருந்து ஒரு பிடி திருநீற்றை வாரி எடுத்து அவர் கைகளில் போட்டார்.

"தம்பி, இதை அணிந்து கொள். திரிபுரம் எரித்த சிவபெருமான் உன் நோய் நீங்க அருள் புரிவார். புறச் சமயத்தை முற்றிலும் கைவிட்டு எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதையே உன் மூச்சாகக் கொள்!" என்றாள்.

சகோதரி கொடுத்த திருநீற்றைப் பக்தியோடு கைநீட்டிப் பெற்றுக் கொண்ட மருள்நீக்கியார் அதைத் தம் நெற்றியிலும் வயிற்றிலும் பூசிக் கொண்டார்.

அதிகாலையிலே நீராடி ஆலயத்துக்குப் புறப்பட்ட திலகவதியார் தன்னுடன் மருள்நீக்கியாரையும் அழைத்துக் கொண்டு சென்றாள். ஆலயத்தை அடைந்த மருள்நீக்கியார் பிராகாரத்தை வலம் வந்து சந்நிதானத்தின் முன் விழுந்து வணங்கினார். அவர் நெஞ்சத்திலே பலவகையான உணர்ச்சிகள் குமுறி எழுந்தன. இறைவனைத் தொழுது பாடவேண்டும் என வார்த்தைகள் ஊற்றெடுப்பது போல் அவர் உள்ளத்திலிருந்து குமிழிட்டு எழுந்தன. தம்மை ஆட்கொண்டு குடலை முறுக்கி சொல்லொணு வேதனை தரும் சூலை நோயைப் போக்கி அருளவேண்டுமென 'கூற்றாயினவாறு விலக்கலீர்' என்ற திருப்பதிகத்தைப் பாடினார்.

பதிகத்தைப் பாடி முடித்ததும் அவரை வருத்தி வந்த நோயும் இறைவன் திருவருளால் நீங்கியது. மருள்நீக்கியார் எம்பிரான் திருவருளை எண்ணி எண்ணி பக்தியால் உருகினுர். கண்களிலிருந்து மடை திறந்தாற்போல் பக்தி வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

''ஐயனே, படுகுழியில் விழுந்து இத்தனைக் காலம் உன்னை மறந்திருந்த இப்பாவியை மீட்டு அருளிய செயலுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? என்னை ஆட்கொள்ளத்தான் இக்கொடும் நோயை அளித்தாயோ?'' என்று நெஞ்சம் உருக வேண் டினுர்.

அப்போது மூலஸ்தானத்திலிருந்து அசரீரி ஒன்று எழுந்தது.

''தித்திக்கும் செந்தமிழ் சொல்வளத்தால் எம்மைப்
பாடிய நீ இனி நாவுக்கரசன் என ஈரேழுலகங்களி
லும் கொண்டாடப் படுவாய்.''

இறைவனுடைய திருவாக்கைக் கேட்டபோது மருள்நீக்கியார் ரோமாஞ்சன மடைந்தார். தலை தாழ்த்தி ஆண்டவனைப் பணிந்தார். தமக்கு மறு வாழ்வளித்த சிவபெருமானுக்குத் தமது வாழ்வையே அர்ப்பணித்தார். அவருக்குத் தொண்டு செய்வதையே தமது பணியாகக் கொண்டார்.

சகோதரனின் மனமாற்றத்தைப் பெரிதும் மகிழ்ந்து வரவேற்ற திலகவதியார் உழவாரப் படை எடுத்துக் கொடுத்து சிவாலயப் பணியில் ஈடுபடுமாறு சகோதரனைப் பணித்தார். சகோதரியை வணங்கி அவள் திருக்கரத்திலிருந்து உழவாரப் படையைப் பெற்றுக் கொண்ட நாவுக்கரசர் அதிகை வீரட்டானேசுவரர் ஆலயத்திலே தமது திருப்பணியை மேற்கொண்டார். பிராகாரத்தில் வளர்ந்திருக்கும் புல்பூண்டுகளை உழவாரப் படை கொண்டு நீக்கிச் சுத்தம் செய்யலானுர்.

இது இவ்வாறிருக்க, பாடலிபுத்திரத்திலே சமணப் பள்ளியில் பெரும் குழப்பம் மேலோங்கியிருந்தது.

32. நமனுக்கஞ்சாத நாவுக்கரசர்

தருமசேனர் சமணப் பள்ளியை விட்டு அதிகாலையில் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்துக் கெல்லாம் அவரைக் காணுது பள்ளியிலிருந்த சமணர்கள் திடுக்கிட்டார்கள். பக்கத்திலே ஆற்றுக்கோ, சமுத்திர தீரத்துக்கோ நீராடச் சென்றிருக்

கலாம் எனத் தேடினர். அதன் பின்னரே அவர் தாம் அணிந்திருந்த ஆடைகளையும் பள்ளியிலேயே விட்டுச் சென்றிருக்கிறார் என்பதை அறிந்தனர்.

அவர்களுக்குத் திக்குத்திசை புரியவில்லை. ஊரெங்கும் தேடினர். அவர் சென்ற இடம் தெரியாமல் திண்டாடினர். நோய் தாங்க முடியாது துடிக்கும் அந்நிலையில் அவர் எங்கு தான் போயிருக்க முடியும் என்று அறிய முடியாது தவித்தனர். பிற்பகலுக்கு மேல் தான் தருமசேனர் தமது சகோதரியாரைத் தேடி திருவதிகை சென்றிருக்கிறார் எனச் செய்தி அவர்களுக்கு எட்டியது.

அந்தச் செய்தி அவர்களைத் திடுக்கிட வைத்தது. திலகவதியாரைத் தருமசேனர் அடைந்து விட்டாராகுல், அவர் மனத்தை அந்த அம்மையார் மாற்றி விடுவாரே என நெஞ்சம் கலங்கினர். தருமசேனரைச் சார்ந்தே அவர்கள் அப்பகுதியில் ஊன்றியிருந்தனர். கொழுக்கொம்பு ஒடிந்து விட்டால் அப்புறம் கொடி தரையில் விழவேண்டியதுதானே!

தருமசேனரை அழைத்துவர இரண்டொருவர் அதிகைக்கு ஓடி வந்தனர். அவர்கள் வருவதற்குள் காரியம் மிஞ்சி விட்டது. இரவு வெகுநேரம் சென்ற பின்னரே ஊரை அடைந்த சமணர்கள் தருமசேனரைச் சந்திக்க முடியவில்லை. பொழுது புலர்ந்ததும் அவரைக் கண்டு பேசி அழைத்துச் செல்ல எண்ணினர். ஆனால் காலையிலே அதிகைவீரட்டானேசுவரர் ஆலய வாயிலில் இடுப்பிலே புதிய ஆடையுடன் நெற்றியிலே திருநீறு விளங்க, கையிலும் கழுத்திலும் ருத்திராக்ஷ மாலைகளுடன் கையிலே உழவாரப் படை ஏந்தி, 'நமச்சிவாய' என ஐந்தெழுத்தை ஓதி மதில் சுவரருகில் வளர்ந்திருந்த புல்பூண்டுகளைச் செதுக்கும் திருப்பணியில் அவர் ஈடுபட்டிருப்பதைக் கண்டபோது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை முற்றிலும் சிதைந்து விட்டது. வாடிய முகத்துடன் ஊர் திரும்பினர்.

தருமசேனர் மீண்டும் சைவசமயத்தைத் தழுவித் தொண்டராகி விட்டார் என்ற செய்தி பாடலிபுத்திரத்திலுள்ள சமணர்களைக் குலைநடுக்கம் கொள்ளச் செய்தது. கொடுமையான சூலை நோயால் வருந்திய அவர் அந்நோய் தீராது தாம் புகுந்த சமயத்தில் நம்பிக்கை தளர்ந்து அதை விட்டொழித்து மறுபடியும் சைவ சமயத்தைச் சேர்ந்து நோய் ஒழியப் பெற்றது சாமானிய சம்பவமில்லையே. நாடு முழுவதும் விரைவிலே பரவி விடாதா? அரசனுக்கு அச்செய்தி எட்டுமாகுல் அவனும் சைவத்தைச் சார்ந்து தங்களுக்கு அளித்து வந்த சலுகைகளை நிறுத்தி விடுவானன்றோ?

என்ன செய்வதென்று அவர்கள் ஒன்று கூடி யோசித்தனர். அரசனுக்குச் செய்தி எட்டும் முன்பாகவே தாங்களே புறப்பட்டுச் சென்று அரசனிடம் பக்குவமாக விஷயத்தை அறிவிக்க வேண்டும் என அவர்கள் முடிவு செய்தனர்.

தாங்கள் தலைநகருக்குப் புறப்பட்டுச் செல்வது பற்றி நாட்டிலே தப்பபிப்பிராயம் நிலவக் கூடாதென்று எண்ணிய அவர்கள் யாத்திரை போவது போலப் புறப்பட்டு ஓட்டமும் நடையுமாகச் சென்று தலைநகரை அடைந்தனர். உடனடியாக அரண்மனைக்குச் சென்று அரசனைப் பார்க்க வேண்டுமென செய்தி அனுப்பினர்.

பாடலிபுத்திரத்திலிருந்து சமணர்கள் கூட்டமாக வந்திருப்பதாகவும், அரசரை உடனடியாகப் பார்க்க விரும்புவதாகவும் கேள்விப்பட்ட அரசன் அவர்களை ஆலோசனை மண்டபத்துக்கு வரவழைத்தான்.

அரசனைக் கண்டதும் சமணத் துறவிகள் அவனை வாழ்த்தினர். பின்னர் பாடலிபுத்திரத்தில் நிகழ்ந்த விவரத்தை அவனுக்குத் தெரிவித்தனர். அவர்கள் உண்மையை அப்படியே கூறவில்லை. வேறு விதமாகத் தெரிவித்தனர்.

'தருமசேனர் தமக்குக் கொடுமையான சூலை நோய் வந்ததாக நடித்து திருவதிகை போய் திருநீறு பெற்று நோய் நீங்கி விட்டதாகப் பாவித்துச் சைவத்தில் சேர்ந்து விட்டார். இவ்வளவு நாட்களாகச் சமணர்களிடையே வாழ்ந்து அவர்கள் குருவுமாகி முடிவில் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்.'

அவர்கள் வார்த்தையைக் கேட்ட அரசன் கோபமடைந்தான். கண்கள் சிவக்க அவர்களைப் பார்த்து, "இப்போது என்ன செய்யலாம்?" என்றுகேட்டான்.

"மன்னவா, அந்த அயோக்கியனைச் சும்மா விடுதல் கூடாது. நமது சமயத்தைத் துறந்த அவனைத் துன்புறுத்த வேண்டும்" என்றனர் துறவிகள்.

அரசனும் அமைச்சர்களை அழைத்து, "இப்போது புறப்பட்டுச் சென்று அவனைக் கொண்டு வாருங்கள்" எனக் கட்டளையிட்டான்.

அமைச்சர்கள் திருவதிகை சென்று நாவுக்கரசரைச் சந்தித்து அரசன் கட்டளையைத் தெரிவித்துத் தங்களுடன் புறப்பட்டு வருமாறு அழைத்தனர்.

நாவுக்கரசர் அவர்கள் கட்டளையை ஏற்க மறுத்துவிட்டார். தமக்கு அருள் செய்த பரமசிவனைத் தவிர வேறு யார்க்கும் தாம் கட்டுப்பட்டவர் அல்லர் என்றும், பிறர் கட்டளைக்குத் தாம் தலைவணங்க முடியாது என்றும் கூறி 'நாமார்க்குங் குடியல்லோம்' என்னும் திருமறுமாற்றத் திருத்தாண்டகம் பாடி அருளினர்.

அமைச்சர்கள் அவரைப் பணிந்து தங்களோடு புறப்பட்டு வரவேண்டுமென்று வேண்டினர்கள். நாவுக்கரசர் எம்பெருமான் மீது பாரத்தைப் போட்டு, 'எனக்கு வரும் துன்பங்கள் உனக்கும் தான்' எனத் தெரிவித்து அவர்களோடு புறப்பட்டார்.

நாவுக்கரசரின் சிவக்கோலத்தைப் பார்த்ததும் சமணத் துறவிகள் அனலிலிட்ட மெழுகுபோல் உருகினர். தன் எதிரில் இருக்கும் நாவுக்கரசரை என்ன செய்வதென்று அரசன் கேட்டபோது அவர்கள் கூசாமல் நீற்றறையிலிடுமாறு தெரிவித்தனர். அரசனும் அவ்வாறே அவரை நீற்றறையிலிடக் காவலர்களுக்குக் கட்டளை யிட்டான்.

நாவுக்கரசரை அழைத்துச் சென்று சுண்ணும்புக் காளவாய் ஒன்றில் அடைத்துக் கதவைத் தாளிட்டனர். அவரோ கொஞ்சமும் மனச் சஞ்சலம் அடையவில்லை. தம்மைப் படுகுழியிலிருந்து கரையேற்றிய பெருமான் ஒரு போதும் கைவிட்டு விட மாட்டார் என்ற நம்பிக்கையுடன் வீரட்டானேசுவரரைத் தியானித்தபடி 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்ற திருக்குறுந்தொகையை அருளினர். அவரை அடைத்திருந்த நீற்றறை குளிர்ந்ததாக ஆயிற்று

ஏழு நாட்கள் சென்றபின் அரசன் துறவிகளை அழைத்து நீற்றறையின் கதவைத்திறந்துபார்க்குமாறு சொன்னன். நாவுக்கரசர் சுண்ணும்பாகி யிருப்பார் என்ற ஆவலோடு கதவைத் திறந்த துறவிகள் எவ்வித ஊனமுமில்லாது சிரித்த முகத்தோடு வெளிவந்த அவரைக் கண்டதும் திகைப்புண்டாகி விட்டது. அரசனிடம் ஓடினர்.

''வேந்தே, தருமசேனர் சாதாரண மாணவர் அல்ல. நம் சமயத்து மந்திரங்கள் அனைத்தும் உணர்ந்தவர். ஆகவே அவர் நீற்றறை வெப்பத்தால் தமக்கு ஏதும் துன்பம் நேராதிருக்க மந்திரம் செய்து கொண்டு விட்டார். அவருக்கு நஞ்சு ஊட்ட வேண்டும்'' என்றனர்.

அரசன் அவர்கள் வார்த்தைக்கு ஏற்ப ஆடினன். கொடிய நஞ்சு கலந்த உணவை நாவுக்கரசருக்குக் கொடுத்தான். ஆல

கால விஷத்தையே கண்டத்தில் அடக்கியுள்ள எம்பெருமானுக்கு இந்த நஞ்சு எம்மாத்திரம்? பக்தனுக்கு அது அமுதமாக அருளினர். நாவுக்கரசர் சமணர்களின் தூண்டுதலால் அளிக்கப்பட்ட நஞ்சு கலந்த உணவை உண்டு முன்னிலும் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தார்.

துறவிகள் எந்த விதத்திலாவது நாவுக்கரசரை ஒழித்து விட வேண்டுமெனக் கங்கணம் கட்டியிருந்தனர்.

"அரசே, விஷத்தையும் தன்னிடம் உள்ள மந்திரசக்தியால் கட்டுப் படுத்தி விட்டான் இவன். இனியும் நாம் வாளாவிருப்பது தவறு, நாளை உம்முடைய அரசாட்சிக்கே ஊறு நேரிடச் செய்வான். ஆகவே யானைக்காலில் இடரச் செய்து இவன் ஆவியைப் பறிக்க வேண்டும்" என்றனர்.

மன்னனும் அதற்குச் சம்மதித்து விட்டான்.

நாவுக்கரசரை நிலத்தில் கிடத்தி அவர் உடலை மிதித்துக் கொல்லுமாறு யானையை ஓட்டி வந்தனர். பாகர்களின் கொடுமைக்கு உள்ளான யானை பெரும் சீற்றத்துடன் ஓடிவந்தது.

நாவுக்கரசரோ அதைக் கண்டு அஞ்சவில்லை. 'சுண்ண வெண் சந்தனச் சாந்து' என்ற பதிகத்தைப் பாடி அதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தவிர தமக்கு எவரிடத்தும் பயமில்லை என்றும்,அவரைத்தவிர யாரும் தம்மைப் பயமுறுத்துவதற்கில்லை என்றும் வேண்டியவராய் பகவானைத் தியானித்திருந்தார்.

அண்டம் கிடுகிடுக்கப் பிளறியபடி அட்டகாசத்தோடு ஓடி வந்த யானை நாவுக்கரசரை நெருங்கியதும் அவரை வலம் வந்து தரையிலே மண்டி யிட்டு வணங்கியது. பின்னர் எழுந்து அங்கிருந்த கூட்டத்தில் புகுந்து சமணத்துறவிகளைத் துதிக்கையில் சுருட்டி வாறித் தரையிலே அடித்தும் கால்களின் கீழ் இழுத்துப் போட்டு மிதித்தும் கொன்றது. எஞ்சியவர்கள் அலறியடித்துக் கொண்டு அரசனிடம் ஓடினர்.

"மன்னவா, அவன் தான் கற்ற மந்திரத்தை நம்மீதே ஏவி விட்டான். தன்னைக் கொல்ல வந்த யானையை மயக்கி எங்கள் பால் திருப்பிவிட்டான். எங்களில் பலர் அதனிடம் சிக்குண்டு உயிரிழந்து விட்டனர். இனி உன்மீது கூட அவன் தன் மந்திரத்தை உபயோகிக்கக் கூடும்" என்று முறையிட்டனர்.

அரசனுக்கு ஒன்றும் தெரியவில்லை. எவ்வகைக் கொடுமைக்கும் நாவுக்கரசர் பிழைத்திருப்பது கண்டு திகைத்தான்.

சமணர்களின் துர்ப்போதனையால் மதிமயங்கியிருந்த அரசன் அவர்கள் சொல்வது போலத் தன் மீது மந்திரத்தைத் திருப்பு வானே எனப் பயந்தான்.

''முடிவாக என்னதான் செய்யலாம்?'' என்று கேட்டான்.

''அரசே, அவன் நாட்டில் இருக்கத் தகுதியற்றவன்; அவனிருப்பதால் கஷ்டங்களே அதிகரிக்கும். ஆகவே பாறை ஒன்றில் அவனைப் பிணைத்துக் கடலிலே எறிந்து விடுங்கள்'' என்றனர்.

மன்னன் அதற்கு இசைந்து அவ்வாறே நாவுக்கரசரைப் பாறையுடன் பிணைத்துக் கடலிலே எறிய உத்தர விட்டான்.

'இதுவும் ஈசன் திருவுள்ளமோ!' என மகிழ்ச்சியுடன் அத் தண்டனையையும் ஏற்றுக் கொண்டார் நாவுக்கரசர். பக்தர் களுக்கு அருளும் பரமதயாளனைப் பணிந்து அவன் திருவடி களை மனத்தில் தியானித்தவராய் 'சொற்றுணை வேதியன் சோதிவானவன்' என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார்.

கடலிலே நாவுக்கரசரைப் பிணைத்தபடி எறியப்பட்ட பாறை நீரில் அமிழாது மிதக்கத் தொடங்கியது. அவரைக் கட்டி யிருந்த கட்டுகள் தாமே அறுந்தன. கருங்கல்லே பட காக மாறியது.

வருணன் பெரும் தவம் செய்து அப்பாக்கியம் பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் பரமேச்வரனின் திரு அருட் பிர சாதத்தைப் பெற்ற அடியாரைத் தோளில் தாங்க முடியுமா?

வருணன் நாவுக்கரசரைத் தாங்கிச் சென்று அவர் வழி படும் வீரட்டானேசுவரரிடம் கொண்டு போய்விட்டான்.

திருபாதிரிப்புலியூர் அருகே1 கடலில் வந்து ஒதுங் கியது நாவுக்கரசரைத் தாங்கி வந்த படகு.

33. காழிப்பதியிலே அப்பர்

திருப்பாதிரிப்புலியூர் அருகே கரையேறிய நாவுக்கரசர் தமக்குத் தோன்றாத் துணையிருந்த எம்பெருமானைத் தரிசிக்கப் பாடலீச்வரர் ஆலயத்தை அடைந்தார். 'ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்' என்ற திருவிருத்தம் பாடி பெரும் துன்பங் களிலிருந்து தம்மைக் காப்பாற்றியதைப் போற்றித் தொழுதார்.

1கடற்கரைக்குச் சமீபமாக உள்ள குப்பம் ஒன்றை நாவுக்கரசர் கரையேறிய இடமாகச் சொல்வர்.

தறி அறுத்த கன்று தாயிடம் ஓடுவதுபோல அதிகை வீரட்டானேசுவரரைத் தரிசிக்க அவர் உள்ளம் விழைந்தது. திருப்பாதிரிப்புலியூரிலிருந்து புறப்பட்ட அவர் வழியிலே திருமாணிக்குழியையும் திருத்தினை நகரையும் அடைந்து அப்பதிகளிலே எழுந்தருளியுள்ள எம்பெருமானைத் தரிசித்துக்கொண்டு திருவதிகை போய்ச் சேர்ந்தார்.

நாவுக்கரசருக்குப் பல்லவ மன்னன் சமணர்களின் துர்ப்போதனைகளால் இழைத்த கொடுமைகளையும் எம்பிரான் அருளால் அவற்றிலிருந்து அவர் தப்பியதும் நாட்டிலே பலரும் அறியப் பரவியிருந்தது. அதனுல் கடலிலிருந்து கரையேறிய பெருந்தகையார் தங்களூருக்கு வந்து கொண்டிருக்கிருர் என்பதை அறிந்ததும் ஊரிலுள்ள சைவப் பெருமக்கள் அவருக்குக் கோலாகலமான வரவேற்பை அளிக்க விரும்பினர்.

மேள தாளங்களுடன் அவரை ஊரெல்லையில் எதிர்கொண்டு வரவேற்றனர். பின்னர் அவரை வீதிகள் தோறும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். மங்கையர் மலர் தூவி அவரை வாழ்த்தினர். தெருமுனைகளிலெல்லாம் மக்கள் குழுமி நின்று அவரைக் கண்டதும் கைகூப்பித் தொழுதனர். மகிழ்ச்சிப் பிரவாகமெடுத்தோட அவரை வாழ்த்தினர்.

ஆலயம் சென்றடைந்த நாவுக்கரசர் வீரட்டானேசப் பெருமானைத் தரிசித்து உள்ளமுருக வேண்டி ஏழைத் திருத்தாண்டகம் பாடினுர். பக்தர் குழாம் அவரைப் போற்றிக் கொண்டாடியது.

நாவுக்கரசர் பத்திரமாகத் திருப்பாதிரிப்புலியூரில் கரை ஏறி திருவதிகை சென்று தம் பணியில் ஈடுபட்டுள்ளார் என்ற செய்தியைக் கேட்ட பல்லவ மன்னன் திடுக்கிட்டான். அவர் வழிபடும் ஆண்டவன் திரு அருளால் அவருக்குத் தான் இழைத்து வந்த கொடுமைகள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிட்டதை அறிந்தபோது சமணத் துறவிகளிடம் அவன் கொண்டிருந்த பற்று அறுந்தது. அமைச்சர்கள் சூழத் திருவதிகை வந்து சேர்ந்தான்.

நாவுக்கரசரைப் பணிந்து அவர் பெருமையை உணராது பிறர் பேச்சைக் கேட்டு அவருக்குத் தான் தீங்குகள் இழைத்துவிட்டமைக்காக வருந்துவதாகத் தெரிவித்தான்.

அரசனின் மனமாற்றத்தை உணர்ந்த நாவுக்கரசர் உள்ளக் களிப்போடு அவனுக்கு எம்பெருமானுடைய திருவருள் பூரணமாகக் கிட்டுமென்று அருள் செய்தார். சைவத்தின் பெரு

மையை அனைவரும் உணரவே ஈசன் அரசன் மூலம் தமக்கு இடர்களைத் தருவித்துக் காப்பாற்றினார் என்று தெரிவித்த போது அரசன் தன்னை மறந்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

இறைவனின் அன்புக்குப் பாத்திரமாகிவிட்ட அப்பெருமானுக்குத் தான் இழைத்த கொடுமைகளுக்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென்று அரசன் விரும்பினான். பாடலிபுத்திரத்திலிருந்த சமணர்களை வெளியேறுமாறு உத்தரவிட்டு அவர்களுடைய பள்ளியும் மற்ற இடங்களையும் தரை மட்டமாக்கினான். அந்தக் கற்களைத் திருவதிகைக்கு எடுத்துவரச் செய்து எம்பெருமானுக்கு குணதரவீச்சுரம் என்ற ஆலயம் எழுப்பினான்.

நாள்தோறும் ஆலயத்தில் தொண்டு செய்தும் எம்பெருமானை வழிபட்டும் வந்த நாவுக்கரசர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்பதிகள் தோறும் சென்று தரிசிக்க ஆவல் கொண்டார்.

திருவதிகையை விட்டுப் புறப்பட்ட அவர் திருவெண்ணெய் நல்லூர் கிருபாபுரீசரையும், திருவாமாத்தூர் 1 அபிராம ஈசுவரரையும், கீழூர் 2 வீரட்டானேசுவரரையும் தரிசித்துப் பதிகங்கள் பாடி மகிழ்ந்து பெண்ணாடத்திலுள்ள தூங்கானை மாடம் எனப்படும் சிவாலயத்தை அடைந்தார்.

சில நாட்களாக நாவுக்கரசரின் உள்ளத்தில் ஓர் எண்ணம் உதயமாகியிருந்தது. சமண சமயத்திலே சேர்ந்து சிறிது காலம் அவர்களுக்கு உழைத்த அவ்வுடலோடு எம்பெருமானுக்குச் சேவை புரிவது அவருக்கு வேதனை கொடுத்தது. உள்ளத்தில் புனிதம் ஏற்பட்டது போல் உடலும் புனிதமடைய வேண்டுமென எண்ணினார். தூங்கானை மாடத்துச் சுடர் கொழுந்து நாதரைத் தரிசித்தபோது தமது உடலும் புனிதமடைய தோள்களிலே சூலப்பொறி இட்டு அருளும்படி வேண்டினார். 'பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்' என அவர் திருவிருத்தம் பாடியதும் இறைவன் அருளால் சிவபூதம் ஒன்று தோன்றியது. அவருடன் இருந்தவர்கள் எவருக்கும் தெரியாது நாவுக்கரசரின் தோள்களில் சூலப்பொறியும் ரிஷபக் குறியும் பொறித்தது.

பரம்பொருளின் திருவருளைக் கண்டு வாகீசர் காதலாகி கண்ணீர் உகுத்து அவரைத் தொழுதார். அவருக்குப் பெருமான்

---

1 விழுப்புரத்துக்கு வடமேற்கே நான்கு மைலில் உள்ளது.

2 திருக்கோவிலூருக்கு மேற்கே ஒன்றரை மைல்.

இலச்சினை பொறித்து அருளியதைக் கண்டவர்கள் அவரைப் பலவாருகப் போற்றி வணங்கினர்.

மறுநாள் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு திருமுதுகுன்றம் சென்று பழமலைநாதரைப் பணிந்து பதிகம் பாடி மகிழ்வித்தார். பின்னர் அங்கிருந்து கிளம்பி நிவாநதிக் கரையோரமாகக் கிழக்குத் திசையிலே பிரயாணப்பட்டுத் தில்லையை நோக்கிச் சென்ருர்.

வாகீசரைத் தில்லை அடியார்கள் திரண்டு வந்து வரவேற்று ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். ஆனந்த நடனம் புரியும் அம்பலவாணனைத் தரிசித்துக் களிப்பில் மூழ்கினுர். **'பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி'** என்னும் திருநேரிசைப் பதிகம் பாடி எம்பெருமானைக் களிப்பில் ஆழ்த்தினுர். அடியார் குழாம் அவரைப் பணிந்து வணங்கியது. சில நாட்கள் அவர் தில்லையிலேயே தங்கி தமது உழவாரத் தொண்டை நடத்தி வந்தார்.

அர்ச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கிய இடமெனக் கொண்டாடப்படும் திருவேட்களத்துக்கு1ச் சென்று பாசுபதேசுவரரைத் தரிசித்து மகிழ்ந்தார். பிறகு அங்கிருந்து புறபபட்டுத் திருக்கழிப்பாலை 2 யை அடைந்து வெண்ணிரத் திருமேனியரான பால்வண்ண நாதரைத் தரிசித்துப் பதிகம் பாடி மறுபடியும் பொன்னம்பலம் திரும்பினுர்.

சிதம்பரத்திலே வாகீசர் சில நாட்கள் தங்கி தினமும் அம்பலத்தில் கூத்தாடும் பெருமானைத் தரிசித்து திருக்குறுந்தொகை, பெரிய திருத்தாண்டகம் முதலிய பதிகங்களால் பரமனின் பெருமையைப் பாடி வந்தார். அவ்வாறு இருந்து வரும் போது ஒருநாள் அடியார் குழாம் திருக்கழுமலத்திலே ஞானப் பாலுண்ட சம்பந்தப் பெருமானைப் பற்றி அவரிடம் தெரிவித்தனர். அதைக் கேட்டதும் அவர் உள்ளத்தில் அடங்காத ஆவல் எழுந்தது உமையவள் முலைப் பாலுண்ட உத்தமரைத் தரிசித்து அவரைப் பணிந்து தொழ விருப்பம் கொண்டார். எம்பெருமானிடம் தம் உள்ளக்கிடக்கையைத் தெரிவித்து அவர் சம்மதம் பெற்று அடியார்கள் பின் தொடரக் கழுமலம் புறப்பட்டார்.

---

1 திருவேட்களம் என்னும் தலம் சிதம்பரத்துக்குக் கிழக்கே ஆறு பர்லாங் தொலைவிலும் 2 திருக்கழிப்பாலை தென் கிழக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் கொள்ளிடக் கரையிலும் இருக்கின்றன.

ஆளுடைய பிள்ளையாரைத் தரிசிக்கச் சாதாரணமாகச் செல்வதா?

தில்லையின் வீதிகளில் புரண்டு வலமாகச் சென்று எல்லையை அடைந்தார் வாகீசர். அங்கிருந்து புறப்பட்டுத் திருநாரையூரை அடைந்து சௌந்தர்ய ஈசுவரரைத் தரிசித்துப் பின்னர் சீகாழிப்பதியான திருப்புகலியை நெருங்கினார்.

பிறந்த சமயத்தை விட்டுப் புறச் சமயப் படுகுழியில் வீழ்ந்தவரைச் சூலை நோய் கொடுத்துக் கரையேற்றிய எம்பெருமானின் திருவருள் பற்றிச் சம்பந்தப்பெருமான் அறிந்திருந்தார். இறைவனின் திருக்கருணைக்கு ஆளான வாகீசர் தம்மைத் தரிசிக்க வருகிறார் என்று அறிந்தபோது ஆளுடைய பிள்ளையார் நெஞ்சம் தழுதழுக்க, 'நாமல்லவோ அவரைச் சென்று பார்க்க வேண்டும்!' என்று எண்ணினார். உடனே தொண்டர்கள் சூழச் சிவிகையிலேறி ஊரின் எல்லைக்குச் சென்று வாகீசரின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

உள்ளத்தில் எழும் அடங்கா ஆவலால் உந்த ஓட்டமும் நடையுமாய் வந்த நாவுக்கரசர் தாம் தரிசிக்க வந்த பெருமான் தம்மை எதிர் கொண்டு அழைத்துச் செல்லத் தொண்டர்கள் சூழ ஊரின் எல்லையில் காத்திருப்பதைக் கண்டதும் மயிர் கூச்சலெடுக்க 'ஞானமுண்ட பெருமானே! அடியேனுக்கருள வேண்டும்!'' என்று ஆளுடைய பிள்ளையாரின் பாதங்களிலே விழுந்து பணிந்தார்.

''ஆஹா, இதென்ன? நானல்லவோ தங்களை முதலில் வணங்க வேண்டும்!'' என்று பதறியவராய் சம்பந்தப் பெருமான் நாவுக்கரசரின் தோள்களைப் பிடித்துத் தூக்கினார்.

வாகீசரின் கண்களிலிருந்து பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து வழிந்தது. ஞானப்பாலுண்ட அப்பிள்ளையின் திருமேனியைத் தம்முடைய கரங்களால் தடவி மகிழ்ந்தார்.

''அப்பரே!...'' என்று அழைத்தார் சம்பந்தர்.

''அடியேன்!...'' என்று குழைந்தார் வாகீசர்.

''உங்கள் தம்பிரானைப் பாடவேண்டாமா? வாருங்கள். சிவிகையில் புறப்படுவோம்!'' என்று அழைத்தார் சம்பந்தர்.

சூழ்ந்திருந்த தொண்டர் குழாம் நாவுக்கரசரை சம்பந்தர் 'அப்பரே!' என அழைத்ததையும் அதைப் பணிவோடு நாவுக்கரசர் ஏற்றுக் கொண்டு பதிலுரைத்ததையும் கண்டு தங்களை மறந்து ஆரவாரம் செய்தார். அதுமுதல் நாவுக்கரசர் அப்பர் பெருமான் என்றே கொண்டாடப்பட்டார்.

சிவிகையிலேறி இருவரும் தோணியப்பர் ஆலயத்துக்குச் சென்றனர். கோபுர வாயிலை அடைந்ததும் அப்பர் சிவிகையிலிருந்து கீழிறங்கித் தரையிலே வீழ்ந்து புரண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தார். பின்னர் சம்பந்தர் உடன் வர ஆலயத்தினுள் சென்று எம்பெருமானைத் தரிசித்து 'பார் கொண்டு மூடி' என்னும் திரு விருத்தம் பாடி ஈசனை மகிழ்வித்தார்.

சம்பந்தர் அப்பரைத் தம்முடைய திருமடத்துக்கு அழைத்துச் சென்று திருவமுது செய்வித்து அவரோடு உரையாடி மகிழ்ந்தார். காவிரியின் இருகரைகளிலும் இறைவன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளுக்குச் சென்று தாம் தரிசனம் செய்து வந்தது பற்றி சம்பந்தர் அவரிடம் கூறி வந்தபோது நாவுக்கரசரின் உள்ளத்திலும் தாமும் அத்திருப்பதிகள் தோறும் சென்று இறைவனின் திருக்கோலத்தைக் கண்டு மகிழவேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அதைச் சம்பந்தரிடம் வெளியிட்டபோது அவரும் பெருமகிழ்ச்சி கொண்டார்.

இரண்டொரு நாட்கள் சீர்காழிப் பதியிலே தங்கி விட்டுப் பொன்னிநாட்டுத் தலங்களைத் தரிசிக்க அப்பர் பெருமான் சம்பந்தரிடம் விடை பெற்றுப் புறப்பட்டார். சம்பந்தரும் அவரோடு திருக்கோலக்கா வரை வந்து திருத்தாளமுடையார் கோயிலிலே தரிசனம் செய்து அவரை வழியனுப்பி விட்டுச் சீர்காழி திரும்பினார்.

34. நல்லூரில் சூட்டிய திருவடி

திருக்கோலக்காவிலிருந்து புறப்பட்ட அப்பர் மேலைக் காழி எனப் பாடும் திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், நீடூர், ஆகிய பதிகளில் எம்பெருமானைத் தரிசித்துக் கொண்டு திருக்குறுக்கை அடைந்தார். காமனை எரித்த வீரட்டானேசுவரரைக் கண்டு தொழுதார்.

அங்கிருந்து கிளம்பி திரு நின்றியூர்1 சென்று தரிசனத்தை முடித்துக் கொண்டு காவிரியின் கரையை அடைந்தார். அங்கே திருநனிப்பள்ளியில் நற்றுணையப்பரை வழிபட்டுத் திருச்செம்பொன்பள்ளி2 சேர்ந்து சுவர்ணபுரீசுவரர் தரிசனம் முடித்துத் திருமயிலாடுதுறையை அடைந்தார்.

---

1 ஆனதாண்டவபுரத்துக்குக் கிழக்கே இரண்டரை மைலில் உள்ளது. 2 செம்பொன் பள்ளி என்பதே செம்பொனார் கோவில் ஆகும். திருநனிப்பள்ளி அவ்வூருக்கு வடகிழக்கே மூன்று மைலில் உள்ளது.

மாயூர நாதரைப் பாடிய அப்பர் அங்கிருந்து காவேரிக் கரை யோரமாகவே தம் யாத்திரையை மேற்கொண்டார். திருத்துருத்தியில்1 தரிசனம் முடிந்ததும் சிவபெருமான் பார்வதியை மணம் முடிக்க விவாக வேள்வி நடத்திய வேள்விக்குடி2 சென்று கல்யாண சுந்தரரைப் பாடினர். பின்னர் அவ்வூரை விட்டுப் பிரயாணப்பட்டு திருஎதிர்கொள்பாடி, மற்றும் திருக்கோடி காவலுக்குச் சென்று அங்கிருந்து திருவாவடு துறையை அடைந்தார்.

திருவாவடுதுறையில் உறையும் செம்பொன் தியாகேசரை 'நம்பனை நால்வேதங்கரை கண்டானை' என்னும் பதிகத்தால் பாடிக் களிப்பித்துத் திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம் ஆகிய தலங்களைக் கண்டு மகிழ்ந்து பழையாறைக்கு அருகிலுள்ள திருச்சத்தி முற்றத்தைச் சேர்ந்தார்.

சத்திமுற்றத்தில் எழுந்தருளியிருக்கும் சிவக்கொழுந்தீசரைத் தரிசித்து 'கோவாய் முடுகி' என்ற திருவிருத்தம் பாடினர். 'ஐயனே, வயோதிகத்தால் உடல் தளர்ந்து வாய் பேச முடியாது போய் குழறத் தொடங்கி கூற்றுவன் வந்து என்னை அணைப்பதற்கு முன்பு உன் திருவடியை என் மேனியில் சூட்டுவிக்க மாட்டாயா? இல்லையேல் அந்தப் பழி உன்னைத் தான் சாரும்!'' என்று மனம் கசிந்து வேண்டினர்.

இறைவனும் அவருக்குத் திருவருள் புரிய எண்ணினர் போலும்.

''அப்பனே, நல்லூருக்கு வா!'' என்று அசரீரியாக அழைத்தார்.

இறைவனின் கட்டளையைப் பணிந்து ஏற்றுக் கொண்ட அப்பர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு திருநல்லூர் போய்ச் சேர்ந்தார்.

ஆலயத்துள் சென்று பெரியாண்டாரேசுவரரைத் தரிசித்து சந்நிதானத்தில் நமஸ்கரிக்கும் போது எம்பெருமான் திருச்சத்திமுற்றத்திலே அவருக்குக் கொடுத்த வார்த்தையை நிறைவேற்றினர். பகவான் தமது திருவடியை அப்பரின் தலைமேலே வைத்து அருளினர்.

நாவுக்கரசரின் மேனி சிலிர்த்தது. எம்பெருமானின் திருவடி ஸ்பரிசம் உணர்ந்து உருகி உள்ளம் கரைந்தார். கண்கள்

1 குற்ருலம்.

2 குற்ருலத்துக்கு வடகிழக்கே இரண்டரை மைல்.

இரண்டும் ஆனந்த வாரிதியைப் பெருக்கின. 'நினைந்துருகு மடியாரை' என்ற திருத்தாண்டகத்தால் பகவானைப் பாடி மகிழ்ந்தார்.

நல்லூரை விட்டுச் செல்ல அப்பரின் கால்கள் எழவில்லை. திருவடி ஸ்பரிசம் நினைக்கும் போதெல்லாம் அவரைப் புல்லரிக்கச் செய்தது. அத்திருப்பதியில் தங்கி தொண்டு செய்து வரலானார். நடு நடுவே திருக்கருகாவூர்1 சென்று முல்லை வனநாதரையும், திருப்பாலைத்துறை பாலைவன நாதரையும், திரு ஆவூர்2 பசுபதீச்வரரையும் தரிசித்துத் திரும்பினார்.

35. படிக்காசு பெற்ற பெருந்தகையோர்

நல்லூரை விட்டுப் புறப்பட்ட வாகீசர் திருப்பழனம்3 நோக்கிச் சென்றார்.

திருப்பழனத்துக்கு வடக்கே ஒரு மைல் தூரத்தில் திங்களூர் என்றொரு ஸ்தலம் இருக்கிறது. அவ்வூரை நெருங்கும் போது வழியெல்லாம் நிறுவப்பட்டிருந்த தண்ணீர்ப்பந்தல், அன்ன சத்திரம், திருமடம் ஆகிய அனைத்தும் தம் பெயரால் விளங்குவதைக் கண்டு ஆச்சரிய மடைந்தார். அவ்வூர் அடியார் ஒருவரை அழைத்து இவ்வாறு தம்முடைய பெயரை வைத்திருப்பதற்கான காரணத்தை வினவினார்.

திங்களூரிலே அப்பூதி அடிகள் என்ற சிவனடியார் இருந்து வந்தார். அவருக்குத் திருநாவுக்கரசரிடம் எல்லையில்லாத பக்தி. ஆகவே அவர் தாம் மேற்கொண்ட திருப்பணிகள் அனைத்தும் திருநாவுக்கரசர் பெயராலேயே நடக்கச்செய்தார்.

அப்பூதியடிகளின் அபரிமித அன்பைக் கேள்வியுற்று வியந்த வாகீசப்பெருமான் அவரைக் காண விரும்பி அவர் மனைக்குச் சென்றார். அதற்குள் அடிகளாரே நாவுக்கரசரின் வருகை கேள்விப்பட்டு அவரை எதிர் கொண்டு வணங்கி திருவமுது செய்விக்கத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

---

1 பாபநாசத்துக்கு வடக்கே ஒரு மைலில் பாலைத் துறையும், தெற்கே ஐந்து மைலில் திருக்கருகாவூரும் இருக்கின்றன.

2 ஆவூர்ப்பசுபதீச்வரம் என்பது சுந்தரப்பெருமாள் கோவில் அருகே உள்ளது.

3 தஞ்சைக்கு வடக்கே ஐந்து மைலில் காவிரிக் கரையில் உள்ளது.

அறுசுவை உண்டி தயாராகியது. கொல்லையிலே வாழை இலை கொண்டுவரச் சென்ற அடிகளின் மூத்த மகன் அங்கே நாகம் தீண்டப்பட்டான். இலையைக் கொண்டு வந்து கொடுத்து விஷயத்தை அறிவித்ததும் விஷம் தலைக்கேறி அவன் உயிர் துறந்தான்.

விஷயம் வெளிப்பட்டால் வாகீசப்பெருமான் அமுது செய்தருள மாட்டார் என அப்பூதியடிகளும் அவர் மனைவி யாரும் மகனின் சவத்தை மறைத்து நாவுக்கரசரைச் சாப்பிட அழைத்தனர். இறைவன் திருவருளால் உண்மையை உணர்ந்த நாவுக்கரசர் அடிகளாரிடம் குமாரனின் சவத்தைக் கோவிலுக்கு முன் கொண்டுவரச் சொல்லி தரையில் கிடத்தி 'ஒன்று கொலாமவர் சிந்தையுயர்வரை' என்னும் திருப்பதிகம் பாடி னார். பாடி முடிந்ததும் சவமாகக் கிடந்த அடிகளாரின் மகன் உயிர்பெற்று எழுந்தான். பின்னர் அவர் இல்லத்தில் திரு வமுது செய்து கொண்டு திருப்பழனம் போய்ச் சேர்ந்தார்.

திருப்பழனம் சேர்ந்ததும் அவ்வூரிலுள்ள ஆலயம் சென்று ஆபத்சகாயரைத் தரிசித்து 'சொன்மாலை பயில்கின்ற' என்ற பதிகம் பாடி அதில் அப்பூதியடிகளின் பெருமையைக் குறிப் பிட்டு அஞ்சலி செய்தார். பிறகு பக்கத்திலுள்ள திருச்சோற் றுத் துறை சென்று எம்பெருமானைத் தரிசித்து திருப்பழனம் திரும்பி அங்கே தங்கி தொண்டு செய்து வரலானார்.

பின்னர் சில நாட்களுக்கெல்லாம் அவ்வூரை விட்டுப் புறப் பட்டு காவிரியைக் கடந்து தென்கரையேறி பிரயாணப்பட்டு நல்லூர் வந்து சேர்ந்தார்.

சிரசிலே திருவடி சூட்டிய நல்லூரெம்பெருமானாரைத் தரி சித்து அவர் ஆலயத்தில் தொண்டுகள் புரிந்து வருகையில் வாகீசருக்குப் புற்றிடங்கொண்டாரைக் கண்ணாரக் கண்டு தொழ வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. உடனே தொண்டர் குழாம் பின்தொடர நல்லூரை விட்டுப் புறப்பட்டார்.

பழையாறை, திருவலஞ்சுழி ஆகிய பதிகளைத் தரிசித்துக் கொண்டு குடமூக்கு எனப்படும் குடந்தை நகரை அடைந்தார்.

குடந்தையிலே வழிபாட்டை முடித்துக்கொண்டு கிளம்பி நாலூர் திருச்சேறை, குடவாயில் முதலிய தலங்களில் பிறை அணிந்த பெருமானைப் பாடி மகிழ்ந்து திருவாஞ்சியம் 1 சேர்ந் தார். காசிக்கு வீசம் அதிகம் புண்ணியம் கொடுக்கக் கூடிய

---

1 நன்னிலத்துக்கு மேற்கே நான்கு மைலில் உள்ளது.

தான அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் வாஞ்சிலிங்கேச்வரரைத் தரிசித்துப் பதிகம் பாடிக் களித்தார்.

பிறகு பெருவேளூர்1 சென்று பிரியாநாதரைத் தொழுது பணிந்து திருவிளமர் 2 பூலோகேசுவரரைப் பாடி பின்னர் ஆரூர் போய்ச் சேர்ந்தார்.

அப்பரின் வருகையறிந்து அன்பர்கள் ஒன்றுகூடி எதிர் வந்து அவரைப் பணிந்து அழைத்துச் சென்றனர். திருவீதிகள் எங்கும் அவரை வரவேற்க கோலாகல ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. அவர்கள் அன்பு உபசாரத்திலே திக்குமுக்காடியவராய் அப்பர் ஆலயம் சென்று தேவாசிரிய மண்டபத்தில் அடியார்களைத் தொழுது பின் திருவாயிலைக் கடந்து உள் சென்று புற்றிடம் கொண்ட பெருமானைத் தரிசித்தார். தினமும் வான்மீகநாதரைப் பணிந்து பதிகம் பாடி உழவாரத் தொண்டு செய்து வந்தார். ஆலயத்துள் இரண்டாம் ஆவரணத்தில் மேற்குப் பார்த்து கோயில் கொண்டருளியிருக்கும் அகலேசுவரரின் அறநெறி ஆலயத்தையும் தரிசித்து நீர் கொண்டு விளக்கேற்றிய நமிநந்தியடிகளின் பெருமையைப் பதிகம் பாடினார்.

ஆரூரில் தங்கி ஐயன் தரிசனம் செய்து வரும் நாளில் திருவலிவலம், கீழ்வேளூர் ஆகிய இடங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து கன்றாப்பூர் 3 என்னும் ஊரை அடைந்தார். அந்தணப் பெண்ணுக்காக ஈசன் அருளால் கன்று கட்டும் ஆப்பே சிவலிங்கமாகிய தலம் அது. அவ்வூரை அடைந்த அப்பர் நடுதரியப்பரைக் கண்டு மகிழ்ந்து வழிபாட்டை முடித்துக் கொண்டு ஆரூர் திரும்பினார்.

இவ்வாறு இருந்துவரும் நாளில் திருவாதிரைத் திருநாள் வந்தது. வீதிவிடங்கப் பெருமான் திருவீதி வலம் வந்தபோது அப்பர் தம் தொண்டர் குழாத்தோடு எம்பெருமானுடன் சென்று தரிசித்துக் களிகூர்ந்தார். பின்னர் சில நாட்களுக்கெல்லாம் ஆரூரை விட்டுப் புறப்பட்டுத் திருபுகலூர் வந்து சேர்ந்தார்.

திருப்புகலூரில் அப்போது சம்பந்தப் பெருமான் முருகனார் இல்லத்தில் தங்கியிருந்தார். ஆரூரிலிருந்து அப்பர் வருகிறார் என்று செய்தி கேட்டு அவரை எதிர்கொண்டு வந்து அழைத்துச் சென்றார். இருவரும் உரையாடி வரும்போது, "அப்பரே,

---

1 கொரடாச்சேரிக்கு வடமேற்கே நான்கு மைல்.

2 திருவாரூருக்கு மேற்கே இரண்டு மைல்.

3 மாவூர் ரோடுக்குத் தென்கிழக்கே சுமார் நான்கு மைல் தொலைவில் உள்ளது.

ரீர் புறப்பட்டு வரும்போது ஆருரில் என்ன விசேஷம்? அதை எனக்குச் சொல்ல வேண்டும்'' என்று சம்பந்தர் கேட்டார்.

அப்பரும் திருவாதிரை நாளில் தாம் இறைவனின் திருக் கோலத்தைக் கண்டு ஆனந்தித்த விவரத்தை 'முத்துவிதானம்' என்னும் திருப்பதிகமாகப் பாடியருளினர்.

அதைக் கேட்ட சம்பந்தர் தாம் அப்போதே புறப்பட்டுப் போய் ஆரூர் சென்று வீதிவிடங்கரைத் தரிசித்து வருவதாகச் சொல்லிக் கிளம்பினர். அப்பரும் அவரை வழியனுப்பி, அவர் திரும்பும் வரை திருப்புகலூரில் தங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

சம்பந்தர் திருவாரூர் சென்று தரிசனம் முடித்துக்கொண்டு திரும்புவதற்குள் அப்பர் திருச்செங்காட்டாங்குடி 1, திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை முதலான இடங்களுக்குச் சென்று எம்பெருமானை வழிபட்டுத் திரும்பினர்.

அப்பரின் உள்ளத்தில் கொஞ்ச நாட்களாக அந்தச் சம்பவம் அரித்து வந்தது. தில்லையில் இருக்கும்போது ஆளுடைய பிள்ளையாரின் பெருமையைக் கேள்வியுற்று அவரைத் தரிசிக்கப் புறப்பட்டு வந்தார். ஆனல் சம்பந்தரோ அவரை முந்திக் கொண்டு வரவேற்க எல்லையில் இருந்தார். மறுபடியும் ஆரூரிலிருந்து திருப்புகலூர் வரும்போது சம்பந்தரே எதிர்கொண்டு வந்து அவரை வரவேற்றார். தாம் சென்று சம்பந்தரைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டவில்லையே என உள்ளத்தில் குமைந்து வந்தார் அவர். திருவாதிரை விசேஷத்தைக் கேட்டு ஆரூர் போய் தரிசனம் முடித்துக்கொண்டு வருவதாகத் தெரிவித்து சம்பந்தர் புறப்பட்டுச் சென்றதிலிருந்து அவர் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தார். அதன் காரணமாகவே அப்பர் திருநள்ளாறு ஆகிய தலங்களில் வழிபாட்டை முடித்துக்கொண்டு விரைவிலேயே திரும்பிவிட்டார்.

சம்பந்தர் ஆரூரிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார் என்பதை அறிந்ததும் அப்பர் தம் தொண்டர் கூட்டத்தாருடன் எதிர்கொண்டு சென்று ஞானமுண்ட பிள்ளையாரை வரவேற்றார். இரு அடியார்களின் திருக்கூட்டமும் ஒன்று கலந்தபோது மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அப்பர்

1 நன்னிலத்துக்குக் கிழக்கே ஆறு மைலில் உள்ளது திருச்செங்காட்டாங்குடி; திருச்சாத்தமங்கை வடகிழக்கே ஏழரை மைலில் உள்ளது.

சம்பந்தர் பெருமானை அழைத்துக்கொண்டு திருப்புகலூர் வந்து சில நாட்கள் முருகனுர் திருமடத்தில் தங்கினுர். அவர்களுடன் திருநீலநக்கர், சிறுதொண்டர் ஆகிய அடியார்களும் தங்கியிருந் தனர்.

சில நாட்கள் திருப்புகலூரிலே தங்கிய பின் அப்பர் சம்பந்தரையும் அழைத்துக்கொண்டு திருஅம்பர் 1 திருக்கடவூர் ஆகிய பதிகள் சென்று எம்பெருமானை வழிபட்டுத் திருவீழிமிழலை அடைந்தார்.

சிவபெருமானை வழிபட்டு சக்கராயுதம் பெற விஷ்ணு அவரை ஆயிரத்தெட்டு தாமரை மலர்களால் அர்ச்சித்தார். திருமாலின் மனத்தைப் பரிசோதிக்க விரும்பிய ஈசன் அவர் அர்ச்சித்து வரும் மலர்களில் ஒன்று குறையுமாறு செய்து விட்டார். ஆயிரத்தெட்டு மலர்களையும் ஒவ்வொன்ருக எடுத்து இறைவனின் திருநாமத்தைச் சொல்லி அர்ச்சனை செய்து வந்த விஷ்ணு கடைசியில் மலர்களில் ஒன்று குறைவதைக் கண்டார். பூஜை குறையாக முடியக் கூடாது என்று எண்ணினுர் அவர். ஆகவே அவர் தமது நேத்திரங்களில் ஒன்றையே மலராக அர்ப்பணிக்க முடிவு செய்து விழியைப் பெயர்க்கத் துணிந்தார். அவர் பக்திக்கு மெச்சிய ஈசன் அவர் முன்பு தோன்றி அவர் செய்த பூஜையை ஏற்று சக்கராயுதம் அளித்தார்.

மகாவிஷ்ணு தமது விழிகளில் ஒன்றை இறைவனுக்கு அர்ப்பணிக்கத் துணிந்ததால், இறைவன் வீதியழகர் என்றும் அவ்வூர் திருவீழிமிழலை 2 என்றும் விளங்கலாயிற்று. அப்பர் சம்பந்தரோடு அவ்வூருக்கு எழுந்தருளி எம்பெருமானைப் பதிகம் பாடி மகிழ்ந்து இருந்தார்.

அந்தச் சமயத்தில் நாட்டிலே பஞ்சம் தோன்றியது. நீர் நிலைகள் வற்றிப்போய் பயிர் பச்சைகள் கருகின. ஏழைகள் பட்டினியால் மிகவும் வருந்தினர். சம்பாத்தியத்துக்கு வழியில்லாது தவித்தனர்.

மக்கள் படும் துயரத்தைக் கண்டு அப்பர் மனம் நொந்தார். அவர்கள் துயரத்தைத் தீர்க்க வழியில்லையே எனத் தவித்தார்.

ஒரு நாள் இரவு அப்பர், சுந்தரர் இருவர் கனவிலேயும் எம்பெருமான் பிறையணிந்த சடையோடு கைகளில் மானும் மழுவும் தாங்கித் தோன்றினுர்.

---

1 பூந்தோட்டத்துக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ளது

2 பூந்தோட்டத்துச்கு மேற்கே ஏழு மைலில் இருக்கிறது.

"அன்பர்களே, கால நிலையின் மாற்றத்தால் நீங்கள் ஒரு போதும் வாட்டமுறமாட்டீர்கள். இருப்பினும் தங்களை வழி பட்டு வரும் அடியார்கள் துன்பமடையாதிருக்கத் தினமும் யாம் விமானத்தின் கீழ் பீடத்தில் கிழக்கும் மேற்கும் பொற்காசு வைத்து அருளுவோம். அதைக் கொண்டு அடியார்களுக்கு அன்னமளித்து அவர்கள் துயரைத் துடையுங்கள்'' என்று அருளி மறைந்தார்.

பொழுது புலர்ந்ததும் அப்பரும் சம்பந்தரும் புனித நீராடி ஆலயம் சென்றபோது பீடத்தின் கீழ் கிழக்கிலும் மேற்கிலும் இரு பொற்காசுகள் வைத்திருக்கக் கண்டனர். அதைக் கொண்டு அடியார்களுக்கு அமுது படைக்க ஏற்பாடு செய்தனர். தண்டோரா மூலம் சுற்றுக் கிராமங்களுக்கும் செய்தி அறி வித்து உணவின்றி திண்டாடும் மக்களைத் திருவீழிமிழலை வந்து சேருமாறு செய்தனர்.

சம்பந்தர் பெருமான் ஈசனின் திருக்குமாரர் அன்றோ; மேலும் அவர் திருப்பதிகம் பாடி பகவானைத் தொழுது வந்தார். அப்பரைப் போலத் திருத்தொண்டிலே ஈடுபடவில்லை. ஆகவே அவர் வாசியோடு கூடிய காசு பெற்றார். அப்பர் வாசியில்லாத காசு பெற்றார். தினமும் ஏழைகளுக்குத் திருவமுது அளிககப் பட்டு வந்து.

36. திருவாய்மூரிலே திவ்விய தரிசனம்

வீழியழகருடைய திருவருளால் நாட்டிலே தோன்றிய பஞ் சம் விரைவிலேயே நீங்கிவிட்டது. மழை பெய்து குளங்களெல் லாம் நீர் நிறைந்து வழிந்தன. ஆற்றிலே தண்ணீர் ஓடத் தொடங்கியது. மக்கள் உழவுத் தொழிலைத் தொடங்கினர். மக்களின் துயரம் ஓரளவு குறைந்ததும் அப்பரும் சம்பந்தரும் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு வழியிலே திருவாஞ்சியத்தை அடைந்து தரிசனம் செய்து கொண்டு திருமறைக்காட்டைச்[1] சேர்ந்தனர்.

அவ்வூரிலே ஆதிகாலத்தில் வேதங்கள் எம்பெருமானைப் பூஜித்துக் கதவை அடைத்த பிறகு அது திறக்கப்படாது மூடியே இருந்தது. அதை எவராலும் திறக்க முடியவில்லை. ஆகவே மக்கள் பக்கத்திலுள்ள வேறு ஒரு வாயில் வழியாகவே ஆலயத்தினுள் சென்று இறைவனை வழிபட்டு வந்தனர்.

---

1 வேதாரண்யம்.

இதை அறிந்தபோது சம்பந்தர் அப்பரை அவ்வாயிலுக்கு முன்பு அழைத்துச் சென்றார்.

''அப்பரே, உங்கள் தம்பிரானைத் தரிசிக்க வேண்டாமா? கதவு திறக்கப் பதிகம் பாடுங்கள்!'' என்று கேட்டார்.

ஆளுடைய பிள்ளையாரின் விருப்பத்தைப் பணிந்து ஏற்றுக் கொண்ட அப்பர் ஈசனைத் தியானித்து 'பரம தயாளா, அன்று உமையின் முலைப்பாலை அளித்து ஆட்கொண்ட பெருமான் இன்று தங்களைத் தரிசிக்க வந்துள்ளார். அவர் விருப்பம் நிறைவேற திருக்கதவுகள் திறக்க அருள மாட்டீரா?' என்று வேண்டியவராய் 'பண்ணினேர் மொழியாள்' என்னும் பதிகம் பாடினார்.

அவர் பாடி முடித்ததும் கதவு தானே திறந்துகொண்டது. கூடியிருந்த தொண்டர் குழாம் இறைவனின் திருவருளைக் கண்டு ஆனந்தப் பரவசராகித் தொழுதனர். பின்னர் அப்பர் சம்பந்தரும் தொண்டர்களும் உடன்வர ஆலயத்தினுள் சென்று ஈசனைத் தரிசித்துப் பாடி மகிழ்ந்தார்.

ஆலயத்தை விட்டு வெளி வந்ததும் அப்பர் சம்பந்தரை அழைத்து, ''பெருமானே, கதவைத் திறக்க என்னைப் பாடச் சொன்னீர்கள். இக்கதவு தினமும் திறந்து மூட வகையாகக் கதவு அடைக்கப் பதிகம் பாடும்'' என்று கோரினார். அவ்வாறே சம்பந்தர் பதிகம் பாட முதற்செய்யுள் பாடியதும் கதவு மூடிக் கொண்டது.

சுவாமி தரிசனத்துக்குப் பிறகு இருவரும் திருமடத்துக்குத் திரும்பி தொண்டர்களுடன் தங்கியிருந்தனர்.

மாலை போய் இரவும் வந்தது. அப்பருக்கு உள்ளத்தில் அமைதி இல்லை. காலையில் ஆலயத்தில் நிகழ்ந்த சம்பவம் அவர் மனதிலே குமைந்து கொண்டிருந்தது.

ஆலயத்தில் அடைப்பட்டிருந்த கதவு திறக்கத் தாம் பதிகம் பாடியபோது பதிகம் முடியும் வரை காத்திருந்த எம்பெருமான் கதவு அடைக்கச் சம்பந்தர் பாடத் தொடங்கியதும் முதல் பாட்டு முடிந்ததுமே கதவை அடைக்கச் செய்தது அவருக்கு உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது.

மடத்தின் ஒரு பகுதியில் படுத்து நித்திரையிலாழ்ந்தார் அப்பர். தம் அடியாரின் உள்ளத்திலே எழுந்த சிறு குழப்பத்தை இறைவன் நீக்க எண்ணம் கொண்டார். அயர்ந்து தூங்கும் அப்பரின் கனவிலே தோன்றி அவரை எழுப்பினார்.

"அன்பனே, நாம் திருவாய்மூரிலே1 இருப்போம். என்னைத் தொடர்ந்து வா!" என்று அழைத்தார்.

கண் விழித்து எழுந்த அப்பர் திருமடத்தின் வாயிலைப் பார்த்தார். அங்கே இறைவன் திருநீறு பூசி மார்பிலே மாலை தவழ திருக்கோலத்தோடு நின்றிருப்பதைக் கண்டார். நெஞ்சம் உருக எழுந்திருந்த அப்பர், "இறைவா, என்னை அழைத்தனையா? இதோ வருகின்றேன்" என்று சொல்லியவராய் எழுந்து வாயிலுக்கு வந்தார்.

இறைவன் அவர் முன்பு வேகமாக நடந்து சென்றார். இறைவனை நெருங்கிவிட வேண்டும் என வேகமாக நடந்தார் அப்பர். 'இதோ, இன்னும் ஏழெட்டு அடி எடுத்து வைத்தால் இறைவனை நெருங்கி விடலாம்' என்று தோன்றியது. அப்பர் மேலும் வேகமாக நடந்தார். நடக்க நடக்க இறைவன் அவருக்கு அகப்படாமல் நகர்ந்து கொண்டே யிருந்தார். அவர்கள் போய்க் கொண்டே இருக்கும்போது எதிரே ஒரு கோயிலைக் காட்டி அதனுள் நுழைந்து மறைந்து விட்டார் இறைவன்.

சிறுபிள்ளைகளுக்கு ஆசை காட்டி ஏமாற்றுவது போல் இறைவன் தமக்கு அருகில் வந்தும் அவரை நெருங்க முடியாது போய் விட்டதே என அப்பர் கண்ணீர் விட்டுக் கதறினார். 'எங்கேயென்னை யிருந்திடந்தேடி' என்ற பதிகம்பாடி நெஞ்சம் உருகினார்.

இதற்குள் அப்பர் எம்பெருமான் திருவாக்கிணைபடி திருவாய்மூர் போகிறார் என்று கேள்விப்பட்டு சம்பந்தர் தொண்டர்கள் கூட வர அப்பரைத் தேடி வந்தார்.

சம்பந்தரைக் கண்டபோது அப்பர் கொண்டிருந்த வேதனை மேலும் அதிகமாகியது.

"இறைவா! எனக்குப் போக்குக் காட்டி மறைந்து விட்டாயே! உன் திருவுள்ளம் அறியாது மூடியிருந்த கதவைத் திறக்க நான் பாடினேன் என்ற வருத்தமா? அப்படியாயின் திறந்த கதவை மூடிய சம்பந்தர் இதோ வந்திருக்கிறார். அவருக்காவது தாங்கள் தரிசனம் கொடுக்கக் கூடாதா?" என்று இறைஞ்சி வேண்டினார்.

---

1 தென் திருவாய்மூர் எனப்படும் இத்தலம் திருநெல்லிக் காவலுக்குத் தென்கிழக்கே எட்டு மைலில் உள்ளது.

எம்பெருமான் தமது திருக்கோலத்தை சம்பந்தருக்குத் தெரியக் காட்டினார்.

இறைவனின் திவ்விய தரிசனத்தைக் கண்ட சம்பந்தர் மெய்மறந்து மயிர்சிலிர்க்கப் பூமியில் விழுந்து ஈசனைத் தொழுதார்.

"அப்பரே, தங்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப இறைவன் திவ்விய தரிசனம் தருகிறார் பாருங்கள்!" என்று கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பெருக அப்பரை வேண்டினார்.

அப்பரும் எம்பெருமான் திருக்கோலத்தைக் கண்டு களித்து 'பாடவடியார் பரவக் கண்டேன்' என்ற பதிகம் பாடி இறைவனைப் போற்றிப் பணிந்தார்.

பின்னர் இருவரும் ஊரை அடைந்து மறுநாள் அங்கு தங்கி திருவாய்மூர் நாதரைத் தரிசித்துத் தொழுது திருமறைக் காட்டுக்குத் திரும்பினர்.

திருமறைக்காட்டிலே அப்பரும் சம்பந்தரும் தங்கியிருக்கும் போது சம்பந்தர் பெருமானைத் தேடி மதுரையிலிருந்து சில தூதுவர்கள் வந்தனர். அவர்கள் சம்பந்தரைப் பணிந்து பாண்டிய அரசி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் அனுப்பித் தாங்கள் வந்திருப்பதாகத் தெரிவித்தனர். பாண்டிய நாட்டிலே சமண மதம் மேலோங்கியிருப்பதையும் சமணர்கள் செய்து வரும் இன்னல்களை ஒழித்துச் சைவ நெறி விளங்கச் செய்ய சம்பந்தர் பெருமானை மதுரைக்கு வருமாறு அரசியார் அழைப்பதாகவும் தூதுவர்கள் தெரிவித்தனர்.

தூதுவர்கள் தெரிவித்த செய்தியைக் கேட்டதும் சம்பந்தர் பெருமான் வேதனை கொண்டார். தாம் விரைவிலேயே புறப்பட்டு வருவதாகத் தூதுவர்கள் மூலம் செய்தி அனுப்பினார்.

சம்பந்தர் மதுரை செல்வதை அப்பர் விரும்பவில்லை. சமணர்களின் கொடுமையை அவர் நன்கு அனுபவித்தவராயிற்றே! அவரிடம் பல்லவனின் தலைநகரிலே தமக்கேற்பட்ட தீங்குகளை விவரித்து அவர் தனித்து மதுரை செல்வது உசிதமல்ல எனத் தெரிவித்தார்.

சம்பந்தரோ அதற்கு இணங்கவில்லை. அரசியாரின் அழைப்பை ஆண்டவனின் அழைப்பாக ஏற்றுப் புறப்பட்டு விட்டார்.

சம்பந்தர் சென்ற பிறகு அப்பர் திருமறைக் காட்டிலிருந்து புறப்பட்டுத் திருநாகைக்காரோணம் சென்று பகவானைத் தரிசித்து மீண்டும் திருவீழிமிழலை அடைந்தார். பின்னர் அங்கிருந்து கிளம்பி திருவாவடுதுறை சேர்ந்து ஆவடுதுறையரைக் கண்டு சம்பந்தப் பெருமானுக்கு ஆயிரம் செம்பொன் கொடுத்தருளியதைப் போற்றி 'மாயிருஞாலமெல்லாம்' என்ற பதிகம் பாடி, அவ்வூரை விட்டுப் பழையாறை சேர்ந்தார்.

37. சோறுடன் காத்திருந்த சோதிவடிவன்

பழையாறை வந்து சேர்ந்த வாகீசரை வருத்தம் தரும் செய்தி ஒன்று வரவேற்றது.

பழையாறைப் பகுதியில் சிறிது காலமாகச் சமணர்களின் ஆதிக்கம் பெருத்திருந்தது. வடதளியிலுள்ள ஆலயத்தினுள் எழுந்தருளியிருக்கும் பெருமானின் திருமேனியை அவர்கள் பிறர் அறியாது கடத்தி ஆலயத்தினுள் எங்கோ ஓரிடத்தில் பூமியில் புதைத்து விட்டனர். இதனால் ஆலயத்தில் நித்திய பூஜைகள் நின்றுவிட்டன. எம்பெருமானிடம் பக்தி கொண்ட அன்பர்கள் மிகவும் மனம் வருந்தி சமணர்களை அங்கிருந்து கிளப்ப வழி தெரியாமல் தவித்து வந்தனர்.

வாகீசர் வருகிறார் என்ற செய்தி அறிந்ததும் அவர்கள் வாடிய உள்ளம் மலர்ந்தது. ஓடோடி வந்து அப்பரின் பாதங்களில் விழுந்து கண்ணீரைக் கொட்டித் தாங்கள் படும் வேதனைகளை அகற்ற வேண்டுமென பிரார்த்தித்தனர்.

ஊருக்குள் நுழைந்த அப்பர் அன்பர்களின் துயரை அகற்றி வழிபாடு நின்று போயிருக்கும் ஆலயத்தில் மீண்டும் இறைவன் வழிபாட்டைத் தோற்றுவிக்க உறுதி கொண்டார்.

"எம்பெருமானே, அடியார்களிடம் அளவில்லாத அன்பு பூண்ட நீ அவர்கள் படும் துயரை இன்னமும் அறியாதிருக்கிறாயா? புறச்சமயிகளால் உன் திருமேனி கடத்தப்பட்டு ஒளித்து வைக்கப்பட எவ்விதம்தான் அனுமதித்தாயோ? மண்ணுள்ளே புதைந்து கிடக்கும் உன் திருமேனி வெளிப்பட்டு மறுபடியும் ஆலயத்தில் நிறுவப்பட்டு வழிபாடு தொடங்காத வரையில் அடியேன் இவ்வூரை விட்டுப் புறப்பட மாட்டேன். அடியேனுடைய விருப்பம் நிறைவேறாத வரை அமுது செய்வதையும் விட்டு விட்டேன்" என்று பிரார்த்தித்தார்.

நின்றுவிட்ட வழிபாட்டை நிலைநிறுத்தாது புறப்படுவதில்லை என்று அப்பர் உறுதி பூண்டதைக் கேட்ட அன்பர்கள் ஆனந்தம் கொண்டாடினர். ஆனால் அவர் உணவு அருந்துவதில்லை என்று முடிவு செய்ததை அறிந்தபோது சொல்லொணா வேதனை கொண்டனர். இறைவன் அவரை அவ்வூருக்கு வரவழைத்ததே தங்களுக்கு அருள் புரியத்தான் என்றும் ஆகவே அவர் விருப்பம் பூர்த்தியாகும் என்றும் அவர்கள் வற்புறுத்தித் திருவமுது செய்ய வேண்டினர். ஆனால் அப்பரோ அவர்களுடைய கோரிக்கையை நிராகரித்து அன்று முழுவதும் பட்டினி கிடந்தார்.

இரவும் நகர்ந்து கொண்டிருந்தது. வாடிய உள்ளத்தோடு படுத்திருக்கும் பக்தரைக் கண்டு வடதளிநாதருக்குப் பொறுக்கவில்லை. ஆகவே அன்றிரவு அரசனுடைய கனவிலே தோன்றினார்.

"குடிமக்களின் நன்மையே லட்சியமாகக் கொண்டுள்ள அன்பனே, உன்னுடைய நகரத்திலே நம் அடியார்கள் படும் கஷ்டங்களை உணராதிருக்கிறாயே. சமணர்களின் செல்வாக்குப் பெருகிவிடவே அவர்கள் நம் அன்பர்களுக்குச் சொல்லொணா இடர்களை உண்டாக்கி வருகின்றனர். ஆலயத்திலுள்ள எம் திருமேனியைக் கவர்ந்து பிறர் அறியாமலே மண்ணுக்குள் புதைத்து வைத்துள்ளனர். நம் பக்தன் நாவுக்கரசன் இதைப் பொறுக்க மாட்டாது உணவை ஒழித்துப் பட்டினி கிடக்கிறான். புறச்சமயிகளை விரட்டி எம் திருமேனியை வெளிப்படுத்து" என்று அறிவித்து ஆலயத்துள் எந்த இடத்தில் பூமியில் தோண்டினால் சமணர்களால் ஒளித்து வைக்கப்பட்ட திருமேனி கிடைக்குமென அடையாளமும் காட்டி மறைந்தார்.

காலையில் எழுந்ததும் அரசன் அமைச்சர்களுடன் வந்து அப்பர் பெருமானின் அடிபணிந்து இரவில் ஆண்டவன் தனக்கிட்ட கட்டளையைத் தெரிவித்தான். பின்னர் அவரையும் அழைத்துக்கொண்டு ஆலயம் சென்றான்.

அங்கே இரவு கனவிலே ஈசன் குறிப்பிட்ட இடத்தைத் தோண்டியபோது சமணர்கள் புதைத்து வைத்திருந்த சிவலிங்கம் வெளிப்பட்டது. அரசனும் மற்றவர்களும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தனர். விதிப்படி இறைவனுடைய திருமேனியை பிரதிஷ்டை செய்து வழிபாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசன் உத்தரவிட்டான். இவ்வளவுக்கும் காரணமான சமணர்களை யானையின் கால்களில் இடறச் செய்து தண்டித்தான். எஞ்சியவர்கள் ஊரைவிட்டு வெளியேறினர்.

அப்பர் பெருமான் வடதளிநாதரைத் தரிசித்துத் 'தலை யெலாம்' என்னும் திருப்பதிகம் பாடி தம் கோரிக்கையை நிறைவேற்றி அருளியது பற்றிக் கொண்டாடினர்.

சமணர்களின் செய்கையால் வடதளிநாதர் ஆலயத்தில் நின்றுவிட்ட வழிபாட்டை மீண்டும் நிலைபெறச் செய்த பின்னர் அப்பர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டுக் காவிரிக் கரையோரமாக வழியிலுள்ள திருப்பதிகளைத் தரிசித்துப் பதிகம் பாடிக் கொண்டு ஜம்புகேச்வரம் எனப்படும் திருவானைக்காவலை அடைந்தார். இறைவன் தம்மை வழிபட்ட சிலந்திக்கும் யானைக்கும் சீரிய வாழ்வளித்த அத்தலத்தில் ஈசன் கழல் வணங்கி செஞ்சொல் மாலையால் தொழுது புறப்பட்டார்.

பின்னர் அங்கிருந்து பிரயாணப்பட்டுத் திருஎறும்பியூர் 1 திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி 2. திருப்பராய்த்துறை 3 ஆகிய தலங்களில் வழிபட்டு எம்பெருமானின் கல்யாண குணங்களைப் பக்தி நிறைந்த பதிகங்களால் பாடி மகிழ்ந்து காவேரியைக் கடந்து திருப்பைஞ்ஞீலி 4 செல்ல வழி நடந்தார்.

அப்பர் பிரயாணப்பட்ட வழி கரடுமுரடானது. நல்ல கோடை காலம். மதிய உணவுக்குத் திருப்பைஞ்ஞீலி போய் விட வேண்டும் என அவர் முடிவு செய்திருந்ததால் அவர் காலையிலிருந்து ஆகாரம் ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை. நடக்க நடக்க அப்பர் வெய்யலினுல் களைப்படைந்தார். அதனுல் அவர் வேகம் குறைந்தது. பசி அவரை மேலும் சோர்வடையச் செய்தது. உடல் ஆடியது. இருப்பினும் சிந்தை குலையாது அப்பர் தம் பிரயாணத்தைத் தொடர்ந்த வண்ணமிருந்தார்.

தம்முடைய பக்தன் சோர்ந்து போய் பசியோடு நடந்து வருவதைப் பார்த்தார் ஆண்டவன். அதைப் பொறுப்பாரா? உடனே கட்டுச் சோறுடன் ஓடி வந்தார்.

ஏழெட்டு மரங்களே நிழல் தர நின்றுகொண்டிருக்க அவற்றின் பக்கத்திலே சிறு குளம் ஒன்று.

இந்த விதமாகச் சிறிய சோலை ஒன்றைத் தோற்றுவித்து, குளக்கரையிலே பொதி சோறுடன் இறைவன் அடியார் கோலத்தோடு அப்பரை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

---

1 திருவெறும்பூர் 2 திருச்சிக்கு மேற்கே இரண்டரை மைலில் காவிரிக்கரையில் உள்ளது. 3 திருச்சிக்கு அருகே எலமனூர் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே ஆறு பர்லாங்கில் அகண்டகாவேரி அருகே உள்ளது. 4 திருச்சிக்கு மேற்கே எட்டு மைல்.

சோலையை நெருங்கிய அப்பருடைய மனம் குளிர்ந்தது. நிழலிலே கொஞ்ச நேரம் தங்கிச் செல்ல முடிவு செய்தவராய் குளக்கரையை அடைந்தார். அங்கே பொதி சோறுடன் உட்கார்ந்திருந்த இறைவன் அப்பரிடம் வந்தார்.

"அன்பரே, உங்களைப் பார்த்தால் மிகவும் களைத்துப் போயிருப்பது போல் தோன்றுகிறது. என்னிடம் உள்ள இந்த உணவைச் சாப்பிட்டு குளத்திலே நீர் அருந்தி களைப்பாறுங்கள்" என்று சொன்னார்.

அப்பர் மகிழ்ச்சியோடு அவ்வமுதை வாங்கி உட்கொண்டு குளத்து நீரை அருந்தி களைப்பு நீங்க நிழலிலே சிறிது நேரம் அமர்ந்திருந்தார்.

கொஞ்ச நேரம் சென்றதும் அப்பர் தம் பிரயாணத்தைத் தொடங்க எழுந்திருந்தார்.

"எதுவரை செல்கிறீர்கள்?" என்று கேட்டார் அடியார் உருவிலிருந்த இறைவன்.

"திருப்பைஞ்ஞீலி போகிறேன், சுவாமி!" என்று பதில் அளித்தார் அப்பர்.

"நானும் அங்கேதான் போகிறேன்" என்று கூறி அப்பருடன் நடக்கத் தொடங்கினார் ஈசன்.

அவரோடு பேசிக்கொண்டே அப்பர் நடந்து சென்றார். திருப்பைஞ்ஞீலியை நெருங்கியதும் தம்மோடு வந்த அடியாரைக் காணாது திடுக்கிட்டார். ஊரை நெருங்கும்போது இறைவன் மறைந்து விட்டார்.

அப்போதுதான் அப்பருக்குத் தம்முடன் அடியாராக வந்தது இறைவனே என்பது தெரிந்தது.

'அடாடா, இதை முன்னமேயே அறியாமற் போய்விட்டேனே! இறைவனின் திருக்கரத்திலிருந்து அமுது வாங்கி உண்டு அவரோடு வழி முழுவதும் பேசிக்கொண்டு வந்தும் வந்திருப்பது இன்னாரென அறியாமல் இருந்து விட்டேனே!' என்று வேதனையால் நெஞ்சம் உருகினார். கண்ணீர் சொரிந்தார். பசியோடு நடந்து வந்த தம்மிடம் கருணை கொண்டு திருவமுதுடன் காத்திருந்த எம்பெருமானுடைய அருளை நினைக்கும்போது அவர் மேனி சிலிர்த்தது. உள்ளம் குழைய ஆலயத்தினுள் சென்று இறைவனைப் பணிந்து பாடித் தொழுதார்.

38. திருவையாற்றிலே கைலாயக் காட்சி

திருப்பைஞ்ஞீலியில் சில நாட்கள் தங்கித் திருத்தொண்டுகளில் ஈடுபட்டு வந்த அப்பர், தொண்டை நாட்டுத் திருப்பதிகளைத்தரிசிக்க எண்ணம் கொண்டு புறப்பட்டுப் பல ஊர்களில் பதிகங்களால் இறைவனைத் தொழுது மகிழ்வித்தவராய் திருவண்ணுமலை வந்து சேர்ந்தார். அயனும் மாலும் அடிமுடி காணமுடியாது விச்வருபத்தோடு நின்ற இறைவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து போற்றிஞர். பின்னர் அங்கிருந்து திருவோத்தூர்1 சென்று வழிபாட்டை முடித்துக் கொண்டு காஞ்சியை நெருங்கிஞர்.

நாவுக்கரசர் காஞ்சி வருகிருர் என்ற செய்தி கேட்டதும் நகரமே திருவிழாக் கோலம் கொண்டது. சமணர்களுடைய துர் போதனை காரணமாக மன்னன் இழைத்த கொடுமைகள் அனைத்தும் நீங்கப் பெற்று, பொன்னி நாடு முழுமையும் சுற்றி அனேக திருப்பதிகளுக்குச் சென்று எம்பெருமானைத் தமிழ் பாக்களால் மகிழ்வித்த தாண்டக வேந்தரைத் தரிசிக்க மக்கள் நகரவாயிலில் வந்து கூடினர். மகிழ்ச்சி வெள்ளம் அலைமோத அவர்கள் அப்பரை வரவேற்றுப் பணிந்து கோலாகலத்துடன் அழைத்துச் சென்றனர்.

ஏகாம்பரேசுவரர் ஆலயத்தை அடைந்த அப்பர் தேவியின் தழுவலால் மேனியில் முலைத் தழும்பு கொண்ட பெருமானைத் தரிசித்து 'கரவாடும் வன்னெஞ்சர்' என்ற பதிகம் பாடி மகிழ்ந்தார். பிறகு அப்பதியிலே இறைவன் உறையும் மற்ற ஆலயங்களுக்கும் சென்று தொழுது தொண்டு செய்தார். பண்டாசுரனுல் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் கைலாச நாதனைச் சரண் அடைய அவரும் தேவர்களுக்கு ஆறுதல் சொல்லி, யாகத்திலே அசுரனை ஹவிஸாக்கி சம்கரித்த கச்சி மயானத்தை அப்பர் வலம் வந்து தொழுதார். திருமேற்றளி சென்று மேற்றளீசுவரரைத் தரிசித்தார். பின்னர் திருமாற்பேறு2 அடைந்து மால்வணங்கீசுவரரைப் பாடி காஞ்சி திரும்பிஞர்.

எம்பெருமான் ஆலயத்தில் உழவாரத் தொண்டு செய்த அப்பர் சில நாட்களுக்கெல்லாம் அங்கிருந்து கிளம்பி திருக்கழுகுன்றம், திருவான்மியூர் முதலான தலங்களைத் தரிசித்துக்

1செய்யாறு.

2 திருமால்பூர் எனப்படும் இத்தலம் காஞ்சிக்குத் தென் மேற்கே இரண்டரை மைலில் உள்ளது.

கொண்டு திருமயிலாப்பூர் வந்து சேர்ந்தார். மயிலுருவாய் தம்மைப் பூசித்த உமைக்குத் தரிசனம் கொடுத்து ஆட்கொண்ட இறைவனைத் தரிசித்துத் திருஒற்றியூரை அடைந்து அப்பதியில் சில நாட்கள் தங்கி அவ்வூரில் உறையும் பெருமானுரை வழிபட்டு பதிகங்கள் பல பாடி மனம் களித்தார்.

திருவொற்றியூரிலிருந்து புறப்பட்ட அவர், மூங்கிலடியிலே தோன்றிய பாசூர் நாதேச்வரர் உறையும் திருப்பாசூர் சென்று வழிபட்டு, பழையனூர் திருவாலங் காட்டை அடைந்து தரிசனம் முடித்துக் கொண்டு திருக்காரிக்கரை 1 சேர்ந்து எம்பெருமானைத் தரிசித்துப் பின்னர் காளத்தி அடைந்தார்.

பொன்முகலி ஆற்றில் நீராடி மலைமீது ஏறி காளத்தி நாதரைத் தரிசித்து வணங்கினுர். இறைவனின் வலப்பக்கம் இருக்கும் கண்ணப்பரை அடி பணிந்து போற்றி அத்திருமலையில் திருப்பணிகள் செய்து தங்கியிருந்தார். அவ்வமயம் அவருக்கு எம்பெருமான் திருக்கோலம் கொண்டிருக்கும் கைலாயக் காட்சியைத் தரிசிக்க வேண்டும் என விருப்பம் ஏற்பட்டது.

காளத்தியை விட்டுக் கிளம்பி திருப்பருப்பதம்2 சென்று பருப்பதநாதரை சேவித்தார். பிறகு அங்கிருந்து தெலுங்கு, கன்னடம் முதலிய நாடுகள் வழியாக அனேக மலைகளையும் நதிகளையும் கடந்து மாளவ தேசத்தை அடைந்தார். பின்னர் லாட தேசத்தையும் கடந்து கங்கைக் கரையிலே வாரணுசி 3 போய்ச் சேர்ந்தார்.

காசியிலே கங்கையில் நீராடி இறைவனை வழிபட்டுத் தம்முடன் வந்திருந்தவர்களை அங்கேயே தங்குமாறு சொல்லிவிட்டுத் தனியாக கயிலை நோக்கிப் புறப்பட்டார்.

கங்கையைக் கடந்த அப்பர் கற்கள் நிறைந்த கொடு வழியே பிரயாணப்பட்டார். இரவு பகல் நிற்காது எம்பெருமானைத் தியானித்தபடி வழி நடந்தார். கைலைவாசனைக் காண வேண்டுமென்ற ஒரே எண்ணம் தான் அவர் லட்சியமாக இருந்தது. வழியிலே கிடைக்கும் பழங்களை மட்டுமே முதலில் சில நாட்களுக்கு உண்டு வந்தார். பின்னர் அதையும் விடுத்து வழி நடந்தார்.

நடக்க நடக்க வழி நீண்டது. இரவு பகல் வித்தியாசமின்றி நடந்ததால் பாதங்கள் தேய்ந்து உதிரம் பெருகின.

---

1 அரக்கோணம் ரேணிகுண்டா பிரிவில் புத்தூருக்குத் தென்கிழக்கே சுமார் மூன்று மைலில் புக்கை நீர்வீழ்ச்சிக்கு அருகே உள்ளது. 2 ஸ்ரீசைலம். 3 காசி.

கால்களை ஊன்றி அடி எடுத்து வைக்க முடியவில்லை. மலைப் பிராந்தியத்தில் வழியெங்கும் இறைந்து கிடக்கும் பாறைகளும் கற்களும் அவர் பாதங்களில் உண்டாகிய வேதனையைமேலும் அதிகரித்தன. அப்பர் கொஞ்சமும் தம் எண்ணத்திலிருந்து வழுவவில்லை. கைகள் இரண்டையும் பூமியில் ஊன்றித் தாவிச் செல்லத் தொடங்கினுர். கைகளும் தேய்ந்து விரல் எலும்புகள் சிதைந்தன. கைகளையும் ஊன்றித் தவழ முடியவில்லை. தரையில் உட்கார்ந்து தொடைகளால் நகர்ந்து செல்லத் தொடங்கினுர்.

விரைவிலே தொடைகளும் தேய்ந்து விடவே, தரையில் படுத்தபடி மார்பினுல் ஊர்ந்து செல்லத் தொடங்கினுர். மார்புத் தோலும் வழண்டு எலும்புகள் தேய்ந்து விட்டன. மூச்சு விடுவது சிரமப்பட்டது. அந்த நிலையிலும் நாவுக்கரசர் தம் முயற்சியைக் கைவிட வில்லை. ஊர்ந்து செல்ல முடியாததால் உருண்டு உருண்டு செல்லத் தொடங்கினுர். அதன் காரணமாக அவர் உடலெங்கும் உதிரம் பெருகத் தொடங்கியது. புரளக்கூட அவரால் முடியவில்லை. உடலை அசைக்கவும் முடியாது கிடந்தார். அந்த நேரத்திலும் கைலாயம் செல்ல வேண்டும் என்றே துடித்தார் அவர்.

பக்தனின் நிலைக்கு இரங்கி அப்பருக்கு அருள எம்பெருமான் முன் வந்தார். அவர் உள்ளத்தினின்று இன்னும் எத்தனையோ செந்தமிழ்ப் பாடல்களை ஊற்றெடுக்கச் செய்ய வேண்டுமே!

மிகுந்த சிரமத்தின் பேரில் புரண்டு புரண்டு அப்பர் நகர்ந்து வரும் வழியில் அழகிய தடாகம் ஒன்றைத் தோன்றச் செய்தார். முனிவரைப் போன்று வேடம் கொண்டு அப்பரிடம் வந்தார்.

"ஐயா, இதென்ன கோலம்? உடலுறுப்புக்கள் தேய இவ்வாறு புரண்டு வருகின்றீர்களே! எந்தக் காரணம் பற்றி இக்கொடிய வழியிலே வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

நெற்றியிலே திருநீறு பூசியவராய் தம்முன் நிற்கும் முனிவரைப் பார்த்ததும் வாகீசருக்குக் கொஞ்சம் உணர்வு வந்தது.

விரல் எலும்புகள் தேய்ந்து உதிரம் கசியும் இரு கைகளையும் கூப்பி அவரை வணங்கியவராய், "சுவாமி, கைலாயத்தில் உமாதேவியாருடன் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைத் தரிசிக்கவே வந்து கொண்டிருக்கிறேன்" என்றுர்.

அப்பர் பெருமானின் வார்த்தைகளைக் கேட்டதும் ஈசன் 'கலகல' வென்று நகைத்தார்.

''ஐயனே, உன்னைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. விண்ணவர்களும் சுலபத்தில் அடைய முடியாத கைலாயத்திற்கு மானிடனாகிய நீ எவ்வாறு செல்ல முடியும்? வேண்டாம் இந்தப் பயனற்ற காரியம். திரும்பிச் செல்'' என்றார்.

நாவுக்கரசரின் முகம் சிறிது வாட்டமடைந்தது.

''சுவாமி, எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்? நான் வந்த காரியம் நிறைவேறாது என்பதால் திரும்பிச் செல்லுமாறு கூறுகிறீர்களே. இதற்காகவா உடல் உறுப்புக்கள் அனைத்தும் தேய இவ்வளவு தூரம் வந்தேன்? என் உயிரே போய் விடினும் சரி, உறுதியைக் கைவிட மாட்டேன். தோல்வியுடன் திரும்புவதில்லை என்ற உறுதியை மாற்றுவதற்கு இயலாது. இறைவனின் திருக்கோலத்தைத் தரிசியாது அழியப் போகும் இந்த உடல் கொண்டு திரும்ப மாட்டேன்'' என்றார்.

அப்பருடைய மன உறுதியைக் கண்டு இறைவன் மகிழ்ந்தவராய் அவ்விடத்திலிருந்து மறைந்தார்.

தம்முடன் பேசிக்கொண்டிருந்த முனிவரைக் காணாது திகைத்தார் வாகீசர்.

அப்போது வானிலிருந்து ஒரு குரல் அவரை அழைத்தது'

''நாவுக்கரசனே, எழுந்திரு!''

அதேசமயம் தேய்ந்து போயிருந்த அவர் உடலுறுப்புகள் வளர்ந்தன. நாவுக்கரசர் எழுந்து இரு கரங்களையும் சிரம் மேல் கூப்பி இறைவனை வணங்கினார்.

''ஆட்கொண்ட பரம்பொருளே! கயிலையில் தேவியுடன் அமர்ந்திருக்கும் உன் திருக்கோலத்தை எனக்குக் காட்டி அருள வேண்டும்'' என்று நெஞ்சம் கரைய வேண்டினார்.

''அன்பனே, இதோ உன் முன் உள்ள தடாகத்திலே மூழ்கி திருவையாற்றில் எழுந்திருந்து அங்கே கயிலாயக் காட்சியைக் கண்டு ஆனந்திக்கலாம் என்று அருளினார் ஈசன்.

சிவபெருமானின் திருவாக்கினையை மேற்கொண்டார் அப்பர். நெஞ்சத்திலே இறைவனைத் தியானித்தவராய் தடாத்திலே இறங்கி நீரில் மூழ்கி எழுந்தார்.

கங்கைக் கரையைக் கடந்து மலைப் பகுதியில் வெகு தூரம் சென்று அங்கோர் தடாகத்தில் மூழ்கிய அப்பர், தாம் சோழ நாட்டிலே காவிரிக் கரையில் உள்ள திருவையாறு எனப்படும் தலத்தில் உள்ள திருக்குளத்தில் இருப்பதைக் கண்டார். காசியில் அவர் நிறுத்தி விட்டுச் சென்ற அன்பர்களும் குளக்கரையிலிருப்பதைக் கண்டார்.

அவர் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. ஆனந்தப் பரவசராகி ஆலயத்தை நோக்கி ஓடினார். கோபுர வாயிலைக் கடந்து இறைவன் சந்நிதானத்தை அடைந்தார்.

ஈசனைப் பணிந்து எழுந்த அப்பர் பெருமானுக்கு அங்கே தென்பட்ட காட்சி மெய்சிலிர்க்க வைத்தது.

பனி மூடிய கைலாய சிகரம். அதன் உச்சியில் ஒரு மணி மண்டபம். அதனடுவே உயர்ந்த ஆசனத்தில் ஈசன் உமையுடன் அமர்ந்திருக்கிறார். தேவர்கள், சித்தர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் இப்படியாக எத்தனை எத்தனையோ பேர் இறைவனைப் பணிந்து போற்றுகிறார்கள். முனிவர்கள், யோகிகள் எம்பெருமானைப் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.

அப்பருடைய நினைவு தடுமாறியது. தம்மை ஆசுவாசப் படுத்திக் கொண்டு பார்த்தார். கைலாயக் காட்சி மறைந்து விட்டது. காணக் கிடைத்தற்கரிய அக்காட்சியை இன்னும் சிறிது நேரம் கண்டு ஆனந்திக்க முடியாமல் போய் விட்டதே என வருந்தினார். 'மாதர் பிறைக் கண்ணியானை' என்னும் பதிகம் பாடி ஐயாறப்பரைத் தொழுதார்.

திருவையாற்றிலே சிலநாட்கள் தங்கி திருத்தொண்டுகள் செய்து, பின்னர் புறப்பட்டு, அப்பர் திருநெய்த்தானம்1, திருமழபாடி2 ஆகிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருப்பூந்துருத்தியை3 அடைந்தார். திருப்பூந்துருத்தியிலே அடியார்களுக்கென திருமடம் ஒன்று கட்டுவித்து அவ்வூரில் தங்கி திருப்பணிகள் பல செய்து பதிகங்களும் பாடி இறைவனைத் தொழுது வந்தார்.

---

1 திருவையாறுக்கு வடமேற்கே ஒரு மைலில் உள்ளது தில்லை ஸ்தானம் என இப்போது அழைக்கப்படும் இவ்வூர்.

2 மழுவாடி என அழைக்கப்படும் இவ்வூர் திருவையாறுக்கு வடமேற்கே நான்கு மைலில் கொள்ளிடக் கரையில் உள்ளது.

3 தஞ்சாவூருக்கு வடமேற்கே ஏழாவது மைலில் காவிரிக் கரையில் உள்ளது.

39. உத்தமரைத் தாங்கிய தோள்கள்

திருப்பூந்துருத்தியில் தங்கி அப்பர் திருத்தொண்டுகள் செய்து வரும் நாளையில் பாண்டிய நாடு சென்ற சம்பந்தர் சமணர்களை வாதில் வென்று பாண்டியன் கூன் நிமிர்த்தி சைவம் தழைத்தோங்கச் செய்து வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி எட்டியது. திருப்பூந்துருத்தி நோக்கி வரும் சம்பந்தரை வரவேற்க எண்ணம் கொண்டு அப்பர் வழியிலேயே அவரைச் சந்திக்கச் சென்றார். தம்முடன் வந்த அடியார்களை ஊரின் எல்லையிலே நிறுத்திவிட்டு அவர் மட்டும் தனியே சென்றார்.

அடியார் கூட்டம் பின் தொடர சிவிகையிலே வந்து கொண்டிருக்கும் சம்பந்தரைக் கண்டபோது, இறைவனுடைய திருவருளைப் பூரணமாகப் பெற்ற அப்பெருமானைத் தாமும் தோளிலே தாங்க வேண்டுமென ஆவல் அவர் உள்ளத்திலிருந்து குமிழிட்டு எழுந்தது. யாரும் அறியாவண்ணம் அடியார் கூட்டத்தோடு கலந்து கொண்டு மெள்ள சிவிகையை நெருங்கித் தாமும் ஒருவராக அதைத் தோளிலே தாங்கிச் சுமந்து வந்தார்.

திருப்பூந்துருத்தியை நெருங்கியதும் எல்லையில் தம்மை வரவேற்க கூடியிருக்கும் தொண்டர் குழாத்தைக் கண்டு அப்பர் வந்திருக்கிறார் எனப் பெருமகிழ்ச்சி கொண்டார் சம்பந்தர். அவர்களை நெருங்கியதும் ''அப்பர் எங்கே?'' என்று கேட்டார்.

''அடியேன் இதோ இருக்கிறேன். உத்தமரைத் தோளிலே தாங்கி வரும் பாக்கியம் இந்த ஏழைக்கு இன்று வாய்த்தது!'' என்று அப்பர் சிவிகையின் கீழிருந்து வெளிப்பட்டார்.

அதைப் பார்த்த சம்பந்தர் பதைபதைத்து விட்டார். சட்டென்று சிவிகையிலிருந்து கீழிறங்கினார்.

''அபசாரம் அல்லவா செய்து விட்டேன். நீங்கள் என்னைத் தாங்குவதா! மன்னிக்க வேண்டும்!'' என்று இரு கைகளையும் கூப்பியவராய் நாவுக்கரசரின் பாதங்களில் விழுந்து வணங்க வந்தார்.

அப்பர் முந்திக் கொண்டு விட்டார். தம்மை நெருங்கும் முன்பு சம்பந்தரின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

''பெருமானே, இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்க எத்தனை புண்ணியம் செய்தேனோ?'' என்று அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

அடியார்கள் மகிழ்ச்சி தாங்காது ஆரவாரம் செய்தனர். பின்னர் இருவரும் திருமடத்துக்குத் திரும்பினர்.

சம்பந்தர் பெருமான் மதுரையிலே தாம் சமணர்களிடம் வாதிட்டு வென்றதையும், பாண்டியனின் கூன் முதுகு நிமிரச் செய்து சைவ சமயத்தில் அவன் மனத்தை ஈடுபடச் செய்ததையும் மற்றும் பாண்டி நாட்டுத் தலங்களைப் பற்றியும் நாவுக்கரசருக்கு எடுத்துரைத்தார். அதைக் கேட்கக் கேட்க வாகீசருக்குத் தாமும் அத்தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டுமென்ற பிரியம் உண்டாயிற்று.

இரண்டொரு நாட்களுக்கெல்லாம் சம்பந்தர் தொண்டை நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றதும் நாவுக்கரசர் திருப்பூந்துருத்தியை விட்டுப் பாண்டிய நாட்டுக்குப் புறப்பட்டார்.

திருப்பூந்துருத்தி விட்டுப் புறப்பட்ட நாவுக்கரசர் தென் திசையாகப் பிரயாணப் பட்டுத் திருப்பத்தூர் அடைந்து புத்தூரீசரைப் பணிந்து வழிபட்டு பின்னர் திருவாலவாய்1 போய்ச் சேர்ந்தார். தமிழ் காத்த பெருமானை சுந்தரேசரைத் தரிசித்து 'முளைத்தானை யெல்லார்க்கு' என்ற பதிகம் பாடி எம்பெருமானைச் சிறப்பித்தார்.

நாவுக்கரசர் மதுரை வந்திருக்கிறார் எனக் கேள்விப்பட்டதும் பாண்டிய மன்னன் நின்ற சீர்நெடுமாறன் அமைச்சர் குலச்சிறையாரை அனுப்பி அவரை வரவேற்று உபசரித்தான். சம்பந்தர் மதுரை வந்திருந்த போது நாவுக்கரசர் சமணர்களால் அடைந்த துன்பங்களை எடுத்துச் சொல்லி யிருந்தார். பெரும் துன்பங்களிலிருந்து எம்பெருமான் திருவருளால் உயிர்தப்பி வந்த தாண்டகவேந்தரைத் தரிசிக்க வேண்டும் என எண்ணம் கொண்டிருந்தான் மன்னன். அவன் விருப்பத்துக்கு ஏற்ப விரைவிலேயே நாவுக்கரசர் பாண்டிய நாடு எழுந்தருளினார்.

குலச்சிறையார் அப்பர் சுவாமிகளைப் பணிந்து அரண்மனைக்கு எழுந்தருளி அரசனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என வேண்டினார். அப்பரும் அவர் வேண்டுகோளை ஏற்று அரண்மனை சென்று அரசனுக்கும் அரசி மங்கையர்கரசியாருக்கும் அருள் செய்து மதுரையிலே சில நாட்கள் தங்கி தொண்டிலே ஈடுபட்டார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருப்பூவனம் சென்று பூவானநாதரைப் பதிகம் பாடி வழிபட்டு, ராமேச்சுவரம் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீராமனுக்கு அனுக்கிரகித்த ராமநாதரைத் தரிசித்து மனம் மகிழ்ந்தார்.

1மதுரை.

அங்கிருந்து புறப்பட்ட அப்பர் திருநெல்வேலியை அடைந்து, நெல்லையப்பரைக் கண்டு தொழுது திருக்கானப்பேர் 2சென்று தரிசனத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டார்.

பாண்டிய நாட்டிலே யாத்திரையை முடித்துக் கொண்டு சோழ நாடு வந்தடைந்த அப்பர் பெருமான் நேராகத் திருப்புகலூர் சென்று அவ்வூரிலேயே தங்கி திருப்பணிகளில் ஈடுபடலானர். தினமும் ஆலயம் சென்று இறைவனைத் தொழுது அனேக பதிகங்கள் பாடி வரலானர்.

இறைவனைப் பாடியும் உழவாரப் படை கொண்டு ஆலயங்களில் திருத்தொண்டு செய்தும் பக்தியில் பழுத்து வரும் அப்பரின் உள்ளத்தைப் பரிசோதிக்க ஈசன் விரும்பினர் போலும்! புகலூர் ஆலயத்தில் உழவாரப் படை கொண்டு புல் பூண்டுகளைச் செதுக்குவதில் ஈடுபட்டிருந்த அப்பர் பெருமான் உழவாரத்தால் செதுக்கும் இடங்களிலெல்லாம் பொன்னும் மணியுமாகத் தோன்றச் செய்தார்.

உலகப்பற்றைத் துறந்த அடியாரான நாவுக்கரசு சுவாமிகள் அவ்வாறு வெளிப்பட்ட பொன்னையும் மணிகளையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. கூழாங்கற்களாகவே அவற்றையும் பாவித்து உழவாரத்தில் ஏந்திச்சென்று திருக்குளத்திலே போட்டார்.

மேலும் அடியாரின் உள்ளத் தூய்மையைப் பரிசோதிக்க விரும்பிய இறைவன் விண்ணிலிருந்து நடனமாதர்களை அனுப்பி வைத்தார்.

கண்ணைக் கவரும் விதத்தில் பலவகையாக அலங்கரித்துக் கொண்டுவந்த அவர்கள் அப்பர் முன்பு நடனமாடினர்; உள்ளத்தைச் சுண்டி யிழுக்கும் வகையில் அலங்கோலமாக ஆடையணிந்து நடனமாடி இனிய குரல்களில் பாடிக் களிப்பிக்க முயன்றனர். அவரோ அப்பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தம்முடைய திருப்பணியிலேயே ஈடுபட்டிருந்தார்.

தங்கள் முயற்சிகள் பலன் அளிக்காததைக் கண்ட அவர்கள் அப்பர் பெருமானை நெருங்கி அவரை அணைக்கவும் முயன்றனர்.

---

2 காளையார் கோவில் - இவ்வூர் சிவகங்கைக்குக் கிழக்கே பதினறு மைலில் உள்ளது.

"என்னை நெருங்க வேண்டாம். உங்கள் எண்ணம் என் விஷயத்தில் நிறைவேறப் போவதில்லை. ஆரூரில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானிடம் ஈடுபாடு கொண்ட என் சிந்தையை உங்களுடைய ஆட்டபாட்டங்களோ அலங்கோலங்களோ அசைக்க முடியாது" என்று சொல்லி, ஈசனை மனத்திலே தியானித்து 'பொய்ம்மாயப் பெருங்கடலுள்' என்னும் பதிகம் பாடினார்.

நாவுக்கரசரின் உள்ளத்தை தங்கள் மாயையால் கலைக்க இயலாதென்பதை உணர்ந்த தேவமாதர்கள் வெட்கித் தலை குனிந்து அவரைப் பணிந்து தொழுது தங்கள் இருப்பிடம் திரும்பினர்.

நாவுக்கரசருடைய இறை பணி முடியும் காலம் நெருங்கியது. தினமும் புகலூரில் உறையும் எம்பெருமானைச் சேவித்துத் தம்மை ஆட்கொள்ளுமாறு மனம் கசிந்து உருக வேண்டினார்.

"ஐயனே, போதும் இவ்வுலக வாழ்க்கை உன் சேவடிகளில் என்று என்னை ஆட்கொள்ளப் போகிறாய்?" என்று நாள் தோறும் இறைவனை வேண்டிவந்தார்.

சித்திரை வந்தது.

அன்று சதய நக்ஷத்திரம்.

வழக்கம் போலவே அன்றைத் தினமும் நாவுக்கரசர் எம்பெருமானைத் தரிசித்து தம்மை ஆட் கொள்ளுமாறு வேண்டினார். 'எண்ணுகேனென்' என்னும் திருத்தாண்டகம் அருளி 'உன்னடிக்கே வருகின்றேன்' என்று பாடினார்.

இறைவன் தம் அடியாரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார்.

அப்பர் சுவாமிகள் எம்பெருமானின் திருவடிகளைச் சேர்ந்தார்.

40. அமைச்சர் செய்த அருந்தொண்டு

பாண்டிய நாட்டிலே மணமேல்குடி 1 என்றொரு ஊர். அவ்வூரிலே பிறந்த குலச்சிறையார் என்பவர் சிவபெருமானிடம் மிகுந்த பக்தி பூண்டவர். திருநீறும் ருத்திராக்ஷமும் அணிந்த

1 அறந்தாங்கிக்குப் பக்கத்தே உள்ளது.

வர் யாராக இருந்தாலும் அவரைச் சிவனடியாராகவே பாவித்து உபசரிப்பார். அவர்களுக்குத் திருவமுது செய்வித்து மனம் மகிழ்வார்.

இறைவனிடமும் அவர் அடியார்களிடமும் குலச்சிறையார் கொண்டிருந்த அன்பு அவருக்கு உயர்ந்தபதவியைத் தேடித் தந்தது. பாண்டிய மன்னனுல் அமைச்சராக அவர் நியமிக்கப் பட்டார்.

மன்னன் நின்றசீர்நெடுமாறனின் மனைவி மங்கையர்கரசி யார் சிவபக்தி கொண்டவர். அவருக்கு அடியார்களிடம் அள வில்லாத அன்பு. ஆகவே குலச்சிறையார் அரசியாரின் அன் புக்குப் பாத்திரரானுர்.

நெடுமாறன் சமணர்களின் போதனைக்குட்பட்டு அவர்க ளுக்கு ஆதரவு அளிக்கத் தொடங்கினுன். இதனுல் நாட்டிலே அவர்கள் சமயம் பரவத் தொடங்கியது.

சமணர்கள் ஆதிக்கம் செலுத்தி வருவதைக் கண்ட மந்திரி யாரின் உள்ளம் வேதனை அடைந்தது. அரசனை விரோதித்துக் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. உள்ளூற குமைந்து வந்த அமைச்சர் ஒருநாள் அரசியாரிடம் உள்ளத்து வேதனையை வெளியிட்டு என்ன செய்யலாமென யோசனை கேட்டார்.

அவ்வமயம் சம்பந்தப் பெருமான் சோழ நாட்டிலே சைவம் தழைத்தோங்க திருப்பதிகள் தோறும் சென்று இறைவனைப் பதிகம் பாடித்தொழுது வரும் செய்தி அவர்களுக்கு எட்டி யது. சம்பந்தரை பாண்டிய நாட்டுக்கு வரவழைத்து சமணர் களுடன் அவரை வாதிடச் செய்து நாட்டிலே சைவம் நிலை பெறச் செய்யலாமென அவர்கள் முடிவு செய்தனர். அவ்வாறே சோழநாட்டுக்குச் சென்று சம்பந்தர் பெருமானைப் பாண்டிய நாட்டுக்கு வருமாறு அழைத்து வர தூதுவர்களை அனுப்பினர்.

சம்பந்தரும் அவர்கள் அழைப்புக்கு இணங்கி பாண்டிய நாடு வந்தார்; சமணர்களுடன் வாதிட்டு அவர்களை வென்ருர். அரசனுடைய கூன் விழுந்த முதுகை நிமிர்த்தி அவன் உள் ளத்தைச் சைவ சமயத்திற்குத் திருப்பினுர்.

பாண்டிய நாட்டில் சமணர்கள் ஆதிக்கம் ஒழிந்து சைவம் தழைத்தது. வாதிலே தோற்ற சமணர்களை அமைச்சர் குலச் சிறையார் கழுவில் ஏற்றித் தண்டித்தார்.

இவ்வாறு சமயத்தொண்டிலே ஈடுபட்டு வந்த குலச்சிறை யார் வெகுகாலம் அனேக தொண்டுகள் செய்து முடிவில் மங்கைப்பாகனின் மலரடிகளைச் சேர்ந்தார்.

41. மிழலைக் குறும்பர்

மிழலை நாட்டிலே பெருமிழலை என்று ஓர் ஊர். அவ்வூரிலே குறும்பர் என்னும் சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அடியார்களிடம் மிகுந்த அன்பு பூண்டவர் அவர். அடியார்களை அழைத்து வந்து அவர்கள் மனம் களிக்கத் திருவமுது செய்வித்துத் திரவியங்களும் கொடுத்து அனுப்பி வைப்பார்.

சிவனடியார்களிடம் அவர் கொண்டிருந்த அன்பு சுந்தரரிடம் அளவில்லாத பக்தியை உண்டாக்கியது. அப்பெருமானைத் தொழுது அவரை மனத்திலே நினைத்து வாயால் போற்றிப் புகழ்ந்து வந்தார். அணிமா முதலிய அஷ்ட சித்திகளும் அவருக்குச் சித்தியாகின.

இவ்வாறு இருந்து தொண்டு செய்து வரும் நாளில் சுந்தரர் திருவஞ்சைக்களத்திலிருந்து கைலாயம் செல்ல இருப்பதைத் தமது யோக பலத்தால் முதல் நாளே உணர்ந்தார் குறும்பர்.

சுந்தரர் கைலாயம் சென்ற பின்பு அவர் மட்டும் தனியாகப் பூவுலகில் வாழ விரும்பவில்லை. கண்ணிழந்த குருடன் போல் வாழ விரும்பாத குறும்பர் சுந்தரருக்கு முன்பே தாம் கைலாயம் சென்றுவிட எண்ணினர். எம்பெருமானைத் தியானித்துக் கொண்டு யோக சமாதியில் அமர்ந்துவிட்டார். பிரம்ம கபாலம் யோக சக்தியால் திறந்துகொண்டது. குறும்பரின் ஆன்மா உடற் கூட்டைவிட்டுக் கிளம்பி கைலாயநாதனின் திருவடிகளைச் சென்று அடைந்து அவற்றோடு ஐக்கியமாகியது.

42. இளமையைத் துறந்த இல்லத்தரசி

காரைக்கால் நகரிலே தனதத்தன் என்றொரு வணிகன் இருந்தான். இறைவனிடம் ஆழ்ந்த பக்தி கொண்ட அவன் தருமநெறி தவருது வாணிகத்தில் ஈடுபட்டு ஏராளமாகச் செல்வம் சேர்த்திருந்தான். வணிகர் குலத் தலைவரான அவனுக்கு ஊரிலே நல்ல செல்வாக்கு இருந்து வந்தது.

அவனுக்கு அழகிய பெண் குழந்தை பிறந்தது. சர்வ லக்ஷணங்களோடு விளங்கிய அக்குழந்தை பிற்காலத்தில் எல்லோராலும் போற்றிக் கொண்டாடப்படுவாள் என எல்லோரும் ஒரு மனதாகக் கூறவே தனதத்தன் அளவில்லா ஆனந்தம் கொண்டவனய்க் குழந்தைக்குப் புனிதவதி என்ற பெயர் சூட்டினன்.

புனிதவதி வளர்ந்து பெரியவளானுள். அவள் செல்வந்தர் வீட்டுப் பெண்ணுக இருந்தாலும் ஏழை எளியோர்களிடமும் அன்பு பாராட்டி வந்தாள். நற்குணங்கள் அனைத்தும் நிரம்பப் பெற்று லக்ஷ்மீகரத்துடன் விளங்கும் அவளை மணந்து கொள்ளப் போகும் புண்ணியவான் யாரோ என்று ஊரார் அதிசயித்து அவளைக் கொண்டாடினுர்கள்.

நாகப்பட்டினத்தில் நிதிபதி என்றெரு வணிகன் இருந்தான். பெயருக்கேற்ப அவனும் அளவற்ற செல்வத்துக்கு அதிபதியாக இருந்தான். அவன் குமாரன் பரமதத்தனுக்குப் புனிதவதியைப் பெண் கேட்டு வந்தனர்.

நாகப்பட்டினத்திலிருந்து வந்திருந்தவர்களை தனதத்தன் வரவேற்று உபசரித்தான். நிதிபதியைப் பற்றி அவன் முன்னரே அறிந்திருந்தான். வியாபாரத்தில் நல்ல ஆதாயம் கிடைத்து வந்தது. அந்தஸ்தில் அவனுக்குக் குறைந்தவன் அல்லன். பரமதத்தனும் தந்தையோடு வியாபாரத்தில் ஈடு பட்டு வந்தான். புனிதவதிக்கு அவன் எல்லா விதத்திலும் ஏற்ற கணவனே என்ற முடிவுக்கு வந்தான் தனதத்தன்.

திருமணம் நிச்சயமாற்று. தனதத்தன் தன் அந்தஸ்துக்கு ஏற்ப கோலாகலமாக மணம் செய்து கொடுத்தான். காரைக்கால் நகரமே அத்திருமணத்தில் மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டது எனலாம்.

அருமையாக வளர்த்த பெண்ணை விட்டுப் பிரிய தனதத்தனுக்கு மனம் இல்லை. அதற்காக மருமகனைத் தன் வீட்டோடு வைத்துக்கொள்ளவும் அவன் விரும்பவில்லை. காரைக்காலிலேயே தனியாக மாளிகை ஒன்றை ஏற்பாடு செய்து அதில் பெண்ணும் மருமகனும் குடும்பம் நடத்த வழி செய்தான். தன்னுடைய வியாபாரத்தில் ஒரு பகுதியை பரமதத்தனிடம் ஒப்படைத்து அதைக் கவனித்து வரச் செய்தான்.

புனிதவதி கணவனுடன் ஒருமித்து இல்லயம் நடத்தி வந்தாள். அவள் உள்ளப் பாங்கிற்கு ஏற்ப பரமதத்தனும் தரும காரியங்களில் ஈடுபாடு உள்ளவனு யிருந்தான். அடியார்கள் எத்தனை பேர் வந்தாலும் அவர்களைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று அமுது செய்விக்க அவன் தயங்கமாட்டான்.

இவ்வாறு புனிதவதியும் பரமதத்தனும் இனிது இல்லறம் நடத்தி வரும்போது, ஒரு நாள் பரமதத்தனைக் காண அவன் நண்பர்கள் சிலர் கடைக்கு வந்தனர். இறைவனை வழிபடச் செல்லுங்கால் வெறுங்கையுடன் செல்லக் கூடாதென்பர். அதே

போல ஆசாரியன், முதுமைப் பருவத்தில் உள்ள உறவினர்கள், நண்பர்கள், நோயாளிகள், குழந்தைகள் ஆகியோரைப் பார்க்கச் செல்லும்போதும் வெறுங்கையுடன் செல்லலாகாது.

பரமதத்தனைப் பார்க்க வந்தவர்கள் இரு மாங்கனிகளைக் கொண்டுவந்து கொடுத்தனர். அவற்றைப் பிரியமுடன் பெற்று வேலைக்காரன் மூலம் வீட்டுக்குக் கொடுத்தனுப்பினுன் பரம தத்தன்.

அன்றைத்தினம் பரமதத்தன் வீட்டுக்குச் சாப்பிட வருவதற்கு நேரமாகிவிட்டது. கடையிலே முக்கிய வேலைகள் கவனிக்க வேண்டியிருந்ததால் தான் வரும் வரை காத்திருக்க வேண்டாம் என்றும் அடியார்கள் யாராவது வந்தால் அவர்களுக்கு முன்னதாகவே அமுது செய்விக்கும்படியும் சொல்லி அனுப்பியிருந்தான்.

அன்றைத்தினம் சோதனைபோல வந்திருந்த சிவனடியார் மிகவும் பசியோடு இருந்ததால் அவரைக் காக்கச் செய்யக் கூடாதென இலை போட்டு அமுது செய்தருள அழைத்தாள் புனிதவதி. கறியமுது ஆகவில்லை. அவற்றைச் செய்துபோட தாமதமாகும் எனத் தோன்றியபடியால் கணவன் கடையிலிருந்து அனுப்பிய இரு கனிகளில் ஒன்றை அடியார்க்கு அளித்தாள். வந்திருந்த அடியார் மனம் களித்து உணவருந்தி அவளைப் பலவாறு வாழ்த்திவிட்டுச் சென்ருர்.

உச்சி வேளைக்குப் பரமதத்தன் உணவருந்த வந்து சேர்ந்தான். புனிதவதி கணவனுக்கு அறுசுவை உண்டி பரிமாறி உள்ளே வைத்திருந்த மற்ரெரு மாங்கனியை எடுத்து வந்து இலையில் சமர்ப்பித்தாள். அந்தப் பழத்தை மிகவும் சுவைத்துச் சாப்பிட்டான் பரமதத்தன்.

''புனிதவதி, இது மிகவும் சுவையாக இருக்கிறது. இரண்டு பழம் கொடுத்தனுப்பியிருந்தேனே. மற்ரென்றையும் எடுத்து வா'' என்ருன்.

உள்ளே வந்த புனிதவதி செய்வது அறியாது தவித்தாள். இரண்டில் ஒன்றைத்தான் அவள் சிவனடியாருக்கு அளித்து விட்டாளே. இப்போது கணவன் மிகவும் ஆவலோடு மற்ரெரு பழத்தையும் எடுத்து வருமாறு கேட்டானே! அவள் என்ன செய்வாள்? ஏற்கனவே சிவனடியாருக்கு ஒன்றை அளித்து விட்டதாகத் தெரிவித்தால் அவனுக்கு எவ்வளவு ஏமாற்றமாயிருக்கும்!

''பிறை சூடிய பெருமானே! இப்போது நான் என்ன செய்வேன்?'' என்று இறைவனைத் தியானித்து வேண்டினாள்.

எம்பெருமான் அவள் சங்கடத்தைத் தீர்க்க விருப்பம் கொண்டு அவள் கையிலே மாங்கனி ஒன்று தோன்றுமாறு அருளினார்.

ஆச்சரியமுற்ற புனிதவதி இறைவனின் திருவருளை எண்ணி புளகாங்கிதமடைந்தவளாய் பழத்தைக் கொண்டு வந்து கணவனுக்குப் படைத்தாள்.

அந்தப் பழத்தைச் சாப்பிட்ட பரமதத்தன் அமுதினும் மேம்பட்ட அதன் சுவையைக் கண்டு வியப்படைந்தான். சற்று முன்பு தான் சாப்பிட்ட பழத்துக்கும் அதற்கும் சுவையில் எத்தனையோ மாறுபாடு இருந்ததை உணர்ந்தான். தான் அனுப்பிய இரு கனிகளில் ஒன்றுக்கொன்று சுவையில் இத்தனை வித்தியாசம் இருக்க முடியாது என நினைத்தவனாய் ''புனிதவதி!...'' என்று மனைவியை அழைத்தான்.

''இரண்டாவதாகப் படைத்த பழம் ஏது? நான் அனுப்பிய பழத்தைச் சேர்ந்ததாக அது தோன்றவில்லையே! இம்மாதிரி சுவையுள்ள பழம் பூலோகத்தில் கிடைத்தற்கு அரிதாகுமே!'' என்று கேட்டான்.

புனிதவதி தலையைக் குனிந்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் என்ன பதில் சொல்வாள்! இறைவன் தனக்கு மனமுவந்து அளித்த பழம் என்று சொன்னால், அது கணவன் முன்னிலையில் அவனைவிடத் தான் உயர்ந்தவள் என்று பெருமைபடக் கூறிக்கொள்வதாக ஆகாதா? அது கற்பு நெறியில் சிறந்த மனைவிக்கு அழகில்லையே!

''நான் கேட்டது காதில் விழுந்ததா, இல்லையா? பேசாமல் நிற்கிறாயே!'' என்று மறுபடியும் அவளைக் கேட்டான் பரமதத்தன்.

புனிதவதியின் கண்களில் நீர் தளும்பியது. நடுங்கும் கரங்களால் அவனை நோக்கிக் கும்பிட்டவாறு நடந்ததை விவரித்தாள். நாத் தழுதழுக்க அவள் கூறிய சம்பவத்தைக் கேட்டபோது பரமதத்தனால் அதை நம்ப முடியவில்லை.

''இம்மாதிரி நடந்திருக்கும் என எனக்குத் தோன்றவில்லை, புனிதவதி. உன் வார்த்தைப்படி இறைவன் உனக்குக் கனி கொடுத்து அருளினார் என்று வைத்துக் கொள்வோம். இதே போல இன்னொரு பழத்தை வரவழை பார்க்கலாம்'' என்றான்.

புனிதவதி வெலவெலத்துப் போய் விட்டாள். அவள் வார்த்தையில் கணவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை!

உள்ளே திரும்பிய அவள் கண்கள் நீரைச் சொரிந்தன.

''எம்பெருமானே, இதென்ன சோதனை? மகிழ்ச்சி நிறைந்து நிம்மதியாகச் சென்று கொண்டிருக்கும் குடும்ப வாழ்விலே பெரும் சிக்கலைத் தோற்றுவித்து விட்டாயே! இன்னொரு கனி வரவழைத்துப் படைக்காவிடில் என் வார்த்தை பொய்யாகி விடும். உன்னிடம் நான் கொண்டிருக்கும் பக்தியிலோ, உன் அடியார்களிடம் நான் காட்டி வரும் அன்பிலோ கொஞ்சமும் மாறுதலின்றி நான் நடந்து வருவது உண்மையானால் இந்தப் பெரும் சிக்கலிலிருந்து மீள வழிகாட்டி அருள வேண்டும்'' என்று நெஞ்சம் உருக வேண்டினாள்.

எம்பெருமான் திருவருளால் மாங்கனி ஒன்று அவள் கரங்களில் தோன்றியது.

''சுவாமி, எம்பெருமான் தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இன்னொரு பழம் அளித்துள்ளார்'' என்று பழத்தைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள்.

மகிழ்ச்சியோடு அதைப் பெற்றுக் கொண்டான் பரமதத்தன். புனிதவதியின் கையிலிருந்து கனியை வாங்கிக் கொண்ட மறுகணம் அது அவனிடமிருந்து மறைந்து விட்டது.

பரமதத்தன் அடைந்த வியப்புக்கு ஓர் அளவில்லை. புனிதவதியை அவன் தன் மனைவியாகக் காணவில்லை; திருவருள் பெற்ற தெய்வ மாதாகவே கண்டான். மனைவி என்ற நினைப்போடு அவளைத் தீண்டவும் அஞ்சினான். அவள் தெய்வமாகப் போற்றிக் கொண்டாடப்பட வேண்டியவள் அன்றோ!

பரமதத்தன் தன் உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடவும் விரும்பவில்லை. அந்த மாளிகையில் புனிதவதியின் கணவன் என்ற உரிமையில் நடமாட அவன் உள்ளம் அனுமதிக்கவில்லை. அங்கிருந்து வெளியேறிவிடவே துடித்தான்.

அவன் மனத்திலிருப்பதைப் புனிதவதி அறிவாளேயானால் அவள் எவ்வளவு தூரம் வேதனைப்படுவாள்? அதையும் அவன் எண்ணிப் பார்க்காமல் இல்லை. அந்த இக்கட்டான நிலைமையிலிருந்து தான் விடுபட அவன் ஓர் உபாயம் செய்தான். கப்பல் நிறைய சரக்குகளை ஏற்றிக் கொண்டு வியாபாரம் செய்து திரும்புவதாகக் கூறி காரைக்காலை விட்டுப் பயணமானான்.

காரைக்காலை விட்டுப் புறப்பட்ட பரமதத்தன் பாண்டிய நாட்டுத் துறைமுகம் ஒன்றை அடைந்தான். அவ்வூரிலேயே வியாபாரத்தைக் கவனித்தபடி தங்கிவிட முடிவு செய்தான். தன் குலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியை மணந்து கொண்டு அவ்வூரிலேயே தங்கி விட்டான். சில மாதங்களில் அத்தம்பதி களுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்குத் தன் முதல் மனைவியின் நினைவாக அவளைப் போற்றும் வகை யில் புனிதவதி எனப் பெயர் வைத்தான்.

காரைக்காலிலே புனிதவதி கப்பலில் சரக்குகளை ஏற்றிச் சென்ற கணவன் வருவான் என்று தினமும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள். பரமதத்தன் அவளைத் திரஸ்கரித் துச் செல்வது என்ற முடிவை எவரிடமும் சொல்லவில்லையாத லால் அவன் திரும்பி வராது இருந்து விடப் போகிறான் என யாரும் எதிர்பார்க்கவில்லை. 'வியாபாரத்துக்குச் சென்ற இடத் தில் என்ன தடங்கலோ? அயல் நாடுகளுக்குச் சென்றிருப் பானோ?' என்றே அனைவரும் நினைத்தனர்.

வருடங்கள் பல உருண்டு விட்டன. பாண்டிய நாட்டுக்குச் சென்ற வியாபாரிகள் சிலர் தனதத்தனிடம் வந்து அங்கே பரம தத்தனைக் கண்டதாக தெரிவித்தனர். மருமகன் இருக்குமிடத் தையும் அங்கே அவன் வியாபாரத்தில் நிலையாக ஊன்றிக் கொண்டிருப்பதையும் கேள்விப்பட்ட தனதத்தன் அப்போது கூட மருமகனின் மனமாற்றத்துக்கு வேறு அர்த்தமே கொண் டான். மாமனாரின் ஆதரவில் இருப்பது தன்னுடைய கௌர வத்துக்குப் பங்கமானது என்று எண்ணியே மருமகன் தனியே சென்றிருக்கிறான் என்றே எண்ணினான்.

ஏன், புனிதவதியே தன் விஷயத்தில் கணவன் மன மாற்றம் அடைந்து விட்டான் என்று எண்ணவில்லையே! அன்றையச் சம்பவத்துக்குப் பிறகு, அதாவது இறைவன் திரு அருளால் மாங்கனி பெற்றுக் கொடுத்த அன்றிலிருந்து அவன் அவளிடம் அதிகமாகக் கொஞ்சிப் பேசவில்லை. வியா பாரத்தில் அவன் கவனம் பெருமளவில் மூழ்கியிருக்கிற தென்றே அவள் நினைத்தாள். அதற்கேற்றாற்போல் சில நாட் களுக்கெல்லாம் அவன் கப்பலில் சரக்கு ஏற்றிக் கொண்டு புறப் பட்டு விட்டானே!

தனதத்தன் சீரும் செல்வமும் கொண்டு மகளுடன் பாண் டிய நாட்டுக்குப் புறப்பட்டான். அச்செய்தி அறிந்த பரமதத்த னுடைய பெற்றோர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

பரமதத்தன் இருக்கும் ஊரின் எல்லையை அடைந்ததும் ஓர் ஆள் மூலம் தனதத்தன் தாங்கள் வந்திருப்பது பற்றிச் செய்தி அனுப்பினான். அதைக் கேட்ட பரமதத்தன் சிறிது நேரம் உணர்விழந்து நின்று விட்டான். தன்னுடன் வாழ்க்கை நடத்தும் பொருட்டல்லவா புனிதவதி காரைக்காலிலிருந்து வந்திருக்கிறாள்! அவளை அவன் எவ்வாறு சந்திப்பான்? அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கும் யோக்யதை கூட அவனுக்கு இல்லையே!

ஊரை விட்டுப் புறப்பட்டுக் கண்காணாத தேசத்துக்குச் சென்று விட்டால் அவர்களுக்கிடையே உள்ள தொடர்பு தானே அறுபட்டுவிடும் என அவன் எதிர்பார்த்தான் அது நடக்க வில்லை. அவன் இருப்பிடம் அறிந்து அவனைத் தேடி புனிதவதி வந்துவிட்டாளே!

இனியும் விஷயத்தை மூடி மறைப்பதில் பயனில்லை என்று தோன்றியது அவனுக்கு. வந்திருந்த ஆள் மூலம் தான் சிறிது நேரத்தில் அவர்களிடம் வருவதாகச் சொல்லி அனுப்பினான். நேராக வீடு சென்று தன் மனைவியையும், குமாரத்தியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

கணவன் வருகிறான் என்ற செய்தி அறிந்த புனிதவதி அவன் தாள் பணிந்து வணங்கச் சிவிகையிலிருந்து இறங்கி நின்றாள். தூரத்தே வரும் கணவனைக் கண்டதும் அவள் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது. ஆனால் அவனோடு வரும் அந்தப் பெண்ணும் குழந்தையும் யார்?

யோசனையில் அவள் ஆழ்ந்திருக்கும் வேளையில் பரமதத்தன் அவளை நெருங்கி நமஸ்கரித்ததோடு, தன் மனைவியையும் மகளையும் நமஸ்கரிக்கச் செய்தான்.

திடுக்கிட்டுப் பின்னால் நகர்ந்தாள் புனிதவதி.

''சுவாமி, இதென்ன காரியம்?'' என்று வாய் குழறக் கேட்டாள்.

''அம்மையே, தங்கள் பேரருளால் நாங்கள் சௌகரியமாக வாழ்க்கை நடத்தி வருகிறோம். இக்குழந்தைக்குத் தங்கள் திருநாமமே வைத்துள்ளோம்'' என்றான் பரமதத்தன்.

தனதத்தனும் மற்றையோரும் திடுக்கிட்டனர்.

''பரமதத்தா, என்ன பேசுகிறாய்? புனிதவதியைத் தெரியவில்லையா?'' என்று கேட்டான்.

"இந்த உடம்பிலே உயிர் உள்ள வரையில் நான் மறக்க மாட்டேன். என் தெய்வமாக அல்லவா பூஜித்து வருகிறேன்" என்ருன்.

அப்போதுதான் புனிதவதிக்குத் தன் கணவன் பிரிந்து சென்றதற்கான காரணம் புரிந்தது. கண்களில் நீர் மல்க கணவனை நெருங்கி, "சுவாமி, தாங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் தங்கள் மனைவி என்பதை நான் ஒருபோதும் மறந்ததில்லை" என்று வேண்டினுள்.

"அம்மையே, தங்களிடம் தெய்வத்தன்மையைக் கண்ட பிறகு வேறு எந்த விதத்திலும் என் உள்ளம் தங்களைப்பற்றி நினைக்காது!" என்ருன் பரமதத்தன்.

தனதத்தனுக்கு அவர்கள் பேச்சு புரியவில்லை. "புனிதவதி!..." என்று மகளை அழைத்தான்.

துக்கம் நெஞ்சை அடைக்க நடந்ததை விவரித்தாள் புனிதவதி. அவளைக் கணவன் ஏற்க மறுத்து விட்டதோடு அவளைத் தெய்வமாகப் பாவிக்கிருன். ஆனுல் அவளோ பரமதத்தனுக்காகவே இத்தனை காலம் காத்திருந்தாள். இனி இருக்கும் குறைநாட்களையும் தற்போதைய உடல் வனப்போடு கழிக்க விரும்பவில்லை. இந்த அழகும் வனப்பும் பரமதத்தனுக்காகத் தானே அவள் கொண்டிருந்தாள்! அவனில்லாத போது அவளுக்கு மட்டும் அது எதற்கு? கண்கள் 'பொல பொல'வென்று நீரைச் சொரிய, "இறைவனே, இந்த உடல் வனப்பு இனித் தேவையில்லை. பிறர் கண்டு நெருங்க அஞ்சும் விகாரமான வடிவைக் கொடு!" என்று ஆண்டவனை வேண்டினுள்.

அப்போது அவள் தளதளவென்ற அழகிய மேனி வற்றித் தோலிலே சுருக்கங்கள் ஏற்பட்டன. எலும்புகள் புடைத்தெழுந்து பார்க்க விகாரமான தோற்றத்தை உண்டாக்கின.

புனிதவதியின் தோற்றத்திலே ஏற்பட்ட மாறுதலைக் கண்டு அவள் பெற்றேர்களும் சுற்றத்தார்களும் அஞ்சி ஒதுங்கினர். விண்ணவர் மலர்மாரி பெய்தனர். இறைவனின் திருவருளை எண்ணி வியந்தவராய் புனிதவதியார் அற்புதத் திருவந்தாதியும், திரு இரட்டை மணிமாலையும் பாடினுர். பின்னர் கைலாயத்தில் உறையும் எம்பெருமானைத் தரிசிக்கும் விருப்பம் கொண்டு வடக்கே பிரயாணப்பட்டார். வழியிலே எதிர்ப்பட்ட மலைகளையும் ஆறுகளையும் கடந்து கைலாய மலையை அடைந்தார். எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் அம்மலையைக் காலால் மிதிப்பது கூடாதென்று தலையினுல் நடந்து மலையேறத் தொடங்கினுர்.

ஈசன் அருகில் அமர்ந்து மகிழ்ச்சியோடு உரையாடிக் கொண்டிருந்த தேவி, விகாரமான உருவத்தோடு தலையாலே மலையேறி வரும் அம்மையாரைப் பார்த்து வியந்தவராய் பரம னைக் கேட்டார்.

''நாதா, இந்த அம்மையார் இவ்வாறு தன்னை வருத்திக் கொண்டு இங்கு வரக் காரணமென்ன?''

''தேவி, இந்த அம்மையார் நம்மைத் தரிசிக்கவே இங்கு வந்து கொண்டிருக்கிறார். நாம் இருக்கும் இம்மலை புனிதமான தெனக் கருதி கால் படக் கூடாதென்று தலையால் நடந்து வரு கின்றார். கணவனால் தெய்வமென பூஜிக்கப்பட்ட இக் கற்புக் கரசியார் கணவனுக்காக வளர்த்து வந்த தம்முடைய அழகு வடிவினைப் போக்கி இவ்விகார தோற்றத்தை விரும்பிப் பெற்றார்'' என்றார் ஈசன்.

அருகில் நெருங்கி வந்த புனிதவதியாரை, ''அம்மையே!'' என்று அழைத்தார் உமாபதி.

''அப்பா!...'' என்று மனம் குழைய இறைவனைப் பணிந்து வணங்கினார் புனிதவதியார்.

''உமக்கு வேண்டுவது யாது?'' என்று கேட்டார் ஈசன்.

''தேவதேவா! அழியாத பேரின்பத்தை அருளவேண்டும். பிறவித் துன்பத்தைப் போக்கவேண்டும். அப்படி பிறந்தாலும் உம்மை மறவாதிருக்க அருள் புரிய வேண்டும். தங்கள் திரு வடி கீழ் நின்று தங்கள் திருக்கூத்தைக் கண்டு ஆனந்திக்கும் பெரும் பேற்றை அளிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தார் அம்மையார்.

''அம்மையே, தென் திசையிலுள்ள ஆலங்காட்டிலே நம் கூத்தைக் கண்டு ஆனந்திக்கலாம்'' என்று அருள் புரிந்தார் இறைவன்.

திருவாலங்காடு 1 திரும்பிய புனிதவதி அம்மையார் அங்கே எம்பெருமானின் ஊர்த்துவ தாண்டவத்தைக் கண்டு ஆனந் தித்தார். திருப்பதிகங்கள் பல பாடி, என்றும் இறைவ னுடைய திருவடி கீழ் இருந்து அவர் கூத்தைக் கண்டு களிக் கும் பேறு பெற்றார்.

---

1 சென்னை அரக்கோணம் ரயில்பாதைப் பிரிவில் திரு வாலங்காடு ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மூன்று மைலில் ஊர் உள்ளது.

43. திங்களூர் அடிகள்

திங்களூரிலே 1 அப்பூதி அடிகள் என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் சிவ பக்தியில் சிறந்து விளங்கினார். சமணர்களின் தூண்டுதலால் அனேக கொடுமைகளுக்கு உள்ளாகி எம்பெருமான் திருவருளினால் அவற்றிலிருந்து தப்பி மீண்டு வந்த திருநாவுக்கரசுப் பெருமானிடம் அவருக்கு எல்லையில்லாத அன்பு உண்டாயிற்று. இறைவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வது மூலம் ஈசனின் திருவருளைப் பெற முடியும் என்று நாவுக்கரசர் எடுத்துச் சொல்லி வந்தது அப்பூதி அடிகளாரின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. இறைவனுடைய அடியார்களுக்கு உதவுவதையே அவர் தம்முடைய நோக்கமாகக் கொண்டார். தண்ணீர்ப் பந்தல், அன்ன சத்திரம் ஆகியவற்றை நிறுவி தம் செல்வத்தை அந்த நற்பணிகளுக்காகவே செலவிட்டு வந்தார். தாம் நிறுவிய அறச்சாலைகளுக்கு அவர் தமது பெயரைவைக்க விரும்பவில்லை. இப்பணியில் ஈடுபட முக்கிய காரணமாயிருந்த நாவுக்கரசரின் பெயரையே சூட்டியிருந்தார். அது மட்டுமல்ல, அவர் தம்முடைய மூத்த குமாரனுக்கும் நாவுக்கரசன் என்றே பெயரிட்டிருந்தார்.

நல்லூரிலிருந்து புறப்பட்ட நாவுக்கரசர் திருப்பழனம் நோக்கிச் செல்லும்போது வழியிலே திங்களூரை அடைந்தார்.

ஊரின் எல்லையில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பந்தலை நெருங்கியதும் வழி நடந்ததால் ஏற்பட்ட களைப்பு நீங்கச் சிறிது நேரம் அங்கேயே தங்கினார். தண்ணீர்ப் பந்தலின் முகப்பிலே எழுதப்பட்டிருந்த தமது பெயரைக் கண்டதும் அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. பக்கத்திலிருந்த அன்பர் ஒருவரைப் பார்த்து, ''இத்தண்ணீர்ப் பந்தல் நாவுக்கரசு பெருமான் தர்மம் என்று எழுதப்பட்டுள்ளதே, ஆச்சரியமாயிருக்கிறதே! இதை நிர்வகிப்பவர் யார்?'' என்று கேட்டார்.

''இது அப்பூதி அடிகளார் நடத்தும் தர்மம். இதில் நாவுக்கரசர் பெயர் எழுதப்பட்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதைத் தவிர அன்னசத்திரம் முதலான அறப்பணிகளையும் அவர் செய்து வருகிறார். எல்லாவற்றுக்கும் அவர் நாவுக்கரசர் பெயரைத்தான் சூட்டியிருக்கிறார். அவருடைய மூத்த குமாரனுக்கும் நாவுக்கரசு என்றுதான் பெயர்'' என்று தெரிவித்தார் அந்த அன்பர்.

---

1 தஞ்சை மாவட்டத்திலே திருப்பழனத்துக்கு வடக்கே ஒரு மைலில் உள்ளது.

அதைக் கேட்டதும் நாவுக்கரசர் மேலும் ஆச்சரியமடைந் தார். தம்மிடம் அந்த அளவுக்கு அன்பு பூண்டிருக்கும் அன்ப ரைக் காணவேண்டும் என்ற அவா எழுந்தது.

''அவர் எங்கிருக்கிறார்?'' என்று கேட்டார்.

''இந்த ஊர்தான். இப்போதுதான் வீட்டுக்குப் போனார்!' என்று பதில் அளித்தார் அன்பர்.

''அவர் வீடு எங்கிருக்கிறது?''

''அக்கிரகாரத்தில்தான்'' என்று தெரிவித்த அவர் அப்பூதி அடிகளாரின் வீட்டு அடையாளமும் கூறினார். தம்முடன் வந்த அடியார்களைத் திருப்பழனம் செல்லுமாறு கூறிவிட்டு வாகீசர் அக்கிரகாரத்தில் நுழைந்தார்.

படி ஏறும் அடியாரைக் கண்டதும் அப்பூதியடிகள் வாச லுக்கு விரைந்து வந்தார்.

''அப்பூதியடிகள் என்பவர் இங்குதான் இருக்கிறாரா?'' என்று கேட்டார் நாவுக்கரசர்.

''சுவாமி, அடியேன்தான்! என்ன வேண்டும்?'' என்று அப்பரை நெருங்கினார் அடிகள்.

''ஒரு விஷயம் தெரிந்து செல்ல வேண்டும். எனக்கு அய லூர்.''

''எதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்?''

''இவ்வூரிலே அறச்சாலைகள் நடத்திவரும் தாங்கள் அவற் றுக்குத் தங்கள் பெயர் வைக்காது இன்னொருவர் பெயரை வைத்துள்ளீர்களே. அதற்கான காரணத்தைத் தெரிந்து செல்லவே வந்தேன்.''

நாவுக்கரசரின் வார்த்தைகளைக் கேட்ட அடிகள் அவரைக் கோபமாகப் பார்த்தார்.

''என்ன, சுவாமி, ஒன்றும் தெரியாதவர் போல் இருக்கிறீர் களே? நாவுக்கரசப் பெருமானின் திருப்பெயரைத் தவிர வேறு எவருடைய பெயரை வைப்பது? அவர் பெயரைத் தவிர வேறு எந்தப் பெயரும் தகுதி வாய்ந்தது அல்ல. எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதிலே அவருக்கு இணை யாரைச் சொல்ல முடி யும்? நீற்றறையிலே தள்ளப்பட்ட அவரை இறைவன் அருள் பாலித்துக் காப்பாற்றவில்லையா? பாறையுடன் பிணைத்துக் கட லிலே எறியப்பட்டாரே! இறைவன் அல்லவா அவரைக் காப்

பாற்றினர். அவரிடம் பகவானுக்கு எத்தனை அன்பிருந்தால் அவரைக் காப்பாற்றியிருப்பார்! நீரும் நானும் என்ன தொண்டு செய்திருக்கிறோம்? அவர் செய்திருப்பதில் நூற்றில் ஒரு பங்கு கூட இருக்காதே!'' என்று 'சடசட'வென்று இறைந்த அடிகள் பின்னர் தம்மைச் சற்று ஆசுவாசப் படுத்திக் கொண்டு, ''ஆமாம், நீர் யார்? அதைச் சொல்லவில்லையே. அயலூர் என்று மட்டும் கூறினீர்களே!'' என்று கேட்டார்.

''சுவாமி, பிறந்த சமயத்தைத் துறந்து சமணப் படுகுழியில் வீழ்ந்து தத்தளித்த போது சூலை நோய் தந்து இறைவன் ஆட்கொண்டது இந்த ஏழையைத்தான்'' என்றார் நாவுக்கரசர்.

சம்மட்டி கொண்டு தலையிலே அடித்தாற் போலிருந்தது அடிகளாருக்கு. தம் எதிரிலிருப்பது தாம் அத்யந்த அன்போடு வழிபட்டு வரும் நாவுக்கரசர் பெருமான் என்று அறிந்ததும் அப்படியே நெடுஞ்சாங்கிடையாக அவர் பாதங்களில் விழுந்தார். கண்ணீரால் அவர் பாதங்களைக் கழுவி எழுந்தார். அடிகளின் உடல் நடுங்கியது.

''பெருமானே, தாங்கள் யார் என்பதை உணராது ஏதேதோ பேசி விட்டேன். அறியாது செய்த குற்றத்தை மன்னித்து அருள வேண்டும்'' என்று அப்பருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு நெஞ்சம் வேதனையால் விம்மக் கெஞ்சினர்.

''அடிகளாரே, வருந்த வேண்டாம். என்னிடம் அளவில்லாத அன்பு கொண்டுள்ள உம்மைப் பார்த்து மகிழவே நான் வந்தேன்'' என்றார் நாவுக்கரசர்.

அடிகளுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. உள்ளே சென்று மனைவியையும் குமாரர்களையும் அழைத்து வந்தார். நாவுக்கரசரை வலம் வந்து வணங்கச் செய்தார். குடத்திலே நீர் கொண்டு வந்து அவர் பாதங்களைக் கழுவி அந்நீரை தம் மீதும் மற்றவர் மீதும் தெளித்துக் கொண்டார்.

''சுவாமி, இன்று என் மகிழ்ச்சி சொல்லி முடியவில்லை. என் இல்லத்தில் திருவமுது செய்து அருளவேண்டும்'' என்று வேண்டினர்.

அப்பர் அவ்வேண்டுகோளை ஏற்றுத் தாம் நீராடி ஆலயம் சென்று எம்பெருமானைத் தரிசித்து வருவதாகச் சொல்லிச் சென்றார்.

அப்பூதி அடிகளாரின் வீட்டில் அப்பர் பெருமானுக்கு அறுசுவை உணவு தயாராகியது. வாகீசப்பெருமானுக்குப்

போட நுனி இலையாக வாழை இலை நறுக்கி வரும்படி மூத்த குமாரனை கொல்லைக்கு அனுப்பினுர் அடிகளார்.

வாழை மரத்திலே குருத்து இலையாக ஒன்றை நறுக்கக் கை நீட்டி இலையைத் தாழ்த்தி கத்தியால் நறுக்கினுன் குமாரன். இலையோடு சுற்றியிருந்த நாகம் ஒன்று குமாரனின் கையைச் சுற்றியபடி கடித்தது. பாம்பை உதறிவிட்டு இலையோடு வீட்டுக்குள் ஓடி வந்தான் குமாரன். விஷம் தலைக்கேறி விட்டது. அவனுல் பேச முடியவில்லை. வாய் குழற பாம்பு கடித்து விட்டதை அறிவித்து, இலையைத் தாயிடம் கொடுத்தான். அதற்குமேல் அவனுல் தாங்க முடியவில்லை. உடல் முழுவதும் கருநீலம் பாயத் தரையிலே விழுந்து பிணமாஞன்.

அடிகளார் தவித்துப் போய் விட்டார். குமாரன் இறந்து விட்டதை அறிந்தால் அப்பர் பெருமான் திருவமுது செய்ய மாட்டாரே! மனைவியுடன் கலந்து ஆலோசித்தார். அடியார் உணவு அருந்தும் வரை அதைப் பற்றிப் பேசக்கூடாது என முடிவு செய்து குமாரனின் சவத்தை வீட்டின் ஒருபுறத்தில் மறைத்து வைத்தனர். பின்னர் ஆலயம் சென்று அப்பரை அமுதுண்ண அழைத்து வந்தார் அடிகளார்.

கூடத்திலே இலை போட்டுப் பலவித சித்ரான்னங்கள் பறிமாறப்பட்டன. கூடத்தில் காலடி எடுத்து வைத்ததும் வாகீசரின் உள்ளம் தடுமாறியது. அவ்வீட்டிலே ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்கிறதென்று அவர் உள் உணர்வு உறுத்தியது.

இலையிலே உட்காரும் முன்பு வீட்டிலிருப்பவர்களுக்குத் திருநீறு அளிக்க அழைத்தார். அடிகளாரும் அவர் மனைவியும் குமாரர்களும் வந்து பெற்றுக் கொண்டனர். அடிகளின் மூத்த குமாரனை மட்டும் காணவில்லை.

"அடிகளே, நாவுக்கரசன் வரவில்லையே?" என்று கேட்டார் வாகீசர்.

"இந்த நேரத்துக்கு அவன் பிரயோசனப்படுபவன் இல்லை. தாங்கள் இலையில் அமர வேண்டும். பசியுடனிருக்கிறீர்கள்!" என்ருர் அப்பூதி அடிகள்.

வாகீசர் சிரித்தார். "அடிகளே, என்ன நடந்தது? மறைக்காமல் சொல்லுங்கள்" என்று வற்புறுத்திக் கேட்டார் வாகீசர்.

கண்கள் 'பொல பொல'வென்று நீரைக் கொட்ட மகனுக்கு நேர்ந்த கதியைத் தெரிவித்தார் அடிகள்.

"அடிகளே,...நெஞ்சத்தைப் பிழிந்து எடுக்கும் இக்கொடும் துக்கத்தை மனத்திலே அடக்கிக் கொண்டு என்னை அமுது செய்யும்படி கேட்டீர்களே! எனக்கு மறைத்து விடலாம். ஆண்டவனுக்கு மறைக்க முடியுமா? வீட்டினுள் நுழையும் போதே இங்கே ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதென்று ஈசன் எனக்கு உணர்த்தி விட்டார். இதைக் கோயிலிலேயே எனக்குத் தெரிவித்திருக்கக் கூடாதா?..." என்று கேட்டார்.

"சுவாமி, கிடைத்தற்கரிய பாக்கியமாக உங்களுக்குத் திருவமுது செய்விக்கும் பேறு கிடைத்தது. பூர்வ ஜன்மத்தில் தான் செய்த கர்மாக்களுக்கேற்ப என் குமாரன் துர்மரணம் அடைந்தான். அவன் மரணத்தைத் தாங்கள் அறிந்தால் அமுது செய்ய மறுத்து விட்டால் என்ன செய்வதென்ற தயக்கம் தான் காரணம்" என்று மேனி நடுங்கக் கூறினார் அடிகள்.

"ஆலயத்திலே கூறியிருந்தால் இந்நேரம் நாவுக்கரசன் நம்மோடு மகிழ்ச்சியுடன் உணவருந்த அமர்ந்திருப்பானே!..."

"சுவாமி, எனக்கு விளங்கவில்லை தங்கள் கூற்று!..."

"குமாரனுடைய சடலத்தை ஆலய வாயிலுக்கு எடுத்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியேறினார் வாகீசர்.

கைகளில் குமாரனுடைய உடலைச் சுமந்தபடி அவர் பின்னால் சென்றார் அடிகளார்.

ஆலய வாயிலை அடைந்ததும் சடலத்தைத் தரையில் கிடத்தச் சொல்லி எம்பெருமானைக் குறித்து விடம் தீர்த்த பதிகம் பாடினார். வாகீசர் பாடி முடித்ததும் எம்பெருமான் திருஅருளால் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பது போல் அடிகளார் குமாரன் நாவுக்கரசன் எழுந்தான்.

அப்பூதி அடிகளார் பெருமகிழ்ச்சியுடன் எம்பெருமானுடைய கருணையைப் போற்றிப் பணிந்தார். பின்னர் வாகீசரை இல்லத்துக்கு அழைத்துச் சென்று திருவமுது செய்வித்து ஆனந்தத்தில் திளைத்தார். உணவுக்குப் பிறகு சிறிது நேரம் இளைப்பாறி விட்டு வாகீசர் திருப்பழனம் செல்ல விடை பெற்றுப் புறப்பட்டார்.

அப்பூதி அடிகள் தம் திருத்தொண்டை அனேக காலம் ஒரு குறைவுமின்றி நடத்திவந்து முடிவில் எம்பெருமானுடைய பாதாரவிந்தங்களை அடைந்தார்.

44. சிலந்தி விளைவித்த பூசல்

சோழ நாட்டிலே சாத்தமங்கை என்னும் தலத்தில் எம் பெருமான் அய்யவந்திநாதர் என்ற திருநாமத்துடன் எழுந் தருளியிருக்கிறார். அவ்வூரிலே நீலநக்கர் என்ற அந்தணர் ஒரு வர் இருந்தார். அய்யவந்திநாதரிடம் அளவில்லா பக்தி பூண் டவர் அவர். அக்னிஹோத்திரம் ஒருநாளும் செய்யத் தவறுவ தில்லை. எந்நேரமும் அவர் வீட்டிலே அக்கினி சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். எம்பெருமானிடம் அவர் பக்தி கொண்டிருப்பது போல அவர்தம் அடியார்களிடமும் அள வில்லா அன்பு வைத்திருந்தார். அவர்களைத் தம் இல்லத்துக்கு அழைத்து வந்து அமுது செய்வித்து உள்ளக் களிப்பு அடை வார்.

இவ்வாறு இருந்து வரும்போது, ஒருநாள் மாலை நீலநக்கர் தம் மனைவியாருடன் இறைவனைச் சேவிக்க, அய்யவந்திநாதர் ஆலயம் சென்றார். அங்கே எம்பெருமானை மலர் கொண்டு அர்ச்சித்து அவர் முன்பு அமர்ந்து பஞ்சாக்ஷரம் ஜபித்துக் கொண்டிருந்தார். பக்கத்திலே நின்றிருந்தார் அவர் மனைவியார்.

கர்ப்பக்கிருகத்தின் மேல் பக்கச் சுவரிலிருந்து சிலந்தி ஒன்று இறைவனின் திருமேனி மீது விழுந்து இங்குமங்கும் ஓடியது. அதைக் கவனித்த நீலநக்கரின் மனைவி சட்டென்று ஈசனுடைய திருமேனி மீது குனிந்து சிலந்தியை வாயால் ஊதித் தள்ளினார்.

பஞ்சாக்ஷரம் ஜபித்துக் கொண்டிருந்த நீலநக்கர் அதைக் கண்டதும் பதை பதைத்துப் போய் விட்டார். இறைவனுடைய புனித மேனியை எச்சில் காற்றுப் படச் செய்து அசுத்த மடையச் செய்துவிட்டாளே என்று துடித்தார்.

"என்ன காரியம் செய்தாய்!" என்று மனைவியை அதட் டினார்.

"எம்பெருமான் திருமேனி மீது சிலந்தி விழுந்தது. அதை ஊதி விரட்டினேன்" என்று பதில் அளித்தார் அம்மையார்.

"உன் எச்சில் காற்று இறைவன் திருமேனியில் படுவதா? பெரும் அபசாரம் செய்துவிட்டாயே! இனி நீ என் கண்களில் விழிக்காதே, போய்விடு. என் வீட்டில் உனக்கு இடமில்லை!" என்று பலவாறாகக் கோபித்துக்கொண்டு வீட்டுக்குப் போய்விட் டார் நீலநக்கர்.

கணவருடைய கோபத்தைக் கண்டு அந்த அம்மையார் ஒடுங்கிவிட்டார். அவர் வார்த்தையை மீறி வீட்டினுள் காலடி எடுத்து வைக்க அஞ்சினார் கற்புக்கரசியார்.

“இறைவா, இதென்ன சோதனை? நான் மனதறிந்து அபசாரம் ஏதும் செய்யவில்லை. என் குழந்தையைப் போன்று உன் திருமேனியில் சிலந்தி விழுந்துவிட்டதே என பதை பதைத்து அதை விரட்டினேன். அதற்காக இப்பெரும் தண்டனைக்கு என்னை உள்ளாக்கி விட்டாயே!'' என்று கண்ணீர் விட்டுக் கதறியபடி இரவு ஆலயத்திலேயே தங்கிவிட்டாள்.

தம்பதிகளுக்கிடையே தம் பொருட்டு நேர்ந்துவிட்ட பூசலை நீக்கி அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்க விரும்பினார் அய்யவந்திநாதர்.

வீடு திரும்பிய நீலநக்கருக்கு மனம் அமைதியின்றி குழம்பியது. இறைவன் திருமேனியை வாயால் ஊதி எச்சில் காற்றுப் படச் செய்து பெரும் அபசாரத்துக்குத் தம் மனைவி உள்ளாகி விட்டாளே என எண்ணி எண்ணி உள்ளம் குமைந்தார். வெகு நேரம் அந்தச் சம்பவத்தைப்பற்றி நினைந்து வருந்தியவராய் படுத்திருந்தார். உணவு அருந்தக் கூட அவருக்குப் பிடிக்கவில்லை. பட்டினி கிடந்தார்.

அன்றிரவு அய்யவந்திநாதர் நீலநக்கரின் தூக்கத்திலே தோன்றி, “அன்பனே!'' என அழைத்தார்.

கைகளில் மானும் மழுவும் தாங்கி காட்சியளித்த எம்பெருமானைக் கண்டு திடுக்கிட்டார் நீலநக்கர். அவருடைய உடலெங்கும் கொப்புளங்களாக இருந்தன. நெற்றியிலே மட்டும் கொப்புளங்கள் காணப்படவில்லை.

“அன்பனே, இதோ பார். சிலந்தி என் மீது விழுந்ததால் ஏற்பட்ட கொப்புளங்களைப் பார். நெற்றியிலே உன் மனைவி அன்பு மிகுதியால் ஊதி சிலந்தியை விரட்டிய இடத்தில் மட்டும் கொப்புளங்கள் இல்லை!'' என்று சொல்லி மறைந்தார்.

திடுக்கிட்டுக் கண் விழித்த நீலநக்கர் இறைவனுடைய திருவருளை எண்ணி வியந்தார். தாம் மூன்று காலங்களிலும் நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து வழிபட்டு வந்தாலும், எம்பெருமானைத் தன் குழந்தையாகப் பாவித்து, அவர் திருமேனியில் சிலந்தி விழுந்து விட்டதே என பரிதவித்துச் சிறிதும் யோசிக்காமல் வாயால் ஊதித் தள்ளிய தம் மனைவியின் அன்புக்கு ஈசன் கட்டுப்பட்டு விட்டாரே என ஆனந்தக் கண்

ணீர் உகுத்தார். அன்பை உணராது மனைவியைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டு வீட்டுக்கு வராதே என தடைவிதித்தது பற்றி வருந்தினுர்.

பொழுது எப்போது புலரும் என்று காத்திருந்த நீலநக்கர், விடிந்ததும் ஆலயத்துக்கு ஓடினுர். அங்கே தன் மனைவியைக் கண்டு ஆனந்தத்தால் அவளைத் தழுவி இரவு தூக்கத்திலே ஆண்டவன் தோன்றி அருளியதைத் தெரிவித்து அவளை வீட்டுக்கு அழைத்து வந்தார்.

தம்பதிகள் இருவரும் மனம் ஒருமித்து இல்லறம் நடத்தி வரும் காலத்தில் ஒரு நாள் சம்பந்தர் பெருமான் தம் தொண்டர் குழாத்துடன் சாத்தமங்கைக்கு எழுந்தருளினுர். அடியார்களிடம் பக்தி கொண்ட நீலநக்கர் எதிர்கொண்டு சென்று சம்பந்தரைப் பணிந்து அவரை அழைத்து வந்து தமதில்லத்தில் தங்கச் செய்து திருவமுது செய்வித்தார். நீலநக்கரின் பெருமையைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த சம்பந்தர் பெருமான் அவர் மகிமையை மேலும் எடுத்துக் காட்ட எண்ணினுர்.

இரவு தமதில்லத்திலே தங்க வேண்டுமென நீலநக்கர் அவரை வேண்டியபோது, "அன்பனே, என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். என்னுடன் அடியார் ஒருவர் வந்துள்ளார். அவர் இரவு எங்கும் தங்கமுடியாதிருக்கிறது. நீலகண்ட பெரும்பாணரும் அவர் மனைவியார் விறலியாரும் என்னுடன் வந்திருக்கிறுர்கள். அவர்களுக்கு உன் மனையில் இரவு படுக்க இடம் கொடு" என்றுர்.

நீலநக்கர் மகிழ்ச்சியோடு நீலகண்ட பெரும்பாணரையும் அவர் மனைவி விறலியாரையும் அழைத்துத் தம் இல்லத்தில் சுடர்விட்டெரியும் ஹோமகுண்டத்தின் அருகில் படுக்க இடம் அளித்தார். அடியாரும் அவர் மனைவியும் நெருங்கி வந்ததும் குண்டத்தில் கொழுந்துவிட்டெரியும் அக்கினி ஒதுங்கி வலம் வந்து எரிந்தது. அதைக் கண்ட தொண்டர்கள் அடியாரின் பெருமையை போற்றிக் கொண்டாடினுர்கள். தாழ்ந்த ஜாதியில் பிறந்தவர் எனப் பாணரை ஒதுக்கி வைக்காமல் தாம் வணங்கும் இறைவனுக்குச் சமமாகப் பாவித்த நீலநக்கரை அனைவரும் புகழ்ந்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கினர்.

சம்பந்தர் பெருமான் சாத்தமங்கை விட்டுப் புறப்பட்டபோது அவரோடு தாமும் திருப்பதிகள் தோறும் சென்று இறைவனை வழிபட விரும்பினுர் நீலநக்கர். சம்பந்தர் அதற்கு இணங்கவில்லை. அவர் ஊரோடு இருந்து இல்லறத்தை இனிது நடத்தி

வருவதோடு அடியார் திருப்பணிகளையும் செய்து வரவேண்டும் என அன்புக் கட்டளையிட்டு விட்டார். அதை மீற முடியாது நீலநக்கர் ஊரிலேயே தங்கும்படி ஆகிவிட்டது.

சம்பந்தர் பெருமானுக்குத் திருமணம் என அழைப்பு வந்த போது, நீலநக்கர் தம் மனைவியாருடன் புறப்பட்டுச் சென்று, திருமணத்தில் சம்பந்தருடன் ஜோதியில் கலந்து இறைவனுடைய திருமலரடிகளை அடையும் பேறு பெற்றார்.

45. நீரால் விளக்கேற்றிய நமிநந்தி

சோழ நாட்டிலே திருவாரூருக்குத் தெற்கு சுமார் ஐந்து மைலில் ஏமப்பேறு என்றொரு தலம் இருக்கிறது. அவ்வூரிலே நமிநந்தி அடிகள் என்னும் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் புற்றிடம்கொண்ட பெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டவர். அவரைத் தரிசனம் செய்ய ஒரு நாளும் தவறுவதில்லை.

தினமும் விடியற் காலையில் எழுந்து நீராடி சிவபூஜை செய்வார். பூஜை முடிந்ததும் திருவாரூருக்கு வந்து எம்பெருமான் ஆலயத்தில் சுவாமி தரிசனம் செய்வார். பின்னர் மாலைவரை அங்கேயே தங்கி திருத்தொண்டுகளில் ஈடுபடுவார். மாலையில் இறைவனுடைய அபிஷேக ஆராதனைகளைக் கண்டு களித்து இரவு ஊர் திரும்புவார்.

வீடு திரும்பியதும் நீராடி பகவானைப் பூஜித்துப் பின்னரே உணவருந்தி நித்திரை கொள்வார். இவ்வாறு நாள் தோறும் தொண்டு புரிந்து வந்தார் நமிநந்தி அடிகளார்.

ஒரு நாள் வீதிவிடங்கப் பெருமான் ஆலயத்திலே தங்கியிருந்த நமிநந்தி அடிகள் எம்பெருமானைத் தரிசித்து பிராகாரத்தை வலம் வரும்போது இரண்டாம் ஆவரணத்திலிருந்த அறநெறி எனப்படும் அகலேசுவரர் சந்நிதியை அடைந்தார். இறைவனுடைய திருக்கோயிலில் விளக்கு ஏற்றப்படாது இருள் சூழ்ந்திருப்பதைக் கண்டதும் அவ்வாலயத்தில் விளக்கு ஏற்றவேண்டும் என்ற விருப்பம் அவருக்குத் தோன்றியது. மாலைக்காலம் ஆனதால் வேறு எங்கும் செல்ல விரும்பாமல் ஆலயத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு வீட்டில் நுழைந்து எம் பெருமானுக்குத் திருவிளக்கேற்ற எண்ணெய் தருமாறு கேட்டார். அந்த வீட்டில் இருந்தவர்கள் சமணர்கள். சிவாலயத்தில் விளக்கேற்ற எண்ணெய் தரும்படி தங்களிடம் வந்து அடிகள் கேட்டது அவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது.

"ஏன், ஐயா, உங்கள் சிவஞர் தம் கையிலேயே நெருப்பைக் கொண்டிருப்பவராயிற்றே. அவருக்கு ஏன் விளக்கேற்ற வேண்டும்? போய், குளத்துத் தண்ணீரை எடுத்து ஊற்றி விளக்கேற்று!" என்று ஏளனமாகச் சொன்ஞர்கள்.

நமிநந்தி அடிகளுக்கு அவமானமாகி விட்டது. அவ்வீட்டிலே வசிப்பவர்கள் நம்மவர்கள்தாஞ என்று அறிந்து கொள்ளாது எண்ணெய் கேட்டது தம்முடைய தவறுதான் என நொந்து போய் ஆலயத்துக்குத் திரும்பினுர்.

இறைவன் தம் பக்தன் படும் வேதனையை உணர்ந்தார்.

"நமிநந்தீ, ஏன் வருந்துகிருய்? அவர்கள் தெரிவித்தது போலக் குளத்து நீரை ஊற்றியே விளக்கேற்று!" என்று அசரீரி மூலம் பக்தனுக்குக் கட்டளையிட்டார்.

நமிநந்தி அடிகள் எழுந்து சென்று ஒரு பாத்திரத்திலே குளத்து நீரை மொண்டு வந்து ஒரு அகலிலே ஊற்றி திரியை ஏற்றிஞர். என்ன ஆச்சரியம்? விளக்கு சுடர் விட்டு எரிந்தது. அடிகள் ஆனந்தம் கொண்டவராய் ஆலயம் முழுமையும் விளக்குகளில் நீரை ஊற்றியே ஏற்றிஞர். எங்கும் ஒரே ஒளி மயம். குளத்து நீரில் விளக்கெரிவதைக் கண்டு அவரை எல்லோரும் கொண்டாடினர். அது முதல் அவர் தினமும் நீரைக் கொண்டே விளக்கெரியச் செய்து வந்தார்.

இவ்வாறு நடந்து வரும்போது தண்டியடிகள் என்பவரால் ஆரூரிலே சமணர்கள் அழிந்து போஞர்கள். சிவனடியார்கள் தங்கள் தொண்டுகளைத் தடையின்றி நடத்தி வந்தனர். அடிகளாரின் பெருமையைக் கேள்விப்பட்டு சோழ ராஜன் தியாக ராஜர் ஆலயத் திருப்பணிகளுக்குத் தலைமை தாங்கி நடத்தி வரும் பொறுப்பை அவருக்கு அளித்தான். அடிகளும் அப் பொறுப்பை மிகவும் பக்தியோடு ஏற்றுக் குறையின்றி நடத்தி வந்தார்.

பங்குனி உத்திரம் திருவிழா. வீதிவிடங்கப் பெருமானை திருவீதி புறப்படச் செய்தார். எம்பெருமான் மணலூர் வரை சென்று திரும்பிஞர். இறைவனேடு அடிகளும் சென்று சேவித்துத் திரும்பிஞர்.

இரவு எம்பெருமான் கோயிலுக்குத் திரும்பிய பிறகு நமிநந்தி அடிகள் ஊருக்கு வந்தார். வீட்டை அடைந்த அவர் உள்ளே செல்லாமல் புறக்கடையிலேயே நின்றபடி மனைவியை அழைத்தார்.

"உள்ளே வாருங்கள்!" என்று மனைவி அவரை அழைத்த போது, "இன்று எம்பெருமான் மணலூர் வரை எழுந்தருளினர். அவரோடு நானும் சென்றிருந்தேன். தெருவிலே எல்லோர் மீதும் பட நேர்ந்ததால் தீட்டு ஏற்பட்டு விட்டது. பிராயச் சித்தம் செய்துதான் உள்ளே நுழைய வேண்டும். ஜலம் கொண்டு வா." என்ருர்.

அவர் மனைவியும் ஜலம் கொண்டு வர கொல்லைப் பக்கம் சென்ருள். இறைவன் சந்நிதானத்தில் அடியார்களுக்கிடையே வித்தியாசம் ஏதும் கிடையாது என்பதை நமிநந்தி அடிகள் எண்ணிப் பார்க்காததை அவருக்கு எடுத்துக் காட்ட எம்பெரு மான் திருவுள்ளம் கொண்டார் போலும். உள்ளே சென்ற அவர் மனைவி வருவதற்குள் அடிகளுக்குத் தூக்கம் வந்தது. அப் படியே புறக்கடையில் படுத்துத் தூங்கி விட்டார். அவர் தூக் கத்திலே இறைவன் தோன்றி, "நமிநந்தீ, ஆரூரில் பிறந்த அனைவரும் நம்முடைய கணங்கள் என்பதை மறந்து விட் டாயே. நாளை அதை நீ காண்பாய்!" என்று சொல்லி மறைந் தார்.

திடுக்கிட்டுக் கண் விழித்த அடிகள் தம்முடைய குற் றத்தை எண்ணி எண்ணி வருந்தினர். பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விடுத்து வழக்கப்படி நீராடி சிவபூஜை முடித்து அமுது செய்தார்.

விடிந்தது. மனைவியையும் அழைத்துக்கொண்டு திருவாரூர் சென்ருர். அங்கு நடமாடும் அத்தனை பேரும் சிவ சொரூப மாகத் தோன்றியது அடிகளாருக்கு. மெய்சிலிர்க்க ஆரூரின் வீதியிலே விழுந்து வணங்கினர். அவர் எழுந்தபோது அக் காட்சி மறைந்து விட்டது.

இறைவனின் திருவருளைக் கண்டு பரவசமாகி, "ஐயனே, என் பிழையைப் பொருத்து அருள வேண்டும்" என்று உள்ளம் உருக வேண்டினர். அன்றே அவர் தம் ஊரை விட்டுத் திருவா ரூருக்கே குடியேறினர். நாள்தோறும் திருப்பணிகளை விடாது நடத்தி வந்து முடிவில் தியாகேசரின் திருப்பாதங்களைச் சேர்ந் தார்.

[அப்பர் பெருமான் நமிநந்தியடிகளின் பெருமையைத் தம் முடைய திருப்பதிகம் ஒன்றில் பாடி அவரைக் கௌரவித் துள்ளார்.]

நமிநந்தி அடிகளாரின் திருத்தொண்டுகளைக் கூறி அவரைப் பணிந்த சுந்தரர் மேலும் தொண்டர்தம் பெருமையைப் பாடலுற்றார்.

வம்பரு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

46. குலம் விளங்க வந்த குழவி

சோழ நாட்டிலே சீர்காழி என்றொரு தலம். பிரமபுரம், புகலி, வேணுபுரம், கழுமலம், சண்பை, வெங்குரு, பூந்தராய், சிரபுரம் தோணிபுரம், எனப் பல பெயர்களால் அத்தலம் விளங்குகிறது. புறவம். கொச்சைவயம் பிரளய காலத்திலே அண்ட சராசரங்களும் அழிந்துபோக இத்தலம் மட்டும் தோணியாக மாறி வெள்ளத்திலே மிதந்து அழியாமல் இருந்ததாம் தாருகாசுரனுக்குப் பயந்து இந்திரன் பூலோகத்தில் இங்கே வந்து பதுங்கி, நந்தவனம் வைத்து, செடிகளுக்கு நீரில்லாமல் தவித்தபோது அகஸ்தியர் மூலம் காவேரியைத் தென்னாட்டில் ஓடச் செய்தான்.

இத்தனைப் பெருமை வாய்ந்த இத்திருப்பதியில் கௌணியர் கோத்திரத்தில் பிறந்த சிவபாதவிருதயர் என்னும் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் தம் பெயருக்கேற்ப எம்பெருமானுடைய திருப்பாதங்களை எப்போதும் நெஞ்சத்தால் வழிபட்டு வந்தார். அவர் மனதுக்கேற்ப அவர் இல்லத்தரசி பகவதியாரும் எம்பெருமானிடம் அத்தியந்த பக்தி பூண்டு கணவரின் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தாள். அத்தம்பதிகளுக்கு வெகுகாலமாகப் பிள்ளைப் பேறு இல்லாதிருந்தது.

அப்போது நாட்டிலே புறச்சமயிகள் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. சிவபெருமானிடம் மிகுந்த பக்தி பூண்ட சிவபாதவிருதயருக்கு இது சொல்லொண்ணு வேதனை அளித்துவந்தது. சைவசமயத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து புறச்சமயங்களில் சேர்ந்து வருவது குறித்துத் தினமும் வருந்துவார். நாட்டிலே சைவ நெறி தழைத்தோங்கச் செய்யவும், தமக்குப் பிள்ளை இல்

லாத குறை நீங்கவும் எம்பெருமான் திரு அருள்பெற்ற குமாரன் பிறக்க அனுக்கிரகிக்க வேண்டும் என்று நாள்தோறும் தோணியப்பர் ஆலயத்துக்குச் சென்று இறை வனை வேண்டுவார்.

பக்தருடைய வேண்டுகோளைத் தோணியப்பர் நிறை வேற்றி வைத்தார். பகவதியார் கருவுற்று பத்துமாதங்கள் சென்றதும் சுபயோகங்கள் நிறைந்த திருவாதிரை நாள் அன்று அழகிய ஆண் மகவைப் பெற்றெடுத்தார். சிவம் பெருக்கும் சீலர் பிறந்து விட்டாரென்பதை அறிந்ததும் விண் ணவர்கள் வானிலிருந்து மலர்களைத் தூவினர்; சங்கம் முத லான வாத்தியங்களை முழங்கி தங்கள் மகிழ்சிச்யைத் தெரிவித் துக் கொண்டனர்.

குலம் விளங்கப் பிறந்த குழவியைக் கண்டு தம்பதிகள் ஆனந்த சாகரத்தில் மிதந்தனர். குழந்தை பிறந்ததைக் கொண்டாட வேதியர்களை அழைத்து அனேக தானங்கள் கொடுத்தார். புண்யாகவசனம் முடிந்த அன்று ஊரிலுள்ள தாய்மார்கள் வந்து கூடி ஆசி கூற குழந்தைக்கு ஆளுடைய பிள்ளை என நாமகரணம் செய்து பகவதியார் தொட்டிலிட்டார்.

சிவபாதவிருதயருக்கு ஊரிலே நல்ல மதிப்பு உண்டு. அவரிடம் அனைவருக்கும் மிகுந்த அன்பு. ஆகவே கேட்க வேண்டுமா? ஆளுடைய பிள்ளையைத் தினமும் ஒருவர் மாற்றி ஒருவர் வந்து பார்த்துக் கொஞ்சாமல் இருக்க மாட்டார்கள். அவன் சிவபாத விருதயருக்கு மட்டுமின்றி ஊரார் எல்லோருக் குமே பிள்ளையாக வளர்ந்து வரலானுன். அந்தந்தப் பருவங் களுக்கேற்ப விளையாட்டுகளை ஒன்றுகூட விடாது ஆடி அனை வரையும் மகிழ்வித்தான். பகவதியார் வளர்ந்து வரும் குமார னுக்குத் தினமும் ஒரு விதமாக அலங்காரம் செய்து அவன் அழகைக் கண்டு ஆனந்தித்து வந்தார்.

குழந்தைக்கு மூன்று வயது நிரம்பியது. இடுப்பிலே நாய்க்காசும், கால்களிலே தண்டையும் கொலுசும் குழந்தைக்கு அணிவித்திருந்தார் சிவபாதவிருதயர். கால்களை அசைத்து அசைத்து குழந்தை நடந்து வரும்போது தம்பதிகள் தங் களையே மறந்து குழந்தையின் நடை அழகில் லயித்து நிற் பார்கள். சிவபாதவிருதயர் எங்கு சென்ருலும் குழந்தையைத் தோளிலே உட்கார வைத்து எடுத்துச் செல்வார்.

ஒருநாள் சிவபாதவிருதயர் திருக்குளத்துக்குச் சென்று நீராடப் புறப்பட்டார். தந்தை வெளியே புறப்படுவதை

அறிந்த குழந்தை ஓடி வந்து அவர் கால்களைக் கட்டிக் கொண்டான்.

"உள்ளே போ! குளித்துவிட்டு வந்து கோவிலுக்கு அழைத்துப் போகிறேன்" என்று சொல்லி குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி அவன் தாயிடம் விட்டு விட்டுப் புறப்பட்டார். குழந்தையோ தானும் வருவதாக சிணுங்கியபடி தாயின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு ஓடி வந்தான்.

"இப்போது அழைத்துக் கொண்டு போக முடியாது. அம்மாவிடம் போ!" என்று அதட்டினர் அவர்.

பகவதியார் உள்ளிருந்து வந்து குழந்தையைத் தூக்கினள்.

குழந்தை பிடிவாதம் பிடித்தான். தந்தையோடு போக வேண்டுமென அழுதான். குழந்தை அழுவதைப் பொறுக்க முடியாது சிவபாதவிருதயர்," கூட வருவேனென்று பிடிவாதம் பிடிக்கிருயா?......சரி, சரி, வா!" என்று குழந்தையை எடுத்துக் கொண்டு குளத்துக்குப் புறப்பட்டார்.

குளக்கரையில் குழந்தையை உட்கார வைத்து விட்டுப் படிகளில் இறங்கி நீராடத் தொடங்கினர். குழந்தையும் கரையில் உட்கார்ந்தவாறு தந்தை நீராடுவதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

சிவபாதவிருதயர் நீரிலே நன்கு மூழ்கி நீராட எண்ணியவராய் மூழ்கினர். குழந்தை குளத்தைப் பார்த்தான். தந்தையைக் காணவில்லை. கண்களில் நீர் முட்டியது. நெஞ்சம் விம்மியது. உதட்டைப் பிதுக்கியபடி நாற்புறமும் பார்த்தான். தந்தையைக் காணவில்லை. மெல்ல எழுந்திருந்து இங்குமங்கும் பார்த்தான். குளத்தைப் பார்த்தான்; மண்டபத்தைப் பார்த்தான்; கோபுரவாயிலைப் பார்த்தான்; கடைசியாக ஆலய விமானத்தைப் பார்த்தான். துக்கம் தாங்கவில்லை. அவனை விட்டு விட்டு எங்கோ போய் விட்டார் என்று எண்ணினன் போலும். "அம்மா...அப்பா!..." என்று அழத்தொடங்கினன்.

குழந்தையின் அழுகை தோணியப்பரின் செவிகளில் விழுந்தது. சிவபாதவிருதயருக்குத் தாம் அருளிய செல்வன் அழுவதைக் கேட்டால் அவர் மனம் பொறுக்குமா? தேவியையும் உடன் அழைத்துக் கொண்டு ரிஷபத்தின் மீதேறி குளக்கரைக்கு ஓடி வந்தார்.

கண்களிலிருந்து நீர் பெருகி கன்னங்களில் வழிந்தோட குழந்தை நாற்புறமும் பார்த்து விழித்தபடி அழுதான்.

"தேவி, நம் பிள்ளை அழுகிறான். அவனுக்குப் பால் புகட்டு. சிவபாதவிருதயன் தன் குழந்தை சிவஞானம் பெற்று விளங்க வேண்டுமென்று கேட்கவில்லையா? முலைப்பாலோடு ஞானமும் கலந்து ஊட்டு" என்றார் ஈசன்.

பொன் கிண்ணத்திலே சிவஞானம் கலந்த முலைப்பாலை ஏந்தி எடுத்து வ்ந்து குழந்தைக்குப் புகட்டினாள் தேவி.

குழந்தையின் அழுகை நின்றது. ஈசனும் தேவியும் அந்தர்தியானமானார்கள்.

நீராடிக் கரையேறிய சிவபாதவிருதயர் தாம் உட்கார வைத்திருந்த இடத்தில் குழந்தையைக் காணாது திடுக்கிட்டார். சற்று தொலைவில் குழந்தை மணலில் விளையாடிக் கொண்டிருந்தான். குழந்தையின் கடைவாயிலிருந்து பால் வழிந்து அவன் மேனியில் பரவியிருந்தது.

."என்னடா சாப்பிட்டே? யார் பால் கொடுத்தது?" என்று அதட்டினார்.

குழந்தை திரும்பி தோணியப்பர் ஆலத்தைக் காட்டியது. சிவபாத விருதயருக்குப் புரியவில்லை. கீழே கிடந்த குச்சி ஒன்றை எடுத்து "யாரடா உனக்குப் பால் கொடுத்தது?" என்று அதட்டிக் கேட்டபடி குச்சியை ஓங்கினார்.

தந்தையின் அதட்டலுக்குப் பயந்து குழந்தை வாயைத் திறந்தான். 'தோடுடைய செவியன்' என்ற செந்தமிழ்ப் பதிகம் தோன்றியது. பிரமபுரம் மேவிய பெருமானே தனக்குப் பால் கொடுத்தது என்று தெரிவித்தான் குழந்தை.

மூன்று வயதுக் குழந்தை பதிகம் பாடியதைக் கேட்டு சிவபாதவிருதயர் பெரும் வியப்புக் கொண்டார். குழந்தையை அடிக்க குச்சியோடு ஓங்கிய கை அப்படியே நிற்க ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டு நின்றார்.

ஞானப் பாலுண்ட திருமகனார் ஆலய விமானத்தை நோக்கி நமஸ்கரித்து எழுந்தார். பின்னர் ஆலயத்துள் நுழைந்து தோணியப்பர் சந்நிதி முன் சென்று இறைவனைத் தொழுதார்.

சிவபாதவிருதயருக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. 'சைவம் தழைக்கச் சொல்வன் கிளம்பிவிட்டான்' என்று கூத்தாடினார். குமாரனைப் பின் தொடர்ந்து ஆலயத்தினுள் ஓடினார். எம்பெருமானைத் தரிசித்துப் புறப்பட்டார் செல்வத் திருமகனார்.

இதற்குள் செய்தி நகரமெங்கும் காற்றிலும் கடுகிப் பரவி விட்டது. சிவபாதவிருதயருடைய மூன்று வயது குமாரன் திரு வருள் பெற்று வருகிறான் என்று கேள்விப்பட்டு அந்தணர் களும் அடியார்களும் ஆலயத்துக்கு ஓடிவந்தனர். தந்தை ஆனந்தப்பரவசராகப் பின் தொடர்து வர வாயிலுக்கு வந்த குழந்தையின் திருப்பாதங்களில் அடி பணிந்து வணங்கினர். மலர் கொண்டு அர்ச்சித்தனர். இறைவனே குழந்தையாக வந்து பிறந்திருப்பதால் அந்த வயதில் பதிகம் பாடும் திறமை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கொண்டாடினார்கள். ஞானப் பாலுண்டு இறைவனோடு சம்பந்தம் கொண்டு விட்ட ஞான சம்பந்தரை நான்கு வீதிகளிலும் ஊர்வலமாக அழைத்துச் செல்ல அவர்கள் விரும்பினர். சிவபாதவிருதயர் குழந்தை யைத் தோளிலே சுமந்து வர அவர்கள் நான்கு வீதிகளிலும் மேளதாளங்களுடன் ஊர்வலமாகச் சென்று பிள்ளையாரின் திருமாளிகையை அடைந்தனர்.

பொழுது புலர்ந்தது. சம்பந்தர் தந்தையிடம் இறைவனைத் தரிசிக்க வேண்டுமென விருப்பம் தெரிவித்தார். சிவபாதவிரு தயரும் மகிழ்வுடன் அவரைத் தோளிலே சுமந்து சென்று திருக் குளத்தில் நீராட்டி ஆலயத்துள் அழைத்துச் சென்றார். தோணி யப்பரையும் திருநிலைநாயகியாரையும் வழிபட்டுப் புறப்பட்ட சம்பந்தர் திருக்கோலக்கா செல்ல வேண்டுமெனத் தெரிவித்தார்.

ஊருக்குத் தெற்கே சற்று தள்ளி அமைந்திருந்த அத் திருப்பதிக்கு சிவபாதவிருதயர் குமாரனை அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தார். எம்பெருமான் சந்நிதி முன் நின்று சம்பந்தர் பாடும்போது அவர் கைகளில் ஈசன் திரு வருளால் செம்பொன்னாலான தாளம் தோன்றியது. இறைவன் தம்மிடம் கொண்டுள்ள கருணையை வியந்து தாளம் கொண்டு ஓசையெழுப்பிப் பாடலானார். பின்னர் சீர்காழி திரும்பினர்.

தினமும் காலையில் எழுந்ததும் சம்பந்தர் தந்தையாரோடு ஆலயம் சென்று எம்பெருமானை வழிபட்டு வந்தார். ஞானப் பாலுண்டு இறைவன் திருவருள் பெற்ற அவர் மகிமை சுற்று வட்டாரக் கிராமங்களிலெல்லாம் பரவியது. நாள் தோறும் வெளியிடங்களிலிருந்தெல்லாம் அந்தணப் பெருமக்கள் சீர்காழி வந்து ஆளுடைய பிள்ளையாரைத் தரிசித்துச் சென்றனர்.

சம்பந்தர் பெருமானின் தாய் பகவதியார் பிறந்த ஊர் நனிப்பள்ளி ஆகும். பகவதியின் திருவயிற்றிலுதித்த பிள்ளை ஈசுவர அனுக்கிரகம் பெற்று பதிகங்கள் பாடுகின்றார் என்று கேள்விப்பட்டதும் அவ்வூர் மக்கள் ஆனந்தம் மிகக் கொண்டு

சீர்காழி வந்து சேர்ந்தனர். பிள்ளையாரைத் தங்கள் ஊருக்கும் எழுந்தருளி நற்றுணையப்பரைத் தரிசிக்க வேண்டும் என அழைத்தனர்.

சம்பந்தரும் அவர்கள் வேண்டுகோளை ஏற்றார். சிவபாத விருதயர் மகனைத் தனியே அனுப்ப விரும்பவில்லை. தாமும் கூடக் கிளம்பினர். குழந்தையைத் தோளிலே சுமந்துகொண்டு அவர்களுடன் புறப்பட்டார்.

சிவம் பெருக்கும் சீலரைத் திருநனிப்பள்ளி மக்கள் பெரும் கோலாகலத்தோடு வரவேற்று வீதிகள் வழியாக அழைத்துச் சென்றனர். தெருவெங்கும் பந்தல்கள் போடப்பட்டிருந்தன. வீதியிலே நடந்து வரும்போது பெருமானின் திருப்பாதங்கள் நோகுமே என மலர்களைத் தூவி நடைபாதை அமைத்திருந் தனர்.

நற்றுணையப்பரைத் தரிசித்துப் பதிகம் பாடிய சம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டு திருவலம்புரம் 1 சென்று வலம்புரிநாதரைத் தொழுதார். பிறகு இயற்பகை நாயனர் அவதார ஸ்தலமான பல்லவனீச்சுரத்தை தரிசித்துக் கொண்டு திருச்சாய்க் காடு வந்து சேர்ந்தார்.

வானளாவி உயர்ந்து நின்ற கோபுர வாயிலைக் கடந்து சென்று சாயாவனேசுவரரின் திவ்விய கோலத்தைத் தரிசித்துப் பாடி மகிழ்ந்த சம்பந்தர் அடுத்து திருவெண்காடு சென்று வழி பாட்டை முடித்துக்கொண்டு திருமுல்லைவாயில் 2 அடைந்து இறைவனைத் தரிசித்து சீர்காழிப் பதி சேர்ந்தார்.

சில நாட்கள் சீர்காழியிலேயே தங்கி சம்பந்தர் தினமும் தோணியப்பரைத் தரிசித்து வந்தார். அவ்வாறு இருந்து வரும் போது நடுவில் திருமயேந்திரப்பள்ளிக்கும் 3 திருக்குருகாவூருக் கும் 4 சென்று தரிசனம் செய்து வந்தார்.

சம்பந்தரைப்பற்றிக் கேள்விப்பட்ட திருநீலகண்டப் பெரும் பாணர் என்பவர் அவரைத் தரிசிக்கத் தம் மனைவி விறலியாரை

---

1 மேலப்பெரும்பள்ளம் என அழைக்கப்படும் இவ்வூர் திருக் கடவூருக்கு வடக்கே ஐந்து மைலில் உள்ளது.

2 தென் திருமுல்லைவாயில் எனப்படும் இவ்வூர் சீர்காழிக்கு கிழக்கே எட்டு மைலில் உள்ளது.

3 கொள்ளிடம் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே ஏழு மைலில் உள்ளது.

4 சீர்காழிக்குக் கிழக்கே மூன்று மைலில் உள்ளது.

யும் அழைத்துக்கொண்டு தோணிபுரம் வந்தார் அவர் யாழ் வாசிப்பதில் சிறந்த நிபுணர். இறைவனுடைய பெருமைகளைப் புகழ்ந்து கூறும் பாடல்களை அவர் யாழிலே கேட்போர் உள்ளம் உருக இசைப்பதில் வல்லவர்.

பாணர் தம்மைத் தரிசிக்க வருகிறார் என்று அறிந்ததும் சம்பந்தர் புறப்பட்டுச் சென்று அவரை வரவேற்றார். சம்பந்தரின் திருவடிகளைப் பணிந்து பாணர் பிறவிப்பயன் கிடைக்கப் பெற்றதாக மகிழ்ந்தார்.

சம்பந்தர் அவரை ஆலயத்துக்கு அழைத்துச் சென்று தரிசனம் செய்வித்து, "பாணரே, உம்முடைய இறைவரை யாழிசையால் பாடும்!" என்றார்.

பாணரும் தம் யாழில் எம்பெருமானுடைய அற்புதத் திருக்கோலத்தை இசைத்தார். சம்பந்தர் உள்ளம் யாழிசையால் நிறைந்தது. இசையோடு கலந்து வெகு நேரம் தம்மை மறந்து நின்றார்.

பின்னர் பாணரைத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்று திருவமுது செய்வித்து மகிழ்வித்தார். சம்பந்தர் பாடிய திருப்பதிகங்களைக் கேட்டு ஆனந்தித்த பாணர் அவற்றைத் தம் யாழிலே இசைத்துக் காட்டினார். கூடியிருந்தோர் அதிசயித்துப் பாணரைப் போற்றிக் கொண்டாடினர்.

பாணர் சம்பந்தருடைய பாதங்களில் பணிந்து, "ஞானப்பாலுண்ட பெருமானே! இந்த ஏழையின் வேண்டுகோளைத் தாங்கள் நிறைவேற்றுமாறு பிரார்த்திக்கிறேன். என்றும் தங்களை விட்டுப் பிரியாது உடனிருந்து தங்கள் திருப்பதிகங்களை யாழில் இசைத்து வர அனுக்கிரகிக்க வேண்டும்" என்று வேண்டினார்.

பாணருடைய விருப்பத்தைக் கேட்டதும் சம்பந்தர் உள்ளம் மகிழ்ந்தவராய் அவர் விருப்பப்படியே தம்முடன் இருந்துவர அனுமதித்தார்.

47. அருள் பெற்ற அரன் மகனார்

தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும் பினாகபாணியைத் தரிசிக்க ஆவல் எழுந்தது. தந்தையிடம் சொல்லிப் புறப்பட்டார். கொள்ளிடத்தைக் கடந்து தில்லையை நெருங்கினார்கள். அந்தணப் பெருமக்கள் செய்யும் யாக குண்டங்களிலிருந்து எழும்பிய புகைச் சூழலின் நடுவே வானுற ஓங்கியுயர்ந்த

கோபுரங்களைக் கண்டபோது சம்பந்தரின் திருமேனி சிலிர்த்தது. தந்தையின் தோளிலிருந்து கீழிறங்கி பூமியில் விழுந்து வணங்கி பக்திப் பரவசரானுர். பின்னர் அவர்கள் மேலே நடந்து நகரின் தென்புற வாயிலை அடைந்தனர்.

ஞானப்பாலுண்ட பெருமானுர் நகருக்கு வருகை புரிகிருர் என்று கேள்விப்பட்டதும் தில்லை மூவாயிரத்தாரும் வாயிலில் திரண்டு அவரை வேத கோஷங்களால் வரவேற்று அழைத்துச் சென்றனர். ஆலயத்தினுள் நுழைந்து பொன்னம்பலவாணனை நெஞ்சத்திலிருந்து பக்தி வெள்ளம் பெருகிக் கண்களால் வழிந்தோடக் கும்பிட்டுக் களித்தார். **'கற்ருங்கெரியோம்பி'** என்ற திருப்பதிகம் பாடி எம்பிரானை இறைஞ்சித் தொழுதார். பிறகு பிராகாரத்தை வலம் வந்து வெளிப்பட்டு இறைவனுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்ற அந்தணர்கள் வாழும் நான்கு வீதிகளையும் தொழுதார்.

எம்பெருமான் திருநடனம் புரியும் அந்நகரில் தங்கியிருக்க அவர் உள்ளம் அஞ்சியது. ஆகவே நகரை விட்டு வெளிப்பட்டுத் திருவேட்களம் சென்று பாசுபதேசுவரரைத் தரிசித்துப் பதிகம் பாடி அவ்வூரிலேயே தங்கினுர். தினமும் தில்லை சென்று எம்பெருமானைத் தரிசித்துத் திருவேட்களம் திரும்பி விடுவார். இடையில் ஒரு நாள் திருக்கழிப்பாலை சென்று பால் வண்ணநாதரையும் தரிசனம் செய்தார்.

ஒரு நாள் சம்பந்தர் நடராஜரைத் தரிசனம் செய்ய தில்லைக்கு வந்தபோது அரியதொரு காட்சியைக் கண்டார். தில்லைமூவாயிரம்பேரும் சிவகணங்களாக அவருக்குத் தோற்றம் அளித்தனர். மேனி சிலிர்க்க சம்பந்தர் தம்முடன் வந்த பெரும்பாணருக்கும் அவ்வரிய காட்சியைக் காட்டி அருளினுர். பாணர் அடைந்த மகிழ்ச்சி விவரிக்க இயலாது. அப்பெருமக்களைப் பணிந்துப் பரவசமாகி நின்ருர். அன்றைய தினம் எம்பெருமானைத் தரிசித்துப் பதிகம் பாடியபோது சம்பந்தர் தில்லைமூவாயிரத்தாருடைய பெருமையையும் போற்றிப் பாடினுர்.

தரிசனத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டபோது நீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தருடைய பாதங்களில் பணிந்து எழுந்தார்.

''பெருமானே, அடியேன் பிறந்த ஊரான எருக்கத்தம்புலியூருக்கும் தாங்கள் எழுந்தருளி எம்பிரானைப் பாடவேண்டும். மேலும் நிவா நதிக்கரையோரமாக உள்ள திருப்பதிகளுக்கும்

தங்களை அழைத்துச் சென்று எம்பெருமானைத் தரிசிக்கவேண்டும் என ஆசை எழுகிறது'' என்று வேண்டினுர்.

சம்பந்தர் ஆனந்தக் களிப்பிலே மூழ்கியவராய் பாணருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யப் புறப்பட்டார்.

திருவேட்களத்தை விட்டுப் புறப்பட்ட சம்பந்தர் நீலகண்ட யாழ்ப்பாணருடன் எருக்கத்தம்புலியூரை1ச் சென்று அடைந்தார். பாணர் சம்பந்தரைத் தாம் பிறந்த பதியினுள் அழைத்துச் சென்று நன்கு உபசரித்தார். சம்பந்தர் ஆலயத்தை வலம் வந்து உட்புகுந்து இறைவனைத் தரிசித்து பாணர் மனம் மகிழப் பதிகம் பாடித் துதித்தார் பாணர். அப்பதிகத்தைத் தம் யாழிலே இசைத்து மனம் களித்தார்.

பின்னர் அவர்கள் திருமுதுகுன்றம் சென்று பழமலைநாதரைப் பணிந்து போற்றிப் பெண்ணுகடம் அடைந்து திருத்தூங்கானை மாடத்துச் சுடர்க்கொழுந்து நாதரை வழிபட்டுத் திருநெல்வாயிலரத்துறை2யுள் உறையும் அரத்துறை நாதரைக் காண பெரும் அவாக் கொண்டு பிரயாணப் பட்டனர்.

அதுவரை தந்தையின் தோளிலே பிரயாணப்பட்டு வந்த சம்பந்தர் இனியும் அவருக்குச் சுமை தர விரும்பவில்லை. தந்தையாரின் தோளிலிருந்து இறங்கி நடந்து செல்லலாஞர். அவரது மெல்லிய பாதங்கள் நடக்க நடக்கச் சிவந்தன. களைப்பு மேலிட்டது. மாறன்பாடி என்னும் ஊரை அவர்கள் நெருங்கியபோது மாலை போய் இரவு வந்தது. சோர்வு நீங்க இரவு அங்கே தங்கி காலையில் புறப்பட எண்ணியவராய் சம்பந்தர் தம்மோடு வந்தவர்களுடன் அவ்வூரிலே தங்கினுர். அவ்வூரிலிருந்த அடியார்கள் எதிர்பாராது கிடைத்த அவ்வரிய சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். சம்பந்தருக்கும் அவருடன் வந்த தொண்டர் கூட்டத்தாருக்கும் திருவமுது செய்வித்துத் தாங்களும் களித்திருந்தனர்.

அரத்துறை நாதர் தம் திருமகனுர் பாதம் தேய நடந்து வருவதை விரும்பவில்லை. முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், சின்னங்களும் தந்தருள விரும்பினுர். அன்றிரவு தம் ஊரில் உள்ள அந்தணர்களுடைய நித்திரையில் தோன்றி

---

1 விருத்தாசலத்துக்குத் தென்கிழக்கே ஒன்பது மைலில் உள்ளது.

2 பெண்ணுகடத்துக்கு மேற்கே மூன்று மைலில் நிவா நதிக்கரையில் உள்ளது.

"ஞானசம்பந்தன் நம்மைத் தேடி வந்து கொண்டிருக்கிறுன். வழி நடந்து வருவதால் அவன் சிறு பாதங்கள் தேய்கின்றன. முத்துச் சிவிகையும், குடையும் மற்ற சின்னங்களும் அவனுக் களிக்க நாம் விரும்புகிரேம். மாறன்பாடிக்கு எடுத்துச் சென்று நாம் அளித்ததாகக் கூறி அழைத்து வாருங்கள்'' என்று கூறி மறைந்தார்.

விடிந்ததும் ஊரிலுள்ள அந்தணர்கள் ஆலயத்துக்கு ஓடி வந்தனர். இரவிலே தங்கள் நித்திரையில் எம்பெருமான் தோன்றி அருளியதை ஒருவருக்கொருவர் தெரிவித்து, கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர். அங்கே இறைவன் சந்நிதானத்தின் முன்பாக முத்துச் சிவிகை, முத்துக் குடை மற்றும் சின்னங்கள் இருக்கக் கண்டனர். அரத்துறையார் அருளியபடி சிவிகையையும் மற்ற பொருள்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டனர் அவர்கள்.

பொழுது புலர்ந்தது. சம்பந்தர் புறப்பட ஆயத்தமானுர். அந்த நேரத்தில் அரத்துறையிலிருந்து அந்தணர்கள் மங்கல முழக்கத்தோடு சம்பந்தர் இருக்குமிடம் வந்து சேர்ந்தனர். தாங்கள் தாங்கி வந்த முத்துச்சிவிகை முதலான பொருள்களை அவர் முன்பு சமர்ப்பித்து இறைவனுடைய திரு அருளைத் தெரிவித்தனர். கால் தேயச் செல்வன் நடந்து வருகிறுனே என ஈசன் முத்துச்சிவிகை அனுப்பிய கருணையை எண்ணி எண்ணி வியந்தார் சிவபாதவிருதயர்.

சம்பந்தர் பெருமான் இறைவனுல் அளிக்கப்பட்ட சிவிகையை வலம் வந்து வணங்கி அதில் ஏறினுர். அடியார்கள் சிவிகையைத் தாங்கினர். ஒருவர் வெய்யல் உள்ளே தெரியாதவாறு முத்துக் குடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டார். சின்னங்களைத் தாங்கி முன்னுல் சிலர் செல்ல சம்பந்தர் நெல்வாயிலரத்துறைக்குப் புறப்பட்டார். அரத்துறையப்பரைத் தரிசித்து தம்மீது கருணை கொண்டு சிவிகை அருளியதைப் போற்றிப் பாடினுர். முத்தமிழ் விரகர் வந்தார் என ஊர்மக்கள் அவரைத் தொழுது குதூகலித்தனர்.

தம்மை ஒரு பொருட்டாக எண்ணி சிவிகை தந்தருளிய பெருமானைக் கண் குளிரத் தரிசிக்க விரும்பி அவ்வூரிலேயே சில நாட்கள் தங்கினுர் சம்பந்தர். இடையில் ஒருநாள் திருவெண்ணெய் நல்லூர் சென்று தொழுது வந்தார்.

சிலநாட்கள் கடந்தன. சம்பந்தருக்குத் தோணியப்பரைத் தரிசிக்க விருப்பம் தோன்றியது. ஞானப்பால் கொடுத்த பெற்

ஞேர் அல்லவா! அரத்துறை நாதரை வணங்கி அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

இறைவன் அருளிய சிவிகையில் சிவம் பெருக்கும் சீலர், முத்தமிழ் விரகர், ஞானசம்பந்தர் வருகிருர் என்ற செய்தி கேட்டு வழியெங்கும் ஊர்களில் மக்கள் கூடி நின்று பூர்ண கும்பம் அளித்து அவரை வரவேற்றனர். சிவிகையில் அமர்ந் திருக்கும் ஞானப் பிள்ளேயைக் கண்டு புளகாங்கிதம் அடைந் தவர்களாய் சிவிகையை வலம் வந்து அவரை நமஸ்கரித்தனர். சம்பந்தர் பெருமானும் அவர்களுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு அவ்வூர் ஆலயங்களுக்குச் சென்று எம்பெருமானைத் தரிசித்து வந்தார்.

கஜாசுரனே சம்கரித்த தலமாகிய திருப்பழுவூர்1 சென்று அங்கிருந்து கொள்ளிடக் கரையை அடைந்தவர் அர்ச்சுனன் பூசித்து அருள்பெற்ற திருவிஜயமங்கை2, வேடனுக்குச் சிவ ராத்திரியில் முக்தியளித்த வில்வவனம் எனப்படும் திரு வைகாவூர்3, வணிகப் பெண்ணுக்கு இறைவன் சாட்சி அளித்த திருப்புறம்பயம்3 ஆகிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருசேய்ஞ்ஞலூர் வந்து சேர்ந்தார்.

சிவாபராதம் செய்த காரணத்தால் தந்தை என்றும் பாராது தண்டித்து சண்டேசுவரர் பதவிஅடைந்த விசாரசர்மன் வழிபட்ட இறைவனைக் கண்டு ஆனந்தித்து செந்தமிழ்ப் பதி கம் பாடித் தொழுதார். பின்னர் திருப்பனந்தாள், பந்தணை நல்லூர்4, பிரணவ வியாக்ரபுரமாகிய திருஓமாம் புலியூர்5, திருவாழ் கொளிபுத்தூர்6 ஆகிய ஊர்களைத் தரிசித்துக் கொண்டு மேலக்கடம்பூர் எனப்படும் கடப்பூர் வந்து அடைந் தார். பிறகு திருநாரையூர், மேலக்காழி எனப்படும் திருக் கருப்பறியலூர் ஆகிய பதிகளிலும் வழிபட்டுப் பதிகங்கள் பாடி மகிழ்ந்தவராய் சீர்காழியை அடைந்தார்.

ஆளுடைய பிள்ளேயார் திருப்பதிகள் தோறும் சென்று வழிபட்டுத் திரும்புகிருர் எனக் கேள்விப்பட்டதும் காழி மறை

---

1 கள்ளகம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கிழக்கே நான்கு மைலில் உள்ளது.

2 குடந்தைக்கு வடமேற்கே ஆறு மைலில் உள்ளது. 3 குற்ருலத்துக்கு வடக்கே ஆறுமைல். 4 இவ்விரு தலங்களும் குடந்தைக்கு வட மேற்கே ஐந்தரை மைலில் உள்ளன 5 சிதம் பரத்துக்குத் தென் மேற்கே கொள்ளிடக்கரையில் பத்து மைல். 6 சிதம்பரத்துக்குத் தென்மேற்கே 16மைலில் உள்ள வாளொளி புத்தூர்.

யோர்கள் வீதிகள் தோறும் கமுகு வாழை முதலானவற்றை கட்டிப் பந்தல்கள் போட்டு நகரைத் திருவிழாக் கோலம் கொள்ளச் செய்தனர். பிள்ளையார் வருவதற்கு வெகுநேரம் முன்னதாகவே அவர்கள் எல்லையில் கூடிக் காத்திருந்தனர். தூரத்தே சிவிகை தெரிந்ததும் அனைவரும் சிரமேற் கைகூப்பி பஞ்சாக்ஷரம் ஜபித்தவராய் கடல் அலைபோல எழுந்து சென்று அவரை வலம் வந்து வணங்கி அழைத்துச் சென்றனர். ஒவ்வொரு வீட்டின் முகப்பிலும் பெண்டிர் திருவிளக்குடன் ஆலத்தி சுற்றிக் கொட்டினர்.

சம்பந்தர் பெருமான் அவர்களுடைய அன்பிலே திக்குமுக்காடியவராய் ஆலயம் சென்று இறைவனைத் தொழுது வழிபட்டுத் தம் திருமாளிகை சென்றார்.

இவ்வாறு இருந்து வரும் போது சிவபாதவிருதயருக்குத் தம் திருமகனுக்கு உபநயனம் செய்து வைக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அந்தணர்களை அழைத்துச் சுப முகூர்த்தம் குறிக்கச் செய்தார்.

விதிப்படி பிரம்மோபதேசம் செய்யப்பட்ட சம்பந்தர் பெருமானுக்கு வேத விற்பன்னர்கள் நான்கு வேதங்களையும் உபதேசிக்கத் தொடங்கியபோது, ஞானமுண்ட பெருமகனார் அவர்களுக்கும் எட்டாத வேதசாரங்களை எடுத்துக் கூறினார். சிவ ஞானத்தையே முலைப்பாலுடன் கலந்து தேவியால் புகட்டப்பட்ட அப்பெருமானுக்குத் தாங்கள் கற்றுக் கொடுக்க வேண்டியது ஏதுமில்லை யென அவர்கள் அவரைப் பணிந்து எழுந்து தங்களுக்கு உபதேசம் செய்யுமாறு வேண்டினர். சகல மந்திரங்களுக்கும் மேலானது பஞ்சாக்ஷரம் என்பதை எடுத்துக் கூறி **'துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினு'** என்னும் திருப்பதிகம் அருளினார். அதைக் கேட்ட அவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டு அவரைத் தொழுதனர்.

இவ்வாறு இருந்து வரும் நாளையில் தில்லை வந்த நாவுக்கரசர் தம்மைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தம்மைத் தரிசிக்கும் ஆவலோடு புறப்பட்டு வருகிறார் என்பதை அறிந்த சம்பந்தர் அவரை வரவேற்க எல்லையில் சென்று காத்திருந்து அவரைப் பணிந்து வரவேற்றார். அவரை ஆலயத்துக்கு அழைத்துச் சென்று தரிசனம் செய்துவைத்து தம் மாளிகையில் சில தினங்கள் தங்கச் செய்தார்.

காவிரியின் கரையிலுள்ள திருப்பதிகளுக்குச் சென்று இறைவனை வழிபட வேண்டுமென நாவுக்கரசர் புறப்பட்ட

போது அவருடன் திருக்கோலக்கா வரை சென்று வழியனுப்பித் திரும்பினர்.

48. முயலகன் நோயை ஒழித்த முத்தமிழ் விரகர்

திருப்புகலிப் பிள்ளையாரான ஞானசம்பந்தர் காவிரியின் இரு கரைகளிலுமுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துத் திரும்ப எண்ணம் கொண்டார். தம் விருப்பத்தைத் தந்தையார் சிவ பாதவிருதயரிடம் தெரிவித்து, புறப்பட்டுச் செல்ல அனுமதி கேட்டபோது அவரும் பிள்ளையாருடன் கிளம்பி விட்டார். திரு மகனை விட்டுப் பிரிந்திருக்க அவரால் முடியாது. ஆகவே சம்பந்தர் புறப்பட்டதும் தாமும் க்ஷேத்ராடனம் கிளம்பினர்.

தோணியப்பரை வழிபட்டுச் சீர்காழியிலிருந்து புறப்பட்ட ஞானசம்பந்தர் தெற்கு நோக்கிப் பிரயாணப்பட்டுத் திருக் கண்ணார் கோயிலை1 அடைந்தார். அடியவர்கள் முத்துச் சின்னங்களைத் தாங்கி, 'ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளு கிருர்; முத்தமிழ் விரகர் வருகிருர்; சிரபுரத் தாண்டகர் வரு கிருர்' என்று திருப்பெயர் சாற்றி முன் செல்ல சிவிகையிலே சென்ருர் சம்பந்தர்.

அகலிகையிடம் அத்துமீறி நடந்து கொண்டதற்காக உட லெங்கும் அருவருக்கத் தக்க தோற்றத்தை அடைந்துவிட்ட இந்திரன் எம்பெருமானைப் பூசித்து ஆயிரம் கண்கள் பெற்ற தலம் அது. இந்திரனுக்கு அருளிய இறைவன் கண்ணாயிரே சுவரர் என்று விளங்குகிருர்.

திருக்கோயில் சென்று இறைவனை வழிபட்டுப் புறப்பட்ட ஞானசம்பந்தர் புள்ளிருக்கும் வேளூர்2 சென்று வைத்திய நாதரைத் தரிசித்துப் பதிகம் பாடி மகிழ்ந்தார். பின்னர் திரு நின்றியூர் நிமலனரைப் பணிந்து போற்றிப் புறப்பட்டு நீடூர் வணங்கி திருப்புன்கூர் நண்ணினர். அங்கிருந்து மண்ணிப் படிக்கரை3 சென்று தொழுது திருக்குறுக்கை அடைந்து வீரட்

---

1 வைத்தீச்வரன் கோயிலுக்குத் தென் கிழக்கே மூன்றரை மைலில் உள்ள இத்தலம் குறுமணக்குடி என்று அழைக்கப்படு கிறது.

2 வைதீச்வரன் கோயில்.

3 சிதம்பரத்துக்குத் தென்மேற்கே பதினைந்து மைல்.

டானேசுவரரைக் கண்ணாரக் கண்டு களித்து திரு அன்னியூர்1 சென்று போற்றிப் பின் பந்தணநல்லூர் சேர்ந்தார்.

அவ்வூரில் வழிபாட்டை முடித்துக் கொண்டு மேலும் பிர யாணப்பட்ட சம்பந்தர் அடியார்களுடன் திருமணஞ்சேரி, திரு எதிர்கொள்பாடி ஆகிய ஊர்களைத் தரிசித்து திருவேள்விக்குடி அடைந்து எம்பெருமானுடைய மணவாள கோலத்தைக் கண்டு ஆனந்தித்து திருத்துருத்தி போய் சொன்னவாறு அறி வாரைத் தொழுது அடுத்துத் திருக்கோடிக் காவலை அடைந் தார்.

திருக்கோடிக்காவில் இறைவன் மூன்று கோடி முனிவர் களுக்குப் பிரத்தியட்சமாகி அருள் புரிந்தார். அவர்களால் வழிப்பட்டு திரிகோடீசுவரர் என விளங்கப்பெற்ற இறைவனை தொழுது சம்பந்தர் அவ்வூருக்குத் தெற்கே உள்ள கஞ்சனூர் சென்று தரிசனம் செய்து மாந்துறை 2 சேர்ந்தார். பின்னர் பக்கத்திலே உள்ள திருமங்கலக்குடி, மற்றும் திருவியலூர் 3 திருந்துதேவன்குடி, திருஇன்னம்பர் 4 ஆகிய ஊர்களில் எம் பெருமானைத் தரிசித்துப் பாடி மகிழ்ந்து வடகுரங்காடுதுறை 5 அடைந்தார்.

வானரவேந்தன் வாலி பூசித்து அருள் பெற்ற எம்பெரு மானை ஞானசம்பந்தரும் வழிபட்டுப் பதிகம் பாடி மகிழ்ந்தார். பின் அங்கிருந்து திருப்பழனம் சேர்ந்து இறைவனைத் தரிசித் துக் கொண்டு திருவையாறு சேர்ந்தார்.

நந்திக்குத் திருவருள் செய்த ஈசனை மனம் குளிரக் கண்டு மகிழ்ந்து 'கோடல் கோங்கங்குளிர் கூவிள' என்னும் திருப் பதிகம் பாடிப் போற்றினார்.

திருவையாறிலிருந்து புறப்பட்ட சம்பந்தர் பெரும்புலியூர் 6 திருநெய்த்தானம், திருமழபாடி சென்று கொள்ளிடக்கரையோர

---

1 நீடூருக்குத் தென்மேற்கே மூன்று மைலில் பொன்னூர் என்ற பெயரில் உள்ள தலம்.

2 ஆடுதுறைக்கு வடகிழக்கில் மூன்று மைல்.

3 திருவிசலூர் என்று பெயர்கொண்ட இவ்வூர் திருவிடைமரு தூருக்கு வடமேற்கே நான்கு மைலில் உள்ளது. திருந்துதேவன் குடி மேலும் ஒரு மைல்.

4 குடந்தைக்கு வடமேற்கே நாலரை மைல்.

5 ஐயம்பேட்டைக்கு வடக்கே மூன்று மைல்.

6 திருவையாறுக்கு வடமேற்கே ஒன்றரை மைலில். உள்ளது

மாக, திருக்கானூர் 1, அன்பில்ஆலந் துறை 2, வடமாந்துறை 2, ஆகிய ஊர்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பாச்சிலாச்சிரமம்3 போய்ச் சேர்ந்தார்.

அவ்வூரிலே கொல்லிமழவன் என்னும் அரசன் இருந்தான். அவன் புத்திரி முயலகன் என்ற கொடுமையான நோயால் பீடிக்கப்பட்டிருந்தாள். அரசன் எத்தனையோ வைத்தியர்களை அழைத்து வந்து தன் புத்திரியைக் குணமாக்க முயன்றான். வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்த வைத்தியங்கள் அனைத்தும் செய்து பார்த்துவிட்டனர். நோய் குணமாகவில்லை.

வைத்தியர்கள் கைவிட்டு விட்டனர். இனி ஆண்டவன் தான் கருணை காட்ட வேண்டுமென அவர்கள் ஒதுங்கிவிட்டனர். வலிப்பு நோயால் தன் நினைவின்றி இழுத்துக்கொண்டு கிடக்கும் மகளைப் பார்த்தான் மழவன். அவனால் துயரம் தாங்க முடியவில்லை. பெண்ணை இரு கைகளிலும் வாரி எடுத்துக் கொண்டு ஆலயத்துக்கு ஓடினான். இறைவனுடைய சந்நிதானத்தில் அவளைக் கிடத்தினான்.

"பெருமானே, இனி நீதான் துணை! வைத்தியத்தால் தீரக் கூடியதாக இந்நோய் தென்படவில்லை. உன் பொறுப்பிலே ஒப்படைத்து விட்டேன்" என்று கண்ணீர் விட்டுக் கதறினான்.

அந்த நேரத்தில் ஞானசம்பந்தர் மேலை நாட்டுக்குச் செல்லும் வழியில் அவ்வூருக்கு எழுந்தருளுகிறார் என்ற செய்தி அரசனுக்கு எட்டியது. பெண்ணைக் கோவிலிலேயே விட்டு விட்டு அரண்மனை திரும்பிய அரசன் ஆளுடைய பிள்ளையாரை வரவேற்க ஏற்பாடுகளில் முனைந்தான். நகரத்தின் முக்கிய வீதிகள் அலங்கரிக்கப்பட்டன. அழகிய பந்தல்களும் வளைவுகளும் பிரதான சந்திப்புகளில் நிறுவப்பட்டன. அந்தணர்கள் வேதங்களை ஓதிவர அரசன் பூர்ண கும்பத்தோடு எதிர் கொண்டு சென்று சம்பந்தரை வரவேற்றான். சிவிகையை வலம் வந்து வணங்கி ஊருக்குள் எழுந்தருள அழைத்தான்.

வீதிகள் வழியே சம்பந்தர் செல்லும்போது மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றனர். மங்கல வாத்தியங்கள் முழங்

---

1 பூதலூருக்கு வடக்கே ஏழரை மைலில் கொள்ளிடக் கரையில் உள்ளது.

2 லால்குடிக்குக் கிழக்கே ஐந்து மைலில் அன்பில் ஆலந்துறையும், வடமேற்கே ஆறு மைலில் வடமாந்துறையும் உள்ளன.

3 திருச்சிக்கு மேற்கே நான்கு மைலில் உள்ள இவ்வூர் திருவாசி என்று அழைக்கப்படுகிறது.

கின. அங்கங்கே மக்கள் சிவிகையை நிறுத்தி சம்பந்தரை வணங்கினர்.

அரசனுடன் ஆலயத்துள் நுழைந்த சம்பந்தர் எம்பெருமான் சந்நிதானத்தை அடைந்தார். அங்கே தன் நினைவே இன்றி வலிப்பு நோய் பீடிக்கப்பட்டுக் கிடக்கும் இளம்பெண்ணைப் பார்த்ததும் சம்பந்தர் திடுக்கிட்டார்.

''இது என்ன?...'' என்று அரசனைப் பார்த்துக் கேட்டார்.

''சுவாமி, என் குமாரி இவள். இக்கொடிய நோயால் அவதியுறும் இவளுக்கு நான் பார்க்காத வைத்தியம் இல்லை. எதற்கும் நோய் கட்டுப்படவில்லை. இறைவன் விட்ட வழி ஆகட்டும் என்று இங்கே கொண்டு வந்து விட்டுவிட்டேன்'' என்று துயரம் நெஞ்சை அடைக்கக் கூறினான் அரசன்.

சம்பந்தரின் உள்ளம் அக்கொடுமையை எண்ணி வருந்தியது. எம்பெருமானைத் தியானித்து, 'இப்பெண்கொடி வாடுவதை நீ பார்த்துக் கொண்டிருக்கிறுயே. நீயே கதி என உன்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்த பின்னும் நீ வாளாதிருக்கக் காரணம் என்ன?' என்று வேண்டியவராய் பிணி தீர்க்கும் பதிகம் ஒன்று பாடினார். சம்பந்தர் பாடி முடித்ததும் மழவன் மகளைப் பிடித்திருந்த நோய் அவளை விட்டு நீங்கியது. அப்பெண் தூக்கத்திலிருந்து விழிப்புற்று எழுவது போல எழுந்து தந்தையின் அருகில் வந்து நின்றாள்.

மழவன் அடைந்த குதூகலம் அளவிட முடியாததாகும். பெண்ணைத் தழுவி அணைத்துக் கொண்டு பரவசமானான். சம்பந்தருடைய பாதங்களில் விழுந்து கண்ணீரால் கழுவினான்.

''சுவாமி, என் மகள் இந்த நிலையில் எழுந்திருக்க முடியும் என நான் எதிர்பார்க்கவே இல்லை. இறைவன் தங்களிடம் கொண்டுள்ள பாசத்தினால்தான் இவள் பிழைத்தாள்!'' என்று அவரைப் புகழ்ந்தான்.

அரசனிடம் விடைபெற்றுப் புறப்பட்ட சம்பந்தர் அங்கிருந்து திருப்பைஞ்ஞீலி சென்று தரிசனம் செய்து கொண்டு திரு ஈங்கோய்மலை1 போய்ச் சேர்ந்தார்.

அவ்வூரிலே எம்பெருமானைப் பதிகம் பாடி வழிபட்டுப் புறப்பட்ட சம்பந்தர் காவிரியின் தென் கரையாகச் சென்று கொடிமாடச் செங்குன்றூர்2 அடைந்தார்.

---

1 குளித்தலைக்கு வடமேற்கே ஐந்து மைலில் காவிரிக்கரையில் உள்ளது. 2 திருச்செங்கோடு.

சம்பந்தர் பெருமான் வருகை குறித்து அறிந்ததும் ஊரார் திரண்டு வந்து அவரை வரவேற்று உபசரித்தனர். அவ்வூரில் தங்கி எம்பெருமானை வழிபட்டு வரும்போது நடுவில் திருநணா1 சென்று சங்கமுகநாதேசுவரரைத் தரிசித்துத் திரும்பினார்.

சம்பந்தர் செங்குன்றூரில் இருந்து வரும்போது மழைக் காலம் போய் பனிக்காலம் வந்தது. பனி அதிகம் பெய்தது. எங்கும் குளிர் தாங்கவில்லை. சம்பந்தர் பெருமானுடன் வந் திருந்த அடியார்கள் நளிர் சுரம் கண்டு மிகவும் வருந்தினார்கள். ஞானசம்பந்தரிடம் அது பற்றித் தெரிவிக்கவே, அவரும் எம் பெருமானைத் தியானித்து தம்முடன் வந்திருக்கும் அடியார்களை வருத்தி வரும் சுரம் நீங்குமாறு அருளும்படி 'அவ்வினைக் கிவ்வினை' என்னும் பதிகம் பாடினார். அடியார்களை வருத்தி வந்த நளிர் சுரம் நீங்கி விட்டது. அது மட்டுமல்ல; அந்தப் பகுதியிலிருந்தே அந்நோய் ஒழிந்து விட்டது.

செங்குன்றூர் விட்டுப் புறப்பட்ட செல்வப் பிள்ளையார் கிழக்கு நோக்கிப் பயணமாகி திருப்பாண்டிக் கொடுமுடி, திரு வெஞ்சமாக்கூடல் ஆகிய பதிகளில் தரிசனம் செய்து கொண்டு கருவூரை அடைந்தார். ஆநிலை ஆலயத்தில் எழுந்தருளியிருக் கும் பசுபதீச்வரரைக் கண்டு தொழுதார். பின்னர் அவ்வூரி லிருந்து பிரயாணப்பட்டு சம்பந்தர் மாணிக்கவெற்பு2 முதலான பதிகளை வழிபட்டு காவிரியின் தென் கரையை அடைந்து திருப் பராய்த்துறை போய்ச் சேர்ந்தார். மேலும் அவர் திருகற்குடி3, திருமுக்கீச்வரம்4 ஆகிய ஊர்களில் எம்பெருமானைப் பாடி மகிழ்ந்தவராய் திருச்சிராப்பள்ளி சேர்ந்தார்.

காவிரிக்கு அக்கரையில் தாய் இருக்கிறாள். பெண்ணோ நிறைமாதக் கர்ப்பிணி. இடுப்புவலி ஏற்பட்டு வேதனை தாளா மல் தவித்தாள். தாய்க்குச் சொல்லி அனுப்பியும் வரமுடியாத நிலை. காவிரியில் பெரு வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. ஓடக் காரர்கள் கூட ஓடம் விட அஞ்சும் வகையில் நீர் சுழியிட்டு ஓடியது. "பகவானே நீதான் துணை!" என்று நெஞ்சுருக வேண்டுகிறாள் தாய்.

இறைவன் தாயாக வந்து பிரசவ வேதனைப்படும் பெண் ணுக்கு அருகில் இருந்து சுகப்பிரசவம் ஏற்பட வழி செய்கிறார். குழந்தை பிறக்கவும் வெள்ளம் குறையவும் சரியாக இருக்

---

1 பவானி. 2 குளித்தலைக்குத் தெற்கே ஐந்து மைலில் உள்ள வாட்போக்கி ஆகும். 3 உய்யக்கொண்டான்மலை.
4 உறையூர்.

கிறது. பெண்ணுக்கு என்ன ஆயிற்றோ எனத் தாய் ஓடிவரு கிறாள். இறைவன் கூட இருந்து பிரசவம் பார்த்த விஷயம் அறிந்து அவர் கருணையைப் போற்றிப் பலவாறு புகழ்ந்தாள்.

தாயுமானவராக இறைவன் எழுந்தருளியிருக்கும் மலைமீது ஏறி சம்பந்தர் அவருடைய திவ்விய கோலத்தைக் கண்டு மகிழ்ந்து, பதிகம் பாடினார்.

திருச்சிராப்பள்ளியை விட்டுப் புகலிப்பிள்ளையார் வெண் ணாவல் மரத்தடியில் எழுந்தருளியுள்ள ஜம்புகேச்வரரைத் திரு வானைக்கா சென்று தரிசித்தார். தம்மை வழிபட்ட சிலந்திக் கும் யானைக்கும் அனுக்கிரகம் செய்த எம்பெருமானைக் கண்டு வழிபட்ட சம்பந்தர் அப்பதியில் சில நாட்கள் தங்கிப் புறப் பட்டார்.

திருத்தவத்துறை, திருப்பாற்றுறை1 திருஎறும்பியூர், திருநெடுங்களம்2 ஆகிய தலங்களில் வழிபாட்டை முடித்துக் கொண்டு குடமுருட்டியின் கரையிலிருக்கும் திருக்காட்டுப் பள்ளி சேர்ந்தார். பின்னர் அவர் மேலும் பயணம் மேற் கொண்டு, திரு ஆலம் பொழில்3, திருப்புந்துருத்தி கடந்து திருக்கண்டியூர் சேர்ந்து வீரட்டானேசுவரரைத் தொழுது புறப்பட்டு, திருச்சோற்றுத் துறையில் வழிபாட்டை முடித் துக் கொண்டு திருவேதிக்குடி4 அடைந்தார். வேதங்கள் வழி பட்ட எம்பெருமானை இறைஞ்சி ஏத்தி எழுந்து நின்று இன் னிசைப் பதிகம் பாடிப்புறப்பட்ட அவர் திருவெண்ணி,5 திருச் சக்கரப்பள்ளி, திருப்புள்ளமங்கை ஆலந்துறையார் ஆலயம், திருச்சேலூர், திருப்பாலைத்துறை ஆகிய ஊர்களுள் எழுந் தருளியிருக்கும் எம்பெருமானைத் தரிசித்துக்கொண்டு திரு நல்லூர் சேர்ந்தார். அவ்வூரில் சில நாட்கள் தங்கிப் புறப்

---

1 வாலாடிக்குத் தென் கிழக்கே இரண்டு மைலில் கொள் ளிடக் கரையில் உள்ளது.

2 பூதலூருக்கு அடுத்த சோளகம்பட்டிக்கு தென் கிழக்கே இரண்டரை மைலில் உள்ளது. 3 தஞ்சைக்கு வடமேற்கே எட்டு மைலில் காவிரிக்கரையில் உள்ளது.

4 தஞ்சைக்கு வடக்கே நாலரை மைலில் உள்ளது.

5 ஐயம் வேட்டைக்கு மேற்கே இரண்டு மைலில் உள்ள ஏ.ாழமங்கை ஆகும்.

பட்டு திருக்கருகாவூர், அவளிவ நல்லூர்1, திருப்பரிதிநியமம்2, திருப்பூவனூர்2, திருஆவூர் முதலிய பதிகள் சென்று தரிசனம் செய்துகொண்டு மீண்டும் நல்லூரை அடைந்தார்.

49. புகலிப் பிள்ளையார் பெற்ற பொற்கிழி

திருநல்லூரில் சில நாட்கள் தங்கிய சம்பந்தர் மேலும் காவிரியின் தென்கரையிலுள்ள திருப்பதிகளைத் தரிசனம் செய்ய எண்ணம் கொண்டு புறப்பட்டார்.

திருவலஞ்சுழி வந்து இறைவனைக் கண்டு ஆனந்தித்தவராய் பழையாறு நோக்கிப் பிரயாணப் பட்டார்.

அப்போது நல்ல கோடைக்காலம்; வெய்யல் உக்கிரமாய் காய்ந்தது. பழையாறை மேற்றளியை அடைந்து எம்பெருமானை வழிபட்டுத் திருச்சத்திமுற்றம் போய் சிவக்கொழுந்தீசரைத் தரிசித்தார். பின் அங்கிருந்து பக்கத்திலே இருக்கும் பட்டீச்வரரைத் தரிசிக்கப் புறப்பட்டார்.

வீதியில் வெய்யல் அனலாகத் தகித்தது. பாதங்கள் பொரிந்து விடுமோ என அஞ்சும் உஷ்ணம். பெருமானுடன் வந்த அடியார்கள் தவித்தனர்!

அடியார்கள் படும் துயரைத் தீர்க்க எண்ணினர் எம்பெருமான். சிவபூதம் ஒன்றை அழைத்து முத்துப் பந்தரை அளித்தார். "எம் அடியார்கள் வெய்யல் தாங்காது துவளுகின்றனர். இப்பந்தரை எடுத்துச் சென்று அவர்கள் மீது உஷ்ணம் படாதவாறு தாங்கு" என உத்தரவிட்டார்.

சிவாக்ஞையை ஏற்று பூதம் வானிலே தோன்றி முத்துப் பந்தரை அடியார்கள் மீது உஷ்ணம் படாதவாறு பிடித்தது

"பெருமானே! உஷ்ணம் தாக்காமலிருக்க பட்டீசர் இப் பந்தரை அளித்து என்னை விடுத்து அருள் புரிந்தார்" என்று வானிலிருந்து அஞ்சலி செய்து தெரிவித்தது சிவபூதம்.

இறைவன் கருணையை எண்ணி வியந்தவராய் அடியார்கள் பந்தரின் கால்களைப் பிடித்துத் தாங்கியவாறு நடந்தனர். சம்பந்தர் பட்டீசரைத் தொழுது வழிபட்டுத் தங்கள் பால்

---

1 அவளிவ நல்லூர் தஞ்சை நாகூர் பிரிவில் அம்மாப்பேட்டைக்கு வடக்கே நான்கு மைலில் உள்ளது.

2 திருப்பரிதிநியமம் சாலியமங்கலத்துக்குத் தென் மேற்கே எட்டுமைலிலும், திருப்பூவனூர் நீடாமங்கலம் மன்னார்குடி வழியில் ராயப்பன் சாவடியிலிருந்து வடக்கே ஒரு மைலில் பாமினி ஆற்றங் கரையிலும் உள்ளன.

அவர் கொண்டுள்ள கருணையை வியந்து நெஞ்சமுருகப் பாடினூர்.

பின்னர் பட்டீசுரத்திலிருந்து புறப்பட்டு பழையாறை வடதளி சென்று ஈசனைப் பணிந்து விடைபெற்றுத் திரு இரும்பூளை1 சேர்ந்தார். அவ்வூரிலே எழுந்தருளியுள்ள இறைவனை மனம் களிக்கப்பாடித் தொழுது புறப்பட்ட சம்பந்தர் திரு அரதைப் பெரும்பாழி2, திருச்சேறை, திருநாலூர், திருக்குடவாயில்3, திருநாறையூர், தென் திருப்பத்தூர்4 முதலான பதிகளில் உறையும் இறைவனைத் தரிசித்து சிவபுரம்5 வந்து சேர்ந்தார். மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்த போது இத்தலத்தில் இறைவனை வழிபட்டு அருள் பெற்றார். தோணிபுரத்து அந்தணனர் சிவபுரத்து நாதரைத் தொழுது உளம் மகிழ்ந்து குடமூக்கு6 நோக்கிப் புறப்பட்டார்.

சம்பந்தர் வருகிறார் என்ற செய்திகேட்டு அடியார்கள் ஒன்று கூடி அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். மங்கல ஒலிகளுடன் வேத கோஷங்களும் கலந்து எண் திசையும் கிடு கிடுக்க, சம்பந்தர் பெருமான் அடியார் திருக்கூட்டத்தோடு குடந்தை நகர் புகுந்தார்.

நேராகக் கீழ்க்கோட்டத்து7 எம்பெருமான் ஆலயம்சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் நாகேச்வரரைத் தரிசித்தார். காரோணம்8 சென்று விசுவநாதரை வழிபட்டார்.

பின்னர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு ஆதிசேஷனால் பூஜிக்கப்பட்ட எம்பெருமானைத் திருநாகேச்வரம் சென்று செந்தமிழ்ப்பதிகம் பாடிக் களித்துத் திருவிடை மருதூர் போய்ச்

---

1 நீடாமங்கலத்துக்கு வடக்கே நான்கு மைலில் உள்ள ஆலங்குடி ஆகும்.

2 கோயில் வெண்ணிக்கு வடக்கே ஐந்து மைலில் உள்ள அரித்வார மங்கலம் ஆகும்.

3 குடவாசல் 4 பேணு பெருந்துறை - திருநரையூருக்குப் பக்கத்தே உள்ளது.

5 குடந்தைக்குத் தென்கிழக்கே மூன்றரை மைலில் உள்ளது.

6 குடந்தை.

7 குடந்தை நாகேச்வர சுவாமி கோயில்.

8 மகாமகக் குளக்கரையில் உள்ள காசி விசுவநாதர் கோயில்.

சேர்ந்தார். மத்தியார்ச்சுனம் எனப்படும் அப்பதியில் ஆலய வாயிலில் பணிந்து தொழுது பின் உள் சென்று மகாலிங்கப் பெருமானை சேவித்து இன்பமுறப் பதிகம் பாடிப்புறப்பட்டு சுக்ரீவன் பூஜித்து அருள் பெற்ற குரங்காடுதுறை1 சென்று இறைவனைப் பணிந்து வழிபட்டுத் திருவாவடுதுறை போய்ச் சேர்ந்தார். அவ்வூரில் கோயில் கொண்டுள்ள செம்பொன் தியாகேசரைத் தொழுது இனிது இருந்து வந்தார்.

சம்பந்தர் பெருமான் சீர்காழி விட்டுப் புறப்படும் முன்னரே சிவபாத விருதயர் யாகம் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். செல்வமகனுர் சோழநாட்டுப் பதிகள் தோறும் தரிசனம் செய்ய விரும்பிப் புறப்பட்டபோது தாமும் க்ஷேத்திராடனம் செய்ய விருப்பம் கொண்டு அவரோடு கிளம்பிவிட்டார். திருவாவடுதுறையை அவர்கள் அடைந்த போது சிவபாதவிருதயர் தாம் செய்ய எண்ணிக் கொண்டிருந்த யாகத்துக்கான காலம் நெருங்கி வருவதைக் கண்டார். குமாரனிடம் சென்று தன் எண்ணத்தை அறிவித்தார்.

''ஊரை விட்டு நாம் புறப்பட்டு பல நாட்களாகி விட்டன. யாகம் செய்ய வேண்டும். அதற்கான நாளும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. கையிலோ பணம் இல்லை. இனி ஊருக்குப் போய் ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று தெரிவித்தார்.

தந்தையார் கூறியதைக் கேட்ட சம்பந்தர் விரைவிலேயே அது பற்றி முடிவு செய்யலாம் எனத் தெரிவித்து ஆலயத்துக்குச் சென்ருர். எம்பெருமானைத் தியானித்து தந்தையார் செய்யப் போகும் யாகத்துக்கு நிதி தந்தருளுமாறு வேண்டி 'இடரினுந்தளரினும்' என்ற பதிகம் பாடினுர்.

திருமகனுரின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார் ஈசன். சிவபூதம் ஒன்று யாருமறியாது ஆயிரம் பொன் கொண்ட கிழி ஒன்றை பலி பீடத்தில் வைத்து, ''ஈசன் கொடுத்த பொற்கிழி பலி பீடத்தில் இருக்கிறது. எடுத்துச் செல்லலாம்'' என்று கூறி மறைந்தது.

சம்பந்தர் ஆனந்தக் கண்ணீர் உகுத்தவராய் பொற்கிழியை எடுத்துச் சென்று தந்தையாரிடம் கொடுத்தார்.

''இதில் ஆயிரம் பொற்காசுகள் இருக்கின்றன, எடுத்துச் சென்று யாகத்தை இனிது முடியுங்கள்'' என்ருர்

---

1 தென் குரங்காடு துறை என்னும் இத்தலம் ஆடுதுறைக்கு வடக்கே அரை மைலில் காவிரி நதிக்கரையில் உள்ளது.

சிவபாதவிருதயரைத் தோணிபுரம் புறப்பட்டுச் செல்லுமாறு அருளிய சம்பந்தர் சிலநாட்கள் அவ்வூரில் தங்கி எம்பெருமானை வழிபட்டு மீண்டும் பிரயாணம் மேற்கொண்டார்.

திருக்கோழம்பம்1 சென்று கொன்றைவார் சடைமுடியாரை இறைஞ்சி வழிபட்டுத் திருவைகல்2, திருநல்லம்2, திருவழுந்தூர்3, ஆகிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு, காவிரிக் கரையை அடைந்து திருத்துருத்தி எழுந்தருளினர். பின் அங்கிருந்து மூவலூர்4 சேர்ந்து தரிசனம் முடித்துக் கொண்டு மயிலாடுதுறை சேர்ந்தார்.

மயிலாடுதுறையில் இறைவன் வழிபாட்டை முடித்துக் கொண்டு சம்பந்தர் செம்பொன்பள்ளி, விளநகர் ஆகிய தலங்களுக்குச் சென்று பின் தக்ஷன் சிரம் கொய்த வீரட்டானேசுவரர் எழுந்தருளியிருக்கும் திருப்பறியலூர்5 போய் எம்பெருமானைத் தரிசித்தார். மேலும் அங்கிருந்து புறப்பட்டுத் திருவேட்டகுடி6 சென்று பின்னர் தருமபுரம்7 அடைந்தார்.

தருமபுரம் திருநீலகண்ட பெரும்பாணருடைய தாயார் பிறந்த ஊராகும். பாணர் சம்பந்தரை ஊருக்குள் அழைத்துச் சென்று உபசரித்தார் உறவினர்களை அழைத்து அவர்களுக்கு சம்பந்தருடைய பெருமையைப் பலவாறு எடுத்துக் கூறினர். ஞானமுண்ட திருமகனுருடன் இருந்து அவர் பாடும் பதிகங்களை யாழில் வாசித்து மகிழும் பேறு பெற்றது பற்றி எடுத்துச் சொன்னர்.

அதைக் கேட்ட பாணரின் உறவினர்களும் பெருமகிழ்ச்சி கொண்டு சம்பந்தரைப் பணிந்து அவரைப் பலவாறு உபசரித்தனர். பாணர் யாழிலே சம்பந்தருடைய பதிகங்களை இசைத்துப் பாடுவதால் அகிலமெங்கும் இசை ஓங்கும் எனப் பாராட்டினர்.

---

1 நரசிங்கன்பேட்டைக்குத் தென் கிழக்கே இரண்டரை மைல்.

2 திருவைகல் ஆடுதுறைக்குத் தென்கிழக்கே நான்கு மைலிலும், கோனேர் ராஜபுரம் எனப்படும் திருநல்லம் ஒன்பது மைலிலும் உள்ளன.

3 தேரெழுந்தூர். 4 மாயவரம் சமீபம். 5 செம்பொனர் கோயிலுக்குத் தெற்கே ஒன்றரை மைல்.

6 காரைக்காலுக்கு வடகிழக்கே ஐந்து மைலில் சமுத்திர தீரத்தில் உள்ளது.

7 காரைக்காலுக்கு மேற்கே ஒன்றரை மைல்.

அவர்கள் பாராட்டைக் கேட்ட பாணர் உள்ளம் நடுங்கினர். இறைவன் திருவருளால் அன்றோ அவர் சம்பந்தர் பாடும் பதிகங்களை யாழில் இசைத்து வருகிறார். அவ்வாறிருக்க அவர் உறவினர்களோ பாணரின் வாசிப்பால் இசை ஓங்குகிறது என எண்ணம் கொண்டு விட்டார்களே என்று வருந்தினர்.

சம்பந்தருடைய பாதங்களில் பணிந்து எழுந்த பாணர், "ஐயனே, யாழில் வாசிக்க அடங்காது ஒரு பதிகம் பாடி அருள வேண்டும். அதை இவர்களுக்கு உணர்த்த வேண்டும்" என்று வேண்டினர்.

சம்பந்தரும் அவர் விருப்பப்படி "மாதர் மடப்பிடி" என்ற திருப்பதிகம் பாடினர். பாணர் தம் யாழிலே அப்பதிகத்தை இசைக்க முயன்றார். என்ன முயன்றும் யாழிசையில் அப்பதிகம் அடங்கவில்லை. பின்னர் பாணர் சம்பந்தர் பெருமானைப் பணிந்து "ஐயனே, தங்கள் திருவாக்கிலிருந்து வெளிப்படும் பதிகத்தை இசைக்க முடியாத இந்த யாழ் இனி எதற்குப் பிரயோசனம்?" என்று சொல்லியவாறு அதை உடைத்தெறிய முயன்றார். சம்பந்தர் அவர் முயற்சியைத் தடுத்து, "இறைவன் பெருமை அனைத்தும் இந்த யாழில் அடங்குமா? முடிந்த அளவு வாசித்தால் போதும்" என்று யாழைப் பிடுங்கினர்.

பாணரும் தாம் ஆத்திரவசப்பட்டு விட்டது குறித்து வருந்தி, சம்பந்தரிடமிருந்து யாழைப் பெற்று அப்பதிகத்தை முடிந்த அளவு வாசித்துக் காட்டினர்.

தருமபுரத்தை விட்டுப் புறப்பட்ட சம்பந்தர் திருநள்ளாறு சென்று "போகமார்த்த பூண்முலையாள்" என்ற பதிகம் பாடி இறைவனைத் தொழுது பின் சாத்தமங்கை எழுந்தருளினர். சம்பந்தர் பெருமானின் வருகை குறித்து அறிந்த நீலநக்கர் எதிர்கொண்டு சென்று அவரை வரவேற்றுத் தம் இல்லத்தில் திருவமுது செய்வித்தார். பின்னர் அங்கிருந்து பிரயாணப்பட்ட சம்பந்தர் திருநாகைக் காரோணத்தையும், திருக்கீழ்வேளூரையும் தரிசித்துக் கொண்டு புறப்பட்டார்.

திருப்புகலி அந்தணர் அந்தப் பகுதியில் வந்திருக்கிறார் என்பதைக் கேட்ட சிறுத்தொண்டர் அவரைத் தம் ஊரான திருசெங்காட்டங்குடிக்கு அழைத்து வந்து உபசரித்துத் திருவமுது செய்விக்க விரும்பினர். சம்பந்தர் பெருமானைக் கண்டு பணிந்து அவரிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்து, தம் ஊருக்கு எழுந்தருள வேண்டும் என வேண்டினர். சம்பந்தர் அடியாரின் விருப்பத்தைத் தட்டிக் கழிக்காது அவரோடு திரு

செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினர். அடியாருடன் கணபதீச்சரம் என்னும் அவ்வூர் ஆலயத்துக்குச் சென்று எம்பெருமானைத் தரிசித்து மகிழ்ந்தார். சிறுதொண்டருடைய உபசரிப்பிலே கட்டுண்ட பிள்ளையார் இறைவனை வழிபட்டு 'பைங்கோட்டு மலர் புன்னை' என்றும் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து அவ்வூரில் சில நாட்கள் தங்கினர்.

50. செட்டிப்பிள்ளையை உயிர்ப்பித்த செல்லப்பிள்ளை

திருசெங்காட்டங்குடியில் இருந்து வரும் நாளையில் சம்பந்தர் ஒரு சமயம் பக்கத்திலே ஒன்றரை மைலில் உள்ள திருமருகல் என்னும் ஸ்தலத்துக்குத் தரிசனம் செய்யச் சென்று தங்கினர்.

முதல் நாள் இரவு வழிப்போக்கனை வணிகன் ஒருவன் இளம் கன்னியுடன் அவ்வூரிலே இராப்பொழுதைக் கழிக்க எண்ணி கோயில் பக்கத்தே உள்ள மடம் ஒன்றில் தங்கினன். இரவு அவர்கள் தூங்கும்போது வணிகனை அரவம் தீண்டி விடவே விஷம் தலைக்கேறி அவன் மாண்டுவிட்டான். பொழுது புலர்ந்து அந்தப் பெண் எழுந்து பார்த்தபோதுதான் விஷயம் தெரிய வந்தது. அவள் வணிகன் உடல் மீது விழுந்து கதறினள்.

"என்னை விட்டு விட்டுப் போய்விட்டாயே. நான் என்ன செய்வேன்? உன்னைத் தீண்டிய அரவம் என்னைத் தீண்டாமல் சென்றது என்ன? உன்னைப் பிணமாகப் பார்த்த பின்பும் என் உயிர் பிரியாதிருக்கிறதே! பெற்ற தாயையும் தந்தையையும் உதறிவிட்டு எல்லாம் நீயே எனப் புறப்பட்டு வந்தேனே. என்னை விட்டுவிட்டு நீ மட்டும் எப்படிப் பிரிந்து சென்ருய்?" என்று கண்ணீரும் கம்பலையுமாய் கதறினள் அவள்.

எம்பெருமானைத் தரிசிக்க வந்த சம்பந்தர் ஆலய வாயிலுக்கு எதிரில் கண்ணீர் ஆருகப் பெருக, கதறித் துடிக்கும் அப்பெண்ணைக் கண்டார்.

"உன் துயரம் என்னம்மா? ஏன் இவ்வாறு கதறுகிருய்?" என்று அவளைக் கேட்டார்.

தரையிலே விழுந்து அவரை வணங்கி எழுந்திருந்தாள் அப்பெண்.

''சுவாமி, எனக்கு ஊர் வைப்பூர். என் தந்தை அவ்வூர் தலைவர். நாங்கள் ஏழுபேர் அவருக்குப் பிறந்தவர். அதோ மடத்துத் திண்ணையில் பிணமாகக் கிடப்பவர் அவருக்கு மாமன் மகனுவார். தம்முடைய மூத்த குமாரத்தியை இவருக்குக் கொடுப்பதாக நிச்சயித்தார். ஆனால் வேறு இடத்தில் நிறைய தனம் கிடைத்ததால் தாம் கூறிய வார்த்தையை அலட்சியப்படுத்தி மூத்த குமாரத்தியைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டார். இவர் கேட்டபோது இரண்டாவது பெண்ணை மணம் செய்து கொடுப்பதாகச் சொல்லிவிட்டார். அப்படியும் அவர் தம் வார்த்தையைக் காப்பாற்றவில்லை. ஆசை காட்டி ஏமாற்றுவது போல் தம் ஆறு பெண்களையும் வெளியிடத்தில் மணம் செய்து கொடுத்துவிட்டார். ஏழாவதாக மிஞ்சியது நான் ஒருத்தியே. என் தந்தையின் வார்த்தையை நம்பி இவர் ஒவ்வொரு முறையும் ஏமாறுவதைக் கண்ட நான் இவர் என் விஷயத்திலும் ஏமாறுவதை விரும்பவில்லை. ஆகவே என் பெற்றோர்களுக்குத் தெரியாமல் இவரோடு புறப்பட்டு வந்துவிட்டேன். நேற்று இவ்வூரை அடையும்போது அஸ்தமித்து விட்டது. இராப்பொழுதை இங்கே தங்கிக் காலையில் புறப்படலாம் என இம்மடத்திலே தங்கினோம். இரவு அரவம் தீண்டிவிட்டது போலும். விடிந்து பார்த்தால் பிணமாகக் கிடக்கிறார். எத்தனையோ நம்பிக்கையோடு புறப்பட்டு வந்த நான் நடுக்கடலிலே கவிழ்ந்த கப்பல் போலத் தத்தளிக்கிறேன். அவரோடு என்னையும் அழைத்துக் கொள்ளட்டும் என்று ஆண்டவனை வேண்டுகிறேன். இனி நான் மட்டும் உயிர் வாழ்ந்து என்ன பயன்?'' என்று தெரிவித்தாள்.

சம்பந்தரின் உள்ளம் வேதனை கொண்டது. பரிபூரண நம்பிக்கையோடு புறப்பட்டு வந்த அவள் கதி இப்படியாகிவிட்டதே என வருந்தினார். மருகல் மாணிக்கவண்ணேச்வரரைத் தியானித்து அவள் துயரைத் துடைக்குமாறு வேண்டி 'சடையாயெனுமால்' என்ற பதிகம் பாடினார். சம்பந்தர் பாடப் பாட செட்டியின் தலைக்கேறியிருந்த விஷம் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கியது. அவர் பாடி முடித்ததும் அவன் உடலிலே பரவியிருந்த விஷம் முற்றும் நீங்கப் பெற்று எழுந்து உட்கார்ந்தான். ஆலயவாயிலில் அடியார்கள் கூட்டம் நிற்பதையும் அவர்கள் முன்பு கண்ணீர் விட்டு அழுதபடி தன் காதலி நிற்பதையும் கண்ட அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. எழுந்து அவர்கள் இருக்குமிடம் வந்தான்.

காதலனைக் கண்ட அப்பெண் அடைந்த மகிழ்ச்சி அளவிட முடியாதது. ஓடி வந்து அவனைத் தழுவி ஆனந்தப் பரவச

மானுள். பின் அவனிடம் நடந்ததை அறிவித்து சம்பந்தர் பெருமானிடம் அழைத்து வந்து அவரை வணங்கச் செய்தாள்.

"சுவாமி, சுற்றத்தாரை வேண்டாமென்று உதறிவிட்டு வந்து பெரும் இக்கட்டான நிலையில் தவித்துக் கொண்டிருந்த என்னை உறவினருள் ஒருவராக வந்து காப்பாற்றியதாகத்தான் தங்களைக் காண்கிறேன்" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினுள்.

சம்பந்தர் அவர்கள் இருவரையும் எம்பெருமான் சந்நிதிக்கு அழைத்துச் சென்று தரிசனம் செய்வித்து கணவன் மனைவியாக்கி மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைத் துவக்குமாறு ஆசி கூறி அனுப்பி வைத்தார். பின்னர் இறைவனைத் தொழுது மகிழ்ந்தார்.

சம்பந்தர் திருமருகல் சென்று தரிசனத்தை முடித்துக் கொண்டு திரும்பி விடுவார் என சிறுத்தொண்டர் எதிர்பார்த்தார். அவர் மருகலிலே சில நாட்கள் தங்கிவிட்டதைக் கண்டதும் அவரை அழைத்துப் போகப் புறப்பட்டு வந்தார். சம்பந்தரை வணங்கி ஊருக்குப் புறப்படுமாறு அழைத்தார். சம்பந்தர் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு விடைபெற்றுப் புறப்பட்டார்.

திருசெங்காட்டங்குடி சேர்ந்ததும் சம்பந்தர் கணபதீச்வரம் சென்று அரவம் பூண்ட அரனுரைத் தரிசித்தார். மருகலில் காட்சி தந்த கோலத்திலேயே எம்பெருமான் அங்கும் அவருக்குத் தரிசனம் கொடுத்தார். சம்பந்தர் பெருமகிழ்ச்சி கொண்டு அவரைப் பணிந்து பதிகம் பாடிக் கொண்டாடினுர்.

சில நாட்கள் அவ்வூரிலேயே தங்கிய பின் சம்பந்தர் அடியார்களிடம் விடைபெற்றுத் தம் திருக்கூட்டத்தாருடன் திருப்புகலூர் எழுந்தருளினுர். சிறுத்தொண்டர் ஊரின் எல்லைவரை வந்து அவரை வழி அனுப்பி வைத்தார்.

திருப்புகலூரில் முருகனுர் சம்பந்தரை குதூகலத்தோடு அழைத்துச் சென்று தம் மடத்தில் தங்கச் செய்தார். அங்கு எழுந்தருளி தினமும் வர்த்தமானேசுவரரை வழிபட்டு வரும் போது திருஆரூரிலிருந்து நாவுக்கரசர் வருகிறுர் என்று கேள்விப்பட்டார். எம்பெருமானுடைய திரு அருளுக்குப் பாத்திரரான அவரைத் தாம் எதிர்கொண்டு சென்று வரவேற்க எண்ணம் கொண்டார். தொண்டர் கூட்டத்தாருடன் ஊரின்

எல்லைக்குச் சென்று காத்திருந்து ஆரூரிலிருந்து வந்த நாவுக்கரசரை வரவேற்று மடத்துக்கு அழைத்து வந்தார்.

இருவரும் மகிழ்ச்சியோடு உரையாடிக் கொண்டிருக்கும் போது, ''அப்பரே, திருவாரூரில் என்ன விசேஷம்? அதை எனக்குச் சொல்ல வேண்டும்!'' என்று கேட்டார் சம்பந்தர்.

ஆரூரில் திருவாதிரை நாள் திருவிழாவைத் தாம் கண்டு ஆனந்தித்த விதத்தை 'முத்துவிதானம்' என்ற பதிகமாகப் பாடினார் நாவுக்கரசர். அதைக் கேட்டதும் சம்பந்தருக்குத் தாமும் ஆரூர் சென்று இறைவனைத் தரிசிக்க எண்ணம் கொண்டார். நாவுக்கரசரிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்து அவரிடம் விடை பெற்றுப் புறப்பட்டார்.

திருப்புகலூரை விட்டுப் புறப்பட்ட சம்பந்தர் ஜலந்தராசுரனை சம்கரித்து இறைவன் வீரட்டானேசுவரராக எழுந்தருளியிருக்கும் திருவிற்குடி சென்று ஈசனை வழிபட்டு ஆரூர் நெருங்கினார்.

தூரத்தே கழனிகளுக்கிடையே தெரிந்த ஆரூர் கோயிலின் கோபுரத்தைக் கண்டதும் சம்பந்தர் உள்ளம் பக்தியால் நிறைந்து வழிந்தது. சிவிகையை விட்டு இறங்கி இரு கரங்களையும் குவித்து மண் மீது வீழ்ந்து சேவித்தார். பின்னர் புறப்பட்டுச் சென்று ஆரூரை அடைந்தார். ஆரூர் அடியார்கள் ஞானப்பாலுண்ட பிள்ளைக்கு மாபெரும் வரவேற்பு அளித்தனர்.

நாற்புறமும் சிவநாமம் சிந்தையைக் குளிர்விக்க சம்பந்தர் நகருள் நுழைந்து வீதிவழியே சென்று ஆலயத்தை அடைந்தார். கோபுரவாயிலை நெருங்கியதும் அவர் சிவிகையை விட்டு இறங்கி தரையில் நெடுஞ்சாங்கிடையாக விழுந்து எம்பெருமானை வணங்கி எழுந்தார். பின் உள்ளே சென்று தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது எம்பெருமான் சந்நிதிக்குச் சென்றார்.

புற்றிடம் கொண்டாரைத் தரிசிக்கும்போது சம்பந்தருடைய மேனி புளகாங்கிதம் அடைந்தது. ஆசை தீரப் பதிகம் பாடி இறைவனைத் தொழுது புறப்பட்ட அவர் ஆலயத்தை விட்டுக் கிளம்பி திருமடம் ஒன்றில் சென்று தங்கினார். அம் மடத்தில் தங்கி இறைவனைத் தினமும் தரிசித்து வந்தார். அரநெறி ஆலயத்துள் எழுந்தருளியுள்ள எம்பெருமானையும் அவர் தரிசித்து வந்தார்.

இவ்வாறு இருந்து வரும்போது ஒரு நாள் சம்பந்தர் ஆரூரை விட்டுப் புறப்பட்டுத் திருவலிவலம், திருக்கோளிலி 1 ஆகிய திருப்பதிகளைத் தரிசித்துக்கொண்டு மீண்டும் ஆரூருக்கே திரும்பினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பனையூர் 2 சென்று செளந்தரியநாதரைக் கண்டு மகிழ்ந்து புகலூரை நெருங்கினார்.

புகலூரில் அவ்வமயம் சம்பந்தருக்காகக் காத்திருந்த நாவுக்கரசர் முருகனார் மற்றும் இதர தொண்டர்களோடு எதிர் கொண்டு சென்று அவரை வரவேற்று மகிழ்ந்தார். முருகனார் திருமடத்தில் அவர்கள் தங்கியிருக்கும் நாளையில் நீலநக்கரும், சிறுத்தொண்டரும் புகலூருக்கு வந்து அவர்களைத் தரிசித்துக் களி கூர்ந்தனர்.

51. வீழிஅழகர் கொண்ட தோணிபுரக்கோலம்

திருப்புகலூரை விட்டு நாவுக்கரசர் புறப்பட்டபோது சம்பந்தரும் அவரோடு கிளம்பினார்.

நாவுக்கரசர் நடந்து செல்லும்போது புகலிப்பெருமகனார் தாம் மட்டும் சிவிகையில் போவது சரியல்ல எனச் சிவிகையில் ஏறாமல் நடந்து வந்தார். அதைக் கண்ணுற்ற நாவுக்கரசர், "ஐயனே, இறைவன் அளித்த சிவிகையில் ஏறி வாரும்!" என்று கேட்டுக்கொண்டார்.

"உங்கள் விருப்பம் அவ்விதமாயின் நீங்கள் முதலில் புறப்பட்டுச் செல்லுங்கள். நான் பின்னால் வந்து நீங்கள் தங்கும் பதியில் சேருகிறேன்" என்றார் சம்பந்தர்

அவ்வாறே நாவுக்கரசர் புறப்பட்டுச் சென்ற வெகுநேரத்துக்குப் பிறகு நீலநக்கர் முருகனார், சிறுத்தொண்டர் ஆகியோரிடம் சப்பந்தர் விடைபெற்றுக் கிளம்பினார். வழியெங்கும் 'அப்பர் எங்கே? அப்பர் எங்கே?' என்று விசாரித்துக் கொண்டே

---

1 திருநெல்லிக்காவலுக்கு வடகிழக்கே நான்கு மைலில் வலிவலமும் தென் கிழக்கே ஆறு மைலில் திருக்குவளை என்று அழைக்கப்படும் திருக்கோளிலியும் உள்ளன.

2 நன்னிலம் ரயில் நிலையத்துக்குத் தென் கிழக்கே ஒன்றரை மைலில் உள்ளது.

திருஅம்பர் போய்ச் சேர்ந்தார். முன்னதாக நாவுக்கரசர் அவ் வூரை அடைந்து தங்கியிருந்தார். மாகாளத்தில் உறையும் அண்ணலை வணங்கிப் பாடிய பின் இருவரும் காலனை உதைத்த காலாந்தகரைத் தரிசிக்க ஆவல் கொண்டவர்களாய்ப் புறப்பட்டு வழிகள் தோறும் இருந்த பதிகளில் இறைவழி பாட்டை முடித்துக்கொண்டு திருக்கடவூர் சேர்ந்தனர்.

அவ்வூரிலே எம்பெருமானுக்குத் தினமும் குங்கிலியத் திருப்பணி செய்து வரும் கலயரைக் கண்டு மகிழ்வுடன் உரை யாடி அவர் மனம் களிக்கத் திருவமுது உண்டனர். அவ்வூரிலே சில தினங்கள் தங்கி இறைவனை வழிபட்டு வந்தனர். கலய ருடன் பக்கத்திலே உள்ள திருமயானமும் சென்று ஈசனைப் பணிந்து போற்றினர்.

திருக்கடவூர் விட்டுப் புறப்பட்ட அவர்கள் திருஆக்கூர் சென்று தான்தோன்றீச்சுவரரைத் தரிசித்தனர். பின்னர் திரு மியச்சூர் 1, திருபாம்புரம் 1 ஆகிய தலங்களில் இருப்பிடம் கொண்டருளிய இறைவனைத் தாழ்ந்து பணிந்து திருவீழிமிழலை அடைந்தனர். ஆலயத்துக்கு வடபாலில் இருந்த மடத்தில் சம்பந்தரும் வேருெரு இடத்திலுள்ள இன்னொரு மடத்தில் நாவுக்கரசரும் தங்கினர். இருவரும் நாள் தோறும் எம்பெரு மான் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு வந்தனர்.

இவ்வாறு இருந்து வரும்போது சீர்காழியிலிருந்து அந்த ணர்கள் சம்பந்தர் பெருமானைத் தங்களோடு அழைத்துச் செல்ல திருவீழிமிழலை வந்து சேர்ந்தனர். அவர்கள் வருகை குறித்து அறிந்ததும் மிழலை வேதியர்கள் அவர்களை எதிர் கொண்டு சென்று வரவேற்று உபசரித்தனர்.

சீர்காழியிலிருந்து வந்தவர்கள் ஆலயம் சென்று எம்பிரா னைத் தரிசித்துக்கொண்டு வடக்கு பக்கத்திலே உள்ள மடத்தில் தங்கியிருக்கும் சம்பந்தரைக் கண்டு பணிந்து தாங்கள் புறப் பட்டு வந்த நோக்கத்தை அறிவித்தனர்.

“இன்று இங்கே தங்கலாம். நாளை இறைவனிடம் அனு மதி பெற்று உங்களோடு புறப்படுகிறேன்” என்ருர் சம்பந்தர்.

மிழலை அண்ணலார் அதற்குச் சம்மதிக்கவில்லை. தம் திரு மகனுரின் செந்தமிழ்ப் பதிகங்களைக் கேட்டு ஆனந்திக்க

---

1 பேரளம் ஜங்ஷனுக்கு மேற்கே முக்கால் மைலில் திருமியச் சூரும் நாலரை மைலில் திருப்பாம்புரமும் உள்ளன.

வேண்டும் என எண்ணினுர் போலும். அன்றிரவு சம்பந்தருடைய நித்திரையிலே தோன்றி, "குமாரா, தோணியப்பரைத் தரிசிக்க நீ அங்கு போகவேண்டிய அவசியமில்லை. நாளை விமானத்திலே நாம் அக்கோலத்தைக் காட்டுவோம்" என்று அருளி மறைந்தார்.

விடிந்ததும் சம்பந்தர் ஆலயம் சென்ருர். அங்கே விண்ணிலிருந்து விமானத்திலே ஈசன் தம் திருமகனுருக்குத் தோணிபுரத் திருக்கோலத்தைக் காட்டி அருளினுர். சம்பந்தர் உள்ளம் குதூகலிக்க அஞ்சலி செய்து 'மைம்மரு பூங்குழல்' என்ற பதிகம் பாடினுர். பின்னர் மடத்துக்குத் திரும்பி இறைவன் நித்திரையில் வந்து அறிவித்ததையும், அவ்வாறே கோயிலில் திருக்கோலம் காட்டி அருளியதையும் சொல்லி அவர்கள் ஊர் திரும்பலாம் எனக் கூறினுர். அவர்களும் அவ்வாறே சம்பந்தரிடம் விடைபெற்று ஊர் திரும்பினர். சம்பந்தர் அப்பதியிலேயே தங்கி தினமும் வீழியழகரைத் தரிசித்து வந்தார்.

அப்போது நாட்டிலே கொடிய வறட்சி ஏற்பட்டது. ஆறு குளங்களில் நீர் வற்றி, பயிர் பச்சைகள் கருகின. மக்கள் சொல்லொண்ணு துயருற்றனர். அதைக் கண்ட சம்பந்தருடைய உள்ளம் வேதனை அடைந்தது. அவரைப் போலவே நாவுக்கரசரும் மக்களின் துயர் துடைக்க வழி என்னவென்று வருந்தினுர்.

பிறை சூடிய பெருமான் தம் அடியார்களுடைய உள்ளத்திலே உழன்று வரும் வேதனையை உணர்ந்தார். இரவு நித்திரையின் போது அவர்கள் கனவிலே தோன்றினுர்.

"அன்பர்களே, நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி உங்களை ஒருபோதும் பாதிக்காது. இருப்பினும் உங்களுடைய அடியார்கள் துயருறுமலிருக்க நாளை முதல் பஞ்சம் தீரும் வரை நாம் பீடத்தின் கீழ் பொற்காசு வைப்போம். அதைக் கொண்டு அடியார்களுக்கு அமுது செய்யலாம்" என்று அருளி மறைந்தார்.

மறுநாள் சம்பந்தரும் நாவுக்கரசரும் ஆலயம் சென்று பார்த்தபோது இறைவன் அறிவித்தவாறு பொற்காசுகள் வைத்திருப்பதைக் கண்டனர். நாவுக்கரசருக்கு அறிவித்தபடி மேற்குப் பீடத்தில் வைத்த காசை அவரும் கிழக்குப் பீடத்தில் வைத்த காசை சம்பந்தரும் பெற்று அதைக் கொண்டு அடியார்களுக்குத் திருவமுது செய்வித்தனர். நாள்தோறும் இவ்வாறு நிகழ்ந்து வந்தது.

நாவுக்கரசர் மடத்தில் குறித்த வேளையில் அடியார்களுக்கு அமுது போடப்பட்டு வந்தது. ஆனால் சம்பந்தர் மடத்திலோ அமுது செய்விக்க மிகவும் தாமதம் ஏற்பட்டு வந்தது. ஆரம்பத்தில் சில நாட்கள் இதைக் கவனித்த சம்பந்தர் போகப்போக இது சரி செய்யப்பட்டுவிடும் என எண்ணினார். ஆனால் தினமும் தொடர்ந்து தாமதமாகவே அமுது அளிக்கப்பட்டு வந்ததைக் கண்டதும் அவர் தம்முடன் வந்திருந்தவர்களை அழைத்துக் கேட்டார்.

"அப்பர் சுவாமிகள் தங்கியுள்ள மடத்தில் அடியார்களுக்கு குறித்த காலத்தில் அமுது அளிக்கப்படும்போது நம் மடத்தில் மட்டும் தாமதம் ஏற்படக் காரணம் என்ன?" என்று கேட்டார்

"ஐயனே, நாங்கள் என் செய்வது? வாகீசர் பெருமான் அளிக்கும் பொற்காசை எதுவும் கூறாது வாங்கிக் கொள்கிறார்கள். நம் காசு வாசிபட வேண்டுமென்கிறார்கள். அதன் காரணமாகவே அதை மாற்றிப் பொருளை வாங்கிவர தாமதம் ஏற்படுகின்றது" என்றனர் அவர்கள்.

அதைக் கேட்ட சம்பந்தர், நாவுக்கரசர் கைத்தொண்டு செய்கிறாராதலால் அவருக்கு இறைவன் வாசியிலா காசு அருளுகிறார் என்பதை உணர்ந்து தாமும் வாசியிலா காசு பெற எண்ணினார். எம்பெருமான் ஆலயம் சென்று இறைவனைப் பணிந்து 'வாசி தீரவே' என்ற பதிகம் பாடி தமக்கும் வாகீசருக்கு அளிப்பது போன்று வாசியிலா காசு தரவேண்டும் என்று வேண்டினார்.

மறுநாள் முதல் ஈசனும் அவர் வேண்டுகோள்படி வாசியிலா காசு கொடுத்து அருளினார். அக்காசை எடுத்துச் சென்றபோது வணிகர்கள் எதுவும் பேசாது வாங்கிக்கொண்டு பொருள்களைக் கொடுத்தனர். அது முதல் இரண்டு மடங்களிலும் அடியார்களுக்குக் குறித்த காலத்தில் அமுது செய்விக்கப்பட்டு வந்தது.

52. ஆலவாய் விடுத்த அழைப்பு

திருவீழிமிழலையில் தாண்டகவேந்தரும் முத்தமிழ் விரகரும் இறைவன் அருளால் நாள்தோறும் கிடைக்கும் பொற்காசுகளைக் கொண்டு அடியார்களுக்கு அமுது செய்வித்து வந்தனர். விரைவிலேயே பஞ்சம் நீங்கியது. நாட்டிலே மழை பெய்தது. நீர் நிலைகள் நிரம்பின. மக்கள் நம்பிக்கையோடு உழுது பயி

ரிடத் தொடங்கினர். நாட்டில் வளமை செழித்து மக்கள் பசியாற உண்ணத் தொடங்கினர்.

சம்பந்தர் வாகீசரோடு திருவீழிமிழலை விட்டுப் புறப்பட்டு, வேதங்கள் வழிபட்ட வேதபுரீசுவரைத் தரிசிக்க விருப்பம் கொண்டு வேதவனம் 1 நோக்கிப் பிரயாணப்பட்டார். திருவாஞ்சியம், தலையாலங்காடு, பெருவேளூர், திச்சாத்தாங்குடி, திருக்கரவீரம் 2, திருவிளமர் ஆகிய தலங்களை வழிபட்டுக் கொண்டு திருஆரூர் போய்ச் சேர்ந்தனர். புற்றிடம் கொண்ட பெருமானைத் தரிசித்து மேலும் திருக்காறுயில்3, தேவூர்4, திருநெல்லிக்காவல், திருகைச்சினம் 5, திருத்தெங்கூர்5, திருக்கொள்ளிக்காடு5, கோட்டூர்6, தண்டலை நீணெறி, திருவெண்டுறை7 ஆகிய பதிகளிலும் ஈசனைப் பாடி மகிழ்ந்து திருமறைக் காட்டை அடைந்தார். முன்னதாகச் சென்றிருந்த நாவுக்கரசருடன் சேர்ந்து மகிழ்ந்து எம்பெருமான் ஆலயத்துக்குத் தரிசனம் செய்யச் சென்றார்.

வேதங்கள் பூசித்த காலத்திலிருந்து அடைபட்டிருக்கும் நுழைவாயில் கதவை எவராலும் திறக்க முடியாது போகவே பக்கத்திலுள்ள வாயில் வழியாகவே மக்கள் சென்று எம்பெருமானைத் தரிசித்து வந்தனர். அடைபட்டுக் கிடக்கும் வாயிற் கதவைத் திறந்து மக்களுக்கு வசதியாக்க எண்ணம் கொண்டு சம்பந்தர் வாகீசரை அழைத்து கதவு திறக்க இறைவனை வேண்டிப் பதிகம் பாடக் கேட்டுக் கொண்டார். அப்பரும் அவ்வாறு பதிகம் பாடியதும் மூடியிருந்த கதவுகள் தாமே திறந்து கொண்டன. தொண்டர் குழாம் ஆச்சரியத்தால் ஆரவாரம் செய்ய, சம்பந்தர் வாகீசரை அவ்வாயில் வழியாக உடன் அழைத்துச் சென்று இறைவனைத் தரிசித்து உள்ளம் களிகூர்ந்தார்.

---

1 வேதாரண்யம்.

2 திருவாரூருக்கு மேற்கே ஐந்து மைல்.

3 மாவூர் ரோடுக்குத் தெற்கே மூன்று மைல்.

4 கீவளூருக்குத் தெற்கே மூன்று மைலில் உள்ளது.

5 திருநெல்லிக்காவலுக்குத் தென்மேற்கே ஒன்றரை மைலில் திருத்தெங்கூரும், மேற்கே மூன்றரை மைலில் திருக்கொள்ளிக்காடும், கிழக்கே மூன்று மைலில் திருக்கைச்சினமும் இருக்கின்றன.

6 திருத்துறைப்பூண்டிக்குத் தென்மேற்கே பதினான்கு மைல்.

7 மன்னார்குடிக்கு வடகிழக்கே ஏழு மைல்.

எம்பெருமான் வழிபாட்டை முடித்துக்கொண்டு செந்தமிழ்ப் பாவலர் இருவரும் வெளியே வந்தனர். ' அடைத்துக் கிடந்த ஆலய வாசலைத் திறந்து வைத்தாகிவிட்டது. இனி தினமும் அவ்வாசலைத் திறந்து மூடச் செய்யும் வகையில் வாகீசர் சம்பந்தரை அழைத்துக் கதவு அடைத்திடப் பதிகம் பாடச் சொன்னார். சம்பந்தர் மறைக்காட்டாரைத் தியானித்து **'சதுரம் மறைதான்'** என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

பதிகத்தின் முதல் செய்யுள் முடிந்ததுமே கதவு அடைத்துக் கொண்டது. அதைக் கண்ணுற்ற அடியார்கள் இறைவன் கருணையை எண்ணி எண்ணி வியந்து ஆர்ப்பரித்தனர். பின் இருவரும் தம் அடியார்களுடன் அவ்வூரிலிருந்த திரு மடத்தில் தங்கினர்.

அன்றிரவு அப்பர் வேதனையுறும் உள்ளத்தோடு படுத்து நித்திரை செய்தார் தாம் பாடி முடிக்கும் வரை காத்திருந்து கதவைத் திறக்கச் செய்த ஈசன் சம்பந்தர் பாடத் தொடங்கி முதல் செய்யுள் முடிந்ததுமே கதவை அடைக்கச் செய்தாரே என்று எண்ணி எண்ணி குமைந்தபடி படுத்திருந்தார். 'சிவபெருமானால் அருளப்பட்ட வேதங்களின் சாரங்களைத் தமிழிலே அருளி வரும் சம்பந்தப் பெருமான் சிவனைப் போன்று அருட்செய்கை செய்ய வல்லார்' என்று எண்ணிப் படுத்திருந்த அடியாரின் உள்ளத்திலே குமைந்து கொண்டிருக்கும் வேதனையை அகற்றி அடியார்களிடம் தமக்கு வித்தியாசம் இல்லை என்பதைக் காட்ட விரும்பினார் எம்பெருமான். சம்பந்தரைப் போல அவரும் தமக்கு அன்பர் என்பதைத் தெரிவிக்க அவரைத் தேடி வந்து தரிசனம் கொடுத்தார். நித்திரையிலே தரிசனம் கொடுத்து, "நாம் திருவாய்மூரில் இருப்போம் தொடர்ந்து வா!" என அருளினார். கண் விழித்து எழுந்த வாகீசர் மடத்து வாயிலில் நின்று இறைவன் அழைப்பதைக் கண்டு மகிழ்ந்து எழுந்து சென்றார். நெருங்கினால் பிடித்துவிட முடியும் என்று போக்குக் காட்டி வாகீசரை அழைத்துச் சென்ற ஈசன் வழியிலே தென்பட்ட ஒரு கோயிலைக் காட்டி அதனுள் மறைந்து விட்டார்.

வாகீசர் திருவாய்மூர் செல்கிறார் என்று கேள்விப்பட்ட சம்பந்தர் மடததை விட்டுக் கிளம்பி "அப்பர் எங்கே? அப்பர் எங்கே?" என்று கேட்டுக்கொண்டே திருவாய்மூர் நோக்கிச் சென்றார். அங்கே ஓரிடத்தில் இறைவன் தமக்குத் தரிசனம் கொடுத்து அழைத்து வந்து மறைந்து விட்டதை எண்ணி மனம் வருந்திக் கொண்டிருந்த அப்பரைக் கண்டார். அங்கு வந்துள்ள சம்பந்தருக்குத் தரிசனம் தந்தருள அப்பர் வேண்ட,

இறைவனும் சம்பந்தருக்குக் காட்சி அருளினுர். சம்பந்தர் அத் திவ்யகோலத்தைக் கண்டு மகிழ்ந்து 'தளரிளவளரென வுமை பாட' என்ற பதிகம் பாடி, அக்கோலத்தை அப்பருக்கும் காட்டி களிப்புறச் செய்தார். பின் இருவரும் திருவாய்மூர் சென்று இறைவனே வழிபட்டு அங்கிருந்து திருமறைக்காடு திரும்பினர்.

மறைக்காட்டிலே தங்கி நாள் தோறும் ஆலயம் சென்று பரமனைப் பாடித் தொழுது வரும்போது ஒரு நாள் பாண்டிய நாட்டிலிருந்து சில தூதுவர்கள் சம்பந்தரைத் தரிசிக்க வந்து சேர்ந்தனர். பாண்டிய நாட்டு அரசியாரும், அமைச்சரும் அனுப்பியுள்ள முக்கிய செய்தி கொண்டு தாங்கள் வந்திருப்ப தாக அவர்கள் மடத்துக்கு வெளியே இருந்த காவலரிடம் தெரி வித்தார்கள். காவலரும் உள்ளே சென்று அவர்கள் வருகையை அறிவித்து அனுமதி பெற்று வந்து அழைத்துச் சென்றனர்.

தூதுவர்கள் சம்பந்தரை வலம் வந்து வணங்கினர்.

"ஐயனே, பாண்டிய நாட்டிலே சமணம் மேலோங்கி வரு கிறது. அரசர் அவர்களுடைய போதனைகளால் கவரப்பட்டு அவர்களுக்கு ஆதர்வு கொடுத்து வருகிறுர். எம்பெருமானிடம் மிகுந்த பக்தி கொண்ட அரசி மங்கையர்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் இந்த நிலை மாறி நாட்டிலே மீண்டும் சைவம் தழைத்தோங்க விரும்புகின்றனர். தங்கள்பால் இறைவன் கொண்டுள்ள அன்பு பற்றி அரசியாரும் அமைச்சரும் நன்கு அறிந்துள்ளனர். சைவத்தை நிலைநிறுத்தும் பணியை மேற் கொள்ளத் தங்களைப் பாண்டிய நாட்டுக்கு அழைக்கின்றனர்."

தூதுவர்கள் மூலம் பாண்டிய அமைச்சரும் அரசியும் விடுத்த விண்ணப்பத்தைக் கேட்டபோது சம்பந்தருடைய உள்ளத்தில் அது ஆண்டவன் விடுத்த அழைப்பாகவே பட்டது. அவ்வழைப்பை மனமுவந்து ஏற்றுர்.

"அன்பர்களே, நீங்கள் மகிழ்ச்சியோடு சென்று உங்கள் அரசியாரிடமும் அமைச்சரிடமும் விரைவிலேயே நான் புறப் பட்டு வந்து சேருவதாக அறிவியுங்கள்" என்று சொல்லி அனுப்பினுர்.

பாண்டிய நாட்டுத் தூதுவர்கள் அளவில்லா மகிழ்ச்சியுடன் அவரை வணங்கிப் புறப்பட்டனர்.

சம்பந்தர் வாகீசரிடம் தமக்குப் பாண்டிய நாட்டிலிருந்து வந்த அழைப்பைத் தெரிவித்து விரைவில் தாம் புறப்பட்டுச்

செல்ல இருப்பதாகக் கூறினர். சமணர்கள் ஆதிக்கம் ஓங்கி யிருக்கும் மதுரைக்குச் சம்பந்தர் தனியே செல்வதை வாகீசர் விரும்பவில்லை. அவர்களுடைய கொடுமைகளுக்குச் சம்பந்தர் ஆளாகிவிடக் கூடுமே என அவர் அஞ்சினர். அவர் பல்லவ மன்னனிடம் கொடுமைகளை அனுபவித்தவர் அன்ருே.

ஆகவே, சம்பந்தர் தனியே பாண்டிய நாடு செல்வது உசித மல்ல என்றும், தாமும் உடன் வருவதாகவும் வாகீசர் தெரிவித் தார். சம்பந்தர் அதற்குச் சம்மதிக்கவில்லை. சோழ நாட்டிலே வாகீசர் இருந்து வரட்டுமென்றும், இறைவனுடைய திருவருள் எங்கே சென்ருலும் இருக்குமென்றும் தெரிவித்து, 'வேயுறு தோளிபங்கன்' என்ற திருப்பதிகம் பாடி அருளினர். பின்னர் அவர் வேதவனநாதரைப் பணிந்து அவரிடம் விடைபெற்றுத் திருமறைக்காட்டிலிருந்து பாண்டிய நாடு புறப்பட்டார்.

சிவிகை ஏறி தொண்டர் குழாம் பின்தொடர சம்பந்தர் அகஸ்தியன்பள்ளி, குழகர்கோயில் 1, கடிக்குளம் 2, இடும்ப வனம் 2, திருவுசத்தானம்3 ஆகிய தலங்களைத் தொழுது வழி பட்டுக் கொண்டு திருக்கொடுங்குன்றம் 3 சேர்ந்தார் அவ் வூரிலே கல்யாண கோலத்துடன் காட்சி தரும் கொடுங்குன்றீச ரைத் தரிசித்துப் பாடி மகிழ்ந்து பின் மேலும் பிரயாணப்பட்டு மதுரை அடைந்தார்.

சம்பந்தர் மதுரை நெருங்குகையில் சமண் பாழிகளில் இருந்த சமணர்களுக்குத் துர்ச்சகுனங்கள் தோன்றின. கூகை யும் ஆந்தையும் மண்டபங்களின் முகப்பிலே வந்து அமர்ந்து கத்தின. கையிலெடுத்த பீலி நழுவி விழுந்தது. கைகளும் கால்களும் தடுமாறின; அன்றிரவு அவர்கள் தீய கனவுகள் கண்டனர்.

விடிந்து எழுந்ததும் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இரவு தாங்கள் கண்ட தீய கனவுகளும், கூகை ஆந்தை ஆகிய

---

1 கோடிக்கரை.

2 தில்லைவிளாகம் ரயில் நிலயத்துக்குத் தெற்கே ஐந்து மைலில் கடிக்குளமும் தென் கிழக்கே நான்கு மைலில் இடும்ப வனமும் உள்ளன. கடிக்குளம் இன்று கற்பகனூர் கோயில் என்று வழங்கப்படுகிறது.

3 முத்துப்பேட்டைக்கு வடக்கே ஒன்றரை மைலில் உள்ளது.

3 புதுக்கோட்டைக்குத் தென் மேற்கே இருபது மைலில் உள்ள பிரான்மலை ஆகும்.

வற்றின் கர்ண கொடூரமான சப்தங்களும் அவர்கள் உள்ளத்தைக் குழப்பின. அவர்கள் ஒருவரோடு ஒருவர் தங்கள் மனக் குழப்பத்தைக் கூறி வேதனைப்பட்டனரே அன்றி அவற்றுக்கான காரணம் தெரியாது விழித்தனர்.

சமணர்கள் நிலை இவ்வாறிருக்க, மந்திரியாரும் அரசியாரும் நல்ல சகுனங்களைக் காணத் தொடங்கினர். தூதுவர்கள் திரும்பி வந்து சொன்னது முதல் சம்பந்தருடைய வருகையை ஒவ்வொரு நாளும் அவர்கள் எதிர்பாத்து வந்தனர். தாங்கள் காணும் நல்ல சகுனங்களிலிருந்து சம்பந்தர் நகரை நெருங்கி விட்டார் என்று அவர்கள் உணர்ந்தனர்.

53. வெள்ளத்தை எதிர்த்த ஏடும் வெந்தணலில் வேகாத ஏடும்

புகலிப் பிள்ளையார் வருகின்றார் என்ற செய்தி ஆலவாய் அன்பர்களுக்குத் தேவாமிர்தமாக இருந்தது. ஞானப்பாலுண்ட அப்பெருமானை நன்கு வரவேற்க அவர்கள் விரும்பினர்.

குலச்சிறையார் மகிழ்ச்சி நிறைந்த அச்செய்தியை அரசியாரிடம் தெரிவித்தபோது அவர் கொண்ட ஆனந்தம் அளவிட முடியாதது.

''அமைச்சரே, ஞானப்பாலுண்ட பிள்ளையாரின் வருகை கேட்டு நாம் உய்ந்தோம் எனத் தெரிவித்து அவருக்குத் தகுந்த முறையில் உபசரிப்பு தாருங்கள்'' என்றார்.

அரசியாரைப் பணிந்து குலச்சிறையார் நகர எல்லைக்கு விரைந்தார். அங்கே தோணிபுரச் செல்வரை எதிர்நோக்கி அடியார்கள் திரண்டிருந்தனர்.

சாலையில் தூரத்தே திருக்கூட்டத்தாரைக் கண்டதும் அடியார்கள் மேளதாளங்களுடன் எதிர் கொண்டு சென்று சம்பந்தரை வரவேற்றனர். அமைச்சர் சிவிகையை வலம் வந்து சம்பந்தரை வணங்கினார்.

அமைச்சர் வந்திருப்பதாகச் சம்பந்தருக்கு அடியார்கள் தெரிவித்தனர்.

''பெருமானே, தங்கள் வருகை குறித்து அரசியாரும் நானும் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்'' என்று பணிவோடு தெரிவித்தார் குலச்சிறையார்.

''அமைசசரே, தங்களுக்கும் அரசியாருக்கும் எம்பெருமான் திருவருள் செய்வாராக!'' என்று மகிழ்ந்து கூறினர் சம்பந்தர்.

''ஐயனே! தங்கள் வருகையால் எங்கள் துயரம் நீங்கி விட்டது என்பதை இப்போதே உணரத் தொடங்கி விட்டோம். அரசர் பெருமானின் உள்ளத்தில் புகுந்துவிட்ட மாசை அகற்றி சைவ நெறி நாட்டிலே விளங்கத் திருவருள் செய்ய வேண்டும்'' என்று அமைச்சர் மீண்டும் பணிந்து வேண்டினர்.

''அமைச்சரே, எம்பெருமான் இருப்பிடம் கொண்டுள்ள ஆலவாய் ஆலயம் எங்குள்ளது?'' என்று கேட்டார் சம்பந்தர்.

தூரத்தே வானுற உயர்ந்து நிற்கும் கோபுரத்தைச் சுட்டிக் காட்டிய அமைச்சர், ''ஐயனே! அதோ தெரிகின்றதே ஆலவாய் கோபுரம்!'' என்றார்.

சம்பந்தர் அங்கிருந்தவாறே இரு கரங்களையும் கூப்பி ஆலவாய்ப் பெருமானைப் பாடித் தொழுதார்.

பின்னர் சம்பந்தர் ஆலயம் நோக்கிப் புறப்பட்டார். உடன் வந்த அடியார்கள் எண் திசையும் கிடுகிடுக்கக் கோஷங்கள் எழுப்பினர். 'சிவம் பெருக்கும் சீலர் எழுந்தருளுகின்றார்; சைவம் தழைக்கச் சிவனர் திருமகனர் எழுந்தருளுகின்றார்; ஞானம் கலந்து பாலுண்ட பெருமகனர் வருகின்றார்' என்றெல்லாம் கோஷமிட்டுச் சென்றனர். நகர மாந்தர்கள் அவர் செல்லும் பாதை எங்கும் நீர் தெளித்து மலர் தூவினர்; வேதகோஷங்கள் வான்முகடு வரை எட்டி எதிரொலித்தன.

முன்னே தொண்டர்கள் சின்னங்களைத் தாங்கிச் செல்ல சம்பந்தர் சிவிகையில் சென்ற காட்சியைக் கண்டபோதுதான் சமணர்களுக்குத் தாங்கள் கண்ட தீயசகுனங்களுக்கான காரணம் புரிந்தது. 'தோணிபுரத்துச் சிறுவன் இங்கும் வந்து விட்டானு?' என்று அவர்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டனர்.

ஆலயத்தை நெருங்கியதும் சம்பந்தர் சிவிகையை விட்டு இறங்கி நடந்து சென்றார். ஆலயவாயிலைத் தொழுது உள் நுழைந்து எம்பெருமானுடைய சந்நிதிக்குச் சென்றார். அங்கயற் கண்ணி தன்னெடு அமர்ந்த பூதநாயகனைக் கண்குளிரக் கண்டு தொழுதார்; பாடினர்; உணர்ச்சி வசப்பட்டு ஆடினர்.

தரிசனம் முடித்துக் கொண்டு வெளிப்பட்ட சம்பந்தர் தம்மை நோக்கி அம்மையார் ஒருவர் வருவதைக் கண்டார். அருகிலிருந்த குலச்சிறையார், ''ஐயனே, எங்கள் அரசியார் தங்களைத் தரிசிக்க வருகின்றார்'' என்று கூறினர்.

"அம்மையே, வாருங்கள்!..." என்று அன்புமிக்க அழைத்த சம்பந்தர் அரசியாரை வரவேற்கத் தம் இரு கரங்களையும் நீட்டியபடி முன்னே சென்றார்.

வழக்கம் போலத் தரிசனம் செய்து போக ஆலயம் வந்த அரசியார் சம்பந்தர் நேராக ஆலயம் நோக்கி வருவதைக் கண்டதும் ஒதுங்கிப் பிராகாரத்தில் தங்கினார். எம்பெருமானைத் தரிசிக்க வரும் அடியாருக்குத் தாம் தடையாக இருக்கக் கூடாதென்று ஒதுங்கிக் கொண்டார். தரிசனம் முடிந்து சம்பந்தர் வெளிப்பட்டதும் அவரைப் பணிந்து தொழ விரைந்தார்.

சம்பந்தர் நெருங்கியதும் அவருடைய பாதங்களில் பணிந்து வணங்கினார்.

"பெருமானே, தங்கள் வருகையால் பாண்டியநாடு பிழைத்தது!" என்று கண்களில் நீர் தளும்பக் கூறினார் அரசி.

"அம்மையே, எழுந்திருங்கள். இறைவன் உங்கள் எண்ணம் இனிது நிறைவேற அருள்புரிவார்" என்று அரசியாரின் தோள்களைத் தொட்டு எழுப்பினார்.

"ஐயனே, சமணர்களுடைய போதனைகளால் மனம் மாறிப் போயிருக்கும் என் நாதரைத் தாங்கள்தான் ஆட்கொண்டு எம் பெருமானிடம் பக்தி கொள்ளச் செய்ய வேண்டும்!" என்று வேண்டினார் அரசி.

"அம்மையே, கவலை வேண்டாம். இறைவன் நம் பக்கம் இருந்து அருள் செய்வார்" என்று அரசியாருக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார்.

பின்னர் அவர் தம் அடியார்களுடன் அமைச்சர் ஏற்பாடு செய்திருந்த மடத்துக்குச் சென்று அங்கே தங்கினார்.

சம்பந்தர் வருகையும், அவருக்கு அமைச்சர் முன் நின்று அளித்த வரவேற்பும் சமணர்களுக்கிடையே பீதியைத் தோற்றுவித்தன. மாலையில் அவர்கள் ஒன்று கூடினர்.

சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தில் அடியார்கள் எழுப்பிய வேதமந்திரங்களின் கோஷம் சமணர்கள் காதிலே புகுந்து அவர்கள் உள்ளத்தைக் குடைந்தது. அவர் அந்நகரிலே தங்கும் ஒவ்வொரு நாளும் தங்களுடைய ஆதிக்கத்தைக் கலகலக்கச் செய்யும் என்று எண்ணினர். ஆகவே நிலைமை முற்றுவதற்குள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவரை விரட்டிவிட வேண்டுமென அவர்கள் முடிவு செய்தனர். மன்னனைக் கண்டு அவர் ஆதரவைப் பெற அப்போதே புறப்பட்டனர். மன்னன்

ஆதரவு அவர்களுக்கு இருக்கும் வரை குலச்சிறையார் அவர்களை ஒன்றும் செய்ய முடியாதன்றோ!

சமணப் பள்ளியிலிருந்து தன்னைக் காண வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்த அரசனுக்கு அவர்கள் வருகைக்கான காரணம் புரியவில்லை. அவர்களைத் தன்னுடைய அந்தரங்க ஆலோசனை அறைக்கு வரச் செய்தான்.

வாடிய முகத்தோடு உள்ளே நுழைந்த சமணர்களைக் கண்ட அரசன் திடுக்கிட்டான்.

''நீங்கள் என்னைக் காண வந்திருப்பது எது குறித்து? உங்கள் முகம் ஏன் வாடியிருக்கிறது?'' என்று கேட்டான்.

''மன்னவா, தோணிபுரமாம், சோழ நாட்டிலே உள்ளதாம். அவ்வூரிலிருந்து யாரோ அந்தணச் சிறுவன் சூலபாணியின் அருள் பெற்றவனும் எங்களோடு வாதிட்டு வெல்வதற்காக வந்துள்ளானும். அவனுக்குச் சிறப்பாக வரவேற்பு அளிக்கப்பட்டதாம்!'' என்று வெறுப்போடு கூறினர் அவர்கள்.

அதைக் கேட்ட அரசன் கோபம் கொண்டவனாய், ''அவன் வந்திருக்கிறானென்றால் நாம் என்ன செய்வது? சொல்லுங்கள் அவ்வாறு செய்வோம்!'' என்றான்.

''மன்னவா, அவன் தங்கியிருக்கும் மடத்தை நாங்கள் மந்திர சக்தியால் தீப்பற்றி எரியச் செய்கிறோம். அதைக் கண்டு அவன் பயந்து தானே இவ்வூரை விட்டு ஓடி விடுவான்'' என்றனர் சமணர்கள்.

அவர்கள் போதனையால் மயங்கிக் கிடந்த அரசன் அதற்குட்பட்டு அவ்வாறு செய்து தோணிபுரச் சிறுவனை விரட்டிவிட அவர்களுக்கு அனுமதி கொடுத்தான்.

துயரம் மகிழ்ச்சியாய் மாற அவர்கள் அரண்மனையை விட்டுப் புறப்பட்டனர்.

சம்பந்தர் பெருமானின் பெயரைக் கேட்டது முதல் பாண்டிய மன்னனின் உள்ளம் ஏனோ குழம்பியது. அவனைச் சூழ்ந்திருக்கும் மாயையை அகற்ற இறைவன் திருஅருள் புரிந்துவிட்டார் என்பதை அவன் எப்படி உணர்வான்?

சோர்ந்த முகத்தோடு அமர்ந்திருக்கும் நாதனைக் கண்டதும் மங்கையர்க்கரசியார் நெருங்கி, ''நாதா, ஏன் சோர்வுற்று அமர்ந்திருக்கிறீர்கள்? என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

''தேவி, யாரோ தோணிபுரத்திலிருந்து சிறுவன் வந்திருக்கிறானும். சூலபாணியின் அருள் பெற்றவனும். சமணர்களுடன்

வாதிடப் போகிறுனும் இப்போது தான் சமணப் பள்ளியிலி ருந்து வந்து தெரிவித்து விட்டுப் போனுர்கள். இவையெல் லாம் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லே அவர்கள் வந்து சொல்லிச் சென்றது முதல் ஒரே குழப்பமாக இருக்கிறது'' என்றுன் அரசன்.

''இதில் குழம்புவதற்கு எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லேயே. இருவரும் வாதிட்டு யார் வெற்றிபெறு கிருர் என்பதைப் பார்ப்போம். வெற்றி பெற்றவர் சமயத்தை நாம் முற்றிலும் சார்ந்து ஆதரிப்போம்'' என்று அரசனின் குழம்பும் உள்ளத்துக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிஞள் அரசியார்.

அரண்மனேயிலிருந்து திரும்பியதும் சமணர்கள் உடனடி யாகத் தங்கள் காரியத்தைத் தொடங்கினர். மந்திர வித்தையில் வல்லவர்களான சிலரைப் பொறுக்கி, சம்பந்தர் தங்கியிருக்கும் மடம் தீப்பற்றிக் கொள்ளுமாறு செய்ய அனுப்பி வைத்தனர். அவர்கள் மடத்துக்கு எதிரே உள்ள இடத்தில் அமர்ந்து ஜபிக் கத் தொடங்கினர்.

ஒரு நாழிகை சென்றது. சமணருடைய முயற்சி பலன் தரவில்லே. சம்பந்தர் தங்கியிருந்த மடம் தீப்பற்றவில்லே. அடியார்கள் பக்திமிகுந்து ஜபிக்கும் பஞ்சாக்ஷரத்தின் முன்பு அவர்கள்உச்சரித்த மந்திரங்கள் எதுவும் பலிக்கவில்லே.

தீப்பற்றச் செய்து அரை நாழிகையில் தரை மட்டமாக்கி விடுவோம் என்று சூளுரைத்து வந்தவர்கள் திரும்பி சமணப் பள்ளிக்கு ஓடினர். அங்கே போய் தோணிபுரத்துச் சிறுவ னிடம் தங்கள் மந்திரவித்தை பலிக்கவில்லே என்பதைத் தெரி வித்தனர்.

அதைக் கேட்ட சமணர்கள் தங்கள் அடி வயிற்றில் தீப்பற் றியதைப் போல அலறிஞர்கள். அவர்கள் முயற்சி தோல்வி யுற்றதை அரசன் அறிந்தால் அவர்க்ள் சமயததில் அவன் கொண்டுள்ள நம்பிக்கை சிதைந்து விடுமே! அதன் பின் அவர் கள் கதி அதோகதிதான்! தில்லுமல்லுகள் செய்தாவது அரச னிடம் தாங்கள் கூறி வந்த காரியத்தை நிறைவேற்றி விடு வது என்ற முடிவுக்கு வந்தனர். கொல்லு கொலேக்கு அஞ் சாத குண்டர்கள் சிலரை அழைத்து நிறைய பொன் கொடுத்து சம்பந்தர் தங்கியிருக்கும் மடத்தைத் தீ இட்டுக் கொளுத்து மாறு அனுப்பினர். குண்டர்களும் யாரும் அறியாது மடத்தை நெருங்கி தீப்பந்தங்களே எறிந்து நெருப்பு வைத் தனர். நெருப்பு 'திகு திகு' வென்று எரிந்தது.

நல்ல வேளையாகச் சில அடியார்கள் இம்மாதிரி அசம்பா விதங்களை எதிர்பார்த்து விழித்திருந்தனர். அவர்கள் பாண்டிய நாட்டிலே சமணர்கள் அடியார்களுக்கு இழைத்து வரும் கொடுமைகளைப் பற்றி அறிந்திருந்தனர். சமணர்களுடைய ஆதிக்கத்தைக் குலைக்கும் வகையில் சம்பந்தர் மதுரை வந்திருக்கும் போது அவர்கள் சும்மா இருப்பார்களா? ஆகவே அடியார்கள் சிலர் இம்மாதிரி கொடுமைகளை எதிர்பார்த்து இரவு நேரத்தில் விழித்திருந்தனர்.

நெருப்பு 'திகு திகு' வென்று எரியத் தொடங்கியதும் விழித்திருந்தவர்கள் அடியார்களை எழுப்பி நெருப்பை அணைக்கத் தொடங்கினர். சேதம் அதிகமின்றி விரைவிலேயே அவர்கள் நெருப்பை அணைத்து விட்டனர்.

மடத்திலே அந்த அகால வேளையில் பரபரப்பு மிகுந்திருப்பதைக் கண்ட சம்பந்தர் விசாரிக்கவே, ஓரிருவர் அவரிடம் சென்று சமணர்கள் மடத்துக்குத் தீவைத்ததைப் பற்றிப் புகார் செய்தனர். சமணர்கள் துணிந்து அம்முயற்சியில் இறங்கியதற்கு அரசனுடைய ஆதரவு இல்லாமலிருக்காது என்பதை உணர்ந்தார் சம்பந்தர். சமணர்களுடைய கொடுமைகளுக்கு விரைவில் முடிவு காண வேண்டுமென்று, 'செய்யனே திருவாலவாய் மேவிய வையனே' என்ற பதிகம் பாடி, 'என் பொருட்டு தீயிட்டாலும், சிவனடியார்க்குச் செய்த தீங்காதலால் சமணர்களிட்ட தீ மெல்ல சென்று அரசனையே பீடிக்கட்டும்'' என்றார். தீயின் வெப்பம் அரசனைப் பற்றிக் கொண்டது.

மஞ்சத்திலே படுத்திருந்த அரசன் வெப்பசுரம் அதிகமாகிப் புரளத் தொடங்கினான். நேரம் செல்லச் செல்ல அவன் சுரம் அதிகமாகியது. பொழுது புலரும் வேளையில் அரசனுக்கு உணர்வு தவறி விட்டது.

இரவு சம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர் தூண்டுதலால் குண்டர்கள் தீவைத்ததும், அது பரவும் முன்பாக அடியார்கள் அணைத்து விட்டதும் கேள்விப் பட்டுப் பதை பதைத்து குலச்சிறையார் அரசியிடம் சென்று ஆலோசனை கேட்கும் வேளையில் அரசன் சுரவேகம் தாங்காது உணர் விழந்து கிடப்பதாகக் காவலர் வந்து அறிவித்தனர். அமைச்சரும் அரசியாரும் வைத்தியர்களை வரவழைக்க உத்தரவிட்டு, அரசன் இருக்குமிடம் ஓடினர்.

உடல் அனலாய் கொதிக்க அரசன் மஞ்சத்தில் தன் உணர்வின்றிக் கிடந்தான். வைத்தியர்கள் விரைவிலேயே

வந்து சேர்ந்தனர். அரசனுடைய உடலைப் பரிசோதித்து ஏதேதோ மருந்துகளைக் கொடுத்தனர். எந்த மருந்துக்கும் சுரம் கட்டுப்படவில்லை.

மெல்ல கண் விழித்த அரசன் உடலிலுள்ள தசை அனைத்தும் முறுக்கி எடுக்கும் வலி பொறுக்க முடியவில்லை என்றான். வைத்தியர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவர்கள் கொடுத்த மருந்துகளுக்குக் கட்டுப்படாது அரசனை வருத்தும் நோய் இன்ன தென்று அறியாது தவித்தனர்.

இதற்குள் சமணப் பள்ளியிலிருந்தவர்களுக்கு அரசன் நோயுற்ற செய்தி எட்டியது. முதல் நாள் தாங்கள் மேற்கொண்ட தீய நடவடிக்கைகளின் விளைவு என்பதை உணராது அரசனைப் பற்றியிருக்கும் நோயைத் தீர்த்து அவன் நம்பிக்கையைச் சம்பாதித்து விடலாம் என மயில் பீலியையும் குண்டிகை நீரையும் எடுத்துக் கொண்டு ஓடிவந்தனர்.

“அரசே, கவலையை ஒழியுங்கள். இதோ உங்கள் நோயை அரை கணத்தில் ஒழிப்போம்” என்று சொல்லி பீலி கொண்டு அவன் மேனியைத் தடவினர். நோயின் வெப்பத்தால் பீலிகையின் நுனி கருகியது. அதைக் கண்ட சமணர் குண்டிகை நீரைக் கையிலெடுத்து மந்திரம் ஜபித்து அரசன் மீது தெளித்தனர்.

அரசனை வருத்தி வரும் நோய் குறைவதற்குப் பதிலாக மேலும் அதிகரித்து விட்டது. அரசன் புழுபோலத் துடித்தான்.

அமைச்சர் அரசியாரைப் பணிந்து, “தேவி, நேற்று அடியார்கள் தங்கியிருக்கும் மடத்துக்குச் சமணர்கள் செய்த தீங்கின் விளைவே இது. தாங்கள் அனுமதித்தால் புறப்பட்டுச் சென்று ஆளுடைய பிள்ளையாரைப் பணிந்து அழைத்து வருகிறேன். அவர் திருநீறு பூசுவாரேயானால் சுரம் குறையலாம்” என்று தெரிவித்தார்.

அரசியும் நாயகனைப் பார்த்து, “சுவாமி, சிவபெருமான் திருஅருள் பெற்ற ஞானமுண்ட சீலர் சம்பந்தர் பெருமான் தங்கியிருக்கும் திருமடத்துக்கு நேற்றிரவு யாரோ சமணர் தூண்டுதலால் தீ வைத்தனராம். தீ பரவாமல் அணைத்து விட்டனர். அக்குற்றம் காரணமாக இந்நோய் நம்மை வருத்துகிறதோ? ஞான சம்பந்தரை அழைத்து வந்து நீறு அளிக்கச் செய்யலாமா?” என்று கேட்டாள்.

சம்பந்தருடைய திருப்பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அரசனின் உள்ளம் குளிர்ந்தது.

"தேவி, அப்பெருமானின் பெயரைக் கேட்கும்போதே என் உள்ளத்தைத் தகித்துக்கொண்டிருக்கும் வெப்பம் சிறிது குறைவதாகத் தோன்றுகிறது. அப்பெருமானை உடனே வரவழைக்க அமைச்சரை அனுப்பு!" என்றான்.

அரசனுடைய வார்த்தைகள் சமணர்களுக்குப் பேரிடி போலாகி விட்டது.

"மன்னவா, தங்கள் போக்கு அதிசயமாக இருக்கிறது. நம்முடைய கொள்கைக்கு ஒத்துவராத ஒரு காரியத்தை நீங்கள் அனுமதிக்கலாமா?" என்று கேட்டனர்.

அரசன் அவர்களைப் பார்த்துச் சீறி விழுந்தான்.

"உங்களால் என் நோயைத் தீர்க்க முடியவில்லை!..."

"அந்தணச் சிறுவன் வந்து நோயைத் தீர்க்கட்டும். நாங்கள் தடுக்கவில்லை. ஆனால் நோய் அச்சிறுவனால் தீர்ந்தது என்பதை மறுத்து விடுங்கள்..."

வேதனை தாளாது துடிக்கும் அரசன் அவர்களைக் கொடுமையாகப் பார்த்தான்.

"நன்றாயிருக்கிறதே பேச்சு! உங்களால் முடியாத காரியத்தை இன்னொருவர் செய்தால் அதை மறைத்துப் பேசுவதா?" என்று கோபத்தில் சீறினான்.

நிலைமை மோசமாகி வருவதைக் கண்ட சமணர்கள் கைகளைப் பிசைந்தனர். தங்கள் பால் அரசனுக்கிருந்து வரும் ஆதரவை இழக்காமலிருக்க என்ன செய்வதென்று விளங்காது தவித்தனர்.

அரசனுடைய அனுமதி பெற்ற குலச்சிறையார் சம்பந்தர் தங்கியிருக்கும் மடத்துக்குச் சென்றார். சம்பந்தருடைய கால்களில் பணிந்து வணங்கினார்.

அமைச்சருடைய முகம் வாடியிருப்பதைக் கண்ட சம்பந்தர், "அமைச்சரே, என்ன வருத்தம்? உங்களுக்குத் தீங்கு ஒன்றும் இல்லையே?" என்று கேட்டார்.

அமைச்சருடைய கண்கள் 'பொலபொல' வென்று நீரைக் கொட்டின.

"ஐயனே, நேற்றிரவு தங்கள் மடத்துக்கு யாரோ குண்டர்கள் நெருப்பு வைத்தனர் என்பதைக் கேள்விப்பட்டதும் நானும் அரசியாரும் தவித்துப் போய் விட்டோம். பின்னர் ஆபத்து

ஏதுமில்லை என்று அறிந்து சமாதானம் கொண்டோம். எங்கள் மகிழ்ச்சி அதிக் நேரம் நிலைக்கவில்லை. எங்கள் அரசர் வெப்ப சுரம் கண்டு மிகவும் அவதிப்படுகிறார். வைத்தியர்களால் நோயைக் குணப்படுத்த முடியவில்லை. தங்களுக்கு நேற்றிரவு இழைக்கப்பட்ட தீங்கின் எதிரொலியோ என அஞ்சுகிறேன். அரசியார் தங்களை அழைத்து வந்து திருநீறு கொடுத்து அரசருடைய நோயைக் குணப்படுத்த விரும்புகிறார். அதன் காரணமாகவே உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன்'' என்றார் குலச்சிறையார்.

''அமைச்சரே! வருந்த வேண்டாம். இறைவன் அருளால் உங்கள் அரசரை வருத்தி வரும் நோயைத் தீர்ப்பதோடு இன்று சமணர்களுடன் வாதிட்டு அவர்களையும் வெல்வோம்'' என்றார்.

சம்பந்தருடைய வார்த்தைகள் அமைச்சருக்கு ஆறுதலைத் தந்தன. மலர்ந்த முகத்தோடு அவரைப் பணிந்து எழுந்தார்.

சம்பந்தர் அமைச்சருடன் புறப்பட்டு நேராக ஆலயம் சென்று இறைவனைத் தொழுதார். அரசனைப் பீடித்துள்ள நோய் நீங்கவும் சமணர்களோடு வாதிட்டு வெல்லவும் தமக்குத் திரு அருள் புரியுமாறு வேண்டினார். பின்னர் நேராக அரண்மனை சென்றார்.

சம்பந்தர் பெருமான் வந்திருக்கிறார் என்று தேவி கூறியதும் படுத்திருந்த அரசன் மெல்ல தலையைத் தூக்கிப் பார்த்தான். இரு கைகளையும் கூப்பி, ''ஐயனே, வரவேண்டும்!'' என்றான். பின் பக்கத்திலிருந்த பொற்பீடத்தை எடுத்துப் போடச் சொல்லி அதில் சம்பந்தரை அமருமாறு கேட்டுக் கொண்டான்.

பரம வைரியாகக் கருதிய தோணிபுரச் சிறுவன் தங்கள் முன்னிலையிலே அரசனால் கௌரவிக்கப்படுவது கண்டு சமணர்கள் முகத்திலே கடுகடுப்பு தோன்றியது.

''மன்னவா, நம் வழக்கத்துக்கு மாறாக உள்ளது இது'' என்றனர் சீற்றத்துடன்.

''உங்கள் இருவரில் யார் என் நோயைத் தீர்க்கிறீர்கள் என்பதைப் பார்ப்போம்!'' என்ற அரசன் சம்பந்தர் பக்கம் திரும்பினான். அத்திருமுகத்தைப் பார்க்கும்போதே அவன் நோயின் வேதனை மட்டுப்பட்டது.

''ஐயனே, தங்களுக்கு எந்த ஊர்?'' என்று பக்திமேலிடக் கேட்டான்.

சம்பந்தர் பாண்டியனுடைய கேள்விக்குப் பதிலாக 'பிரம னூர் வேணுபுரம்' என்ற பதிகம் பாடினூர்.

அதைக் கேட்ட சமணர்கள் கொதித்து எழுந்தனர். வாக்கின் வன்மையைத் தங்களுக்குக் காட்டவே அரசனுடைய கேள்விக்கு அவர் பதிகம் பாடினூர் என்று எண்ணினர். தாங்களும் அங்கிருப்பதை உணர்த்த அவர்கள் தங்கள் நூல்களிலிருந்து பல பாடல்களை 'மடமட' வென்று சொல்லியபடி சம்பந்தரை வந்து சூழ்ந்து கொண்டனர்.

மங்கையர்க்கரசியார் பதறிப் போய் விட்டார். ஆத்திரத்தில் அவர்கள் சம்பந்தருக்குத் தீங்கு செய்து விடாதிருக்க வேண்டுமே என மனம் வருந்தினூர்.

''சுவாமி, காழிப்பிள்ளையோ சிறு வயது. சமணர்கள் அவருக்கு ஏதாகிலும் தீங்கு செய்து விடுவார்களோ என அஞ்சுகிறேன். முதலில் பிள்ளையார் தங்கள் நோயைத் தீர்க்கட்டும். பின்னர் அவரோடு சமணர்கள் வாதுக்கு வரட்டும்'' என்று நாயகனை வேண்டினுள்.

''அம்மையே, கவலை வேண்டாம். நான் சிறுவனுக இருந்தாலும் இறைவன் விருப்பத்தின் பேரிலேயே இங்கு வந்திருப்பதால் எதுவும் அசம்பாவிதம் நிகழ்ந்து விடாது'' என்று சொன்ன சம்பந்தர் சமணர்களைப் பார்த்து, ''உங்கள் மதக் கோட்பாடுகளைக் கூறுங்கள். அவற்றுக்குத் தகுந்த பதிலுரைப் பேன்!'' என்ருர்.

''ஐயனே, இனி வாது எதற்கு? அவர்களால் என் நோயைத் தீர்க்க முடியவில்லை. தலை குனிந்து விட்டார்கள். நீங்கள் எனக்கு அருள்புரிந்து என் நோயைக் குணமாக்க வேண்டும்'' என்ருன் பாண்டியன்.

சமணர்களுக்குப் பொறுக்கவில்லை. மயில் பீலியைக் கையிலெடுத்தனர்.

''மன்னவா! இதோ எம் தெய்வ சக்தியால் உம் இடப் பாகத்தை நோயிலிருந்து மீட்போம்'' என்று சொல்லி மந்திரங்களை முணுமுணுத்த வண்ணம் பீலியால் அரசனுடைய மேனியின் இடது பாகத்தைத் தடவினர்.

நோய் கொஞ்சமும் குறையவில்லை.

அரசனுக்குக் கோபம் தாங்கவில்லை. ''போங்கள் அப்பால்!'' என்று எரிந்து விழுந்தான். பின்னர் சம்பந்தரைப் பார்த்து கை குவித்து வணங்கினுன்.

''ஐயனே! வலி பொறுக்க முடியாது வெகு நேரமாகத் தவித்து வருகிறேன். என்மீது கருணை கூர்ந்து அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டினான்.

சம்பந்தர் திருநீறு எடுத்து அரசனுடைய உடம்பிலே வலது பக்கத்திலே தடவி 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகம் பாடினார். அரசனை வருத்தி வந்த நோய் அவன் உடலில் வலது பாகத்தை விட்டு நீங்கி இடது பாகத்தைச் சென்று அடைந்தது.

''ஐயனே, நின் கருணையே கருணை!'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்த பாண்டியன் சமணரைப் பார்த்து, ''அவர் பக்கத்து நோய் நீங்கிவிட்டது. உங்கள் பக்கத்து நோயையும் நீக்குங்கள்!'' என்றான்.

அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் மந்திரம் ஏதும் பலிக்கவில்லையே. மௌனமாக நின்றனர்.

அவர்களால் முடியாது என்பதை நன்கு உணர்ந்த பாண்டியன் சம்பந்தரை வணங்கி, ''பெருமானே, இத்தனை நாட்கள் நான் உண்மையை உணராது படுகுழியில் வீழ்ந்திருந்தேன். இன்று நீங்கள் எனக்கு உண்மையைக் காட்டிவிட்டீர்கள். என் உடலில் இடது பக்கம் குடிகொண்டுள்ள நோயையும் நீக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும்'' என்று வேண்டினான்.

சம்பந்தர் திருநீறு எடுத்து அவன் மேனியில் இடது பக்கம் பூசவே அரசனை வருத்தி வந்த நோய் முற்றிலும் நீங்கியது. அளவில்லாத மகிழ்ச்சியுடன் அரசன் எழுந்து சம்பந்தரின் அடிபணிந்து வணங்கினான். மங்கையர்க்கரசியாரும் அமைச்சரும் இறைவன் திரு அருள் கண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர்.

சமணர்கள் நிலைமை மோசமாகிவிட்டது. அரசன் என்ற கொழுக்கொம்பு அவர்களை விட்டு அப்பால் சென்று கொண்டிருக்கிறது. அதை அவர்கள் எப்படியாவது மீண்டும் பற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவர்கள் சமயமாகிற கொடி தரையில் சாயவேண்டியதுதான்.

இவ்வாறு அவர்கள் குழம்பிக் கொண்டிருக்கையில் சம்பந்தர் அவர்களைப் பார்த்து ''ம்... இப்போது சொல்லுங்கள் உங்கள் சமய விளக்கத்தை'' என்று கேட்டார்.

பார்த்தனர் சமணர்கள்; தர்க்கவாதத்தால் சம்பந்தரை வெல்ல முடியாதென்பதை உணர்ந்தனர். அனலும் புனலும் கொண்டே அவரை வெல்ல வேண்டுமென எண்ணினர்.

"இதோ எங்கள் சமயத்தின் மேன்மையைப் பிரத்தியட்ச மாகக் காட்டி உம்மை வாதில் வெல்வோம்" என்றனர்.

அரசன் கடகட-வென்று சிரித்தான்.

"நோயினுல் துடித்துக்கொண்டு கிடந்தேன். என்னைக் குணப்படுத்த முடியவில்லை. இதைத் தவிர பிரத்தியட்சம் வேறு என்ன இருக்கப் போகிறது?" என்று கேட்டான்.

"சமயக் கருத்தை எழுதிய ஏட்டை நெருப்பிலிடுவோம். யாருடைய ஏடு வேகாது இருக்கிறதோ அவரே வென்றவர்!" என்றனர்.

அரசன் பதில் கூறும் முன்பு, சம்பந்தர் அவர்களைப் பார்த்து, "நல்லதுதான். அவ்விதமே செய்வோம்!" என்று அவர்கள் சவாலை ஏற்றுக்கொண்டார்.

அரசன் என்ன செய்வான்? சம்பந்தரே அவர்கள் விருப்பத் துக்குச் சம்மதித்து விட்டாரே. அரசன் தன் அவையிலே அனைவரும் கூடியிருக்க தீக்குண்டம் கட்டி அதிலே தீ மூட்டு மாறு உத்தரவிட்டான்.

சபையிலே மக்கள் குழுமியிருந்தனர். முடிவு என்ன ஆகப் போகிறதோ என்று ஆவலோடு காத்திருந்தனர்.

தொண்டர்கள் சூழ அரச சபைக்கு எழுந்தருளிய சம்பந்தர் ஆலவாய் உறைவனை மனத்திலே தியானித்துத் தாம் பாடி யுள்ள பதிகம் எழுதப்பட்ட சுவடியை எடுத்து மேலே சுற்றி யிருந்த கயிற்றைப் பிரித்தார். பின் அதை ஓலை நறுக்குகளி டையே போட்டு எடுத்துப் பிரித்தபோது திருநள்ளாறிலே அருளிச் செய்த 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற பதிகம் உள்ள ஓலை வந்தது. அதைச் சுவடியிலிருந்து பிரித்து எடுத்தார்.

நள்ளாரப்பரை வணங்கி, "ஐயனே, எனக்கு அருள் புரிய வேண்டும்" என்று வேண்டியவராய் அரசனை நெருங்கினுர்.

'தளிரிள வளரொளி' என்ற பதிகம் பாடி "நான் வணங் கும் ஈசன் இந்த ஏட்டைக் காப்பாற்றுவராக" என்று சொல்லி குண்டத்திலே எரியும் நெருப்பிலே போட்டார். என்ன ஆச்சரி யம்? தீ நாக்குகள் சம்பந்தர் வைத்த ஏட்டை நெருங்கவே இல்லை. அதை வலம் வந்து எரிந்தன.

பாண்டியன் சமணரைப் பார்த்தான். அவர்களும் தங்கள் சமயக் கருத்தை எழுதிய ஏடு ஒன்றைக் கொண்டு வந்து குண் டத்திலிட்டனர். அடுத்த கணமே ஏடு திகுதிகுவென்று எரிந்து

போய்விட்டது. அதைக் கண்ட மக்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

சமணர்களின் முகம் தொங்கிவிட்டது. இரண்டாவது முறையாக அவர்கள் தோல்வியுற்று விட்டனரே.

சம்பந்தர் குண்டத்தை நெருங்கி அதனுள்ளிருந்து தாம் போட்ட ஏட்டை வெளியில் எடுத்தார். கொஞ்சமும் சிதையாமல் அந்த ஏடு இருப்பதைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

அரசனுக்குச் சமணர்களிடம் சீற்றம் எழுந்தது.

"உங்கள் ஏட்டை எடுங்கள்!" என்று ஏளனமாகக் கூறினான்.

எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில் கை வைக்க அவர்கள் நடுங்கினர். நீர் கொண்டு நெருப்பை அணைத்தனர். அவர்கள் நெருப்பிலிட்ட ஏடு சாம்பலாக இருந்தது.

"அப்போது தான் ஏற்கவில்லை. இப்போதாவது உங்கள் தோல்வியை ஏற்றுக்கொள்கிறீர்களா?" என்று கேட்டான் மன்னன்.

"இன்னும் ஒரு முறை பார்ப்போம்" என்றனர் அவர்கள்.

"இன்னொரு முறை பார்க்க உங்களுக்கு யோக்யதை வேறு இருக்கிறதா?" என்று கேட்டான் அரசன்.

"மன்னவா, அவர்கள் விருப்பம் போல் ஏற்போம்" என்று கூறிய சம்பந்தர் "அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"சமய உண்மை கொண்ட ஏடுகளை ஓடும் நீரில் விடுவோம். எவருடைய ஏடு எதிர்த்துச் செல்லுகிறதோ அவரே வென்றவராவார்!" என்றனர் சமணர்.

"அவ்வாறே செய்வோம்!" என்றார் சம்பந்தர்.

குலச்சிறையாருக்குச் சமணர்களிடம் மிகுந்த கோபம். தோல்வி கண்டு வரும் அவர்களை ஒரேயடியாய் நாட்டை விட்டு ஒழித்துவிட வேண்டுமென்று துடித்தார்.

"அரசே, தோற்றவரை என்ன செய்வது?" என்று கேட்டார்.

இருமுறை தோல்வி கண்ட சமணர்கள் ஆத்திரத்தில் உழன்றுகொண்டிருந்தனர். ஆகவே அமைச்சர் குறுக்கிட்டதும் அவர் மீது கோபம் கொண்டவர்களாய் தாம் என்ன பேசுகிறோம் என்று உணராது பேசிவிட்டனர்.

"தோற்றவர்களைக் கழுவில் ஏற்றித் தண்டிப்பார் மன்னன்!"

"உங்கள் அழிவு காலமே இவ்வாறு பேசச் செய்தது!" என்று மொழிந்த அரசன் எல்லோரையும் வைகைக்குப் புறப்படுமாறு உத்தரவிட்டான்.

சம்பந்தர், பாண்டியன் அவை விட்டுப் புறப்பட்டு வைகைக் கரையடைந்தார். மன்னன் நோய் நீங்கப் பெற்றமையால் எம்பெருமான் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு என்றும் அவன் அருள் வேண்டிப் பிரார்த்தித்து வைகை ஆற்றை அடைந்தார்.

சம்பந்தர் ஆற்றை நெருங்கியதும் அடியார்கள் கோஷம் இட்டு வரவேற்றனர்.

'தமிழ் விளங்கத் திருக்கழுமலத்தார் வந்தார்!
ஞானமுண்ட பிள்ளையார் வந்தார்!
சைவம்தழைக்க வைகையில் வெல்வார் வந்தார்!'

என்றெல்லாம் ஆரவாரம் செய்தனர்.

பாண்டியன் வந்து சேர்ந்ததும் சமணர்கள் முந்திக்கொண்டனர். தோற்றவர் முந்திக்கொள்வது இயற்கையன்றோ. 'அத்திநாத்தி' என்று ஏட்டிலே எழுதி வெள்ளத்தில் விட்டனர். சமணர்கள் விட்ட ஏடு வெள்ளத்தின் வேகத்தில் இழுத்துச் செல்லப்பட்டது. அதை எடுக்க அவர்கள் கரையோரமாக ஓடினர். வெள்ளமோ ஏட்டை ஆற்றின் நடுவிலே இழுத்துச் சென்று விட்டது. ஏடு மறைந்து விடவே சோர்ந்து போய் திரும்பினர் சமணர்கள்.

அவர்கள் வரும் தோற்றமே தோல்வியைக் குறித்தது. சம்பந்தரை நெருங்கி, "உம்முடைய ஏட்டை வெள்ளத்தில் விடும், என்ன ஆகிறதென்பதைப் பார்ப்போம்!" என்றனர்.

அரசன் சம்பந்தரைப் பார்த்தான்.

ஆளுடைய பிள்ளையார் ஈசனைத் தியானித்து 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்ற பதிகம் பாடினார். அதனை ஏட்டிலே எழுதி, "எம்பெருமானே முழுமுதற் பொருள் என்பது உண்மையாயின் இப்பதிகம் எழுதிய ஏடு வெள்ளத்தை எதிர்த்துச் செல்லட்டும்" என்று சொல்லி வெள்ளத்திலே விட்டார்.

நீரின் வேகத்திலே ஏடு அடித்துச் செல்லப்பட்டுவிடும் என்று சமணர்கள் நீரின் ஓட்டப் பகுதியைப் பார்த்தனர். சம்பந்தர் விட்ட ஏடு காணவில்லை. அதுதான் நீரின் வேகத்தை எதிர்த்துச் செல்கிறதே!

அடியார்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தார். சமணர்கள் திடுக்கிட்டுத் திரும்பினர். அப்போதுதான் சம்பந்தர் விட்ட ஏடு நீரின் வேகத்தை எதிர்த்துச் செல்வதைக் கண்டனர். அதே சமயம் மற்ெருரு அதிசயம் நிகழ்ந்தது. 'மன்னவன் ஓங்குக' என்று சம்பந்தர் பாடியதால் அரசனுடைய கூன் விழுந்த முதுகும் நிமிர்ந்தது.

அரசனின் மகிழ்ச்சி அளவிட முடியாதது. அமைச்சரை நோக்கி, "அமைச்சரே, ஐயன் எழுதிய ஏடு தங்குமிடம் சென்று அதை எடுத்து வாரும்" என்ருன்.

குலச்சிறையார் அரசனையும் சம்பந்தரையும் வணங்கி குதிரை மீதேறிச் சென்ருர்.

அமைச்சருக்கு அதிக சிரமம் கொடுக்கக் கூடாதென்று சம்பந்தர் ஏடு நிற்க 'வன்னியு மத்தமுமதி' என்ற பதிகம் பாடினுர். நீரிலே எதிர்த்துச் சென்ற ஏடு ஓரிடத்திலே 1சிவாலயத்தின் அருகில் சென்று ஒதுங்கியது. குலச்சிறையார் ஏட்டை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினுர். பின் சிவாலயம் சென்று எம்பெருமானைத் தரிசித்து மகிழ்ந்து புனிதமான அந்த ஏட்டைத் தலையிலே தாங்கியவராய் திரும்பினுர்.

ஏடு தாங்கியவராய் திருப்பிய அமைச்சரைக் கண்டதும் அடியார்களுடைய ஆரவாரம் எல்லை மீறியது. "சைவம் மீண்டது; சமணம் அழிந்தது" என்றெல்லாம் கூச்சலிட்டுத் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டினர்.

"பெருமானே, ஈசனே முழுமுதற் கடவுள் என்பது நிரூபணமாகி விட்டது. இத்தனை நாட்கள் அதை உணராது படுகுழியில் விழுந்திருந்த நான் இன்று தங்கள் கருணையால் கரையேறி விட்டேன்" என்று சம்பந்தருடைய பாதங்களில் பணிந்து வணங்கிய மன்னன் இரு கைகளையும் ஏந்தி அவரிடமிருந்து திருநீறு பெற்று நெற்றியிலே பூசிக் கொண்டான். இத்தனை நாட்களாகத் தங்கள் உள்ளத்தை உறுத்தி வந்த வேதனை மறைந்தது கண்டு அரசியும் அமைச்சரும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் திளைத்தனர்.

சம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டு எம்பிரான் ஆலயம் சென்று தமக்கு அருள் செய்த இறைவனைத் தரிசித்து 'வீடலால வாயிலாய்' என்ற பதிகம் பாடித் தொழுதார். பின்னர் அரசனிடம் விடைபெற்றுத் தம் மடம் திரும்பினுர்.

---

1 திரு ஏடகம் என்னும் இந்த இடம் சோழவந்தானுக்குத் தென்மேற்கே இரண்டரை மைலில் உள்ளது.

வாதிலே தோற்ற சமணர்களை அவர்கள் விதித்த நிபந் தனைப்படி குலச்சிறையார் கழுவிலேற்றித் தண்டித்தார். எண் ணாயிரம் சமணர்கள் கழுவேறினர். பாண்டிய நாட்டிலே சைவம் மீண்டும் தழைத்தது. மக்கள் எம்பெருமானைப் பக்தி யோடு வழிபடலாயினர்.

54. வெள்ளத்தில் விரைந்த ஓடம்

சம்பந்தர் சோழ நாட்டை விட்டுப் புறப்பட்டு சமணர் களுடன் வாதிட பாண்டிய நாடு சென்றிருக்கிறார் என்ற செய்தி சீர்காழியிலிருக்கும் சிவபாதவிருதயருக்கு எட்டியது. குமாரனுக் குத் தீங்கு ஏதும் நேரிடாதிருக்க வேண்டுமே என அவர் துடித் தார். சம்பந்தரை நேரில் பார்த்தால்தான் அவர் மனம் அமைதி கொள்ளும் போல் தோன்றியது. உடனே சீர்காழி விட்டுப் புறப்பட்டு மதுரை நோக்கிப் பிரயாணப்பட்டார்.

தந்தையார் வருகிறார் என்பதை அறிந்ததும் சம்பந்தர் மடத்தின் வாசலுக்கு வந்து தந்தையாரைப் பணிந்து அவரை வரவேற்றார். மகிழ்ச்சியோடு சம்பந்தரைத் தழுவி ஆனந்தக் கண்ணீர் விட்டார் சிவபாதவிருதயர்.

''வாகீசர் பெருமான் சமணர்களிடம் தாம் பட்ட கொடுமை களைச் சொல்லவில்லையா? மதுரை போயிருப்பதாகக் கேள்விப் பட்டதிலிருந்து நல்லபடியாகப் பார்க்க வேண்டுமே எனத் துடித்துக் கொண்டிருந்தேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டவ ராய் நாத் தழுதழுக்கக் கூறினார்.

''எங்கு சென்றாலும் தோணியப்பர் என்னைக் கைவிட மாட் டார் அன்றோ!'' என்று கூறி சம்பந்தர் 'மண்ணினல்ல வண் ணம்' என்ற பதிகம் பாடி தோணிபுரத்து இறைவனைப் போற் றினார்.

சம்பந்தர் மதுரை விட்டுப் புறப்பட நிச்சயித்து அரசனுக் குச் சொல்லி அனுப்பினார். அவரை விட்டுப் பிரிய அரசனுக் கும் அரசியாருக்கும் மனமில்லை. போகக் கூடாது என்று சொல்லவும் அவர்களுக்கு நா எழவில்லை. கண்களில் நீர் மல்க அவர்கள் தவித்தனர்.

அவர்கள் உள்ளத்திலே குமிழுட்டு எழும் உணர்ச்சிகளைச் சம்பந்தர் உணர்ந்தார்.

''என்பால் நீங்கள் கொண்டுள்ள பிரியத்தை நான் நன்கு உணர்கிறேன். இருப்பினும் தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசிக்க வேண்டும் என அவா என்னுள் எழுகிறது. ஆகவே

நீங்கள் இப்பாண்டிய நாட்டிலுள்ள சிவ ஸ்தலங்களுக்கு என்னோடு வந்து தரிசனம்செய்து வழியனுப்ப வேண்டும்'' என்றார்.

அவர்கள் விவரிக்க இயலாத மகிழ்ச்சியில் திளைத்தவர்களாய் சம்பந்தரோடு புறப்பட்டனர்.

ஆலவாய் விட்டுப் புறப்பட்ட சம்பந்தர் திருப்பரங்குன்றம், திரு ஆப்பனூர்1, திருப்புத்தூர், திருபூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல்2, திருக்குற்றாலம், திருநெல்வேலி ஆகிய பதிகளைத் தரிசித்துக் கொண்டு ராமேச்வரம் போய்ச் சேர்ந்தார் சேதுக்கரையிலே செங்கண்மால் பூஜை செய்த சிவபெருமானைப் பணிந்து பதிகம் பாடித் தொழுதார். சமுத்திரக்கரையிலிருந்தபடியே இலங்கையில் திருக்கோணமலை, திருக்கேதீச்சுரம் ஆகிய இரு தலங்களில் எழுந்தருளியிருக்கும் ஈசனைப் பாடி மகிழ்ந்து புறப்பட்டார்.

பின்னர் அங்கிருந்து வடதிசையாகப் பிரயாணப்பட்டு திருவாடானை, திருப்புனவாசல் ஆகிய தலங்களில் வழிபாட்டை முடித்துக் கொண்டு மணமேல்குடி சென்று அடைந்தார். குலச்சிறையார் பிறந்த அப்பதியில் சில நாட்கள் தங்கி பக்கத்திலுள்ள தலங்களை தரிசித்து வந்தார்.

பாண்டிய நாட்டை விட்டுப் புறப்பட வேண்டிய தருணம் வந்தது. அரசியாருக்கும் அரசருக்கும் அவரை விட்டுப் பிரிய மனமில்லை அவர் செல்லுமிடங்கள் தோறும் தாங்களும் வருவதாகத் தெரிவித்தனர்.

சம்பந்தர் அதற்கு உடன்படவில்லை. அரசன் நாட்டை விட்டுப் புறப்பட்டு விட்டால் ராஜாங்கம் நடக்க வேண்டாமா?

''மன்னவா, நீ திரும்பிச் சென்று செவ்வென அரசாட்சி நடத்தி சைவத் தொண்டில் ஈடுபடுவதையே நான் விரும்புகிறேன்'' என்றார் சம்பந்தர்

அதற்குமேல் அரசன் மறுத்துப் பேசுவானா? சம்பந்தரைப் பணிந்து தொழுது அவர் ஆசி பெற்று மதுரை திரும்பினான்.

மணமேல்குடியிலிருந்து பிரயாணப்பட்ட சம்பந்தர் திருக்களர்3 திருப்பாதாளீச்சுரம்4 முதலான பதிகளைத் தரிசித்துக்

---

1 மதுரைக்கு வடக்கே ஒன்றரை மைல்.

2 திருப்புவனத்துக்குத் தெற்கே பதினைந்து மைல்.

3 திருத்துறைப்பூண்டிக்குத் தென் மேற்கே ஒன்பது மைலில் உள்ளது. இன்றைய பெயர் கைப்பனுங்குளம் ஆகும்.

4 மன்னார்குடிக்கு வடமேற்கே ஒன்றரை மைல்.

கொண்டு முள்ளிவாய்க்கால் 1 என்னும் ஆற்றை அடைந்தார். அக்கரையில் திருக்கொள்ளம்புதூர் 2 அமைந்திருந்தது.

சம்பந்தர் வந்த நேரம் ஆற்றின் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு வெள்ளம் சென்றது. சுழியிட்டுச் செல்லும் அவ்வெள்ளத்தில் ஓடம்விட அஞ்சி ஓடக்காரர்கள் தங்கள் தங்கள் ஓடங்களை கரையிலுள்ள மரங்களுடன் இழுத்துக் கட்டிவிட்டுப் போய்விட்டனர்.

சம்பந்தருக்கு வெள்ளம் வடியும் வரை காத்திருந்து பின்னர் அக்கரை போக விருப்பமில்லை. கொள்ளம்புதூர் உறையும் வில்வவனேச்வரரை அப்போதே தரிசிக்க ஆவல் அவரை உந்தியது. எம்பெருமானைத் தியானித்து கட்டியிருந்த ஓடம் ஒன்றை அவிழ்த்துத் தம்முடன் வந்த அடியார்களை அதில் ஏறச் செய்தார். பின் தாமும் அதில் ஏறிக்கொண்டு 'கொட்டமே கமழும்' என்னும் பதிகம் பாடினார் இறைவன் திருவருளால் ஓடம் நீரிலே மிதந்து சென்று அக்கரை சேர்ந்தது. எம்பெருமான் ஆலயம் சென்று இறைவனைத் தொழுது மனம் களித்த சம்பந்தர் சில நாட்கள் அங்கே தங்கி தினமும் ஈசனைத் தொழுது வந்தார்.

இவ்வாறு இருந்து வரும்போது ஒரு நாள் ஆலவாயிலே தீயிலிட்டு ஏடு வேகாது அருள் புரிந்த நள்ளாரப்பரைத் தரிசிக்க விருப்பம் உண்டாயிற்று. மறுநாளே அவ்வூரை விட்டுப் புறப்பட்டு வழிகள் தோறும் உள்ள பதிகளில் எம்பெருமானைத் தரிசித்துக்கொண்டு திருநள்ளாறு சேர்ந்தார். இறைவன் திருக்கோயில் சென்று அவரைத் தரிசித்து மனம் மகிழ்ந்தார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருத்தெளிச்சேரி 3 சென்றார். ஊரை அடைந்ததும் வழக்கம்போலத் தொண்டர்கள் முத்துச் சின்னங்களைத் தாங்கிக்கொண்டு சிவிகைக்கு முன்னால், "சிவம்பெருக்கும் சீலர் வருகிறார்; புறச்சமய கோளரி வருகிறார்; சமணரை வென்ற சம்பந்தர் வருகிறார்" என்று அறைகூவிச் சென்றனர்.

ஆலயம் சென்று தரிசனத்தை முடித்துக்கொண்டு அவர்கள் புறப்பட்டனர். வரும் வழியிலே பௌத்தர்கள் வசிக்கும் போதிமங்கை இருந்தது. அதைச் சமீபித்ததும் பௌத்தர்கள் கூட்டமாக வந்து வழிமறித்தனர்.

---

1 ஓடம்போக்கி ஆறு.

2 கொரடாச்சேரிக்கு மேற்கே நான்கு மைல்.

3 காரைக்கோயிற்பத்து எனப்படும் இன்றைய ஊராகும்.

''நாங்கள் இருக்கும்போது நீங்கள் எவ்வாறு கோஷமிட்டுச் செல்ல முடியும்? இந்த இடம் எங்களைச் சேர்ந்தது. எங்களை அவமதிக்கும் வகையில் இருக்கிறது உங்கள் கோஷம். வாய் மூடிச் செல்வதானால் அனுமதிப்போம் இல்லையேல் திரும்பி வந்த வழியே சென்று வேறு பாதையில் போகலாம்'' என்று திமிராகக் கூறினார்கள்.

தொண்டர்களில் சிலர் சிவிகையிலிருக்கும் சம்பந்தர் பெருமானிடம் அவர்கள் மேலே செல்ல விடாது தடுப்பதைத் தெரிவித்தனர்.

''அவர்களுக்கு அடங்கி நாம் செல்ல வேண்டுமா? நம் இருவரில் யார் மேலானவர் என்பதைப் பார்ப்போம். அவர்களுள் யாரையாவது என்னோடு வாதிட்டு வெற்றி காண வருமாறு அழையுங்கள்'' என்றார் சம்பந்தர்.

பௌத்தர்கள் சம்பந்தரைச் சாதாரணச் சிறுவன் என்றே எண்ணிவிட்டனர். அவரை வாதில் வென்று வாகை சூடலாம் என்று புத்தநந்தி என்பவன் தலைமையில் வந்தார்கள்.

சம்பந்தர் பெருமான் இறைவனை வேண்டி **'புத்தர் சமண கழுக்கையர்'** என்ற பதிகம் பாடி அடியார்களைத் தடுத்து நிறுத்தி அவமதித்த புத்தநந்திக்குத் தண்டனையாக அவன் தலையில் இடி விழுந்து தலை துண்டிக்கவேண்டும் என்றார். அதே நேரத்தில் கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல். அதைத் தொடர்ந்து காது செவிடுபடும்படியான ஓர் இடி. புத்தநந்தியின் 'ஐயோ!' என்ற அலறல் கேட்டது. திடுக்கிட்ட பௌத்தர்கள் தலை சிதறிக் கிடக்கும் புத்தநந்தியைப் பார்த்தார்கள். அடுத்த கணம் அவர்கள் ஏன் அங்கு நிற்கிறார்கள். அலறிக் கொண்டு போதிமங்கையுள் ஓடினர்.

சம்பந்தர் சிவிகையைப் பக்கத்திலே உள்ள ஒரு மண்டபத்தில் இறக்கச் சொன்னார். அங்கு தங்கியபடி ஆட்களை அனுப்பி பௌத்தர்களை வாதுக்கு வருமாறு அழைத்தார்.

''சிவ சிவ! ஹர ஹர!'' என்று கோஷித்துக்கொண்டே அடியார்கள் போதிமங்கையில் நுழைந்தனர். அவர்களைக் கண்டதும் பௌத்தர்கள் நிலைகுலைந்தனர். புத்தநந்திக்கு நேர்ந்தது போல் தங்களில் யாருக்காவது ஏதாகிலும் நேரிட்டு விடுமோ என அவர்கள் அஞ்சினர். அடியார்கள் சம்பந்தர் பெருமானுடைய அழைப்பைத் தெரிவித்து அவர்கள் வருகைக்காகப் பக்கத்து மண்டபத்திலே அவர் காத்திருப்பதாகக் கூறினர்.

பௌத்தர்கள் சாரிபுத்தன் என்பவன் தலைமையில் வந்தனர். சம்பந்தர் அவர்களுடைய சமயத்தைப்பற்றி எடுத்துக்

கூறச் செய்தார். பின் அவர்கள் வாதத்துக்குச் சரியான பதில் கொடுத்துச் சைவமே தொன்மையானது என நிலை நாட்டினூர். சாரிபுத்தனுல் மேலே வாதிட முடியவில்லை. தன் தோல்வியை ஒப்புக்கொண்டு சைவத்தைச் சார்ந்தான். தலைவனுகக் கொண் டவனே சைவம் சார்ந்து விட்டபோது மற்றவர்கள் என்ன செய் வார்கள்? அவர்களும் சைவ மதத்தைத் தழுவினர். சம்பந்தரை வணங்கி அவரிடம் திருநீறு பெற்று நெற்றியிலே பூசி 'ஹர ஹர, சிவ சிவ' என்று கோஷமிட்டனர்.

பின்னர் சம்பந்தர் திருக்கடவூர் சென்று காலாந்தகனைத் தரிசித்தார். வாகீசர் திருப்பூந்துருத்தியில் இருப்பதாகக் கேட்டு அவரைப் பார்க்க எண்ணம் கொண்டு திருப்பூந்துருத்தி புறப் பட்டார்.

சம்பந்தர் வருகிருர் என்று அறிந்ததும் அவரை எதிர் கொண்டு வரவேற்க வாகீசர் தம் கூட்டத்தாருடன் ஊரின் எல்லைக்கு வந்து காத்திருந்தார்.

திருப்பூந்துருத்தி எல்லையை அடைந்த சம்பந்தர், அங்கே திரண்டிருந்த அடியார்களிடம், "அப்பர் எங்கே?" என்று கேட்டார்.

"அடியேன் இதோ இருக்கிறேன். தங்களைச் சிறிது தூரம் சுமந்து வரும் பாச்கியம் அடியேனுக்குக் கிட்டியது" என்று சொல்லிச் சிவிகையின் கீழிருந்து வெளிப்பட்டார் வாகீசர்.

அப்போதுதான் சம்பந்தருக்கு அவர் சிறிது தூரம் அடி யார்களோடு அடியாராய் கலந்து தம்மைச் சுமந்து வந்திருக் கிருர் என்பது தெரிந்தது. சிவிகையிலிருந்து பதை பதைத்து இறங்கினுர்.

"சுவாமி, என்ன காரியம் செய்தீர்கள்? அபசாரம் அல் லவோ செய்து விட்டேன்" என்று சொல்லியவாறு வாகீசரைப் பணிந்து வணங்க முன்வந்தார். அதற்குள் வாகீசரே அவர் பாதங்களைப் பணிந்து எழுந்து, "ஐயனே, வெகு நாட்களாக இந்தப் பாக்கியத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். இன்று தான் என் விருப்பம் நிறைவேறியது" என்ருர்.

பின்னர் இருவரும் திருமடம் சென்று தங்கினர். சம்பந்தர் மதுரையில் தமக்கேற்பட்ட அனுபவத்தை அவருக்கு விவரித் தார் பாண்டிய மன்னனேடு தாம் சென்ற சிவஸ்தலங்களைப் பற்றி எடுத்துக் கூறினுர். அவற்றைக் கேட்டபோது, வாகீச ருக்குத் தாமும் பாண்டிய நாட்டுத் தலங்களைத் தரிசித்து மகிழ வேண்டுமென்ற ஆவல் எழுந்தது.

அதேபோல வாகீசர் தாம் தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசித்து வந்ததுபற்றித் தெரிவித்ததும் சம்பந்தர் பெருமான் தாமும் அத்தலங்களைத் தரிசிக்க எண்ணம் கொண்டார். வாகீச ரிடம் விடைபெற்றுக் கொண்டு காவிரியைக் கடந்து வடகரை யாகப் பிரயாணப்பட்டு திருநெய்த்தானம், திருவையாறு, திருப்பழனம் முதலான ஊர்களில் தரிசனம் செய்து சீர்காழி அடைந்தார்.

55. தொண்டை நாட்டில் தோணிபுரச் செம்மல்

சீர்காழியிலே சில நாட்கள் தங்கி தோணியப்பரைத் தரிசித்து வந்த ஆளுடைய பிள்ளையார் தந்தையாரை வணங்கி அவரிடம் விடைபெற்றுத் தொண்டை நாட்டு யாத் திரை புறப்பட்டார். சிவபாத விருதயர் தாமும் உடன் வருவ தாகக் கூறிக் கிளம்பினர். சம்பந்தர் அவரைச் சீர்காழியிலேயே இருந்து யாகம் செய்து எம்பெருமானைத் தரிசித்துக் கொண் டிருக்குமாறு சொல்லித் தடுத்து விட்டார்.

சீர்காழி விட்டுப் புறப்பட்ட சம்பந்தர் சிதம்பரம் சென்று நடராஜப்பெருமானைத் தரிசித்தார். பிறகு அங்கிருந்து கிளம்பி திருத்தினைநகர், திருமாணிக்குழி ஆகிய பதிகளைத் தரிசித்துக் கொண்டு திருப்பாதிரிபுலியூரை அடைந்தார். வாகீசப் பெருந் தகையாரைப் பத்திரமாகக் கரையேற்றிய தோன்றுத்துணை யீசரைத் தொழுது பாடி மகிழ்ந்தார்.

திருப்பாதிரிபுலியூரிலிருந்து பிரயாணமான புகலிவேந்தர் திருவடுகூர், திருவக்கரை1 ஆகிய ஊர்களில் இறைவனுடைய தரிசனத்தை முடித்துக்கொண்டு திருவதிகை போய்ச் சேர்ந் தார். வாகீசருக்கருளிய வீரட்டானேசுவரை உள்ளம் குளிர இருந்து தரிசித்துக் கொண்டு புறப்பட்டு திருவாமாத்தூர்,2 திருக்கோவலூர், திரு அரையணிநல்லூர்3 சென்று எம்பெரு மானைத் தொழுது பிரயாணப் பட்டுத் திருவண்ணுமலை சேர்ந் தார். அடிமுடியறியாது கழலாகத் திருமாலுக்கும், நான்முக னுக்கும் காட்சி தந்த பெருமானைக் கண்டு களிகூர்ந்து

---

1 திண்டிவனம் புதுவை பஸ் வழியில் மண் மேட்டிலிருந்து மூன்று மைல். திருவக்கரைக்கு மேற்கே ஐந்து மைலில் திரு வடுகூர் உள்ளது.

2 விழுப்புரத்துக்கு வட.மேற்கே நான்கு மைல்.

3 அறகண்ட நல்லூர்.

'உண்ணமுலை உமையாளொடு' என்ற பதிகம் பாடினார். அப் பதியில் சில நாட்கள் தங்கி உள்ளம் குளிர தினமும் அண்ணாமலையானைத் தரிசித்து வந்தார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருவோத்துரை அடைந்தார். அவ்வூரிலிருந்த அடியார்கள் சம்பந்தர் வருவதை அறிந்ததும் அவரை உயர்ந்த முறையில் வரவேற்க விரும்பினர். தெருவெங்கும் பந்தல்கள் நாட்டி வாழை, கமுகு முதலானவற்றை அவற்றின் வாயில்களில் அலங்காரமாகக் கட்டினர். வீதிகளில் நீர் தெளித்து மலர் தூவி அன்பர் செல்லும் பாதை முழுவதும் புனிதமாக விளங்கச் செய்தனர். சம்பந்தர் அவர்கள் அன்புமிக்க உபசாரத்தில் கட்டுண்டவராய் அவர்கள் சூழ எம்பிரான் ஆலயம் சென்றார்.

வேதங்கள் பூசித்து வழிபட்ட வேதநாதரைத் தொழுது சம்பந்தர் தரிசனம் செய்தார் ஆலயப் பிராகாரத்தில் அவர் தங்கியிருக்கையில் ஒருவர் சோர்ந்த முகத்தோடு வந்து வணங்கினார்.

''ஐயனே, எம்பெருமானுக்கு என்று நான் பனைமரங்கள் வளர்த்திருக்கிறேன். ஆனால் என்ன காரணத்தினாலோ அவை ஆண்பனைகளாக நிற்கின்றன. குலை ஈனாது நிற்கும் அவை இவ்வூரிலுள்ள சில சமணர்களுக்குச் சிரிப்புக்கு இடம் அளித்துள்ளன. அதைச்சுட்டிக் காட்டி எம்பெருமானையும் நம் சமயத்தையும் ஏளனமாகப் பேசுகின்றனர். அப் பனைகள் குலை தள்ள அனுக்கிரகம் செய்யவேண்டும்'' என்று அம்மனிதர் பிரார்த்தித்தார்.

சம்பந்தர் அப் பிரார்த்தனைக்கு இணங்கி வேதநாதர் சந்நிதிக்குச் சென்று தொழுது, அன்பர் அவருக்கென்று வளர்த்து விட்டிருக்கும் பனை மரங்கள் குலை தள்ள அருளவேண்டுமென்று இறைஞ்சிக் கேட்டு 'பூத்தேர்ந்தாயன கொண்டு' என்ற பதிகம் பாடினார். அப்போதே இறைவனும் அனுக்கிரகம் செய்துவிட்டார். அன்பர் ஈசனுக்காக வளர்த்துவிட்டிருந்த பனைகள் அதிசயிக்கத்தக்க முறையில் குலைகள் ஈந்து விளங்கின.

சம்பந்தர்பால் இறைவன் கொண்டுள்ள அன்பைக்கண்டு ஊரிலுள்ளவர்கள் அதிசயித்தனர். ஆண் பனைகள் குலை ஈந்த சம்பவம் அவ்வூரிலுள்ள சமணர்களுக்குப் பேரிடியைக் கொடுத்தது. அதன்பிறகு அவர்கள் ஏன் வாய்திறக்கிறார்கள்? சைவ மதத்தைத் தழுவியவர் போக எஞ்சியவர் ஊரைவிட்டு வெளியேறி விட்டனர்.

திருவோத்தூரிலிருந்து புறப்பட்ட சம்பந்தர் திருமாகரல்1, திருகுரங்கணிமுட்டம்1, முதலான தலங்களைத் தரிசித்தபடி காஞ்சி நோக்கிச் சென்றார்.

அடியார்கள் திரண்டெழுந்து அளித்த கோலாகலமான வரவேற்பை ஏற்றுக் காஞ்சியில் நுழைந்த சம்பந்தர் பெருமான் தோரணங்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகள் வழியே சென்று கச்சி ஏகாம்பரரைத் தரிசித்து 'மறையானை' என்று தொடங்கும் பதிகம் பாடிப் போற்றினார். எம்பெருமானுடைய திவ்விய தரிசனம் கண்டு அகம் குழைந்து அஞ்சலி செய்தார். பின் திருக்காமக்கோட்டம்2 சென்று தொழுதார். நெறிக்காரைக்காடு3, அனேகதங்காவதம்3, மேற்றளி3, முதலான சிவாலயங்களுக்கும் சென்று எம்பெருமானை வழிபட்டார்.

காஞ்சியில் சிலதினங்கள் தங்கி வழிபாடு செய்துகொண்டு சம்பந்தர் பாலாற்றின் தென்கரையாகச் சென்று திருமாற்பேறு அடைந்தார். பின் அங்கிருந்து திருவலம் சென்று சுவாமி தரிசனம் முடித்துக்கொண்டு பாலாற்றின் வட கரையில் ஏறி அங்குள்ள பதிகளைத் தரிசித்துக் கொண்டு இலம்பையங்கோட்டூர்4, திருவிற்கோலம்4, ஆகிய ஊர்களுக்கு எழுந்தருளி திருஊறல்3 சென்று பதிகம்பாடி வழிபட்டு திருவாலங்காடு சென்று அடைந்தார்.

காரைக்கால் புனிதவதியார் தலையாலே நடந்து வந்த தலம் ஆதலால் அப்புனித பூமியை தாம் மிதிக்க அஞ்சிய சம்பந்தர் இரவுப் பொழுதைக் கழிக்க ஊருக்கு வெளியே ஓரிடத்தில் தங்கினார்.

சம்பந்தருடைய செந்தமிழ் பாசுரத்தைக் கேட்க விரும்பிய இறைவன் அவரை விட்டு விடுவாரா? இரவு நித்திரையிலே ஆலவனத்துள் அமர்ந்தருளிய ஈசன் சம்பந்தருடைய கனவிலே தோன்றி "அப்பனே, நம்மைப் பாட மறந்தனையோ?" என்று கேட்டு மறைந்தார்.

---

1 காஞ்சிக்குத் தெற்கே பத்து மைலில் மாகரலும், ஆறு மைலில். குரங்கணிமுட்டமும் உள்ளன.

2 காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயம்.

3 காஞ்சியிலுள்ள சிவாலயங்கள்.

4 கடம்பத்தூருக்குத் தென் மேற்கே ஒரு மைலில் இலம்பையிங்கோட்டூரும், கூவம் என்று இப்போது அழைக்கப்படும் திருவிற்கோலம் ஆறு மைலிலும் உள்ளன.

5 தக்கோலம்.

திடுக்கிட்டுக் கண்விழித்து எழுந்த சம்பந்தர் இறைவன் தம்மிடம் கொண்டுள்ள பேரன்பை எண்ணி மகிழ்ந்து அப்பெருமான் மனம் குளிர அங்கிருந்தவாறே 'துஞ்சவாருந் தொழுவிப்பாரும்' என்ற பதிகம் பாடினுர்.

பொழுது விடிந்ததும் இரவு எம்பெருமான் தோன்றி திருவருள் செய்ததைத் தொண்டர்களுக்குத் தெரிவித்து மனம் மகிழ்ந்த சம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டு திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை முதலான பதிகளை வணங்கிக் கொண்டு காளத்தியப்பர் எழுந்தளியிருக்கும் திருக்காளத்தியை அடைந்தார். கண்ணப்பருக்கு வலப்பக்கம் அளித்த கைலாயநாதனைத் தரிசித்து அப்பதியில் தங்கியிருக்கும் நாளையில், அங்கிருந்தவாறே உத்தரகைலாசம், திருக்கேதாரம், திருக்கோகர்ணம், திருப்பருப்பதம், இந்திர நீலப் பருப்பதம் ஆகிய தலங்களில் உறையும் பரமனை மனக்கண்ணில் தரிசித்து அவர்கள் மகிழப் பதிகங்கள் பாடினுர்.

காளத்தியில் தங்கி ஆசைதீர தரிசனம் செய்துகொண்டு புறப்பட்ட சம்பந்தர் தாம் சென்ற வழியே திரும்பி பாலாற்றின் வடகரையை அடைந்து திருவேற்காடு சேர்ந்தார். பின் வழியிலுள்ள திருப்பதிகளையும் தரிசித்துக் கொண்டு திருவலிதாயம்1 சென்று வலிதாயநாதரைப் பாடி, ஒற்றியூர் போய்ச் சேர்ந்தார்.

56. இறந்தவளை உயிர்ப்பித்த இறைவன் திருமகனுர்

திருமயிலாபுரியில் சிவநேசன் என்பவர் இருந்து வந்தார். வைசியர் குலத்திலே பிறந்த அவர் குபேரனுக்கு ஒப்பாகச் செல்வத்திலே திகழ்ந்தார். செல்வத்திலே நிறைந்தது போலவே சிவநேசர் பக்தியிலும் நிறைந்து விளங்கினுர். கபாலீச்சுரத்திலே உறையும் எம்பெருமானிடம் அளவில்லாத பக்தி பூண்டவர். சீர்காழிப்பதியில் அவதரித்து இறைவன் திருவருள் பெற்ற சம்பந்தரிடம் அவருக்கு மிகுந்த ஈடுபாடு. அப்பெருமானைப் பற்றிய செய்திகளை மிகவும் விரும்பிக் கேட்டு மகிழ்வார்.

சிவநேசருக்குக் குழந்தை பிறக்காத குறை ஒன்று மனத்தை உறுத்தி வந்தது. பெரியவர்களிடம் தன் குறையை

---

1 பாடி எனப்படும் இத்தலம் வில்லிவாக்கத்துக்குத் தென் மேற்கே ஒன்றரை மைலில் உள்ளது.

எடுத்துக் கூறி அதற்குப் பரிகாரம் என்ன செய்யலாமெனக் கேட்டார். அவர்களும் மகேச்வர பூஜை செய்யுமாறு தெரிவித்தனர். செட்டியார் மிக்க சிரத்தையோடு மகேச்வர பூஜை செய்தார். அவர் மனக் குறையைப் போக்க இறைவனும் திருவுள்ளம் கொண்டார்.

சிவநேசருக்கு அழகிய பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு பூம்பாவை எனப் பெயரிட்டனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள் பூம்பாவை. செட்டியார் அருந்தவப்பயனுய் பெற்ற பெண்ணை கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தார். அவளைத் தம் மாளிகைத் தோட்டத்திலுள்ள கன்னிமாடத்தில் தோழியருடன் தங்கச் செய்தார்.

அவ்வமயம் சம்பந்தர் பெருமான் பாண்டிய நாட்டிலே சமணர்களுடன் வாதிட்டு வென்று அந்நாட்டு அரசனைச் சைவ மதத்தைத் தழுவச் செய்த செய்தி செட்டியாருக்கு எட்டியது. சிவநேசர் அடைந்த ஆனந்தம் அளவிட முடியாதது. எம்பெருமானுக்குத் தொண்டு செய்யும் ஆளுடைய பிள்ளையாருக்குத் தாமும் தம் செல்வமும் தம் குமாரத்தியும் அடிமை எனச் சொல்லி மகிழ்ந்தார்.

இவ்வாறு இருந்து வரும்போது ஒருநாள் பூம்பாவை தோட்டத்திலே தோழியருடன் மலர் கொய்து கொண்டிருக்கும் போது செடியின் மறைவிலே பதுங்கியிருந்த அரவம் ஒன்று அவளைத் தீண்டி விட்டது.

''பாம்பு கடித்து விட்டதே!'' என்று கையை உதறினுள் பாவை. தோழியர் ஓடி வந்தனர். அதற்குள் விஷம் ஏறி மயங்கி விழுந்து விட்டாள். அவளைத் தூக்கிச் சென்று கன்னிமாடத்தில் கிடத்திவிட்டுச் செட்டியாருக்குச் செய்தி அறிவித்தனர். விஷத்தை இறக்கும் மந்திரம் தெரிந்தவர்களையும் வைத்தியர்களையும் அழைத்துக் கொண்டு ஓடி வந்தார் சிவநேசர். யார் வந்து என்ன பயன்? பூம்பாவையின் உயிரை அவர்களால் மீட்க முடியவில்லை.

மகள் இறந்து விட்டதைக் கண்டு துடியாய் துடித்தார் சிவநேசர் அவளை உயிர்ப்பித்து விடுபவர் யாராக இருந்தாலும் அவருக்குத் தம் செல்வம் அனைத்தையும் கொடுப்பதாக அறிவித்தார். அந்த அறிவிப்பு நகரிலும் சுற்றுப்புறங்களிலும் பறை மூலம் அறிவிக்கப்பட்டது.

சிவநேசருடைய அறிவிப்பைக் கேட்டு வைத்தியர்கள் பலர் வந்தனர். அரசனுடைய அரண்மனை வைத்தியர்களும் வந்து

பார்த்தனர். மூன்று நாட்களாகி விட்டன. எந்தப் பயனும் கிட்டவில்லை.

சிவநேசர் நம்பிக்கை இழந்தார். இனி மகள் திரும்ப மாட்டாள் என்பது உறுதியாகி விட்டது. சம்பந்தப் பெருமானுக்கு உரிமையாக்கிய அவளை, அவருக்குக் கண்ணாரக் கண்டு களிக்கத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார். அது நிறைவேறவில்லை. அவரைச் சந்திக்கும்போது அவளுடைய அஸ்தியையும் சாம்பரையும் சேர்ப்பிக்க விரும்பினூர். அவ்வாறே அவள் உடலைத் தகனம் செய்து எலும்புகளையும் சாம்பலையும் ஒரு பொற்குடத்திலிட்டு அதற்கு ஆபரணங்களை அணிவித்து பட்டாடை சுற்றி கன்னிமாடத்தில் அவள் படுத்த மஞ்சத்திலேயே வைத்தார். தினமும் இரு வேளைகளிலும் அதற்கு உணவு படைத்து நிவேதித்தார்.

இவ்வாறு இருந்து வரும்போது ஞானசம்பந்தர் தொண்டை நாட்டுப் பிரயாணத்தை மேற்கொண்டு ஒற்றியூர் வந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டு அவ்வூரில் தங்கியிருப்பதை அறிந்தார் சிவநேசர். அவரைத் தமது ஊருக்கு அழைத்து வந்து உபசரிக்க விரும்பினூர். மயிலையிலிருந்து ஒற்றியூர் வரை நடைப்பந்தலிட்டுச் சிவனடியார்களுடன் புறப்பட்டார். அதற்குள்ளாக சம்பந்தரும் திருஒற்றியூரை விட்டு மயிலாபுரியில் உறையும் கபாலீச்வரனைத் தரிசிக்க எண்ணம் கொண்டு புறப்பட்டு வந்தார்.

சம்பந்தரைச் சந்தித்த சிவநேசர் அவரை வலம் வந்து வணங்கி ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோட உணர்ச்சி வசப்பட்டவராய் தொழுதார். சிவநேசருடன் வந்திருந்த அடியார்கள் அவரைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினர். தம்மிடம் அத்தியந்த பக்தி உடைய அவ்வடியாரை நன்கு கண்டு ஆனந்திக்க எண்ணம் கொண்டவராய் சம்பந்தர் சிவிகையை விட்டுக் கீழிறங்கி செட்டியாரைத் தழுவி மகிழ்ந்தார். பின் இருவரும் புறப்பட்டு மயிலாபுரி வந்து சேர்ந்தனர்.

சம்பந்தர் எம்பெருமான் ஆலயம் சென்று கபாலீச்சரத்து அமுதைத் தரிசித்து ஆருக் காதலினூல் பதிகம் பாடித் துதித்தார். பின்னர் சிவநேசரை அழைத்து அவர் மகளுடைய அஸ்தி நிறைந்த குடத்தை எடுத்து வருமாறு கூறினூர்.

சிவநேசர் ஆனந்த வாரிதியில் திளைத்து மாளிகை திரும்பி கன்னி மாடத்தில் பத்திரப்படுத்தி வைத்திருந்த அஸ்திக் குடத்தைச் சிவிகையில் ஏற்றி மேளதாளத்தோடு எடுத்து வந்தார். இதற்குள் செய்தி பரவி ஊரார் ஆலயத்தில் வந்து திரண்

டனர். குடத்தைத் தோளிலே தாங்கி வந்து சம்பந்தர் முன்பு வைத்து வணங்கினுர் சிவநேசர்.

சம்பந்தர் கபாலீச்சரம் அமர்ந்தானை மனத்திலே தியானித்து 'மட்டிட்ட' என்ற பதிகம் பாடினுர். "கபாலீச்சரம் அமர்ந்தானுக்கு ருத்திரபல்கணத்தார் செய்துள்ள திருக்கோலங்களைக் கண்டு தரிசித்து ஆனந்தம் கொள்ள வேண்டாமா? பூம்பாவாய், அதற்குள் அவசரப்பட்டுப் போய்விட்டாயே!" என்று அழைத்தார்.

சம்பந்தர் பெருமான் பதிகத்தின் முதற் செய்யுள் பாடியதுமே இறைவன் திரு அருளால் குடத்தினுள்ளிருந்த எலும்பு உருப்பெற்றது. ஒவ்வொரு செய்யுளின் முடிவிலும் அது மேலும் வளர்ந்து, பதிகம் முடிந்ததும் உயிர் பெற்றது. குடத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்து அவரை வணங்கினுள் பூம்பாவை. எங்கும் 'ஹர ஹர' என்று கோஷம் எழுந்தது. மக்கள் இறைவன் திருவருளை வியந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சிவநேசர் மெய்சிலிர்க்க சம்பந்தரை நெருங்கிப் பணிந்து, "ஐயனே! என் குமாரத்தியை அன்றே உமக்கென்று சொல்லி விட்டேன். ஆகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று வேண்டினுர்.

"பூம்பாவையை நான் ஏற்பதா? சிவநேசரே, இயலாத காரியத்தைக் கூறுகின்றீரே! விஷம் தீண்டி இறந்த அவளுக்கு நான் உயிர் கொடுத்தது மூலம் எனக்கு மகளாகின்ருளன்ருே! சைவ நெறியிலே விளங்கும் மணுளனைத் தேர்ந்தெடுத்து மணம் செய்து கொடுங்கள்!" என்ருர் சம்பந்தர்.

பின்னர் அவர்களோடு இறைவன் சந்நிதி சென்று சேவித்தார்.

சிவநேசர் சம்பந்தருடைய வார்த்தையை மீற முடியாதவராய் தகுந்த மணுளனைத் தேடி மகளுக்குத் திருமணம் செய்விப்பதாகத் தெரிவித்தார். ஆனுல் பூம்பாவையோ அதற்குச் சம்மதிக்கவில்லை. தன் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருந்து இறைவனுக்குத் தொண்டு செய்யத் தீர்மானித்து விட்டாள்.

மயிலாபுரியிலிருந்து புறப்பட்ட சம்பந்தர் தெற்கு நோக்கிப் பிரயாணப் பட்டார். திருவான்மியூர் சென்று பால்வண்ண நாதரைப் பணிந்து தொழுது புறப்பட்டுத் திருஇடைச்சுரம்[1]

---

1 திருவடிசூலம் என்னும் இத்தலம் செங்கல்பட்டுக்கு வடகிழக்கே ஐந்து மைலில் உள்ளது.

அடைந்து இடைச்சுரநாதரை வழிபட்டுத் திருக்கழுக்குன்றம் சேர்ந்தார்.

வேதகிரியை வலம் வந்து இறைவனைத் தொழுது 'தோடுடையான்' என்ற பதிகம் பாடி மகிழ்ந்தார். தொண்டர் குழாத்துடன் சில தினங்கள் அவ்வூரில் தங்கி நாள்தோறும் வேதகிரீசுவரரைத் தரிசித்தார். பின் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு அச்சிறுபாக்கம், திருஅரசிலி 1, பரவார்பனங்காட்டூர் 2, முதலான பதிகளைத் தரிசித்து வழியிலுள்ள பிற பதிகளையும் வழிபட்டுத் தில்லை நகர் சேர்ந்தார். வடப்புற வாயிலைத் தொழுது நகர் புகுந்த சம்பந்தர் திருக்கோயில் சென்று பேரம்பலத்தில் கூத்தனின் திருக்கூத்தைக் கண்டு களித்து அவ்வூரில் தங்கியிருந்தார்.

சம்பந்தர் தொண்டை நாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு சிதம்பரம் வந்து தங்கியிருக்கிறார் என்ற செய்தி கேட்டு சிவபாதவிருதயரும் தோணிபுர அடியார்களும் புறப்பட்டு வந்து அவரைப் பணிந்து ஊருக்கு எழுந்தருளுமாறு அழைத்தனர். அவரும் கூத்தாடும் பெருமானிடம் விடை பெற்றுத் தந்தையாருடனும் அடியார்களுடனும் தோணிபுரம் எழுந்தருளினார்.

57. பெருமணத்தில் பெருஞ்ஜோதி

சிவபாதவிருதயருக்குத் தம் குமாரனைத் திருமணக் கோலத்தில் கண்டு களிக்க ஆவல் எழுந்தது. சுற்றத்தார்களைக் கலந்து ஆலோசித்தார். நல்லூரில் 3 வாழும் நம்பியாண்டார் நம்பியின் புதல்வியே ஞானக்குழந்தைக்கு ஏற்ற பெண் என அவர்கள் முடிவு செய்தனர்.

சம்பந்தரிடம் அவர்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்த போது அவர் அதற்கு உடன்படவில்லை.

"எனக்குத் திருமணம் வேண்டாம்" என்றார் சம்பந்தர்.

"ஐயனே, அவ்வாறு சொல்லக் கூடாது. சைவ நெறி தழைத்தோங்க அவதரித்திருக்கும் தாங்கள் நம் குல வழக்கப்

---

1 புதுச்சேரிக்கு வடகிழக்கே ஏழு மைலில் உள்ள ஒழிந்தியாப்பட்டு ஆகும்.

2 முண்டியம்பாக்கத்துக்கு வடகிழக்கே இரண்டு மைல்.

3 கொள்ளிடத்துக்குக் கிழக்கே மூன்று மைல்.

படி திருமணம் புரிந்து கொள்வதுதான் முறையாகும்'' என்று அவர்கள் வற்புறுத்தினர்.

''ஈசன் திருவருள் அதுவானல் அவ்வாறே செய்வோம்'' என்று சம்மதித்தார் சம்பந்தர்.

அன்றே சீர்காழியிலிருந்து பெண் கேட்டுவர உறவினர்கள் நல்லூர் புறப்பட்டுச் சென்றனர்.

சீர்காழியிலிருந்து தம்மைத் தேடி வந்திருக்கிருர்கள் என்பதைக் கேட்டு நம்பாண்டார் நம்பி வீதியில் எதிர்கொண்டு அவர்களே வரவேற்றுத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்று உபசரித்தார்.

வந்திருந்தவர்கள் சிவபாதவிருதயரை நம்பிக்கு அறிமுகம் செய்து வைத்தனர்.

''ஐயனே, இவர் திருமகனுர் சம்பந்தப் பெருமானுக்கு உம் புத்திரியைத் திருமணம் புரிந்து கொடுக்கச் சம்மதம் கேட்க வந்துள்ளோம்'' என்றனர்.

முடவனுக்குக் கொம்புத் தேன் கிட்டியது போன்ற சந்தோஷம் அடைந்தார் நம்பி.

சிவபாதவிருதயரின் பாதங்களேப் பணிந்து எழுந்து ''சுவாமி, இறைவன் திரு அருளால் தாங்கள் பெற்ற திருக்குமாரரைப்பற்றி நான் கேள்விப்பட்டுள்ளேன். ஞானப் பாலுண்ட அப்பெருமகனுரின் கை பிடிக்க என் புதல்வி முன் ஜன்மத்தில் எத்தனையோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். இத்திருமணத்தால் என் வம்சமே விளங்கப் போகிறது!'' என்று தெரிவித்தார்.

திருமணம் பேசிக்கொண்டு திரும்பிய சிவபாதவிருதயர் குமாரனிடம் விஷயத்தைத் தெரிவித்தார். பின் புரோகிதர்களேக் கலந்து பேசித் திருமணத்துக்கான நாள் நிச்சயித்து நல்லூருக்குச் செய்தி அனுப்பினுர். உற்ருர் உறவினருக்கெல்லாம் அழைப்பு விடுக்கப்பட்டது.

தோணிபுரம் திருவிழாப்போலத் தோற்றம் கொண்டது. ஞானப்பிள்ளேயின் திருமணத்தில் கலந்துகொள்ள அனேவரும் முன்னதாகவே வந்து சேர்ந்தனர். நீலநக்கர், முருகனுர் முதலான அடியார்களும் தோணிபுரம் வந்து சேர்ந்தனர்.

திருமண நாள் நெருங்கியது. விதிப்படி காரியங்களேச் செய்து முடித்துத் தொண்டர் குழாமும் சுற்றத்தாரும் சூழ வர சம்பந்தர் பெற்ருேரை வணங்கிச் சிவிகை ஏறிப் புறப்பட்டார்.

நேராக ஆலயம் சென்று தோணியப்பரைத் தொழுது நகர வீதிகளில் வலம் வந்து நல்லூர் நோக்கிப் பிரயாணமானுர். மங்கல வாத்தியங்கள் முழங்கின. அடியார்கள் எம்பெருமான் புகழ் பாடினர்.

சம்பந்தர் வருகிருர் என்ற செய்தி நல்லூரிலே பரவியது. நம்பாண்டார் நம்பி ஊராருடன் எதிர்கொண்டு சென்று அவர் களே வரவேற்று அழைத்து வந்தார். வீதியெங்கும் பந்தல் போடப்பட்டிருந்தது. தோரணங்கள் அதை அலங்கரித்தன. பாதையில் மலர் தூவியிருந்தனர்.

சம்பந்தர் ஆலயம் சென்று இறைவனைத் தரிசித்தார். அவரை நெருங்கி மணக்கோலம் கொள்ளுமாறு அடியார்கள் வேண்டினர்.

பிள்ளையார் புனித நீராடி பட்டாடை அணிந்தார். பொன்னு பரணங்கள் அவர் திருமேனியை அலங்கரித்தன. பகவதியார் அருமைக் குமாரனுக்குப் பொட்டிட்டு கண்களில் மை தீட்டினுர்.

பின் அடியார்கள் சிவ கோஷமிட சம்பந்தர் சிவிகை ஏறி மணவீட்டுக்குப் புறப்பட்டார். வாயிலில் சிவிகை விட்டு அவர் இறங்கியதும் நம்பாண்டார் நம்பி மனைவியோடு வந்து அவரை வரவேற்று பந்தலுக்கு அழைத்துச் சென்ருர். அங்கே பீட மிட்டு அதில் சம்பந்தரை அமரச் செய்து அவரைச் சிவபெருமா ருகப் பாவித்து பாதங்களை அலம்பி மலர்கொண்டு அர்ச்சித் தனர். பின் மகளை அழைத்து வந்து தாரை வார்த்து கன்னிகா தானம் செய்தனர். சம்பந்தர் பெருமான் அப்பெண் கைபற்றி ஹோமகுண்டத்தின் முன்பு அமர்ந்தார். நீலநக்கர் வைதீக காரியங்களைச் செய்து வைத்தார். அக்கினியை வலம் வர வேண்டி மணப் பெண்ணின் கரம் பற்றி சுற்றி வந்தபோது சம்பந்தர் பெருமான் உள்ளத்திலே இறைவனைத் தியானித்தார்.

''இறைவா, எனக்கு இல்லொழுக்கம் வந்து சேர்ந்ததே! இவளோடு உன் திருவடி நிழலை அடைவேன்!'' என்று வேண் டினுர்.

பின் உறவினரைப் பார்த்து ''ஆலயம் சென்று தரிசனம் முடித்து வரலாமே!'' என்ருர்.

அனைவரும் சிவாலயம் புறப்பட்டனர். எம்பெருமானுடைய சந்நிதியை அடைந்து 'நல்லூர்ப் பெருமணம்' என்னும் பதிகம் பாடினுர்.

அனைவரும் அதிசயிக்கத்தக்க வகையில் பெரும் ஜோதி ஒன்று தோன்றியது.

"நீயும் உன் மனைவியும், சுற்றத்தார்களும், உன் திரு மணம் கண்டு களிக்க வந்துள்ள அன்பர்களும் அனைவரும் இந்த ஜோதியில் நுழைந்து பிறவிப் பாசம் அறுபட்டவர்களாய் எம்மை வந்து அடையுங்கள்!" என்று அசரீரி கேட்டது.

ஜோதியின் நடுவே சிறு வாயில் ஒன்றும் தெரிந்தது.

சம்பந்தர் ஆனந்தக் கடலில் மூழ்கியவராய், தம்முடன் வந்திருந்த அனைவரையும் பார்த்து, "என் கல்யாணத்தைக் கண்டு களிக்க வந்துள்ள நீங்கள் அனைவரும் இறைவனோடு கலக்க இவ்வாயிலில் நுழையுங்கள்!" என்றார்.

மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். நம்பாண்டார் நம்பி, அவர் மனைவி, சுற்றத்தார்கள், சிவபாதவிருதயர், பகவதியார், அவர் சுற்றத்தார்கள், திருநீலநக்கர், முருகனார், நீலகண்ட யாழ்பாணர் முதலான சிவனடியார்கள், அவருக்குத் தொண்டு செய்யும் தொண்டர்கள், நல்லூர் மணத்தைக் காண வந்த ஊரார் அனைவரும் அந்த வாயில் வழியே புகுந்து செல்ல சம்பந்தர் மனைவியின் கரம்பற்றிக் கடைசியாக 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்ற பதிகம் பாடியவாறு நுழைந் தார்.

வானிலே நிறைந்திருந்த விண்ணவர்கள் மலர்மாரி பெய்த னர். சங்கம் முதலான வாத்தியங்கள் முழங்கின.

எண்திசையும் 'கிடுகிடுக்க' முழங்கிய மங்கல வாத்தியங் களின் ஓசை அடங்கியபோது ஆலயத்திலே எழுந்த ஜோதி மறைந்துவிட்டது.

சந்நிதியிலே யாரையும் காணவில்லை. சிவலோகத்தியாகர் திருவருள் சாதித்தபடி நின்றிருந்தார்.

சம்பந்தரோடு அனைவரும் சிவனோடு இரண்டறக் கலந்து விட்டனர்.

58. நோய் கொடுத்து பகை ஒழித்த பரமனார்

சோழ நாட்டிலே திருப்பெருமங்கலம் 1 என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே வசித்து வரும் வேளாண் மக்களிலே ஏயர்குடி என்றொரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்கள் பரம்பரையாகச் சோழ மன்னரிடம் சேனாபதியாக ஊழியம் பார்த்து வருகிறார்கள். அக்குடியிலே பிறந்தவர் கலிக்காமர் என்பவர்.

---

1 திருப்புன்கூருக்கு வடக்கே உள்ளது.

கலிக்காமர் இறைவனிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர். பக்கத்திலுள்ள திருப்புன்கூர் ஆலயத்துக்கு அனேக திருப்பணிகள் செய்தார். கஞ்சாறூரில் வசித்து வரும் சிவபக்தர் மானக்கஞ்சாரருடைய குமாரத்தியை மணந்துகொண்டு இனிது இல்லறம் நடத்தி வந்தார்.

ஆரூரிலே இருந்து வரும் சுந்தரர் தமக்கும் பரவையாருக்குமிடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்து வைக்கத் தியாகேசரைத் தூது அனுப்பிய செய்தியைக் கேட்டார் கலிக்காமர். அவருக்குச் சீற்றம் உண்டாகிவிட்டது.

"கணவன் மனைவியாரிடையே ஏற்பட்ட பூசலைத் தீர்க்க இறைவனைத் தூது அனுப்புவதா? அக்காரியம் செய்த அவனும் ஒரு தொண்டனா? பெண்ணாசையால் அவன் தூது செல்ல ஏவினானும்; இறைவன் ஓர் இரவு முழுவதும் பாதம் தேய நடந்தாராம்! இறைவனையே அனுப்பத் துணிந்த அவன் பெரும் பாவியாகத்தான் இருக்க வேண்டும். அவன் தூரத்தில் எங்கோ இருப்பது நல்லது. என் அருகில் இருந்திருப்பானேயாகில் அவன் உயிரையே பறித்திருப்பேன்" என்று மனம் வெதும்பினார். அவரைச் சந்திக்க வருபவர்களிடமும் சுந்தரரிடம் தமக்குள்ள கோபத்தை வெளியிட்டு வந்தார்.

இந்தச் செய்தி சுந்தரருக்கு எட்டியது. தம்மிடம் கலிக்காமர் கொண்டுள்ள பகைமையை நினைத்து வருந்தினார். ஆரூர் ஆண்டவனிடம் இதைப்பற்றித் தினமும் முறையிட்டு வருந்துவார்.

தம் அடியார் இருவரிடையே எழுந்துள்ள பகைமையை நீக்கி அவர்களை ஒன்று சேர்க்க எண்ணம் கொண்டார் எம்பெருமான். கலிக்காமரை வருத்துமாறு சூலை நோயை ஏவினார்.

சூலைநோய் பற்றிக்கொண்ட கலிக்காமர் அதன் வேதனை தாங்கமாட்டாது துடித்தார். வைத்தியத்துக்கு அந்நோய் கட்டுப்படவில்லை. தாம் வழிபடும் இறைவனே கதி என்று நம்பி அல்லும் பகலும் தியானித்தார்.

இறைவன் கலிக்காமரின் கனவிலே தோன்றி, "அன்பனே, இந்நோய் சாதாரணமாகத் தீரக்கூடியது அன்று. ஆரூரிலே உள்ள நம் வன்றொண்டனாலேதான் தீரும்" என்று மொழிந்தார்.

அதைக் கேட்டு கலிக்காமர் பதை பதைத்து, "ஐயனே, இதென்ன வார்த்தை? என் தந்தை, அவர் தந்தை, அவருக்கும் தந்தை இப்படியாக வழிவழியாக உன்னையே வழிபட்டு வரும்போது என்னை வருத்தி வரும் சூலைநோய் உன்னோடு வாதிட்டுத்

தொண்டனுன அவனுல் தீருமென்று சொன்னது என்ன நியாயம்? உம்மைத் தூது அனுப்பி ஏவல் செய்யுமாறு பணித்த அவனும் ஒரு தொண்டனு? அவனுல் இந்நோய் தீர்ந்து வாழ்வதைவிட, இதன் வேதனையை அனுபவிப்பது எவ்வளவோ உத்தமம்'' என்ருர் கலிக்காமர்.

இறைவன் சுந்தரருக்கும் காட்சி தந்து, ''நம் அன்பன் கலிக்காமர், நம் திருவுள்ளத்தால் சூலைநோயினுல் வருந்துகிருன். நீ சென்று அதைத் தீர்த்துவை'' என்ருர்.

சுந்தரர் இறைவன் கட்டளையைப் பணிந்து ஏற்றுப் புறப் பட்டார். ஊரை நெருங்கியதும் தாம் வருவதைக் கலிக்காமருக்கு சொல்லி அனுப்பினுர்.

சுந்தரர் தம் இல்லத்துக்கு வருகிருர் என்ற செய்தி கலிக் காமருக்கு எட்டியதும் அவர் பொறுக்க முடியாத அளவு கோபம் கொண்டார்.

''எத்தனையோ அரிய தவமியற்றும் ஞானிகளுக்கும் எட் டாத இறைவனை வேலைக்காரன்போல தூது அனுப்பிய அப் பாதகனைப் பார்க்கவும் விரும்பேன். அவனை நேரில் கண்டுவிட் டால் அவன் உயிரைப் பறிக்காது விடமாட்டேன். சிவனடியா ரைக் கொன்ற பாதகம் வேறு சூழக்கூடும். ஆகவே அவன் வருவதற்கு முன்பு நாமே இந்நோயைப் போக்கிக்கொண்டு விட லாம்'' என்று முடிவு செய்து உடைவாளை உருவி வயிற்றைக் கிழித்துக்கொண்டு உயிரை விட்டார்.

கணவன் மரித்த பிறகு உயிர்வாழ விரும்பாத அம்மையா ரும் தம் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ருள். அதற்குள் சுந்தரர் வந்துவிட்டார் என்று சிலர் ஓடி வந்து சொல்லவே, வீடு தேடி வந்த அடியாரை வரவேற்று உபசரிக்கத் தம் முடிவை மாற்றிக்கொண்டார். கணவனுடைய உடலை மஞ்சத் தில் கிடத்தி போர்வையால் மூடி, அடியார் திரும்பும் வரை வீட்டிலுள்ளவர் எங்கும் அழுது விஷயத்தை உடைத்துவிடக் கூடாதென்று எச்சரித்து வெளியே வந்தார்.

பின் சுந்தரரை வரவேற்று கால் அலம்பி ஆசனம் அளித்து உபசரித்தார்.

''அம்மையே, கலிக்காமர் எங்கிருக்கிருர்? அவரை வருத்தி வரும் நோயைக் குணப்படுத்தி அவர் நட்டைப் பெற்றுச் செல்ல வந்துள்ளேன்'' என்ருர்.

''சுவாமி, அவருக்கு நோய் முற்றிலும் குணமாகிவிட்டது. அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதால் அவரை எழுப்ப இயலாதிருக்கிறது'' என்று பதில் அளித்தார் அம்மையார்.

சுந்தரர் மெல்லச் சிரித்தார். இறைவன் அவரை அனுப்பி யிருக்கும்போது நோய் எவ்வாறு முன்னமே குணமாகி யிருக்கும்! அம்மையார் எதையோ மறைத்துக் கூறுவதாகவே சுந்தரருக்குத் தோன்றியது.

''அம்மையே, தாங்கள் கூறினாலும் நான் கண்ணால் பார்த்தால்தான் நிம்மதிகொள்ள முடியும். அவர் நித்திரை செய்வது எங்கே?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்திருந்தார்.

மேலும் விஷயத்தை மறைப்பது முடியாதென்று அம்மையார் பக்கத்து அறைக்குச் சென்றார். அவர் பின்னால் அறையுள் நுழைந்த சுந்தரர் மஞ்சத்திலே இரத்த வெள்ளத்தில் சவமாகக் கிடக்கும் கலிக்காமரைக் கண்டார்.

''இறைவா, இந்தக் காட்சியைச் காணவா என்னை அனுப்பினாய்? என் முகத்தில் விழிப்பதில்லை என்ற உறுதியை அவர் நிறைவேற்றிக்கொள்ள எவ்வாறு அனுமதித்தாய்? கலிக்காமரே போய்விட்ட பிறகு நான் மட்டும் உயிர் வாழ்வானேன்?'' என்று சொல்லியபடி உடைவாளை உருவினார்.

அடுத்த கணம் பிணமாகக் கிடந்த கலிக்காமர் உயிர் பெற்று எழுந்து. ''ஐயனே, இதென்ன காரியம்? நான் எவ்வாறு அனுமதிப்பேன்?'' என்று கூவியபடி அவர் கையிலிருந்த வாளைப் பிடுங்கினார். பின் சுந்தரருடைய பாதங்களில் விழுந்து வணங்கி, ''இறைவனின் பேரன்புக்குப் பாத்திரரான உங்களை நன்கு உணராமல் இது நாள் வரை பகைமை பாராட்டி வந்துள்ளேன். என்னை மன்னித்து அருளவேண்டும்!'' என்று வேண்டினார்.

சுந்தரர் கலிக்காமரைச் சேர்த்து கட்டித் தழுவி மகிழ்ந்தார். அம்மையார் இறைவன் திருவருளை எண்ணி வியந்து சுந்தரரைப் பணிந்து வணங்கினார்.

பின்னர் கலிக்காமர் சுந்தரரோடு புறப்பட்டுத் திருப்புன்கூர் சென்று எம்பெருமானைத் தரிசித்துக் கொண்டு அவரோடு ஆரூர் சென்று தங்கி தியாகேசரை வழிபட்டார். சில நாட்களுக்குப் பிறகு அவர் சுந்தரரிடம் விடைபெற்று தமது ஊர் திரும்பினார். எம்பெருமானிடம் தாம் கொண்டிருந்த பக்தி நீங்காது பல காலம் தொண்டுகள் செய்து வந்து முடிவில் கலிக்காமர் இறைவன் திருவடிகளைச் சேர்ந்தார்.

59. ஆகமப் பொருளை பாடிய அடியார்

கைலாய மலையில் நந்திகேச்சவரர் அருள் பெற்ற யோகிகள் பலர் இருந்து வருகின்றனர். அவர்களுள் ஒருவர் தென் திசையில் உள்ள அகஸ்திய முனிவரோடு சில காலம் தங்கி வர எண்ணம் கொண்டு கைலாயத்தை விட்டுப் புறப்பட்டார்.

கேதாரம் சென்று வழிபட்டுப் புறப்பட்ட அவர் நேபாள நாட்டிலுள்ள பசுபதிநாதரைத் தரிசித்துக் காசி வந்து சேர்ந்தார். கங்கையில் நீராடி விசுவநாதரைக் கண்டு களித்தவராய் தென் திசை நோக்கிப் பிரயாணப்பட்டு, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருவதிகை முதலான திருப்பதிகளைத் தரிசித்துக் கொண்டு அற்புதக் கூத்தாடும் எம்பெருமானைத் தரிசிக்கத் தில்லை சேர்ந்தார். அம்பலவாணனுடைய ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு மனம் களிகூர்ந்து புறப்பட்டு காவிரிக் கரையை அடைந்தார். உள்ளமும் உடலும் குளிர காவிரியில் நீராடி திருவாவடுதுறை சென்று அவ்வூரில் உறையும் எம்பெருமானைத் தரிசித்தார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு மேலும் பிரயாணத்தைத் தொடர காவிரிக்கரையை அடைந்தார். போகும் வழியிலே ஓரிடத்தில் அவர் கண்ட காட்சி அவருக்குச் சொல்லொணா துயரத்தை அளித்தது.

அவன் ஓர் இடையன். தினமும் மாடுகளை ஓட்டி வந்து வயிறார அவற்றை மேய்த்துத் திரும்புவான். அவனிடம் மாடுகள் உயிரை வைத்திருந்தன போலும். அன்றைத் தினம் மேய்ச்சலுக்கு வந்த இடத்தில் விதிவசத்தால் இடையன் வாழ்வு முடிந்து விட்டது. மாடுகள் அவன் உடலைச் சுற்றி நின்றபடி கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தன. அவன் உடலைத் தங்கள் நாக்கால் நக்கி, நக்கி .அவை அழுவதைப் பார்த்த யோகியார் உள்ளம் வேதனை கொண்டது. அவன் உயிர் பெற்று எழுந்தாலன்றி மாடுகள் படும் துயரம் நீங்காது எனத் தோன்றியது அவருக்கு. அவற்றுக்கு மகிழ்ச்சியை அளித்துப் பத்திரமாக வீடுகளுக்கு ஓட்டிவிட்டுப் புறப்பட எண்ணம் கொண்டார். ஒரு புதர் மறைவில் தம் உடலைப் பத்திரப் படுத்தி வைத்துவிட்டு யோக சக்தியால் இறந்து கிடந்த இடையன் உடலில் புகுந்தார்.

பிணமாகக் கிடந்த இடையன் எழுந்து உட்கார்ந்ததும் மாடுகள் அடைந்த மகிழ்ச்சி எல்லை மீறி விட்டது. வால்களை உயர எழுப்பிக் கொண்டு அவைகள் குதித்தன. அவனைச்

சுற்றிச் சுற்றி வந்து தலைகளை அசைத்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தன. பின் அவைகள் நன்கு மேய்ந்து ஆற்றிலே நீர் அருந்தி மாலை நெருங்கியதும் வீடு நோக்கிப் புறப்பட்டன. யோகியாரும் பின் சென்று அந்தந்த வீடுகளில் சேர்ப்பித்துக் கிளம்பினார்.

சாத்தனூரைச் சேர்ந்த மூலன் என்னும் பெயருடைய அந்த இடையனுடைய மனைவி வழக்கத்துக்கு மாறாக அன்று கணவன் தாமதித்து விட்டானே என தவித்துப் போய் அவனைத் தேடிக் கொண்டு ஓடி வந்தாள். தம்மை நெருங்கும் இடைப் பெண்ணைக் கண்டதும் யோகியார் ஒதுங்கினார். மூலனுடைய மனைவிக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

"என்னங்க இது?..." என்று கேட்டாள்.

"இந்தா, அப்பாலிரு. என்னைத் தீண்டாதே. நீ யாரோ நான் யாரோ!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்த மடம் ஒன்றினுள் சென்று யோகத்தில் அமர்ந்து விட்டார் யோகியார்.

கணவன் மனமாற்றத்தைக் கண்டு இடையன் மனைவி இரவெல்லாம் அழுது புரண்டாள். யாரோ அவன் மனத்தை மாற்றி விட்டனர் என்று தூற்றினாள். பொழுது புலர்ந்ததும் ஊர் பெருமக்களிடம் சொல்லி தன் கணவனுக்கு புத்திமதிகள் கூறி வீட்டுக்கு அனுப்புமாறு வேண்டினாள்.

அவர்களும் மடத்திலிருந்த யோகியாரைக் கண்டனர். உடல் மூலனுடையதாக இருந்தாலும் உள்ளிருப்பது யோகியாரின் உயிரல்லவா! சிவயோகத்தில் அமர்ந்திருக்கும் அவரைக் கண்டதும் அவர்கள் பேசாது திரும்பினர்.

"பெண்ணே, உன் கணவனுடைய மனதை யாரும் மாற்றவில்லை. மனம் தெளிந்து அவன் சிவயோகத்தில் லயித்து விட்டான். இனி இல்லற வாழ்க்கையை அவன் மனம் நாடாது. துறவு வாழ்க்கையே அவனுக்குப் பிடித்தமானது" என்று சொல்லி விட்டனர்.

யோகியார் தம் உடலைப் பத்திரப்படுத்தியிருந்த இடத்துக்குச் சென்றார். மூலன் உடலை விட்டு விட்டு தம் உடலை அடைந்து பொதியமலைக்குப் பிரயாணமாகத் துடித்தார் அவர். ஆனால் அங்கே அவர் உடலைக் காணவில்லை. என்ன செய்வது எனத் தெரியாது தவித்தார். அப்போது அவர் சிந்தை தெளிந்து, இறைவன் அருளிய ஆகமப் பொருளை மண்ணுலகத்தாருக்குத் தமிழிலே தம் மூலம் வழங்க இறைவன் திருவுள்ளம் கொண்டு உடலை மறைத்தார் போலும் என உணர்ந்தார். பொதிகை மலை செல்லும் எண்ணத்தைவிட்டு திருவாவடுதுறை

திரும்பினுர். அங்கே எம்பெருமான் ஆலயத்துள் ஒரு பக்க மிருந்த அரசமரத்தின் கீழ் யோகத்தில் அமர்ந்தார். ஆண்டுக்கு ஒன்ருக மூவாயிரம் ஆண்டுகளில் திருமந்திரம் மூவாயிரம் பாட்டுகளேயும் பாடி பின் கைலாயம் சேர்ந்தார்.

60. குருடருக்குப் பார்வை தந்த குணசீலர்

திருவாரூரிலே தண்டி அடிகள் என்பவர் இருந்து வந்தார். அவர் பிறவிக் குருடர். எம்பெருமானிடம் நிறைந்த பக்தி கொண்ட அவர் அகக்கண்களால் இறைவன் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்து வந்தார். தினமும் ஆலயம் சென்று பரமனைத் தொழுது மனக்கண்ணுல் தரிசித்து பஞ்சாக்ஷரத்தை ஜபித்து வருவார்.

அந்நாளிலே ஆரூரில் சமணர்கள் பெருக்கம் அதிகமாகியது. திருக்குளமான கமலாலயத்தின் மேற்குக் கரையிலே அவர்கள் பாழிகளே அமைத்துக் கொண்டு இருந்தனர். அதனுல் திருக்குளம் தூர்ந்து சிறியதாகியது. இதை அறிந்தபோது தண்டி அடிகள் பெரிதும் விசனமுற்ருர். சமணர்களே அங்கிருந்து விரட்ட அவரால் முடியாது. ஆனுல் சிறியதாகி விட்ட குளத்தை மண் எடுத்துப் பெரிதாக்கலாமே!

உள்ளத்திலே தோன்றிய எண்ணத்தைச் செயலிலே நிறைவேற்றத் தொடங்கினுர் அடிகள். குருடரான அவர் எவ்விதம் அத்திருப்பணியில் ஈடுபட முடியும்?

குளத்திலே ஒரு கம்பு நாட்டி அதில் கயிறு கட்டினுர். கயிற்றின் மற்ருெரு நுனியை இழுத்துக் கரையிலே இன்னுெரு கம்பு நாட்டி அதில் கட்டினுர். கயிற்றைப் பிடித்துக் கொண்டு இறங்கி கூடையில் மண்ணெடுத்து மேலேறி வந்து கரையில் கொட்டி வந்தார்.

இவ்வாறு தண்டி அடிகள் திருப்பணியில் ஈடுபடுவதைக் கண்ட சமணர்கள் மனம் பொருதவர்களாய் அவருடைய வேலேயில் தலேயிட்டனர்.

"ஐயா மண்ணே வெட்டி எடுக்காதீர்கள். அங்குள்ள பிராணிகள் உயிரிழக்க நேரும்" என்றனர்.

"அறிவிலிகளே, நான் செய்வது எம்பெருமானுக்குத் தொண்டாகும். இதனுல் ஏற்படும் ஜீவவதை ஒரு குற்றமாகாது" என்ருர் அடிகள்.

அவர்களோ திரும்பத் திரும்ப அவரைத் தடுத்தனர். அவர்களுக்குப் பதில் சொல்வது வியர்த்தமே என அடிகளார் தம் வேலையிலேயே கண்ணுகை இருந்தார்.

சமணர்களுக்குக் கோபம் அதிகமாகி விட்டது. ''நாங்கள் சொல்கிறோம். நீ அதைக் காதில் வாங்கிக் கொள்ளாது செய்து கொண்டிருக்கிறாயே. கண்தான் குருடு என்றால் காதும் செவிடோ?'' என்று ஏளனமாகக் கேட்டனர்.

அவர்களுடைய கேலிப் பேச்சு அடிகளாரின் உள்ளத்தை வேல் கொண்டு குத்தியதுபோல் இருந்தது.

''முட்டாள்களே! எம்பெருமானைத் தவிர வேறு யாரையும் நான் காண்கிலேன். அதை அறியாத நீங்கள் என்னை ஏளனம் செய்ய ஆயிற்றா? எம்பெருமான் திருவருளால் எனக்குக் கண் பார்வை வந்து உங்கள் கண்கள் குருடாகி விட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று வேதனை பொறுக்கமாட்டாதவராய் கேட்டார்.

''அப்படியொரு அதிசயம் நிகழ்ந்து விடட்டும். நாங்கள் இவ்வூரை விட்டே போய் விடுகிறோம்'' என்று கூறிய அவர்கள் அடிகளிடமிருந்து கூடையையும் மண்வெட்டியையும் பிடுங்கி அப்பால் எறிந்தனர்.

அடிகளார் கண்களில் நீர்மல்கத் தட்டுத்தடுமாறி எம்பெருமான் சந்நிதிக்குச் சென்றார்.

''ஐயனே, இன்று சமணர்கள் என்னை அவமானம் செய்து விரட்டி விட்டனர். நீ பார்த்துக் கொண்டிருக்கிறாயே!'' என்று சந்நிதானத்தின் முன் விழுந்து கதறினார். பின் தம் மடம் சென்று வேதனையால் துடிக்கும் உள்ளத்தோடு படுத்துவிட்டார்.

அன்றிரவு தியாகேசப் பெருமான் அடிகளார் கனவில் தோன்றி, ''அன்பனே, கவலை கொள்ளாதே. உமக்குப் பார்வை அளித்து சமணர்கள் குருடாகச் செய்வோம்'' என்று அருளி மறைந்தார். அன்றிரவே அரசன் நித்திரையிலும் தோன்றி, ''நம் பக்தன் தண்டி நமக்குத் தொண்டு செய்ய குளத்தில் மண் வெட்டுவதைப் பொறாத சமணர்கள் அவன் வேலையில் குறுக்கிட்டுத் தடுத்ததோடு அவனை அவமானம் செய்துவிட்டனர். நம் பக்தன் உள்ளக் குறிப்பை அறிந்து அவ்வாறு நடந்து கொள்''என்று கட்டளை யிட்டார்.

கண் விழித்த மன்னன் காலையில் அடிகளாரைத் தேடி வந்தான். அவரைப் பணிந்து இரவு ஆண்டவன் தனக்கிட்ட பணியைத் தெரிவித்தான். தண்டி அடிகள் முதல் நாள்

நடந்த வற்றை விவரித்து, "எனக்குப் பார்வை வந்து விட்டால் அவர்கள் ஊரைவிட்டே போய் விடுவதாகக் கூறியுள்ளனர்" என்று தெரிவித்தார்.

அரசன் சமணர்களை அழைத்துக் கேட்க அவர்களும் அதற்குச் சம்மதித்தனர்.

"ஐயனே, இறைவன் திருவருளால் உமக்குக் கண் பார்வை வரச் செய்து காட்டும்" என்றான் அரசன்.

தண்டி அடிகள் கோயிலுள் சென்று எம்பெருமானைத் துதித்தார் "பரம் பொருளே, உன்னையன்றி வேறு எவரையும் கனவிலே கூட நினைக்காது வழிபட்டு வருவதும், உன் தொண்டே சிறந்தது என்பதும் உண்மையானால் எனக்குப் பார்வை அளித்து, உமக்குச் செய்து வரும் தொண்டைத் தடை செய்த சமணர்கள் பார்வை இழக்க அருள வேண்டும்" என வேண்டினார்.

இறைவன் திருவருள் உடனே கிட்டியது. தண்டி அடிகள் பார்வை பெற்றார்; சமணர்கள் பார்வை இழந்து தடுமாறினார்கள். ஒப்புக்கொண்டபடி அவர்களை ஊரைவிட்டு அனுப்புமாறு உத்தர விட்டான் அரசன். குளக்கரையிலிருந்த பாழிகளை இடித்துத் தள்ளி குளத்தை அகலப்படுத்தினான்.

தண்டி அடிகளார் எம்பெருமான் திருத் தொண்டிலே ஈடுபட்டு பலகாலம் வாழ்ந்திருந்து முடிவில் தியாகேசர் பாதாரவிந்தங்களை அடைந்தார்.

61. சூதாடி - அமுதிட்ட அன்பர்

தொண்டை நாட்டிலே திருவேற்காடு என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே வேளாண்குடியின் தலைவராக அடியார் ஒருவர் இருந்தார். சிவபெருமானிடம் அளவில்லா பக்தி கொண்ட அவர் அடியார்களுக்கு அமுது செய்விக்கும் தொண்டை மேற் கொண்டிருந்தார்.

இவ்வாறு இருந்துவரும் நாளில் அவரைத் தேடி வரும் அடியார் கூட்டம் அதிகமாகி வந்தது. கொஞ்சமும் மனம் கோணாது செல்வத்தை அடியார்களுக்கு அமுதிடும் பணியில் வாரி இறைத்தார். அவரிடமிருந்த செல்வம் கரைந்தது. செல்வம் கரைந்ததும் சொத்துக்களை விற்று திருத்தொண்டு செய்து வந்தார். விரைவிலே அவையும் தீர்ந்தன.

அடியார் மனம் சோரவில்லை. அவர் சூதாடுவதில் நன்கு தேர்ந்தவர். ஆகவே சூதாடத் தொடங்கி அதன் மூலம்

கிடைக்கும் பொருளை அடியார்களுக்கு அமுது செய்விப்பதில் செலவிட்டார்.

ஆட்டத்தில் அமர்ந்து விட்டால் வெற்றியைத் தவிர ஏதும் அறியாத அவரிடம் தினமும் பொருளை இழக்க யார் தான் முன்வருவார்கள்? சிலநாட்களில் அவ்வூரிலே அடியோடு சூதாட வருவதற்கு ஆளில்லாமல் போய்விட்டது. எந்த வகையிலாவது அவர் தம் பணியை நடத்திச் செல்லவே விரும்பினார். ஆகவே அவர் ஊரைவிட்டுப் புறப்பட்டு சில க்ஷேத்திரங்கள் தோறும் தரிசித்துக்கொண்டு அங்கங்கே சூதாடி தாம் வென்ற பொருளைக் கொண்டு தினமும் அடியார்களுக்கு அமுது செய்வித்து வந்தார்.

இவ்வாறு வந்து கொண்டிருக்கையில் திருக்குடந்தை சேர்ந்தார். இதுவரை வெற்றிவாகை சூடிவந்த அவருக்கு இறைவன் சோதனையைத் தோற்றுவித்தான். ஆட்டத்திலே அவருக்குத் தோல்வி ஏற்பட்ட ஆரம்பித்தது. இருப்பினும் மனம் தளராமல் முடிவில் அவர் வெற்றி கொள்வார். எதிராளிகள் அவருடன் தகராறு செய்யத் தொடங்கினர். அடியாரோ கொஞ்சமும் மனம் கலங்காமல் தம்முடன் தகராறு செய்பவர்களை உடைவாளால் குத்தி பணியச் செய்வார். இதனால் அவருக்கு நற்சூதர், மூர்க்கர் என்ற பெயர் நிலைத்தது. சூதிலே கிடைக்கும் பொருள்களை அவர் அடியார்களுக்கே செலவிட்டு வந்தார். அடியார்கள் அமுது செய்த பின் கடைசிப் பந்தியில் அமர்ந்து தான் அவர் உணவு அருந்துவார்.

இந்த விதமாக இறைவன் அடியர்களுக்கு அமுது அளித்துத் தொண்டாற்றி வந்த அவர் முடிவில் எம்பெருமான் மலரடிகளைச் சேர்ந்தார்.

62. அடியாரை வழிபட்ட சோமாசிமாறர்

சோழ நாட்டிலே திரு அம்பர்1 என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே சோமாசிமாறர் என்னும் அந்தணர் ஒருவர் இருந்து வந்தார். சிவபெருமானிடம் பக்தி கொண்ட அவர் சிவனடியார்களிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். அடியார்க்கு அடியாராக அவர் தம்மை எண்ணினார்.

எந்த நேரமும் பஞ்சாக்ஷரத்தை ஜபித்து வரும் அவர் அனேக யாகங்களைச் செய்து இறைவனை வழிபட்டார். சிவ

---

1 பூந்தோட்டத்துக்குக் கிழக்கே இரண்டு மைல்.

னடியார் யாராக இருந்தாலும் சரி, அவர்களுடைய குலம் கோத்திரங்களைப்பற்றி அவர் நெஞ்சமும் கவலைப்படுவதில்லை. அடியார்களைச் சிவ சொரூபமாகப் பாவித்து அவர்களை மலர்ந்த முகத்தோடு வரவேற்று உபசரித்து அமுது செய்வித்து அனுப்புவார்.

தம்பிரான் தோழரான நம்பியாரூரர் பெருமை பற்றிக் கேள்விப்பட்ட அவர் ஆரூர் சென்று அப்பெருமானை வணங்கி அவரிடம் அன்பு கொண்டு அவருக்குத் தொண்டுகள் பல புரிந்தார். முடிவில் இறைவன் திருவடிகளை அடைந்தார்.

திருஞான சம்பந்தர் முதலான அடியார்களுக்கு அடியாராகத் தம்மைக் கூறி அவர்களை வணங்கிய சுந்தரர் இன்னும் அடியார்களின் பெருமையை எடுத்துக் கூறலானுர்.

வார் கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

63. கல்லடி பட்ட கருணுகரன்

திருச்சங்கமங்கை என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே அவதரித்த அன்பர் ஒருவர் பிறப்பு இறப்பு இல்லாத நிலையை அடைய விரும்பியவராய் தம் ஊரை விட்டுப் புறப்பட்டு பல இடங்களில் சுற்றினுர். பிற சமயங்களைச் சேர்ந்த நூல்களை ஆராய்ந்தார்.

சுற்றுப்பிரயாணத்தின் நடுவே அவர் காஞ்சியை அடைந்தார். அந்நகரிலே இருந்த பௌத்த சமயத்தைச் சேர்ந்து சாக்கியர் ஆகி அச்சமய நூல்களைக் கற்று ஆராய்ந்தார். எதிர்பார்த்து வந்த உண்மையை அச்சமயத்திலும் அவரால் அறிய முடியவில்லை. சைவ சமயமே உண்மைச் சமயம் என்பதை எம்பிரான் திருவருளால் உணரப்பட்டார். பிறப்பு இறப்பு இல்லாத பெரும் பேற்றை அடைய சிவபெருமான் திருவடிகளை அடைவதே வழி என்பதை அறிந்தார். சாக்கிய சமயத்தை விடுத்து சைவத்தைத் தழுவினுர். ஆனுல் அவர் தாம் கொண்ட

பௌத்த வேடத்தை மாற்றவில்லை. எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் இறைவனை மறவாதிருப்பது ஒன்றே போதுமானது அன்றோ.

இவ்வாறு இருந்து வரும்போது சாக்கியர் தினமும் சிவ லிங்கத்தைத் தரிசனம் செய்யாது உணவு அருந்துவதில்லை என்ற உறுதி கொண்டார். ஒரு நாள் பக்கத்திலே சிவலிங்கம் ஒன்றைக் காணச் சென்றார். அவர் உள்ளம் பக்தியால் நிறைந்து வழிந்தது. பித்தனைப் போல ஆனந்தக் கூத்தாடி னார். தம்மையே மறந்தார். என்ன செய்கிறோம் என்பதை அறியாது பக்கத்திலே கிடந்த சிறு கல்லை எடுத்து எம்பெரு மான் திருமேனி மீது எறிந்தார். சிறு பிள்ளைகள் செய்யும் இழிச் செய்கைகளைப் பிரியமாய் பெற்றோர்கள் ஏற்றுக்கொள் வது போலச் சாக்கியர் கல்லடியையும் இறைவன் ஏற்றார்.

அடுத்த நாள் உணவருந்துவதற்கு முன்பு வழக்கம்போல சிவலிங்கத்தைத் தரிசனம் செய்யச் சென்றார். எம்பெருமானைக் கண்டதும் முதல் நாள் தாம் கல்லெடுத்து எறிந்தது அவர் நினைவுக்கு வந்தது. இறைவன் அந்தச் செய்கையை எவ்வாறு தம்மிடம் தூண்டினார் என்பதை அவரால் உணர முடியவில்லை. இறைவன் விருப்பம் கொண்டே தம்மை அவ்வாறு தூண்டி யிருக்க வேண்டும் என்று தோன்றியது சாக்கியருக்கு. அச் செய்கையையே தினமும் மேற்கொள்வதென முடிவு செய்தார். அன்றைத் தினமும் கல்லை எடுத்து அன்போடு எம்பெருமான் திருமேனி மீது போட்டுவிட்டுத் திரும்பினார்.

நாள் தோறும் இவ்வாறு நிகழ்ந்து வந்தது. ஒரு நாள் எம்பிரான் திரு உள்ளத்தால் சிவலிங்கத்தின் மீது கல்லை எறி யாது திரும்பி விட்டார். உணவருந்த உட்கார்ந்த போதுதான் அவருக்கு நினைவு வந்தது. "ஆஹா, இன்று எம்பெருமான் திருமேனியில் கல்லை எறிய மறந்தேனே!" என்று எழுந்து ஓடினார். கல்லை எடுத்து இறைவன் திருமேனியில் எறிந்தார்.

அடுத்த கணம் சிவபெருமான் உமையோடு ரிஷபாரூடராய் அடியார்க்குக் காட்சி தந்தார். இறைவனின் திருக்கோலத் தைத் தரிசித்த அடியார் "ஆஹா, என்ன பாக்கியம் செய்தேன்! இன்றல்லவோ என் பிறவி பயனுடையதாகியது!" என்று தொழுது மகிழ்ந்தார்.

ஈசன் அடியாரை அந்நிலையிலேயே ஆட்கொண்டு அவருக் குப் பரமபதத்தை அருளினார்.

64. தொண்டால் சிறந்த சிறப்புலியார்

சோழ நாட்டிலே திருவாக்கூர் என்றொரு தலம் இருக்கிறது. அவ்வூரிலே அந்தணர் குலத்திலே பிறந்த சிவபக்தர் ஒருவர் இருந்தார். சிறப்புலியார் என அழைக்கப்பட்ட அவர் சிவனடியார்களிடம் மிக்க அன்பு கொண்டிருந்தார். தம் ஊருக்கு அடியார்கள் வந்தால் அவர்களை வரவேற்று அன்புடன் உபசரித்துத் தம் இல்லத்தில் இருத்தி அமுது செய்விப்பார். அமுது செய்விப்பதோடு அவர்கள் உபயோகத்துக்கான பொருள்களையும் அளிப்பார். பஞ்சாக்ஷர மந்திரத்தை நாள் தோறும் ஜபிக்கத் தவறுவதில்லை.

இவ்வாறு அவர் அனேக காலம் தொண்டுகள் பல செய்து யாகங்களை நடத்தி தம் பெயருக்கேற்ப சிறப்பாக வாழ்ந்து வந்து முடிவில் ஈசன் திருவடிகளைச் சேர்ந்தார்.

65. பிள்ளைக்கறி சமைத்த பரஞ்சோதியார்

சோழ நாட்டிலே திருசெங்காட்டங்குடி என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே மாமாத்திரர் குலத்திலே அவதரித்தவர் பரஞ்சோதி என்பவர். ஆயுள் வேதத்திலும் வடமொழியிலும் பாண்டித்யம் பெற்றிருந்த அவர் குதிரையேற்றம், வாள் வித்தை முதலானவற்றிலும் சிறந்து விளங்கினார். அத்துடன் அவர் சிவபெருமானிடம் குன்றாத பக்தியும் கொண்டிருந்தார். சிவனடியார்களை அன்புடன் வரவேற்று உபசரிக்கத் தவற மாட்டார்.

பரஞ்சோதியார் பெருமையை அறிந்த பல்லவ மன்னன் நரசிம்மன் அவரைக் காஞ்சிக்கு வரவழைத்துத் தம் படைகளின் தலைமைப் பதவியை அளித்துக் கௌரவித்தான். அரசன் அளித்த கௌரவத்தைப் பணிந்து ஏற்ற பரஞ்சோதியார் அடியார் திருப்பணியையும் விடாது நடத்தி வந்தார்.

இவ்வாறு இருந்து வரும் நாளையில் பரஞ்சோதியார் பல்லவ மன்னனின் படைகளை நடத்திக்கொண்டு சாளுக்கியருடன் போரிடச் செல்லும்படியாகியது. அப்போரிலே அவருக்குப் பெரும் வெற்றி கிட்டியது. சாளுக்கியர்களைத் தலையெடுக்க முடியாது செய்ததோடு அவர்கள் தலைநகரான வாதாபியையும் அழித்துத் திரும்பினார். பொன்னும் பொருளும் பகை நாட்டிலிருந்து கொண்டு வந்து குவித்தார்.

தனக்கு வெற்றி தேடித் தந்த பரஞ்சோதியாரைக் கௌர விக்க அரசன் விரும்பினான். அமைச்சர்களும் மற்ற பிரதானி களும் கூடியிருக்க ராஜ சபையில் அரசன் பரஞ்சோதியா ருடைய ஈடு இணையற்ற பிரதாபத்தை எடுத்துக் கூறி அவ ரைப் போற்றிக் கொண்டாடினான். அப்போது சபையில் இருந்த அமைச்சர்களுள் ஒருவர், "வேந்தே, பரஞ்சோதியார் திருத் தொண்டர் அல்லவா. எம்பெருமானுக்குத் தொண்டு புரிந்து வரும் அவருக்கு இவ்வுலகில் எதிரிகளே இருக்க முடியா தன்றோ!" என்று புகழ்ந்து பேசினார்.

பரஞ்சோதியார் இறைவன் அடியார்களுள் ஒருவர் என் பதை அறிந்தபோது பல்லவன் பதை பதைத்துப் போய் விட் டான். அடியாரையா அவன் கொலைத் தொழில் புரிய போர் முனைக்கு அனுப்பினான்?

அரியாசனத்தை விட்டு இறங்கி வந்து நடுங்கும் மேனி யோடு அவரைப் பணிந்து வணங்கினான்.

"ஐயனே, தங்கள் திருத்தொண்டு பற்றி அறியாது போர் முனைக்கு அனுப்பி விட்டேன். தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டினான்.

பரஞ்சோதியார் அரசனை வணங்கி, "மன்னவா, இதில் என்ன குற்றம் இருக்கிறதென்பது எனக்கு விளங்கவில்லை. என் கடமையைச் செய்யவே நான் போர்க்களம் புகுந்தேன். படைத் தலைமைப் பதவியில் இருப்பவர்க்குப் போர்க்களம் புகுவ தன்றோ அழகு" என்றார்.

மன்னன் உள்ளம் ஆறுதல் அடையவில்லை. ஏராளமாகப் பொன்னும் மணியும் கொண்டு வந்து அவர் பாதத்தில் சமர்ப் பித்தான்.

"ஐயனே, இனியும் உம்மை என் சேவகனாகக் கருத என் உள்ளம் மறுக்கிறது. உள்ளத் தூய்மையோடு நான் சமர்ப்பிக் கும் இவற்றை ஏற்றுக்கொண்டு உமது திருத்தொண்டைச் செய்து வாருங்கள்" என்று வேண்டினான்.

பரஞ்சோதியார் அரசனிடம் விடைபெற்றுத் தமது ஊரான செங்காட்டங்குடி வந்து சேர்ந்தார். அவ்வூரிலேயே தம் மனைவியாருடன் தங்கி இறைவனுக்குத் தொண்டுகள் செய்து வரலானார். அடியார்கள் முன்னிலையில் தம்மைச் சிறிய வராகக் கொண்டு நடந்து வந்தபடியால் அவரைச் சிறுத் தொண்டர் என்று அன்போடு அழைக்கத் தொடங்கினர்.

இவ்வாறு இருந்து வரும் நாளையில் அத்தம்பதிகளுக்கு இறைவன் அருளால் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது.

சீராளன் எனப் பெயரிட்டுக் குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தனர். குழந்தைக்கு ஐந்து வயதாகியதும் அவனைப் பள்ளியில் சேர்த்தனர்.

ஆளுடைய பிள்ளையாரான சம்பந்தர் பெருமான் அப்பகுதியில் தங்கியிருந்தபோது பரஞ்சோதியார் அவரைச் சந்தித்துப் பெருமகிழ்ச்சி அடைந்து தம்முடைய ஊருக்கும் எழுந்தருள வேண்டினுர். சம்பந்தர் பிரியத்தோடு அவர் வேண்டுகோளை ஏற்றுச் செங்காட்டங்குடி எழுந்தருளினுர். அவரைத் தமது இல்லத்தில் தங்கச் செய்து மனம் குளிர திருவமுது செய்வித்தார் பரஞ்சோதியார். சம்பந்தர் பெருமான் சிறுத்தொண்டர் பெருமைபற்றி **'பைங்கோட்டு மலர்ப்புன்னை'** என்ற தமது பதிகத்தில் சிறப்பித்துக் கூறினுர்.

சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியாருக்குத் திருவருள் செய்ய எண்ணியவராய் ஈசன் வைரவர் வேடம் தாங்கிக் கைலாயத்திலிருந்து செங்காட்டங்குடி புறப்பட்டார்.

அடுக்கடுக்காக மயிற்கற்றைகள் சுருள் சுருளாகத் தொங்கச் சடையிலே கொன்றை மாலை அணிந்து, நெற்றியிலே திருநீறு பூசி, காதிலே செங்கழுநீர் மலர் தரித்து, மார்பிலே வெண்மையான முப்புரி நூல் அணிந்து, கையிலே சூலம் தாங்கி, கால்களிலே சிலம்பு ஒலிக்க எம்பெருமான் அடியாரைத் தேடிச் செங்காட்டங்குடி வந்து சேர்ந்தார். பசியால் மிகவும் சோர்ந்திருப்பவர் போலச் சிறுத்தொண்டரின் வீட்டை அடைந்தார்.

''தினந்தோறும் அடியார்களுக்கு அமுது செய்விக்கும் தொண்டர் இல்லம் இதுதானு?'' என்று படியேறிக் கேட்டார்.

பரஞ்சோதியார் அனுதினமும் அடியார்களுக்கு உணவு அளித்துப் பின்னரே தாம் புசிப்பது வழக்கம். அன்றும் அடியார் யாராவது எழுந்தருளியிருக்கின்ருரா எனப் பார்த்து அழைத்து வர வெளியே சென்றிருந்தார்.

உள்ளே இருந்த தாதி சந்தனநங்கை என்பவள் வெளியே வந்து அடியாரை வணங்கினுள்.

''சுவாமி, சிறுத்தொண்டர் இல்லம் இதுதான். அடியாரை அழைத்து வந்து அமுது செய்விக்க அவர்களைத் தேடி வெளியே சென்றிருக்கிருர். விரைவில் வந்து விடுவார். உள்ளே வந்து அமருங்கள்'' என்ருள்.

அவளைப் பார்த்த ஈசன், ''ஆண்கள் இல்லாது இருக்கும் போது நான் உள்ளே வருவது சரியல்ல'' என்ருர்.

கதவருகில் நின்று அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கவனித்த பரஞ்சோதியார் மனைவி திருவெண்காட்டு நங்கையார்

வந்திருக்கும். அடியார் திரும்பிப் போய் விடுவாரோ என அஞ்சினுர். உள்ளிருந்து வெளிப்பட்டு அடியாரை நமஸ்கரித்தார்.

"சுவாமி, என் நாயகர் அடியாரைத் தேடித்தான் போயிருக்கிறுர். இன்று எக்காரணத்தாலோ அடியார் எவரும் வரவில்லை. இந்நேரம் வரை காத்திருந்து பார்த்து விட்டுத்தான் போயிருக்கிறுர். விரைவில் வந்து விடுவார். தங்களைப் பார்த்தால் அவர் பெருமகிழ்ச்சி அடைவார். ஈசனே தங்கள் உருவில் வந்திருப்பதாக எண்ணி மகிழ்வார். உள்ளே வந்து அமருங்கள்" என்று பிரார்த்தித்தாள்.

"அம்மையே, வீட்டிலே வேறு ஆண் பிள்ளை இல்லாத போது நான் உள்ளே வருவதற்கில்லை. ஆலயம் சென்று எம் பெருமானைத் தரிசித்து அங்குள்ள ஆத்தி மரத்தடியில் அமர்ந்திருப்பேன். உன் நாயகர் வந்ததும் என்னிடம் அனுப்பு" என்று சொல்லி ஆலயத்துக்குச் சென்றுர் அடியாராக வந்திருந்த இறைவன்.

அடியாரைத் தேடிச் சென்ற பரஞ்சோதியார் எவரையும் காணுது 'இன்று அடியாருக்குத் திருவமுது செய்விக்க முடியவில்லையே!' என்று வருந்தியவராய் வீடு திரும்பினுர். ஆண்டவனே அவர் வீட்டில் அமுது செய்ய எழுந்தருளியிருக்கையில் இன்னெருவர் அகப்படுவாரா?

சோர்ந்த முகத்தோடு படியேறிய நாயகனைப் பணிந்து திருவெண்காட்டு நங்கையார், "சுவாமி, அடியார் ஒருவர் வந்தார். தாங்கள் வீட்டிலில்லாததால் உள்ளே வர மறுத்து விட்டார்..." என்றுர்.

"எங்கே அவர்? இன்று எங்குமே அடியாரைக் காணவில்லை. நான் வரும் வரை பேச்சுக் கொடுத்து அவரை நிறுத்தி வைத்திருக்கக் கூடாதா?" என்று வருத்தத்தோடு கேட்டார் பரஞ்சோதியார்.

"சுவாமி, அவர் தங்களுக்காக ஆலயத்தில் ஆத்திமரத்தடியில் காத்திருப்பதாகச் சொல்லிச் சென்றுர்" என்றுர் அந்த அம்மையார்.

பரஞ்சோதியார் ஆலயத்துக்கு ஓடினுர். அவர் வரவை எதிர்நோக்கி இறைவன் அங்கே ஆத்தி மரத்தடியில் காத்திருந்தார்.

அடியாரைக் கண்டதும் ஆனந்தம் மேலிட ஓடிப் போய் அவர் பாதங்களில் பணிந்து வணங்கினுர்.

''ஐயனே, இன்று என் இல்லத்திற்கு எழுந்தருளி அமுது செய்ய வேண்டும்'' என்று அழைத்தார்.

''நீர்தான் சிறுத்தொண்டர் என்பவரா?'' என்று கேட்டார் இறைவன்.

''ஆம், ஐயனே! அடியேன்தான். அடியார்க்கு உணவு அளிக்காமல் நான் சாப்பிடுவதில்லை· இன்று எந்த அடியாரையும் காணவில்லை. அவர்களைத் தேடிச் சென்றிருக்கையில் தாங்கள் வந்ததாக என் மனைவி தெரிவித்தாள். உணவு தயாராகி விட்டது புறப்படுங்கள்'' என்று வேண்டினார் பரஞ்சோதி.

''அன்பனே, நமக்கு இந்தப் பக்கம் இல்லை. நான் வட தேசத்திலிருந்து வந்தவன். உம்மைக் காண வேண்டுமென்று தான் வந்தேன். அடியார்க்கு நீர் அமுது செய்விப்பது பற்றி அறிந்தேன். எனக்கு உணவளிக்க உம்மால் இயலாது'' என்றார் வைரவர் வேடத்திலிருந்த இறைவன்.

பரஞ்சோதி பதைபதைத்து, ''சுவாமி, அவ்வாறு சொல்லாதீர்கள். உமசகு எந்தவிதமாக உணவு தயாரிக்க வேண்டுமென்று அறிவிக்கிறீர்களோ அவ்வாறு செய்கிறேன். இன்று நீங்கள் என் இல்லத்தில் உணவருந்தி எனக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டும்'' என்று கண்ணீர் மல்க வேண்டினார்.

''தொண்டரே, நான் ஆறு மாதத்துக்கொரு முறை பசு மாமிசம் உண்பவன். இன்று அந்த நாள். அதனால்தான் உம்மால் இயலாது என்று சொன்னேன்'' என்றார்.

''சுவாமி, தயங்க வேண்டாம். என்னிடம் ஏராளமாகப் பசுக்கள் இருக்கின்றன. வருவதாக ஒப்புக் கொள்ளுங்கள், சுவாமி'' என்று மறுபடியும் அவரை வேண்டினார் சிறுத் தொண்டர்.

''தொண்டரே, அவசரப்படாதீர்கள். நான் உண்ணும் பசு நரப் பசுவாகும். அதுவும் ஐந்து பிராயத்திலுள்ள சிறுவன் மாமிசம்; அச்சிறுவன் அக்குடும்பத்தில் ஒரே மகனாக இருக்க வேண்டும். தந்தை அவனை அரியும்போது தாய் அவனை மகிழ்ச்சியோடு பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு சமைத்தால் நான் உண்பேன். உம்மால் அதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்று கேட்டார் இறைவன்.

''சுவாமி, தாங்கள் என் இல்லத்தில் திருவமுது செய்ய ஒப்புக்கொள்வதானால் இறைவன் அருளால் தங்களைத் திருப்தி செய்ய முடியும்'' என்று தெரிவித்தார் பரஞ்சோதியார்.

"அப்படியானால் போய் ஏற்பாடு செய்து விட்டு வாரும். உம்மோடு அமுதுண்ண எழுந்தருளுகிறேன்" என்றார் பைரவ ரான எம்பெருமான்.

பரஞ்சோதியார் அவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினார்.

அடியாரை அழைத்து வராது கணவர் மட்டும் வருவதைக் கண்டதும் அம்மையார் திடுக்கிட்டார்.

"அடியார் வரவில்லையா?..." என்று ஆவலோடு கேட்டாள்.

பரஞ்சோதியார் அடியார் தம்மிடம் தெரிவித்த விவரங் களை மனைவியிடம் தெரிவித்தார்.

"அடியார்க்குத் திருவமுது செய்விக்க ஒரு குடிக்கு ஒரு மகனை நாம் எங்கே தேடுவது?" என்று கவலையோடு நாயகனைக் கேட்டார் திருவெண்காட்டு நங்கையார்.

நிறைய பொன்னும் மணியும் அளித்தால் பிள்ளையைக் கொடுக்க எத்தனையோ பேர் முன் வருவார்கள். ஆனால் தந்தை அரியும் போது எந்தத் தாய் முகம் கோணாது மகனைப் பிடித்து நிற்பாள்? அவ்வாறு செய்யக் கூடியவர்கள் எங்கு சென்றாலும் காணக்கிடைக்க மாட்டார்கள். இனி நேரம் வீணாகாமல் நம் புதல்வனைத் தான் அழைக்க வேண்டும்" என்றார்.

கணவன் வார்த்தைகளைக் கேட்ட அம்மையார் சிறிதும் மனம் கலங்கவில்லை.

"சுவாமி, இத்தனை நாட்களாக நடத்தி வரும் தங்கள் திருப்பணிக்கு இன்று தடை ஏற்படக் கூடாது. இப்போதே பள்ளிக்குச் சென்று குமாரனை அழைத்து வாருங்கள். அடியார் மிகுந்த பசியோடு இருப்பார்" என்றாள்.

பரஞ்சோதியார் மழ்ச்சியோடு பள்ளிக்கு ஓடினார். சீராளனை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினார். திருவெண்காட்டு நங்கையார் கணவனை எதிர்கொண்டு சென்று குமாரனைக் கை களிலே வாரி எடுத்து உச்சி முகர்ந்து அழைத்துச் சென்று நீராட்டிக் கூட்டி வந்தார். பரஞ்சோதி குமாரனை வீட்டுக்குப் பின்னாலுள்ள ஒரு மறைவிடத்துக்கு அழைத்துச் சென்றார். நங்கையார் பாத்திரங்களை தேய்த்துச் சுத்தப்படுத்தி எடுத்து வந்தார். குமாரனை மடிமீது உட்கார்த்தி வைத்து கால்களைத் தம் தொடையிலே இடுக்கிக் கொண்டார். பின் அவன் கைகள் இரண்டையும் தம் கைகளால் இறுக்கிப் பிடித்துக் கொண்டார்.

பரஞ்சோதியார் குழந்தையின் தலைமயிரைக் கோதி விட்டவாறு எழுந்திருந்தார். பெற்றோர்கள் தன்னைக் கண்டு சந்தோஷப்படுகின்றார்கள் என எண்ணி குமாரன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். சிந்தை முழுவதும் சிவமே குடி கொண்டிருந்த பரஞ்சோதியாருக்குக் குமாரன் சிரித்தது அவர்கள் திருப்பணியில் தானும் கலந்து கொள்வதாகச் சம்மதம் அளித்தது போல் தோன்றியது. விரைவிலேயே காரியத்தை முடித்துக் கொண்டார். நங்கையார் தலையின் இறைச்சி அடியார் அமுதுக்கு உதவாது எனத் தாதியிடம் கொடுத்துவிட்டு மற்ற பாகங்களிலிருந்து இறைச்சியை எடுத்து உணவு தயாரித்து முடித்தார்.

பரஞ்சோதியார் ஆலயம் சென்று அடியாரை வணங்கி அமுது செய்விக்க அழைத்து வந்தார். திருவெண்காட்டு நங்கையார் வாயிலில் அடியாரை வரவேற்று அவர் பாதங்களைக் கழுவி மலர் கொண்டு அர்ச்சித்து உள்ளே அழைத்துச் சென்றாள். கூடத்திலே பீடமிட்டு அதன் முன் வாழை இலை போடப்பட்டிருந்தது. அடியார் ஆசனத்தில் அமர்ந்ததும் பரஞ்சோதி அடியாரை நெருங்கி, ''சுவாமி, எவ்விதம் பரிமாறுவது? தாங்கள் தெரிவித்தது போல எல்லாம் தயாராக இருக்கின்றன'' என்று கேட்டார்.

''எல்லா அவயவங்களையும் பாகம் செய்திருக்கிறீர்களல்லவா?'' என்று கேட்டார் ஈசன்.

''தலை இறைச்சி அடியார் அமுதுக்கு உதவாது என அதைத் தவிர மற்ற பாகங்களைச் சமைத்திருக்கிறோம்'' என்று பதில் அளித்தாள் நங்கையார்.

''தலை இறைச்சியும் கொண்டு வாருங்கள். அதையும் நாம் உண்பதுண்டு'' என்றார் அடியாராக வந்திருந்த இறைவன்.

திடுக்கிட்டனர் அவர்கள் இருவரும். தலை இறைச்சி அடியார் அமுதுக்கு உதவாது என்றல்லவா அதை ஒதுக்கி விட்டார்கள்?

சந்தன நங்கையார் ஓடி வந்தாள். ''அம்மா, அடியார் உண வருந்தும்போது நினைவுக்கு வந்தால் என்ன செய்வது என்று பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்'' என்று எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். ஆனந்தப் பரவசமாகியவராய் திருவெண்காட்டு நங்கையார் அதை வாங்கிச் சென்று அடியார் இலையில் பரிமாறினார். அன்னத்தோடு பலவித காய்கறிகளும் பரிமாறி அடியார் விரதத்துக்கேற்ப பாகம் செய்திருந்த இறைச்சியையும் எடுத்து வந்து இலையில் வைத்தார்.

''சிறுத்தொண்டரே, நாம் தனியாகச் சாப்பிடுவதில்லை. யாராவது அடியாரை அழைத்து வாரும்'' என்ருர் வைரவராக வந்திருந்த எம்பெருமான்.

பரஞ்சோதியார் தவித்தார். வெளியே சென்று யாராவது தென்படுகிருர்களோ எனப் பார்த்தார். எவரையும் காணவில்லை. சோர்ந்த முகத்தோடு உள்ளே திரும்பி, ''சுவாமி, அடியார்கள் எவரையும் காணவில்லை. திருநீறு பூசாத எவரையும் அடியேன் அமுது செய்ய அழைப்பதில்லை'' என்ருர்.

வைரவன் கோலத்தில் அமர்ந்திருந்த அடியார் 'கலகல' வென்று நகைத்தார்.

''தொண்டரே, உம்மைப் போல் திருநீறு பூசுபவரும் உலகில் உண்டா? எம்மோடு அமுது செய்யத் தகுதி பெற்றவரே நீரும். பக்கத்தில் உட்காரும்'' என்று சொல்லி, தொண்டரின் மனைவியைப் பார்த்தார்.

''அம்மையே, உம் நாயகருக்கு ஓர் இலை கொண்டு வந்து போட்டு என் இலையிலிருப்பதில் ஒரு பகுதியை எடுத்து வையுங்கள்'' என்ருர்.

என்ன சோதனை? இருப்பினும் அடியார் அமுது செய்ய வேண்டும் என்பதிலேயே அவர்கள் நினைவு லயித்திருந்தது. அம்மையார் கணவரைப் பார்த்தார்.

''அடியார் காத்திருக்கிருர். சீக்கிரம் இலை கொண்டு வா'' என்ருர் பரஞ்சோதியார்.

இலையைப் போட்டு அதில் உணவைப் பறிமாறினுர் நங்கையார்.

''சுவாமி, அமுது செய்யுங்கள்!'' என்று சொல்லியவாறு இலையிலிருந்த உணவைக் கையிலெடுத்தார் பரஞ்சோதியார். தாம் தயங்கினுல் அதைக் காரணமாகக் கொண்டு அடியார் உணவு கொள்ள மேலும் தாமதிப்பாரோ என அஞ்சினுர் அவர்.

''ஐயனே, நில். என்ன அவசரம்? ஆறு மாதங்களுக்கு ஒரு முறை உணவு அருந்தும் நான் சாப்பிடும் முன்பு தினமும் சாப்பிடும் உமக்கு என்ன அவசரம்? உமக்கு மகன் இருக்கிருனே. அவனையும் நம்மோடு உணவருந்தக் கூப்பிடும்'' என்ருர்.

''சுவாமி, அவன் இந்த வேளைக்கு உதவமாட்டான்!'' என்று பதில் அளித்தார் பரஞ்சோதி.

"குழந்தையைப் பட்டினி போட்டுவிட்டுச் சாப்பிடுவதா? அவனை அழைத்து வாரும். அவன் வராமல் நான் சாப்பிட முடியாது," என்றார் எம்பெருமான்.

என்ன செய்வார் பரஞ்சோதியார்? பேசாமல் எழுந்து மனைவியையும் அழைத்துக் கொண்டு வாயிலுக்கு வந்தார்.

"குமாரா, உணவருந்த வா! வைரவர் அமுதுசெய்ய அழைக்கின்றார். சீராளா வா!' என்று அழைத்தனர்.

என்ன ஆச்சரியம்! பள்ளிக்கூடத்திலிருந்து வருவது போல சீராளன் ஓடிவந்தான்.

திருவெண்காட்டு நங்கையார் உள்ளம் குதூகலத்தால் நிறைந்து வழிய ஓடிச்சென்று மகனைக் கட்டி அணைத்து முத்தமிட்டு அழைத்து வந்தாள். அவர்கள் மீண்டும் கூடத்துக்கு வந்தபோது அடியாரைக் காணாது திகைத்தனர்.

"அடியார் எங்கே?... எங்கே?..." என்று திடுக்கிட்டு நாற்புறமும் பார்த்தனர் அடியாருக்குப் படைத்திருந்த உணவும் காணப்படவில்லை. அடியார் அதற்குள் எங்கு போய் விட்டாரென்று வீடு முழுதும் தேடினர்.

"அன்பனே..." என்றொரு குரல் வானிலே எழுந்தது.

அனைவரும் திடுக்கிட்டு மேலே பார்த்தனர். எம்பெருமான் தேவியாரோடும் குமரனோடும் ரிஷப வாகனத்தில் திவ்விய தரிசனம் கொடுத்தார். பரஞ்சோதியாரும் அவர் மனைவியாரும் அத்திருக் கோலத்தைக் கண்டு களித்துப் பக்திப் பரவசராகி தங்களையே மறந்து நின்றனர்.

"அன்பனே, அடியார்களிடம் நீ கொண்டுள்ள பக்தியை எடுத்துக்காட்டவே நாம் வைரவராக வந்தோம். என்றும் எம்மை விட்டுப் பிரியாதிருக்க வாருங்கள்" என்று அழைத்தார் எம்பெருமான்.

கைகூப்பி ஈசனைத் தொழுதவராய் பரஞ்சோதியார் மனைவியோடும் மகனோடும் தாதியையும் அழைத்துக்கொண்டு எம்பெருமான் திருவடிகளைச் சேர்ந்தார்.

66. சிலம்பொலி கேட்ட சேரமான்

மலை நாட்டிலே திருவஞ்சைக்களம் என்னும் சிவாலயம் கொண்டுள்ள கொடுங்கோளூரிலே அரசாண்டுவந்த சேரர் பரம்பரையிலே பெருமாக்கோதையார் என்பவர் பிறந்தார். அவர் சின்னஞ்சிறு வயதிலிருந்தே சிவபெருமானிடம் மிகுந்த பக்தி

கொண்டார். அரசபோகத்தால் மறுமைக்குப் பயன் இல்லை என வெறுத்து அவர் எம்பெருமான் பக்தியிலேயே லயித்திருந்தார். நாள்தோறும் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்.

அந்நாளிலே சேர நாட்டை ஆண்டு வந்த செங்கோற் பொறையன் என்னும் அரசன் அரச பாரத்தை வெறுத்தான். இத்தனை காலமாக அனுபவித்தது போதும் என்றும், இனி பிறவிப் பாசத்தை அறுத்தொழிக்க தவம் மேற்கொள்ளவும் விரும்பினான். அதிகாரத்தை அமைச்சர்களிடம் ஒப்புவித்து, வேறு அரசனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு சொல்லி விட்டு அவன் துறவறம் பூண்டு வனத்துக்கு ஏகினான்.

அமைச்சர்கள் ஒன்றுகூடி ஆலோசித்தனர். எம்பெருமான் தொண்டிலே ஈடுபட்டிருக்கும் பெருமாக்கோதையார் அரசராவ தற்கு ஏற்றவர் என்று முடிவு செய்தனர். திருவஞ்சைக்களம் வந்து கோதையாரை வணங்கி தங்கள் விருப்பத்தைத் தெரி வித்து அரண்மனைக்கு வருமாறு அழைத்தனர்.

“அமைச்சரே, உங்கள் விருப்பப்படி செங்கோல் தாங்குவ தானால் என் தொண்டுக்கு இடையூறு இல்லாது அமைய வேண்டும். எம்பெருமானிடம் கேட்டு வருகின்றேன்” என்று ஆலயத்துள் சென்று இறைவனை வேண்டினார்.

இறைவன் அவருக்கு அனுமதி அளித்ததோடு யாரும் யாவும் கழறினவை அறியும் உணர்வும் அளித்தார்.

பெருமாக்கோதையார் என்னும் கழறிற்றறிவார் சேரநாட்டு மன்னனாக முடி சூட்டப்பட்டார். செங்கோலைத் தாங்கிய சேர மான் பட்டத்து யானை மீதேறி ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு மனம் குளிர்ந்து வீதிகளில் ஊர்வலமாக அரண்மனை நோக்கிப் புறப்பட்டார்.

வண்ணான் ஒருவன் துணிகளை வெளுக்க உபயோகப் படும் உவர்மண் பொதியைத் தோளிலே சுமந்துகொண்டு எதிரே வந்தான். மழையினால் கறைந்த உவர்மண் அவன் தேகத்தில்வழிந்து ஊறப்பெற்று வெளுத்திருந்ததால் அவனைத் தேகம் முழுவதும் திருநீறு பூசியிருப்பவனைப் போலத் தோற்ற முறச் செய்தது. சிந்தையிலே சிவம் குடிகொண்டிருந்த சேர மான் அவனைப் பார்த்ததும் சிவனடியாராகப் பாவித்து யானையி லிருந்து இறங்கி அவனை நெருங்கி வணங்கினார்.

வண்ணான் வெலவெலத்துப் போய்விட்டான். “அரசே! அடியேன் வண்ணான் அன்றோ!” என்றான்.

"அடியேன் சேரன். திருநீறு பூசிய அடியாரின் தோற்றத்தை எனக்குத் தாங்கள் காட்டி அருளினீர். வருத்தப்படாமல் போய்வாரும்" என்று சொல்லி அவனை மீண்டும் பணிந்து திரும்பினுர் அரசர்.

அடியார்களிடம் சேரமான் கொண்டுள்ள அன்பின் மேன்மையைக் கண்டு அமைச்சர்கள் அவரைக் கொண்டாடினுர்கள்.

அரண்மனை அடைந்த சேரமான் தாம் மேற்கொண்டுள்ள அடியார் பணிகளுக்குக் குந்தகம் விளையாது ஆட்சி நடத்தி வரலானுர். தில்லையில் களிநடம் புரியும் கூத்தப் பெருமானிடம் எல்லையில்லா அன்பு பூண்டு தினமும் அவருக்குப் பூஜை செய்து வந்தார். இறைவனும் அவரிடம் அன்பு கொண்டு பூஜையின் முடிவில் தமது பாத சிலம்பொலியைக் கேட்குமாறு அருளி வந்தார்.

இவ்வாறு இருந்து வருகையில் மதுரையிலே சோமசுந்தரரைப் பக்தியோடு வழிபட்டு வரும் பாணபத்திரர் என்பவர் இருந்து வந்தார். அவர் எம்பெருமானை இசையினுல் தினமும் களிப்பித்து வந்தார். அவருக்குச் செல்வம் அளிக்க எண்ணம் கொண்ட இறைவன் அவர் கனவிலே தோன்றி, "உனக்குப் பொன்னும் மணியும் அளிக்க நம் அன்பன் சேரனுக்குத் திருமுகம் கொடுக்கிருேம். தாமதிக்காது போய் வா" என்று அருளி 'மதிமலிபுரிசை' என்னும் திருப்பாசுரம் எழுதப்பெற்ற திருமுகம் கொடுத்து மறைந்தார்.

பாணபத்திரர் அடுத்த நாளே மதுரையை விட்டுப் புறப்பட்டுக் கொடுங்கோளூரை அடைந்தார். அரண்மனை சென்று அரசரைச் சந்தித்து இறைவன் திருவுள்ளத்தைத் தெரிவித்துத் தாம் எடுத்து வந்த திருமுகத்தைக் காட்டினுர். அதை வாங்கித் தலை மீது தரித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார் சேரமான்.

"ஐயனே, என்னையும் ஒரு பொருட்டாக எண்ணித் திருமுகம் கொடுத்து அனுப்பினுயே!" என்று அப்பாசுரத்தைப் பலமுறை படித்து இன்புற்ருர். பின் அமைச்சரை அழைத்துப் பொக்கிஷத்திலிருந்து பொன்னும் மணியும் பட்டுமாகக் கொண்டு வந்து குவிக்குமாறு செய்தார்.

"சுவாமி, இதோ இறைவன் திருவுள்ளப்படி சமர்ப்பித்திருக்கிறேன். இன்னும் அரசுரிமையையும் தருகிறேன். ஏற்றுக்கொண்டு என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பணிந்து வேண்டினுர்.

பாணபத்திரர் மேனி சிலிர்த்தது. அடியார்களிடம் அரசர் கொண்டுள்ள பக்தி அவர் உள்ளத்தில் பெரும் வியப்பை உண்டாக்கியது.

"வேந்தே, எனக்குத் தேவையானவற்றை மட்டுமே தங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள இறைவன் உத்தரவு!" என்ற பாணபத்திரர் தமக்கு வேண்டியவற்றை மட்டும் அரசரிடமிருந்து பெற்றுக்கொண்டு புறப்பட்டார். அரசர் அவரை நகர எல்லைவரை வந்து வழியனுப்பித் திரும்பினர்.

சேரமான் தினமும் நடராஜப் பெருமானைப் பூஜை செய்து அவர் பாதச் சிலம்பொலி கேட்டு ஆனந்தித்து வருகையில் ஒரு நாள் பூஜை முடிந்ததும் வழக்கமாகக் கேட்கும் சிலம்பொலி கேட்கவில்லை. அரசர் பெருமான் திடுக்கிட்டார். தம்மிடம் ஏதோ குறை இருப்பதால்தான் இறைவன் தினமும் கேட்கச் செய்து வந்த சிலம்பொலி நின்றுவிட்டது என்று எண்ணினர். இறைவன் அன்புக்குப் பாத்திரமாக இருந்து வந்த அவர் இப்போது வெறுப்புக்கு ஆளாகி விட்டாரோ?

இறைவன் தம்மைக் கைவிட்ட பிறகு அவர் உயிர் வாழ்ந்து தான் என்ன பலன்? உடைவாளை உருவி நெஞ்சத்திலே பாய்ச்சிக்கொள்ள முனைந்தார். அவ்வமயம் சிலம்பொலி கேட்டது.

உடைவாளைக் கீழே எறிந்துவிட்டு எம்பெருமானை வணங்கி, "ஐயனே, உயிரைப் போக்கிக்கொள்ள நான் முடிவு செய்யும் வரை இவ்வொலி கேட்காது செய்த காரணம் என்ன?" என்று கண்களில் நீர் மல்க வேண்டினர்.

"சுந்தரன் கனகசபையிலே நம்மை மகிழ்விக்கப் பாடிக் கொண்டிருந்தான். அதனுல் நாம் வரத் தாமதமாயிற்று" என்று அசரீரி மூலம் இறைவன் அறிவித்தார்.

அதைக் கேட்ட அரசர் அடியார்களிடம் இறைவன் கொண்டுள்ள கருணையை எண்ணி வியந்தார். தம்மைப்போல ஈசன் அன்புக்கு ஆளான சுந்தரரைத் தரிசிக்க விரும்பம் கொண்டார். அடுத்த நாளே பரிவாரங்களுடன் சிதம்பரம் நோக்கிப் புறப்பட்டார்.

பொன்னம்பலத்தை அடைந்த சேரமான் பெருமான் ஆனந்தத் தாண்டவம் புரியும் அம்பலவாணரைத் தரிசித்து பக்திப் பிரவாகத்தில் திளைத்து பொன்வண்ணத்தந்தாந்தி பாடினர். அடியாரிடம் தாம் கொண்ட மகிழ்ச்சியைக் காட்ட இறைவன் தில்லைச் சபையிலே சிலம்பொலி கேட்கச் செய்தார். சிலம்பொலி கேட்ட சேரமான் பரவசமடைந்தவராய் எம்பெருமானைப் போற்றிக் கொண்டாடினர்.

சுந்தரர் சிதம்பரத்தை விட்டுப் புறப்பட்டு ஆரூரில் சென்று தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்ட சேரமான் அங்கிருந்து கிளம்பி வழியிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு ஆரூர் போய்ச் சேர்ந்தார். சேரமான் வருகை கேட்டுச் சுந்தரர் எதிர்கொண்டு சென்று அவரை வரவேற்றார். தம்பிரான் தோழரைக் கண்டு மனம் குளிர்ந்தவராய் சேரமான் அவரோடு ஆலயம் சென்று எம்பெருமானைத் தரிசித்தார். திருமும்மணிக் கோவை பாடி பரமனைத் தொழுதார்.

சுந்தரரோடு பரவையார் இல்லத்தில் சில நாட்கள் தங்கிய சேரமான் அவரோடு புறப்பட்டுப் பாண்டி நாட்டுத் தலங்களைத் தரிசித்துக்கொண்டு மீண்டும் ஆரூரை அடைந்தார். பின் சுந்தரரைத் தம் ஊருக்கு எழுந்தருளுமாறு வேண்டி அழைத்தார். சுந்தரரும் அவரோடு புறப்பட்டுக் கொடுங்கோளூரை அடைந்து அவர் திருமாளிகையில் சில நாட்கள் தங்கி இருந்தார்.

கொடுங்கோளூரிலே இருந்துவருகையில் சுந்தரருக்கு ஆரூரரைத் தரிசிக்க விருப்பம் தோன்றவே சேரமானிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். சேரமான் தாமும் அவரோடு வருவதாகக் கிளம்பினர். சுந்தரரோ அதற்கு உடன்படவில்லை.

''ஐயனே, நீர் இங்கிருந்து மக்களுக்குத் தொண்டு புரிந்து வாருங்கள். ஆரூர்ப் பெருமானை மறந்து இருக்க முடியாது'' என்று சொல்லி அவரைத் தடுத்து நிறுத்திவிட்டுப் புறப்பட்டுச் சென்றார் சுந்தரர்.

சேரமான் பெருமான் சுந்தரர் வார்த்தையை மீற முடியாது கொடுங்கோளூரிலே தங்கி மக்கள் நல்வாழ்வுக்கு இயன்ற சேவை புரிந்து வரும்போது சுந்தரர் வெள்ளை யானை மீதேறி கைலாயம் செல்கிறார் என்பதை உணர்ந்து அவருக்கு முன்னதாகக் குதிரையிலேறி கைலாயம் அடைந்தார்.

67. சிவகணங்களுக்குத் தலைவரான சிவனடியார்

சீர்காழியிலே அந்தணர் குலத்திலே பிறந்த சிவபக்தர் ஒருவர் இருந்தார். கணநாதர் எனப் பெயர் கொண்ட அவர் சிவபெருமானிடம் மிக்க பக்தி கொண்டிருந்தார். அவருக்குத் தொண்டு செய்வதே தம் பணியாகக் கொண்டார். அது மட்டுமல்ல. அவர் தம்மை நாடி வந்தவர்களையும் அப்பணி

களிலே ஈடுபடச் செய்தார். நந்தவனம் அமைத்துப் பராமரித்தல் தினமும் மலர் கொய்து வந்து எம்பெருமானுக்கு மாலை தொடுத்து சமர்ப்பித்தல், திருமஞ்சனத்துக்குத் தேவையான நீர் கொண்டு வந்து கொடுத்தல், பிராகாரங்களில் வளர்ந்திருக்கும் புற்பூண்டுகளை அகற்றிச் சுத்தம் செய்தல், பிராகாரங்களிலும் சந்நிதிகளிலும் குப்பை நீக்கி மெழுகி கோலமிடுதல், விளக்கு ஏற்றுதல், கேட்க இனிக்கும் பாடல்களைப் பாடி மகிழ்வித்தல் முதலான திருப்பணிகளில் அவரவர்க்கும் பிடித்தமானவற்றில் ஈடுபடச் செய்து அவர்களுக்குத் தேவையான பயிற்சியும் அளித்து வந்தார். சம்பந்தப் பெருமானிடம் அவருக்கு மிகுந்த பக்தி. அவரை மூன்று வேளைகளிலும் தரிசித்து வந்தார்.

கணநாதர் செய்துவந்த திருத்தொண்டைப் பாராட்டி எம்பெருமான் அவரைத் தம்மிடம் அழைத்துக்கொண்டு சிவகணங்களுக்குத் தலைமைப் பதவி அளித்தார்.

68. அம்பலவாணன் அடி சூடிய அன்பர்

திருக்களந்தை என்னும் ஊரிலே கூற்றனா என்னும் சிவபக்தர் ஒருவர் இருந்து வந்தார். எம்பெருமான் திருமந்திரமான டஞ்சாக்ஷரத்தை அவர் விடாது ஜபித்து வருபவர். சிவனடியார்களிடம் அத்தியந்த பக்தி கொண்டவர்.

இறைவன் திருவருள் அவருக்குக் கைகூடியது. ஏராளமாகச் செல்வம் குவிந்தது. சதுரங்க சேனைகளும் அவர் கீழ் இருந்தன. தம்முடன் சண்டைக்கு வந்த வேற்று அரசர்களை வென்று தமக்குக் கீழ்படியச் செய்தார். மக்கள் அவரைப் போற்றிக் கொண்டாடினர் முடிசூடா மன்னராக அவர் திகழ்ந்தார்.

கூற்றனுர் தில்லை வந்து எம்பெருமானைத் தரிசித்தார். தில்லை மூவாயிரத்தாரை அழைத்துப் பொன்னம்பலத்திலே உள்ள முடியைத் தமக்குச் சூட்டி அருளுமாறு அவர்களை வேண்டினுர்.

மூவாயிரத்தாரோ அவர் வார்த்தைக்குப் பணிய மறுத்து விட்டனர்.

''சோழர் குலத்து மன்னர்களைத் தவிர மற்றையோருக்கு நாங்கள் முடி சூட்ட மாட்டோம்!'' என்று அறிவித்து விட்டனர்.

கூற்றனார் தங்களுக்கு ஏதாகிலும் கெடுதல் செய்யலாம் என்று அஞ்சி தங்களுள் ஒரு குடியினரை மட்டும் தில்லையிலே நிறுத்தி அருமை முடியைப் பாதுகாக்கச் சொல்லிவிட்டு மற்றையோர் ஊரைவிட்டுச் சேர நாடு சென்று விட்டனர்.

கூற்றனார் அடைந்த வருத்தம் அளவிட முடியாதது. அன்றிரவு மனம் நொந்து இறைவனை வேண்டினார்.

"ஐயனே, அவர்கள் மறுத்து விட்டார்கள். உன்னிடம் ஆழ்ந்த பக்தி உள்ள என்னிடம் நீயாவது அருள் புரிய வேண்டும். உன் திருவடியையே எனக்கு முடியாகச் சூட்டி அருள வேண்டும்" என்று மனம் கசிந்து உருகப் பிரார்த்தித்தார்.

அம்பலவாணனும் அடியார் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார். அன்றிரவு நித்திரையில் தோன்றி கூற்றனார் முடியிலே தம் திருவடிகளைச் சூட்டி மறைந்தார்.

கூற்றனார் எல்லையில்லா இன்பம் பெற்றவராய் இறைவன் சூட்டிய திருவடிகளையே முடியாகக் கொண்டு உள்ளம் பூரித்து பல தலங்களுக்குச் சென்று தரிசித்துத் தொண்டுகள் புரிந்து வந்தார். முடிவில் அவர் எம்பெருமான் திருவடிகளையே அடைந்தார்.

கூற்றுவ நாயனாரின் தொண்டைப் போற்றிக் கொண்டாடிய சுந்தரர் மேலும் அடியார் பெருமை பற்றிப் பாடலானார்.

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில் கருவூர்த்துஞ்சிய புகழ்ச் சோழர்க்கு அடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க்கு அடியேன்
விரிதிரை சூழ்கடல் நாகை அதிபத்தர்க்கு அடியேன்
கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற் சக்திவரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

69. தீயிடைப் புகுந்த சோழர்

பொய்யடிமை இல்லாது சிவபெருமானிடம் உண்மையாக பக்தி கொண்டு அவருக்கு அடிமையாக வாழ்ந்து இறைவன் திருவடிகளைச் சேர்ந்த புலவர்களைப் போற்றி அவர்களுக்கும் தாம் அடியார் எனக் கொண்டாடிய சுந்தரர் அடுத்து புகழ்ச் சோழரைக் குறித்துப் பாடினார்.

சோழ நாட்டிலே உறையூரிலிருந்து அரசு புரிந்து வந்தவர் புகழ்ச் சோழர் என்பவர். அவர் சிவபக்தியில் சிறந்து விளங்கு பவர். சிவனடியார்களிடம் அளவற்ற பக்தி கொண்டிருந் தார்.

ஒரு சமயம் கொங்குதேசத்தாரும் குடகுதேசத்தாரும் திரை செலுத்த வந்தனர். சோழர் தம்முடைய மேற்கத்திய ராஜதானி யான கருவூரிலே வந்து தங்கி அவர்கள் கொண்டுவந்து சமர்ப் பித்த திறைகளைப் பெற்று அவர்களைக் கௌரவித்தார்.

அவ்வமயம் ஒருநாள் ஆனிலை என்ற சிவாலயத்தில் எழுந் தருளியிருக்கும் பெருமானுக்கு மலர் சாத்த பூக்குடலையில் மாலை களை எடுத்துக்கொண்டு சிவகாமி யாண்டார் என்பவர் வீதி வழியே சென்று கொண்டிருந்தார். அவ்வழியே வந்த பட்டத்து யானை அடியாரிடமிருந்து பூக் குடலையைப் பிடுங்கி மிதித்து நாற்புறமும் விசிறி எறிந்தது. சிவகாமியாண்டார் ஓலமிட அவ்வழியே வந்த எறிபத்தர் என்ற அடியார் எம்பெருமா னுக்கு எடுத்துச் சென்ற மலர்களை மாசு படுத்திய யானையை யும் அதனுடன் வந்த பாகர்களையும் தம் கையில் வைத் திருந்த மழுவால் அழித்தார். விஷயம் அறிந்து படைகளுடன் ஓடி வந்தார் அரசர். அடியார் செய்தது நியாயமே என்றும் சிவாபராதனை செய்ததற்கு யானையையும் பாகர்களையும் தண் டித்தது போதாது என்றும் யானைக்கு உரியவனான தன்னை யும் மாய்க்க வேண்டும் என்றும் வேண்டினான். இத்தனை நல்ல மனத்தை உடைய அரசனுக்கு வேதனை கொடுக்கக் கூடிய வகையில் தாம் நடந்துகொண்டு விட்டோமே என பதை பதைத்துத் தம்மை மாய்த்துக் கொள்ள முயன்றார் அடி யார் அப்போது இறைவன் தோன்றி உயிரிழந்த யானையையும் பாகர்களையும் உயிர்ப்பிக்கச் செய்து அருளினார்.

கொங்குநாட்டாரும், குடகு நாட்டாரும் சென்ற பின் அரசன் அமைச்சரிடம், "அமைச்சரே, இன்னும் நம் ஆதிக் கத்தை ஏற்காது யாராகிலும் இருக்கிறார்களா?" என்று கேட் டார்.

"மன்னவா, அதிகன் என்றொரு அரசன் உள்ளான். அவன் மலைகளே அரணாக உள்ள இடத்தில் இருக்கிறான். நமக்குக் கீழ்படிய மறுத்ததோடு திறை அனுப்பவும் முடியாதென இறுமாப்புடன் செய்தி அனுப்பிவிட்டான்" என்றார் அமைச்சர்.

"நால்வகைச் சேனைகளுடன் சென்று அவன் திமிரை அடக்கி நம் சமூகத்துக்கு அழைத்து வாரும்" என்று உத்தர விட்டார் சோழர்.

சோழர் படைகள் புறப்பட்டு சென்று அதிகன் தங்கி யிருந்த அரணைத் தகர்த்து அவன் வீரர்களுடன் போரிட்டனர். யுத்தத்திலே வெற்றிகாண முடியாதென்பதை உணர்ந்த அதிகன் ஓடிப்போய் அருஞ்சுரத்திலே ஒளிந்து கொண்டான். சிக்கிய வீரர்களுடைய தலைகளை அறுத்து ஊரைக் கொள்ளை யிட்டு ஏராளமாகப் பொன்னும் மணியும் கொண்டு வந்தனர்.

வெற்றியுடன் திரும்பிய அமைச்சர் அரசனைப் பணிந்து தாம் கொண்டு வந்திருந்த நிதிக்குவியலை அவன் பாதங்களில் சமர்ப்பித்தார். எதிரி வீரர்களுடைய தலைக்குவியலிலே ஒரு தலையைக் கண்டதும் அரசர் திடுக்கிட்டார். சடைமுடியோடு கூடிய அத்தலை சிவனடியார் ஒருவருடையது என்பதைத் தெள்ளெனக் காட்டியது.

புகழ்ச்சோழர் கண்கள் 'பொல பொல'வென்று நீரை உகுத்தன.

"ஆஹா, சிவனடியார்களிடம் அன்பு பூண்டு அவர்களுக் குத் தொண்டு புரிந்து வரும் நான் அடியார் ஒருவருடைய மரணத்துக்குக் காரணமாகிவிட்டேனே. அடியார்க்கு அபசாரம் செய்துவிட்ட நான் இனி உயிரோடு இருப்பது எதற்காக!" என்று கதறினர்.

அமைச்சர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அரசர் ஏற்க வில்லை. அரசைத் தம் புதல்வனிடம் ஒப்படைத்தார். தீ வளர்க்கச் செய்து அடியார் தலையைப் பொன் கலத்திலே ஏந்தி அக்கினியை வலம் வந்து பஞ்சாக்ஷரம் ஜபித்தவாறு தீயி னிடைப் புகுந்தார்.

தம் அடியார்களிடம் அளவற்ற அன்பு பூண்டு அடியார் ஒருவர் இறக்கத் தாம் காரணமாக ஆகிவிட்டோமே என வருந்தி உயிரைத் தியாகம் செய்த புகழ்ச்சோழருடைய தூய நெறியைப் போற்றி எம்பெருமான் அவரைத் தம் இருப்பிடம் அழைத்துக் கொண்டார்.

70. வேடத்துக்கு மதிப்பு அளித்த வேந்தன்

திருமுனைப்பாடி நாட்டிலே நரசிங்கமுனையரையர் என்பவர் ஆட்சி புரிந்து வந்தார். சிவபக்தி மிகுந்த அவர் தீய வழிகளில் செல்லும் அரசர்களை வென்று அவர்களையும் சைவத் தொண் டிலே ஈடுபடச் செய்தார். சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதே பெரும் தொண்டு என்ற கொள்கை கொண்டிருந்தார்.

சிவாலயங்களுக்குப் பொன்னும் மணியும் வாரிக் கொடுத்து நித்திய பூசைகள் குறைவின்றி நடக்குமாறு செய்தார்.

ஒவ்வொரு வருடமும் திருவாதிரை நாள் அன்று அவர் அடியார்களை வரவேற்று பூஜை செய்து அவர்களுக்குப் பொன் கொடுத்து அனுப்புவார். அவ்வாறு செய்து வரும்போது ஒரு திருவாதிரை நாள் அன்று அரண்மனைக்கு வந்த அடியார்களுள் ஒருவர் தூர்த்த வேடம் கொண்டு காமம் மிகுந்தவராக இருந்தார். அவரைக் கண்ட மற்ற அடியார்கள் இகழ்ந்து அவரை நெருங்காது ஒதுங்கினர்.

அதைக் கண்ட அரசன் உள்ளம் வேதனை கொண்டது. அந்த அடியார் உண்மையாகவே தம் சொருபத்துக்கும் நடத்தைக்கும் மாறுபட்டவராக இருக்கலாம். திருநீறை அணிந்ததன் மூலம் அவரும் சிவனுக்கு அடியாராகி விட்டார். உலகத்தார் அவரை இகழ்ந்து பேசி ஒதுக்கினால் நரகத்துக்கல்லவா செல்ல நேரும். அதை அரசர் விரும்பவில்லை. அந்த வேடதாரியை அழைத்து இரட்டிப்புப் பொன் கொடுத்து அன்பாகப் பேசி அனுப்பினார்.

அரசருடைய அச்செய்கை மற்றவர்களைத் தலைகுனியச் செய்தது. அவன் வேடதாரியாக இருக்கலாம். ஆனால் திருநீறு பூசியதன் பேரில் அவன் சிவன் அடியாருடைய தோற்றத்தைக் கொண்டுவிட்டான். அத்தோற்றத்துக்கு அரசர் கௌரவம் கொடுத்தார் என அவர்கள் அரசனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இவ்வாறு அனைவரும் கொண்டாடும் வகையில் நரசிங்க முனையரையர் பல காலம் தொண்டு புரிந்து வந்து இறுதியில் எம்பிரான் மலரடிகளைச் சேர்ந்தார்.

71. பொன் மீனை அளித்து பொற்பதம் அடைந்தவர்

பொன்னி நாட்டிலே சமுத்திர தீரத்திலே நாகபட்டினம் என்றொரு நகரம் இருக்கிறது. அவ்வூரிலே நுளைப்பாடியில் வசித்து வந்த செம்படவர்களுக்குத் தலைவராக இருப்பவர் அதிபத்தர் என்பவர். அவர் எம்பெருமானிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர். செம்படவர்கள் அவருக்கென்று பிடித்து வரும் மீன்களில் சிறந்த மீனை எம்பெருமானுக்கென்று சமுத்திரத்திலே விட்டு விடுவார். சில நாட்களில் அவருக்கு ஒரே ஒரு

மீன் மட்டுமே கிடைக்கும். அப்போதும் அவர் சிறிதும் தயங்காமல் எம்பெருமானைச் சேர்ந்தது என அதையும் கடலிலே விட்டு விடுவார்.

அதிபத்தரின் பக்தியைச் சோதிக்க விருப்பம் கொண்டார் எம்பெருமான். ஒரு நாளைக்கு ஒரு மீன்தான் அகப்படுமாறு விதித்தார். அதிபத்தர் ஒவ்வொரு நாளும் தமக்குக் கிடைத்த ஒரேயொரு மீனையும் எம்பெருமானுக்கே உரியதாக்கிக் கடலிலே விட்டு வந்தார்.

வருமானம் இல்லாததால் அதிபத்தரின் செல்வம் குறைந்தது. விரைவிலேயே அவர் வறுமையில் சிக்கினார். அந்நிலையிலும் அவர் தம் வழக்கத்தை விடவில்லை. உணவுக்கு வழியின்றி பட்டினி கிடந்தார். கிடைக்கும் ஒரு மீனைக்கூட எம்பெருமானுக்கு என அவர் விட்டுவிடுவது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. ''கடவுள் நிறைய கொடுத்தால் அவருக்கென விடுவதில் நியாயமிருக்கிறது. ஒரு மீன் மட்டுமே கிடைக்கும்போது இதென்ன வழக்கம்? தனக்கு மிஞ்சிய பின்னரே தானமும் தருமமும்!'' என்று மற்றவர்கள் எவ்வளவோ சொன்னார்கள். அதிபத்தர் அவர்கள் வார்த்தையைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அதனால் அவர்கள் சினம் கொண்டு அவருக்கு உதவாது ஒதுங்கிவிட்டனர்.

பட்டினி கிடந்ததால் அதிபத்தர் உடல் மெலிந்துவிட்டது. அந்நிலையிலும் அவர் தம் உறுதியிலிருந்து சிறிதும் வழுவவில்லை.

அன்றைத் தினமும் அவருக்காகச் செம்படவர்கள் வலை வீசினர். வழக்கம்போல ஒரே ஒரு மீன்தான் அகப்பட்டது. அதை எடுத்து எம்பெருமானுக்கென கடலிலே விட்டனர். அப்போது வலையில் நவரத்தினங்கள் இழைக்கப்பெற்றதும் விலை மதிப்பிட முடியாதது.மான பொன் மீன் ஒன்று சிக்கியிருப்பதைக் கண்டனர். ஆவலோடு அதை எடுத்து வந்து கரையில் நின்றிருந்த அதிபத்தரிடம் கொடுத்தனர்.

அதைப் பார்த்த அதிபத்தர் ஆனந்தக் கூத்தாடினார். ''நாம் வணங்கும் எம்பெருமானுக்கல்லவோ இது உரியதாகும். மாணிக்கக் கற்களால் இழைக்கப்பட்ட உறுப்புக்களை உடைய இம்மீனை மானிடர் அடைவதா? எம்பெருமான் திருவடியைச் சேர்''' என்று அம்மீனைக் கடலிலே விடுத்தார்.

நீரிலே விழுந்த மீனைக் காணவில்லை அங்கே எம்பெருமான் ரிஷபாரூடராய் அதிபத்தருக்குக் காட்சி தந்தார்.

"அன்பனே, எம்மிடம் நீ கொண்டுள்ள பக்திக்கு மெச்சி எம் தொண்டர்களோடு இருக்கும் பாக்கியம் அளித்தோம்" என்று அருளி மறைந்தார். பகவானின் திவ்விய கோலத்தைத் தரிசித்துப் பரவசமடைந்த அதிபத்தர் உலக பந்தத்திலிருந்து விடுபட்டு சிவலோகம் அடைந்தார்.

72. கரம் துணித்த கலிக்கம்பர்

பெண்ணுகடம் என்ற ஊரிலே வணிகர் குலத்திலே பிறந்த சிவபக்தர் ஒருவர் இருந்தார். கலிக்கம்பர் என்னும் பெயரை உடைய அவர் எம்பெருமான் அடியார்களிடம் அன்பு கொண்டு அவர்களுக்குத் தொண்டு புரிந்து வந்தார். எம்பெருமானைத் திருப்தி செய்விப்பது அவருடைய அடியார்களுக்குத் திருவமுது செய்விப்பதே என்பதை அறிந்த கலிக்கம்பர் அத் தொண்டிலே மிகுந்த ஆர்வமுடன் ஈடுபட்டு வந்தார்.

அடியார்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று மனைவி நீர் வார்க்க அவர்கள் பாதங்களை அலம்பி பூஜித்து அமுது செய்விப்பார் கலிக்கம்பர். அன்றும் அவ்வாறே அடியார் ஒருவரை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தார். அவர் மனைவி கையில் சொம்பு ஏந்தி அடியார் பாதம் கழுவ நீர் ஊற்றி வந்தாள். ஆசனத்தில் ஏறி நின்ற அந்த அடியாரைக் கவனித்தாள் அம்மையார். அடுத்த கணம் திடுக்கிட்டார். அந்த அடியார் சில நாட்களுக்கு முன்பு வரை அவர்களிடம் வேலைக்காரனுக இருந்து வந்தவர். ஏதோ காரணத்தால் விரோதித்துக் கொண்டு போய் விட்டான் அவன். இப்போது அடியாராக அவ் வீட்டுக்கே வந்துள்ளான்.

நம்மிடம் வேலைக்காரனுக இருந்தவனையா உபசரிப்பது என்ற எண்ணம் அம்மையாரின் உள்ளத்தில் எழுந்தது. அதனுல் நீர் வார்க்கச் சிறிது தயங்கினுள்.

அடியார் முகத்தையே பார்க்காது குனிந்து பாதங்களை மட்டும் கவனித்துக் கொண்டிருந்த கலிக்கம்பர் மனைவி நீர் வார்க்காததைக் கண்டு நிமிர்ந்தார். மனைவியின் குழம்பிய முகத்தைக் கண்டார். திரும்பி அடியாரைப் பார்த்தார். நொடியில் அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. அடியாராக வந்திருப்பவர் தம்மிடம் வேலைக்காரனுக இருந்து விரோதித்துச் சென்றவனே என்பதை அறிந்தார். அக்காரணம் பற்றியே மனைவியும் தயங்குவதை உணர்ந்தார். ஒரு வார்த்தையும் பேசவில்லை. மனைவி வைத்திருந்த சொம்பை வாங்கித் தரையில் வைத்தார்.

அங்கிருந்த கத்தியை எடுத்து, ''அடியாரைப் பற்றி அவதூருக எண்ணி, அவருக்கு நீர் வார்க்க மறுத்த கையை நீட்டு'' என்று அதட்டினுர்.

அபசாரம் செய்து விட்டோமே என நடுங்கியவளாய் கையை நீட்டினுள் அம்மையார். சிறிதும் யோசிக்காமல் அதைத் துண்டித்து எறிந்தார் கலிக்கம்பர். பின் தாமே சொம்பை எடுத்து அடியாரின் பாதங்களை அலம்பி அவருக்கு அமுது அளித்தார்.

அம்மையார் தாம் செய்த அபசாரத்தைப் பொறுத்து அருளும்படி இறைவனை வேண்டினுள்.

''ஐயனே, என்னை மன்னித்து விடு. அடியாருடைய தோற்றத்தைக் கௌரவிக்காது அவர் நடத்தையைப் பற்றி எண்ணியது தவறுதான். நாயகர் என்னைத் தண்டித்து விட்டால் மட்டும் போதாது. எப்போது திருநீறு பூசிக்கொள்கிருனே அப்போதே அவன் உனக்குப் பிரியமானவனுகி விடுகிருன் அன்ருே. அவன் பெரும் பாதகனுக இருப்பினும் அந்த கணமே புனிதனுகி விடுகிருன். இதை உணராது உன் பேரன்புக்குப் பாத்திரராகிய அடியாரைத் தவருக எண்ணி அபசாரம் செய்தவளாகி விட்டேன். என்னை மன்னித்து அருள வேண்டும்'' என்று கதறினுள்.

கலிக்கம்பருடைய அடியார் பக்தியை மெச்சிய இறைவன் வெட்டுண்ட அவர் மனைவியின் கரம் வளர அருளினுர். அத் தம்பதிகள் எம்பெருமான் கருணையை வியந்து பல காலம் அடியார் தொண்டு நடத்தி வந்து முடிவில் இறைவன் திருவடிகளை அடைந்தனர்.

73. விளக்கெரியக் குருதி கொடுத்தவர்

தொண்டை நாட்டிலுள்ள திருவொற்றியூரிலே சேணியர் குலத்திலே கலியர் என்னும் சிவபக்தர் ஒருவர் இருந்தார். சக்கரபாடித் தெருவிலே வசித்து வந்த கலியருக்கு ஒற்றியூர் உடையாரிடம் அளவில்லாத பக்தி. இரவு பகலும் எம்பெருமான் ஆலயத்திலே திருவிளக்கேற்றும் பணி புரிந்து வந்தார்.

தம்மிடம் கலியருக்கு உள்ள ஆழ்ந்த பக்தியை உலகோருக்கு எடுத்துக் காட்ட விரும்பினுர் ஈசன். கலியர் செல்வம் கரைந்தது. சம்பாத்தியத்தைத் தேடவேண்டிய நிலை உண்டாயிற்று. தாம் எண்ணெய் ஆடியது போய், இப்போது கலியர்

பிறரிடம் வேலைக்குச் செல்லும்படியாகி விட்டது. மற்றவர்களிடம் எண்ணெய் வாங்கிச் சென்று அதை விற்று அதன் மூலம் கிடைக்கும் லாபத்தைத் தம் திருப்பணியில் செலவிட்டு வந்தார்.

பகவான் அதற்கும் இடையூறு தோற்றுவித்தார். அவரோடு வியாபாரத்தில் பலர் போட்டியிடவே அந்த முயற்சியையும் கைவிட வேண்டியதாயிற்று. செக்கு ஆடுமிடத்திற்குச் சென்று சில்லரை வேலைகளைச் செய்து கூலி பெற்று அதைக் கொண்டு ஆலயத்தில் விளக்கு எரித்து வந்தார். சில நாட்களில் அந்த வரும்படியும் குறையத் தொடங்கியது. தாம் செய்து வந்த திருத்தொண்டு தடைப்பட்டு விடுமே என அஞ்சி மனம் பதைத்தார்.

எவ்வகையிலும் தம் பணியை நிறுத்த அவர் விரும்பவில்லை. கையில் மொத்தமாகப் பணம் கிடைத்தால் கொஞ்ச காலத்துக்குக் கவலையின்றி எண்ணெய் வாங்கி சேமித்து வைத்து விட எண்ணினார். ஆகவே அவர் தம் மனைவியையே விற்றுவிடத் துணிந்தார்.

கலியரைப் பற்றியும் அவர் செய்து வரும் திருப்பணியையும் எல்லோரும் நன்கு அறிவார்கள். அப்படி யிருக்க, யார்தான் அடியார் மனைவியை விலைக்கு வாங்கத் துணிவார்கள்? ஊர் முழுவதும் சுற்றி விலை கூறியும் கலியருடைய மனைவியை வாங்க யாரும் முன் வரவில்லை.

எம்பெருமான் தொண்டு நின்றுவிடக் கூடியநிலைக்குவந்து விட்டதே என உடைந்த உள்ளத்தோடு ஆலயம் திரும்பினார். மாலை வந்தது. திருவிளக்குகளை ஏற்றவேண்டும். எண்ணெய் இல்லை. கலியர் தவித்தார். என்ன செய்வது எனக் கைகளைப் பிசைந்தார்.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார். எண்ணெய் இல்லாவிட்டால் என்ன? கொழுப்புச் சத்து நிறைந்து அவர் உடலில் ஓடும் குருதி இருக்கிறதே! உதிரத்தால் அகல்களை நிரப்பி விளக்கேற்ற முடிவு செய்தவராய் கத்தியை எடுத்து உடலிலே கீறத் துணிந்தார்.

அதற்கு மேல் எம்பெருமான் பார்த்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. சட்டென்று அவர் முன்பு தோன்றி அவர் முயற்சியைத் தடுத்தார்.

ரிஷபாரூடராய் காட்சியளித்த எம்பெருமானைக் கண்டதும் கலியர் அளவில்லா ஆனந்தம் கொண்டு அவரைத் தொழுது

நின்றார். தம்மிடம் கலியர் கொண்டுள்ள அன்பினைப் பாராட்டிய பெருமான் அடியார்க்குப் பரமபதத்தை அருளி மறைந்தார்.

74. நாவை அரிந்த நாயனார்

சோழ நாட்டிலே வரிஞ்சையூர் என்றொரு ஊரிருக்கிறது. அவ்வூரிலே வேளாளர் குலத்திலே பிறந்த சிவபக்தர் இருந்து வந்தார். சிவனடியார்களிடம் அவருக்கிருந்து வந்த பக்தி அளவிட முடியாதது ஆகும். சிவனடியார்களை யாராவது இகழ்ந்து பேசினால் அவர் கொஞ்சமும் தயங்காது அவர்கள் நாவைத் துண்டித்து விடுவார். இதன் காரணமாக அவர் சத்தியார் என அழைக்கப்பட்டார். அவர் பலகாலம் சிவனடியார்களை நிந்திக்கும் பாவிகளைத் தண்டித்து வந்து முடிவில் எம்பெருமான் மலரடிகளை அடைந்தார்.

75. வெண்பா பாடிய வேந்தன்

தொண்டை நாட்டிலே காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த பல்லவர் குலத்திலே தோன்றியவர் ஐயடிகள் காடவர்கோன் என்பவர். எல்லாமக்களும் எம்பெருமான் சேவையில் ஈடுபட்டு பேரின்பப் பெரு வாழ்வை அடைய வேண்டும் என்ற கொள்கை உடையவர் அவர்.

சைவநெறி தழைக்கச் செங்கோல் தாங்கி ஆட்சி புரிந்து வரும் நாளில் அரசர் பெருமானுக்கு அண்டர் பிரான் அமர்ந்தருளும் ஆலயங்களுக்குச் சென்று தரிசித்து வரவேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. ஆட்சியைத் தம் மைந்தனிடம் ஒப்புவித்து விட்டு க்ஷேத்திராடனம் கிளம்பினார்.

தில்லைச் சிதம்பரம் சென்று நிருத்தனார் திருக்கூத்தைக் கண்டு களித்து செந்தமிழால் வெண்பா மாலை சூட்டி மகிழ்ந்தார். பின் அனேக சிவஸ்தலங்களுக்குச் சென்று எம்பெருமானைத் தரிசித்து ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்கும் ஒரு வெண்பா பாடினார்.

இந்த விதமாகப் பல நாட்கள் திருப்பணியில் ஈடுபட்ட அடிகளார் முடிவில் இவ்வுலக வாழ்வை நீத்துப் பரமன் திருவடிகளை அடைந்தார்.

காடவர்கோன் திருத்தொண்டு பற்றிப் புகழ்ந்து பாடிய சுந்தரர் மேலும் அடியார்கள் தொண்டுகளைப் போற்றலானார்.

கறைக் கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலிவென்ற
நின்ற சீர்நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவள இருளகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக் கொண்ட வேல்நம்பி முனையடுவார்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

76. கேசத்தைத் திரியாக்கிய கணம் புல்லர்

வட வெள்ளாற்றின் தென் கரையில் இருக்குவேளூர் என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே சிவபக்தியில் சிறந்த அடியார் ஒருவர் இருந்துவந்தார். எம்பெருமான் ஆலயத்திலே திருவிளக்கேற்றும் தொண்டிலே ஈடுபட்டு வந்தார். வறுமை அவரைச் சூழ்ந்தது. அப்போதும் அவர் தம் திருப்பணியைக் கைவிடவில்லை. சிதம்பரம் சென்று கூத்த பெருமானைத் தரிசித்தார். எஞ்சிய தம் சொத்துக்களை விற்றுப் பணமாக்கிக்கொண்டு தில்லையிலே உள்ள திருப்புலீச்வரம் சென்று குடியேறினார். அங்குள்ள சிவாலயத்தில் நாள் தோறும் விளக்கு ஏற்றும் பணியைத் தொடர்ந்து வந்தார்.

பணம் கரைந்தது. பக்கத்திலுள்ள வயற்காடுகளுக்குச் சென்று கணம் புற்களை அறுத்து வந்து விற்று அதன் மூலம் கிடைத்த வருமானத்தை அடியார் தம் பணியில் செலவிட்டு வந்தார். அதன் காரணமாக அவரைக் கணம் புல்லர் என்று அழைத்தனர்.

ஒரு நாள் அவர் கொண்டு சென்ற புற்கள் விலைபோகவில்லை. சோர்ந்த மனத்தோடு ஆலயம் திரும்பினார். அன்றைய தினம் தம் திருப்பணிக்குத் தடை வந்து விட்டதே என வருந்தியவராய் தாம் அறுத்து வந்த புற்களையே திரியாகத் திரித்து விளக்கிலிட்டு ஏற்றினார். என்ன ஆச்சரியம்? இறைவன் அருளால் விளக்கெரிந்தது. எல்லா விளக்குகளிலும் புற்களையே திரித்துப் போட்டு ஏற்றி வந்தார்.

இறைவன் அவரைச் சோதிக்க விரும்பினார். அவர் கொண்டு வந்த புற்கள் போதவில்லை. மேலும் சில விளக்கு

கள் ஏற்ற வேண்டியிருந்தது. சற்று யோசித்த கணம் புல்லர் தமது கேசத்தையே திரியாகப் போட முடிவு செய்து அறுத்து எடுத்தார். அவருடைய ஆழ்ந்த பக்தியை மெச்சி இறைவன் அவருக்குத் தரிசனம் கொடுத்து, என்றும் தம் லோகத்தில் இருக்கும் பேற்றை அளித்தார்.

77. பாடித் தொண்டாற்றிய பரமன் அடியார்

திருக்கடவூரிலே அந்தணர் குலத்திலே காரியார் என்னும் சிவபக்தர் ஒருவர் இருந்து வந்தார். அவர் தமிழிலே மிக்க பாண்டித்யம் உடையவர். அவர் இனிய சொற்களால் தமிழ்க் கோவை பாடி மூவேந்தர்களிடமும் சென்று அவர்கள் மனம் களிக்கும் வகையில் அப்பாடல்களுக்குப் பொருள் எடுத்துக் கூறுவார். அவர்களும் மனம் மகிழ்ந்து அவருக்குப் பரிசுகள் வழங்கினர். அப்பொருளைக் கொண்டு தாம் வணங்கும் எம்பெருமானுக்கு ஆலயங்கள் பல கட்டு வித்து அனேக தொண்டுகள் செய்து வந்தார். தம்மிடம் அளவில்லாத பக்தி பூண்ட அடியாருக்கு இறைவன் தம் அடி கீழ் என்றும் இருந்து வரும் பாக்கியம் அளித்தார்.

78. கூன் நிமிர்ந்த நெடுமாறன்

மதுரையிலே பாண்டியர் குலத்தில் பிறந்த நெடுமாறன் என்ற அரசன் ஆண்டு வந்தான். பூர்வஜன்ம புண்ணிய வசத்தால் அவன் சிவ பக்தியில் சிறந்த மங்கையர்கரசியாரை மனைவியாகப் பெற்றிருந்தான். சமணர்களுடைய போதனையால் சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்தில் சேர்ந்து அவர்களுக்கு ஆதரவு அளித்து வந்தான். நாயகனின் மன மாற்றம் கண்ட அரசியார் நாட்டிலே மீண்டும் சைவம் தழைக்க சம்பந்தர் பெருமானை வரவழைத்தார். சம்பந்தர் சமணர்களுடன் வாதிட்டு அவர்களை வென்று அரசன் மனத்தை மாற்றி திருநீறு பூசச் செய்து சைவத்தைத் தழுவச் செய்தார். சம்பந்தர் பெருமானிடமிருந்து திருநீறு வாங்கி பூசியதும் அரசனுடைய கூன் விழுந்த முதுகும் நிமிர்ந்தது. அது முதல் நெடுமாறன் சிவபெருமானிடம் குன்றாத பக்தி கொண்டு அனேக திருப்பணிகள் செய்து வந்தான். அவனை எதிர்த்து வந்த வடபுலத்து மன்னர்களை இறைவன் திருவருளால்

நெல்வேலியில் வென்று வாகை சூடினுன். பின்னும் பல காலம் அவன் எம்பெருமானுக்குத் தொண்டுகள் செய்து வந்து முடிவில் இறைவன் திருவடிகளை அடைந்தான்.

79. மனக்கோயிலில் வழிபட்ட மயிலாபுரி அடியார்

திருமயிலாபுரியிலே நான்காம் வருணத்திலே பிறந்த சிவன் அடியார் ஒருவர் இருந்தார். வாயிலார் என்னும் அப்பெரியார் இறைவனைத் தம் உள்ளமாகிற பெருங்கோயிலில் இருத்தி வழி பட்டார். ஞானமாகிற ஒளி விளக்கால் உள்ளக் கோயிலை விளங்கச் செய்தார். ஆனந்தமாகிற திருமஞ்சனமிட்டு இறைவனை நீராட்டுவார். அடியார்களிடம் கொண்டுள்ள அன்பை அமுதமாக நிவேதிப்பார். இவ்வாறு எம்பெருமான் வழிபாட்டை உள்ளத்திலே நடத்தி வந்த அவர் முடிவில் இறை வன் திருப்பாதங்களைச் சேர்ந்தார்.

80. பரமன் தொண்டுக்காகப் போருக்குச் சென்றவர்

பொன்னி நாட்டிலே திருநீடூர் என்றொரு தலம் உள்ளது. அவ்வூரிலே வேளாளர் குடியிலே சிறந்த சிவபக்தர் இருந்து வந் தார். அடியார்களிடம் மிக்க அன்புடையவர். யுத்தத்திலே பகைவர்களுக்குத் தோற்றவர்கள் தம்மிடம் வந்து பொருள் கொடுப்பதாகக் கூறினுல் அவர்களுக்காகப் படை திரட்டிச் சென்று பகைவர்களை வென்று திரும்புவார். அவ்வாறு கிடைக் கும் பொருளை அவர் எம்பெருமான் திருப்பணிக்கே செலவிட்டு வந்தார். அதன் காரணமாக அவர் முனையடுவார் என்று அழைக்கப்பட்டார். அடியார்களை அன்புடன் வரவேற்று அவர் களுக்கு அறுசுவை உண்டி அளிப்பார். இவ்வாறு நெடுங் காலம் திருப்பணிகள் பல செய்து இறைவன் திருவடிகளை அடைந்தார்.

முனையடுவார் திருப்பணியைக் கொண்டாடி பணிந்த சுந்தரர் மேலும் பல அடியார்களுக்குத் தலைவணங்கினுர்.

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனும் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்

புடைசூழ்ந்த புவியதன்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும்
[அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

81. மனைவி கரத்தைத் துணித்த மாமன்னன்

பல்லவர் குலத்திலே கழற்சிங்கன் என்னும் மன்னர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானிடம் அளவற்ற பக்தி பூண்டவர். எம்பெருமான் திருவருளால் தம்மை எதிர்த்த பகை அரசர்களை வென்று சைவநெறி தழைக்க ஆட்சி புரிந்து வரும்போது அரனுர் மேவும் கோயில்கள் பலவும் சென்று பணிந்து வழிபட விருப்பம் கொண்டார். அவ்வாறே மனைவியோடு புறப்பட்டு அவர் ஒவ்வொரு தலமாகத் தரிசனம் செய்து வருகையில் திருவாரூர் வந்து சேர்ந்தார். ஆலயத்துள் நுழைந்து எம்பெருமானைத் தரிசித்தார்.

மன்னர் பெருமான் இறைவன் சந்நிதியில் இருக்கும்போது அரசி பிராகாரத்திலே வலம் வந்து ஒவ்வொரு இடமாகக் கண்டு களித்து வந்தார். பூத்தொடுக்கும் மண்டபத்தை நெருங்கியதும் அங்கே விழுந்து கிடந்த புதிய மலர் ஒன்றைக் கண்டு வியந்து அதை எடுத்து முகர்ந்தார்.

மண்டபத்திலே மாலைகள் தொடுக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்த செறுத்துணையார் என்பவர் அதைக் கண்டார். எம்பெருமானுக்குப் புனிதமாகத் தொடுக்கும் மலர் மாலையிலிருந்து பூவை எடுத்து அம்மங்கையார் முகந்து விட்டாரே எனச் சீற்றம் கொண்டார். எதிரிலிருப்பது யாரென்று கூடப் பாராமல் வாசம் முகர்ந்த அரசியின் மூக்கைக் கத்தி கொண்டு அறுத்து விட்டார். இரத்தம் கொட்ட வேதனை தாங்கமாட்டாது அரசி தரையில் விழுந்து புரண்டு அலறினுள்.

எம்பெருமான் சந்நிதானத்திலே இருந்த அரசருக்கு அந்த அலறல் கேட்டது. ஓடிவந்தார். மூக்கறுபட்டுத் துடிக்கும் மனைவியைக் கண்டார். ‘‘இக்கொடிய செயலைத் துணிந்து செய்தவன் யார்?’’ என்று சினத்தோடு கேட்டார். செறுத்துணையார் மண்டபத்திலிருந்து வெளிப்பட்டு நடந்ததை அரசருக்கு அறிவித்தார்.

அதைக் கேட்டதும் அவர் கோபம் தணிந்து விட்டது. ‘‘ஐயனே, நீர் செய்தது சரியல்ல. எம்பெருமானுக்குச் சமர்ப்

பிக்க இருக்கும் மலரை முகரச் செய்ய கையல்லவா எடுத்தது. முதலில் கையைத் துணித்திருக்க வேண்டாமா?'' என்று கேட்ட படி உடைவாளை உருவி தம் மனைவியின் கையைத் துண்டித்தார்.

அரசருடைய இணையற்ற பக்தியைக் கண்டு விண்ணவர் மலர்மாரி பெய்தனர். இறைவன் அரசருக்குத் திவ்விய தரிசனம் கொடுத்து அவர் பக்தியைப் பாராட்டினார். அரசியாருடைய வெட்டுண்ட கரமும் மூக்கும் ஈசனருளால் வளர்ந்தன.

பின்னும் பல நாட்கள் அரசர் எம்பெருமான் சேவைகளில் ஈடுபட்டு சிறப்புற வாழ்ந்து இறுதியில் ஈசன் திருவடிகளை அடைந்தார்.

82. பொக்கிஷத்தைத் திறந்துவிட்ட பக்தர்

கோனாட்டிலே கொடும்பாளூர் என்றொரு நகரம் இருக்கிறது. அந்நகரிலே இடங்கழியார் என்னும் பெயருடைய ஒருவர் குறுநில மன்னராக ஆண்டு வந்தார். சிவபக்தி மிகுந்த அவர் ஆலயங்களுக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்வித்து நித்திய பூஜைகள் நடத்திவரச் செய்தார்.

இவ்வாறு இருந்து வரும்போது ஒருநாள் அரண்மனைப் பண்டாரத்திலே புகுந்து நெல்லைக் களவாடியதாக ஒருவரைக் கொண்டு வந்து விசாரணைக்காக அவர் முன் நிறுத்தினர் காவலர்.

அந்த மனிதரைப் பார்த்தால் திருடக்கூடியவராகத் தோன்றவில்லை. எம்பெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டவர் போலத் தோன்றியது.

''ஐயனே, உம்மீது நெல்லைக் களவாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதே. நீர் புகுந்து திருடினீரா?'' என்று கேட்டார் அரசர்.

''ஆம், அரசே. உண்மைதான். நான் அடியார்களுக்கு அமுது செய்விக்கும் பணியைச் செய்து வருகிறேன் என் வசம் இருந்த பொருள்கள் அனைத்தும் தீர்ந்து விட்டன. அடியார்களுக்கு அமுது செய்விக்கும் பணி நின்றுவிடக் கூடாதே என மனம் துணிந்து திருட முயன்றேன்'' என்றார் அந்த அடியார்.

அரசன் மனம் நெகிழ்ந்து விட்டது.

"ஐயனே, என்னிடம் நேரில் வந்து கேட்டிருந்தால் வேண்டும் அளவு கொடுத்திருப்பேனே. இப்பவும் காலம் தாழ்ந்து விடவில்லை. உங்களுக்கு வேண்டிய அளவு எடுத்துச் செல்லும்" என்று சொல்லி அவரை விடுவித்துப் பொக்கிஷ அறையைத் திறந்து விடச் செய்தார். அது மட்டுமல்ல; சிவனடியார்கள் வந்து தமக்கு வேண்டுமளவு பண்டாரத்திலிருந்து நெல்லைக் கொண்டு செல்லலாமென பறையறையச் செய்தார்.

அடியார்கள்மீது அரசர் வைத்துள்ள பக்தியையும் அன்பையும் அனைவரும் கொண்டாடினார்கள்.

நெடுங்காலம் இறைவன் தொண்டிலே ஈடுபட்டு நாட்டில் சைவம் விளங்க ஆட்சி புரிந்து வந்து முடிவில் பரமசிவன் பாதாரவிந்தகங்ளில் சேர்ந்தார் இடங்கழியார்.

83. மூக்கை அறுத்த முக்கண்ணன் அடியார்

தஞ்சை நகரிலே வேளாண்குடியிலே பிறந்தவர் செறுத்துணை என்பவர். எம்பெருமானிடம் இடையறாத பக்தி கொண்ட அவர் இறைவன் தொண்டிலே தம்மை அர்ப்பணித்தார். திருவாரூரை அடைந்து ஆரூரன் ஆலயத்தில் தங்கி அப்பெருமானுக்குத் தொண்டுகள் பல புரிந்து வந்தார்.

ஒரு நாள் பூத்தொடுக்கும் மண்டபத்திலே அமர்ந்து எம்பெருமானுக்குச் சூட்ட மாலைகள் தொடுத்துக்கொண்டிருந்தார். அப்போது இறைவன் தரிசனத்துக்கு அங்கே வந்திருந்த பல்லவ மன்னன் தேவியார் மண்டபத்தில் கிடந்த மலர் ஒன்றை எடுத்து முகர்ந்தார். எம்பெருமானுக்குப் புனிதமாக வைத்திருப்பதை மாசுபடுத்தி விட்டாரே எனக் கோபம் கொண்டு அவர் எதிரில் இருப்பது அரசி என்பதையும் பாராது அவர் மூக்கை அரிந்துவிட்டார். அங்கே வந்த பல்லவ மன்னன் விஷயம் அறிந்து 'மலரை எடுத்த கரத்தையல்லவோ முதலில் துண்டிக்க வேண்டும்' என்று அரசியின் கரத்தைத் துண்டித்தான்.

அவ்விருவருடைய பக்தியை மெச்சி எம்பெருமான் காட்சி தந்து அரசியின் வெட்டுண்ட அவயவங்கள் முன்போல் வளர அருள் செய்தார். செறுத்துணையார் மேலும் பல காலம் தொண்டுகள் செய்து வந்து முடிவில் இறைவனடி சேர்ந்தார்.

84. பொற்காசு அளித்த பரமதயாளன்

செருவிலிபுத்தூரிலே 1 சிவமறையோர் குலத்தில் பிறந்தவர் புகழ்த்துணையார் என்பவர். அவர் தாம் வழிபட்டு வந்த பரமசிவனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். அபிஷேகப் பிரியராகிய சிவனை ஆறு காலங்களிலும் அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்வார்.

வறுமையால் பீடிக்கப்பட்ட அவர் எம்பெருமான் வழிபாட்டை விடவில்லை. அந்தந்தக் காலங்களில் மஞ்சனமாட்டி அர்ச்சித்தார். பசியால் உடல் மெலிந்து தள்ளாடிய போதும் அவர் தம் வழிபாட்டை நிறுத்தவில்லை.

அன்றைத் தினம் அவர் மிகவும் உடல் தளர்ந்து போயிருந்தார். எம்பெருமானுக்கு அபிஷேகத்தை முடித்துச் செல்லவேண்டும் என்று வந்திருந்தார். குடத்திலே நீர் மொண்டு திருமேனியில் கவிழ்க்கும்போது கை தளர்ந்தது. குடம் இறைவன் திருமுடி மேல் விழுந்தது.

புகழ்த்துணையார் பரிதவித்து விட்டார். இறைவன் திருமுடியில் குடத்தைப் போட்டுவிட்டோமே எனத் துடித்தார். அந்த வேதனை தாங்கமாட்டாது அங்கேயே மயங்கி விழுந்தார்.

அடியார்க்கு அருள விரும்பிய அருளாளன் அவருக்கு நித்திரையைத் தோற்றுவித்து அவர் கனவிலே காட்சி தந்தார்.

''அன்பனே, வருந்தாதே. உன் வறுமை தீரும் வரை நாம் தினமும் உனக்கு ஒரு காசு தருவோம்'' என்று அருளினர்.

திடுக்கிட்டுக் கண் விழித்த புகழ்த்துணையார் எம்பெருமான் பீடத்தின் அருகே பொற்காசு ஒன்று வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆனந்த வாரிதியில் திளைத்தார். எம்பெருமானைப் பலவாருகப் போற்றிப் புகழ்ந்தார்.

நாள்தோறும் இறைவன் அளித்த காசு கொண்டு எம்பெருமான் வழிபாட்டை இனிது நடத்தி வந்து பிறவாப் பேரின்பம் எய்தினர் அடியார்.

---

1 குடந்தைக்கு தென் கிழக்கே சுமார் நான்கு மைலில் அரசலாற்றங்கரையில் உள்ள இவ்வூர் அழகார்புத்தூர் என்ற பெயரில் விளங்குகிறது.

85. குலம் அறுத்த கோட்புலி

சோழ நாட்டிலே நாட்டியத்தான்குடி 1 என்றொரு ஊர் இருக்கிறது. அவ்வூரிலே உள்ள வேளாளர் மரபிலே கோட்புலியார் என்னும் பெயருடைய சிவ பக்தர் இருந்தார். அவர் சோழ மன்னனிடத்தில் சேனாதிபதியாக ஊழியம் பார்த்து வந்தார். எம்பெருமானிடம் எல்லையற்ற பக்தி கொண்ட அவர் அனேக தொண்டுகளிலும் ஈடுபட்டு வந்தார். எம்பெருமானுக்குத் திருவமுது செய்விக்க நெல்லை வாங்கி மலைபோல் குவித்து வைப்பார்.

அந்நாளில் அரசன் ஆணையால் கோட்புலியார் சண்டைக்குச் செல்ல நேர்ந்தது. எம்பெருமானுக்குத் தாம் சேமித்து வைத்திருந்த நெல் குவியலைத் தம் சுற்றத்தாரிடம் ஒப்புவித்தார்.

''நான் திரும்பி வரும் வரை இதைப் பத்திரமாகப் பாதுகாத்து வரவேண்டும். இது எம்பெருமான் அமுதுக்கு உரியதாகும். இதை யாரும் செலவிடக் கூடாது. இறைவன் ஆணை'' என்று சொல்லி யுத்தத்துக்குச் சென்றார்.

கோட்புலியார் யுத்தத்துக்குச் சென்றிருந்த சமயம் நாட்டிலே கொடிய பஞ்சம் வந்தது. மக்கள் உணவு கிடைக்காது தவித்தனர். கோட்புலியாருடைய உறவினர்கள் பசி தாங்காது மெலிந்தனர். உணவின்றி உயிரை விடுவதைவிட, எம்பெருமானுக்காக வைத்திருக்கும் நெல்லைக் கொண்டு உயிர் வாழ்ந்து பின்னர் அதைச் சம்பாதித்து ஈடுகட்டி விடலாம் என்று தீர்மானித்தவர்களாய் அந்நெல்லைச் செலவழித்து விட்டனர்.

யுத்தத்தில் வெற்றிவாகை சூடிய கோட்புலியார் ஏராளமான பரிசுடன் ஊர் திரும்பினார். சுற்றத்தார்கள் தம் ஆணையையும் மீறி எம்பெருமானுக்கென வைத்திருந்த நெல்லைச் செலவழித்திருப்பது கண்டு சினம் கொண்டார். அதை வெளிக்குக் காட்டாமல் சுற்றத்தார் அனைவரையும் அழைத்தார். யுத்தத்திலே வெற்றிவாகை சூடி திரும்பிய தாம் அவர்களுக்குப் பரிசு கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

அனைவரும் கோட்புலியாரின் இல்லத்தில் வந்து கூடினர். தம் நம்பிக்கைக்குப் பாத்திரனான காவலனை வாயிலுக்குக் காவல் வைத்தார். பின் எம்பெருமானுக்கு விட்டுச் சென்ற

---

1 மாவூர் ரோடு ஸ்டேஷனுக்கு வடமேற்கே ஒரு மைல்.

பொருளைச் செலவழித்த அனைவரையும் வாளை உருவி வெட்டிக் கொன்றூர். சின்னஞ்சிறு ஆண் குழந்தை ஒன்று மட்டுமே மிஞ்சியது. அது ஒரு பாவமும் செய்யவில்லை எனக் கூறி அதை விட்டுவிடுமாறு கெஞ்சினான் காவலன்.

"இக்குழந்தை ஒரு பாதகமும் செய்யவில்லை எனக் கூறு கிறாயே? சிவாபராதம் செய்த பெண்ணின் முலைப்பாலை உண்ட வன் அல்லவா" என்று சீறி அக்குழந்தையையும் கொன்றூர் கோட்புலியார்.

அவர் தம்மிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியைக் கண்டு இறைவன் அவர் முன்பு தோன்றி, "அன்பனே, உன் பக்தியை மெச்சினோம். உன்னால் வெட்டுண்டு இறந்தோர் அனைவரும் நல்லகதி அடைந்தனர். நீயும் நம்மிடம் வா" என்று அருளி அவரையும் ஆட்கொண்டார்.

86. சுந்தரர் வணங்கிய தொகை அடியார்கள்

கோட்புலியாருடைய பக்தியை வியந்து போற்றிய சுந்தரர் மேலும் அடியார்களை வணங்கிப் பாடலானார்.

பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கும் அடியேன்
முழுநீறுபூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரில் ஆரூரன் அம்மானுக்காளே.

எம்பெருமான் அடியார்களைப் பார்க்கையில் அவர் குலம், கோத்திரம் முதலானவற்றைச் சிறிதும் யோசிக்காது இறை வன் அன்புக்குரிய அடியார் என்ற ஒரே நோக்கத்தோடு அவர் களை மலர்ந்த முகத்தோடு வரவேற்று இன்மொழிகள் பேசி உப சரிக்கும் அன்பர்களுக்கும், இறைவனையே பக்தியோடு பாடிக் களிக்கும் அன்பர்களுக்கும், தம் சித்தம் முழுவதும் சிவனிடம் லயிக்கச் செய்தவர்களுக்கும், ஆரூரில் பிறந்த அனைவரும் சிவ கணங்கள் என்பதால் அவர்களுக்கும், முக்காலத்திலும் எம்பெரு மான் திருமேனி தீண்டும் பாக்கியம் பெற்ற ஆதிசைவர்களுக் கும், சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட நியமப்படி திருநீறு அணியும் முனிவர்களுக்கும், சேர சோழ பாண்டிய நாடுகளுக்கு

அப்பால் உள்ள பிரதேசங்களிலும் எம்பெருமானிடம் பக்தி பூண்டு விளங்கும் அடியார்களுக்கும் தாம் அடியார் என்று பணிவோடு தெரிவித்து வணங்கிவிட்டுச் சுந்தரர் மேலும் பாடலானார்.

மன்னியசீர் மறைநாவல் நின்றவூர்ப்பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டுவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பராவாரே.

87. உள்ளத்திலே எழுந்த உத்தமர் ஆலயம்

தொண்டை நாட்டிலுள்ள திருநின்றவூரில்1 பூசலார் என்னும் சிவபக்தர் ஒருவர் இருந்து வந்தார். அந்தணக் குலத்திலே பிறந்த அவர் வேத சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவராய் விளங்கினார். எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதே அனைத்திலும் சிறந்ததாகும் என்பதை அறிந்த அவர் இறைவனிடம் நீங்காத பக்தி கொண்டு அடியார்களிடமும் அன்பு பாராட்டி வந்தார்.

அவ்வூரிலே இறைவனுக்குத் திருக்கோயில் இல்லாதபடியால் தினமும் அடியார்கள் பக்கத்து ஊர்களுக்குச் சென்றே எம்பெருமானை வழிபட்டு வந்தனர். அடியார் படும் சிரமத்தைக் கண்ட பூசலார் அவ்வூரிலே ஈசனுக்கு ஆலயம் ஒன்று எழுப்ப எண்ணம் கொண்டார். மற்றவர்களும் அத்திருப்பணியில் கலந்து கொண்டு இறைவன் திருவருளைப் பெறட்டும் என்ற கருத்திலே திருப்பணிக்கு நிதி உதவுமாறு ஊரிலுள்ளோரை அணுகினார்.

பூசலாரிடம் அவர்கள் மிகுந்த மதிப்பு கொண்டிருந்தனர். ஆனால் நிதி என்று வந்தபோது; அவர்கள் ஒதுங்கி விட்டனர். ஆலயத் திருப்பணி என்றால் சாதாரணமாக நடக்கக்கூடியது அல்ல; ஏராளமாகப் பணம் வேண்டும். அவ்வளவு பணம் சேர்க்கவும் அவரால் முடியாது. ஆகவே அந்த எண்ணத்தை விட்டு

---

1 தின்னனூர்.

விட்டு வேறு உருப்படியான வேலையைக் கவனிக்கலாம் என்று அவர்கள் பூசலாருக்குப் புத்தி கூறினர்.

பூசலார் அதற்காகத் தம் முயற்சியைக் கைவிட்டு விட வில்லை. எங்கெங்கெல்லாமோ அலைந்தார். யார் யாரை யெல் லாமோ போய்ப் பார்த்தார். ஒன்றும் பலன் தரவில்லை. அவர் முயற்சிக்கு எவரும் ஆதரவு தர மறுத்தனர். மாருக அவர் மேற்கொண்டுள்ள முயற்சி பைத்தியக்காரத்தனமானது என இகழ்ந்து பேசினர்.

வருடங்கள் நகர்ந்துகொண்டிருந்தன. பூசலார் கண்டகனவு நனவாகவில்லை. அலைந்து அலைந்து அவர் பாதங்கள் தேய்ந் தது தான் அவர் கண்ட பலன். அவர் உள்ளம் வேதனையால் நொந்து போயிற்று. நாட்கள் செல்லச் செல்ல அவர் நம்பிக்கை தகர்ந்து வந்தது. தம் ஆயுளில் அது நிறைவேறுவது சாத்திய மில்லை என்று தோன்றியது.

எம்பெருமானுக்கு ஆலயம் நிர்மாணிக்க அவர் எவ்வளவோ குதூகலத்துடன் இருந்து வந்தார். கொழுந்து விட்டெரியும் நெருப்பு தண்ணீர் ஊற்றியதும் அணைந்து போவது போல் அது அடங்கி விடுவதை அவர் விரும்பவில்லை. பொருளைக் கொண்டு ஆலயம் எழுப்பி எம்பெருமானுக்கு வழிபாடு செய் வித்துக் கண்ணாரக் கண்டு மகிழ அவருக்கு வாய்ப்பு கிட்ட வில்லை. அப்பெரும் பணியை நிறைவேற்றி அகக் கண்ணிலே மகிழ்வது என்று எண்ணினுர்

சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளபடி நல்ல சுபதினம் ஒன்றில் பூசலார் நீராடி எம்பெருமானை வழிபட்டுத் திருப்பணி யில் இறங்கினுர். ஏரிக்கரையிலே ஒரு மரத்தடியில் கண்ணை மூடிக் கொண்டு அமர்ந்தார். சிவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டார்.

ஆட்கள் வேலை செய்வதற்கு வந்து கூடினர். கற்கள் வண்டி வண்டியாக வந்து குவிந்தன. மணலும் சுண்ணும்பும் மலைபோலக் கொண்டு வந்து கொட்டப்பட்டன. தச்சர்கள், கொல்லர்கள், கல்தச்சர்கள் இப்படியாக அவரவர் வேலைகளில் முனைந்தனர். சாஸ்திரோக்தமாக புரோகிதர்கள் செய்ய வேண் டிய கர்மாக்களை முடித்து ஆலயப் பணியைத் தொடக்கி வைத் தனர்.

எல்லாம் பூசலார் மனக் கண்ணிலே கண்டார். நாட்கள் நகர்ந்தன பூசலார் நெஞ்சத்திலே உருவாகிய ஆலயம் கொஞ் சம் கொஞ்சமாக உருவாகி வந்தது. ஒவ்வொரு சிறு காரியத்தை

யும் அவர் விட்டு வைக்கவில்லை. நேரில் ஈடுபட்டால் எவ்வாறு கவனித்துக் கொள்வாரோ அவ்வாறு எண்ணத்திலே நடத்தி வந்தார்.

பூசலார் நெஞ்சத்திலே ஆலயம் எழுந்தது. எல்லாக்காரியங் களும் முடிந்து விட்டன. கைதேர்ந்த ஸ்தபதியார்கள் இரவுப் பகலாக வேலை செய்து எம்பிரான் திருமேனியையும் தேவியின் திருவுருவமும் முடித்து விட்டனர். அவற்றைப் பிரதிஷ்டித்துக் கும்பாபிஷேகத்துக்கான ஏற்பாடுகளை முடித்தார். யாகசாலையில் யாக காரியங்கள் பூர்த்தியாகி விட்டன. மறுநாள் விடிந்தால் கும்பாபிஷேகம்.

அன்றிரவெல்லாம் பூசலார் உறங்கவில்லை. மனக்கண் ணிலே உருவான ஆலயத்திலே சுற்றிச் சுற்றி வந்தார். மறு நாள் நடக்கவேண்டிய கும்பாபிஷேகத்துக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார் போலும்.

பூசலார் மனக்கண்ணிலே ஆலயம் எழுந்த அதே நேரத் தில் காஞ்சியிலே பல்லவ மன்னன்1 கைலாச நாதருக்கு ஆலயம் ஒன்று எழுப்பத் தொடங்கினான். நாளொரு மேனியும் பொழு தொரு வடிவுமாக எழும்பி வந்த அந்த ஆலயம் முற்றுப் பெற் றது. அரசன் அறிஞர்களைக் கலந்து ஆலோசித்துக் கும்பாபி ஷேகத்துக்கு நாளை நிச்சயித்தான்.

கைலாசநாதர் ஆலயத்துக்கு நிச்சயிக்கப்பட்ட கும்பாபி ஷேக தினமும் வேளையும், பூசலார் தம் உள்ளத்திலே எழுப்பிய கோயிலுக்கு நிச்சயித்திருந்த நாளும் வேளையும் ஒன்றுக அமைந்தது எம்பெருமான் திருவுள்ளம் போலும். பக்தரின் பெருமையை உலகோருக்கு எடுத்துக்காட்ட விரும்பி யிருக்க வேண்டும்.

காஞ்சி நகரம் திமிலோலப்பட்டது. விடிந்தால் கைலாச நாதர் ஆலய கும்பாபிஷேகம்.

அயர்ந்து நித்திரையிலிருந்த அரசன் கனவிலே கையில் மானும் மழுவும் தாங்கி கங்காதரர் தோன்றினுர்.

"காடனே, நின்றவூரிலே என் பக்தன் பூசலார் எழுப்பிய ஆலயத்துள் நாளை புகுவதாக நாம் எண்ணியுள்ளோம். ஆகவே

---

1 நரசிம்மவர்மனின் குமாரனுன ராஜஸிம்ஹன் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர்.

உன் ஆலயத்துக்கான கும்பாபிஷேகத்தை இன்னொரு நாள் வைத்துக்கொள்'' என்று கூறி மறைந்தார்.

திடுக்கிட்டுக் கண் விழித்த அரசனுக்கு ஒன்றும் புரிய வில்லை. இறைவன் திருஅருளுக்குப் பாத்திரரான அப்பெரு மானைத் தரிசிக்க எண்ணம் கொண்டான். அமைச்சர்களை அழைத்துக் கும்பாபிஷேகத்தை இன்னொரு நாள் தள்ளி வைத் துக் கொள்ளுமாறு அறிவித்தான். குதிரை மீதேறி முக்கிய மானவர் மட்டும் தொடர்ந்து வர அப்போதே நின்றவூர் நோக்கிப் புறப்பட்டான்.

திருநின்றவூரை அடைந்ததும் அரசன் அங்கிருந்தவர் களிடம் பூசலார் எழுப்பியுள்ள சிவாலயம் எங்கிருக்கிறதென்று விசாரித்தான்.

''பூசலாரா? அவர் ஆலயம் எதுவும் எழுப்பவில்லையே'' என்றனர் அவர்கள்.

அரசன் அந்தணர்களை அழைத்துப் பூசலாரைப்பற்றி அவர்களிடம் விசாரித்தான்.

''பூசலார் இவ்வூரைச் சேர்ந்தவர்தான். ஆனால் அவர் ஆலயம் ஏதும் எழுப்பவில்லை. எழுப்ப வேண்டுமெனக் கொஞ்ச காலம் முயற்சித்து நிதி திரட்டினார். பணம் சேரவில்லை. கை விட்டு விட்டார்'' என்றனர் அவர்கள்.

அரசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இறைவன் சொன் னது பொய்யாக இருக்க முடியாதே.

''பூசலார் எங்கே?...'' என்று கேட்டான்.

''ஏரிக்கரையில் எங்காவது மரத்தடியில் அமர்ந்திருப்பார். ஆட்களை அனுப்பி அழைத்து வருகிறோம்'' என்றனர் அவர்கள்.

''வேண்டாம். அந்த உத்தமரை நாமே போய்ப் பார்ப்போம்'' என்று ஏரிக்கரைக்குச் சென்றான் பல்லவன்.

ஒன்றும் விளங்காதவர்களாய் அந்தணர்கள் அரசன் பின்னே சென்றனர்.

ஏரிக்கரையில் ஒரு மரத்தடியில் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தார் பூசலார். அவரை நெருங்கி வணங்கிய அரசன், ''சுவாமி!...'' என்று அழைத்தான்.

கண்களைத் திறந்த பூசலார் தம்முன் வணங்கியபடி நிற்கும் பல்லவ மன்னனைக் கண்டு திடுக்கிட்டார்.

"அரசே!... இதென்ன?..." என்று ஒன்றும் புரியாது எழுந்தார்.

"சுவாமி, தாங்கள் எழுப்பியுள்ள சிவாலயம் எங்கிருக்கிறது?" என்று கேட்டான் பல்லவ மன்னன்.

பூசலார் திடுக்கிட்டார். மன்னனுக்கு அது எவ்வாறு தெரிந்தது? அவர் உள்ளத்திலிருப்பது ஈ எறும்புக்குக் கூடத் தெரியாதே!

"மன்னவா,... ஆலயமா?..." என்று தடுமாறினர்.

மன்னன் இரவு தன் கனவிலே தோன்றி இறைவன் தெரிவித்ததைப் பூசலாரிடம் கூறினன்.

"சுவாமி, தங்களால் எழுப்பப்படும் ஆலயத்தில் எழுந்தருள இறைவன் இங்கு வந்துள்ளார். கும்பாபிஷேகத்தை நானும் கண்டு ஆனந்திக்கவே அந்தச் சுப வேளைக்குள் இங்கு வந்துவிட வேண்டுமென விடிவதற்கு முன்பே தலைநகரை விட்டுப் புறப்பட்டேன்" என்றான்.

பூசலார் கண்களிலிருந்து நீர் வழிந்தது. தம்மை மறந்து உணர்ச்சிவசப்பட்டவராய் வெகு நேரம் நின்றார்.

"மன்னவா, எம்பெருமானுக்கு ஆலயம் எழுப்ப விரும்பியது உண்மையே. ஆனல் என் எண்ணம் நிறைவேறாது போகவே உள்ளத்துக்கு ஏமாற்றம் உண்டாவதைத் தடுக்க மனத்திலேயே எம்பெருமானுக்கு ஆலயம் எழுப்பி கும்பாபிஷேகம் முதல் எல்லா ஏற்பாடுகளையும் செய்தேன். இறைவன் என்னையும் ஒரு பொருட்டாகக் கொண்டு உன்னை அனுப்பியுள்ளான் போலும். கும்பாபிஷேகத்துக்கு குடத்திலே நீர் கொண்டு அர்ச்சகர்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது நீ வந்து சேர்ந்தாய்" என்றார்.

அரசன் உடல் சிலிர்த்தது.

"சுவாமி, கும்பாபிஷேகம் நடக்கட்டும். என் பொருட்டுத் தாமதப்பட வேண்டாம்" என்றான்.

"மன்னவா, நீயும் கண்டு களிக்க வேண்டாமா?" என்று பூசலார் மன்னனுடைய கைகளை இழுத்துத் தம் மார்பிலே சேர்த்து அணைத்துக் கொண்டார்.

அடியாரின் ஸ்பரிசம் மன்னனை மெய்மறக்கச் செய்தது. அதோ...... அதோ! வானளாவிய விமானத்தோடு நிற்கும் ஆலயம்! எங்கும் மங்கல ஒலி; பக்தர்களுடைய ஆரவாரம்!... எம்பெருமான் திருமேனியிலே அர்ச்சகர்கள் வேதமந்திரங்களை

ஓதியபடி அபிஷேகம் செய்வதைக் கண்ட அரசன் புளகாங்கித மடைந்தான்.

உணர்வு பெற்ற அரசன் அடியாரின் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

"சுவாமி, தங்கள் திருவருளால் கிடைத்தற்கரிய அனுபவம் பெற்றேன். தங்கள் மனத்திலே எழுந்த ஆலயத்தை நனவாக்க விரைவிலேயே நிர்மாண வேலையைத் தொடங்குகிறேன்" என்று பணிந்து ஆசி பெற்று காஞ்சி திரும்பினான்.

பூசலார் பக்தியைக் கண்டு அவ்வூரார் அவரைப் போற்றிக் கொண்டாடினர். எம்பெருமான் திருத்தொண்டிலே ஈடுபட்டு பல காலம் பலரும் போற்றிப் புகழ வாழ்ந்திருந்து இறைவன் திருவடிகளை அடைந்தார் பூசலார்.

88. ஆலவாய் அரசியார்

சோழர் குலம் விளங்க வந்து பிறந்தவர் மங்கையர்க்கரசியார். இளம் வயதிலிருந்தே எம்பெருமானிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர். பாண்டிய மன்னனை நெடுமாறனை மணந்து பாண்டிய நாட்டு அரசியானார். சமணர் துர்ப்போதனையால் மயங்கி மன்னன் அவர்களுடைய மதத்திலே ஈடுபாடு கொண்டிருந்தான். கணவன் போக்கு கண்டு அம்மையார் அல்லும் பகலும் வேதனைப்பட்டு வந்தாள். இறைவன் திருவருளால் சம்பந்தர் மதுரை வந்து சமணர்களை வாதில் வென்று நாட்டிலே சைவம் தழைத்தோங்கச் செய்தார் அரசன் மனத்தையும் மாற்றி சைவத் தொண்டிலே ஈடுபடச் செய்ததோடு அவன் கூன் விழுந்த முதுகு நிமிரவும் செய்தார். அம்மையார் அளவில்லா மகிழ்ச்சி கொண்டு நாயகனுடன் அனேக திருப்பணிகளில் ஈடுபட்டு இறுதியில் அவரோடு இறைவன் திருவடிகளைச் சேர்ந்தார்.

89. நல் வாழ்வளித்த நேசர்

காம்பீலி1 நகரத்தில் சாலியர் குலத்திலே நேசர் என்னும் பெயர் கொண்ட சிவபக்தர் இருந்து வந்தார். அவருடைய நற்குணங்களும் நல்லொழுக்கமும் அவரை அக்குலத்துக்குத் தலைவராக்கின. மகிழ்ச்சியோடு தலைமை பூண்டு நேசர் தம் குலத்து மக்களுக்கு நல்வாழ்வை அளிக்கப் பாடுபட்டார். நெஞ்சத்தை எம்பெருமான் திருப் பாதங்களைத் தாங்கும் தாமரை

1 பெல்லாரி மாவட்டத்திலுள்ள கம்பிலி.

யாக்கி, பஞ்சாக்ஷரம் ஜபித்து அடியார்களுக்கு வேண்டுவன அளித்து கௌரவித்து வந்த நேசர் இறைவன் திருஅருளுக்குப் பாத்திரமாகி அவர் மலரடிகளை அடைந்தார்.

90. சிலந்தியின் சீரிய வழிபாடு

சோழ நாட்டிலே சந்திர தீர்த்தத்தின் பக்கலிலே வனம் ஒன்று இருக்கிறது. அவ்வனத்திலே வெண்ணுவல் மரத்தடியிலே ஒரு சமயம் சிவலிங்கம் ஒன்று வெளிப்பட்டது. அப் பகுதியில் திரிந்து வரும் வெள்ளை யானை ஒன்று சிவலிங்கத்தைக் கண்டது. பக்தி மேலிட எம்பெருமானுக்கு வழிபாடு செய்ய ஆசைப்பட்டது. தினமும் துதிக்கையிலே சந்திர தீர்த்தத்திலிருந்து நீரை முகர்ந்து வந்து அபிஷேகம் செய்து மலர் கொண்டு அர்ச்சித்து வந்தது. அதனுல் அத்தலத்துக்குத் திரு ஆனைக்கா என்ற பெயர் விளங்கலாயிற்று.

நாவல் மரத்திலே சிலந்தி ஒன்று இருந்து வந்தது. பூர்வ ஜன்ம புண்ணியவசத்தால் சிலந்தி சிவலிங்கத்தைக் கண்டு பக்தி மிகுந்ததாக ஆயிற்று. எம்பெருமான் திருமேனி மீது மரத்திலிருந்து சருகுகள் உதிரா வண்ணம் வலை பின்னியது.

சிலந்தி வலையைக் கண்ட யானை அதன் தூய பக்தியை உணராது அதை அநுசிதம் என எண்ணி அறுத்து எறிந்தது. சிலந்தி மீண்டும் வலை பின்னி சருகுகள் இறைவன் திருமேனி மீது விழாது தடுத்தது. மறு நாளும் யானை சிலந்தி வலையைக் கண்டு சினந்து அறுத்தது. சிலந்தி வலை கட்டுவதும் அதை யானை அறுப்பதுமாகத் தினமும் நடந்து வந்தது.

இறைவன் தொண்டிலே ஈடுபட்ட தனக்கு இடர் விளைவித்து வரும் யானையிடம் சிலந்தி அளவற்ற சீற்றம் கொண்டது. அதன் துதிக்கையினுள் புகுந்து கடித்தது. வலி தாங்க மாட்டாது யானை துதிக்கையைப் பூமியில் பலமுறை ஓங்கி அறைந்து கீழே விழுந்து புரண்டு உயிரை விட்டது. யானை துதிக்கையைப் பூமியில் அறைந்தபோது அதனுள் இருந்த சிலந்தியும் உயிரிழந்தது. எம்பெருமானை உள்ளன்போடு நீராட்டி வழிபட்டு வந்ததால் யானை சிவலோகத்தை அடைந்தது. சிலந்தி சோழ அரசன் குமாரனுகத் திரும்பவும் பூலோகத்தில் பிறவியெடுத்தது.

சுபதேவன் என்னும் சோழராஜன் பொன்னம்பலம் சென்று நடராஜப் பெருமானைத் தனக்குப் பிள்ளை பிறக்க அநுக்கிரகிக்குமாறு வேண்டினுன். இறைவனும் அரசன் விருப்பத்தை

நிறைவேற்றி அருளினுர். அரசி கமலவதி கருவுற்ருள். பிரசவ காலம் நெருங்கியது. சோதிடர்கள் காலநிலைமையைப் பரிசோதித்து, ''இன்னும் ஒரு நாழிகைப் பொழுது கழிந்து அரசியாருக்குக் குழந்தை பிறக்குமேயானுல் அக்குழந்தை மூவுலகங்களும் போற்றத் தக்கதாக இருக்கும்'' என்றனர். அதைக் கேட்ட அரசி சோதிடர் கூறிய ஒரு நாழிகைப் பொழுது கழியும் வரை தன்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுமாறு சொன்னுள். அவ்வாறே அரசி ஒரு நாழிகைப் பொழுது வரை தலைகீழாகக் கட்டித் தொங்க விடப்பட்டாள். சோதிடர் குறிப்பிட்ட பொழுது கழிந்ததும் அரசியை அவிழ்த்துப் படுக்க வைத்தனர். அழகிய ஆண் குழந்தைப் பிறந்தது. தாமதித்துப் பிறந்ததால் குழந்தையின் கண்கள் சிவந்து இருந்தன. ''என் ராஜா செங்கண்ணனே!'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டாள் கமலவதி. ஒரு நாழிகை நேரம் பிரசவ வேதனைப் பட்டதால் அரசி அதிக நேரம் உயிர் தரித்திருக்கவில்லை. குழந்தையை ஆசை தீரப் பார்த்துவிட்டுக் கண்ணை மூடினுள்.

சுபதேவன் குமாரனுக்குச் செங்கணுன் என்றே பெயரிட்டு வளர்த்து வந்தான். அவன் வளர்ந்து பெரியவனுனதும் அவனுக்கு முடிசூட்டி ஆட்சியை ஒப்புவித்து விட்டு சுபதேவன் தவம் செய்யக் காட்டுக்குப் போய்விட்டான்.

செங்கணுன் சோழ ராஜனுகச் சிங்காதனம் ஏறியதும் எம்பெருமான் திருவருளால் பூர்வஜன்ம நினைவுகளைப் பெற்றுத் திருவானைக்கா சென்று வெண்ணுவல் மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குத் திருக்கோயில் கட்டுவித்தான். அமைச்சர்கள் மூலம் சோழ நாட்டிலே அனேக கோயில்களை எழுப்பச் செய்து எம்பெருமான் வழிபாட்டுக்கு வழி செய்வித்தான். போன ஜன்மத்தில் வெள்ளை யானை தன் திருத்தொண்டுக்கு இடையூறு செய்வித்ததை மனத்தில் கொண்டு யானைகள் ஏருவண்ணம் கட்டுமலை அமைத்து அவற்றின் மீது எம்பெருமானுக்கு ஆலயம் எழுப்பினுன். அவைகளே மாடக் கோயில்கள் என அழைக்கப்படுகின்றன. தந்தையைப் போன்று தில்லை நடராஜரிடம் அளவில்லாத பக்தி கொண்டு சிதம்பரம் சென்று இறைவனைத் தரிசித்தான். அவ்வூரிலே இறைவன் தொண்டிலே ஈடுபட்டு வரும் அந்தணர்களுக்கு மாளிகைகளை அமைத்துக் கொடுத்தான்.

இவ்வாறு நெடுங்காலம் தொண்டுகள் பல ஆற்றி வந்து இறுதியில் செங்கணுன் எம்பெருமான் திருவடிகளைச் சேர்ந்தான்.

91. பரமன் இட்ட பொற்பலகை

எருக்கத்தம்புலியூரிலே பாணர் குலத்திலே பிறந்தவர் நீலகண்டர் என்பவர். அவர் யாழ் வாசிப்பதில் சிறந்து விளங்கியதால் அவரை நீலகண்ட யாழ்ப்பாணர் என்றும் அழைத்தனர். எம்பெருமானிடம் குன்ருத பக்தி கொண்ட நீலகண்டர் சிவாலயங்கள் தோறும் சென்று கோபுரவாயிலில் நின்று இறைவன் பெருமையை எடுத்துக் கூறும் பாடல்களை யாழிலே வாசித்து வந்தார்.

ஒரு சமயம் பாணர் பாண்டிய நாடு சென்று ஆலவாயில் குடிகொண்டுள்ள சோமசுந்தரப் பெருமானைத் தொழுது அவர் கோயில் கோபுர வாயிலில் நின்று தேனினும் இனிய பாடல் களை வாசித்தார். அடியார்க்கு அருள எண்ணம் கொண்ட ஆலவாய்ப் பெருமான் அன்றிரவு தம் அன்பர்கள் நித்திரையில் தோன்றி பாணரைத் தம் சந்நிதானத்துக்கு அழைத்து வரு மாறு அறிவித்தார்.

மறுநாள் வழக்கம் போல நீலகண்ட யாழ்ப்பாணர் ஆலய வாயிலில் நின்று யாழில் இசைத்துக் கொண்டிருந்தார். அடி யார்கள் ஆலயத்துள்ளிருந்து வெளிப்பட்டு இறைவன் திருவுள் ளத்தை அறிவித்து உள்ளே வருமாறு அழைத்தனர். தம்மிடம் இறைவன் கொண்டுள்ள அன்பைக் கண்டு வியந்த பாணர் அவர்களை வணங்கி ஆலயத்துள் சென்று எம்பெருமானைச் சேவித்தார். சந்நிதியில் நின்று தம்மையே மறந்து இறைவன் புகழைப் பாடினர்.

"இப்பாணர் பாடும் சந்த யாழ் தரையில் சீதம் தாக்கில் வீக்கழியும். இவருக்குச் சுந்தரப் பலகை யிடுங்கள்" என்று அசரீரி எழுந்தது.

அடியார்கள் சொல்லொண்ணு வியப்படைந்து பொற் பலகை எடுத்து வந்து பாணருக்குச் சமர்ப்பித்தனர். பாணர் அப்பலகை மீதேறி நின்று இறைவன் மனம் குளிர யாழிசைத் தார்.

மதுரையை விட்டுப் புறப்பட்ட பாணர் அனேக பதிகளில் யாழிசைத்து எம்பெருமான் புகழ்பாடி ஆரூரை அடைந்தார். தியாகேசப் பெருமானுடைய ஆலய வாயிலில் நின்றபடி இசை வெள்ளம் கரைபுரண்டோடச் செய்தார். புற்றிடம் கொண்ட பெருமான் தம் அடியாரைத் தரிசிக்க எண்ணம் கொண்டார். வடக்குப் புறத்திலே திருவாயிலைத் தோற்றுவித்து அதன் வழி யாகத் தம் முன் வந்து இசை பாடுமாறு பணித்தார். பாணரும்

அவ்வாறே வடக்கு வாயிலை அடைந்து தொழுது உள் நுழைந்து இறைவன் சந்நிதானத்தை அடைந்து யாழ் இசைத்துப் பாடினார்.

ஆரூரிலே சில நாட்கள் தங்கி எம்பெருமானைத் தரிசித்துக் கொண்டு புறப்பட்ட பாணர் ஆளுடைய பிள்ளையாரைப் பற்றி அறிந்து அவரைச் சென்று பணிந்து எப்போதும் அவரோடு தங்கி அவர் அருளிச் செய்யும் செந்தமிழ் பாசுரங்களை யாழில் இசைத்து மகிழும் பேறு பெற்றார். சம்பந்தரோடு அனேக திருப்பதிகள் சென்று எம்பெருமானைத் தரிசித்து மனம் களித்து முடிவில் அப்பெருமான் திருமணத்தில் அவரோடு சிவ ஜோதியிலே கலந்து இறைவனோடு ஐக்கியமானார்.

நீலகண்ட யாழ்ப்பாணரின் பெருமையைப் பாடிய சுந்தரர் தம்மைப் பெற்றெடுத்த சடையனாரையும் இசைஞானியாரையும் போற்றிப் பாடி அவர்களுக்குத் தம்மை அடியாராகக் கூறித் திருத்தொண்டத் தொகை பாடி முடித்தார்.

தேவாசிரிய மண்டபத்தில் குழுமியிருந்த அடியார்கள் சுந்தருடைய பக்தி நிறைந்த உள்ளத்தை உணர்ந்து அவரைப் பணிந்து போற்றினர்.

92. குண்டையூரில் குவிந்த நெல்

குண்டையூர்கிழார்1 என்பவர் சுந்தரர் பற்றிக் கேள்விப் பட்டு திருஆரூர் வந்து அவரைக் கண்டார். தம்பிரான் தோழரைக் கண்டதிலிருந்து அவருக்கு அடியாராகி விட்டார். அவரும் பரவையாரும் சாப்பிடுவதற்கான நெல்லை கிழார் தம் களஞ்சியத்திலிருந்து அனுப்பி வந்தார்.

அவ்வாறு இருந்து வரும் நாளில் மழை இன்மையால் விளைவு குறைந்து கிழார் போதுமான நெல் இன்றி தவித்தார். அடியார் அமுது செய்ய நெல்லை அனுப்ப முடியாதிருக்கிறதே என மனம் வருந்தினார்.

அன்றையத் தினம் கிழாருடைய வருத்தம் எல்லை மீறி விட்டது. தம் நிலை இவ்வாறு ஆகிவிட்டதே என உணவு அருந்தாது பட்டினியாகப் படுத்து விட்டார்.

பக்தருடைய மனநிலையை அறிந்த ஈசன் அவர் வேதனையைப் போக்க குண்டையூர் முழுவதும் மலையாக நெல்லைக்

---

1 இவர் வாழ்ந்து வந்த ஊர் திருக்கோளிலிக்கு அரை மைலில் உள்ளது. திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே ஆறரை மைல்.

குமித்து விட்டார். அயர்ந்து நித்திரை செய்யும் கிழார் கன விலே தோன்றி, "அன்பனே, அடியார்க்கு அமுது செய்விக்க முடியாதிருக்கிறதே என்று வருந்த வேண்டாம். வேண்டிய அளவு நெல் தந்தோம்" எனக் கூறி மறைந்தார்.

விடிந்ததும் கிழார் வெளியே வந்து பார்த்தார். அவரால் நம்பவே முடியவில்லை. எங்கு பார்த்தாலும் நெல் முட்டு முட்டாகக் குவிந்து கிடந்தது. ஆச்சரியம் தாங்கவில்லை. இப்போது அவருக்கு வேறொரு பிரச்னை தோன்றி விட்டது. இத்தனை நெல்லையும் ஆரூருக்கு எவ்வாறு கொண்டு போய்ச் சேர்ப்பது ?

அடியாரிடமே யோசனை கேட்போம் என ஆரூருக்குப் புறப்பட்டார். இதற்குள் குண்டையூரிலே அவருக்காக நெல் அளித்திருப்பதை இறைவன் அறிவிக்கவே சுந்தரர் ஆரூரை விட்டுப் புறப்பட்டு வந்து சேர்ந்தார்.

அடியாரைக் கண்டதும் கிழார் அளவில்லா ஆனந்தமடைந்து, "பெருமானே, இறைவன் கருணையை எவ்வாறு எடுத்துரைப்பேன்? தங்கள் திருவமுதுக்கு நெல் அனுப்ப முடியவில்லையே என வருந்தினேன். எம்பெருமான் நேற்றிரவு கனவிலே தோன்றி அருளினார். ஊர் முழுவதும் நெல் முட்டு முட்டாகக் குவிந்து கிடக்கிறது. இறைவன் வாரி வழங்கி விட்டிருக்கும் நெல்லை மனிதரால் கொண்டு சேர்ப்பது அசாத்தியம். தாங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று வேண்டினார்.

அன்பரோடு சென்று நெல்லைப் பார்த்த சுந்தரர், "எம்பெருமான் கொடுத்த பொருளை அவரைக் கொண்டே ஆரூரில் சேர்ப்பிக்கச் செய்வோம்" என்று கூறினார். பின்னர் பக்கத்தே இருந்த திருக்கோவில் சென்று இறைவனைத் தரிசித்து 'நீள நினைந்தடியேன்' என்ற பதிகம் பாடி, "பரவையார் வீட்டிற்கு உன் அருளால் இன்றி இத்தனை நெல்லும் போய்ச் சேராது" என்று வேண்டினார்.

"இன்றிரவே இவற்றை ஆரூரில் கொண்டுபோய்ச் சேர்ப்போம்" என்று அருளினார் ஈசன். மகிழ்ந்து ஆரூர் திரும்பினார் சுந்தரர்.

இறைவன் ஆக்ஞைப்படி சிவபூதங்கள் அன்றிரவு குண்டையூரிலே குவிந்து கிடந்த நெல் முழுவதையும் ஆரூர் வீதிகளிலே கொண்டு போய்ச் சேர்த்தன.

விடிந்ததும் வெளியே வந்த ஆரூர் வாசிகள் தெரு வாசலிலே குவிந்து கிடக்கும் நெல்லைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

பரவையாருக்கு எம்பெருமான் அளித்தது என்பதை அறிந்த போது அவர்கள் மேலும் வியப்படைந்தனர். 'இத்தனை நெல்லை யும் பரவையார் எப்படித்தான் சேமித்து வைக்கப் போகிருளோ? அதற்கு இடம் எங்கு இருக்கிறதோ?' என்று அவர்கள் அதி சயப்பட்டனர்.

இறைவன் தமக்களித்ததைத் தாம் மட்டுமே அனுபவிக்க பரவையார் விரும்பவில்லை. அவரவர் வீட்டிற்கு முன் இருப் பதை அவரவர் தங்களுக்கென எடுத்துக் கொள்ளலாம் என்று பறை அறைவித்தார்.

பரவையாருடைய தூய உள்ளத்தை அனைவரும் கொண் டாடினர்

இவ்வாறு இருந்து வரும் நாளையில் திருநாட்டியத்தான் குடியிலிருந்து கோட்புலியார் என்னும் அடியார் ஆரூர் வந்து சேர்ந்தார். சுந்தரரைத் தரிசித்து வணங்கி அவரைத் தம் ஊருக்கு எழுந்தருளி அமுது செய்ய வேண்டும் என அழைத் தார். அடியார் வேண்டுகோளை ஏற்று சுந்தரர் ஆரூரை விட்டுப் புறப்பட்டார்.

கோட்புலியார் தம்பிரான் தோழருக்குக் கோலாகலமான வர வேற்பு அளித்தார். வீதிகள் தோறும் அலங்கரித்திருந்தனர். சுந்தரரைத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்று உபசரித் தார். தம் புத்திரிகள் சிங்கடியாரையும் வனப்பகையாரையும் அழைத்து வணங்கி ஆசி பெறச் செய்தார். பின் சுந்தரரை வணங்கி, "சுவாமி, என் புத்திரிகளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினுர்

"அன்பரே, இவர்கள் என் புத்திரிகள் அன்றோ!" என்று கூறிய சுந்தரர் அவ்விருவரையும் அணைத்துத் தம் மடிமீது அமர்த்தி உச்சி முகர்ந்தார். பின் ஆலயம் சென்று இறைவனைத் தொழுது பதிகம் பாடி அதிலே கோட்புலியாரைச் சிறப்பித்துக் கூறினுர்.

நாட்டியத்தான்குடியிலிருந்து புறப்பட்டுத் திருவலிவலம் சென்று வழிபட்டு ஆரூர் திரும்பினுர் சுந்தரர்.

93. ஆற்றிலே போட்டு குளத்திலே தேடிய பொற்கிழி

பங்குனி மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது. உத்திரத் திருநாளை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று பரவை யார் ஆசைப்பட்டார். அவர் சுந்தரரிடம் அதைப்பற்றி பேசினுர்.

திருவிழாச் செலவுக்குத் தேவையான பணம் சுந்தரரிடம் இல்லை. தமக்குப் பணம் தேவை என்பதை அவர் அடியார்களிடம் சிறிது கோடிட்டுக் காட்டினால் போதும். கொண்டு வந்து குவித்து விடுவார்கள். அவரோ அதை விரும்பவில்லை. தம்மை ஆட்கொண்ட எம்பெருமானையே கேட்கத் தீர்மானித்தார் சிவஸ்தலங்கள் பல சென்று எம்பெருமானைத் தரிசித்துத் திரும்புவதாகக் கூறி பரவையாரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

திருப்புகலூரை அடைந்த சுந்தரர் ஆலயம் சென்று புகலூர் மகாதேவரைத் தரிசித்தார். தம் உள்ளக் கிடக்கையை அறிவித்துத் தமக்குப் பொன் கொடுக்குமாறு வேண்டினார். பின் எம்பெருமான் திருக்கோயிலை வலம்வந்து பிராகாரத்தினுள் தங்கினார்.

புகலூர் பினாகபாணியார் தம் பக்தனுக்கு அருள எண்ணம் கொண்டார். அவர் அருளால் சுந்தரருக்கு நித்திரை வந்தது. அங்கே திருப்பணிக்காகக் கொண்டு வந்து அடுக்கியிருந்த செங்கற்களில் சிலவற்றை எடுத்து வரச் செய்து அவற்றைத் தரையில் தலையணையாகக் கிடத்தி மேல் துணியை விரித்துத் தூங்கினார். தூக்கம் கலைந்து, அவர் எழுந்தபோது அச்செங்கற்கள் அனைத்தும் பொன்னாக மிளிர்வதைக் கண்டு வியந்தார். இறைவன் அனுக்கிரகத்தைக் கண்டு மனம் கசிந்து உருகி சந்நிதானம் சென்று 'தம்மையே புகழ்ந்து' என்ற பதிகம் பாடிப் போற்றினார். பின்னர் ஆரூர் திரும்பும் வழியில் பனையூரில் நுழைந்து எம்பெருமானை வழிபட்டார்.

பங்குனி உத்திரம் திருவிழா பரவையார் மாளிகையில் கோலாகலமாக நடந்தேறியது. அடியார்களை வரவேற்று உபசரித்து அவர்கள் மனம் மகிழத் திருவமுது செய்வித்தார் சுந்தரர்.

மீண்டும் சுந்தரர் உள்ளம் தலயாத்திரைக்கு விழைந்தது. பரவையாரிடம் விடைபெற்று ஆரூரை விட்டுப் புறப்பட்டார்.

நன்னிலத்துப் பெருங்கோயிலை அடைந்து பரமனை வழிபட்டுப் புறப்பட்ட சுந்தரர் திருவீழிமிழலை, திருவாஞ்சியம், திருநறையூர் சித்தீச்வரம், திருப்புத்தூர் 1, திருவாவடுதுறை ஆகிய தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடிக் களித்து காவிரியின் தென் கரையாகப் பிரயாணப்பட்டார்.

---

1 அழகார்புத்தூர் எனப்படும் அரிசிக்கரைபுத்தூராகிய இவ்வூர் அரசலாற்றங்கரையில் குடந்தையிலிருந்து தென் கிழக்கே நாலரை மைலில் உள்ளது.

இடைமருதூரில் அமர்ந்திருக்கும் எம்பெருமானைத் தரிசித்துப் புறப்பட்ட சம்பந்தர் திருநாகேசுவரம் சென்று வழிபட்டு சிவபுரம், திருக்கலய நல்லூர் 1 ஆகிய பதிகளிலும் தரிசித்துக் கொண்டு திருக்குடந்தைக்குப் போய்ச் சேர்ந்தார். நகருள் நுழைந்த சுந்தரர் எம்பெருமான் திருவடி தொழுது பாடல் புனைந்து புறப்பட்டார். பின்னர் அவர் திருவலஞ்சுழி, திரு நல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி ஆகிய ஊர்களைத் தரிசித்துக்கொண்டு திரு ஆலம்பொழிலை அடைந்தார்.

சுந்தரர் அவ்வூரை அடையும்போது இரவு நெருங்கிவிட்டது. ஆகவே அங்கே தங்கி விடிந்ததும் புறப்படத் தீர்மானித்து ஒரு மடத்தை அடைந்தார்.

பக்கத்திலேதான் மழபாடி இருக்கிறது. பக்தன் தம்மைக் காணாது போய்விடுவானோ என்று சந்தேகித்து அயர்ந்து நித்திரையிலிருந்த சுந்தரர் கனவிலே இறைவன் தோன்றினார். 'வன்றொண்டனே, மழபாடி வர மறந்தனையோ?' என்று கேட்டு மறைந்தார்.

திடுக்கிட்டுக் கண் விழித்து எழுந்தார் சுந்தரர். உண்மையில் அவர் மழபாடி செல்லும் எண்ணமே கொண்டிருக்கவில்லை. அப்படியே திருவானைக்கா செல்லவே முடிவு செய்திருந்தார். தாம் மறந்தாலும் ஈசன் மறக்காது தம்மை அழைத்ததுபற்றி சொல்லொணா மகிழ்ச்சி கொண்டார். விடியும் வரை இறைவன் கருணையை எண்ணி எண்ணி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்.

பொழுது விடிந்ததும் ஆலம்பொழிலை விட்டுப் புறப்பட்டு மழபாடி சேர்ந்தார். சோலைகள் நடுவே உயர்ந்து நின்ற கோபுரத்தைக் கண்டதுமே அவர் உள்ளத்தில் பக்தியின்பம் சொரிந்தது. ஆலயத்தை வலம் வந்து உள் நுழைந்து எம்பெருமானைத் தரிசித்துப் புளகாங்கிதம் அடைந்தார். 'பொன்னார் மேனியனே' என்ற பதிகம் பாடி மகிழ்ந்தார்.

அவ்வூரிலே சில நாட்கள் தங்கி ஆசை தீர எம்பெருமானைத் தரிசித்துக் கொண்டு திருவானைக்காவுக்குப் புறப்பட்டார். வெண்ணாவல் மரத்தடியில் இருப்பிடம் கொண்ட இறைவனைத் தொழுது பாடிய சுந்தரர் ஆற்றிலே நீராட மூழ்கிய சோழராஜனின் முத்துமாலை வெள்ளத்திலே விழுந்துவிட அதைத் திரு

---

1 சாக்கோட்டை எனப்படும் இவ்வூர் குடந்தைக்குத் தென் கிழக்கே மூன்றரை மைலில் உள்ளது.

மஞ்சனக் குடத்திலே வரவழைத்துத் தந்த இறைவன் திருவருளை வியந்து போற்றினர்.

அங்கிருந்து புறப்பட்ட சுந்தரர் திருப்பாலாச்சிரமம் சென்று இறைவனைப் பாடி பொன் பெற்று பின் திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய்மலை, திருப்பாண்டிக் கொடுமுடி ஆகிய தலங்களில் இறைவனைத் தரிசித்து மகிழ்ந்து பேரூர் சென்றடைந்தார். மேலைச்சிதம்பரம் எனக் கொண்டாடப்படும் அவ்வூரிலே தாண்டவக் கோலத்தில் தரிசனம் கொடுக்கும் எம்பெருமானைக் கண்டு தரிசித்தபோது சுந்தரருக்குத் தில்லைப் பொன்னம்பலக் கூத்தனைக் காண ஆவல் எழுந்தது.

பேரூரிலே தரிசனம் முடித்துக் கொண்டு புறப்பட்ட சுந்தரர் மீண்டும் சோழநாடு நோக்கிப் பிரயாணமானுர். வெஞ்சாமாங்கூடலூர், திருகற்குடி, திரு ஆறைமேற்றளி, திரு இன்னம்பர், திருப்புறம்பயம் ஆகிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு கூடலையாற்றூர்1 நெருங்கினுர்.

சுந்தரருடைய லட்சியம் முதுகுன்றம் சென்று பழமலைநாதரைத் தரிசிக்க வேண்டும் என்பதே. ஆகவே கூடலையாற்றூரை நெருங்காமலேயே வேறுபாதையில் நடக்கத் தொடங்கினுர். எம்பெருமானுக்கோ பக்தனின் செந்தமிழ் பாடலைக் கேட்டு ஆனந்திக்க வேண்டுமென்று அளவில்லாத ஆவல். சுந்தரரை எப்படித் தம்மூருக்கு அழைத்து வருவது? அதற்கு ஒருவழி செய்தார்.

பிரயாணப்பட்டு வந்த சுந்தரருக்குக் குழப்பம் ஏற்பட்டது. தாம் சரியான வழியில்தான் போய்க் கொண்டிருக்கிறேமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. யாரைக் கேட்கலாம் எனச் சுற்றும் முற்றும் பார்த்தார். யாரையாவது கேட்டுத் தாம் செல்லும் வழி சரிதானு என்பதை அறிந்த பின்னரே மேற்கொண்டு பிரயாணத்தைத் தொடங்க வேண்டுமென எண்ணினுர் அவர். அடியாரின் உள்ளத்திலே குழப்பத்தைத் தோற்றுவித்த இறைவன் கிழவரைப்போல வேடம் கொண்டு சற்று தொலைவில் செல்லுவதுபோல் தோற்றம் அளித்தார். யாரோ முதியவர் போகிறுர் என்று வேகமாக நடந்து அவரை நெருங்கினுர் சுந்தரர்.

''பெரியவரே, முதுகுன்றம் செல்லும் வழிதானே இது?'' என்று கேட்டார்.

கிழவனுராகிய இறைவன் சுந்தரருடைய கேள்விக்குப் பதில் கூருது, ''ஐயனே, அதோ அந்தப் பாதை கூடலை

1 விருத்தாசலத்துக்குத் தென் கிழக்கே பதினெட்டுமைல்.

யாற்றூருக்குச் செல்லுகிறது'' என்று கிளைப்பாதையைச் சுட்டிக் காட்டி விட்டு வேகமாக நடந்தார்.

சுந்தரர் சிறிது நேரம் ஒன்றும் புரியாது திகைத்து நின்று விட்டார். அவர் கேட்ட கேள்விக்குக் கிழவர் வேறு ஏதோ பதிலைக் கூறுகிருரே. ஒருவேளை கிழவர் காது மந்தமாக இருந்து அவர் கேட்டதை வேறு விதமாக அர்த்தம் செய்து கொண்டு விட்டாரோ? அவரை நிறுத்தி மறுபடியும் சரியான பாதையைத் தெரிந்து கொள்ள வேண்டும் எனத் திரும்பிய சுந்தரர் திடுக்கிட்டார்.

கிழவனுரைப் பாதையிலே காணவில்லை. அவர் எங்கே போய்விட்டார்? நாற்புறமும் சுற்றிப் பார்த்தார். அவர் போன சுவடே தெரியவில்லை. திடீரென்று மாயமாய் மறைந்து விட்டாரா என்று எண்ணினுர் சுந்தரர்.

'அதோ அந்தப் பாதை கூடலையாற்றூருக்குச் செல்லுகிறது' என்ற கிழவனுர் குரல் கணீரென்று சுந்தரருடைய மனத்திலே எதிரொலித்தது. அப்போதுதான் அவருக்குக் கிழவனுராக வந்தது இறைவனே என்பது தெரிந்தது. அதை நினைத்த போது, அவர் உள்ளம் சிலிர்த்தது. தம்மூருக்கு வர வேண்டும் என்பதற்காகவே கிழவனுராக வந்து கூடலையாற்றூரைக் காட்டினுரா?

உள்ளத்திலே உணர்ச்சிகள் அலைமோத சுந்தரர் 'வடிவுடை மழுவேந்தி' என்ற பதிகம் பாடி இறைவனைத் தொழுதார். பின் அங்கிருந்து கூடலையாற்றூர் சென்று எம் பெருமானைத் தரிசித்துத் தமிழ் பாக்களால் மாலை சூட்டி மனம் களித்துப் புறப்பட்டார்.

திருமுதுகுன்றத்தை அடைந்த சுந்தரர் இறைவனைத் தொழுது தமக்குப் பொன் வேண்டுமெனக் கேட்டார். ஈசனும் தம் அடியார்க்குப் பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்தார். அப் பொன்னை சுந்தரர் எவ்வாறு எடுத்துச் செல்வது?

''ஐயனே, இப்பொன்னை ஆரூரில் எனக்குக் கிடைக்குமாறு செய்யவேண்டும்'' என்று வேண்டினுர்.

''மணிமுத்தாறிலே போட்டுக் கமலாயத்தில் எடுத்துக் கொள்'' என்று அருளினுர் இறைவன்.

சுந்தரர் பன்னிரண்டாயிரம் பொன்னையும் மச்சம் வெட்டி எம்பெருமானைத் தியானித்த வண்ணம் மணிமுத்தாறு நதியிலே நீரிலிட்டார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருக் கடம்பூரைத் தரிசித்துக் கொண்டு தில்லையை அடைந்தார்.

பேரம்பலத்திலே திரு நடம்புரியும் எம்பெருமானைப் பேரூரிலே தரிசித்த கோலத்தில் கண்டு ஆனந்தமடைந்தார். திருவீதிகளையும் தொழுது அந்தணர்களைப் பணிந்து விடை பெற்றுப் புறப்பட்ட சுந்தரர் திருக்கருப்பறியலூர், மண்ணிப்படிகரை, திருவாழ் கொளிபுத்தூர், திருக்கானாட்டுமுள்ளூர்1, திரு எதிர் கொள்பாடி, திருவேள்விக்குடி ஆகிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருத்துருத்தி போய்ச் சேர்ந்தார். எம்பெருமான் திருமணக்கோலத்தைக் கண்டு களித்த சுந்தரர் '**மூப்பதுமில்லை பிறப்பதுமில்லை**' என்ற பதிகத்தால் இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார். பின் அங்கிருந்து புறப்பட்டுத் தெற்காகப் பிரயாணப்பட்டு வழிகளில் உள்ள பதிகள் தோறும் சென்று எம்பெருமானைத் தரிசித்து ஆரூரை வந்து அடைந்தார்.

புற்றிடம் கொண்ட பெருமானைத் தினமும் வழிபட்டு வரும் நாளில் பரவையாருக்கு ஒரு நாள் பணத் தேவை ஏற்பட்டது.

''பழமலை நாதர் எனக்குப் பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்துள்ளார். அவற்றை மணிமுத்தாற்றிலே போட்டு வந்துள்ளேன். என்னோடு கமலாலயத்துக்கு வா. அப்பொன்னை எடுத்துத் தருகிறேன்'' என்றார்.

பரவையாருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவரோடு புறப்பட்டாள். இருவரும் ஆலயம் சென்று வீதிவிடங்கரைத் தரிசித்துக் கொண்டு கமலாலயம் வந்து சேர்ந்தனர். வடகிழக்குக் கரையிலே பரவையாரை நிறுத்திவிட்டுக் குளத்திலிறங்கி இடுப்பளவு ஜலத்தில் பொன்னைத் தேடினார் சுந்தரர்.

தரையிலே எதையும் காணவில்லை. குனிந்து குனிந்து கையால் துழாவினார். சேறும் சகதியுமே கைகளில் வந்தன. பொன்னைக் காணவில்லை

இறைவன் எப்பேர்ப்பட்டவர்? பக்தன் அவரை அதட்டிப் பொன் கேட்கும் போது பணிந்து விட்ட அவர் இப்போது தம் முறை வந்ததும் பக்தனை ஆழம் பார்த்தார். சாதாரணமாகத் தேடினால் கொடுத்து விடுவாரா?

''என்ன ஆயிற்று, சுவாமி? ஆற்றிலே போட்டுக் குளத்திலே தேடினால் கிடைக்குமா?'' என்று கேட்டார் கரையிலிருந்த பரவையார்.

சுந்தரர் உள்ளம் வேதனை அடைந்தது. எம்பெருமானைத் தியானித்தார்.

---

1 கானாட்டாம்புலியூர் - சிதம்பரத்துக்குத் தென்மேற்கே பதினாறுமைல்.

''பெருமானே, முதுகுன்றத்திலே நீ அளித்த பொன்னை உன் வார்த்தைப்படி மணிமுத்தாநதியிலே இட்டு வந்தேனே. கமலாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தாயே. இப்போது என்னைக் கைவிட்டு விட்டாயே!'' என்று கண்ணீர் விட்டுக் கதறினார்.

அவர் உள்ளத்திலிருந்து 'பொன் செய்த மேனியினீர்' என்ற பதிகம் பீறிட்டெழுந்தது. எட்டு செய்யுள் முடிந்து ஒன்பதாவது செய்யுளைத் தொடங்கியபோது இறைவன் அருளால் கமலாலயத்தின் அடியிலிருந்து பொற் கிழி எழுந்தது. சுந்தரர் அளவில்லா ஆனந்தம் கொண்டவராய் பதிகத்தை முடித்து பொற்கிழியை எடுத்துக்கொண்டு கரைக்கு வந்து பரவையாரிடம் தந்தார்.

ஆவலோடு பொற்கிழியை வாங்கிக் கொண்ட பரவையார் அதனுள்ளிருந்து ஒரு காசை எடுத்து உரைத்தார். மாற்றுக் குறைவான காசு அது.

''என்னங்க இது?...'' என்று சுந்தரரிடம் அதைக் காண்பித்தார்.

''ஐயனே, இன்னும் என்ன சோதனை? மாற்று உறைத்துப் பார்த்த பின்னரே நதியிலிட்டிருக்க இப்படி மாற்றுக் குறைவான பொன்னை அளித்தீரே?'' என்று இறைவனை வேண்டினார்.

இறைவன் அருள் பாலிக்கவே பொற்கிழியிலிருந்த பொன் அனைத்தும் மாற்று குறையாமல் விளங்கியது. எம்பெருமான் கருணையை வியந்து பாராட்டிய பரவையார் சுந்தரரோடு ஆலயம் சென்று ஈசனை வழிபட்டு மாளிகை திரும்பினார்.

94. கட்டுச் சோறும் இட்ட சோறும்

பரவையார் மாளிகையில் தங்கி வந்த சுந்தரரை ஈசன் கிளப்பினார். அவர் பூவுலக வாசத்திற்கான காரியங்களில் ஒன்று முடிந்து விட்டது. மற்றொன்று நிறைவேற வேண்டாமா?

சுந்தரர் உள்ளத்திலே மறுபடியும் எம்பெருமான் இருப்பிடம் கொண்டுள்ள சிவாலயங்கள் தோறும் சென்று தரிசிக்க வேண்டுமென்று விருப்பம் உண்டாயிற்று. தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசித்து வருவதாகக் கூறிப் பரவையாரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

ஆரூரை விட்டுப் பிரயாணப்பட்ட சுந்தரர் திருநள்ளாறு அடைந்து நள்ளாரப்பரைத் தரிசித்தார். பின் அங்கிருந்து

சென்று திருக்கடவூர் மயானம், திருக்கடவூர் வீரட்டானம் ஆகிய பதிகளில் தரிசித்துக் கொண்டு புறப்பட்டார். பின்னர் திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிப்பள்ளி, திருச் செம்பொன்பள்ளி, திருநின்றியூர் ஆகிய பதிகளைத் தரிசித்துக் கொண்டு செல்கையில் திருநீடூர் செல்லாது மேலே பிரயாணப் பட்டார். இறைவன் சுந்தரர் உள்ளத்திலே அதை உணர்த்த, சுந்தரர் பெரிதும் மனம் வருந்தி திருநீடூர் சென்று எம்பெரு மானை வழிபட்டுப் பின் பிரயணத்தைத் தொடர்ந்தார்.

திருநீடூர் விட்டுப் புறப்பட்ட சுந்தரர் திருப்புன்கூர் சென்று தரிசனம் முடித்துக் கொண்டு திருக்கோலக்கா அடைந் தார். சம்பந்தப் பெருமானுக்குத் திருத்தாளம் அளித்த பரமனைப் பணிந்து பாடிப் புறப்பட்ட சுந்தரர் காழி நகரை வலம் வந்து வணங்கி திருக்குருக்காவூர் நோக்கிப் பிரயாணமானார்.

சுந்தரர் மிகவும் களைத்துப் பசியுடனிருந்தார். தோழ ருடைய நிலை அறிந்த தம்பிரான் உதவிக்கு ஓடி வந்தார். பாதை யில் ஓரிடத்தில் பந்தல் ஒன்றை நிர்மாணித்து அதனடியில் கட் டுச் சோறுடன் அந்தணராகக் காத்திருந்தார். களைப்பு மேலிட நடந்து வந்த சுந்தரர் வழியில் தென்பட்ட பந்தலைக் கண்டதும் அதனடியில் சற்று தங்கி இளைப்பாறி மேலே பயணப்படலா மென எண்ணி தொண்டருடன் அங்கே தங்கினார்.

அந்தணராகக் காத்திருந்த இறைவன் சுந்தரரிடம் வந்தார். "ஐயனே, உன்னைப் பார்த்தால் மிகவும் களைத்துப் போயிருப்ப தாகத் தெரிகிறது. என்னிடம் சிறிதே உணவு இருக்கிறது. தருகிறேன். அதைச் சாப்பிட்டு இளைப்பாறுகிறாயா?" என்று கேட்டார்.

"சுவாமி, தங்கள் விருப்பம் போல் செய்வோம்" என்றார் சுந்தரர்.

இறைவன் தம்மிடமிருந்த கட்டுச் சோறை எடுத்து சுந்தரர் கைகளில் கொடுத்தார். அதைப் பெற்று அவரும் தம்முடன் வந்திருந்த தொண்டருக்கும் கொடுத்துத் தாமும் புசித்தார். பசி நீங்கியது. அப்பந்தல் நிழலிலே படுத்துச் சிறிது நேரம் கண் ணயர்ந்தார் சுந்தரர். அவருடன் வந்திருந்த தொண்டரும் நித்திரையிலாழ்ந்தார்.

இறைவன் வந்த வேலை முடிந்து விட்டது. பக்தன் பசி தீர ஓடிவந்தார்; வந்த காரியம் முடிந்து சுந்தரர் களைப்பு நீங்கி உறக்கத்திலிருப்பதைக் கண்டதும் அவர் திருப்தி அடைந்தவ ராய் அங்கிருந்து மறைந்தார். அவரோடு தோற்றுவித்த பந்த லும் மறைந்தது.

சுரீலென்று வெய்யல் அடிப்பதை உணர்ந்து சுந்தரர் திடுக்கிட்டுக் கண் விழித்தார். பந்தலேயோ, உணவு அளித்த அந்தணரையோ காணவில்லை. களைப்பு மேலிட்டிருப்பதை உணர்ந்து இறைவனே அந்தணராக வந்து அமுது அளித்ததை அப்போதுதான் அறிந்தார் சுந்தரர் கண்கள் பக்திப் பிரவாகத்தைப் பெருக்கின. 'இத்தனை யாமாற்றையறிந்திலே னெம்பெருமான்' என்று தொடங்கும் பாசுரம் பாடி குருகாவூர் அமர்ந்தருளும் குழகனுரைப் பணிந்தார்.

பின்னர் சுந்தரர் திருக்குருகாவூரை அடைந்து கட்டுச்சோறு அளித்த கங்காதரரைத் தரிசித்து உள்ளம் கனிய பாடி வணங்கினுர். அங்கிருந்து புறப்பட்டு திருக்கழிப்பாலை முதலான பதிகள் சென்று எம்பெருமானை வழிபட்டுத் தில்லை சேர்ந்தார்.

தில்லை வழிபாட்டை முடித்துக் கொண்டு கிளம்பிய தம்பிரான் தோழர் திருத்தினை நகர் சென்று சிவக்கொழுந்தரைப் பணிந்து புறப்பட்டு நாவலூர் போய்ச் சேர்ந்தார். பெருமான் ஆட்கொண்ட அடியாருக்குத் தொண்டர்கள் திரண்டெழுந்து கோலாகலமான வரவேற்பு அளித்துக் கௌரவித்தனர். சில நாட்கள் அவ்வூரிலே தங்கிய பின்னர் சுந்தரர் புறப்பட்டுத் தொண்டை நாட்டிலே புகுந்து அனேக திருப்பதிகளைத் தரிசித்துக் கொண்டு திருக்கழுக்குன்றம் சென்று அடைந்தார்.

குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் வேதகிரீசுவரரைத் தரிசித்து மனம் மகிழ்ந்த சுந்தரர் அங்கிருந்து காஞ்சி செல்லும் வழியில் திருக்கச்சூர் சேர்ந்தார்.

திருக்கச்சூரை அவர் அடையும்போது உச்சி வேளையாகி விட்டது. அவருடன் வந்திருந்த சமையற்காரர்கள் முன்னதாகவே திருக்கச்சூரை அடைந்து அடியார்க்குத் திருவமுது தயார் செய்து வைக்குமாறு அனுப்பப்பட்டிருந்தனர். சுந்தரர் வழியில் இரண்டொரு சிவாலயங்களுக்குச் சென்று தரிசனம் முடித்துக் கொண்டு திருக்கச்சூர் வந்து சேருவதாகக் கூறியிருந்தார். அவ்வாறே தரிசனத்தை முடித்துக் கொண்டு கச்சூரை அடைந்தார் சுந்தரர். ஆலயத்துள் சென்று எம்பெருமானைத் தரிசித்துக் கொண்டு வெளிப்பட்டார்.

ஏற்பாடு செய்திருந்தபடி சமையல்காரர்கள் வந்து சேரவில்லை. என்ன காரணத்தாலோ அவர்கள் வருகை, வழியிலே தடைப்பட்டு விட்டது. சுந்தரருக்குப் பசி தாங்கவில்லை. காலையிலிருந்து வழி நடந்த களைப்பு வேறு. சோர்ந்து போய் ஆலயத்தில் சுவர் அருகே மர நிழலில் அமர்ந்து கொண்டார்.

பசியால் வாடிப்போயிருக்கும் பக்தனின் முகத்தைக் காணப் பொறுக்காத கருணாகரர் ஒரு வேதியராக வேடம் கொண்டு ஆலயத்தின் பக்கமிருந்து வெளிப்பட்டார். சுந்தரரை நெருங்கி, ''சுவாமி, தாங்கள் யார்?'' என்று கேட்டார்.

''ஐயனே, எனக்கு அயலூர். க்ஷேத்திராடனமாகப் புறப் பட்டு வந்தேன்'' என்றார் சுந்தரர்.

''உங்களைப் பார்த்தால் பசியோடு களைத்திருப்பதாகத் தெரிகிறது. போஜனம் ஆகவில்லையோ?'' என்று கேட்டார் அவர்.

''இல்லை. என்னோடு வந்த சமையல்காரர்கள் நான் வருவ தற்கு முன்னதாகவே இங்கு வந்து சாப்பாடு தயாரித்திருக்க வேண்டும். திருக்கழுக்குன்றத்திலிருந்து புறப்பட்டோம். நான் திருவடிசூலம் சென்று வந்தேன். அவர்கள் என்ன காரணத் தாலோ வந்து சேரவில்லை'' என்றார் சுந்தரர்.

''சுவாமி, இங்கேயே இருங்கள். ஒருநொடியில் அக்கிரகாரம் சென்று அமுது கேட்டு வாங்கி வருகிறேன்'' என்று சொல்லி ஓட்டமும் நடையுமாக அக்கிரகாரத்துக்குச் சென்றார். அங்கு நாலைந்து வீடுகளில் அடியார்க்கு அமுது வேண்டுமெனக் கேட்டுப் பெற்று ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு வந்தார். தேவாமிர்தமென அமுதைச் சாப்பிட்டுக் களைதீர்ந்த சுந்தரர் எழுந்து சென்று கைகளைக் கழுவிக்கொண்டு திரும்பினார்.

அங்கே வேதியரைக் காணவில்லை. அவர் எடுத்து வந்த பாத்திரமோ இலையோ எதையுமே காணவில்லை. சுந்தரர் உள் ளம் நெகிழ்ந்து விட்டது. ஆலயத்துக்குள் ஓடினார்.

''ஐயனே, அன்று குருக்காவூரிலே பசி போக்கிய நீ இன் றும் என் பசி போக்கினையோ! உன் கருணையை நான் எவ்வாறு பாராட்டுவது?'' என்று நீர் மல்க விழுந்து பணிந்தார். 'முது வாயோரிசுதற' என்ற திருப்பதிகம் பாடி மகிழ்ந்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் தொண்டரும் சமையல்காரர் களும் வந்து சேர்ந்தனர். அன்று அவ்வூரிலே தங்கிவிட்டு மறு நாள் காஞ்சி நோக்கிப் பயணமானார்.

95. மகிழடி சபதம்

காஞ்சியை அடைந்த சுந்தரர் ஏகாம்பரேசுவரரைத் தரிசித் தார். காஞ்சியிலே இரண்டொரு நாட்கள் தங்கி காமக்கோட்டம், திருமேற்றளி, ஓணகாந்தன்தளி, அனேகதங்காபதம் ஆகிய ஆலயங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டார். பின்னர்

அங்கிருந்து புறப்பட்டு பனங்காட்டூர், திருவல்லம் ஆகிய தலங்களிலும் வழிபட்டுத் திருக்காளத்தி சேர்ந்தார். மலையை வணங்கிப் பின் படியேறிச் சென்று இறைவனைத் தொழுதார். கண் கொடுத்து வலப்பாகம் பெற்ற கண்ணப்பரைத் தரிசித்தார். காளத்தியில் இருந்தபோது மனக்கண்ணாலேயே திருப்பருப்பதம், திருக்கேதாரம் ஆகிய தலங்களைத் தரிசித்துப் பாடி மகிழ்ந்தார். பின்னர் காளத்தியை விட்டுப் புறப்பட்டு வழியிலுள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஒற்றியூரை அடைந்தார். அவ்வூரிலே உள்ள திருமடம் ஒன்றிலே தங்கி சுந்தரர் தினமும் ஆலயம் சென்று ஒற்றியூர் உடையாரைத் தரிசித்து வந்தார்.

ஒரு நாள் சுந்தரர் ஆலயத்தில் அடியார்கள் செய்யும் தொண்டினைக்கண்டு பாராட்டி வரும்போது மலர் மண்டபத்தை அடைந்தார் எம்பெருமானுக்குச் சூட்ட வாசமுள்ள மலர்களை மாலையாகத் தொடுத்து எடுத்துக்கொண்டு திரையை விலக்கி வெளிப்பட்ட பெண்ணைக் கண்டார். சுந்தரர் வருவதை அந்தப் பெண் கவனிக்கவில்லை. திரையை விலக்கி 'மடமட'வென்று படிகளில் இறங்கி வந்துவிட்டாள். நேருக்கு நேர் ஒருவரையொருவர் நெருங்கியபோதுதான் அவள் சுந்தரரைக் கண்டாள். தான் எடுத்து வந்த மாலையை அர்ச்சகரிடம் கொடுத்துவிட்டு இமைப்பதற்குள் மண்டபத்துக்குள் ஓடிவிட்டாள்.

தரிசனம் முடித்துக்கொண்டு மடத்துக்கு வந்து சேர்ந்த சுந்தரர் உள்ளம் ஒரு நிலையிலில்லாது குழம்பியது. எழில் வாய்ந்த அப்பெண்ணின் முகம் அவர் நினைவுத் திரையிலே அடிக்கடி தோன்றி மறைந்தது.

ஆலயத்திலிருந்து தம்மைக் காண வந்தவரிடம் மலர் மண்டபத்திலே திரை மறைவில் இருக்கும் பெண்ணைப் பற்றிக் கேட்டார். அவர் தெரிவித்த விவரம் இது.

ஞாயிறுகிழார் என்பவருடைய புத்திரியான அப்பெண்ணின் பெயர் சங்கிலி என்பதாகும். ஊரின் எல்லையை ஒட்டியதான ஞாயிறு என்னும் ஊரிலே இருந்து வந்தனர் அவர்கள். சங்கிலி திருமணப் பருவம் அடைந்ததும் அவளை யாருக்குத் திருமணம் செய்து கொடுப்பது என்பது பற்றி பேச்சு நடந்தது. இறைவன் திருவருள் பெற்ற ஒருவருக்காகத் தான் இருக்கையில் அவர்கள் பொருத்தமில்லாது பேசுகின்றனரே என நினைத்தாள் சங்கிலி. அப்போதே மயங்கி விழுந்துவிட்டாள். கிழாரும் அவர் மனைவியும் ஓடி வந்து மகளின் மூர்ச்சையைத் தெளிவித்து, "என்னம்மா நடந்தது? ஏன் மயக்கம் போட்டு விழுந்தாய்?" எனக் கேட்டனர்.

''அம்மா, ஈசன் திருவருள் பெற்ற ஒருவருக்கு நான் உரிமையானவள். திருமணத்தைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் அவ்வாறுதான் என் உள்ளம் உணர்த்துகிறது. ஆகவே என்னைத் திருமணத்துக்கு வற்புறுத்தாதீர்கள். திருவொற்றியூர் சென்று எம்பெருமான் தொண்டிலே ஈடுபட விரும்புகிறேன். அனுமதி கொடுங்கள்'' என்ருர்.

கிழாரும் அவர் மனைவியும் பெண்ணின் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. அசட்டுத்தனமாகப் பேசவேண்டாமென அவளைக் கண்டித்தனர்.

இவ்வாறு இருக்கும்போது அவர்கள் குடியிலேயே பிறந்த ஒருவன் சங்கிலியை மணம்பேச பெற்ருேர்களை அனுப்பி வைத்தான். அவர்கள் கிழார் வீட்டுக்கு வந்து திருமணப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு வீடு திரும்பினர். அவர்கள் வீடு திரும்பியபோது அந்தப் பையன் இறந்து கிடக்கக் கண்டனர்.

அந்தச் சம்பவம் கிழாரை உலுக்கிவிட்டது. அப்போதுதான் பெண்ணின் வார்த்தைகளை பூரணமாக உணர்ந்தார். அதற்கு மேல் வீம்பாக நடக்க அவர் விரும்பவில்லை. பெண்ணின் விருப்பப்படியே திருவொற்றியூர் ஆலயத்துக்கருகே கன்னிமாடம் ஒன்று கட்டி அதில் தகுந்த காவலுடன் பெண்ணைத் தங்கச் செய்துவிட்டார். சங்கிலியார் தினமும் ஆலயம் சென்று இறைவனுக்குத் திருமாலை கட்டும் பணியில் ஈடுபட்டு வந்தாள்.

சங்கிலியாரின் வரலாற்றைக் கேட்ட சுந்தரர் உள்ளம் அவளை அடையவேண்டும் எனத் துடித்தது. இரு பெண்களின் காரணமாக அவர் கைலாயத்தை விட்டுப் பூலோகம் வர நேர்ந்தது. ஒருத்தி பரவையார்; மற்ருெருத்தி சங்கிலியார்.

இறைவன் திருஅருள் பெற்ற ஒருவருக்கு உரியவள் என சங்கிலியார் உள்ளம் அலைமோதுவது அவரைக் குறித்துத் தானு?

அன்றிரவு இறைவன் தரிசனத்துக்குச் சென்ற சுந்தரர் சந்நிதானத்திலே நின்று தம் உள்ளக் கிடக்கையை எம்பெருமானிடம் முறையிட்டார்.

''ஐயனே, என் உள்ளத்தில் சலனத்தைத் தோற்றுவித்து விட்டாய். என் பொருட்டு சங்கிலியார் காத்திருப்பதாகவே நான் உணருகிறேன். இல்லையேல் அன்று தடுத்தாட்கொண்ட நீ இன்று அவளைக் காணும் சந்தர்ப்பத்தை உண்டாக்கித் தருவானேன்? சங்கிலி இல்லாது என்ருல் உயிர் வாழ முடியாத ஒரு வேதனையை உள்ளத்தில் தோற்றுவித்து விட்டாயே.

என்ருல் அவ்வேதனையைத் தாள முடியவில்லை. சங்கிலியாரை எனக்குக் கொடு'' என்று வேண்டினுர்.

சங்கிலியார் திருமணம் நிகழத்தானே ஈசன் சுந்தரரை ஆரூரிலிருந்து ஒற்றியூருக்கு வரவழைத்தது!

''சுந்தரா, உன் எண்ணத்தை நாம் நிறைவேற்றி வைக்கிரேம்'' என்று ஆறுதல் அளித்தார் இறைவன்.

அன்றிரவு சங்கிலியார் நித்திரையிலே தோன்றினுர் இறைவன். ''சங்கிலி, நம்முடைய பேரன்புக்குப் பாத்திரமாகி நம் தோழனுன நம்பி ஆரூரன் உன்னை அடைய விரும்புகிருன். நீங்கள் இருவரும் ஒன்று சேர்வது நமக்கும் விருப்பமே. அதற்கு நீ சம்மதிக்க வேண்டும்'' என்று கேட்டார்.

சங்கிலி இறைவன் விருப்பத்தைக் கேட்டுப் பரவசம் அடைந்தாள். அவரை வலம் வந்து வணங்கி, ''ஐயனே, என் பால் கொண்டுள்ள அன்பு காரணமாக என்னை எப்படிக் கட்டளையிட்டாலும் உடன்படுகிறேன். இருந்தாலும் ஒரு விஷயம். தங்களுக்குத் தெரியாததல்ல. நம்பிஆரூரர் ஏற்கனவே பரவையாரை மணந்தவர் அன்ருே!'' என்ருள்.

''சங்கிலி, கவலைப்படாதே. உன்னைப் பிரிந்து செல்வதில்லை எனச் சபதம் செய்து கொடுக்குமாறு ஆரூரனிடம் சொல்கிறேன்'' என்று சொல்லி மறைந்த ஈசன் சுந்தரரிடம் வந்தார்.

''ஆரூரா, உன்னை மணக்கச் சங்கிலி சம்மதித்துவிட்டாள். ஆனுல் என் முன்னிலையில் நீ அவளை விட்டுப் பிரிவதில்லை என்று சபதம் செய்து தருமாறு கேட்கிருள்'' என்ருர்.

உள்ளத்து வேதனையைப் போக்கி நிம்மதி அளிக்கக் கூடிய வார்த்தைகளைக் கேட்டபோது நம்பிஆரூரர் ஆனந்தம் கொண்டார். இறைவன் கருணையைப் போற்றிப் புகழ்ந்தார். ஆனுல் திருப்பதிகள் தோறும் சென்று எம்பெருமான் திவ்விய கோலங்களைத் தரிசிக்காது எவ்வாறு திருவொற்றியூரிலேயே இருப்பது?

''சுவாமி, தாங்கள் சொல்வதுபோல் சபதம் செய்ய நான் சம்மதிக்கிறேன். ஊர் ஊராகச் சென்று உம்மைத் தரிசிக்காது என்ருல் இருக்க முடியாது. சங்கிலியாருடன் சந்நிதானத்துக்கு நான் வரும்போது தாங்கள் சந்நிதியிலிருந்து விலகி மகிழ மரத்தடியில் சற்று நேரம் இருக்க வேண்டும். இதை மறுக்கக் கூடாது'' என்று வேண்டினுர் சுந்தரர்.

இறைவன் சிரித்தபடியே அதற்கிணங்கிப் புறப்பட்டார். அவர் ஆலயம் செல்லவில்லை. நேராகச் சங்கிலியாரிடம் சென்றார்.

''சங்கிலி, நாளை நீ ஆரூரன் சபதம் செய்து தருவதை சந்நிதானத்தில் வேண்டாமென்றும், மகிழ மரத்தடியிலே செய்து கொடுத்தால் போதும் எனச் சொல்லிவிடு'' என்று கூறி மறைந்தார்.

மறுநாள் விடிந்ததும் சுந்தரர் தம் அடியாருடன் ஆலயம் சென்று சங்கிலியாரார் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார். வழக்கம் போல விடியற்காலையில் நீராடி, புத்தாடை அணிந்து தோழியருடன் நந்தவனம் சென்று இனிய நறுமணமுள்ள மலர்களைக் கொய்து எடுத்துக்கொண்டு பூமண்டபம் வந்தாள் சங்கிலியார்.

அவரை நெருங்கிய சுந்தரர், ''பெண்ணே, நேற்று உன்னைக் கண்டது முதல் என் உள்ளம் உன் வசமாகிவிட்டது. நீயின்றி உயிர் வாழ்வது இயலாத நிலையில் தவிக்கிறேன். நான் வழிபடும் எம்பெருமானும் என் விருப்பத்துக்கு இணக்கம் தெரிவித்து விட்டார்'' என்றார்.

சங்கிலியார் நாணத்தால் தலைகவிழ ஒன்றும் பேசாது சிறிது நேரம் நின்றுவிட்டுத் திருக்கோயிலுள் சென்றாள். அவளைப் பின் தொடர்ந்து சென்ற சுந்தரர், ''பெண்ணே, இதற்கு நீயும் சம்மதித்து விட்டதாக ஈசன் தெரிவித்தார். என்னுடன் சந்நிதிக்கு வா, 'உன்னைப் பிரிவதில்லை' எனச் சத்தியம் செய்து கொடுக்குமாறு இறைவன் எனக்குக் கட்டளையிட்டுள்ளார்'' என்றார்.

சங்கிலியார் தலையை நிமிர்த்தி சுந்தரரைப் பார்த்தாள்.

''சுவாமி, தங்கள் வார்த்தையில் நான் நம்பிக்கை கொள்ளாவிடில் அல்லவோ எம்பெருமான் முன்பு உங்களைச் சத்தியம் செய்து தருமாறு கேட்பேன். சாதாரணமாகச் சத்தியம் செய்து கொடுத்தால் போதுமானதே!'' என்றாள்.

''சரி, வேறு எங்கு உனக்குச் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்.''

''வாருங்கள் மகிழ மரத்தடிக்குச் செல்வோம். அதன் குளிர்ந்த நிழலில் நம் மனம் குளிர தாங்கள் சத்தியம் செய்து கொடுத்தால் போதும்'' என்றாள் சங்கிலியார்.

சுந்தரர் திடுக்கிட்டார். மகிழ மரத்தடியிலல்லவோ இறைவன் இருக்கிறார்!

அப்போது மறுத்துப் பேசுவதால் என்ன பயன்? வார்த்தை மாறுவதாக ஆவதோடு இதில் ஏதோ மர்மம் இருப்பதாக அல்லவா சங்கிலியாரை நினைக்கத் தூண்டும்!

வேறு வழியின்றி சங்கிலியாரை மகிழ மரத்தடிக்கு அழைத்து வந்த சுந்தரர் இறைவன் சாட்சியாக அங்கே இருந்த மரத்தை மும்முறை வலம் வந்து அவளைப் பிரிவதில்லை எனச் சத்தியம் செய்து கொடுத்தார். சங்கிலியார் அவரை வணங்கி விடைபெற்று பூமண்டபம் சேர்ந்தார். சுந்தரர் ஆலயம் சென்று எம்பெருமானை வழிபட்டுத் திருமடம் திரும்பித் தங்கினார்.

அன்றிரவே இறைவன் தம் அடியார்கள் கனவில் தோன்றி சுந்தரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணம் செய்து வைக்குமாறு கட்டளையிட்டார்.

பொழுது புலர்ந்ததும் அடியார்கள் சொல்லொண்ணு மகிழ்ச்சியுடன் ஒன்று கூடி இறைவன் திருவாக்குப்படி விமரிசையாக இருவருக்கும் திருமணம் செய்து வைத்தனர். சுந்தரர் சங்கிலியாரோடு அவள் மாளிகையில் மகிழ்ச்சியோடு இருந்து வரலானார்.

96. ஒளியிழந்த கண்கள்

நாட்கள் பல நகர்ந்தன. சுந்தரர் சங்கிலியாருடன் இனிது வாழ்க்கை நடத்தி வந்தார். தினமும் இருவரும் காலையிலும் மாலையிலும் ஆலயம் சென்று எம்பெருமானை வழிபட்டு வந்தனர். அவர்கள் மகிழ்ச்சியைக் கண்டு அனைவரும் போற்றிக் கொண்டாடினர்.

சுந்தரர் வாழ்க்கை ஒரே கதியில் சென்று கொண்டிருப்பதை இறைவன் விரும்பவில்லை. ஆரூரிலே தியாகேசருக்கு வசந்த உற்சவம் நெருங்கி வருவதை ஆரூரர் மனத்திலே நினைவூட்டினார்.

ஆரூர் நினைப்பு வந்ததுமே சுந்தரருக்குத் தியாகேசரைத் தரிசிக்க ஆவல் உண்டாயிற்று. சங்கிலியாரை விட்டு எவ்வாறு செல்வது? அவளைப் பிரிவதில்லை என சபதம் செய்திருக்கிறாரே? சங்கிலியாரை உடன் அழைத்துச் செல்வதாக இருந்தால் பரவையார் அவளைத் தன்னுடன் இருக்க அனுமதிக்க மாட்டாளே! இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவித்தார் சுந்தரர். நாட்கள் நகர நகர அவருக்குத் திருவாரூர் போகவேண்டும் என்ற ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கிருந்தால் பித்துப் பிடித்துவிடும் போலிருந்தது.

மூரு நாள அவர் துணிந்து புறப்பட்டு விட்டார். தியாகேசரைப் பாராமல் இருப்பதில்லை என்ற முடிவோடு தொண்டர் பின்தொடர ஆலயம் சென்று இறைவனை வழிபட்டுக் கிளம்பினார். திருவொற்றியூர் எல்லையைத் தாண்டியதுமே சுந்தரருக்குத் தலைசுற்றியது. கண்கள் இருண்டன. மயங்கி விழுந்து விட்டார். தொண்டர்கள் அவரைத் தூக்கி ஆசுவாசப்படுத்தினர். நினைவு வரப்பெற்று எழுந்த சுந்தரருக்கு உலகமே இருண்டு விட்டதுபோல் தோன்றியது. அவர் கண்கள் இரண்டும் ஒளியிழந்து விட்டன.

திடுக்கிட்டுப் பதைபதைத்தார். மகிழடியிலே எம்பெருமான் முன்பு சங்கிலியாரைப் பிரிவதில்லை என அவர் செய்திருந்த சபதத்திலிருந்து வழுவியதற்கு இறைவன் அளித்த தண்டனையா?

ஒளியிழந்த கண்கள் நீரைப் பெருக்கத் திருஒற்றியூர் ஆலயம் உள்ள திக்கை நோக்கிக் கரம் கூப்பினார்.

''இறைவனே, என்னைத் தண்டிக்காதே! கண்ணைக் கொடு. சங்கிலியை உதறவேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. ஆரூரிலே உமது திருக்கோலத்தைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்ற ஆருக் காதலே என்னைக் கிளம்பச் செய்தது. உன்னைக் காண ஒளி கொடு'' என்று கதறினார். 'அழுக்குமெய் கொடுன் திருவடி யடைந்தேன்' என்ற பதிகம் பாடி இறைவனைக் கெஞ்சினார்.

இறைவனோ கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லை.

''எம்பெருமானே, என் கண்களைத்தானே பிடுங்கினாய். உள்ளம் இருக்கிறதல்லவா! திருவாரூர் போகாது திரும்புவதில்லை'' என்று உறுதி கொண்டார்.

அடியார்கள் கையைப் பிடித்து அழைத்துச் செல்ல பிரயாணத்தை மேற்கொண்டார். திருமுல்லைவாயில் சென்று ஈசனைத் தொழுது பாடி திருவேற்காடு போய்ச் சேர்ந்தார். அவ்வூரில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைப் பணிந்து 'பிழையுளன பொறுத்திடுவர்' என்னும் திருப்பதிகம் பாடி தம்மை மன்னித்து அருருளுமாறு வேண்டினார்.

சுந்தரர் பட்டு வரும் வேதனையைக் கண்ட எம்பெருமான் அவருக்குச் சிறிது கருணை காட்ட விரும்பி ஊன்றுகோல் ஒன்றை அளித்தார். அதன் உதவியால் பிரயாணப் பட்டு திரு ஆலங்காடு சென்று தொழுது காஞ்சியை அடைந்தார். அன்னையின் அணைப்பிலே கட்டுண்ட கருணாகரனை மனம் கனிந்து உருக வேண்டினார்.

'இறைவா, உன் தரிசனம் பொருட்டே நான் வார்த்தை தவற நேர்ந்தது. என் பிழையைப் பொறுத்து மன்னிப்பு அளிக்கமாட்டாயா? உன் திருக்கோலத்தைக் கண்டு களிக்க பார்வை தரமாட்டாயா? அன்று நல்லூர்த் திருமணத்திலே என்மீது கொண்ட இரக்கத்தால் என்னைத் தடுத்தாட் கொண்டாயே. இன்று அந்த இரக்கம் எங்கு போய்விட்டது? உன்னைப் பார்க்கத் துடிக்கும் என் உணர்வை நீ அறிய வில்லையா?'' என்று பலவாறு கதறி அழுதார்.

மங்கைபாகர் மனம் கொஞ்சம் இளகியது போலும். ஆரூரருக்கு இடக்கண் பார்வையை அளித்தார்.

சுந்தரர் உள்ளம் களிகூர இறைவனை ஒரு கண்ணால் தரிசித்து **'ஆலந்தானுகந்தமுது செய்தானை'** என்ற பதிகம் பாடினார்.

காஞ்சியை விட்டுப் புறப்பட்ட சுந்தரர் எங்கும் அதிகம் தங்கவில்லை 'தியாகேசப் பெருமானை என்று காண்பேன்?' என்ற ஆர்வத்தோடு இரவு பகல் எனப் பாராமல் பிரயாணப் பட்டார். அங்கங்கே உணவருந்தவும் இளைப்பாறவும் அவகாசம் எடுத்துக் கொண்டது போக வழியில் எதிர்ப்பட்ட ஸ்தலங்களில் நுழைந்து எம்பெருமானைத் தரிசித்துக் கொண்டு ஆரூருக்கு விரைந்தார்.

திரு ஆமாத்தூர், திரு அரத்துறை ஆகிய பதிகளைத் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறை சேர்ந்தார். மற்றொரு கண்ணையும் தந்தருள வேண்டுமென இறைவனை இறைஞ்சி **'கங்கைவார் சடையாய்'** என்னும் பதிகம் பாடினார். பின் அங்கிருந்து திருத்துருத்தியை அடைந்தார். தம்மை வறுத்தி வரும் பிணியைப் போக்கி அருள வேண்டும் எனக் கெஞ்சினார். ஆலயத்தில் வடபாலுள்ள தீர்த்தத்தில் நீராடுமாறு இறைவன் தம் தோழருக்கு அனுக்கிரகித்தார். சுந்தரரும் அவ்வாறே திருக்குளத்தில் நீராடி எழுந்து இறைவனை வணங்கிய போது அவர் உடலில் ஏற்பட்டிருந்த தளர்ச்சி நீங்கப் பெற்று புதிய பொலிவுடன் விளங்கலானார்.

சுந்தரர் எம்பெருமானைத் தொழுது **'மின்னுமா மேகங்கள்'** என்னும் பதிகம் பாடிப் பணிந்து புறப்பட்டு வழியிலுள்ள பதிகளைத் தரிசித்துக் கொண்டு மாலை நேரத்தில் ஆரூர் சென்றடைந்தார். நேராக ஆலயம் செல்லாது கீழை வீதியிலுள்ள தூவாயரைத் தரிசிக்க விரும்பி அவ்வாலயம் சென்று இறைவனைத் தரிசித்துத் தமக்கு வலக்கண்ணையும் அளித்து உதவும்படி **'தூவாயா தொண்டு செய்வார்'** என்னும் பதிகம் பாடி அங்கேயே தங்கியிருந்தார்.

இதற்குள் சுந்தரர் திரும்பி விட்ட செய்தி நகரிலே பரவியது. அடியார்கள் பரவையுள் மண்டளி எனப்படும் அவ்வாலயத்தில் வந்து கூடினர். புற்றிடம்கொண்டாருக்கு அர்த்த சாம பூஜை தொடங்கியதும் சுந்தரர் அங்கிருந்து புறப்பட்டு எம்பெருமான் ஆலயத்துச்குச் சென்ருர். இறைவனை ஒரு கண்ணுல் தரிசித்தார்.

''ஐயனே, உன் திருக்கோலத்தை இரு கண்களால் எத்தனையோ காலம் கண்டாலும் என் உள்ளம் ஆருது. அவ்வாறிருக்க இடக் கண்ணுல் மட்டும் தரிசித்தால் போதுமா? இத்தனை நாள் என்னை வருத்தியதுபோதும். என்னுடைய வலக் கண்ணையும் அளித்து அருள் செய்'' என்று மனம் உருகி வேண்டினுர். **'மீளாவடிமை'** என்ற பதிகம் பாடினுர்.

அன்பனின் பக்திக்குக் கட்டுப்பட்ட ஆரூரர் சுந்தரர்க்கு வலக் கண்ணையும் அளித்து அனுக்கிரகித்தார்.

இறைவன் திருமேனியை இரு கண்களாலும் தரிசித்து மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த சுந்தரர் அப்பெருமானைப் பலவாறு பாடித்துதித்து மகிழ்ந்து தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார்.

97. தம்பிரான் சென்ற தூது

சுந்தரர் ஆரூர் திரும்பி விட்டார் என்ற செய்தி பரவையாருக்கும் எட்டியது. அச் செய்தியை அவர் உள்ளம் மகிழ்ச்சியோடு வரவேற்கவில்லை. ஒற்றியூரிலே நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் அவருக்கு முன்னமேயே எட்டியிருந்தன. தம்மை மறந்து இன்னொரு பெண்ணைச் சுந்தரர் மணந்தது அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவரிடம் வெறுப்பையே உண்டாக்கியது. அவரை இனி தம் மாளிகையில் அனுமதிப்பதில்லை என்று ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஆரூரை அடைந்ததும் சுந்தரர் அடியார்களுள் சிலர் அவர் வருகையை முன்னதாகவே மாளிகைக்கு அறிவித்தால் இரவு அமுது செய்யத் தகுந்த ஏற்பாடுகளைக் கவனிக்க முடியுமென பரவையாரின் மாளிகைக்குச் சென்ருர்கள்.

சுந்தரரிடமிருந்து அடியார்கள் வந்திருக்கின்றனர் என்று அறிந்த போது பரவையார் அவர்களை உள்ளே விட வேண்டாமென்று சொல்லி விட்டார். காவலரும் அவர்களைப் பார்க்க அம்மையார் விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கதவு சார்த்தி விட்டனர்.

அடியார்கள் வந்து தெரிவித்த போது சுந்தரர் பெரிதும் விசனமுற்ருர். பெரியோர்கள் சிலரை அழைத்துப் பரவையாரிடம் சென்று அவள் கொண்டிருககும் கோபத்தை ஆற்றித் திரும்புமாறு கேட்டார். அவர்களும் பரவையாரிடம் சென்றனர். பரவையார் அவர்களை வணங்கி ''பெரியோர்களே, தம்பிரான் தோழர் எனக்கிழைத்த குற்றம் சாமானியமானதல்ல. அவரைப் பற்றி இனி என்னிடம் பேசவேண்டாம். போய் வாருங்கள்'' என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

சுந்தரர் உள்ளம் அளவில்லா வேதனை கொண்டது. தேவாசிரியமண்டபத்தில் அமர்ந்தபடியே இறைவனை வேண்டினுர்.

''ஐயனே, எல்லா இடர்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றி வந்துள்ளாய் சங்கிலியார் மணம் குறித்து பரவையார் என்னிடம் விரோதம் பாராட்டுகிருள். சங்கிலியார் திருமணம் உன் விருப்பம் காரணமாகவே நிறைவேறியது என்பதை நான் நினைவுறுத்த வேண்டுமா? நீயே எனக்குக் கதி. பரவையாரின் கோபம் நீங்கி முன் போல் என்னிடம் அவள் அன்புகொள்ளச் செய்யவேண்டும்'' என்று வேண்டினுர்.

தோழனுக்கு உதவ எம்பிரான் வந்தார். அனைவரும் அயர்ந்து உறங்க வேதனையுடன் கண் கொட்டாது அமர்ந்திருக்கும் சுந்தரரிடம் வந்தார்.

''சுந்தரா, விசனப்படாதே இப்போதே உன் பொருட்டு நான் பரவையார் வீட்டுக்குத் தூது செல்கிறேன்'' என்ருர்.

சுந்தரர் முகமலர்ச்சியுடன் எழுந்து இறைவனைத் தொழுது, ''ஐயனே, என் பொருட்டுத் தூது சென்று வெற்றியோடு வாரும்'' என்று பிரார்த்தித்தார்.

தேவர்களும் முனிவர்களும் தம்மைப் பின் தொடர்ந்து வர பக்தருக்காக இறைவன் ஆரூர் வீதிகளில் செந்தாமரைப் பாதங்கள் தேய நடந்து சென்ருர். பரவையார் மாளிகையை அடைந்ததும் தம்முடன் வந்தவர்களை மறைத்து தாம் ஆலய அர்ச்சகராக வேடம் புனைந்து மாளிகைப் படியேறி கதவைத் தட்டினுர். உள்ளிருந்து ஆட்கள் வந்து கதவைத் திறந்தனர். எம்பெருமான் ஆலயத்து அர்ச்சகர் வந்திருப்பதைக் கண்டு ஓடிச் சென்று பரவையாரை எழுப்பி விஷயத்தைத் தெரிவித்தனர். அவரை உள்ளே அழைத்து வருமாறு சொன்னுர் பரவையார்.

அர்ச்சகரைக் கண்டதும் இரு கரங்களையும் கூப்பி அவரை வணங்கினுர் பரவையார்.

"சுவாமி, இந்த அகால வேளையில் என் வீடு தேடிவந்த காரணம் என்ன?" என்று கேட்டாள்.

"நான் கூறப் போவதை மறுக்காது ஏற்றுக்கொள்வதானால் சொல்கிறேன்" என்றார் இறைவன்.

"சுவாமி, என்னால் செய்யக் கூடிய காரியம் எனில் நான் மறுக்கமாட்டேன்" என்றாள் பரவையார்.

"நம்பி ஆரூரர் உன் நினைவாகத் துடித்துக் கொண்டிருக்கிறார். அவரை நீ ஏற்க வேண்டும்" என்றார் இறைவன்.

பரவையார் நகைத்தார்.

"சுவாமி, உங்கள் வார்த்தை விசித்திரமாக இருக்கிறது. சங்கிலியாரோடு சேர்ந்த பின் அவருக்கு என்னிடத்தில் என்ன உரிமையிருக்கிறது? இதற்காகவா நீங்கள் அகால வேளையில் புறப்பட்டு வந்தீர்கள்?" என்றாள்.

"பரவை, சுந்தரர் தவறு செய்திருக்கலாம். அதைப் பொருட்படுத்தக்கூடாது. இப்போது உன்னைத் தேடி வந்திருக்கிறார். அவரை நீ ஆதரிக்க வேண்டும். மறுக்கக் கூடாது" என்று கேட்டார்.

பரவையாரின் முகம் சிவந்தது.

"சுவாமி, தாங்கள் போய் வரலாம். இனியும் தாங்கள் இங்கிருப்பது சரியல்ல. உங்களிடம் நான் கொண்டிருக்கும் மதிப்பை இழக்க நேரிடலாம்" என்றாள்.

பகவான் சிரித்துக் கொண்டே எழுந்திருந்தார். அவரை வாயில் வரை கொண்டு வந்து விட்டுச் சென்றாள் பரவையார்.

ஆலயத்திலே சுந்தரர் தவித்துக் கொண்டிருந்தார். இறைவன் என்ன பதிலைக் கொண்டு வரப் போகிறாரோ என்று காத்துக் கொண்டிருந்தார். அவர் உள்ளத்தில் மற்றொரு வேதனையும் தோன்றாமலில்லை. ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் எட்டாத அப்பரம்பொருளை கேவலம் வேலைக்காரனைப்போல தூது அனுப்பினோமே என்று வேதனைப்பட்டார்.

எம்பெருமான் திரும்பியதும் மகிழ்ச்சி பொங்கி வழிய அவரிடம் ஓடினார்.

"சுவாமி, பரவையார் என்ன சொன்னாள்?" என்று ஆவலோடு கேட்டார்.

"சுந்தரா, பரவையார் நம் விருப்பத்துக்கு உடன்பட மறுத்து விட்டாள். நாம் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை" என்றார் ஈசன்.

சுந்தரர் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த மகிழ்ச்சி அடங்கி விட்டது. முகம் சோர்ந்து விட்டது.

''சுவாமி, பரவையார் தங்கள் வார்த்தையை ஏற்கவில்லை. நீங்கள் திரும்பி விட்டீர்கள். ம்... அன்று திரிபுராந்தகனை சம்கரித்தீர்களே. உங்கள் வார்த்தைகளை ஏற்கவில்லை என்று திரும்பிவிடவில்லை. மார்கண்டனை விட்டு விடும்படி உங்கள் வார்த்தையை ஏற்காத காலனை ஏன் உதைத்தீர்கள்?... இந்தச் சிறியேன் உங்களுக்கு ஒரு பொருட்டல்லவே... இதற்காகத் தான் அன்று என்னை தடுத்தாட் கொண்டீர்களோ? உங்கள் முயற்சியே பலிக்கவில்லை எனில் இனி வேறு முயற்சி எதுவுமே வேண்டாம். நான் உயிர் வாழ்வதிலும் பலன் இல்லை'' என்று வருத்தத்துடன் மண்டபத்துக்குத் திரும்பினுர்.

''சுந்தரா, வருத்தப்படாதே. இம்முறை எப்படியும் காரியத்தை முடித்துக் கொண்டு வருகிறேன்'' என்று மீண்டும் பரவையார் வீட்டுக்குப் புறப்பட்டார்.

இம்முறை அவர் மாறு வேடத்தில் செல்லவில்லை. வானவர்களும் முனிவர்களும் சூழ்ந்துவர திவ்விய மங்கள கோலத்தில் நடந்து சென்ருர்.

பரவையார் மாளிகையில் பரபரப்பு குடிகொண்டிருந்தது. அர்ச்சகராக வேடம் கொண்டு வந்து விட்டுப் போனது இறைவனே என்ற உணர்வு பரவையாருக்குத் தோன்றியது. கம்மென்ற நறுமணம் அவர் சென்ற சிறிது நேரம் வரை அவள் அறையில் வீசியது. மங்கல கீதங்கள் ஒலிக்கும் ஓசை அவள் காதுகளில் விழுந்தது. வீதியில் முனிவர்கள் வேதம் ஓதிச் செல்லும் ஓசை கேட்டது.

இறைவன் அருள் பெற்ற ஆரூரருக்காக இறைவனே தம்மிடம் வந்தாரோ?... அவரை உணராது தட்டிப் பேசி அனுப்பி விட்டோமே என்று வேதனை கொண்டிருந்தாள். அப்போது வெளியே இருந்து ''பரவை!...'' என்றொரு குரல் கேட்டது. சற்று முன்பு வந்து விட்டுச் சென்றவருடைய குரல்தான் அது!

பரவையார் ஓடிப் போய் கதவைத் திறந்தாள். அங்கே திவ்விய மங்கள ஜோதியான எம்பெருமான் திருக்கோலம் சாதித்தபடி நின்றிருந்தார். அவருக்குப் பின் தெருவிலே தேவர்களும் யோகிகளும் குழுமியிருந்தனர்.

பரவையார் எம்பெருமான் பாதங்களில் விழுந்து பணிந்தாள்.

"பரவை, ஆரூரனிடம் நீ கொண்டுள்ள கோபத்தை விடுத்து அவனை ஏற்கவேண்டும். உன்னை வற்புறுத்தவே நாம் மீண்டும் வந்தோம்" என்றார்.

"சுவாமி தாங்களே அவரிடம் அன்பு கொண்டுள்ளபோது அடியேன் எந்த வகையிலும் கோபம் காட்டுவது அழகல்ல!" என்றார்.

திருமுகம் மலர ஈசன் அங்கிருந்து புறப்பட்டு ஆரூரரிடம் சென்று பரவையார் கோபம் நீங்கி அவர் வரவை எதிர் நோக்கிக் காத்திருப்பதாகத் தெரிவித்தார். சுந்தரர் அளவற்ற மகிழ்ச்சியுடன் இறைவனைக் கொண்டாடி பலவகைகளிலும் துதித்தார். பின்னர் தம் அடியார்களை எழுப்பி அவர்களை அழைத்துக் கொண்டு பரவையார் மாளிகைக்குச் சென்றார். அவர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த பரவையார் சுந்தரர் வந்ததும் ஓடிவந்து எதிர்கொண்டு வரவேற்று கால்களை அலம்பி மலர்களால் அர்ச்சித்து உள்ளே அழைத்துச் சென்று உபசரித்தார். சுந்தரர் இழந்த மகிழ்ச்சியை அடைந்தவராய் பரவையாரோடு அவர் மாளிகையில் இனிது இருந்து வந்தார்.

98. கலையார் காட்டிய காட்சி

சுந்தரருக்கும் பரவையாருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கையும், சுந்தரர் வேண்டியதற்கிணங்க இறைவன் தூது சென்று அப்பூசலை நீக்கியதையும் பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவின. திருப்பெருமங்கலத்திலிருந்த சிவனடியார் ஏயர்கோன் கலிக்காமர் என்பவர் அதை அறிந்தபோது சுந்தரரிடம் பெரும் சீற்றம் கொண்டார். இறைவனைத் தூது அனுப்பி வேலை வாங்கிய அவரை வெறுத்தார். அவரைப் பார்த்தால் உயிரை வாங்கி விடுவதாகவும் தெரிவித்தார். இதைக் கேட்டபோது சுந்தரர் பெரிதும் வருந்தினர்.

இறைவன் கலிக்காமர் கொண்டிருந்த கோபத்தை நீக்க எண்ணம் கொண்டு அவருக்கு சூலைநோய் கொடுத்து அந்நோய் சுந்தரரால் மட்டுமே தீரக்கூடியதென்று அருளி சுந்தரரை அனுப்பினர். ஆரூரரைப் பார்க்க விரும்பாத கலிக்காமர் அவர் வருவதைக் கேள்வியுற்று தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிரை விட்டார். விஷயத்தை அறிந்தபோது சுந்தரர் விசனமுற்று தம்முடைய உயிரையும் மாய்த்துக் கொள்ள முயன்றார். இறைவன் திரு அருளால் கலிக்காமர் உயிர் பிழைத்தெழுந்து சுந்தரரிடம் விரோதம் பாராட்டினமைக்காக மன்னிப்புக் கேட்டு

அவரிடம் நட்புக் கொண்டார். பின் அவருடன் புறப்பட்டு திருப்புன்கூர் முதலான திருப்பதிகளைத் தரிசித்துக் கொண்டு ஆரூர் வந்தடைந்தார். கலிக்காமர் சுந்தரருடன் சில தினங்கள் ஆரூரில் தங்கி மனம் மகிழ்ந்து பின் விடைபெற்று ஊர் திரும்பினார்.

இவ்வாறு இருந்து வரும் நாளையில் சுந்தரர் பற்றிக் கேள்விப்பட்ட சேரமான் பெருமான் கொடுங்கோளூரிலிருந்து புறப்பட்டு ஆரூர் வந்து சேர்ந்தார். சுந்தரர் அவரை வரவேற்று தம் மாளிகையில் தங்கச் செய்து உபசரித்தார். இருவரும் ஒருயிருப் ஈருடலுமாய் பழகுவதைக் கண்ட அடியார்கள் நம்பியாரூரரைச் சேரமான் தோழர் என்று அழைத்து மகிழ்ந்தனர்.

சுந்தரருக்கு ஆலவாய் அமர்ந்த பெருமானைத் தரிசிக்க வேண்டுமென ஆவல் எழுந்தது. அதைக் கேட்ட சேரமான் தாமும் அவருடன் வருவதாகக் கூறினார். பாணருக்காகத் திருமுகம் கொடுத்தனுப்பிய இறைவனைத் தரிசிக்க வேண்டுமென அவர் வெகு நாட்களாக ஆவல் கொண்டிருந்தார்.

சுந்தரரும் சேரமான் பெருமானும் பரவையாரிடம் விடைபெற்று ஆரூர் விட்டுப் புறப்பட்டனர். கீழ் வேளூர் சென்று தரிசனம் செய்து கொண்டு நாகப்பட்டினம் போய்ச் சேர்ந்தனர். அங்கு சில தினங்கள் தங்கிய பிறகு புறப்பட்டு திருமறைக் காட்டை அடைந்து வேதவன நாதரைத் தரிசித்தனர். பிறகு அகஸ்தியன் பள்ளி முதலான திருப்பதிகளைத் தரிசித்தபடி பிரயாணப்பட்டுத் திருப்புத்தூர் வழியாக மதுரையை அடைந்தனர்.

அப்போது பாண்டியன் மகளை மணந்த சோழ மன்னனும் மதுரையில் இருந்தான். தம்பிரான் தோழரும் சேரமானும் வருகின்றனர் என்ற செய்தி எட்டியதும் பாண்டிய மன்னன் சோழனோடு வந்து அவர்களை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தான். பின் அனைவருமாக ஆலவாய்ப் பெருமான் ஆலயத்துக்குச் சென்று எம்பெருமானைத் தரிசித்து மனம் களித்தனர்.

சில நாட்கள் மதுரையிலே தங்கி மன்னனால் உபசரிக்கப்பட்ட சுந்தரர் திருப்புவனம் முதலான பதிகளுக்குச் சென்று இறைவனை வழிபட்டு மீண்டும் மதுரை திரும்பினார். மதுரையில் இருக்கும் நாளில் திருஆப்பனூர், திருஏடகம் ஆகிய தலங்களுக்கும் சென்று வந்தார். திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானைத் தரிசித்து 'கோத்திட்டையும் கோவலும்' என்ற பதிகம் பாடினார்.

மேலும் தெற்கே பிரயாணப்பட விரும்பிய சுந்தரர் பாண்டிய சோழ மன்னர்களிடம் விடைபெற்றுச் சேரமானேடு புறப்பட்டார். திருக்குற்ருலம், திருநெல்வேலி ஆகிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு இராமேச்வரத்தை அடைந்தார். அங்கிருந்தபடியே இலங்கையில் திருக்கேதீச்வரத்தில் இருப்பிடம் கொண்டுள்ள எம்பெருமானைப் பாடி மகிழ்ந்தார்.

இராமேச்வரத்தை விட்டுப் புறப்பட்ட சுந்தரர் திருச்சுழியலை அடைந்தார். அவ்வூரை அடையும்போது மாலை வந்து விட்டது. ஆகவே அங்கே தரிசனத்தை முடித்துக்கொண்டு இரவு திருமடத்தில் தங்கினுர். விடிந்ததும் புறப்பட்டுச் சோழ நாட்டை அடைய பிரயாணப்பட எண்ணியிருந்தார் அவர்.

கானப்பேர் எனப்படும் காளையார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் அடியாரைத் தமதிருப்பிடம் அழைக்க விரும்பினுர். அவர் திருப்பாதங்கள் தம் திருக்கோயிலிலும் பட ஆசை கொண்டார். திருச்சுழியல் மடத்திலே நித்திரையிலாழ்ந்திருக்கும் சுந்தரர் கனவிலே தோன்றினுர். காளை வடிவிலே திருக்கரத்தில் பொற்செண்டும் திருமுடியில் சுழியும் கொண்டு தோன்றிய இறைவன் 'நாம் இருப்பது கானப்பேர்' என்று கூறி மறைந்தார்.

திடுக்கிட்டுக் கண் விழித்த சுந்தரர் சேரமானை எழுப்பி இறைவன் திருவுள்ளத்தைத் தெரிவித்து மகிழ்ந்தார். விடிந்ததும் அவர்கள் புறப்பட்டுத் திருக்கானப்பேரை அடைந்து எம்பெருமானைத் தரிசித்து மகிழ்ந்தனர். 'தொண்டரடித் தொழலும்' என்ற பதிகம் பாடிக் களித்தார்.

பின்னர் அவர்கள் இருவரும் புறப்பட்டுத் திருப்புனவாயிலை அடைந்து இறைவனைத் தொழுது திருப்பாதாளீச்சரம் சென்று வழிபாடு செய்துகொண்டு ஆரூர் போய்ச் சேர்ந்தனர்.

99. வழிப்பறி செய்த விடையவர்

திருவாரூரிலே தினந்தோறும் எம்பெருமானைத் தரிசித்து வரும் காலத்தில் சேரமான் ஊர் திரும்ப எண்ணம் கொண்டார். சுந்தரரைப் பணிந்து "சுவாமி, ஊரை விட்டுப் புறப்பட்டு வெகு நாட்களாகி விட்டன. ஊர் திரும்ப வேண்டும். என்னேடு தாங்களும் வந்திருந்து என் விருந்தாளியாகத் தங்க வேண்டும். தங்களை என் மாளிகையில் உபசரித்தால்தான் என் மனம் திருப்தி கொள்ளும்" என்று அழைத்தார்.

நண்பரின் அழைப்பை ஏற்று அவரோடு புறப்பட்டார் சுந்தரர். ஆரூரை விட்டுப் புறப்பட்ட அவர்கள் காவிரிக் கரையை அடைந்து தென் கரையோரமாகப் பிரயாணப்பட்டுத் திருக்கண்டியூரை அடைந்தனர்.

காவிரியின் வடகரையில் திருவையாறு இருந்தது. அத் தலத்தைக் கண்ணுற்ற சேரமானுக்கு அவ்வூர் சென்று ஐயாறு அப்பரைத் தரிசிக்க வேண்டுமென அவா எழுந்தது. சுந்தரரைப் பணிந்து தம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

''உம் விருப்பப்படி தரிசனம் செய்வோம்!'' என்று சொன்ன சுந்தரர் கண்டியூரை விட்டுப் புறப்பட்டுக் காவிரியை அடைந் தார். நதியில் பெருவெள்ளம் சென்று கொண்டிருந்தது. ஓடக் காரர்கள் கூட ஓடம் விட அஞ்சினர் கரையிலே நின்ற சுந்தரர் தாங்கள் நதியைக் கடந்து வந்து தரிசனம் செய்ய முடியாதிருக் கிறதே என வருந்தி 'பரவும் பரிசொன் றறியேனுன்' என்ற பதிகம் பாடினுர். நதியில் ஓடிய வெள்ளத்தின் நடுவே சிறு பிளவு தோன்றியது. மேற்கேயிருந்து வந்த வெள்ளம் அணை யிட்டது போல் அப்படியே நின்றது. கிழக்கே தண்ணீர் வடிந்து மணற்பாங்காகக் காட்சி தந்தது. சேரமான் சொல் லொண்ணு ஆச்சரியமுற்று சுந்தரரைப் போற்றினுர்.

''நண்பரே, ஈசன் உமக்கருளியதன்றே!'' என்று சொன்ன சுந்தரர் முதலில் அவரைப் போகவிட்டுப் பின்னுல் தாம் சென்றுர். அவர்கள் அக்கரை ஏறியதும் தடுத்து நிறுத்தி யிருந்த வெள்ளம் விடுபட்டு முன்போல் ஆற்றின் இரு கரை களையும் தொட்டுக்கொண்டு ஓடியது.

சுந்தரரும் சேரமானும் பஞ்சநதேச்வரர் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு மனம் களித்தனர். பின்னர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு மேற்கே பிரயாணப்பட்டுக் கொடுங்கோ ளூரை அடைந்தனர். அரசர் அடியாருடன் திரும்புகிறுர் என்ற செய்தி கேட்டு நகர மாந்தர்கள் குதூகலித்தனர். வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டினர். புத்தாடை அணிந்து, வேத கோஷங்களை எழுப்பி அவர்கள் எதிர்கொண்டு வரவேற்றனர். சுந்தரர் வஞ்சைக்களம் ஆலயம் சென்று எம்பெருமானைத் தரி சித்து சேரமானுடன் அரண்மனை திரும்பினுர். அரண்மனையில் தம்முடைய சிங்காதனத்தில் சுந்தரரை அமர்த்தி மனைவியர் நீர்வார்க்க அவர் பாதங்களைக் கழுவி மலர் கொண்டு அர்ச்சித்து வணங்கினுர் சேரமான்.

நண்பர் உபசரணையில் மெய்மறந்து சில நாட்கள் தங்கிய பின் சுந்தரர் ஆரூருக்குப் புறப்படத் தீர்மானித்தார். அவரை

விட்டுப் பிரிந்திருக்க சேரமானுல் முடியவில்லே. தாமும் உடன் வருவதாகக் கூறினுர்.

அதற்குச் சுந்தரர் இணங்கவில்லே.

''நண்பரே, நீர் இங்கு இருந்து ஆட்சியைக் கவனித்து வர வேண்டும். என்னுடன் புறப்படுவது சரியல்ல'' என்று தடுத்து நிறுத்திவிட்டார்.

பொக்கிஷத்திலிருந்து ஏராளமாகப் பொன்னும் மணியும் வாரி மூட்டை கட்டி யானைகள் மீதேற்றி சுந்தரருக்குச் சமர்ப்பித்தார்.

''சுவாமி, இவற்றை மறுக்காது ஏற்றுக்கொள்ள வேண்டும். அடியார் திருப்பணிக்கு அடியேன் சிறு காணிக்கை இது!'' என்று வேண்டினுர்.

சுந்தரர் அக்காணிக்கைகளே ஏற்று அவரிடம் விடை பெற்றுப் புறப்பட்டார்.

காடுகளேயும் மலேகளேயும் ஆறுகளேயும் தாண்டி சோழ நாடு நோக்கி வந்து கொண்டிருந்தார் சுந்தரர். திருமுருகன் பூண்டியை அடைய வேண்டுமென அவர் திட்டமிட்டிருந்தார். அவ்வூரை நெருங்கும்போது எதிர்ப்பட்ட காட்டிலே புகுந்து வந்து கொண்டிருந்தார் சுந்தரர்.

பக்தன் தம்மிடமிருந்தே இத்தனே காலமாகப் பொன் பெற்று வந்திருக்க இப்போது இன்னொருவரிடமிருந்து பெற்றுச் செல்வது இறைவனுக்குப் பொறுக்கவில்லே போலும். தம்முடைய அடியாரான சேரமான் அளித்ததாக இருப்பினும் அதைத் தம் கைப்பட வழங்கியதாக இருக்க எண்ணம் கொண்டார். சிவகணங்களே அழைத்துக் காட்டிலே வந்துகொண்டிருக்கும் சுந்தரரிடமிருக்கும் செல்வத்தைக் கவர்ந்து வருமாறு அனுப்பினுர். சிவகணங்கள் வேடர்களாகக் காட்டிலே தோன்றி சுந்தரரின் வழியை மறித்தனர். அடியார்களே மிரட்டி அவர்கள் கொண்டு வந்த பொன்னேயும் மணியையும் இதர பொருள்களே யும் கவர்ந்துகொண்டு மறைந்தனர்.

அடியார்கள் சுந்தரரிடம் முறையிட்டனர். இறைவன் திருவுள்ளம் அவ்வளவுதான் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினுர் சுந்தரர். திருமுருகன் பூண்டி1யை அடைந்ததும் எம்பெருமான் திருக்கோயிலுக்குச் சென்று தொழுதார்.

---

1 திருப்பூருக்கு வடமேற்கே ஐந்து மைலில் உள்ளது.

'கொடிகு வெஞ்சிலை வடுகவேடுவர்' என்ற பதிகம் பாடிப் பணிந்தார்.

"ஐயனே, வனத்தில் வேடுவர் வந்து பொருள்களைக் கவர்ந்து செல்கையில் நீ எங்கு சென்றிருந்தாய்?" என்று மனம் உருக வேண்டினர். அவ்வளவில் இறைவன் சந்நிதானத்தில் சிவபூதங்கள் கவர்ந்து வந்த பொருள்கள் அனைத்தும் தோன்றின.

"அன்பனே, யாம் வழங்கியதாக இருக்கட்டுமென நாமே கவர்ந்து வரச் செய்தோம். இதோ அப்பொருள்கள் அனைத்தும் இருக்கின்றன. பெற்றுக்கொள்" என்று ஈசன் திருவாய் மலர்ந்து அருளினர்.

சுந்தரர் எம்பெருமானைப் பலவாறு போற்றித் துதித்துக் கொண்டாடினர். பின் அவற்றைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டு ஆரூர் வந்து சேர்ந்தார்.

100. முதலை உமிழ்ந்த மகவு

மீண்டும் சில நாட்களுக்கெல்லாம் சுந்தரருக்குத் தம் நண்பர் நினைவு வந்து விட்டது. சேரமானைப் பார்த்துவரப் புறப்பட்டார். கொடுங்கோளூர் செல்லும் வழியில் திருப்புக்கொளியூர்1 சேர்ந்தார்.

அவ்வூரிலே நுழைந்ததும் சுந்தரர் அதிசயிக்கத்தக்க காட்சியைக் கண்டார். ஒரு வீட்டிலே அழுகுரலும் மற்றொரு வீட்டிலே மங்கலநாதமும் கேட்டன. தம்மை வரவேற்க வந்திருந்த அவ்வூர் அந்தணர்களிடம் கேட்டார்.

"பெரியோரே, அந்த வீட்டில் அழுகுரல் எழும்பக் காரணம் என்ன?"

"சென்ற வருடம் இரு பிள்ளைகள் மடுவிற்குக் குளிக்கச் சென்றிருந்தனர். அவர்களில் ஒருவனை மடுவிலிருந்த முதலை விழுங்கி விட்டது. மற்றவன் பிழைத்துக் கொண்டான். இன்று அந்தப் பையனுக்கு உபநயனம். இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் பிள்ளையைப் பறிகொடுத்தவர்கள் தங்கள் துக்கம் தாளாது அழுகின்றனர்" என்றனர்.

---

1 அவினுசி.

சுந்தரர் உள்ளம் வேதனைப்பட்டது. அவர்களோடு உரையாடிக் கொண்டிருக்கையில் ஊரிலுள்ளவர்கள் இறைவன் திருவருள் பெற்ற அடியார் வந்திருப்பதைக் கேள்வியுற்று வந்து நமஸ்கரித்தனர். பிள்ளையைப் பறிகொடுத்த பெற்றோரும் வந்து சுந்தரரைப் பணிந்தனர். அருகிலிருந்தவர்கள் அவர்கள் தான் அழுகுரல் எழுப்பியது என ஜாடையாகத் தெரிவித்தனர்.

"புதல்வனை இழந்து பரிதவிப்பவர்கள் நீங்கள் தானா?" என்று கேட்டார்.

"சுவாமி, அது நடந்து போன சமாச்சாரம். தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று அளவில்லா ஆவல் கொண்டிருந்தோம். இறைவன் எங்கள் விருப்பத்தை நிறைவேற்றத் தங்களை இன்று எங்களூருக்கு வரச் செய்தார்" என்று அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

அவர்கள் தம்மிடம் கொண்டுள்ள பக்தியைக் கண்டு சுந்தரர் உள்ளம் நெகிழ்ந்தார். தங்கள் துக்கத்தையும் மறந்தல்லவா அவர்கள் தம்மை வணங்க வந்தார்கள் என்று எண்ணி வியந்தார்.

"உங்கள் மகனை விழுங்கிய மடு எங்கிருக்கிறது?" என்று கேட்டார் சுந்தரர்.

ஊருக்குப் புறம்பே இருக்கும் அம்மடுவைப் பற்றி அவர்கள் தெரிவித்தனர். அவர்களையும் அழைத்துக் கொண்டு மடுவின் கரையை அடைந்தார் சுந்தரர்.

கரையிலே நின்று எம்பெருமானைத் தியானித்து 'எத்தான் மறக்கேன்' என்ற பதிகம் பாடி சிறுவனைக் கொடுக்க வேண்டுமென்று உள்ளம் உருகக் கேட்டார்.

இறைவன் அவர் வேண்டுகோளை ஏற்றுக் காலனுக்கு உத்தரவிட காலன் முதலையை வரவழைத்துச் சிறுவனைக் கரையிலே உமிழச் செய்தான். கடந்து போன ஓராண்டு வளர்ச்சியும் பெற்றிருந்த மகனைக் கண்டதும் பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்று வாரி அணைத்து உச்சி முகர்ந்தனர். அவர்கள் மகிழ்ச்சியை விவரிக்க முடியாது. ஆனந்த வெள்ளத்திலே திளைத்தவர்களாய் சுந்தரரை வலம் வந்து நமஸ்கரித்துப் போற்றினர்.

பின்னர் சுந்தரர் அவர்களோடு ஆலயம் சென்று எம்பெருமானைத் தரிசித்துப் பாடிப் பணிந்தார். அச்சிறுவனுக்கு அந்தச் சுபதினத்தில் தாமும் அங்கிருந்து உபநயனம் செய்வித்தார். சில நாட்கள் அப்பதியில் தங்கியிருந்து பின் அன்பர்களிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

சுந்தரர் வருகிறுர் என்பதை அறிந்தபோது சேரமான் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டார். அவரைப் பாதி வழியிலே எதிர்கொண்டு அழைத்துச் சென்று தம் மாளிகையில் உபசரித்தார். சுந்தரரும் நண்பரைக் கண்டு ஆனந்தம் கொண்டவராய் அவருக்குத் தாம் சென்று வந்த பதிகளைப் பற்றி விவரமாக எடுத்துரைத்தார். அம்மலை நாட்டிலே எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள் சென்று இறைவனை வழிபட்டுத் திரும்பினுர்.

101. விரைந்து வந்த வெள்ளை யானை

சேரமான் அரண்மனையில் தங்கி அப்பெருமான் உபசரணைகளால் மகிழ்ந்து இருந்து வரும்போது ஒருநாள் சுந்தரர் திருவஞ்சைக்களம் ஆலயத்துக்குச் சென்றுர்.

எம்பெருமான் சந்நிதியில் நின்று இறைவன் திருக்கோலத்தைத் தரிசிக்கும் போது, ''ஐயனே, பூவுலகில் நான் வாழ்ந்தது போதும். இச்சம்சார சாகரத்திலிருந்து என்னைக் கரையேற்றி ஆட்கொள்ள மாட்டீரோ?'' என்று இறைஞ்சியவாறு '**தலைக்குத் தலை**' **என்னும் பதிகம் பாடினுர்.**

கைலாயத்திலே அமர்ந்திருந்த இறைவன் சுந்தரருடைய பிரார்த்தனைக்குச் செவி சாய்த்தார். ஆலாலசுந்தரன் கைலாயம் திரும்ப வேண்டிய காலம் வந்து விட்டது என்பதைக் கண்டு அவர் பிரமன் முதலான தேவர்களைப் பார்த்து ஆக்ஞாபித்தார்.

''ஆரூரன் நம்மிடம் வந்து சேரப் பிரியப்படுகிறுன். வெள்ளை யானையைக் கொண்டு சென்று அவனை அழைத்து வாருங்கள்'' என்றுர்.

ஈசன் திருவாக்கிணையைச் சிரமேற் கொண்ட தேவர்கள் வெள்ளை யானையுடன் திருவஞ்சைக்களம் அடைந்தனர். ஆலய வாயிலில் யானையை நிறுத்திவிட்டு உள்ளே சென்று சுந்தரரை வாழ்த்தினர்.

''சுவாமி, தங்களை அழைத்து வருமாறு எம்பெருமான் அனுப்பியுள்ளார்'' என்று தெரிவித்தனர்.

சுந்தரர் மெய்சிலிர்க்க இறைவனை வணங்கி எழுந்து அவர்களுடன் புறப்பட்டார். வெள்ளை யானையை வலம் வந்து ஏறி அமர்ந்தார். எட்டுத் திக்கும் அதிர தேவ துந்துபி முழங்கியது. தேவர்கள் மலர்மாரி பெய்தனர். இவ்வரிய சந்தர்ப்பத்தில் நண்பர் அருகிலில்லையே என நினைத்தபடி கைலாயம் நோக்கிப் புறப்பட்டார்.

சுந்தருடன் வந்த அடியார்கள் கை கூப்பித் தொழுது 'ஹர ஹர, சிவ சிவ' எனக் கோஷமிட்டனர்.

நீராடிக்கொண்டிருந்த சேரமான் பெருமாஞர் இறைவன் திருவருளால் சுந்தரர் கைலாயம் செல்லப் போவதை அறிந்தார். உடனே குதிரையேறி ஆலயவாயிலுக்கு விரைந்தார். அவர் வருவதற்குள் சுந்தரர் புறப்பட்டு விட்டார்.

நிலைமை மீறிவிட்டதைக் கண்ட சேரமான் பெருமாஞர் தாம் ஏறி வந்த குதிரையின் செவியிலே பஞ்சாக்ஷரத்தை ஓதிஞர். குதிரை ஆகாய மார்க்கமாகக் கிளம்பி விரைந்தது. முன்னே செல்லும் வெள்ளை யானையை நெருங்கி அதனை வலம் வந்து முன்னதாகச் சென்று கைலாயத்தை அடைந்தது.

சேரமானைத் தொடர்ந்து ஓடி வந்த வீரர்கள் தங்கள் அரசர் கைலாயம் செல்வதைக் கண்டு அவரோடு தாங்களும் செல்ல முடியவில்லையே என வருந்தி வாளை உருவி தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டு சிவலோகம் சென்றனர்.

சுந்தரர் 'தானெனை முன்படைத்தான்' என்னும் திருப் பதிகம் பாடியபடி கைலையின் தென் வாயிலை அடைந்தார். அங்கே அவருக்காகச் சேரமான் காத்திருந்தார். இருவரும் பல வாயில்களைக் கடந்து திருஅணுக்கன் வாயிலை அடைந்தனர். அங்கே சேரமானை உள்ளே விடாது தடுத்துவிட்டனர்.

கைலாசநாதனின் சந்நிதானத்தை அடைந்த சுந்தரர் எம் பெருமான் முன்பு சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார்.

"ஆலால சுந்தரா, வந்துவிட்டாயா?" என்று அன்பு மிகுதியால் அழைத்தார் இறைவன்.

"எம்பெருமானே, அடியேன் செய்த பிழை பொறுத்து பாச வினைகளுள் சிக்கி உழலாது வலிய வந்து என்னைத் தடுத்தாட் கொண்டு அழியா முக்தியை அருளிய நின் கருணையை நான் எவ்வாறு போற்றுவேன்" என்று ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்.

பின்னர் இறைவனை மறுபடியும் வணங்கி, "சர்வேச்வரா, அடியேன் நண்பர் சேரமான் உள்ளே வரமுடியாது வாயிலில் நிற்கிருர். அவருக்கும் கிருபை புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அவரை அழைத்து வருமாறு இறைவன் கணங்களுக்கு உத்தரவிட அவர்களும் வெளியே சென்று சேரமானை அழைத்து வந்தனர்.

எம்பெருமான் பாதங்களைப் பணிந்து எழுந்தார் சேரமான்.

''யாம் உன்னை அழைக்கவில்லையே. எவ்வாறு வந்தாய்?'' என்று கேட்டார் சிவன்.

''சர்வேச்வரா, ஆரூரரை வணங்கிக்கொண்டே வந்தேன். அடியாரிடம் நான்கொண்ட அன்பும் பக்தியும் என்னைத் தங்கள் திருவடிகளில் கொண்டு சேர்த்து விட்டது. தங்கள் மீது ஞான வுலா ஒன்று பாடியுள்ளேன். பிரபோ, தங்கள் முன்பு படித்துக் காட்ட அனுமதிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தார் சேரமான்.

இறைவன் மனம் மகிழ்ந்து அனுமதி அளித்தார். சேர மான் தாம் இயற்றிய ஞானவுலாவை தேவர்கள் ஞானியர் கூடி யிருக்க இறைவன் முன் பாடினார்.

சிவனும் மனம் களித்தவராய், ''நீங்கள் இருவரும் எம் கணங்களுக்குத் தலைவராக இருந்து வாருங்கள்'' என்று அருளினார்.

ஆலால சுந்தரர் முன்போல் தம் தொண்டிலே ஈடுபட சேர மான் சிவகணங்களின் தலைவரானார்

ஆரூரிலே இருந்த பரவையாரும், ஒற்றியூரிலிருந்த சங்கிலி யாரும் தங்கள் காலத்தை முடித்துக்கொண்டு கைலாயத்தை அடைந்து முன்போல் கமலினியாகவும் அனிந்திதையாகவும் மாறி தேவியின் சேடிகளாகத் தொண்டு செய்து வரலானார்கள்.

புத்தூரிலே ஷடங்கவி சிவசாரியாருடைய குமாரத்தி திரு மணம் தடைப்பட்டு நின்ற பிறகு யாரையும் மணக்கச் சம்மதிக் காது கன்னியாகவே இருந்து எம்பெருமான் திருத்தொண்டிலே ஈடுபட்டு இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடிகளைச் சேர்ந்தாள்.

ஆரூரர் அருளிச் செய்த பதிகத்தை வருணராஜன் பக்தி யுடன் ஏற்று திருவஞ்சைக்களத்திலே கொண்டு வந்து விட்டான்.

சேரமான் பெருமான் இயற்றிய ஞானவுலாவை கைலா யத்திலே கேட்ட மாசாத்தனார் அதனைத் திருப்பிடவூரிலே வெளிப்படக் கூறி உலகத்திலே விளங்குமாறு செய்தார்.

சுந்தரருடைய வரலாற்றைக் கூறி முடித்த உபமன்யு முனிவர் ''அடியார்களிடம் இறைவன் கொண்டுள்ள அன்பை எவ்வளவு விவரித்தாலும் கணக்கில் அடங்காது அன்றோ!'' என்று சொல்லி இறைவன் திருவருளை எண்ணி தம்மையே மெய்மறந்து நின்றார். மூடிய அவர் கண்களிலிருந்தும் வழியும் பக்தி வெள்ளம் அங்கு கூடியிருந்த முனிவர்களுடைய உள்ளங் களிலும் நிறைந்து வழிந்தது.

102. தொண்டர் சீர்பரவுவார்

சித்திரை மாதம். அன்று ஆதிரை நாள். எம்பெருமானுக்கு உகந்த தினம்.

அன்றைத் தினம் சரியாக ஓராண்டு முடிந்துவிட்டது. அருண்மொழித்தேவர் பாடி வந்த தொண்டர் புராணம் அன்று நிறைவேறியது.

மக்கள் பக்திவாரியில் திளைத்தவர்களாய் அமைச்சர் திருத்தொண்டை போற்றிப் புகழ்ந்தனர்.

அநபாயனே அவர்களையும் மிஞ்சி ஆனந்தத்தில் மூழ்கியிருந்தான். அமைச்சர் பாடிய திருப்புராணத்துக்கு அர்ச்சனை முதலானவற்றை பக்தியோடு செய்வித்தான். பின் அதனோடு அமைச்சரையும் யானை மீதேற்றினான். தானும் ஏறி அமர்ந்து அமைச்சருக்குச் சாமரம் வீசினான். தில்லையின் நான்கு வீதிகளிலும் திருமுறை ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டது.

'தொண்டர்சீர் பரவுவார்' என்னும் திருநாமத்தை அமைச்சருக்குச் சூட்டி வணங்கினான் அநபாயன்.

அடியார் தொண்டிலே மூழ்கிக் கிடக்கும் அமைச்சர் உள்ளத்தை மீண்டும் அரசியலில் இழுக்க அவன் விரும்பவில்லை. குன்றத்தூரிலே இருக்கும் அவர் இளைய சகோதரரான பாலறுவாயரை வரவழைத்து அவருக்குத் தொண்டைமான் எனப் பட்டம் கொடுத்து அமைச்சராக்குவது என்று முடிவு செய்தான்.

பதினோரு திருமுறைகளோடு அமைச்சர் இயற்றிய தொண்டர் புராணத்தை பன்னிரண்டாம் திருமுறையென வகுத்துச் செப்பேடு செய்து சந்நிதானத்தில் ஏற்ற உத்தரவிட்டான்.

நடராஜர் ஆலயத்தின் நீண்ட கம்பங்களில் பொருத்தப் பட்டுள்ள மணிகள் 'கணாங், கணாங்' என்ற நாதம் எழுப்பின.

எம்பிரான் சந்நிதியில் நின்றிருந்த அநபாயன், அருண்மொழித்தேவர் இருவர் உள்ளங்களிலும் அந்நாதம் பரவி புளகாங்கிதம் அடையச் செய்தது.

சந்நிதானத்திலே ஆரத்தித் தட்டு எழுந்தது. இரு கரங்களையும் சிரம் மேல் குவித்து இருவரும் எம்பெருமானைத் தொழுதனர்.

மாபெரும் பணி ஒன்று நிறைவேறியதுபற்றி அவர்கள் உள்ளங்கள் நிறைந்திருந்தன.

-- சுபம் --

இதர குறிப்புகள்

தேவாரப் பாடல் பெற்ற தலங்கள்

	தலங்கள்	பதிகங்கள்
சோழ நாடு		
காவேரி வடகரையில்	63	238
காவேரி தென்கரையில்	127	318
பாண்டிய நாடு	14	34
கொங்கு நாடு	7	9
சேர நாடு	1	1
ஈழ நாடு	2	3
நடு நாடு	22	62
தொண்டை நாடு	32	68
துளுவ நாடு	1	2
வடநாடு	5	14
இவை தவிர பொதுவாகப் பாடிய பதிகங்கள் ...		48
	274	797

மூவர் பாடிய தலங்கள்

மூவரும் பாடிய தலங்கள்		44
அப்பர், சுந்தரர் இருவர் பாடிய தலம்		1
அப்பர், சம்பந்தர் இருவர் மட்டுமே பாடிய தலங்கள்	...	52
அப்பர் மட்டுமே பாடிய தலங்கள்	...	28
சுந்தரர் சம்பந்தர் இருவர் மட்டுமே பாடிய தலங்கள்	...	12
சம்பந்தர் மட்டுமே பாடிய தலங்கள்	...	111
சுந்தரர் மட்டுமே பாடிய தலங்கள்	...	26
		274

நாயன்மார் திரு நக்ஷத்திரங்கள்

நாயன்மார்	மாதம்	நக்ஷத்திரம்
நீலகண்டக் குயவர்	தை	விசாகம்
இயற்பகையார்	மார்கழி	உத்திரம்
இளையான்குடிமாறர்	ஆவணி	மகம்
மெய்ப்பொருள்	கார்த்திகை	உத்திரம்
விறன்மிண்டர்	சித்திரை	திருவாதிரை
அமர்நீதியார்	ஆனி	பூரம்
எறிபத்தர்	மாசி	ஹஸ்தம்
ஏனாதியார்	புரட்டாசி	உத்திராடம்
கண்ணப்பர்	தை	மிருகசீர்ஷம்
குங்கிலியர்	ஆவணி	மூலம்
மானக்கஞ்சாரர்	மார்கழி	சுவாதி
அரிவாட்டாயர்	தை	திருவாதிரை
ஆனயர்	கார்த்திகை	ஹஸ்தம்
மூர்த்தியார்	ஆடி	கிருத்திகை
முருகர்	வைகாசி	மூலம்
உருத்திரபசுபதியார்	புரட்டாசி	அசுவதி
திருநாளைப்போவார்	புரட்டாசி	ரோகிணி
திருக்குறிப்புத் தொண்டர்	சித்திரை	சுவாதி
சண்டேசுவரர்	தை	உத்திரம்
நாவுக்கரசர்	சித்திரை	சதயம்
குலச்சிறையார்	ஆவணி	அனுஷம்
பெருமிழலைக் குறும்பர்	ஆடி	சித்திரை
காரைக்காலம்மையார்	பங்குனி	சுவாதி
அப்பூதியடிகள்	தை	சதயம்
நீலநக்கர்	வைகாசி	மூலம்
நமிநந்தியடிகள்	வைகாசி	பூசம்
சம்பந்தர்	வைகாசி	மூலம்
கலிக்காமர்	ஆனி	ரேவதி
திருமூலர்	ஐப்பசி	அசுவதி
தண்டியடிகள்	பங்குனி	சதயம்
மூர்க்கர்	கார்த்திகை	மூலம்

நாயன்மார்	மாதம்	நக்ஷத்திரம்
சோமாசிமாறர்	வைகாசி	ஆயிலியம்
சாக்கியர்	மார்கழி	பூராடம்
சிறப்புலியார்	கார்த்திகை	பூராடம்
சிறுத்தொண்டர்	சித்திரை	பரணி
சேரமான்	ஆடி	சுவாதி
கணநாதர்	பங்குனி	திருவாதிரை
கூற்றுவர்	ஆடி	திருவாதிரை
புகழ்ச்சோழர்	ஆடி	கிருத்திகை
நரசிங்கமுனையார்	புரட்டாசி	சதயம்
அதிபத்தர்	ஆவணி	ஆயில்யம்
கலிக்கம்பர்	தை	ரேவதி
கலியர்	ஆடி	கேட்டை
சத்தியார்	ஐப்பசி	பூசம்
ஐயடிகள் காடவர்கோன்	ஐப்பசி	மூலம்
கணம்புல்லர்	கார்த்திகை	கிருத்திகை
காரிநாயனுர்	மாசி	பூராடம்
நெடுமாறர்	ஐப்பசி	பரணி
வாயிலார்	மார்கழி	ரேவதி
முனையடுவார்	பங்குனி	பூசம்
கழற்சிங்கர்	வைகாசி	பரணி
இடங்கழியார்	ஐப்பசி	கிருத்திகை
செருத்துணையார்	ஆவணி	பூசம்
புகழ்த்துணையார்	ஆவணி	ஆயிலியம்
கோட்புலியார்	ஆடி	கேட்டை
பூசலார்	ஐப்பசி	அனுஷம்
மங்கையர்க்கரசியார்	சித்திரை	ரோகிணி
நேசர்	பங்குனி	ரோகிணி
செங்கட்சோழர்	மாசி	சதயம்
நீலகண்டயாழ்ப்பாணர்	வைகாசி	மூலம்
சடையனுர்	மார்கழி	திருவாதிரை
இசைஞானியார்	சித்திரை	சித்திரை
சுந்தரர்	ஆடி	சுவாதி

நாயன்மார்கள் மேற்கொண்ட தொண்டினையும் அறிஞர் கள் பாகுபடுத்திக் கூறுவர். அவர்களைப் பத்துப் பகுதி களாகப் பிரிக்கலாம்.

ஆலயம் எழுப்பியவர்

1. காரியார்.

2. வாயிலார் 3. பூசலார் (இருவரும் மனக் கோயிலில் வழிபட்டவர்) 4. கோச்செங்கணான்.

ஆலயத்தில் தொண்டு செய்தவர்

5. மூர்த்தியார் 6. முருகர் 7. கூற்றுவர் 8. திரு நாளைப் போவார் 9. நமிநந்தி அடிகள் 10. கணம்புல்லர்.

அடியார்களுக்குத் தொண்டு செய்தவர்

11. பெருமிழலைக் குறும்பர் 12. அப்பூதி அடிகள் 13. கணநாதர் 14. நரசிங்க முனையரையர் 15. இடங் கழியார் 16. புகழ்த்துணையார் 17. நேசர்.

எம்பெருமானை பஞ்சாக்ஷரத்தால் துதித்தவர்

18. ஆனயர் 19. ருத்திரபசுபதியார் 20. திருமூலர் 21. சோமாசிமாறர் 22. சிறப்புலியார்.

புறச்சமயிகளுடன் மோதியவர்

23. நாவுக்கரசர் 24. குலச்சிறையார் 25. சம்பந்தர் 26. தண்டியடிகள் 27. மங்கையர்க்கரசியார்.

செயற்கரிய செய்தவர்

28. கண்ணப்பர் 29. குங்கிலியக்கலயர் 30. அரிவாட்டாயனுர் 31. சண்டேசுவரர் 32. நீலநக்கர் 33. சிறுத்தொண்டர் 34. புகழ்ச்சோழர் 35. கலிக்கம்பர் 36. கலியர் 37. கழற்சிங்கர் 38. கோட்புலியார்.

எம்பெருமாளுல் சோதிக்கப்பட்டவர்

39. நீலகண்டர் 40. இயற்பகையார் 41. இளையான்குடி மாறர் 42. அமர்நீதியார் 43. மானக்கஞ்சாறர் 44. திருக்குறிப்புத் தொண்டர் 45. ஏயர்கோன் கலிக்காமர் 46. அதிபத்தர்.

சிவ வேடத்துக்காக உயிரை ஈந்தவர்

47. மெய்ப்பொருள், 48. ஏனுதியார்.

பல தலங்களைத் தரிசித்துப் பாடியவர்

49. விறண்மிண்டர் 50. காரைக்காலம்மையார் 51. சேரமான் 52. ஐயடிகள் காடவர்கோன் 53. நீலகண்டயாழ்ப்பாணர் 52. சுந்தரர்.

சைவப்பற்றுடைய இதரர்

55. எறிபத்தர் 56. மூர்க்கர் 57. சாக்கியர் 58. சத்தியார் 59. நின்றசீர் நெடுமாறன் 60. முனையடுவார் 61. செருத்துணையார் 62. சடையனுர் 63. இசைஞானியார்.

ஸ்ரீ விநாயகர் புராணம்

எழுதியவர் : கார்த்திகேயன்

தமிழ் நாட்டில் விநாயகரை வணங்காத குடும்பமேயில்லையென்று துணிந்து கூறலாம். எந்தச் சுபகாரியமாயிருந்தாலும், அசுப காரியமாயிருந்தாலும், விநாயகரைப் பிரார்த்தித்து சங்கல்பம் செய்துகொண்ட பின்னரே மக்கள் எதனையும் செய்ய ஆரம்பிப்பார்கள். அது பற்றியே, பிள்ளையார் சுழி போட்டு எழுதும் பழக்கம் நம்மில் அநேகருக்குண்டென்பது குறிப்பிடத் தக்கது.

ஆதிகாலந்தொட்டே வேத, இதிகாச புராணங்களில் அடிப்படையில் விநாயகர் புராணம் விசேஷமாகக் கூறப்படுகிறது. வடமொழியில், பார்க்கவ புராணம் விநாயகரின் அவதாரமகிமைகளையும், பலன்களையும் சாங்கோபாங்கமாகக் கூறுகிறது. தமிழில், கச்சியப்ப முனிவர் விநாயகர் புராணத்தைக் கவிதை வடிவில் பாடியுள்ளார். இன்னும் சிலர் அகவற் பாவாக ஆக்கியுள்ளனர். வேறு சில வெளியீடுகளும் வெளிவந்துள்ளன. ஆஸ்திக சிகாமணியான இதன் ஆசிரியர் திரு. எஸ். ராமநாதன் அவர்கள் விநாயக புராணத்தை மக்கள் நலன் கருதி, தெள்ளிய தமிழ் வசன நடையில் ஆக்கியிருப்பதை நாம் வரவேற்கிறோம். விநாயகக் கடவுளின் அவதார மகிமைகளையும், திருவிளையாடல்களையும், விநாயகரைப் பக்திச் சிரத்தையாகப் பூஜிப்பதால் உண்டாகும் பலன்களையும், பூஜிக்கவேண்டிய முறைகளையும் நன்கு விளக்கமாக எழுதியிருப்பது போற்றத்தக்கது. விநாயகர் அகவல், விநாயகர் கவசம், துதி பாடல்கள், அஷ்டோத்திரங்கள், விரத மகிமைகள் யாவும் முறைப்படுத்தி எழுதப் பெற்றிருக்கின்றன. ஆஸ்திக முறை வழுவாமல் தெய்வ நெறியைத் தூண்டும் முறையில் புராணம் அமைந்திருப்பது விசேஷமாகும் இப்புராணம் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. சோமகாந்த ராஜனுக்கு விநாயகரின் பெருமைகளை விளக்குவது உபாசன காண்டமென்றும் அவரது அவதார மகிமைகளை எடுத்துச் சொல்வது லீலா காண்டமென்றும் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலைப் படிப்பவர்க்கு விநாயகரிடத்தில் விசேஷமான பக்தியும் சிரத்தையும் உண்டாகும். வாழ்க்கையில் பல இன்னல்கள் விலகி, சுகசௌக்கியமுடையவர்களாக ஆவார்கள் என்பது திண்ணம்.

---மித்திரன்